சிவமயம்.

சைவசமயசிரோமணியாகிய

வரதுங்கராமபாண்டியர்

அருளிச்செய்த

பிரமோத்தரகாண்டம்.

இதற்கு

பூரீசந்திரசேகரகவிராசபண்டிதர்

அவர்களாலியற்றிய

பொழிப்புரையுடன்

ஷையார் குமாரர்

திருத்தணிகைமுதலியாரால்

பலர்வேண்டுகோளின்படி

சென்னை:

இந்து தியலாஜிகல் யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பிரமோத்தரகாண்டம்.

பாயிரம்.

கடவுள்வாழ்த்து

விநாயகர்துதி

நிலைதொறம்பொருணைநாடாததவு ம
எல்லோரானுமேபோன்பமெடதவும
வெல்லுமாணைமுகத்தினேமேவிவாழ
வலலைபக்குரியானைவழுத்துவாம.

நூன்பொழிப்புரை.

சொன்னயமும பொருணயமுங்கொணரு சோவினறி விடபள்ள முறவும, இவ்வுளவெனறு எல்லோகாலுந்தற்கு கருமையாகிய டோன்டரையடையும, வெறறிகொள்ளும் யானைமுகத்தைப் பொருந்தி சூடபுறும, வலலைபையென்னுஞ் சத்திக்குரியானைத் துதிசெயவாம். ட - று.

கவிசெய்யவும் எழுதவும் சொலலலங்காரமும் பொருளலங்காரமும் பொருந்தக்கொண்டாலல்லது சோபிகாதென்பதை யுணர்த்துதற்பொருட்டே, **சோர் பொருள்** என்பதறகு நல்ல வென்றுமனை— கொடுத்துக்கூறினா.

சிற்றின்பம் பேரின்பமென இன்பமிருவகைத்தாய், அநுபவத்திறகு சுடடா தத்தானே கினறதாதலும், முன்னது அளவினைப்பெறறு மதிகாகூடிய கிலேயினறும், பின்னது எல்லோகாலுநற்ற மிவ்வளவென்று மனத்திறுவடறிதற்குங் கூடாததாய் ஒருதாமிதனேயடையின் காதலத்தின தன்மைபோலும் அதற்கப் பால் நீபமுண்ட நெய்யைப்போலும் கோர, இடைவிடாது சுகித்தற்கிடலையுற்ற தாகலின் ஆசிரியரிதனை "எல்லோகாணரும் பேரின்பம்" எனறனர்.

கயமுகாசுரனை வென்றவராகலின் "வெலலுமானைமுகத்தினை" எனறனர்.

சிவன் கணங்களுக்கெல்லாம் பதியாயிருக்குஞ் சிறப்பருளித் தேவர்கள்முதலாகிய எவர்களேயானுலும் ஆரம்பத்தில் உன்னேத்துதிசெய்து பின்பு ஒருகருமஞ்செய்யத்தொடங்குவார்களானுல் அக்கருமம் இடையூறின்றி முற்றுப்பெறுமென்று வரமருளிச்செய்த நாள்முதல் ஆரம்பத்தில் விநாயகனைத்துதிசெய்து ஒருகருமஞ் செய்யத் தொடங்குவது சைவசமயத்தில் நியதியாகவருகின்றதாதலால், இந்நூலாசிரியரும் தாம்செய்யத்தொடங்குநூலிடையூறின்றி யினிதுமுடியும் பொருட்டு ஆரம்பத்தில் விநாயகனைத்துதிசெய்து, தந்தை - தாய்-மக்கள் - என்னு முறைமைபற்றிச்-சிவம்-சத்தி-இருவனையுந்துதிசெய்து பின்னும் விநாயகனைத் துதிசெய்தனர். இதுவே காரணமென்றறிக.

இளஞ்சந்திரன் என்பது தோன்ற "பிஞ்சுமதி" என்றனர். மயில்போலுஞ் சாயலையுடையராகலின் பார்வதிதேவியாரை "பேடைமயில்" என்றனர். புள்ளி கலையுடைய முகமென்பதுதோன்ற "புகர்முகம்" என்றனர்.

மும்மதத்தினுஞ் சிறந்த கன்னமதம் அத்திமுகத்திற் குரித்தாகலானும் அந்த விநாயகமூர்த்தி சிறந்ததாகக் கொண்டதனுலும் அம்மதம் அமிர்தத்தினும் சிறந்ததாக அறுகாற்பறவைகளிசைபாடிக்கொண்டு விழவாரம்பித்தன. அம்மத மிடைவிடாது பொழிவதுதோன்ற "அருவிமதம்" என்றனர். (ஈ)

சுப்பிரமணியர்துதி.

வேறு.

இறுதியெனத்தகுவியர்போய்க்கைகமையெய்தவயிராணியின்பமெய்தப்
பிறைகளொருநான்கனையதிறன்மருப்புவெள்ளானைப்பிடரினேறி
மறுகுதொறும்பொன்னுலகின்வானவர்கோன்பவனிவரச்சூரன்மாயச்
சிறிதுகடைக்கண்சிவந்தசேவகன்கிங்கிணிச்சரணஞ்சென்னிவைப்பாம்.

(இ-ள.) அசுரர்சந்ததியென்ப திந்தமட்டில் அழிந்துபோயதென்றுசொல்லும்படி அந்த அசுர மாதர்களெல்லாம் கைம்பெண்களாகவும், இந்திராணி முதலாகிய தேவஸ்திரிகள் சந்தோஷத்தையடையவும், நான்குபிறைகளிருந்து அவைகளையொன்றுக வைத்ததுபோலிராநின்ற வன்மைபொருந்திய தந்தங்களையுடைய வெள்ளையானையாகிய ஐராவதத்தின் பிடரியின்மேல் ஆரோகணித்துக் கொண்டு பொன்னுலகத்தின் வீதிகள்தோறும் தேவேந்திரன் பவனிவரவும், சூரபன்மன் இறந்துபோகும்படி நேத்திரங்களினிடமாகக் கோபக்குறியைச் சிறிது காட்டிய சுப்பிரமணியருடைய கிங்கிணியணிந்த திருவடிகளை யெமது சிரத்தில் சூட்டிக்கொள்வாம். எ - று.

செம்மையும் கறுப்பும் கோபக்குறியென்று சூத்திரமிருப்பதினுல் "கடைக்கண்சிவந்த" என்பதற்குக் கோபக்குறியெனப் பொருள்கூறப்பட்டது. நான்கு கொம்புகளையுந் துவளாதிறத்தையுடைபெற்று தேவேந்திரனுக்கு பட்டத்து யானை

பாகவமைந்த இது பாற்கடலி லமிர்தக்கடைந்தபோது ஸ்ரீ இலக்குமி தேவியா ரோடும் உதித்தது. (சு)

திருஞானசம்பந்தசுவாமிகள்துதி.

வேறு.

சுழியுப்புனற்செஞ்சடையாளர்பங்கிற்ரோகைதுணைமூலக்கண்
வழியுங்கொழும்பாற்கடலுண்டுபாவக்கோடைமலித்துசுட
ஒழியும்பசும்புல்லெனவுலகமொடுங்காதாங்கத்தண்ணளியாற்
பொழியுங்கவிதைக்காளிழுகில்பொன்னங்கமலத்தாடொழுவாம்.

(இ-புனை.) சுழிகளைச்சுழிக்கும் நீருருவமாகிய கங்கையையணிந்த செஞ் சடையையுடைய பரமசிவன் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் மயிற்சாயலையுடைய பார்வதிதேவியாரின் இரண்டுதிருமுலைகளிடத்தினின்றும் பெருகாநின்ற வளைமை யுள்ள ஞானப்பாற்கடலுண்டு, பாவமாகிய கோடைமிகுந்துசுட அக்கோடையி னால் கருகிப்போம் புல்லைப்போல இவ்வுலகமானது சுரகத்தில்விழுந்து வெம்பா மல் மோகமுதற்றையடையும்படி அதிசாந்தமாகிய கிருபையினாலே தேவாரமாகிய மழையைப்பொழிந்த காளமேகமென்று சொல்லத்தக்க சீகாழியிற் றிருவவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தசுவாமிகளுடைய பொன்னிறமுள்ள திருவடித் தாமரைகளை யாம்எதாழுவோம். எ - று.

காழிமுகில் என்பதில் காளி என்று மேகத்தைக் குறிக்கும்போது கருமை நிறமுள்ளதாகவும், திருஞானசம்பந்தசுவாமிகளைக் குறிக்கும்போது காளியென் னும் பெயருள்ள தலைமாகவும் பொருள்கொள்ளப்படும். காளிதனென்கிற ஒரு நாகராசனால் பூசிக்கப்பட்ட தலைமாதலால் அது சீகாளியென வோர் பேர்பெற் றுச் சீகாழியென வழங்கப்படுகின்றது. (ரு)

திருநாவுக்கரசுசுவாமிகள்துதி.

வேறு.

ஆணைகன்னிலையறியாச்சாக்கியர்களருங்கற்றூண்
பாரறியமருங்கசைத்துப் படுகீரிற்புகவுந்த
வாரணநல்லூரியானை யேத்திமுழங்கீர் வடதளிரின்
நாரணன்போலினிதமர்ந்த நாவலன்பொற்ரூடொழுவாம்.

(இ-புனை.) வேதத்தி னுண்மைப்பொருளையறியாத சமணர்கள் சுமப்பதற் கரிய கற்றூணை இவ்வுலகத்தாரெல்லாமுமறியும்படி அரையிற்கட்டிச்சமுத்திரத்தி னுக்குளாழும்படிபோட யானையினழிதாலை நல்லபோர்வையாகப் போர்த்திருக் கும் பரமசிவனைத் துதிசெய்து அத்தக்கற்றூணை நெட்பமாக மிதக்கும்படி (திருப்பாற்கடலில் ஆலிலைத்தளிரிற் பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவைப்போல)

மனிழ்ச்சியுடனிருக்கு திருப்பாதிரிப்புலியூர்க்கடுத்த செடிலநதியில் கரைே திருநாவுக்கரசுசுவாமிகளுடைய அழகியதிருவடிகளை யாம்தொழுவாம். எ-.

ஆழ்ந்த நீர் என்பதுதோன்ற "படுநீர்" என்றது. "மூழ்நீர்" என்றது க

சுந்தாமூர்த்திசுவாமிகள் துதி

வேறு.

தாதுநிறைக்கும்பசுந்துளபத்தாமத்தோனுஞ்சோருகச்செம்
போதினகத்துச் சகமீன்ற புத்தேடானுமறியாவை
மாதினிடத்தின் முனிவொழிய வாரூர்ச்செம்பொன் மணிமறுகிற்
றூதுநடத்துங்கவிராசன் றுணைத்தாட்கமலந் தொழுதிடுவாம்.

(இ புனை.) மகரந்தங்களால் நிறையப்பட்டிருக்கும் பசியதுளபமாலைய
ந்த திருமாலும், செந்தாமரைப் பூவிலிருந்துகொண்டு உலகங்களைப்படைக்
பிரமதேவனும் அறியக்கூடாத பரமசிவனைப் பரவை நாச்சியார் கொண்டிரு
வுடல் நீங்கும்படி அவரிடத்திற்குத் திருவாரூரின் செம்பொன்களும் ரத்தின
களும் நிறைந்துள்ள திருவீதியில் தூதுபோம்படி அனுப்பிய சுந்தரமூர்த்
சுவாமிகளுடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் யாம் வணங்குவாம். எ-.

இங்கு "மாது" என்றது பரவைநாச்சியாரை. (

மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

வேறு.

சீதவார்பொழிற்றில்லைப்பரமனுக்
கோதுறுற்றமிழ்க்கோவையுரைசெய்த
நாதன்மாணிக்கவாசகனுண்மலர்ப்
பாதபங்கயமேத்திப்பரவுவாம்.

(இ-புனை.) குளிர்ச்சிபொருந்தியதாய் வானளவு மோங்கிய சோலை சூழ்ந்
தில்லை யென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் ஆனந்த நிர்த்தனஞ் செய்கின்ற
கடேசமூர்த்திக்கு யாவருந் துதிசெய்கின்ற நல்ல தமிழினால் திருக்கோவையா
ருளைசெய்தநாதனுகிய மாணிக்கவாசகசுவாமிகளுடைய விழியற்காலத்தில் மலர்
ந்த தாமரைமலரை யொத்த திருவடிகளை யாம் துதிசெய்து புகழ்வோம். எ-று.

"நாண்மலர்" என்றது அன்றலர்ந்த மலரை. (அ)

தருவணக்கம்.

வேறு.

தேசான சிவஞானச் செழுஞ்சுடரான் மும்மலமா
மாசான விருளகற்றி மன்னுயிரைப் புரந்களித்துத்
தூசாகின யுரியசைத்தோன் றிருச்சமய நிறுத்துநிம்மை
யீசான மாமுனிவ னிணையடியை யிறைஞ்சுவாம்.

(இ-புணை.) சோதிமயமான சிவஞான மென்னுஞ் செழுமையுள்ள சூரிய நல் ஆணவம் கன்மம் மாயை என்கின்ற மும்மலமாகிய குற்றமுள்ள அஞ் நான இருளை நீக்கி நிலைபெற்ற உயிர்களை ரகூஷித்து யானைத்தோலைப் போர்வை ாகப் போர்த்தருளிய பரமசிவனது பழமையாகிய சைவசமயத்தை நிலை நிறு திய பெருமை பொருந்திய நிம்பை ஈசானமுனிவருடைய இரண்டு திருவடி ளையும் யாம் பணிவாம். எ-று.

நிம்பை யென்பது வேப்பத்தூர். தொல்சமய நிலை நிறுத்து மெனவும் ாடம். சிவம் இத்தன்மைய தென்றும், சிவன் இத்தன்மைய தென்றும் ணவமலம் இத்தன்மையதென்றும் யாவருக்கும் தெரிவித்துச் சைவப்பற் றுண் ாகச் செய்தலால் சைவசமயத்தை நிலை நிறுத்துகின்றவரெனச் சொல்லப்ப டது. (கூ)

அவையடக்கம்.

வேறு.

அஞ்சனமிடற்றிறையிந்நின்னிலைமுற்றுமளவிட்டன்றிச்
செஞ்சொல்வழுத்தொணாதேல்விதியும்வாய்திறக்கொணாதாம்
விஞ்சையரெவருந்தத்தமதியினின்விபுலங்காறும்
வஞ்சமற்றுணாக்கலாமேலடியனும்வழுத்தலாமால்.

(இ-புணை.) காளகண்டத்தையுடைய பரமசிவனே தேவரீருடைய கல்ல நிலைமை முழுவதையும் சாஸ்திரங்களிறராய்ச்சியிறல் அளவிட்டறிந்து பாடல் களாற் சொல்லவேண்டுமே யல்லது அளவிட்டறிவதற்குமுன் சொல்லவொண் ணாதே யென்றால் வேதங்களை யெல்லா மோதியுணர்ந்த பிரமனும் தேவரீருடைய நிலைமை முழுவதையுஞ் சொல்லுகிறேனென்று வாயைத்திறக்க வொண்ணாது. ஆனால் அப்படி வேண்டுவதில்லை; புலவர்களெல்லாரும் தங்கள் புத்தியின் விசால மட்டும் வஞ்சகமின்றிச் சொல்லலாமென்றால், அடியேனுந் தெரிந்தமட்டிற் சொல்லலாம் அன்றோ. எ-று. (கo)

தொல்லையமுனிபாற்கேட்டுச்சூதமாமுனிவன்சொன்ன
கல்லமுற்காதைதன்னைகான்றமிழ்வழிநடாத்தல்
கொல்லுலைவயிரவூசிகுருமணிகுழித்தவாயின்
மெல்லியபஞ்சிநூல்போம்விழுத்தகவுடையதம்மா.

(இ-புணை.) பழமையாகிய வியாதமுனிவரிடத்தில் கேட்டுப் பெருமை பொரு ந்திய சூதமுனிவர் முன்பு சொல்லிய பழைய கல்ல சிவசரித்திரத்தைப் பின்பு நான் தமிழிறற் சொல்லுதல் கொல்லனுலை முகத்தில் செய்யப்பட்ட கூர்மை யுள்ள ஊசியினுல் துவாரஞ் செய்யப்பட்ட வழியில் மிருதுவாகிய பஞ்சுநூல் நுழைகின்ற மென்மையையுடையதாயிருக்கின்றது. எ-று.

கொல்ல னுலையிற் செய்யப்பட்ட கூர்மையான வுளிபுகுந்த துவாரத மெதுவாகிய நூல் நுழையாதென்பது கருத்து.

பற்றியவரவம்பாரார்முள்ளெண்ணுர்பங்கந்தேரார்
பொற்றுணர்க்கைகணதசார்ந்துபொசிவெண்ணிமலர்கொள்வார்போ
உற்றுணர்வில்லேன்செய்தபனுவலுருநுறுதவீவாராற்
கற்றுணர்மாந்தர்கொள்வர்கடவுடன்சரிதமென்றே.

(இ-புனை.) பாம்பிருக்குமென்றுணராதவர்களாயும், முள்ளுகள் கைகளைதைக்குமேயென நினையாதவர்களாயும், சேற்றிலிருக்கின்றதே யென்று யோசியாதவர்களாயும், வாசனையின் மிகுதியைக்கருதிப் பொன்னிறமுள்ள கொத்தகளையுடைய செந்தாழையினிடத்துச் சென்று அதன் மலரைப் பறிப்பவர்போல அறிவில்லாதயான் செய்தபாடலினிடத்துக் குற்றங்களே யெண்ணி நீக்கிவிடாமற்றுணர்ந்த முன்னோர்கள் இது சிவசரிதமென்று மனம் பொருந்தி ஏற்றுக்கொள்வார்கள், எ-று. ஏகாரம் சிறப்புப் பொருள். உறுத - பொருந்தாத - குறுங்கள். (க2)

சிறப்புப்பாயிரம்.

கறங்குதிரைப்பெருங்கடல்சூழ்வனிபுரந்திகல்கடிந்துகவியைமாற்றி
மறந்திகழ்விலங்கிலேவேல்வரதுங்கராமனியன்மதுரைச்சங்கஞ்
சிறந்தவறுகாற்பீடந்தனிற்பிரமோத்தரகாண்டந்தென்சொலாக்கி
யறந்தழைக்குங்கவிஞர்செவிக்காரமுதமாகவரங்கேற்றினனே.

(இ-புனை.) ஒலிக்கா நின்ற அலையையுடைய பெரியதாகிய சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தைக்காத்துப் பகைவனைப் போர்முகத்தில்வென்று (பாவங்களை நீக்கி) வீரம்விளங்கப் பிரகாசிக்கும் தகட்டிவடிவாகிய வேலேந்திய வரதுங்கராமபாண்டியமகாராசன் பிரமோத்தரகாண்டத்தைத் தமிழாற்செய்து இயற்றமிழ்பயின்ற மதுரைச்சங்கத்தில் சிறப்புற்றிருக்கும் அறுகாற்பீடத்திருந்து தருமகுணமிகுந்த புலவர்கள் காதுகளுக்குக் கிடைப்பதற்கரிய அமுதம்போல மதுரிக்கும்படி அரங்கேற்றினன். எ-று.

முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என சங்கம் மூன்றும். இவைகளில் சிறந்த அனேக வித்துவான்களெல்லாம் அமைந்துளர். (கஈ)

பாயிரமுற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

பஞ்சாக்ஷாமகிமையுணர்த்த அத்தியாயம்.

வேதபாரகர்முனிவர்வேள்வியாங்கியற்றப்
போதிறன்முகத்திறையுணைசென்னியிற்புனையாச்
சீதவார்பொழினமிசாரணியத்தைச்சேர்ந்தாங்
காதிவேள்வினைவிதிமுறையியற்றுவானமைந்தார்.

(இ-புனை.) வேதபாரகராகிய முனிவர்கள் வேள்விசெய்ய விரும்பித் தாம ாப்பூவிலிருக்கும் கான்குமுகங்களையுடைய பிரமதேவனுடைய உத்தாரத்தைச் ிரசில் ஏற்றுக்கொண்டு, நைமிசாரணிய மென்னும் குளிர்ச்சிபொருந்தி மேலு ர்ந்தபொழிலிடத்தைச்சேர்ந்து, அவ்விடத்தில் வேதவிதியாற்சிவயாகமொன்று செய்யத்தொடங்கிலர்கள். எ-று. முதலிலிருக்கும் ஆங்கு-அசை. (க)

ஆயகாலையிற்புராணமீரொன்பதுமறைந்த
தூயமாதவச்சூதமாமுனிவந்துதோன்ற
ஏயமாதவர்முனிவனுக்கிருக்கையீந்தெமக்கு
நேயமாகியசிவகதைநிகழ்த்துதியென்றார்.

(இ - புனை.) அவர்கள் வேள்விசெய்துகொண் டிருக்கும்போது பதினென் புராணங்களையும் முனிவர்களுக்கெடுத்துச் சொன்ன பரிசுத்தமானபெருமை பொருந்திய தவமுள்ளசூதமுனிவர்வந்துதோன்ற அவ்விடத்திலிருந்தமுனிவர்கள் அவருக்கு ஆசனங்கொடுத்து வீற்றிருக்கச்செய்து எங்களுக்கு அன்பைவிளாவிப்ப தாகிய சிவகதையையருளிச்செய்யுஞ் சுவாமீ யென்றார்கள். எ-று. ஆகிய என்பது ாய எனவாயிற்று.

பதினென்புராணங்களாவன:—மச்சியம்-கூர்மம்-வராகம்-வாமனம் - பிர ம்-வைணவம்-பாகவதம்-சைவம்-இலிங்கம்-டௌடிகம்-நாரதீயம் -காருடம்-பிர கைவர்த்தம் - காந்தம்-மார்க்கண்டேயம்-ஆக்கினேயம்-பிரமாண்டம்-பதுமம்- ன்பனவைகளாம். தாங்கள் சைவர்கள் என்பது தோன்ற "நேயமாகியசிவகதை", ன்றனர். (உ)

கன்றுகன்றுநீர்மொழிந்ததுகானிலத்தவர்போற்
பொன்றமீறுன்றுதலொழிவிலாத்தேவனைப்போற்றல்
அன்றிநாயகன்காதையையிரும்பிணீரதனுள்
ஒன்றுகேட்பினுமதன்பயனளவையாருரைப்பார்.

(இ-புணை.) முனிவர்களே? நீங்கள் சொல்லியவார்த்தை மிகவுங்கன்று, பவும் நன்று, இவ்வுலகத்திலிருப்பவர்கள்போல இறப்பதும் பிறப்பதும் ஒழிய மற்றைத்தேவர்களைப் போற்றுதல்செய்யாமல், ஆதியந்தமில்லாத பரமசிவ சரித்திரத்தைக்கேட்க விரும்பினீர்கள், அத்தச் சிவசரித்திரம் அகந்தடா அதனுள் ஒரு சரித்திரங் கேட்டாலும், அதனால் வரும் பயனிவ்வளவென்று ளவிட்டுச் சொல்லுவார்கள். எ-று.

நன்றுநன்றென இரட்டித்தது மிகுதிதோன்ற. நாணிலம் நெய்தல், முல் குறிஞ்சி, மருதம். மனித சஞ்சாரமில்லாததூற் பாலைநிலம் நீக்கப்பட்டது.

ஆதில்சீர்க்கதைபற்பலவறைந்தனமினியாம்
பேசுநன்கதைபிறந்தகன்றிருவுருவான
மாசிலஞ்சிழுக்கடைவுசொன்மான்மியமுதலா
யீசனன்கதைகேட்பதேயறமென்பதிறை.

(இ-புணை.) குற்றமில்லாத புகழுடைய அகந்தாகிய சரித்திரங்களை உரைக்கு முன்னஞ்சொன்னேம். இப்பொழுது நாம் உங்களுக்குச் சொல்லு நல்லசரித்திரமாவது, பரமசிவனுடைய திருவுருவமாகிய பழுதகன்ற பஞ்சாக்; த்தின் முறைமையைச் சொல்லுகின்ற மான்மிய முதலாகப் பரமசிவனது சரித்திரத்தைக்கேட்பதே அறமென்று சொல்லுவதிறை. எ-று. (

இந்துசேகரன்றானமுஞ்சிவநிசியிடும்
பந்தந்தீர்பிரதோடத்தின்பூசையின்பலனும்
வந்தனைக்குறுசோமவாரத்தின்மான்மியமும்
அந்தமாதியிலாதவனடியவர்திறமும்.

(இ-புணை.) சந்திரசேகரனுகிய பரமசிவன் வீற்றிருக்கும் ஸ்தலமான்ட மும், சிவராத்திரி மான்மியமும், பாசபந்தத்தை நீக்குகின்ற சனிப்பிரதோ பூசையினால் வரும் பலனும், ஆராதனைக்குரிய சோமவார விரதமான்மியமு ஆதியந்தமில்லாத பரமசிவனுடைய அடியவர் மான்மியமும். எ-று.

பிரதோஷம் என்பது இராத்திரியின்முன்காலம்; அது அஸ்தமிப்பதற் முன் (கூ) நாழிகையும், அஸ்தமித்தபின் (கூ) நாழிகையுமுள்ள காலமாம்.

தெரிவருஞ்சிவகவசமும்பூதியின்செயலும்
புரியும்பத்தியினியதிசெய்பூசனைப்பொலிவும்
ஒருவுகற்பினள்பழியகற்றுமாமகேச்சுரமும்
அரனெனத்தகுமக்கமாமணியினதடைவும்.

(இ - புணை.) எளிதாக அறிதற்கரிய சிவகவசமான்மியமும், விபூதிமான்ப மும், விரும்படுகின்றபத்தியினால் நியதியாகச்செய்கின்ற சிவபூசைமான்மியமு

கற்புநீக்கியவளுடைய பழிநீக்கிய உமாமகேசுவரவிரத மான்மியமும், சிவனென்றேசொல்லத்தக்க பெருமைபொருந்திய உருத்திராக்ஷமணியின் மான்மியமும். எ-று. (சு)

வேதாகான்கிணும்விளங்குசிருருத்திரவீறும்
ஓதுகேணிவைகேண்மின்களெனத்தொகுத்துரையா
ஆதியருஞ்சிழுத்தமைவருமான்மியமுதலாச்
சூதமாமுனிமுனிவர்முன்வகுத்தனன்சொன்னன்.

(இ-புனை.) நான்கு வேதங்களாலும் சொல்லப்படுகிற சிறந்த உருத்திரமான்மியமுஞ் சொல்லுகின்றேன், இத்தச்சரித்திரங்களைக் கேளுங்களென்று தொகுத்துச்சொல்லிப் பின்பு வாக்குக்கடங்காத சிவசொரூபமாகிய பஞ்சாக்ஷரமான்மியமுதலாகச் சூதமாமுனிவரானவர் சுகமிசாரணியமுனிவர்களுக்கு வகுத்துச் சொன்னார். எ-று. (எ)

தவங்கள்வேள்விகண்முதலவாந்தருமவேள்விகளில்
அவங்கணீக்குமெய்ஞ்ஞானமாவேள்வியேயதிகம்
பவங்கணீக்குமவ்வேள்வியின்பாற்படுசெபமாஞ்
சிவங்கலப்புறுமந்திரவேள்வியைச்செப்பின்.

(இ-புனை) தவங்கள் வேள்விகள் முதலாகிய தருமவேள்விகளில் (பிறவிக்குக்காரணமாகிய) பயனில்லாதமுயற்சிகளை நீக்கநந்தக்க பெருமையுள்ள மெய்ஞ்ஞான வேள்விகளே அதிகம்; சனனங்களை நீக்குகின்ற அந்தவேள்விகளை யடுத்த செபமாகிய மங்களம்பொருந்திய மந்திரவேள்வியைச் சொன்னார். எ-று.

மூக்கணையக்ஙமாருண்முதல்வணமதுபோற்
றக்கமந்திரமெவற்றினுங்கலைமையைக்தெழுத்தே
தொக்கதான்மறைப்பிரணவமாதியாத்தொடங்கி
யொக்கவோதியேபரகதியளப்பிலருற்றார்.

(இ - புனை.) திரிகேத்திரங்களையுடையபரமசிவன் தேவர்களுக்குள்தலைவராம்; அதுபோல் தகுதியுள்ள எல்லாமந்திரங்களிலும் பஞ்சாக்ஷரமே முதன்மையாம்; (இந்தப் பஞ்சாக்ஷரத்தை) வியாசமுனிவரால் நான்காகத்தொகுக்கப்பட்டவேதங்களிற்சொல்லப்படுகிறபிரணவமாதியாகத் தொடங்கிச்சேர்த்தோதி அனந்தம்பேர் மோக்ஷமடைந்தார்கள், எ - று. ஏகாரம் தேற்றப்பொருள். (கூ)

இன்னமந்திரத்தோதொழுத்தின்பயனெல்லை
யன்னவூர்தியுந்திருமறுமார்பனுமறியார்
முன்னைநான்மறைதனித்தனிமொழிவதுமிதுவே
மன்னியெங்கணுஞ்சிவன்றிருவுருவமாய்வயங்கும்.

(இ - புணை.) இத்தன்மையுள்ள பஞ்சாக்ஷரத்தில் ஒரு அக்ஷரத்தின் டய னள விஜனப் பிரமதேவனும் திருமாலுமறியார்கள். பழமையாகிய ரான்கு வேதங்களி லொவ்வொன்றுந் சொல்வது மிக்தமந்திரத்தையே. இது அண்ட பிண்டமெங்கும் நிலைபெற்றுப் பரமசிவத்தின் திருவுருவமாய்விளங்கும். எ-று.

ஐந்தெழுத்திணுண்ணெறிவினமாருயிர்சென்று
சிந்தைகாணருஞ்சிவபதஞ்செறிந்திடுந்திறத்தால்
இந்தமந்திரநிலைபரப்பிரமமேயென்பர்
வந்தனைத்தொழிற்சச்சிதானந்தசின்மயத்தோர்

(இ - புணை.) இப்பஞ்சாக்ஷரத்தின் அதிசூட்சுமமுறையை (குருமுன்னி லையில்) விஜவும் அழிவில்லாத வுயிரான துசென்று மனதுக்கெட்டாத சிவபதத் தைச் சேர்ந்திடுந் தன்மையால் இந்த மந்திரத்திணுண்மை பரப்பிரமமேயாரு மென்று வந்தனைத்தொழிலையுடைய சச்சிதானந்த சின்மயர்களாகிய பெரியோர் கள் சொல்லுவார்கள். எ - று. விஜவென்பதனீற்றில் உம் தொகுத்தல் விகாரம்.

சத்து, சித்து, ஆனந்தம், சின்மயம் என்னும் நான்கு பதத்தினுமுற்ற பெரியோர் என்றனர். (கக)

கருப்பயோனியிற்சுழிப்படுபவக்கடல்கடப்பப்
பொருப்பினெம்பிரானுயிர்க்கெலாம்புணையெனப்புகன்ற
விருப்பனுனான்வஞ்செழுத்தினையுளத்தினிடைவித்திற்
றருப்பைசுட்டிடும்வேள்வியேன்றுனமேன்றவமேன்.

(இ - புணை.) கருத்தங்கும் என்பத்துநான்குலகூ யோனிபேதமாகிய (இரு விஜனயென்னும்) சுழிபொருந்திய சென்னசாகரத்தைக் கடக்க உயிர்க்கெல் லாம், திடப்பமாக கயிலாயகிரியில் வீற்றிருக்கும் கங்கடவுளாகிய பரமசிவனரு ளிச்செய்த விருப்பமுள்ள நானமயமான பஞ்சாக்ஷமென்னும் விதையை மனமென்கிறநிலத்தில் விதைத்தால் (மோக்ஷமாகிய பயனைத்தரும்) ஆதலால் தருப்பையைச்சுடும் வேள்வியேன் தானமேன் தவமேன் (வேண்டுவதில்லை.) எ - று.

வித்தின் எனக் கூறினமையால்-விதையும் நிலமுங் கூறப்பட்டன. விதை த்தலாவது நியானித்தல். ஆழ்ந்தநீரின் சுழியிலகப்பட்டது அற்பமாகிய தரும்பா ணுலும் அதனிடத்தில் சதா சுழன்றுசுழன்றழல்வதுபோல சென்னசாகரத்தி லகப்பட்ட ஆன்மாவானது அதினின்றும் நீங்குவது அருமை என்பதுநோன்ற "சுழிப்படுபவக்கடல்" என்றனர். (கஉ)

பருதிவன்தெழாவளவுநீடிருளெனப்பவமுஞ்
சுருதியஞ்செழுத்துணர்கலாநாளெலாந்தொடருங்

கருதிணன்மறையந்தத்தம்வேதத்தின்கண்ணும்
ஒருதனிப்பெருங்கடவுளஞ்செழுத்தலாதுளதோ.

(இ-புனை.) சூரியனுதயமாகாதவனையில் இருள் கீழ்த்திருப்பதுபோல, வேதத்திற்சொல்லுகிற பஞ்சாக்ஷரத்தை யறியாதநாளெல்லாம் சென்னமானது தொடரும். எண்ணுமிடத்தில் வேதாந்தமாகியவுபநிடதத்திலும் வேதங்களினிடத்தும் ஒப்பற்ற பெருங்கடவுளாகிய பரமசிவனது பஞ்சாக்ஷரமல்லது வேறுண்டோ (இல்லை). எ - று.

புண்ணியத்துக்குமுன் பாவநில்லாதென்பதுதோன்ற "பருதிமுன்னிருள்" என்றனர். (கக)

முத்திநன்னெறிக்கொருதுணைமோகவாரிதிக்கு
வைத்தசெஞ்சிகைவடவனல்வினைவனத்திற்குப்
பொத்திறுங்குவெங்கதழிருளினமதிக்கண்ணி
யத்தனெந்தையஞ்செழுத்திதுகடைப்பிடித்தறிவீர்

(இ-புனை.) திங்களாகிய மாலையைத்தரித்த அத்தனாகிய எம்மையனது பஞ்சாக்ஷரமானது நல்ல மோக்ஷவழிக்கு ஒப்பற்றதுணையாம். மோகமாகிய சமுத்திரத்துக்கு அமைத்துவைத்த சிவந்தசுவாலையையுடைய வடவாமுகாக்கினியாம். இருவினையாகிய வனத்திற்கு வியாபித்துக்கொண்டு மிகுந்த வேகமாக எரிக்காநின்ற வெப்பமுள்ளதியாம். இதனைத் தெளிவாகக் கொண்டறிவீர்க்ள். எ - று.

வடவாமுகாக்கினியானது பெட்டைக்குதிரையின் முகம்போல் உருவமுள்ளதாகச் சமுத்திரத்தினிடத்திலிருந்துகொண்டு அதில் நீர் அதிகரிக்காதவண்ணம் சுவறச்செய்வதாகியதுக்கினியாம். (கச)

ஊனநீக்கியசிவமுன்னர்நமவினையுரைக்கின்
ஞானமெய்திடுமனைவர்க்குநம்பனர்கயக்குந்
தானமெய்திநற்குரவராற்பெற்றவர்தங்கட்
கானசித்தியுமுத்தியுமக்கணத்தாமால்.

(இ-புனை.) மும்மலங்களையும் நீக்கிய சிவ என்பதன்முன் நம என்பதைச் சேர்த்துச் செபித்தால் அவர்களுக்கெல்லாம் ஞானமாதங்கிடைக்கும். பரமசிவன் விரும்பித் (திருக்கோவில்கொண்டுவிற்றிராகின்ற) ஆலயத்திற்சென்று நல்ல குருவினால் உபதேசஞ்செய்துகொள்ளப்பெற்றவர்களுக்கு விரும்பியவைகளையெல்லாங்கொடுக்கத்தக்கதான அஷ்டமாசித்திகளும், மோக்ஷமும், அப்பொழுதே கிடைக்கும். எ-று. ஆல்-அசை. (கஞ)

வேறு.

தாதவிழ்கடுக்கையஞ்சடிலகாயகன்
ஆதியினவின்றநல்லஞ்செழுத்தையு

மேதகுகுரவனுலுணர்ந்தோர்வேந்தன்றூன்
றீதறுத்துய்ந்தமைசெப்புவாமரோ.

(இ-புனா.) மகரந்தத்தோடுமலர்ந்த கொன்றைப்பூமாலையணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன் ஆதியில்அருளிச்செய்த நல்ல அந்செழுத்தையும் மேன்மைபொருந்திய குருவினுலறிந்து, ஒருராசனனவன் பாவங்களைநீக்கிக் கடைத்தேறியசரித்திரத்தை யாம் சொல்லுகிறேம் (என்று சூதமுனிவர் சொல்லுகின்றார்) எ-று. அரோ-அசை.

மகரந்தம் என்பது புட்பத்திடத்துத்தங்கிய ஒருவித பொடியாம். (கசு)

தேங்குபோராழியுந்திகிரிக்குன்றுமொத்
தோங்குநீரகழியொடியெருமூதெயில்
பாங்கர்சூழ்மதுரையம்பதிக்குமன்னவன்
வாங்குவிலெதிகுலமரபிற்றோன்றினன்

(இ-புனா.) நிறைந்துள்ள பெரும்புறக்கடலையும் சக்ரவாளகிரியையுமொத்துமிகுந்த நீரையுடைய அகழியுடன் உயர்ந்த பழமையாகிய மதிலானது புறத்தில் சூழ்ந்திருக்கும்படியாகிய அழகிய மதுரைமாநகரத்துக்கிறைவன்போர்முகத்தில்வளைக்கும் வில்லையுடைய எதிகுலமரபிற் பிறந்தவன். எ-று.

தியங்கு என்பது எதுகை நோக்கி தேங்கென மருவியது. இங்கு "மதுரை" யென்றது வடமதுரையை. (கள)

வடுவிலாப்பெரும்புகழ்வயங்கலையகத்
திடுபெயர்த்தசாருகனென்னுமாண்பிறன்
ரூடுகழற்ருளினன்புலவுச்சோரிவேல்
அடுகடற்ரூனையாளனிமொய்ம்பினன்.

(இ - புனா.) குற்றமில்லாத பெரிய புகழானது உலகமெங்கும்விளங்கத் தசாருகனென்றுசொல்லப்பட்ட பெயர்கொண்ட மாட்சியையுடையவன், வீரகண்டையணிந்தகாலையுடையவன், பகைவருடலின்உதிரத்தில் தோயத்தக்கவேலால் எதிர்த்தவனைக்கொல்லுகிற சமூத்திரம்போன்றசேனையையுடையவன், சிங்கத்தை யொத்த பலமுள்ளவன். எ-று. (கஅ)

நாளினின்மனுமுறைநடாத்துமாணையான்
வாளினிற்றெவ்வர்தம்வலியையமாற்றினேன்
ரூளினில்வனாகளைத்துளக்குமாற்றலான்
வேளினின்வனப்பினன்றவத்தின்மேன்மையான்.

(இ - புனா.) தன்காலத்தில் மனுமுறைதவறுதபடி நீதிசெலுத்திய ஆக்கினையுள்ளவன், தன்கைவாளினுல் பகைவருடையபலங்களை யொடுக்கினவன், தன்

தோள்களால் மலைகளையசைக்கத்தக்க பராக்கிரமத்தையுடையவன், மன்மத னையொத்த அழகுள்ளவன், தவத்திலு மேன்மைபொருந்தியவன். எ-று. (கக)

இக்கைகமன்னவனிளநிலாநகை
முத்தணிமுகிழ்முலைமுளரிவாண்முகக்
கொத்தலர்கறங்குழற்கோதைதேவல்விழி
மெய்த்தவக்கொடியினைவிதியின்வேட்டநாள்.

(இ - புணை.) இப்படிப்பட்ட பெருமையுள்ள அரசனையவன், நிலவினது இளங்கதிரைப்பரப்புகின்ற ஒளிபொருந்திய முத்துமாலையணிந்த தாமரை யரும்பையொத்த தனங்களையும், செந்தாமரைமலர்போன்ற ஒளிபொருந்திய முகத்தையும், கொத்துகளாகியமலர்களையணிந்த வாசனைபொருந்திய அளகத் தையும், வெற்றிமாலையணிந்த வேல்போன்றகண்களையுமுடைய உண்மையாகிய தவத்தினல்பிறந்த ஒருகன்னிகையை வேதவிதிப்படி விவாகஞ்செய்துகொண்ட நாளில். எ - று. (உ0)

நல்கியதூமமூநானத்தீபமு
மல்கியமணிவறைமலர்ப்பெய்பாயலிற்
பல்கியவிருப்பினன்வளைக்கைபற்றலும்
மெல்கியகொடியினிலொதுங்கிக்கூறுவாள்.

(இ - புணை.) தூபிகளாலூட்டப்பட்ட அகிற்புகையும், கஸ்தூரிச்சேர்த்த தீபமும், நிறைந்துள்ள மணிவறையுள், மலர்கள்பரப்பிய சயனத்திலிருந்து கொண்டு, மிகுந்தவிருப்பமுள்ளவனுகி வளையணிந்தகையைப்பற்றவும், அவள் அசைகின்ற பூங்கொடிபோலப்பின்னெதுங்கிச் சொல்லுகின்ருள். (உக)

நின்னெடுந்தோள்வரைநெமுங்கப்புல்லுதற்
குன்னருங்காதலென்னுளத்தின்றுதலான்
மன்னகேளொருதலைக்காமமன்னினர்க்
கின்னலேயன்றிமற்றின்பமில்லையே.

(இ புணை.) உன்னுடைய மலையொத்தபுயங்களை அழுந்தப்புல்லுதற்கு நினைத் தற்கருமையாகிய ஆசையானது என்மனதிலில்லை, ஆகையினல் மன்னவனே கேளரு, ஒருதலைக்காமத்தைப் பொருந்தினவர்களுக்குந் துன்பமுண்டாகுமே யன்றி இன்பமுண்டாவதில்லை. எ - று. மற்று-அசைநிலை. ஏ-ஈற்றசை.

காமமிருவரிடத்தும் சமமாகத்தானே இருக்கவேண்டுமென்பதுதோன்ற "உன்னருங்காதலென்னுளத்து" என்றனள். மன்ன என்பது அண்மைவினி. ஒருதலைக்காமம் என்பது - ஒருவரிடத்துண்டான ஆசை. ஈண்டு அரசனிடத்து மாத்திரமுண்டானமையால் "ஒருதலைக்காம" என்னப்பட்டது. (உ1)

சிங்கைவேறுபினர்பிணியிற்றேய்பிணர்
புந்தியின்விருப்பிலார்விரதம்பூண்டிளார்
உந்தியிற்கருவிணொருவுபூப்பினர்
மூந்துறுவயிபினுன்முயங்கற்பாலரோ.

(இ - புனை.) மனதுவேறுகிய மாதர்களும், வியாதியினல்வருந்திய மாதர்களும், உள்ளத்தில் விருப்பமில்லாத மாதர்களும், விரதங்கொண்டிருக்கு மாதர்களும், வயிற்றில் கருப்பமுள்ள மாதர்களும், சூதகீங்கிய மாதர்களும், மூர்த்துகின்ற பலாத்காரத்தினல் அணையுந்தன்மையை உடையவர்களல்லர் எ - று. ஓகாரம் எதிர்மறை. (உக)

கயங்கெழுநறுமலர்கயங்குறுவகை
பயங்கெழுதேனுகர்சுரும்பின்பான்மைபோல்
வயங்கிழைமகளிணைமனந்திருத்தியே
முயங்கினர்க்கன்றிமற்றின்பமுற்றுமோ

(இ-புனை.) தடாகங்களிற் பொருந்திய வாசனையுள்ள மலர்கள் கசங்காமல் வண்டுகள் தங்களுக்குப் பிரயோசனமாயுள்ள தேனைக் காலமறிந்துண்ணுந் தன்மைபோல் விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த தங்கட்குரிய மனைவிகளுடைய மனதைத்திருத்திப் புணர்ந்தவர்க்கல்லது இன்பமுண்டாகுமோ உண்டாகாது. எ-று. மற்று - அசைநிலை. (உச)

என்றவள்கூறலுமெழுந்தகாமநோய்
தன்றலைமீக்கொளத்தாங்கலாதவன்
குன்றெனவீங்கியகுவவுத்தோளினுற்
பொன்றிகழ்வனமுலைவவிதிற்புல்லினன்.

(இ-புனை.) என்றவள்சொல்லவும், தன்மனத்துண்டாகிய காமநோயானது தலைமட்டுமேறுதலால், அந்தக்காமத்தைச் சகிக்கமாட்டாதவனாய், அவ்வரசனனவன் மலைபோல உயர்ந்த திரண்ட தன்தோள்களால் அவளுடைய பொன்னிறமுள்ளதாய்விளங்குகின்ற அழகியதனங்களை வலிவில் புல்லினன். எ-று. (உந)

புல்லியகாலையிற்பொருதுமாதவ
மெல்லியல்குளிர்தளிர்மேனிவெம்பியே
கொல்லுலையழல்புகக்கொளுந்திரும்புபோல்
வல்லழலினைறத்ததுடகிணன்மேனிமேல்.

(இ-புனை.) அப்படிபுல்லியகாலத்தில் பொறுமல் மாதவத்தையுடைய அந்த மாதின்குளிர்ந்ததளிர்போன்றமேனியானது, வெதும்பிக் கருமான்உலைக்களத்திற் சேர்ந்ததினல் அக்கினிமயமாய்ச்சுடுகின்ற இரும்புபோல் கணவன்மேனிமேல் மிகுந்தவெப்பமுள்ள தீயையிறைத்தது. எ-று. (உசு)

சாந்தமும்பொரிந்ததுதாமந்தீந்தது
தோய்ந்தொளிராமுஞ்சுண்ணமானதால்
ஏந்தலும்வெருவிமெய்யிறுகப்புல்லிய
நாந்தகத்தடக்கைகணடுங்கிவாங்கிஞன்.

(இ - புணை.) அந்தவெப்பத்தினுல் அரசன்மார்பிலணிந்திருந்த சந்தனக் குழம்பும்பொரிந்துதிர்ந்தது, பூமாலையுங்கருகியது, அணியப்பட்ட டொளிர்கின்ற முத்துமாலையும்தீருகியது, (இவைகளெல்லாமிப்படியானதினுல்), அந்தஅரசன் பயந்து தன்மனைவிமேனியை யிறுகப்புல்லிய வாள்பிடிக்கும் கீண்டகைகள் நடுக்கி வாங்கிக்கொண்டான். எ-று. ஐல்-அசை. (உஎ)

வாங்கியமன்னவன்மாதைதோக்கின்
தேங்கமழ்தளிர்புரைசெய்யமேனியின்
ஓங்கழல்வெதுப்படவென்னுடலம்வெந்ததால்
ஈங்கிதனிமித்தம்யாதெனவிளவினன்.

(இ-டுணை.) கைகளைவாங்கிக்கொண்ட மன்னவனைவன், தன்மனைவியைப் பார்த்து, வாசனைகமழ்கின்ற செந்தளிரையொத்த உன்னுடைய செவ்விதாகிய மேனியிலிருந்துண்டாகிய மிகுந்ததீயானதுசுட, என்னுடல்வெந்தது; இதனுடையகாரண மென்னென்றுவினவினன். எ-று. ஐல்-அசை.

இங்கு தளிர் என்றது, மான்றளிரை. (உஅ)

ஆயிழைமுறுவலித்தாசகேள்பவ
மாயிருடெறுந்துருவாசரீசனர்
கேயவஞ்செழுத்தினைநிமழ்த்தலால்வினை
போயதென்னுடலமும்புனிதமாயதே.

(இ - புணை.) அழகுள்ளதாகச்செய்யப்பட்ட ஆபரணங்களணிந்த அந்த மாதரைநோக்கி ராசாவேகேளும், பிறவிக்கேதுவாகிய பெருமையுள்ள ஆணவமல இருளைக்கெடுத்த துருவாசமுனிவரானவர் பரமசிவன் அன்புறத்தக்க பஞ்சாகூரத்தை எனக்குபதேசித்ததினுல், இருவினையும்நீங்கியது; என்னுடலும் பரிசுயது. எ-று. ஏ-அசை. அரச, அண்மைவிளி. (உக)

புண்ணியம்பாவத்தைப்பொருந்தலின்றி
திண்ணமிப்புனிதமாஞ்செய்யமேனியை
யண்ணலஞ்செழுத்தினையறியலாதகின்
தண்ணியம்மனியாறறழுவறபாலம்மா.

(இ-புணை.) புண்ணியமானதுபாவத்தைச்சேராது; இதுநிச்சயம்; (ஆதலால்) புனிதமாகிய இந்த கல்லவுடலைப் பாமசிவனுடைய பஞ்சாக்ஷரத்தையறியாத வம்முடைய குளிர்ச்சிபொருந்திய மேனியால் நீர்தழுவந்தக்கவரோ எ-று. ()

இக்கிலவினைந்தீயிறைவன் மந்திர
மின்னுடைச்செவிப்புலநிறைத்துத்தாய்மையாய்ப்
பின்னரென்மெய்ங்கலம்பெறுதியென்றனள்
அன்னமந்திரமெனக்கருளென்றேறுதினன்.

(இ - புணை.) நீர் இப்பொழுதே விணைவாகப் பரமசிவனுடையபஞ்சாக்ஷரத்தை, உம்முடையகாதினிடத்தில் உபதேசஞ்செய்யப் பெற்றுக்கொண்டு, பரிசுத்தமாகி, அதன்பின்பு, என்மெய்யின்பத்தைப் பெற்றுக்கொள்ளுமென்றுசொன்னாள். (அப்படியானால்), அந்தமந்திரத்தை நீயெனக்குபதேசஞ் செய்யவென்று சொன்னான். எ-று. (கூ4)

மாதர்பான்மெய்ம்மொழிமகிழ்நர்கேட்பது
நீதியன்றானருணிறைந்ததேசிகன்
மேதகுகார்க்கர்பால்விழைவினற்பெறப்
போதுகவென்றனள்பொருந்தினனோ.

(இ - புணை.) கணவர்கள் தங்கள்மனைவியரிடத்தில் உண்மையானமந்திரோபதேசம் பெற்றுக்கொள்வதுநீதியல்லவே! சிவனதுகிருபையைப் பூரணமாகப்பெற்றுள்ள குருவாகிய மேன்மைபொருந்திய கார்க்கமுனிவரிடத்தில் விருப்பமுடன் பெற்றுக்கொள்ள நீர் என்னுடன் வாருமென்றாள். (அவ்வாசன்) அதற்குச்சம்மதித்தான். எ-று. அரோ-அசை. (கூ5)

குரவவார்குழலொடுங்கொழுநனக்கணங்
திரைபுனைர்யமுனையந்தீரமெய்தியே
வரைமுனிகார்க்கர்தாள்வணங்கிவந்தவா
றுரைசெய்துபின்னுமோருரைவிளம்பினன்.

(இ-புணை.) குரவம்பூவணிந்த நீட்சியாகிய அளகத்தையுடைய தன்மனைவியோடும் கணவனுனவன், அப்போதே அலைகள்மோதுகின்ற அழகிய யமுனைநதியின்கரையிலடைந்து, சிரேஷ்டம்பொருந்திய கார்க்கமுனிவருடைய பாதங்களைப்பணிந்து, தான் வந்தகாரியத்தைச்சொல்லிப் பின்னுமொருவார்த்தை சொல்லுவ

எ - று.

யமுனைநதியானது சமுத்திரம்போலகன்று விசாலித்தது என்பதுதோன்ற "திரைபுனைர்" என்றனர். (கூ6)

மருளுறுபவக்கடலுழும்வஞ்சனே
யருடருமஞ்செழுத்தம்பியாகநீ
தெருடருதேசிகமுத்தித்தீமேல்
இருளறவேற்றதியென்னவேத்தினன்.

(இ-புணை.) தெளிவைத்தருகின்ற குருவே? (யாவரும்) மயங்கத்தக்கதாகிய சனனசாகரத்தில் முழுகியிராகின்ற பாவியாகிய அடியேனை, அருளைத்தரு கின்ற பஞ்சாக்ஷரமானது தெப்பமாகும்வண்ணம் (உபதேசித்து), மயக்கந்தீரும் படிச்செய்வித்து மோக்ஷமாகிய கரையிலேற்றுமென்று துதிசெய்தான். எ-று. ()

அம்முனிநிருபன்மேலருளுநோக்குடன்
எம்மையாளிறைவனையுளத்திருத்தியே
செம்மலர்சிவகரஞ்சென்னிசேர்த்துபு
மெய்ம்மையஞ்செழுத்தையும்விதியிற்கூறினன்.

(இ-புணை.) அந்த முனிவரானவர் அரசனிடத்தில் கிருபைசெய்யும் நோக்கத் துடன், நம்மையாட்கொள்ளும் பரமசிவனை யிருதயத்திலிருத்தியாணித்துச் செந் தாமரைமலர்போன்ற தம்முடைய நல்லகையை அவன்சிரசில்வைத்து, உண் மையாகிய ஐந்தெழுத்தையும் விதிப்படி உபதேசித்தார். எ-று. (௫)

வேறு.

ஓகைபுரிதேசிகனுரைத்தபொருள்கொண்ட
வாகைவடிவேலிறைமயிர்க்குழிகணின்றும்
வேகவினையாவையும்விரைந்துசதகோடிக்
காகவுருவாய்மிசைபறந்தனகரிக்த.

(இ-புணை.) சங்தோஷத்தைச் செய்கின்ற தேசிகராகிய கர்க்கமுனிவருபதே சித்த பஞ்சாக்ஷரத்தைப்பெற்றுக்கொண்ட வெற்றிபொருந்திய வடிவேலையுடைய அந்தஅரசனுடைய ரோமத்துவாரங்களினின்றும், கடுமையுள்ளவினைகளெல் லாம் நூறுகோடிகாக்கையுருவமாய் மேலெழுந்து பறந்துகரிந்ததுகள் எ-று.

இங்கு நூறுகோடியென்றது, அநேகங்கோடியை, புண்ணியத்திற்கு முன் பாவமானது பஞ்சாய்ப்பறக்கு மென்பது இதனாற் பெறப்பட்டது. (௫௰)

மேனியினெழுங்கொடிகள்வெந்துவிழல்கண்ட
மானவடிவேலரசர்மன்னவன்வணங்கி
யூனுடலினிக்கொடிகளூற்றெழுலெனீறாய்ப்
போனதெவனென்னமுனிபுங்கவனுரைத்தான்.

(இ-புணை.) தன்னுடலினின்று மேலெழுந்த காக்கைகள் வெந்துவிழுவதைக் கண்ட பெருமைபொருந்திய வடிந்தவேலையுடைய அரசர்க்கரசனானவன் வண ங்கி அடியேனுண்டைய ஊன்சம்பந்தமாகியசரீரத்தினின்று மிந்தக்காகங்கள்

உண்டாகி மேலெழுந்த காரணமென்ன? அவைகள் கீழுய்ப்போன காரணமென்ன வென்று விஞ்ச, முனிசிரேஷ்டராகிய கர்க்கர் சொல்லுகின்றார். எ-று. (கஎ)

கல்வினையுழந்துபலகல்லுருவெடுத்தும்
அல்வினையுழந்துபலவல்லவுருவுற்றும்
தொல்வினைதொடர்ந்ததருசூழ்பிறவியென்னும்
வல்வினையொழித்தனையிம்மந்திரகலத்தால்

(இ-புனை.) கல்வினையைச்செய்து பலவாகிய கல்லுருவமெடுத்தும், தீவினையைச்செய்து துன்பமனுபவிக்கத்தக்க பல தியவுருவமெடுத்தும், பழையவினையாகிய சஞ்சிதந்தொடர்ந்ததருவதால், சுழலுகின்றபிறப்பாகிய வலியவினையை இந்தப் பஞ்சாக்ஷரத்தினன்மையால் ஒழித்தாய். எ-று

வாழ்வினைக்கிடனுய் சனனம் உண்டென்றனர். (கஅ)

ஒழிந்தவினைகாகவவுருக்கொடுடனின்றும்
எழுந்தனவருந்தொடர்பிலாதனைவகணீறுய்
விழுந்தனவருந்தவுளம்வென்றிபுனைவேலோய்
செழுந்திருவெழுத்தினிலைசெப்பவெளிதன்றே.

(இ - புனை.) வெற்றிகொண்ட வேலாயுதத்தையுடைய அரசனே? ஒழிந்தவினைகள், உன்னுடலினின்றும் வலியகாகரூபங்கொண்டெழுந்து இனி தொடருந் தொடர்ச்சியில்லாமையிஞல், வெந்துகீறுய்விழுந்ததுகள். ஈ மனம்வருந்தாதே மென்மையுள்ளபஞ்சாக்ஷரத்தி னிலைமைசொல்லவெளிதல்ல. எ - று. ஏ-அசை.

பாவமானது கரிய வுருவென்பதுதோன்ற "காகவுரு" என்றனர். (கக)

கண்டனவிளைந்தபடிகாமர்கரிற்போய்
ஒண்டொடியுநீயுநலனுண்டிடலொழிந்தால்
அண்டர்பதம்யாவையுமடைந்தவைதுறந்து
தெண்டிரைவிடத்தைதருகர்செம்மலடிசேர்வீர்.

(இ-புனை.) அரசனே? நடந்தகாரியங்களெல்லாங்கண்டனையல்லவா இனி நீயுமுன்மனைவியும் அழகியநகரத்திற்போய் இன்பமனுபவித்துக் கொண்டிருந்து இந்தச்சரீரமொழிந்தால் பின்பு முறையே தேவர்பதவிகளையடைந்து (அவைகளிலுள்ள இன்பங்களையுமனுபவித்து), அவைகளையும்நீக்கித் தெளிவானஅலைகளையுடைய சமுத்திரத்திலுண்டாகிய விஷத்தையுண்டபரமசிவனுடைய திருவடிகளைச் சேர்வீர்கள்.—எ - று. (கo)

என்றவனியம்பலுமெழுந்தவடிவேலோன்
குன்றனையமாடமணிகோனகரமெய்தித்

தன்றுணைவ்யின்னலதுகர்ந்திடறணைப்ப
டன்றன்மனை யோடுமரன்வாழ்பதமடைந்தான்,

(இ-புனை.) இப்படியாகக் கர்க்கமுனிவர் சொன்னமாத்திரத்தில் வடிந்தவே லையுடைய அவ்வரசனுனவன் எழுந்து மகமேருவையொத்த வீடுகளுள்ள சிறப்பு ப்பொருந்திய நகரத்திற்சேர்ந்து, தன்மனைவியினிடத்தில் இனிதாகிய இன்பமனு பவித்து, உடலநீங்க, விவாகஞ்செய்துகொண்ட அம்மனைவியுடன் பரமசிவன் வீற்றிராநின்ற சிவலோகஞ் சேர்ந்தான். எ-று. (சுக)

வேறு.

மன்னுயிர்க்குயிரா மீசன்வடிவெனுமஞ்செழுத்தின்
தன்னிலையறிந்தவாறுசாற்றினேனென்றுனென்ற
பின்னரேதலத்தின்வீறுஞ்சிவரகிசிப்பீடுஞ்சொல்வேன்
தொன்னெறிமுனிவர்கேண்மினென்றனன்சூதன்சொன்னான்.

(இ - புனை.) நிலைபெற்ற உயிர்க்குயிராகிய பரமசிவனுடையசொரூபமான பஞ்சாக்ஷரத்தினிலைமையை நானறிந்தமட்டிற் சொன்னேனென்றுசொல்லினர். அப்படிச் சொன்னவுடனே, சிவதலமான்மியமும், சிவராத்திரிமான்மியமும், கொண்ட பெருமையைச் சொல்லுகிறேன் பழமையாகிய நன்னெறிதவறுத முனி வர்களே? கேளுங்களென்று சூதமுனிவர்சொன்னர். எ-று. (சுஉ)

முதலாவது

பஞ்சாக்ஷர மகிமையுணர்த்த அத்தியாயம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் நிஎ.

இரண்டாவது

சிவதானமகிமையுணர்த்த அத்தியாயம்.

சூரியகுலத்திற்றோன்றலொன்னகரயோத்திவேந்தன்
வாரணிபெறுமென்கொங்கைமதயந்திவிரும்புதோளான்
வேரியந்தொடையன்மார்பன்மித்திரசகாமத்தான்
ஆரணியத்தின்வேட்டையாடுவான்விரும்பிப்புக்கான்.

(இ-புணை.) சூரியகுலத்தாசனும் பழமையாகிய அயோத்திநகரத்து வேந்தனும், கச்சினையும்ஆபரணங்களையும்பொருந்திய மிருதுவாகிய தனங்களையுடைய மதயந்தியென்னும் டெயர்கொண்டமனைவியிலால் விரும்பப்பட்ட புயங்களையுடையவனும், தேனிறைந்த அழகியபூமாலையணிந்த மார்பையுடையவனும், மித்திரசகன் என்னும்பெயரையுடையவனுமாகிய அரசனனவன், அரசாட்சிசெய்துகொண்டிருக்குநாளி லொருநாள், வேட்டையாடவிருப்பங்கொண்டு, ஆரணியத்திற்சென்றான். எ-று. (க)

பூட்டுவெஞ்சிலையிற்காலும்பொங்கழற்பகழிதூர்த்தக்
காட்டினுள்வல்விலங்கின்கணமெலாந்தொலைக்குங்காலை
வேட்டஞ்செய்விருப்பினன்முன்னிருவரோர்வயிற்றின்மேய
வாட்டிறலரக்கரங்கிவணாயெனவந்ததிர்த்தார்.

(இ-புணை.) தான்பூட்டிய கொடியசிலையில்வைத்து வெப்பமிகுந்த தீயைக்கக்கும்படியான பாணங்களைப்பிரயோகஞ்செய்து, காட்டினிடத்திருக்கு மிருகக்கூட்டங்களையெல்லாம் அழிக்கும்போது, வேட்டையாடும்விருப்பமுள்ள அவ்வரசன் முன் ஒருதாய்வயிற்றிற் பிறந்தவர்களாய், வாட்போரில்வல்லவராகிய இரண்டுராக்ஷதர்கள் அக்கினிமலைபோலவந் தெதிர்த்தார்கள். எ-று. (உ)

அவ்வரக்கர் கரிய வுருவினரேயாயினும் கோபத்தின் வேகத்தைப்பற்றி "அக்கினிமலை" என்றனர்.

முன்புறவெதிர்ந்துபோர்செய்முன்னவன்றன்னைவாளாற்
றுன்புறமாய்த்தான்முன்னேன்றெழுவுகண்டினையரீசன்
வெம்புறங்காட்டியேகிமீண்டுவஞ்சனையால்வெல்வான்
அன்புடைமனிதனெய்வந்தாசனகடியிற்றுழ்ந்தான்.

(இ-புனை.) தன்னெதிரில்முனைந்து போர்செய்கின்ற மூத்தவனை அந்தஅரு ணனவன் வாளாயுதத்தினால் துண்பமடையக்கொன்றான், அண்ணனிறந்ததை ண்டு தம்பியாகியபீசனனவன், முதுகுகாட்டியோடிப்போய், வஞ்சனையால் ல்ல எண்ணங்கொண்டு, அன்புள்ளமனிதவுருவங்கொண்டு வந்து, அந்தமன் வன்டாதத்தில் வணங்கினான். எ-று.

நீசனென்றது இராகூசனை. (க)

அரசனுன்வ்ரமேவிதன்னவரக்கனுமண்ணம்லயுன
குனைகழற்கேவல்செய்யுங்கொள்கையினைடைந்தேனென்று
னிருபணங்குவந்துவஞ்சனிலையினைச்சிறி துந்தோன்
வரிசையினடிசினல்குமடைத்தொழிலவனுக்கீந்தான்.

(இ - புனை.) அரசனவனைக்கண்டு நீவந்தகாரண மென்னவென்றுவினவ, அந்தராகூசன் மகாராசாவே! உம்முடைய வீரகண்டையணிந்த பாதங்களுக்குக் குற்றேவல்செய்யு மெண்ணத்துடன்வந்தேனென்றான்; அதைக்கேட்ட அரசன் சந்தோஷித்து அவன்மோசநினைப்பைக் கொஞ்சமுமறியாமல் இரமமாகச் சமயல்செய்யு மடைத்தொழிலை அவனுக்குக்கொடுத்தான். எ - று. மடை சோறு. (ச)

வெருக்கொளவிலங்குமாய்க்கும்வேட்டையங்கானீங்கி
யரக்கனுமுடன்வந்தெய்தவயோத்தியினடைந்துவேந்தன்
மருக்கமழ்குழுதச்செவ்வாய்மதயந்தியோடும்வாழ்நாள்
உருக்களினகன்றிறந்தோர்க்கூட்டுகாளுற்றதன்றே.

(இ - புனை.) பயங்கொள்ளும்படி மிருகங்களைக்கொல்லும் வேட்டையாடுகி ன்ற அழகியகாட்டினைவிட்டு நீங்கி அந்தராகூசனுங்கூடவரும்படி ராசனு னவன், அயோத்தியிற்போய்ச்சேர்ந்து, வாசனைகமழ்கின்ற செவ்வல்லிமலரை யொத்த வாயையுடைய மதயந்தியுடன் வாழ்கின்றநாளில், உடலை விட்டிறந்த பிதிர்களுக்குச் சிராத்தஞ்செய்யுநாள்வந்தது. எ - று. அன்று-ஏ-இவ்வி ன்மெனை. (ஞ)

தென்புலவாணர்க்கோகைசெய்யுநாளிதுகாளென்ன
மன்பதைபுரக்கும்வேந்தன்வசிட்டனைவரித்துப்பூசித்
தன்பினுண்மிசைகவென்றுனரக்கன்றனெண்ணந்தீர்ப்பா
னன்கலத்தழுதத்தோதாருடையுனிட்டானே.

(இ-புனை.) தெற்குத்திசையில்வாழ்கின்றவர்களாகிய பிதிர்க்களுக்குச்சந்தோ ஷந்தையுண்டாக்கும் காளாகிய சிராத்தநாள் இக்காளென்று புரோகிதன் சொல்ல, மனிதர்களைக்காக்கும் அரசனுனவன், வசிஷ்டமுனிவனைஅழைப்பித்து

அன்புடன் ஆராதனைசெய்து அமுதுகொள்ள வேண்டுமென்றான் (வஞ்சித்து வந்திருக்கின்ற) அந்த ராக்கதனனவன், தன்னெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வசிஷ்டமுனிவருக்குப் பொற்பாத்திரத்தில் கல்லமுதத்துடன் நரமாமிசத்தைப்படைத்தான். எ-று ஏ-அனை. (சு)

உய்த்தவுண்மணிதருனென்றுள்ளத்தினேர்ந்துதூய
மெய்த்தவன்கனன்றுசீறிவெய்யவன்வஞ்சமோரான்
வைத்தறுசினக்கானங்கமன்னனேயிதுசீசெய்தாய்
அத்தலரரருன்றின்னமரக்கனேயாதியென்றான்.

(இ - புனை.) படைத்தமாமிசம் நரமாமிசமென்று தம்முள்ளத்திலறிந்து பரிசுத்தமுள்ள மெய்யானதவத்தையுடைய வசிஷ்டமுனிவர், அந்த அரக்கன் செய்தவஞ்சகத்தை யறியாதவராய், மனங்கொதித்துச்சீறிப், பொருந்தியகோபத்தினையுடையவராய், அந்தமன்னவனைப்பார்த்து, (சிராத்தகாலத்தில், அஜுமாமிசம் படைக்கவேண்டுவது வேதவிதியாயிருக்க அதைவிட்டு) இப்படியக்கிரமமானகாரியம் சீசெய்ததினாலே, காட்டினிடதிற்சஞ்சரித்து நரமாமிசத்தை உண்ணும் அரக்கனைக்கடவையென்று சபித்தார். எ-று.

அஜம்-ஆடு. எவ்வளவு ஞானிகளானாலும் ஞானதிருஷ்டியாலறிந்தாலன்றி, உண்மை விளங்குவ தருமையென்பது இதனால் தெள்ளிதிற் புலப்படும். (எ)

சாபத்தைதவின்றமேலோன்றன்னுளத்தன்னின்மேய
கோபத்தினின்றுநீங்கிக்கொடியவல்லரக்கன்செய்த
ஆபத்தென்றறிந்துவேர்தேயறிகிலேன்சபித்தவிந்த
பாபத்தின்றனைமைதீர்ப்பாய்பன்னிருபருவத்தென்றான்

(இ-புனை.) சாபமிட்ட வசிஷ்டரானவர், தம்முள்ளத்திலுண்டாகிய கோபத்தினின்றும் நீங்கிக் கொடுந்தொழில் செய்கின்ற வலியஅரக்கன்செய்த தூபத்தென்றறிந்து, அரசனே! உன்னுலே கோரிட்ட தல்லவென்றுணராமல், நான் சபித்த இந்தப்பாபத்தின்தன்மையைப் பன்னிரண்டுவருஷத்தில், தீர்ப்பாயென்று சொன்னர். எ - று. (அ)

வரிசிலையுழவன்றருணமறமுனிதன்னைநோக்கிப்
பெருகியசினத்தணுகிப்பிழைபுரியாதென்றன்னை
நிருதனெனச்சொன்னநின்னையும்வெய்யசாபம்
கொண்டான்.

(இ - புனை.) கீண்ட வில்லின்தொழில்பழகினவலுகிய அவ்வரசன் வேதமுணர்ந்த வசிஷ்டமுனிவனைநோக்கி மிகுந்தகோபமுடையவனைக் குற்றஞ்செய்யாத என்னை அரக்கனைக்கடவையென்றுசபித்த உனக்கும் நான்

கொடிய சாடமிடுகிறேனென்று சாபநீரைக் கையில்ஏற்றுக்கொண்டான். எ-று.
தான்குற்றமிலனுதலின் மறுசாபமிடத்துணிந்தனன். (கூ)

கண்டனள்கலங்கித்தேதவிமதயந்திகாவல்வேந்தே
எண்டருமன்னர்தம்மூட்குரவனைக்காய்ந்தார்யாரே
விண்டெழுவெகுளிதீர்வாயென்றவள்விளம்பவேலோன்
தொண்டகைச்சாபநீர்தன்குனைகழற்றுளிற்பெய்தான்.

(இ-புனை.) மதயந்தியென்னும் அவன்மனைவியானவள் அதைக்கண்டு மனங்கலங்கி (மன்னுயினைக்காக்கும்) காவல்பூண்ட அரசனே? யாவரும் என்னும்படிபான டெருமையுள்ளமன்னர்களுக்குள் ஆசாரியனைக் கோபித்தவர்கள் யாருமில்லையே, ஆதலால் அதிகரித்தெழுகின்ற கோபத்தைத் தணிப்பாயாகவென்று அவள்சொல்ல, வேலேந்துமவ்வரசன் தன்கையிலேற்றுக்கொண்ட சாபநீரைச் சத்தியாகின்ற வீரகண்டையணிந்த தன்காலில் விட்டுக்கொண்டான். எ - று.
ஏகாரம் - எதிர்மறை. (கo)

தீங்குறுசாபநீராற்செம்மலரிதோய்ந்தென்னப்
பூங்கழற்கால்களாங்கேபொள்ளெனக்கறுத்தலோடும்
பாங்குளோர்காணமன்னன்கன்மாடபாதனுகி
வாங்கருங்குருசாபத்தாலரக்கனுய்வனத்திற்புக்கான்.

(இ - புனை.) தீமையுள்ளசாபநீரினுல் செந்தாமரைமலர் தீயிற்படிந்தது போல் பொலிவுள்ளதாய வீரகண்டையணிந்த கால்கள் அப்பொழுதே கறுத்தமாத்திரத்தில் பக்கத்திலிருப்பவர்களெல்லாங்காண அம்மன்னவன் கன்மாடபாதனுகி நீக்குதற்கரிய குருவின்சாபத்தால் ராக்ஷதரூபங்கொண்டு ஆரணியத்திற்போய்ச் சேர்ந்தான். எ - று. கன்மாஷம்-என்பது கறுப்பு. (கக)

வேறு.

நெடிமுழங்கிச்செவிடுபடும்போடவியிடந்தோறுதெடுவெய்தேய்ந்து, படுகனலிற்சினையணவச்சுறாறுமயிர்க்கவிகள்பதறிப்பாயப், புடைகலந்தீதனினங்கள்பகன்மதியையிறுவென்னப்புகுந்துமொய்க்கும், குடுமிவனையிடந்தோறும்பலவிலங்கின்குலமினத்துங்கொலைசெய்துண்டான்,

(இ-புனை.) காட்டுத்தீ சடசடவென்றெரிக்கக் கேட்போர்களதுகள் செவிடுபடும்படியான பெரியகாடுகள்தோறும், நீட்சியையுடைய மூங்கில்களொன்றோடொன்று தேய்ந்து உண்டாகாநின்ற தீயின் சினைபொருந்தச் சுறுசுறுப்படியான உரோமங்களுள்ள வானரங்கள் பதறி மரங்களில்பாயவும், அம்மரங்களினிடத்திலிருக்கும் வண்டுக்கூட்டங்கள் பகலில்தோன்றுந் சந்திரனைத் தன்கூ

டென்றுகருதி அதனிடத்திற்சென்று மொய்க்கவுமாக இராநின்ற சிகரங்களை யுடைய மலையிடங்கள்தோறுந் சுஞ்சரித்துக்கொன்டிராநின்ற பலவகையாகிய மிருகக்கூட்டத்தையெல்லாங் கொன்று புசித்தான். எ - று.

வானமளாவிய மலையென்பதுதோன்ற பகன்மதியை "இருலென்னப் புகுந்துமொய்க்கும்" என்றனர். (கஉ)

மாயிருஞாலப்பரப்பின்மன்னுமுடலினத்திணுக்குமயானமென்னக் காயுமிரும்பசியுதரக்கனற்குழியைநிணந்தூர்த்துக்கழிக்தாளில் தூயவொருமுனிபுதல்வன்புதுவதுணைவபுரிந்தவிளந்தோகையோடுந் தீயதிறல்வாளரக்கன்வரவறியானவ்வனத்திற்சென்றான்மன்னே.

(இ-புணை.) மிகுந்த பெருமையையுடைய இவ்வுலகத்தில் அன்ற இடமெங்கும் பொருந்தியசரீரங்களுக்கெல்லாந் சுடுகாடு என்றுசொல்லும்படிசுடுகின்ற மிகுந்தபசியுள்ளவயிறுகியதிக்குழியை மாமிசங்களால்நிறைத்துக் காலங்கழிக்குகாளில், பரிசுத்தமுள்ள ஒருரிஷிகுமாரன், புதிதாக விவாகஞ்செய்துகொன்ட இளமைப்பருவமுடைய தன்மனைவியுடன் கொடியவலியுள்ள கொலைத்தொழில் செய்யும் அந்தராகூதன் வருவதையறியாமல் அந்தக்காட்டிற்போனான். எ - று.

மன்-ஓ-இவ்விரண்டுமெசைகள். (கஊ)

வந்தவனைக்கண்டரக்கன்வாளெயிறும்பிலவாயும்வயங்கநக்காங் குந்தியுறுபசிதணிக்கவந்தானென்றுன்னுதாறுமுவகைபொங்கக் கொந்தமலர்ச்சிறுகுடுமிமறைபுனிவன்காளைதனைக்குருதிவேட்டு முந்துசினப்புலிசேதாவிளங்கன்றைக்கவர்ந்ததெனமுனிந்துபற்றி.

(இ-புணை.) வந்த அந்தரிஷிபுத்திரனைக்கண்டு, ராகூதனுனவன், வாள்போன்றகோரப்பல்லும், பிலத்துவாரம்போன்றவாயும், பிரகாசிக்கும்படிநகைத்து, அப்போது தன்வயிற்றில் மிகுந்திருக்கின்ற பசியைத்தணிக்கவந்தானென்று நினைக்குந்தோறும் சந்தோஷம் தனக்குள்ளேபொங்க உதிரத்தைக்குடிக்கவிரும்பி முன்னதாக உண்டாகின்றகோபத்தையுடைய புலியானது ஒருபசுவினிளங்கன்றைப் பிடித்துக்கொண்டதுபோலக் கொத்தாகியபூமாலையணிந்த சிறுகுடுமியையுடைய வேதமுணர்ந்த அந்தரிஷிபுத்திரனைக் கோபங்கொண்டுபிடித்து. எ - று.

எதுகைநோக்கி கொத்து என்பது கொந்தென்றுயது. பற்று என்பது செய்யாவென்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று. (கசு)

கொலைபுரிவாளுறுகாலையதுகண்டுவெருவிமலர்க்கொம்பரன்னாள், நிலைகளர்ந்துகைகொரித்துகெடுங்கண்ணீர் முலைமுன்னினைறப்பச்சோர்ந்து, தொலைவில்புகழ்ப்பரிதிகுலத்தொல்லைவேந்தேமதயம்திதாயுஞ் செம்பொன், மலைபொருவுமணிமார்பாவென்றேத்தியினைந்தினையமாற்றஞ்சொன்னாள்.

(தூ-புனை.) கொலைசெய்யத்தொடங்கும்போது, அதைக்கண்டு ரிஷிபுத்திர னுடையமனைவியாகிய பூங்கொம்டையொத்த அழகுள்ளவள்டயத்துநிலைதளர்ந்து, கைகளைநெரித்துக்கொண்டு, நெடியகண்ணீரானது முலையினிடத்தை நிறைக் கும்படியாகச்சோர்ந்து, பழமையாகிய சூரியகுலமன்னவனே? மதயந்தினையும் பொன்மலையையொத்த அழகியமார்பனே என்று துதிசெய்து மெலிந்து இந்த வசனங்களைச்சொன்னாள். எ-று. (கரு)

வல்வினையாலிவ்வுருவம்வாய்ந்தனைநீநிருதர்குலவழியானல்லை கொல்வதுனக்கடாதுபிறருயிர்க்குகவிபுரிவதுங்கள்கொள்கையாமால் வெல்கதிர்வேற்படைவேந்தேயிவளிறக்கில்யானுமுயிர்விடுவேனென்னு மல்குவிழிப்புனல்பாயத்தொழுதிரந்தேகாருயிர்ப்பளிநீவழங்குகென்றாள்.

(இ-புனை.) யாவராலும்விலக்கக்கூடாத வலியையுடைய வினையினால் இந்த உருவம்பெற்றனை; நீராகுததகுலச்சந்ததியிற்பிறந்தவனல்லை; ஆதலால் கொல்வ துனக்குத்தகுதியல்ல; பிறருயிருக்கு தவிசெய்வது உங்கள்குணமாம், பகைவனா வெல்லுகின்ற ஒளிதங்கிய வேலாயுதமேந்தும் அரசனே! இவளிறந்தால் நானு முயிர்விட்டுவிடுவேனென்று நிறைந்தகண்ணீர்பாயப்படித் தொழுதிரந்து ஒப் பற்றதாகிய உயிர்ப்பிசைக்கு நீதாவென்றாள். எ-று.

குருசாபம்கொடியது என்பதுதோன்ற ''வல்வினை'' என்றார்.

தனக்குமேலோராலும் ஈ என்றும், சமனனவராலும் தாவென்றும், கீழ்ப் பட்டவராலும் கொடுவென்றுந் சொல்லவேண்டும். (கசு)

மனமறுகுற்றிவ்வாறுகவன்றுணைக்குமுனைநிருதன்மனக்கொள் ளாளுய்ப், புனைமலர்த்தார்வேதியனையுயிர்செகுத்துத்தசைசுவைத் துப்புண்ணீர்மாந்திக், கனவினங்கண்மூளைகுடர்மென்றருந்தியென்ப னைத்துங்கழித்துவாயால், இனவளையாண்முன்னுமிழ்ந்தானென்செய் வாளுமிழ்ந்தவெலாமெடுத்துக்கொண்டாள்.

(இ-புனை.) மனம் உடைந்து இப்படியாக வருந்திச்சொல்லுகின்றவார்த் தையை அந்தாகூததன் மனதிலேற்றுக்கொள்ளாதவளுய்ப், பூமாலையணிந்திருக் கும் ரிஷிபுத்திரனுடைய உயிரைக்கொன்று, மாமிசத்தையுண்டு, உதிரத்தைக்குடி த்துக்கொழுத்திருக்கும் கினங்களையும் மூளைகளையுங் குடல்களையு மென்றுதின்று எலும்புகளையெல்லாங்கழித்து வாயினால் ரிஷிபுத்திரன் மனைவியெதிரில் துப்பி விட்டான் (அதைக்கண்டு எதிர்செய்யும்வலிதனக்கில்லாமையினால்) என்னசெய் வாள் அவன் துப்பிவிட்டதையெல்லாம் எடுத்துக்கொண்டாள். எ - று.

சதைஎன்பது தசையென்றுயிற்று. (கஎ)

எழுந்துபடர்கதழெரியினவ்வெண்பையிட்டிறைஞ்சியின்னசெய் தோன், செழும்பதியிற்புகுந்தரிமைமதயந்திமுதலாயதேவிமாரைத்,

கழும்பொழுதிலாருயிர்மாண் டொழிகவெனக்கொடுஞ்சாபஞ்சாற்றித்
தானுங்,கொழுந்தெரியிற்புக்கவிந்தாளாண்டகையுமவ்வனத்திற்குலவு
காளில்.

(இ-புனர்.) சிகைவிட்டெழுந்து சுவாலைவீசுகின்ற மிகுந்த காட்டுத்தீயில் அந்த எலும்பையெல்லாம்போட்டு அக்கினிதேவனைவணங்கி இப்படிக்கொத்த பாவமானகாரியத்தைச்செய்த இந்தப்பாதகனைவன் சாபம்தீர்ந்து வளப்பமுள்ள தன்பதியிற்சேர்ந்து தனக்குரிய மதயந்திமுதலான தேவிமார்களைத் தழுவும் போது பெறுதற்கரிய உயிர்மாண்டுபோகக் கடவனென்று கொடியசாபஞ்செ ால்லித்தானும் சிகைபடர்ந்தெரிகின்ற அந்தத்தீயில்விழுந்திறந்துபோனள்; அதன் பின்பு ராகூதனாகிய அரசன் அந்தவனத்திற் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் போது. எ - று. தழுவும் என்பது எதுகைநோக்கித் தழுவென்றாயது.

பெறுதற்கரிய உயிரென்றது, உயிர்களுக்கு மானிடசரீரம் கிடைத்தலரி தென்பதுகருத்து. (கஅ)

வேதமுணிசாபந்தீர்ந்தரக்கவுருவகலவிறல்வேந்தன்வேளுங்
காதலுறுமுருவெய்திமுன்புபோலயோத்திநகர்கடிதினெய்திச்
சீதமதிவாண்முகத்துமதயந்திகலவிகலத்தேறலுண்பான் [னை.
போதகமொன்றதன்பிடியின்சேவகம்புக்கெனக்கோயில்புக்கான்மன்

(இ-புனர்.) வேதமுணர்ந்த வசிஷ்டருடைய சாபநீங்கி ராகூடசரூபமா றவே வெற்றியுள்ள அரசனைவன் முன்போல மன்மதனும் ஆசைகொள்ளத் தக்க தன் பழையவுருவத்தைஅடைந்து விரைவாக அயோத்திநகரிற்சேர்ந்து குளிர்ச்சிதங்கிய சந்திரனையொத்த ஒளிபொருந்திய முகத்தையுடைய மதயந்தி யென்னும் தன்மனைவியிடத்தில் மதுரமுள்ள தேன்போல இனிமையைத்தருகி ன்றகலவியின்பம் அனுபவிக்க ஒருஆண்யானையானது கிரீடையைவிரும்பித் தன் பெட்டையானை நித்திரைசெய்யு மிடத்திற் சென்றதுபோல் தன்மனையிற்போ னான். எ - று. மன்-ஓ-அசை.

முகம் சந்திரனுக்குவமையானதால் அம்முகத்திலுள்ள இதழினது தோற்றல் சந்திரனிடத்துற்ற அமிர்தத்துக்கொப்பாம். (கக)

வேறு.

கோயில்புக்குநற்குருமணிநெடுமுடிக்குரிசில்
வேயின்மிக்கமுல்லுருவணைமெல்வளைத்தோளி
யாயனைமக்கணைண்மதயந்தியணிமுலையவாவில்
தோயவுற்றனன்மறுத்தனளினைவயினைவசொன்னாள்

(இ-புனர்.) தன்மனையிற்சேர்ந்து நல்ல சிவந்தநிறமுள்ள ரத்தினங்கள் பதிக்கப்பட்ட நெடியமகுடத்தை யணிந்திருக்கும் அரசனைவன் பசியமுங்கிலி

னழுகைப்பார்க்கிலு மிகுத்த நல்லை அழகமைந்த சங்குவளையலணிந்ததோளை யுடையவளாகிய மையிட்டகண்களையுடைய மதயானையின் ஆபரணங்களணிந்த தனத்தை ஆசையுடன் அணையப்போனான். அவள்தடுத்துச் சிலவசனங்களை வகுத்துச் சொன்னாள். எ - று. (உ0)

உற்றவாவெனுன்றமுணர்ந்திலீபோலுநீயுயர்கான்
முற்றுகாடிவல்லாக்கனைமுனிவான்சேயைப்
பற்றிநுங்கினைகண்டவன்பார்ப்பனிசீறிச்
சொற்றவாசகங்கேளெனவிளம்பலைசொல்வாள்

(இ - புணர்.) உனக்குச்சம்பவித்தமுறைமையை நீசிறிதும் அறிந்திலையோ (அது என்னவெனில்) நீ ராகூதனைப் உயர்ந்தகாடுகளெங்கும் ஆகாரத்தைவிரும்பித்திரியும்போது அவ்விடத்தில் கோரிட்ட ஒரு ரிஷிபுத்திரனைப்பற்றிக்கொண்டு கொன்றுதின்றாய், அப்போது அவன்மனைவியானவள் கோபித்துச் சாபங்கூறியதைக் கேளெனச் சம்பவித்த காரியங்களைச் சொல்லுகின்றாள். எ-று. போலுமென்பது-முன்னிலையசை. (உக)

இணையிலாதவென்கொழுநனையின்னுயிருண்ட
பணைகெடும்புயமன்னவபதியினிற்புகுந்தன்
துணைவிமார்கடந்துணைமுலைச்சுவடுமார்பிறுக
அணையுநாளுயிரிறத்தியென்றழல்புகுந்தவிக்தாள்.

(இ-புணர்.) ஒப்பில்லாத என்கணவனுடைய இனிய உயிரைக்கிய பருத்துண்டபுயங்களையுடைய மன்னவனே ? அயோத்திநகரிற் சேர்ந்து உன்மனைவியருடைய இரண்டுதனங்களின் தழும்புகள் மார்பில்அழுந்தும்படி அணையுநாளில் உயிரிறத்துபோகக்கடவையென்று தீயில் விழுந்திறந்தாள். எ-று.

உலகத்துற்றவை எல்லாவற்றினுஞ் சிறந்துள்ளது உயிராதலின் "இன்னுயிர்" என்றனர். (உஉ)

அன்னதாலெமையணைவதற்கடாதனக்கென்றுண்
மன்னர்மன்னனும்பசியினல்வருந்தியவொருவன்
பொன்னினன்கலத்தமுதுபெற்றுணப்பொறியிலான்போல்
இன்னலெய்தினன்காமவேள்கணையினுலிடைந்தான்.

(இ-புணர்.) அப்படிக்கொத்தசாப நேரிட்டிருக்கிறபடியினுலே எங்களை யணைவதற்கு உனக்குத்தகாதென்று சொன்னாள்; அதைக்கேட்ட மன்னர்மன்னனுகிய கன்மாடபாதவராசனனவன் பசியினல்வருந்திய ஒருவன் பொன்னுலாகிய நல்லபாத்திரத்தில் அன்னமிடப்பெற்றும் உண்ணுதற்குபயோகமானஉறுப்புகளில்லாதவனுகியதுபோல் மன்மதபாணத்தினுல் துன்பமடைந்து இடைந்துநின்றான், எ - று. (உங)

பெண்ணிலத்தினீப்பெறுதவர்மகவினீப்பெறுதார்
பெண்ணிலத்தினீப்பெற்றவரேமகப்பெற்றார்
பெண்ணிலத்தினன்மகவுபெற்றிருணமயும்பெறுவார்
பெண்ணிலத்தினுலன்றியோர்பெறும்பொருளின்றே.

(இ-புணை.) பெண்ணின்பத்தை அனுபவிக்கப்பெறுதவர்கள் புத்திரர்களைப்பெறுதவர்களாவார்கள்; பெண்ணின்பத்தை அனுபவிக்கப்பெற்றவர்களே புத்திரர்களைப்பெற்றவர்களாவார்கள்; பெண்ணின்பத்தை அனுபவிப்பதினால் புத்திரர்களைப்பெற்று இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் அடைவார்கள்; பெண்ணின்பத்தினுலன்றிப்பெறும்பொருள் யாதொன்றுமில்லை. எ-று. ஏ-அசை. (உச)

உந்துநீர்க்கடலுடுத்தபார்முழுவதுமொருங்கே
வந்துதாடொழுமரசியல்வளமெலாம்பெறினும்
இந்திராதியர்பெறும்பதத்திருக்கையெய்திடினு
மைந்தரின்றியேவாழ்வதுவாழ்வுமற்றன்றே.

(இ-புணை.) அலைவீசுகின்ற நீரையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ள எல்லாரும் ஒருகூட்டமாகவந்து பாதங்களிற்பணியத்தக்க அரசுக்குரிய எளங்களெல்லாம்பெற்றிருந்தாலும், (அல்லது) தேவேந்திரன்முதலானதேவர்கள்பதங்களிலிருக்கும் பேறுகள்பெற்றாலும் புத்திரரில்லாமல் வாழ்வதுவாழ்வல்ல எ-று. மற்று-அன்று-ஏ-அசைநிலைகள். (உரு)

என்றுபற்பலசிந்தையிலெண்ணிவேலினைறவன்
குன்றுமாண்புடைத்தரசியலினியென்றுங்குறியா
னின்றுமாதவம்புரிவதேதகடனெனநினைந்து
சென்றுகானடைந்தருந்தவஞ்செய்தனனிப்பால்.

(இ-புணை.) என்று பலவாகத்தன்மனதிலெண்ணிக்கொண்டு வேலாயுதமேந்தும் அரசன் நாம்துறந்துவிட்டால் இனி அரசியல்குன்றுந்தன்மையுடையதாகுமேயென்பதையுங்குறியாதவனுய், வனத்திற்போயிருந்துகொண்டு பெருமைபொருந்திய தவஞ்செய்வதே நமக்குமுறைமையென்றெண்ணி இவ்வாழ்க்கையைத்துறந்துபோய்க்காட்டிற்சேர்ந்து அரியதவத்தைச் செய்தான், இப்பால் கடந்ததென்னவெனில். எ-று. (உசு)

வேறு.

காவலன்றனக்குப்பின்னேர்கான்முளையில்லையென்று
பூவலயத்திலுள்ளோர்புகல்வதும்பொருந்தார்வீறும்
யாவையுமுணர்ந்தநீதிவசிஷ்டனுங்கியல்பினுய்ந்து
பாவருந்துயரந்தீர்க்கும்படிநினைந்தினையசெய்தான்.

(இ-புரை.) கம்முடைய அரசனுக்குப்பின்பு (இந்தராச்சியத்தைத்தக்காப்பதற்கு) ஒருபுத்திரனுவதில்லையேயென்று இவ்வுலகத்திலுள்ளவர்களிரக்கமுற்றுச்சொல்வதும், பகைவருடையகீழ்ப்புமாகிய இவைகளையெல்லாம் அப்போது அறிந்த நீதியுள்ள வதிஷ்டமுனிவரானவர் தருமசந்தானமுண்டாக்கலாம் என்கிற வாக்கியத்தை ஆராய்ந்தனைர்ந்து சேரிட்டிருக்கிறதுயாத்தை நீக்கும்படியெண்ணி யிந்தக்காரியத்தைச் செய்தார். எ-று. (உஎ)

அருந்ததியனையகற்பின்மதயந்தியணங்கனுள்பாற்
பொருந்தியின்கலவிதுய்த்தோர்புதல்வனைத்தந்துதீரா
இருந்துயருலகந்தீரவியற்றினன்முனிவனிப்பாற்
பெருந்தகைதவஞ்செய்வானைப்பேய்மகளொருத்திபற்றி.

(இ - புரை.) அருந்ததியையொத்த கற்பினையுடைய மதயந்தியென்னும் தெய்வப்பெண்ணை யொத்தவளிடத்திற்சேர்ந்து இனியகலவிசெய்து ஒருபுத்திரன் உற்பத்தியாகும்படிபுரிந்து உலகத்துக்குநேரிட்டிருந்த மிகுந்தயரந்தீரும்படி வதிஷ்டர்செய்தார்; (அங்கப்படியிருக்கக் காட்டில்நடந்ததென்னவெனில்,) தவஞ்செய்கின்ற பெருந்தகையாகிய அரசனை ஒருபேய்மகள்தொடர்ந்து. எ-று.

அரசனில்லாததேசம் உயிரில்லாதசரீரத்தையொக்குமாதலால், தர்மசந்தானமுண்டாக்குதல்சாஸ்திரவிதியே. இப்படித்தர்மசந்தானமுண்டாக்குகிற முனிவருக்காவது ஸ்திரிகளுக்காவது தவத்திலும் பதிவிரதாதருமத்திலும் டழுதில்லை; அவ்வாறுசெய்ய இசையாவிட்டால், பட்டத்துயானையைக்கன்கட்டிச் செல்லவிட்டு அதனால் எடுத்துக்கொண்டுவரப்பட்டவனுக்குப் பட்டங்கட்டத்தக்கது. ()

பிறையெயிறிலங்கக்கண்கள்பிறங்கெரிகதுவச்சீறிக்
கறைவிடமுருத்துவல்லேறெனாடார்தல்போற்றோடாக்கண்டாங்
கறைகழற்குரிசிறுணுமலைகமாதொருத்திபற்று
முறைறமையேதென்னவேதமுனிவனைவினவினானே.

(இ - புரை.) பிறைபோல வளைவாகிய தந்தங்கள்பிரகாசிக்கவும், கண்களிலிருந்து மிகுந்ததீப்பொறியானதுசிந்தவும், சீரிக்கரியவிடமானது கோபித்துவிரைவாகத் தொடர்தல்போலத் தன்னைத்தொடரக்கண்டு ஒலிக்காநின்ற வீரகண்டையணியும் அந்தமன்னவன் ஒரு பேய்மகளானவள் என்னைப்பற்றுதற்குக் காரணமென்னவென்று அங்கிருக்கும் வேதமுணர்ந்த முனிவர்களை விளவிண். எ - று. ஏ அசை. (உக)

கேட்டலுமுனிவரெல்லாங்கிளியெனமிழற்றுமாதர்
மோட்டிளமுலைகள்பாய்ந்துமுருகுகொப்பளிக்குந்தாரோய்
காட்டினிலரக்கனுய்முன்காணவேதியனைநீகொன்
மீட்டியபாவங்கண்டாயலகையாயெய்திற்றென்றார்.

(இ - புணை.) அவன் சொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அந்த முனிவர்களெல்லாரும் (அவனைப்பார்த்துக்) கிளியைப்போல வசனிக்கின்ற மாதர் களுடைய உயிர்வாகிச் சாயாததனங்கள்பட்டுத் தேனைக்கொப்பளிக்கும்படியான (பக்குவமுள்ள அரும்புகளால்விதாடிக்கப்பட்ட) பூமாலையணிந்தமன்னவனே? நீமுன்னே ராகூதனுய்க் காட்டிலல்சஞ்சரிக்கும்போது அங்குகோரிட்டவாலிபருகிய ஒரு ரிஷிபுத்திரனைக்கொன்று சம்பாதித்துக்கொண்ட பாவங்கண்டாய் இப் போதுபேயாகவந்து உன்னைப்பற்றிக்கொண்ட தென்றார்கள். எ - று. (கூ0)

மாதவரினைசப்பக்கேட்டேமன்ன னுமிதனைநீக்கச்
சேதுவேமுதலாயுள்ளபுனிதமாந்தீர்த்தம்யாவுங்
காதலான்முழ்கிமுழ்கிக்கடவுளாலயங்களேத்திப்
பாதகவினைகடீர்க்கும்பதிபலவணக்கஞ்செய்தான்.

(இ) - புணை.) முனிவர்சொல்லக்கேட்ட மன்னவனும் இத்தப்பாவத்தைநீக் கச் சேதுமுதலாயுள்ளபுனிதமாகிய தீர்த்தங்களிலெல்லாம் ஆசையுடன் தனித் தனியே முழ்கியும், சிவாலயங்களிற் போய்ப் பரமசிவனைத் துதிசெய்தும் இப்படியாகப் பாவவினைகளைத் தீர்க்கத்தக்க அனேகம் ஸ்தலங்களிற்போய் வணங்கினான். எ - று. (கூக)

அங்கண்மாஞாலவட்டத்தாலயந்தலங்கடீர்த்தம்
எங்கணுமுழன்றும்பாவந்தீர்கலாதிருத்தலாலே
வெங்கதிர்ப்புரவிமான்றேர்விலங்கெயின்மிதிலைஞாங்கர்
மங்குலேர்ப்பொழிலின்மேவிவருத்தமுற்றிருந்தான்மன்னே.

(இ-புணை.) அழகிய இடத்தையுடைய பெரியபூமியினிடத்திலுள்ள ஆலயங் கள், ஸ்தலங்கள், தீர்த்தம் எங்குமுழன்றுதிரிந்தும் தனக்குநேரிட்ட பாவந்தீரா மலிருப்பதினாலே வெப்பம்பொருந்திய சூரியனுடைய குதிரைகட்டியதேரானது ஓதுங்கிப்போகத்தக்கதாக உயர்வையுடைய மதில்சூழ்ந்த மிதிலைநகரத்துச்சமீ பத்திலிருக்கும் மேகமண்டலத்தையளாவிய ஒருசோலையிற்சேர்ந்து வருத்தங் கொண்டிருந்தான். எ-று. மன்-ஓ-அசைகள்.

பாடல்களினிறுதியில்வரும் மாது-மன்-ஆல்-அரோ-ஓ-அன்று-ஏ இவை கள் அசையெனக்கொள்க. இவைகளிற்சிலபாடலின்மத்தியில் ஏகதேசமாகவரு வதுமுண்டு. (கூஉ)

ஆண்டகையிருந்தகாலையருந்தவமுனிவர்சூழ
ஈண்டுசெங்கதிரோன்றேரூன்றிவருவதேயெய்ப்பலவால்லை
காண்டகுவியப்பிலேதுகவுதமன்வந்துதோன்றப்
பூண்டபேருவகைகொங்குப்புரவலன்வணங்கினன்றான்.

(இ)-புணை.) அரசனப்படியிருந்தபோது அரியதவத்தையுடைய முனிவர்கள் அருகிற்சூழ்ந்துவரச் சூரியன்உதயமா யிவ்வுலகத்தில் வருவதையொப்பாக யாவ ருந்தரிசிக்கத்தக்க வியப்புள்ள (தவவேடத்துடன்) கௌதமரிஷிவினைவாகவந்து

தோன்றக்கண்டு தனக்குண்டாகிய பெரியசந்தோஷமும் அதிகரிக்க, அம் மன்ன வன் வணங்கிநின்றான். எ - று. (ஈஈ)

நின்றமன்னவனோக்கிநீபெருவளங்கண்மேவி
நன்றிருந்தனையோவென்றுமுனிவரனவிலவன்றேனென்
றன்றுநின்னருளோச்சேர்ந்தோர்க்கெய்திடாதீமையேனும்
ஒன்றுளதுனைக்கக்கேட்டியுத்தமவென்றுசொன்னான்.

(இ - புனை.) வணங்கிநின்றவேந்தனைக் கவுதமரிஷியானவர்பார்த்து ராச னே? மிகுந்தசெல்வத்தைதப்பொருந்திச் சுகமாக இருக்கின்றனையோ வென்று னவ அவ்வரசனனவன் (சுவாமீ) உம்முடைய கிருபையைப்பெற்றவர்களுக்கு ஒருகாலத்தும் துன்பங்கள்நேரிடாவாகிலும், ஒன்றுண்டு அதனைச்சொல்லு கிறேன் உத்தமமோ கேளுமென்றுசொன்னான். எ - று. (ஈச)

எங்குலக்குரவன்முன்னுளியம்பியசாபத்தன்னல்
வெங்கொலையாக்கனகிவேதியற்கொன்றபாவந்
தங்கியோரலகையாகித்தமியனைத்தொடர்தலாலே
அங்கதுதணிப்பானெண்ணியளவிலாவேள்விசெய்தேன்.

(இ-புனை.) எங்கள்குலக்குருவாகிய வசிஷ்டர் முன்னுள்கூறியசாபத்தினால் நான்கொடிய கொலைத்தொழில்செய்யும்ராக்ஷதனாகி ஒரு பிராமணனைக்கொன்ற பாவமானது ஒருபேயாகி ஆதரவில்லாத எளியேனைப்பற்றித்தொடர்தலினாலே அந்தப்பாவத்தைத்தீர்க்கஎண்ணி அளவில்லாத யாகஞ்செய்தேன். எ - று. (ஈஞ)

எண்ணினல்லறங்கள்செய்தேனெண்ணின்மந்திரவின்றேன்
புண்ணியதலங்களூர்த்தமாலயம்பலவும்போனே
னுண்ணியசாகமூலபலங்களாதுகர்ந்தியான்முன்
பண்ணினேன்விரதங்கோடிபாவகமனந்தஞ்செய்தேன்.

(இ - புனை.) அளவில்லாத நல்லதருமங்கள்செய்தேன்;அளவில்லாதமந்திர ங்கள்செபித்தேன்; அனேகமாகிய ஸ்தலயாத்திரையும் தீர்த்தயாத்திரையும் செய்தேன்;சிவாலயங்களும்போனேன்;(அவைகளுமல்லாமல்) நுட்பமாகிய இலை களும்கிழங்குகளும் உண்டு, நான்முன்னே அனந்தம்விரதங்களும் அனுஷ்டித் தேன்; அனந்தயாகமுஞ்செய்தேன். எ - று. (ஈசு)

இவ்வணமுலப்பில்காலந்தீர்ந்துடலிலாத்தேனன்றி
லவ்வியபாவநீங்கப்பெற்றிலேன்மறைக்குமெட்டாத்
அவ்வியமகன்றேனுய்வானருளெனவடியில்வீழ்ந்தான்.

(இ - புனை.) இவ்வாறு அருந்தங்காலவந்திரிந்து உடலினைத்தேனல்லது, என்னினைப்பற்றிய பாவந்தானிலையப்பெற்றிலேன்; வேதத்துக்குமெட்டாத மெய்ஞ்ஞானப்பொருளையுணர்ந்தவரே! இன்றுதேவரீருடைய திருமுகக்கிருபையைப்பெற்றேன்; அதனால் பாவத்தை நீக்கினவனானேன்; இனி நான் கடைத்தேறும்படி. கிருபைசெய்யுமென்று அவர்பாதத்தில்வணக்கினன். எ - று. (நூன்)

முனிவனுமிரங்கியருட்சேர்மொய்ப்பமலர்த்தாரோய்முக்கட்
டனிமுதலொருவனுண்டத்தகவினைனருளால்யார்க்கு
நனியிருவினைகடீர்ப்பானயந்தகோகன்னமுண்டென்
றினிதுணர்ந்தில்லைபோலுமத்தலத்தியல்புகேண்மோ.

(இ-புனை.) கவுதமருமனமிரங்கி யெருங்கியபூமாலையணியுமன்னவனே? நீபயப்படாதே. திரிநேத்திரங்களுடைய ஒப்பற்ற முதலாகிய பரமசிவனொருவனுண்டு; கிருடையுள்ள அந்தக்கடவுளின் அருளால் மிகுந்த இருவினைகளோத்திர்ப்பதற்குயாவரும் விரும்புகின்ற கோகன்னமென்னுமொரு தலமுண்டென்று இதை நீ யறிந்ததில்லையோ? அந்தத்தலத்தின் மகிமையைக்கேள். எ-று. போலும்-மோ-அசைச்சொல். (நூஅ)

மந்தரகிரியும்வெள்ளிமால்வரையிடமும்போல
எந்தைதவாழிட்டமமீதையிற்றானயன்மால்வின்னோர்
சந்திராதித்தர்வேண்டுந்தவம்புரியிடனுந்தானை
யைந்துபாதகத்தோரேனுமடையின்வீடளிக்கும்வேந்தே.

(இ-புனை.) அரசனே? மந்தரகிரியில் வீற்றிருப்பதுபோலவும் பெரியவெள்ளிமலையாகிய கயிலாசகிரியினிடத்தில் வீற்றிருப்பதுபோலவும் சுமையருகிய பரமசிவன் விற்றிருக்குந்தானமும் அந்தக்கோகன்னமாம். அந்தத்தலமானது தேவேந்திரன், பிரமன், திருமால், தேவர்கள், சந்திரன், சூரியன் என்னும் இவர்கள் வேண்டுந் தவஞ்செய்யுமிடமுந்தானுகிப் பஞ்சமாபாதகரேயானாலும் தன்னிடத்தில்வந்து சேர்வார்களானால் (அவர்களுக்கும்) மோக்ஷத்தைக் கொடுக்கும். எ-று. பொய், கொலை, களவு, கள், காமம், எனப் பாதகம்ஐந்து. (நூக)

எத்தலஞ்சென்றுந்தீராவிடும்பைநோய்வினைகளெல்லாம்
அத்தலநினைக்குமுன்னரசன்றிடுமுடிக்கோனலுஞ்
சித்திரபானுவாலுமகன்றிடாத்திமிரவீட்டஞ்
சுத்துவாம்புராவிமான்றேர்த்தபனனலகலுமாபோல்.

(இ-புனை.) சந்திரனலும், அக்கினிதேவனலும், நீங்காத இருட்கூட்டமானது தாவிச்செல்லுகின்ற பச்சைக்குதிரைகள்கட்டிய தேரையுடைய சூரியனல் நீங்கு

மாறுபோல எத்தத்தலத்திற்சென்றுக் தீராத துன்பமுள்ள பிறவிநோயைத்தரு கின்ற வினைகளெல்லாம் அந்தத்தலத்தை நினைக்குமுன்னமே நீங்கிவிடும். எ-று.

ஒன்றுமுற்றுணராரேனுமொப்பில்சீர்க்கோகன்னத்திற்
சென்றொருங்கிடம்வைகிற்சிறந்தவெற்றருதலத்திற்
கன்றுமைம்புலனுமோப்பிக்கற்பகாலஞ்செத்தியி
னின்றருந்தவங்கள்செய்யுதெடும்பயன்பெறுவர்கண்டாய்.

(இ-புனை.) யாதொன்றையுமாராய்ந்தறியுந் தன்மையில்லாதவர்களாயிருந் தாலும் ஒப்பில்லாத பெருமையையுடைய கோகன்னத்திற்சேர்ந்து ஒருங்கிவசப் பொழுது தங்கியிருந்தாலும், சிறப்புப்பொருந்திய வேறொருதலத்தில் ஐம்புலன்க ளையும் அடக்கிக் கற்பகாலம் அக்கினிமத்தியிலிருந்து அருமையாகிய தவங்கள் செய்தலால் வாதத்தக்க அழியாதபயனைப்பெறுவார்கள். எ-று. (கக)

வேறு.

அப்பதிதன்னிலலங்கிலேவேலாய்
வைப்பெனவாழ்வருண்மாபலலிங்கம்
ஒப்பிலதாகியுறைத்துவிளங்கு
மெய்ப்படுகாதைவிரித்திடின்முன்னுள்.

(இ-புனை.) பிரகாசியாநின்ற தகட்டுவடிவுள்ள வேலாயுதமேந்தும் அர சனே? அந்தக்கோகன்னத்தில் புதையலிட்டதனம் (கல்லெடுத்தவனுக்கு வாழ் வைத்தருவதுபோல் தன்னைநினைத்துவர்களுக்குப்) பெருவாழ்வையருளுகின்ற மாபலலிங்கமானது, ஒப்பில்லாததாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது. அதனு டைய உண்மையான சரித்திரத்தை விவரித்துச்சொல்லில் முன்னுளில். எ-று.

ஒருவன் பாடுபட்டுத்தேடாது பாரிற்புதையுண்ட திரவியங்கிடைத்தால் சுகம டைவதுபோல யாதொருதவமும் செய்யாமலே சிவலிங்கத்தைத் தரிசித்தவர்கள் எளிதில் சிவத்தையடையலா மென்பதுகருத்து. (கஉ)

இலங்கையின்மன்னனிராவணன்வெள்ளி
விலங்கலின்மாதவமெய்துதல்கண்டு
நலங்கெழுநாதனையந்தொருலிங்கம்
வலங்கொளநல்கிமகிழ்ந்துரைசெய்வான்.

(இ-புனை.) இலங்கைக்கு மன்னவனுகிய இராவணனெனவன் வெள்ளிமலை யாகிய கயிலாசகிரியில் தவஞ்செய்துகொண்டிருந்ததை அருள்மிகுந்த பரமசிவன் கண்டு கிருபைகூர்ந்து உறுதிகொள்ளும்படி ஒருலிங்கக்கொடுத்தருளி மகிழ்ச் சியுடன் திருவாய்மலர்ந்தருளினர் எ-று. (கங)

மானவாக்கின்வாழ்பதிதன்னுள்
யானுதவுஞ்சிவலிங்கமிருப்பின்
னனுமுறுதவ்விலங்கையமர்க்காய்
வானவர்மாலயன்வந்தென்பலிலந்தென்.

(இ-புணர்.) பெருமையையுள்ள இராவணனே! உன்னுடைய வாழ்வுள்ள இலங்கைப்பட்டணத்தினிடத்தில் இப்போதுநாமருளிச்செய்த இத்தச்சிவலிங்கமிருந்தால், அந்த இலங்கைப்பட்டணமானது ஒருகாலத்தும்பழியாது(இதுவுமல்லாமல்) தேவேந்திரன்முதலாகிய தேவர்களும் விஷ்ணுவும் பிரமனும் போர்செய்யவந்தாலெவ்விதப்போர் செய்தால்நானென்ன (அத்தப்பட்டணத்துக்கொரு சூறாவும் நேரிடாது.) எ-று. (கச)

ஊர்திபினேறலொழிந்தனையேகிச்
சீர்பெறுநின்பதிசேர்த்துதிமற்றோர்
பார்மிசைவைத்திடல்பார்மிசைவைத்தால்
ஓதருலிங்கமெடுக்கவொணாதால்.

(இ - புணர்.) தேரின்மேலேறிக்கொண்டு போவதைவிட்டு(நடந்துபோய்ச்) செல்வமிருந்துள்ள உன்னூரில் (இந்தச் சிவலிங்கத்தை) ஸ்நாபனஞ்செய், அவ்விடம்விட்டு மற்றொரு பூமியினிடத்தில் வைக்காதே. வேறொரு பூமியினிடத்தில் வைத்தால் சொல்லுதற்கரிதாகிய மகிமையுள்ள இத்தச்சிவலிங்கம் மறுபடியெடுக்கவொண்ணாது. எ-று. (சஞ)

விங்க

தன்னெடுங்கன்வழிக்கொடுசாரப்
பொன்னகர்வானவர்பொள்ளெனமேவி
மன்னினைநாங்கரவாரணமுன்னர்.

(இ - புணர்.) இவ்வாறு திருவாய்மலர்ந்து கொடுத்தருளிய சிவலிங்கத்தையெடுத்துக்கொண்டு இராவணன்வழிநடந்தான். அதையறிந்த பொன்னுலகத்திலுள்ள தேவர்கள் ஐந்துகரங்களையுடைய யானைமுகக்கடவுளாகியவிநாயகரிடத்தில் அதிசீக்கிரமாகப் போய்ச்சேர்ந்தார்கள். எ - று.

பொள்ளென ஒலிக்குறிப்பு இடைச்சொல். என என்பது என்ன என்பதன் குறைவு. (சஅ)

கைக்களிறேயிதுகாலமரக்கன்
அக்கணிலங்கையிலிங்கமமர்த்தின்
முக்கணனுமழிப்பதுமுற்று
திக்கணமேயிடையூறினைழையென்றார்.

(இ - டிரை.) கதிக்கையையுடைய யானைமுகவிநாயகமூர்த்தியே! இராவண னைவனிப்போது (பரமசிவன்கொடுத்தருளிய) சிவலிங்கத்தைக்கொண்டுபோய் அந்தவிசாலமான இடமுள்ள இலங்கைப்பட்டணத்தில் ஸ்தாபிப்பானேயானால் திரிலோகத்திரங்களையுடைய அந்தப்பரமசிவனாலும்அழிப்பதுமுடியாது (ஆகையால் இலங்கைப்பட்டணத்தில் கொண்டுபோகவொட்டாமல்) இப்பொழுதே அதற்கு இடையூறுசெய்தருளென்றார்கள். எ-று. (கள)

உம்பர்வருந்தியுரைப்பதுகேளா
நம்பனளித்தகையானனகாதன்
பம்புபுனற்கிறைவாபடர்செய்மோன்
வெம்புவயிற்றைநிறைக்கெனமேலோன்.

(இ - புரை.) தேவர்கள் இப்படியாகவருந்தி விண்ணப்பம்பண்ணிக்கொள் ளுங்குறையைப் பரமசிவனீன்றருளிய (மூத்தநாயனாராகிய) கதிக்கைபொரு ந்திய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் நிறைந்துள்ள நீர்க்கிறைவனுகிய வருணனைப்பார்த்து, வருணனே? தேவர்களுக்குத் துன்பஞ்செய்யத்தக்கவனுகிய இராவணனுடையவயிற்றில் நீர்நிறையச்செய்யென்று கட்டளையிட்டருள, அந்த வருணதேவனனவன். எ - று.

எங்கும்பரவுந் தன்மைத்தாதலின் "பம்புபுனல்" என்றனர். (கஅ)

ஆமிஃதென்றவரக்கனகட்டில்
நீர்மிகுவித்தலினீர்தொடுகிற்பான்
போமவன்முன்னெதிர்ந்துபுழைக்கை
மாமுகன்வந்தனன்மாமறையோனுய்.

(இ - புரை.) அதைக்கேட்ட வருணதேவன், இத்தக்காரியம் அடியேனு லாகுமென்று அந்த இராவணனுடையவயிற்றில் நீர் அதிகரிக்கும்படி செய்ததி லுல் நீர்தொட்டுக்கொள்ளுதற்குப் போகாநின்ற இராவணனுக்குமுன்னே தவா ரம்டொருந்திய கதிக்கையையுடைய யானைமுகவிநாயகரானவர் பெருமைபொ ருந்திய ஒருபிராமணருபங்கொண்டு எதிராகவந்தார். எ-று.

தவாரத்தையுடையதுதிக்கைனன்பதுதோன்ற "புழைக்கை." என்றனர்.

மல்லணிதோளவன்மாமறையோயில்
வெல்லியினீர்பெய்தியான்வருகாறும்
அல்லமர்கண்டனையங்கைதரித்தே
கில்லெனவந்தெடுத்தனகையோனும்.

(இ - புரை.) பலம்பொருந்திய தோளையுடைய இராவணன் (எதிரில்வந்த வனைக்கண்டு) பெருமையுள்ள பிராமணரே! நீர்தொட்டுக்கொண்டு இவ்விடத்தில் நான்வருமளவும், கருமைநிறத்தங்கிய கண்டத்தையுடைய சிவசொரூபமாகிய சிவலிங்கப்பெருமானை உம்முடைய அழகிய கையில்வைத்துக்கொண்டிருமென்று சொல்ல மிகுந்தபெருமையுள்ள அந்தப்பிராமணர் சொல்லுகிறார். எ - று.

இங்கு அல் என்றது, இருண்ட ஆலக்காலவிஷத்தை. (நெ)

இச்சிவலிங்கமெடுத்திவணிற்பா
னச்சிலவேலவரான் வலியில்லேன்
முச்சொல்விளித்திடுமுன்னணுகாயேற்
கைச்சிவனைப்புவிகாட்டுவனென்றான்.

(இ - புரை.) விஷம்போலக்கொடுமையுள்ள தகட்டுவடிவமான வேலேந்தும் இராவணனே! நான் இந்தச்சிவலிங்கத்தையேற்றிக்கொண்டிருக்கும்படியான சக்தியில்லாதவன்; (ஆதலால்) மூன்றுசொல் அழைப்பதற்குமுன்னீவராவிட்டால், என்கையிலிருக்குந் சிவலிங்கப்பெருமானைப் பூமியில்வைத்து விடுவேனென்றார்.

செங்கணரக்கனிதைசந்தயல்சென்றான்
வெங்கதவேழமிராயகன்முக்கால்
இங்குனவாயெனவெய்திலணுக
அங்கையிலிங்கமகன்புவிவைத்தான்.

(இ - புரை.) கோபக்குறியாகிய செம்மைநிறமுள்ளகண்களையுடைய இராவணன் அதற்குச்சம்மதித்து, அப்புறம்போனான். வெவ்வியகோபங்கொள்ளும் யானைமுகத்தையுடையவிராயகமூர்த்தியானவர், இராவண! இங்கேவா, இராவண! இங்கேவா, இராவண! இங்கேவாவென்று மூன்றுதரம் அழைத்து அவன்வராமையினாலே தம்முடைய அழகியகையினிடத்தில் வைத்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை விசாலமாகிய பூமியினிடத்தில்வைத்துவிட்டார். எ - று. (நஉ)

அவ்வழியோடியடைந்தவரக்கன்
றிவ்வியமண்மிசைசேர்ந்ததுகாணா
எவ்வமிலாதவிலிங்கமெடுத்தான்
வவ்வலுறுமையின்மாபலமென்றான்.

(இ - புரை.) அந்தவிடத்தில் அதிகவினாவாக ஓடி நீர்தொட்டுக்கொண்டு வந்த இராவணன் சிவலிங்கம் பூமியினிடத்திருப்பதைக்கண்டு குற்றமில்லாத அந்தச்சிவலிங்கத்தையெடுத்தான். அது தன்னாலெடுக்கக்கூடாததாயிருந்ததினாலே இதுமகாபல லிங்கமென்றான், எ - று. (நஙு)

காசிலரக்கனுரைத்ததுகண்டே
பேசினர்மாபலலீசனெனும்பேர்
வீசியனைகளகொடுமீட்டுமெடுத்தா
னேசவிலிங்கநிமிர்ந்ததுகைக்கே.

(இ-புனை.) சிவநேசத்தில்பழுதில்லாத இராவணனவன்சொன்னதை அறிந்து அந்தச்சிவலிங்கத்துக்கு மாபலலிங்கமென்று பெயரிட்டார்கள். இராவணனவன் மறுபடியும்நீண்டகையிருல் தன்பலங்கொண்டமட்டும் எடுத்தபோது, அன்பைத்தருகின்ற அந்தச்சிவலிங்கமானது குழைந்துநீண்டது.

வேறு.

ான

மேவினதுகோகன்னமெனும்பெயரவ்வியன்பதிக்குக்
காவலனையைந்திளாற்கனன்றரக்கன்மறைமதலைத்
தேவனதுகுடுமிமுடிப்புனைடத்தனென்றன்சினமிகவால்.

(இ-புனை.) அந்தச்சிவலிங்கமானது பசுவின்காதுபோல நீண்டபடியினலே, பெருமையுள்ள அந்தத்தலத்துக்குக் கோகன்னமென்னும்பெயர் பொருந்தியது. இராவணனவன், மனங்கொதித்துச்சாலையையொத்த இருபதுகைகளாலும் பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டிருக்கும் விநாயகமூர்த்தியின் சிகையுள்ள சிரசில் தன்கோபமிருதியிலுல் குட்டினன். எ - று. (நரு)

புடைத்தவுடனுருத்தெழுந்துபொழிமதவாணமுகத்தோன்
அடித்தலமுமணிமுடியுமகலிடமும்விசும்புமுறப்
படைத்தவுருவெனநிமிர்ந்துபணைக்கரத்தாலிராவணனைப்
பிடித்துமணிக்கழங்கென்னவெறிந்தெறிந்துபிடித்திடவும்.

(இ-புனை.) குட்டினவுடன் மதநீரைப்பொழிகின்ற யானைமுகத்தையுடைய விநாயகமூர்த்தியான்வர், கோபித்தெழுந்து திருவடியும் அழகியதிருமுடியும், விசாலமுள்ள பூமியிடத்தும் ஆகாசத்தினிடத்துமாகப் பொருந்தப்படைத்த சொரூபம்போல ஓங்கி (விசுவரூபங்கொண்டு) பணைபோன்ற துதிக்கையிருல் இராவணனைப்பிடித்து அழகியகழற்சிக்காய்போல் (பூமியில் விழவொட்டாமல்) பலதரமேலெறிந்து பிடித்திடவும். எ - று. (நசு)

மறையோனென்றுறநினைத்துமடமையினுலீதிழைத்தேன்
பிறையோங்குமணிமகுடப்பெருங்களிறேபிழைசெய்தேன்
இறையோனேபொறுப்பதுனக்கியல்பென்றிரக்கேதத்த
பொறையோடுமுமைபுதல்வன்புவியிலரக்கனைவிடுத்தான்.

(இ-புணை.) என்னுடைய பேதைமையினுலே பிராமணப்பிள்ளையென்றெண்ணி இச்சதக்ஷாரியத்தைச் செய்தேன். பிறையணிந்தோங்கிய மணிமகுடத்தையுடைய பெரியயாகேசமூர்த்தியே? அடியேன் பிழைசெய்தேன் இறைவனே? பொறுத்துக்கொள்வது தேவரீர்க்குத் தகுதியென்று பலதரஞ்சொல்லி யிரந்து, ததிசெய்யப் பார்வதிபுத்திரராகிய விகாயகமூர்த்தியானவர் பொறுமையுடையவராய், இராவணனைப் பூமியில் விட்டார். எ - று. (நுஎ)

நிருதர்குலத்திகல்வேந்தேநின தபிழையாம்பொறுத்தற்
கிருபதுசெங்கரத்தாலுமெழின்மலரோனுனக்களித்த
ஒருபதுமாமுடித்தலையுமுறப்புனைடத்தியெனலோடுங்
குருதிநிறங்கொளப்புனைடத்துக்குனித்தாடியுவப்பித்தான்.

(இ-புணை.) பலமுள்ள ராக்ஷதகுலத்தரசனுகிய இராவணனே! நீ செய்த குற்றத்தை நாம்பொறுத்துக்கொள்வதற்கு, அழகிய செந்தாமரைமலரிலிருக்கும் பிரமன் உனக்குக்கொடுத்த இருபதுசிவந்தகைகளாலும், பெருமையுள்ள மகுடமணிந்திருக்கும் பத்துத்தலைகளிலும், பொருந்தக்குட்டிக்கொள்ளென்று சொன்னவுடன், சிவப்பு நிறங்கொள்ளும்படி குட்டிக்கொண்டு குதித்துக் குதித்துக் கூத்தாடி (விகாயகமூர்த்திக்குச்) சந்தோஷம் வரச்செய்தான். எ - று. (நுஅ)

அன்னதுசண்டுவந்தருளினையங்கரத்தோனின்றுமுதல்
என்னதருணலம்வேண்டினினப்போலவிருகரத்தாற்
சென்னியுறப்புனைடத்தவர்பாற்சிந்தைமகிழ்ருவனென்ரு
மின்னின்மறைந்தனனிருதன்வேலையிலங்கையிற்புக்கான்.

(இ-புணை.) அவன் குட்டிக்கொண்டு கூத்தாடுவதைக்கண்ட ஐக்குகரங்களையுடைய விகாயகமூர்த்தியானவர், சந்தோஷங்கொண்டருளி, இன்றுமுதல் எம்முடைய கிருபைபலத்தை விரும்பினால், உன்னைப்போலத்தங்களிரண்டுகைகளாலும் சிரத்திற்பொருந்தக் குட்டிக்கொள்ளுகிறவர்களிடத்தில், காம் மனமகிழ்ச்சியடைவோமென்றுசொல்லி, மின்னல்மறைவதுபோல மறைந்துவிட்டார். (அதன்பின்பு) ராக்ஷதனுகிய இராவணன், சமுத்திரத்தின்மத்தியிலிருக்கும் இலங்கையிற்போய்ச்சேர்ந்தான். எ-று. (நுக)

தென்னிலங்கையிராவணன்பாற்சிவனுதவத்திறலரக்கன்
பின்னிலங்குமொருமருப்புப்பெருந்தகைதன்னைக்கொடுப்பப்
பொன்னிலங்குமுழுடியோயப்புகர்வேழம்புனலாடை
நால்.

(இ-புணை.) பொன்னுற்செய்யப்பட்டுப் பிரகாசிக்குங் கிரீடமணிந்த அரசனே? தெற்கிலுள்ள இலங்கைக்கரசனுகிய இராவணனிடத்தில் பரமசிவன்

கொடுக்க வெற்றியுள்ள அந்தராகூதன் பின்பு ஒளிவிளங்காகின்ற ஒற்றைக்கொம்பையுடைய விநாயகக்கடவுளிடத்திற் கொடுக்கப் பின்பு பொறிகள் தங்கிய யாகமுகத்தையுடையஅந்தவிநாயகரானவர் சமுத்திரமாகிய வஸ்திரமணிந்த பூமிதேவிவிளங்கும்படி அந்தச்சிவலிங்கத்தை விருப்பத்துடன்ஸ்தாபித்தார். எ-று

கோகன்னமுலயத்திற்குலவுதிசையிருநான்கு
நாகவணைத்துயினெடுமானுன்முகனிந்திரன்முதலா
மாகமுறுமமரர்குழாமருத்துவர்விஞ்சையர்முனிவர்
நாகருலகத்தவரோநாளுநிறைந்தடிதொழுவார்.

(இ - புணர்.) கோகன்னநாதருடைய ஆலயத்தில் சுற்ப்பத்தில் அறிதுயில் கொள்ளும் விஷ்ணுவும், நான்குமுகங்களையுடைய பிரமதேவனும், பிரகாசியாகின்ற அஷ்டதிசையிலுமுள்ள இந்திரன்முதலாகிய சொர்க்கலோகவாசிகளானதேவகூட்டமும், மருத்துவர்களும், விஞ்சையர்களும், முனிவர்களும், நாகலோகத்தாரும் எந்நாளும் திருவடிகளைத்தொழுவார்கள். எ-று. மாகம்-ஈண்டுசொர்க்கம்; மருத்துவர் - அசுவனிதேவர். (சுக)

வேறு.

தும்புருநாரதர்மகதிவிடஞ்சிகரம்புளரவழிசுருதித்தேறல்
பம்புமொருபால்வீணைத்தந்திரியுமிடறுமொன்றுப்பயின்றகான
நம்புசதிமுறைநிறுச்குங்கின்னார்தம்பாடலெனுகவையிறீஞ்தேன்
கும்பமுலையரம்பையர்தகடகவிலுமெய்யிலொன்றிக்குழையுமோர்பால்

(இ - புணர்.) தும்புரு நாரதர் என்னுமுனிவர்கள் மகதி விடஞ்சி என்னும் வீணையினரம்பைத்தெறித்து வாசிப்பதினால் பெருகாநின்ற இசைத்தேனனது ஒருபுறத்தில்நிறைந்திருக்கும்;ஒருபுறத்தில் கின்னர்கள் வீணைத்தந்திரியினுதலும் கண்டத்தினுதலும் ஒன்றுபடப் பாடுகின்ற மாறுபடுதலிலாத தாளப்பிரமானத்தை வகுத்துக்காட்டும் குற்றமில்லாதமதாரமுள்ள தேன்போலச்சுவையுள்ள இசைப்பாடலானது டொற்குடம்போன்ற தனங்களையுடைய அரம்பைமாதர்களாடுகின்றகூத்தின் விகற்பத்தைக்காட்டும் அங்கங்களுக்கொத்துப் பேதமில்லாமலிருக்கும். எ - று. அங்கம் என்றது அபிநய உறுப்புக்களை. (சுஉ)

ஆடுமுனிக்கணமொருபாலரன்புகழைக்கானத்திலமையவோர்ந்திப்
பாடுமருந்தவரொருபாற்பரமாணுபூதியினிற்பழுத்துநெஞ்சங்
கூடுசமாதியரொருபாற்கோகன்னாயகனைக்கும்பிட்டேத்தி [மோ.
வீடுபெறுவாரொருபால்வினையொழிப்பார்க்கத்தலம்போல்வேறுண்டோ

(இ - புணர்.) ஆனந்தத்தினால் கூத்தாடுமுனிவர்களொருபுறத்திலிருப்பார்கள்; பரமசிவன்புகழை இசையிற்பொருந்தும்படிச்சொல்லிப்பாடும்அரியமுனிவரொருபுறத்திலிருப்பார்கள்; சிவலீலையில் மனங்கனிந்து கிஷ்டைகூடியிருப்பவர்

கள் ஒருபுறத்திலிருப்பார்கள்; கோகன்னக்கடவுளாகிய பரமசிவனைக்கும்பிட்டுத் துதிசெய்து மோக்ஷமடையத்தக்கவர்கள் ஒருபுறத்திலிருப்பார்கள்; ஆதலால் வினைகளை யொழிப்பவர்களுக்கு அத்தத்தலத்தைப்போல வேறொருதலமுண்டா மோ இல்லை. எ - று. ஓகாரம்-எதிர்மறை. (சுஙூ)

ஆயிடையிற்சிலையனைத்துஞ்சிவலிங்கம்புனல்யாவுமரியதீர்த்தம்
மேயகரர்யாவோரும்புத்தேளிர்மகளிரெல்லாம்விண்ணின்மாதர்
தூயபசுநிரையெல்லாம்வான்சுரபிபிழிலெல்லாஞ்சுரர்பூந்தாரு
மாயிருநாலப்பரப்பிற்கோகன்னஞ்சிவலோகமன்னரேறே.

(இ - புணை.) பகைகொள்ளுமன்னவர்களாகிய யானைகளுக்குச் சிங்கம் போலிருக்கும் வேந்தனே! அத்தத்தலத்திலிருக்கும் கற்களெல்லாம் சிவலிங்கம்; நீரெல்லாம் சிவதீர்த்தம்; அவ்விடத்தில் வாசஞ்செய்கின்ற மனிதர்களெல்லோரும் தேவர்கள்; மாதர்களெல்லாம் தேவமாதர்கள்; பரிசுத்தமுள்ள பசுக்களெல்லாம் காமதேனு; சோலையெல்லாம் கற்பகச்சோலை; இத்தகுதியால் பெருமைபொருந்திய பெரிய இவ்வுலகத்தினிடத்தில் கோகன்னமானது சிவலோகமாம். எ-று. (சுச)

கூறுபலபெருந்தீர்த்தம்யாவுக்குமேலாகுங்கோடிதீர்த்தம்
பேறுதருமிலிங்கங்களனைத்தினுக்குமதிகமாபலவிலிங்கம்
வீறுதலமனைத்தினுக்குமேலாகுங்கோகன்னம்வேந்தர்வேந்தே
தேறுவரோவேறுமொன்றைவிளக்கிருக்கத்தித்தேடுந்தெருளிலார்போல்

(இ - புணை.) அரசர்க்கரசனுகிய மித்திரசகராசனே! அத்தத்தலத்திலிருக்குங் கோடிதீர்த்தமானது பலவாகச்சொல்லுகின்ற எல்லாத்தீர்த்தங்களுக்கு மேலானதாகும்; மாபல இலிங்கமானது மோக்ஷந்தரத்தக்க எல்லா இலிங்கங்களுக்கு மேலானதாகும்; கோகன்னமானது விளங்குகின்றஎல்லாத்தலங்களுக்குமேலானதாகும். ஆகையால், விளக்கிருக்க தெருப்புத்தேடும் அறிவில்லாதவர்கள்போல விவேகமுள்ளவர்கள் வேறொருதலத்தைத் தேடுவார்களோ? தேடார்கள். எ - று.

னைவகி
யத்தனம்மாபலவிலிங்கநாயகனைவிதிமுறையாமருச்சித்திங்காள்
வித்தகனுஞ்சனகன்முயல்வேள்விக்குமிதிலைகர்மீளுங்காலை
சித்தமுறுமிறும்பூதுகண்டனமித்திரசகனேசெப்பக்கேண்மோ.

(இ-புணை.) மித்திரசகனே! இப்படிக்கொத்த மகத்துவமுள்ள கோகன்னத்திற்போய் மாசிமாசச் சதுர்த்தசியாகிய சிவராத்திரியிலிருந்து, நம்முடைய அத்தனுகிய மாபலலிங்கநாயகனை வேதமுறைப்படி யாம் அருச்சனைசெய்து, இன்றையதினம் ஞானவானுகிய சனகராசன் செய்கின்ற யாகத்தைக்குறித்து மிதிலைகருக்குவரும்போது, நாபகத்தில்வைக்கத்தக்க ஒரு அதிசயங்கண்டோம்; அதனைச் சொல்லக்கேட்பாய். எ - று. மோ - முன்னிலையசை. (சுசு)

இரண்டாவது சிவதானமகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கஉஉ.

மூன்றுவது

சிவராத்திரியில் கன்மாடபாதராசன் முத்திபெற்ற அத்தியாயம்.

என்றுமுனிகூறிடலுமிகல்வேந்தனகமகிழ்வோடிறைஞ்சியேத்தி
நன்றுபுரிதகப்புதுமையுரைத்தியெனவுரைத்திடலுமவைதீர்வேதத்
தென்றியநாவினனையபெருந்தவனுங்கண்டபரிசுரைப்பேனென்னத்
துன்றுகுறும்தாடைப்புயத்துமன்னவனேமுகநோக்கிச்சொல்லினனே

(இ - புரை.) கவுதமருஷியானவர் இப்படியாகச் சொல்லவே உலியுள்ள அரசனைவன் மகிழ்ச்சியுடன்பணிந்து, துதிசெய்து மிகவும் புதியதாகிய அவ்வாச்சரியத்தைச் சொல்லுமென்று கேட்கவும்; குற்றமில்லாத வேதங்களிற்பழகிய ஞானினையுடையவராகிய மேன்மைபொருந்திய அந்தமுனிவர் தாங்கண்டமுறைமையைச் சொல்லுகிறேனென்று, நல்லமனத்தங்கிய பூமாலையணிந்த புசங்களையுடைய அந்த வேந்தன்முகத்தைநோக்கிச் சொல்லுகின்றார். எ - று. (க)

அருங்கானில்வருந்துயரான்மலர்த்தடத்தணீரருந்தியதன்றீரத்தோர்
மருங்காலநிழலடைந்துசூழ்ந்தவருந்தவரோடும்வதிந்தகாலைக்
கருங்காகம்போனிறமுங்காயமெலாம்புழுநெளியக்கவிந்தபுண்ணுஞ்
சுருங்காதகுட்டமுதற்பலநோயுமுடையாண்மெய்துளங்குநீரான்.

(இ - புரை.) சொல்லுதற்கரிய வனத்தில்கடந்துவந்த இளைப்பினால் ஒரு மலர்த்தடாகத்தினிடத்தில் நீருண்டு, அதன்கரையி லொருபக்கத்திலிருக்கும் ஆலமரத்தினிழலிற்சேர்ந்து, நம்மைச்சூழ்ந்த அரியமுனிவர்களுடன் நாம் இருந்தபோது, காரியகாகம்போலநிறமும் சரீரமெங்கும் புழுவானது நெளியும்படி வியாபித்திராநின்றபுண்ணும் குறையாத குஷ்டமுதலாகியவியாதியாதியும் உடையவனாயும் அவைகளால் உட்கலங்குந் தன்மையையுடையவனாயும் எ - று. (உ)

புண்டாளைமுடைநாறவணங்குறுவாள்வெப்பநோய்புகையச்சூலை
கொண்டாவிவருந்துவாள்கண்ணில்லாளொருபுலைச்சிகொடியமூட்டாள்

கண்டோர்தங்கண்புதைப்பவழிலருவாளுளங்கெழுங்சுகயகோய்நீற
விண்டோயுமாதவத்தாலெரிகொளுந்துகிலத்தினிடைவிழ்ந்தாண்மன்னே

(இ - புணை.) புண்களிலிருந்தொழுகாகின்ற இரத்தத்தானையானது தூர்க்கந்தமாகுகாற வருத்தமடைகின்றவளாயும், சுரநோய்மேலெழுந்து அனல்வீச அதனுடன் சூலநோய்கொண்டு உயிர்வருந்துகின்றவளாயும், பார்வையில்லாதவளாயும், கொடிய கிழத்தன்மையுள்ளவளாயும், பார்த்தபேரெல்லாம் (அருவருப்பினால்) தங்கள் கண்களைமூடிக்கொள்ளும்படியாக வழிநடந்துவருகின்ற ஒருசீசஸ்திரியானவள் வருந்தி அதிகரித்த கூடியநோயானது தன்பட்படுத்த, ஆகாயத்தில் பொருந்திய சூரியவெப்பத்தினால் அக்கினிமயமாய்ச்சுடுகின்ற பாலைநிலத்தினிடத்தில் விழுந்தாள். எ - று. (க)

வீழ்ந்தவுடன்புலைமுதியாளாவியுடல்விடுமவத்தைதவிதங்களெல்லாஞ்
சூழ்ந்தவருந்தவரோடுங்கண்டயனின்றனமாங்கோர்சோதிவானம்
போழ்ந்தொளிர்பொன்விமானமுடனிழிந்துபலகணைநாதர்புவியிற்போதத்
தாழ்ந்தவணையடிவணங்கிவரவென்கொலென்னவவர்சாற்றலுற்றார்.

(இ - புணை.) விழுந்தவுடன் அந்தப்புலைச்சியாகிய கிழவியின் உயிரானது உடலைவிட்டு நீங்கும்போது உண்டான அவஸ்தையின் வகைகளையெல்லாம் நம்மைச்சூழ்ந்திராநின்ற முனிவர்களும் நாமும் பார்த்துக்கொண்டு அயலிலிருந்தோம்; அப்படியிருக்கும்போது அவ்விடத்தில் இருளைநீக்கிப் பிரகாசியாநின்ற சோதியுள்ள ஒரு பொன்விமானமுடன் பலகணைநாதர்கள் ஆகாயத்தினின்றும் இழிந்து பூமியினிடத்தில்வர; அவர்களைநாம்கண்டு பாதத்திற்றாழ்ந்துபணிந்து நீவிர் இவ்விடத்திற்கு வந்தகாரணமென்னவென்றுவினவ, அவர்கள் சொல்லத்தொடங்கினார்கள். எ - று. (ச)

மலைமகளையொருபாகம்வைத்தபிரானேவமணிமானமீதில் [ன்
புலைமகளைக்கொடுபோவானணைந்தனமென்றுரென்றபோழ்தின்வானி
றிலகுசுடர்விமானத்தையிவளைடைதன்மறைவேள்வியியற்றுசாலை
யுலகினிழிபுடைக்தரைவாய்ஞமலிபுகுந்தேதுமதையொக்குமாதோ.

(இ - புணை.) மலையரையன் புத்திரியாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்தருளிய பரமசிவன் கட்டளையிட்டனுப்பியதினால், இரத்தினங்கள்பதித்தவிமானத்தின்மேல் இந்த நீசஸ்திரியைக்கொண்டுபோக வந்தோமென்றார்கள்; அவர்களப்படிச் சொன்னபோது விண்ணுலகத்திலிருந்துவந்து பிரகாசியாநின்ற ஒளியுள்ள இந்தவிமானத்தில் இவளேறுவது எத்தன்மைத்தெனில், உலகத்திலிருக்கும் (செந்துகளுருள்) இழிவையுடைய குணாக்காநின்ற வாயுள்ளநாயானது வேதவிதிப்படிச்செய்கின்ற யாகசாலையிற்சென்று (சுவர்க்கலோகத்துக்குப்போக விமானத்திலேறுவதை யொப்பாகும். எ - று. (ஞ)

னைப்புகன்றேம்பின்னரும்பார்த்திழிபிறப்பினுள்கண்களிரண்டுமி
ல்லாள், தினைத்துணையுஞ்சிவனிலையுஞ்சிவனடியார்நிலையுமுளஞ்சிந்தித்
திலாள், வினைத்திறனுன்மிகுபிணியாளெழுபிறப்பினல்வினையின்வி
ழைவொன்றில்லாள், தனைச்சிவலோகத்தினிடைக்கொடுபோவான்சா
மைந்தனுரீர்சாற்றுகென்ன.

(இ - புரை) என்றுசொல்லிப் பின்னும் அவர்களைப்பார்த்து இழிவாகிய பிறப்பினையுடையவளும், இரண்டு பார்வைகளுமில்லாதவளும், பரமசிவனுடைய நிலையினையும் சிவனடியார்கள்நிலையினையும் தினையளவுபொழுதாவது தியானியாதவளும், வினைவலியால்மிகுந்த பிணியையுடையவளும், எழுவகைப்பிறவியினிடத்தும் புண்ணியத்தில் எவ்வளவேனும் விருப்பமில்லாதவளுடாகிய இவளை நீங்கள் சிவலோகத்துக்குக் கொண்டுபோகச் சம்மதித்துவந்த காரணமென்ன சொல்லுங்களென்றுகேட்க. எ - று.

எழுவகைப்பிறப்பாவன :—தேவர், மனிதர், மிருகம், பகுஷி, ஊர்வன, நீர்வாழ்வன, தாபரம் என்பனவைகளாம். (தாபரம்-மலைமரமுதலான அசையாப்பொருள்கள். (கூ)

இருந்தவத்தின்மாமுனியேயிப்புலைச்சிதிறங்கேட்கினிறும்பூதெய்
த்தும், திருந்துபுகழ்க்கேகயநாட்டொருமறையோனளித்தவருஞ்செம்
பொற்பாவை, சரிந்தமலர்க்கருங்குழலாள்சவுமினியென்னும்பெயரா
ள்சம்பரரி, வருந்துவனப்பிரதியெனுமணங்கினையுமழகழிக்கும்வனப்
பின்மிக்காள்.

(இ - புரை.) பெருமைபொருந்திய தவத்தினுல் மகத்துவமாகிய முனியே! இந்தப்புலைச்சியினுடைய செய்திகளைக்கேட்கில் ஆச்சரியமுண்டாகும்; என்னவென்றால், நல்லபுகழையுடைய கேகயநாட்டிலிருக்கும் ஒருபிராமணன்பெற்றகிடைத்தற்கரிய செம்பொன்னிறஞ் செய்யப்பட்ட பிரதிமையொத்தவளும், பூமாலையணியப்பட்டுக் கருமைநிறமுள்ளதாய் நெரிந்து படிப்படியாய்த்தாழ்ந்த அளகபாரத்தையுடையவளும், சவுமினியென்னும் பெயரையுடையவளும் மன்மதன்கண்டு (மோகமடைந்து) வருந்துதற்கேதுவாக அழகுள்ள தெய்வப்பெண்ணையிய இரதியினுடைய சவுந்தரியத்தின்பெருமையுங்கெடச்செய்யத்தக்க சுந்தரத்திலும்மிக்கவளுமாயிருந்தனள். எ - று. இறும்பூது-ஆச்சரியம். (எ)

கொங்கையடிகொண்டிளகிப்பணைத்திறுகியிறுமாந்துகுரும்பை
யேய்ப்ப, மங்கையெழிற்பருவமிவளெய்துதலுமிவடானைமனத்தினே
ர்ந்து, பங்கயமாமுகத்தானையொருமறையோன்விதியின்விழாப்பண்ணை
நல்கி, வெங்கயமும்பிடியுமெனக்கலவிநுகர்ந்திருவோரும்விழையுநா
ளில்

(இ-டரை.) இத்தன்மையான அழகுள்ள சயமினியென்பவள் இரண்டுதனங்களும் அடிபரந்து இளகலாய்ப் பருத்து இறுகிப் பூரித்துத் தென்னங்குரும்பையையொப்பாகும்படியான மங்கைகட்டருவத்தையடைந்தமாத்திரத்தில், இவள்தகப்பன் இனிவிவாகஞ் செய்விக்கவேண்டுமென்று மனதில் உணர்ந்து, செந்தாமரைமலர்போன்ற முகத்தையுடையவனீள ஒருபிராமணன் வேதவிதிப்படி விவாகஞ் செய்துகொள்ளக் கன்னிகாதானமாகக்கொடுக்க; வெவ்விய ஆண்யானையும் பெண்யானையும் இணைபிரியாமல் கூடிக்கொண்டிருப்பதுபோல இவ்விருவருங் கலவியின்பம் அனுபவித்துக்கொண்டு விருப்பமுற்றிருக்குநாளில். எ - று.

பெண்களுக்குப்பருவம் ஏழு:—அவை பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்பனவகளாம். பேதைப்பருவமானது ஐந்து வயதுமுதல் ஏழுவயதுவரைக்குமுள்ளது. பெதும்பைப்பருவமானது எட்டு வயதுமுதல் பதினொருவயதளவுமுள்ளது. மங்கைப்பருவமானது பன்னிரண்டு வயதுமுதல் பதின்மூன்றுவயதளவுமுள்ளது. மடந்தைப்பருவமானது பதினொன்குவயதுமுதல் பத்தொன்பதுவயதளவுமுள்ளது. அரிவைப்பருவமானது இருபதுவயதுமுதல் இருபத்தைந்துவயதளவுமுள்ளது. தெரிவைப்பருவமானது இருபத்தாறுவயதுமுதல் முப்பத்தொருவயதளவுமுள்ளது. பேரிளம்பெண் பருவமானது முப்பத்திரண்டுவயதுமுதல் நாற்பதுவயதளவுமுள்ளது. (அ)

தன்னுயிர்போனீங்காதகொழுநனுக்குவினைதூப்பச்சார்ந்தநோயால், இன்னுயிர்விட்டவனிறப்பத்துணையிழந்தவன்றிலெனவிரங்கிமாழ்கிக், கன்னன்மொழிக்குயிலனையாள்கைம்மையுற்றபின்னரும் வெங்காமநோயான், மன்னுபெருங்கிறையொருவிக்காவின்கண்யாவனையுமருவுநாளின்.

(இ - டரை.) தன்னுயிர்போல விட்டுப்பிரியாத கணவனுக்கு வினையானதுகூட்ட சேரிட்டவியாதியினால் இனிய உயிரைவிட்டு அவனிறந்துபோகவே, துணையாகிய ஆண் அன்றிற்பறவையைப்பிரிந்த பெட்டை அன்றில் இரங்குவதுபோலக் கரும்பையொத்த மதுரமுள்ள சொல்லினால் குயில்போன்றவள் அழுதுசோர்ந்து, கைம்பெண்ணனைபின்பும் வெவ்விதான காமநோயினால் நிலைபெற்றபெரிய கற்பினின்றும் நீங்கிச் சோரத்தனமாக எல்லாரையும் புணர்ந்துகொண்டிருக்குநாளில். எ - று. (கூ)

வேறு.

உற்றுரையலாருரைக்குழுனைகொள்ளாள்
கற்றுர்முதியார்கழறுவதுங்கைக்கொள்ளாண்
முற்றுமுகிழ்முலைப்பான்முற்றிமுகங்கறுப்பப்
பற்றுநுசுப்பாள்கருப்பம்படைத்தனளே.

(இ - புரை.) (இவள்விடசரிப்படதையறிக்து) சுற்றத்தாரும் அன்னியரும் (கேடக்கும் கடத்தையோக்கியமான தல்லவென்று) சொல்லும் வார்த்தையைக் கேளாதவளாயும், கல்விகற்றவர்களும் முதிர்ந்தவயதுள்ளவர்களும் சொல்லும் வார்த்தையை யேற்றுக்கொள்ளாதவளாயும், (தன்னிஷ்டப்படிநடந்து)உண்டென்று நிச்சயித்துக்குறிக்கக்கூடாத, நட்பமாகிய இடையையுடையவள் முதிர்ந்து சாயாமல் குவிந்திருக்குக் தனங்கள் பால்நிறைந்து காம்புகள் கருமைநிறங் கொள்ளும்படிக் கருப்பம் அடைந்தாள். எ - று. (கo)

அங்கதுகண்டுற்றாரயலாரிவர்குழுமி
யெங்குலத்துக்கெல்லாமிருந்துபழியீட்டுவாள்
தங்குதலிவ்வூர்க்குத்தகாதென்றுரீக்குதலுந்
செங்கண்புனல்கொழிப்பச்சேயிழையாள்கான்சென்றாள்.

(இ!- புரை.) இந்தமாதான்வள் கருப்பம் அடைந்ததையறிந்து சுற்றத்தாரும் அயலாருமாயிருப்பவர்கள்கூடி, இவளிவ்விடத்திலிருந்து நம்முடைய குலத்துக்கெல்லாம் பழிசுட்டாதிப்பவளாயிருக்கிறாள்; (ஆதலால்) இவள் இவ்வூரிலிருப்பது தகாதென்று நீக்கிவிடவும், கண்கள்நீர்சொரியும்படி (அழுதுகொண்டு) காட்டிற்போய்விட்டாள். எ - று. (கக)

அத்தலையோர்வேளாண்மரபிலுகாளை
சித்தமயல்கொண்டவடோள்சேர்ந்துமனையிற்செறிப்பப்
புத்தமுதமென்னத்தணியனிணப்புழுக்கல்
துய்த்தங்கவன்மார்பிற்றோய்ந்துதலையுண்டிருந்தாள்.

(இ - புரை.) அவ்விடத்தில் வேளாளகுலத்தானுகிய தார்நடத்தையுள்ள ஒருவிடபுருஷன்கண்டு மனதில்காமமயக்கங்கொண்டு, அவன்தோளைச்சேர்ந்து தன்வீட்டிற் கொண்டுபோய் வைத்துக்கொள்ள, புதியஅமுதம்போல் கன்றும் இறைச்சியுடன் சோறும் உண்டு, அவன் மார்பிற்சேர்ந்து கலவியின்பம் அனுபவித்துக்கொண்டிருந்தாள். எ - று. தணியல்-கள்; புழுக்கல்-அன்னம். (கஉ)

பண்டைக்குலனெருவிவேளாளன்பன்னியாய்க்
கண்டின்சுவைக்கலவிக்காமபானுதியெல்லாம்
உண்டின்புறுமகப்பேறுற்றுநெடுநாட்கழிப்பத்
திண்டிறலான்வேற்றூர்க்ககறலுமிச்சேயிழையாள்.

(இ - புரை.) தான்பிறந்த பிராமணகுலாசாரத்தை நீங்கி (சூத்திரகுலத்தானுகிய) வேளாளன்மனைவியாய்க் கற்கண்டுபோல இனியமதுரத்தைத் தருகின்ற கலவிக்குரிய அநரபானமுதலாகியவைகளை அனுபவித்து, இன்புறத்தக்கசுழக்தைகளையும்பெற்று, நெடுங்காலஞ்செல்லும்படி இருக்கும்போது (ஒருகாள்)

மிகுந்த பலமுள்ள அந்தவேளாளனுனவன் அயலோருக்குச்செல்லவும் இந்தப் பெண்பிள்ளையானவள். எ-று. கண்டு - கற்கண்டு. (கஉ)

மற்றொருவரில்லாபதினயிற்றமியளாய்
அற்றைபயிருட்கங்குல்வரவாற்றுதுகாமத்தீ
யுற்றுமதுவருந்தியுன்றடிதின்பான்விரும்பிப்
பொற்றொடியாளந்நிலையேர்தோழத்திடைபுகுந்தாள்.

(இ - புணை.) வேறொருவரு மில்லாதவீட்டில் தான்மாத்திரம் தனியளா யிருந்து அன்று இருள்சூழ்ந்த இராப்பொழுதுவரச் சகித்துக்கொள்ளமாட்டா மல் காமாக்கினியைப்பொருந்தி, மதுடானஞ்செய்து மாமிசத்தின்னவும் இச்சை கொண்டு, அந்தவீட்டின் ஒருபுறத்திலிருக்கும் ஒருதோழத்திற்சென்றாள். எ - று. ஊன் தடி - இருபெயரொட்டு. (கச)

வெள்ளாடுஞ்சேதாவெடிவாற்குழக்கன்றும்
உள்ளாதருந்துமதுவாலுணர்வழிந்து
தள்ளாடியான்கன்றைப்பற்றித்தலையரியாப்
புள்ளாடுவேற்கண்ணைனில்லிற்கொடுபுகுந்தாள்.

(இ - புணை.) பருத்து காக்கைமுதலாகிய பகுதிகள்கண்டு மேலேவட்ட மிட்டுக்கொண்டு பறக்கத்தக்கதாய்ச் (சுத்தவீரன்கையிலிருக்கும்) வேலாயுதம் போல நீட்சியுங் கூர்மையுமுள்ள கண்களையுடையவள் கள்ளுண்டவெறியால் அறிவழிந்து, தள்ளாடிக்கொண்டுபோய் வெள்ளாடு இதுவென்றும் அச்சந்தரும் வாலையுடைய பசுவின் இளங்கன் றிதுவென்றும் பகுத்துப்பாராமல் ஒருபசுவின் கன்றைப்பற்றி அதன்தலையை அரிந்து வீட்டிற்கொண்டுவந்தாள். எ - று. (கரு)

வெந்ததடிநுகர்வானெண்ணிவிளக்கொளியின்
முந்துதசையரியவேண்டிமுயல்போதின்
அந்திப்பிறைநுதலாளான்கன்றெனவறிந்து
சிந்தித்தயர்ந்துசிவசிவவென்றேதிணுள்.

(இ - புணை.) அந்திப்பொழுதில் தோன்றுகின்ற பிறையையொத்த நெற்றி யையுடையவள் வெந்தமாமிசத்தைத் தின்னவெண்ணி, ஒளிவிளக்குந்தீபவெளிச் சத்தில் அந்தப்பசுவின்கன்றை அரியவிருப்பி எத்தனிக்கும்போது, பசுவின்கன் றென அறிந்து, (தகாதகாரியஞ்செய்தோமேயென்று) மிகனத்துச்சோர்வையடை ந்து சிவசிவ என்று சொன்னுள். எ - று. (கசு)

கைதவமேசெய்யுமதுவின்களியென்று
வெய்துயிர்த்துமுப்புரமும்வேவக்குறுமுரல்
செய்தபெருமானடியையுள்ளந்தியானிபப
எய்துபடாலங்கிருகடிகைப்போதிருந்தாள்.

(இ-புணை.) மதுவின்மயக்கமானது துன்பத்தையேசெய்யுமென்றெண்ணி நேரிட்டவருத்தத்தினால் பெருமூச்சுவிட்டு, திரிபுரங்கள் வேகும்படி புன்னகை செய்த பரமசிவனுடையதிருவடிகளை மனமானது தியானஞ்செய்யக் கன்றை யரியவுட்கார்ந்தவிடத்தில் இரண்டு காழிகைவனாக்கும் அசைவற்றிருந்தான். எ-று. படர்-துன்பம். (கஎ)

வானருந்தும்வேட்கைதனையுழின்வலிதுரப்பக்
கானிருந்தகோதையந்தக்கன்றின்றசைமீட்டுங்
தானரிந்துநல்லைகருணைசமைத்தருந்தி
யேனையெலும்புந்தசையும்வீதியினிட்டூதிசைப்பாள்.

(இ - புணை.) மாமிசந்தின்னும் இச்சையை விதிவலியானது எழுப்ப, வாசனைதங்கிய பூமாலையணிந்த அவள் பின்னும் அந்தப்பசுவின்மாமிசத்தை நீக்கிவிடாமல், அரிந்து நல்லபொரிக்கறியாகச்சமைத்துண்டு, உண்பதற்கு உதவாத மற்றை எலும்பையும் மாமிசத்தையும் தெருவிற்கொண்டுவந்துபோட்டு இந்த வார்த்தையைச் சொல்லுகின்றாள்- எ - று. கருணை-பொரிக்கறி. (கஅ)

அந்தோகொடுவினையேனவினிளங்கன்றுதனை
வந்தோருழுவைவதைத்துண்டொழிந்ததிது
நந்தோணமறுகினம்மினத்தீர்காண்மினெனை
நொந்தோலமிட்டுறுணுகிடைபோல்வாடினாள்.

(இ-புணை.) ஐயோ? கொடியபாவியாகிய என் பசுவின் இளங்கன்றை ஒரு புலியானதுவந்து கொன்று உண்டுபோய்விட்டது; இந்தக்கொடுமையை தோரணங்கள்கட்டியிருக்கும் நம்முடைய வீதியிலிருக்கும் நம்மினத்தவர்களே பாருங்களென்று வருந்தி யோலமிட்டுத் தனது நுண்ணிய இடைபோலவே தானும் வாடினாள். எ-று. உழுவை-புலி. (கக)

அவ்வளவிற்கங்குல்கழியவவள்கேள்வன்
செவ்வியிளங்கன்றிறந்ததீவினையைக்கேட்டேங்கி
நவ்விவிழிச்சேயினைமாட்டெய்திநடுநடுங்கி
வெவ்வினையாளோடுமனையகத்தின்மேவினன்.

(இ-புணை.) அப்படி அவள்வாடுங்காலத்தில் இராப்பொழுது நீங்கியது; (அது நீங்கினவுடன்) அவள் கணவன்வந்து, அழகிய இளங்கன்றிறந்துபோன பாவத்தைக்கேட்டிரங்கி, மான்பார்வைபோன்ற பார்வையையுடையவளிடத்திற் சென்று, (அப்பாபத்திற்காக) நடுநடுங்கி, அந்தக் கொடியவளோடு வீட்டினிடத்திருந்தான். எ-று. நவ்வி-மான். (உ0)

ஆங்கணிருவோரும்மதனுமணங்குமெனத்
தாங்கரியவின்பந்தணவாதருந்தாள்

பூங்குழலாணுளிழப்பப்போமாருயிர்பிணித்து
வீங்குபுயத்தாதுவர்போய்வெங்கூற்றின்முன்விடுடித்தார்.

(இ-புனை.) அவ்விடத்தில் அவ்விருவரும் மன்மதனுப் இரதியும்போல (ஒரு வனையொருவர்விட்டுப் பிரியாமல்) பிறரொருவருக்குக் கிடைப்பதற்கரிய கலவி யின்பத்தை நீக்கமிலாது அனுடவித்துக்கொண்டிருக்கும்காளில், பூவணித்த குழ லையுடையாளுக்கு வாழ்நாள் முடிவாகிவிட, அவள் உடலவிட்டுப்பிரிகின்ற உயி ரைப் பருத்தநாள்களையுடைய யமதூதர்கள் (பாசத்தினுற்) கட்டிக்கொண்டு போய்க் கொடுமையானநோற்றமுள்ள நமனெதிரில்விடுத்தார்கள். எ-று வெம்றி கொள்ளுமாற்றல்தோன்ற "வீங்குபுயம்" என்றார். தணத்தல் - நீங்கல். (உக)

கண்டகமன்பெதைமுகநோக்கியிக்கயத்தி
ணண்டிழைத்தவல்வினைதானுன்முகத்தாற்பார்த்தெண்ணிச்
சண்டநிரயம்புகுத்தத்தக்காய்நீயலலெறி
விண்டபுலமகளாயமேதினியின்மேவுகென்றான்.

(இ-புனை.) தூதுவர்கொண்டுவரகண்டகமன் அவள் முகத்தைப்பார்த்து, இந்தக்கீழ்மையுள்ள புலைச்சி முன்செய்த வலியவினைகளைச் சாஸ்திரத்தின் முன் னிலையில் விசாரித்தெண்ணி, நீ கொடுமையுள்ள நரகத்தில் விழுத்தத் தக்கவள ல்லை; ஆகிலும் முறைமைநீங்கிய புலையர்மகளாய்ப் பூலோகத்திற்பிறக்கக்கட வையென்று சொன்னுன் எ-று. பசுவின்கன்றை யரிந்தபோது சிவசிவவென்று சொன்னதினுல், நரகத்தில விழுத்தத்தக்கவளல்லளென்றது. (உஉ)

அவ்வண்ணந்தண்டத்தான்கூறவதுகேட்டவளு
மைவண்ணமேனியளாய்வாட்கண்ணீல்லாகி
இவ்வண்ணம்பாரினெழிலிழந்தாரில்லையெனச்
செவ்வண்ணமின்றிப்புலமகளாய்ச்சினறுதித்தாள்.

(இ-புனை.) யமதருமராசன் அவ்வாறுசொல்ல அதைக்கேட்ட அவள்கருமை நிறமுள்ளவளாயும் ஒளிடொருந்திய பார்வையில்லாதவளாகியும், இப்படி அழகிழ ந்தவர்கள் உலகத்திலில்லையென்று (கண்டவர்களெல்லாம்) சொல்லுப்படி, நலல அழகில்லாமல் நீச ஸ்திரியாகவந்து பிறந்தாள். எ-று. (உங)

அன்னவளையீன்றேர்நுமனியயின்றமிச்சில்
கன்னியிளஞ்சேதாவினுனேடுங்கள்ளூட்டி
மன்னிவளர்க்கவளர்வதெலாம்வன்பிணியாய்த்
துன்னிவளரமயத்தீன்றேருந்துஞ்சினூர்.

(இ புனை.) அத்தன்மையுடையவளைப்பெற்ற தாய்தந்தையர்கள் நாய்தின்று மிகுதியானஎச்சிலானையும், மிகுந்த இளமையாகிய பசுவின்கன்றிறச்சியையும் கள்

னையும் வளட்டி, ஆசைபொருந்திவளர்க்க; வளர்வதெல்லாம் நோப்பிணியாய்ப் பொருந்தி வளருங்காலத்தில், பெற்றவர்களும் இறந்தார்கள். எ-று. இறந்தானைத் "தொலைந்தோர்" என்பது மங்கலவழக்கு. (உச)

அக்காலநோயாலயர்ந்துடணைஞ்செய்யத்
தக்காரிலராகவெம்பசிநோய்.தாங்கலளா
யெக்காலமும்புலையர்சேரிதொறுமேற்றுண்ணைப்
புக்காவிதேய்வாளைமூப்பும்பொருந்திற்றே.

(இ-பொ.) தாயும் தந்தையு மிறந்தபின்பு (முன்னமே தனக்குச்சப்பவித் திருக்கிற) வியாதியினால் சோர்வடைந்து, தன்னை விவாகஞ்செய்துகொள்ளத்தக் கவர்களுமில்லாமையாக நேரிட, கொடிய பசியாகிய நோயைத்தாங்கமாட்டாத வளாய், எப்போதும் புலையர் சேரிதோறும் இரந்துண்ணைச்சென்று, உயிர்மெலிகின் றவளைக் கிழத்தன்மையும் பொருந்திற்று. எ-று. தன்னை விவாகஞ் செய்விக்கத் தக்கவரும் இல்லையாக என்பதும் ஒரு பொருள். (உரு)

அத்தகையநோயாலுமூப்பாலுமல்லலுற்றுச்
சித்தம்பசிகவற்றத்தேய்ந்தகடையினளாய்
முத்தன்சிவநிசியிற்கோகன்னமுந்துறுவார்
தத்தங்குழுவோடுமெங்ஙகரிற்சார்ந்தனளே.

(இ-பொ.) அப்படிக்கொத்த நோயினாலும் கிழத்தன்மையினாலும் தன்பம் பொருந்திப் பசியானதுமனதைவருத்தப்படுத்தச் சோர்ந்தகடையையுடையவ ளாகிப் பரமசிவனுக்குரிய சிவராத்திரியில் கோகன்னத்துக்குச் செல்லுகின்ற கூட்டத்தாருடன் தானும் அத்தலஷேத்திரத்துக்குப் போனள். எ-று. (உசு)

தீயபசியாலொருமறுகைச்சேர்ந்திருந்து
தூயவழியில்லேற்களித்திடுமின்சோறென்னக்
கூயகுரல்கேட்டொருவன்கொழுங்களியன்
ஏயுமவள்கைத்தலத்தின்வில்வமுணவென்றளித்தான்.

(இ-பொ.) (கோகன்னத்திற் போனவள்) ஒரு வீதியிற்போயிருந்துகொ ண்டு, பரிசுத்தமான கண்களில்லாத எனக்குச் சோறுகொடுங்களென்றுகொடிய பசியினால் அரற்றியகுரலைக்கேட்டு, மிகுந்த இறுமாப்புள்ளவனுகிய ஒருவன் தன் கையிலிருந்த வில்வத்தை அவள் கையினிடத்தில் சோறென்று கொடுத்தான்.

உண்ணவதையுணவென்றேயுர்ந்தாளுணவன்மை
எண்ணியயலேயெறிந்ததழைகாளியிட
கண்ணுறுபழையசிவலிங்கமாயகன்றன்
வண்ணமுடியின்மரகதம்போல்வாய்ந்ததுவே.

(இ-புணை.) அவன்கொடுத்த வில்வத்தை (அவள்) சோறென்று உண்ணினைத்துப் பின்பு சோறல்லவென்று தெரிந்துகொண்டு, பக்கத்திலெறிந்துவிட; அவ்வில்வத் தழையானது பார்வதியாளை இடப்பாகத்தினுடையராய் அங்கெழுந் தருளியிருந்த பழமையாகிய சிவலிங்கப்பெருமானுடைய அழகிய திருமுடியில் மாகதமணிபோலப் பொருந்திற்று. எ-று. (உஅ)

அற்றைமுழுஞாளுமுணவில்லாயவ்விரவிற்
பற்றுதுயினீத்துப்பனித்தண்புனறேய்ந்த
பெற்றியளெண்ணுதெறிந்தவில்வமேபிஞ்ஞகன்றன்
பொற்புறுசிப்பூசணியேபோன்றதிருணீங்கிற்றால்.

(இ-புணை.) (அவளெறிந்த வில்வஞ் சிவலிங்கப்பெருமான் முடியில் தங்கினதுமல்லாமல்,) அன்று முழுதும் ஆகாரமில்லாதவளாய், அந்தச்சிவராத்திரியில் ஒருபோதும் நீங்காத நித்தினையை நீங்கிக் குளிர்ச்சிபொருந்திய பனியாகிய நீரில்படிந்த முறைமையையுடையஅவள் இன்னதனனெண்ணுமலெறிந்தவில்வமே பரமசிவனுடைய அழகுள்ள சிவராத்திரிபூசை அருச்சனைபோலாகியது; இராப்பொழுதும் நீங்கிற்று. எ-று. (உக)

வெய்யபசிமூப்புநோயிவற்றான்மெய்வருந்த
உய்யுமுணவிலளாயோர்புலச்சிதோள்பற்றிக்
கையிற்றடியூன்றிக்காறளரமீள்போழ்தி
னையுங்கருத்தாணடுக்குற்றிவண்வீழ்ந்தாள்.

(இ-புணை.) (இராப்பொழுது நீங்கினவுடன்) கொடியபசியாலும் கிழத்தன்மையாலும் உடலானது வருத்தத்தைப்பொருந்த, பிழைத்திருப்பதற்கேதுவான ஆகாரமில்லாதவளாய், ஒரு நீச ஸ்திரீயின் தோளை ஆதாரவாகப்பற்றி ஒரு கையில் தடிபிடித்தூன்றிக்கொண்டு, கால்தளரும்படி நடந்து வரும்போது வருத்துகின்றமனனதையுடைய அவள் உடல்நடுங்கி இவ்விடத்தில் விழுந்தாள். எ-று. (ஙo)

வேதமுனியேயிவளிறக்கும்வேலையினிற்
பாதிமதிவேணிப்பரமனைமநோக்கிக்
கோதில்குணத்தாளைக்கொணர்வான்விமானமொடும்
போதினெனப்பணிப்பயாமிங்குப்புக்கேமால்.

(இ-புணை.) ஓ பிர்ம்மருஷியே!(இவ்விடத்தில்விழுந்த) இவள் இறக்குங்காலத்தில், அருந்த சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய பரமபதியானவர் எங்களை நோக்கி, குற்றமில்லாத குனத்தையுடைய இவளைக் கொண்டுவரும்படித் தேவவிமானங் கொண்டுபோங்களென்று கட்டளையிட்டருள நாங்களிங்கேவந்தோம். எ - று. ஆல் அசை. (ஙக)

சிவராத்திரிமகிமை.

ஈங்கெம்பரமனிடருழந்தோர்யாவனையுந்
தாங்குங்கருணைத்தலைவனெனுந்தகைமை
பாங்கொன்றறியாதிழைத்தவருச்சனையாற்
றீங்கின்புலைச்சிக்கருளத்தெளிந்தோமே.

(இ-புனை.) இன்று சிவராத்திரியென்றும், இதுசிவலிங்கமென்றும் இர்காளில் ஆகாரம் நித்திரைநீங்கிச் சிவார்ச்சனைசெய்தால் இன்னபலன்வருமென்றும், தெரியாமற்செய்த அருச்சனையால், பாவத்தினையுடைய இந்தப்புலைச்சிக்குக் கிருபைசெய்ததினால், எம்முடையகடவுளானவர் இவ்வாறு துன்பம் அனுபவிக்கின்றவர்களையெல்லாம் இரக்ஷிக்கநின்ற கிருபையையுடைய தலைவனென்னுந் தன்மையை நாங்கள் ஐயமற நன்கு தெரிந்துகொண்டோம். எ - று. (கூ2)

வேறு.

இனையளித்துயருறலென்னையென்றியேன்
முனிவரகேளிவண்முற்பிறப்பினில்
நினைவிலுமடிசிலிட்டுண்டிசேர்ந்திடா
வினையிறைப்பசிதருதுன்பமேயினள்.

(இ-புனை.) சிவலோகத்துக்கு அழைப்பித்துக்கொள்ளும்படி பரமசிவம்கிருபைசெய்தருளத் தக்கதாகிய இவ்வகைத்தன்மையையுடையஇவள் இப்படிக்கொந்த துன்பத்தைப் பொருந்துதற்குக் காரணமென்னவென்று கேட்பீரோயானால் சிலோஷ்டமுனிவரோகேட்பீராக; இவள் முன்சென்மத்தில் நினைப்பினும் அன்னபிறருக்கயிட்டுப் பின்புதான் உணவுகொள்ள எண்ணுதபோபத்தினால் பசிமிகுந்து, (ஆகாரங்கொடையாமல்) அப்பசியினாலேயே துன்பத்தைஅடைந்தனள். எ - று. (கூகூ)

தீயகள்ளுண்டறனல்லசெய்தலால்
தூயகண்ணிழந்தனள்சுரபிக்கன்றென
ஆயிடையறிந்துய்வள்ளுரமருந்தலால்
காயினுமிழிபலப்புலைமகண்ணினள்.

(இ - புனை.) கொடிய கள்ளுண்டு பாபமானகாரியங்களைச் செய்தமையால், பரிசுத்தமுள்ள பார்வையை யிழந்தாள்; (நீடவெளிச்சத்தின்முன்கொண்டுவந்து) பசுவின் கன்றென்று அறிந்தும், அந்தப்பசுவிறைச்சியை உண்டதினாலே காயைப்போர்க்கிலும் இழிவுள்ள சண்டாளப்பிறவியை அடைந்தாள். எ - று.

கள்ளுண்ணுதலால் ஒழுக்கம் அறிவு நாணம் புகழ் செல்வம் முதலாகிய நன்மைகள் கெடும், இகழ்ச்சி தன்னைமறத்தல் கல்லவர்களை யவமதித்தல் முதலாகிய தீமைகள் சேரிடும், என்பதுபற்றித் "தீயகள்" என்றார். வள்ளுரம்-பசுவிறைச்சி.

கைம்மையிற்பலரொடுங்கலந்ததீமையால்
இம்மையிற்குட்டநோய்முதலையாவையும்
வெம்மையினெரிதரவேட்டல்வேண்டுவார்
தம்மினத்தொருவருமின்றிச்சாம்பிணம்.

(இ-புணை.) கைம்பெண்ணென பின்பும் பலபேரோடுசேர்ந்த பாபத்தினால், இப்பிறப்பில் குஷ்டநோய் முதலான பலநோய்களும் வெப்பத்துடன் வருத்த; தங்களினத்தில் தன்னை விவாகஞ்செய்துகொள்ள விரும்புகின்றவர்கள் ஒருவருமில்லாமல் சோர்ந்தாள். எ - று. (கூரு)

உன்மத்தவிக்குறிபலவுற்றுத்தோன்றினோர்
தினைப்புவியிடத்துச்செய்தீமையாளென்
றினைத்திடுமளறியெனவென்னுந்துயவர்
வினைத்துணரிதழியாற்கடமைவேண்டுவார்.

(இ-புணை.) சொல்லிய பலவாகிய இவ்விதக் குறிகளைப்பொருந்திப் பிறந்தவர்கள் அலகினையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த இப்பூலோகத்தினிடத்து பாவத்தைச்செய்தவர்களென்று வேதமுறையிடுமென அறிந்தபரிசுத்தர்கள் வாசனை பொருந்திக் கொத்துக்களாக மலர்ந்திருக்கும் கொன்றைப்பூமாலையணிந்த பரமசிவனுக்கு அடிமைத்திறஞ்செய்யவிரும்புவார்கள். எ - று. (கூசு)

அன்றியுமறவிதன்னுலயத்திவள்
சென்றகாலும்மையிற்சிவனையுன்னிய
நன்றியாலெரியழனாகம்புக்கவிர்
தொன்றிடுந்தீவினைக்குரியளல்லளால்.

(இ-புணர்.) பரமசிவனுக்கு அடிமைத் திறஞ்செய்ய வேண்டுமென்கிற விருப்பங்கொண்டவ ளல்லாமலிருந்தும், யமதருமராசன்சபையில் இவள்போனகாலில் முற்சென்மத்தில் பரமசிவனை நினைத்தபுண்ணியத்தினால், எரிகின்ற நிரகத்தில்விழுந்து அவிந்துகிடக்கும் படியான பாவத்துக்குரியவளல்லள்; (என்று சொல்லி) எ - று. (கூஎ)

ஆயினுமவனியினிழிபிறப்படைந்
தோயும்வல்வினைப்பயனுண்டொழிந்தபின்
ஏயுநல்வினையினுலீசன்பூசனை
மேய்முத்தியுமதான்மேவுவாளென்றுன்.

(இ-புனை.) அப்படி நரகத்துக்குப்போகத்தக்கவ ளல்லாதவளாயிருந்தாலும் பூலோகத்தில் நீசப்பிறப்படைந்து, ஓயுப்படியான பாவத்தின்பயனை அனுபவித்தொழிந்தபின்பு, பொருந்திய நல்வினையால் சிவபூசையும் அந்தப்பூசையினால் அழியாத மோகூத்தையும், அதனால் அடைவாளென்று சொன்னுன். எ - று.

அதால் என்பது அன்சாரியைபெற்று வந்தது. (கூஅ)

இன்னதன்மையளிவளென்றிப்பாவையைப்
பன்னகமவுளியான்பதத்தினேற்றதும்
அன்னதுங்காண்டியென்றவடலைவிலை
யுன்னருந்திவ்வியவுருவஞ்சேர்த்தியே.

(இ-புனை.) இவளித்தன்மையுள்ளவளென்று சொல்லி, (முனிவனே!) இந்த மாதினைச் சர்ப்பங்களணிந்திருக்கும் சடாமகுடத்தையுடைய பரமசிவன் பத மாகிய சிவலோகத்துக்குக் கொண்டுபோகிறோம்; அதையும்பார்ப்பீரென்று அவளு யிரைநினைத்தற்கரிய திவ்வியதேகத்திற்சேர்த்து, எ - று. (கஷ)

விண்ணகம்போழொளிவிமானமீக்கொடு
பண்ணினைசவிஞ்சையர்பாடநாடகம்
எண்ணருமரம்பையரியற்றவேறினர்
அண்ணறன்றாதுவரவளைக்கொண்டரோ.

(இ-புனை.) ஆகாயத்தினிடத்துள்ள இருளைநீக்குகின்ற ஒளியையுடைய விமானத்தின்மேல் அவளை ஏற்றிக்கொண்டு, வித்தியாதரர்கள் பண்ணுடன் கூடிய இசையைப்பாடிவரவும், இத்தன்மையானதென்று மனதிலும் நினைத்தற் கரிய அழகு முதலியகுணங்களையுடைய அரம்பை முதலிய மாதர்கள் நடனஞ் செய்துவரவும், (ஆகாசமார்க்கமாகப்) போனார்கள். எ - று (சo)

இனி சக-வது பாடல்முதல் சஞ-வது பாடல்வரையில்
சிவலோகத்தின் பெருமையைச் சொல்லுகின்றது.

முக்குணவழிசெலுமுயற்சித்தீமையின்
எக்குணமுங்கடந்தின்பம்வேட்டவர்
தொக்குடனிருப்பதஞ்ஞானத்துன்னிருள்
புக்கவர்யாவரும்பொருந்தாததே.

(இ-புனை.) முக்குணங்களின்வழியே செல்லுகின்ற முயற்சியாகிய பொல் லாங்கினையுடைய எவ்விதகுணங்களையுங்கடந்து பேரின்பத்தை விரும்பினவர் கள் கூட்டமாகச்சேர்ந்திருக்கத்தக்கது, நிலைபெற்றதாகிய அஞ்ஞானஇருளிற்சேர் ந்தவர்களெல்லாரும் பொருந்தக்கூடாதது. எ - று.

முக்குணம்-சுத்துவம் இராசதம் தாமதம். (சக)

பானுமின்மினியொளிகெடுக்கும்பான்மைபோல்
வானமுச்சுடர்களுமழுங்கவெங்கணுங்
தானிமிரொளியதுசதுர்மறைத்தரு
மேனிமிர்சாகைக்கோர்வித்துமாயதே.

(இ - புனை.) சூரியன் மின்மினிப்பூச்சியின் ஒளியைக் கெடுக்குந் தன் மைபோல மேன்மைபொருந்திய முச்சுடர்களும் ஒளிமழுங்கும்படி எவ்விடத்

தம்பிரகாசிக்கும் ஒளியையுடையது; மேலுயர்ந்த சாகைகளையுடைய நான்குவே தமாகிய விருக்ஷத்துக்கு ஒருவிதையாயிருப்பது. எ-று. சாகை என்பது, வேதத் திலுட்பிரிவுக்கும் மரக்கொம்புக்கும் பிலேடை. (சஉ)

திருமறுமார்பனுங்கமலச்செல்வனும்
அருமையிற்பெறவின்பவாழ்வளிப்பதாங்
கிருமையுமிகந்தமாயையாலெழுங்
கருமமுங்கடந்துநின்றருள்களிப்பதே.

(இ-புணர்.) திருமாலும் பிரமதேவனும் அருமையாகப் பெற்றுக்கொள்ளப் பேரின்பவாழ்வையளிப்பது; இவ்வுலகவாழ்வினல்வருந் சுகதுக்கங்களையும் சுவர்க்கபோகத்தினல்வருஞ் சுகதுக்கங்களையும், தன்னிடத்திலில்லாமல் இயல்பாகவே நீங்கியிருப்பது; மாயையினல் உண்டாகிறகருமங்களையும் இயல்பாக நீங்கி எக்காலத்தும் அழிவின்றித் திருவருட்களிப்படைந்திருக்கின்றது. எ-று. ஆங்கு-அசை. ஸ்ரீவத்ஸமென்னும் மறு உண்மையின் திருமறுமார்ப னென்றார். (சஎ)

வேறு.

விஞ்ஞையரியக்கர்சித்தர்விண்ணவர்முனிவர்முத்தர்
வஞ்சிநுண்ணுசுப்பிற்றெய்வமடந்தையரமுதகானம்
பஞ்சமத்தியற்றும்வீணைநாரதர்முகலோர்பாங்கின்
அஞ்சலித்துவக்கும்வேதத்தந்தமுமஃதேயாமால்.

(இ-புணர்.) வித்தியாதரர்களும் யக்ஷர்களும் சித்தர்களும் தேவர்களும் முனிவர்களும் முத்திபெற்றவர்களும் பூங்கொடிபோல நுண்மையாகிய இடையினையுடைய அரம்பாஸ்திரீகளும் அமுதம்போலமதுரத்தைத்தருகின்ற இசைப் பாடலைப் பஞ்சமம் என்னும் சுருதியில்வாசிக்கும் வீணையையுடைய நாரதர் முதலாகியவர்களும் உரிமையுடன் நமஸ்கரித்துச் சந்தோஷிக்கும்படியான வேதத் தின் முடிவும் அதுவேயாம். எ-று. (சக)

எம்மையாளுடையமாதுமிளம்பிறையமுதங்காலச்
செம்மையார்பவளவேணிச்செம்மலுமெடுத்ததாளச்
சும்மையானந்தநானகடனத்தின்சுவைகனிந்த
திம்மையினெம்மனோர்க்புகல்வதோவீசலோகம்.

(இ-புணர்.) எங்களை அடிமையாகவுடைய பார்வதிதேவியார் திருக்கரங்களில்எடுத்துத்தாக்கும் தாளத்திலுண்டாகின்ற நாதத்தின் மதுரமும், இளந்திங்களானது அமுதகிரணமாகிய வெண்ணிலவைப் பொழிந்துகொண்டிருக்கச் செம்மைநிறம் பொருந்திய பவளம்போன்ற சடைமுடியினையுடைய பரமசிவம் தாண்டவஞ்செய்கின்ற ஆனந்த நடனமதுரமும், முதிர்ந்திருக்கின்றது. (ஆதலால்) இத்தப்பிறப்பினையுடைய எம்போல்பவர்களால் புகழ்ந்து சொல்

லத்தக்கதோ? சிவலோகமானது. எ-று. பார்வதியார் தானத்தட்டப் பரமசிவம் தாண்டவஞ் செய்தது சங்காரகாலத்தில். சும்மை-ஈதம். (அடு)

அன்னதன்மைத்தாயென்றுமடைந்தவர்மீள்கலாத
நன்னெறியுடைத்தாயார்க்குநணுகருஞ்சிவலோகத்திற்
பன்னகமவுனியாணுப்பாலையுமுவந்துகாணப்
பொன்னெளிவிமானத்தோடும்பூவையைச்சேர்த்தினரோ.

(இ-புணை.) அப்படிக்கொத்த தன்மையையுடையதாகியும், தன்னிடத்தில் அடைந்தவர்கள் எக்காலத்தும் நீங்காத நல்லமுறைமையையுடையதாகியும், யாவர்க்கும்பொருந்துதற்கரியதுமாகிய சிவலோகத்தில், பாம்பணிந்த சடாமகுடத்தையுடைய கயிலாயபதியும் (அவரிடப்பாகத்திலிருக்கும்) உமாதேவியாரும் திருவுளத்தில்மகிழ்கூர்ந்து நோக்கும்படிப் பொன்னெளிபையுடைய விமானத்தோடும் அப்புலமாதினைச் சேர்த்தார்கள். எ-று. (அசு)

அருந்தவமன்னகோளாயவணிலையிற்றூரீயும்
வருந்தல்கோகன்னமென்னும்வளநகர்மருவியீசன்
திருந்துபூசனைபுரிந்துசிவதிசித்தயிலகீக்கி
யிருந்துபைந்தளிர்வில்லத்தாலருச்சிகின்னின்னணீங்கும்.

(இ-புணை.) அருமையாகிய தவஞ்செய்த மன்னவனேகேட்பாயாக; அந்தப் புலைச்சியினிலைமை யிந்நன்மையது; நீயும்வருந்த வேண்டுவதில்லை; கோகன்னமென்கிற வளப்பம்பொருந்திய தலத்திற்சேர்ந்து, கம்மினைவணங்கிய மாபலவிலிங்கேசன் ஏற்றுக்கொள்ளத்தக்க பூசையினைச் சிவராத்திரியிற்செய்து, நித்தினை நீங்கியிருந்து, பசுமை நிறமுள்ள வில்வத்தளிரினால் அருச்சனை செய்வாயாக; அங்ஙனம் செய்யில் உன்னுடைய துன்பம் நீங்கும். எ-று. பில்வத்தின் திரிபு வில்வம். (அள)

என்றுவீறுயர்கோகன்னமான்மியமியம்பிக்
கொன்றைமாலையணிந்தபரமசிவனுடைய சிவராத்திரி விரதமான்மியமுஞ்சொல்லி, வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய மனுவைவையொந்த அரசனுக்கு உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டுக் கோதமரானவர் அவ்விடம்விட்டுச்சென்று காவலிலக்கொண்ட அழகியமிதிலைப்பட்டணத்துக்குப் போனர். எ-று.

ஓகைவாரிதிபடிந்தகமகிழ்ந்துவேலுரவோன்
மூகவார்பொழிற்கோகன்னமாகர்பொருந்தி

மாகமாமதிச்சிவங்சிவான்மூறைறோற்றுச்
சோகமேதருபழவினைமுழுவதுந்தொலைத்தான்.

(இ-புனை.) கவுதமர்போனபின்பு வேலாயுதத்தையுடைய திண்மைவாய்ந்த அவ்வரசனுனவன் ஆகந்தசாகரத்தில் மூழ்கி அகமகிழ்ந்து, கழுகமர முதலாகிய விருகூஷங்கள் நெருங்கி நீண்டசோலைகள்சூழ்ந்த வளப்பம்பொருந்திய கோகன்னமென்னுந் தலத்திற்போய்ச்சேர்ந்து, பெருமைதங்கிய மாசிடாதச் சிவராத்திரியில் முறைமைப்படி விரதமனுஷ்டித்து, ருஷிபுத்திரனைக்கொன்ற பாதகத்தை நீக்கியதுமல்லாமல், முன்செனனங்களிற்செய்த சோகத்தையே தருகின்ற வினைகளெல்லாமும் நீக்கினன், எ-று. பூகம் கழுகம்-பாக்குமரம் (சகு)

மூன்றுவது

சிவராத்திரியிற்கன்மாடபாதராசன்முத்திபெற்றஅத்தியாயம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ஈஎக.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

சிவராத்திரியில்விமரிசன்முத்திபெற்ற அத்தியாயம்.

கருமணியனையகண்டன்கதையினையிவ்வாறென்று
தெருளுறச்சூதன்சொன்னனென்றெளிந்தனர்கேட்டுப்பின்னும்
வருகதைபுகறியென்னமுனிவர்வழங்கலோடும்.

(இ - புனை.) கீலாத்தினம்போன்ற கண்டத்தையுடைய மகாபலவிலிங்கநாதன் சரித்திரமாகிய சிவராத்திரிமான்மியம் இட்முறைமையையுடையதென்று தெளிவுறும்படிச் சூதமுனிவர் சொன்னார். அதை கைமிசாரணிய முனிவர்கள் கேட்டுத்தெளிந்தவர்களாய்ப் பின்னும், முனிவரே! எங்களிருவினைகளும் நீங்கும்படிப் பரமசிவனுடைய கிருபையைப் பெறத்தக்கதாக கடந்திருக்குஞ் சரித்திரங்களைச்சொல்லவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ளவும் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ - று. (க)

சிவநிசியளவையுமன்பர்செய்கையு
நவலருந்தகையவாமெனுநுவன்றனம்
புவனியிலான்றிருப்பூசைகண்டொரு
தவமிலான்பெற்றமைசாற்றுவாமரோ.

(இ-புணர்.) சிவராத்திரி மான்மியமும் அத்தவிரதம் அனுஷ்டித்தஅடியார்கள் செய்கையுஞ் சொல்லுதற்கரிய பெருமையை யுடையனவாயிருந்தாலும், தெரிந்தமட்டில் சொன்னேம்; இனி இந்தவுலகத்தில் பரமசிவனது சிவராத்திரி பூசையைக்கண்டு தவமில்லாதவனாகிய ஒருவன் அடைந்த கற்கதித்தன்மையைச் சொல்லுகிறோம். எ - று. அரோ-அசை. (உ)

பாரிடைக்கிராதர்தம்பதிக்குநாயகன்
பேரிகல்விமரிசனென்னும்பெற்றியோன்
சோரிவேற்றுஞனையான்றுரகத்தேரினன்
மாரியினிருநிதிவழங்கும்வண்கையான்.

(இ-புணர்.) இவ்வுலகத்திலிருக்கும் வேடருக்கு நாயகனாயிருப்பவன்; மிகுந்தவலியையுடைய விமரிசனென்னும் பெயரையுடையவன்; பகைவர் உதிரக்கறைதோய்ந்த வேலேந்துஞ்சேனையை உடையவன்; குதிரைகட்டிய தேரையுடையவன்; இரப்பவர்க்கு மேகம்போல மிகுந்த திரவியங்களைச் சொரியும் வளப்பம் பொருந்திய கையையுடையவன். எ - று. (இன்னும் எத்தன்மையுள்ளவனென்றால்,) சோரி - உதிரம். (ஊ)

தீதறுதசைவனாவின்றித்தின்பதாற்
கோதறுவேட்டையிற்புரிந்தகொள்கையான்
வேதியர்மகளிரேமுதலவெம்புலை
மாதரீறனுதினமருவும்வேட்கையான்.

(இ-புணர்.) குற்றம்பொருந்திய மாமிசங்களை அளவில்லாமல் தின்பதினால், பழுதுபடாத வேட்டையில் விருப்பங்கொண்ட செய்கையை யுடையவன்; (இதுவுமல்லாமல்) பிராமண ஸ்திரீகள்முதல் கொடிய சண்டாளஸ்திரீகளிறுதியாகச் சொல்லப்பட்ட (எல்லாச்சாதி ஸ்திரீகளையும்) கால்தோறும் புணருகின்ற ஆசையையுடையவன். எ - று. வரைவு - அளவு. (எ)

ஏழிரண்டாந்திதியெதிர்ந்தஞான்றலான்
சூழியங்கடகரியுரித்ததான்றலை
வாழியவெனவிசேடித்தமாட்சியாற்
பாழியம்புயத்தவன்பூசைபண்ணுவான்.

(இ - புணை.) பலம்பொருந்திய அவ்வேடவரசன் மேற்கூறிய கொடிய செய்கையை யுடையனையிருந்தாலும், சதுர்த்தசிவருகின்ற காளிலெல்லாம் முக படாங்கட்டத்தக்கதாகிய கபோலமதத்தையுடைய யானையையுரித்த பரமசிவனை (சங்கரவாழ்க சம்புவாழ்க சதாசிவவாழ்க என்று சிவநாமங்களை யெடுத்துத்) தோத்திரஞ்செய்து மாட்சிமையுடன் பூசைசெய்வான். எ - று.

சூழி-யானைமுகபடாம் ; கடம்-மதம்; பாழியம் என்பதில் அம் சாரியை ; மாட்சியாற் பூசைசெய்தலாவது பூசாத்திரவிய முதலாகிய உபகரணங்களிற் குறைவில்லாமற் செய்தல். (இ)

பூசனையிறுதியிற்புளகமீக்கொள
ஈசனையேத்துநின்றுமேழிசை
மாசறப்பாடும்பின்வணங்குமற்றவ
னேசமித்துணையெனநிசழ்த்தற்பாலதோ.

(இ - புணை.) இவ்வாறுசெய்யும் பூசையின்முடிவில் உடலில் புளகமுண்டாம்படி பரமசிவனைத் தோத்திரஞ்செய்வான் ; நின்றுகொண்டு (பரதசாஸ்திரத்தின்கிரமப்படி) கிருத்தஞ்செய்வான்;சத்தசுரங்களும் வழுவாமல் கீதங்கள் பாடுவான்; பின்பு (அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன்) பணிகுவான்; அவனுடைய சிவநேசமிவ்வளவென்று அளவிட்டுச்சொல்லும் பான்மையையுடையதன்று. எ-று.

ஏழிசையாவன;— சட்சமம் ரிஷபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்பவைகள்; இவற்றின் முதலெழுத்துக்களால் ச ரி க ம ப த நி என்றும் கூறுவர். (சு)

இன்னணம்புரிந்தவனிறைமைபூண்டுதன்
செங்கெறிச்செய்யகோறிசைகண்மீச்செல
நன்னெறியாவருநடப்பநன்கிலாப்
புன்னெறிதுரந்தறம்புரக்குநாளினே.

(ஐ - புணை.) இம்முறைமையாகப் பூசைசெய்கின்றவன் அரசாட்சிசெய்யுந்தன்மையினையு முடையவனுய்ச் செவ்வையான முறைமையை நடத்துகின்ற தன்செங்கோலானது திக்குகளெங்குஞ் செல்லவும், எல்லாரும் தனதுநன்மார்க்கத்தில் நடக்கவும், நன்மையில்லாத நீயநெறிகளை யெல்லாம் நீக்கித் தருமத்தைப்பாதுகாக்கும் நாளில். எ - று. செங்கோல்-அரசநீதி; புரத்தல்-காத்தல். (எ)

வேறு.

ஆண்டகைகுமுதவதியெனுமனைவியவனடிதொழுதிகல்வேலோய்
காண்டகுவனப்பினீதியிற்றவத்திற்கல்வியினறிவினேரில்லாய்
சேண்டருபிறையான்பூசனைவழாதுசெய்யுநீதிவினைக்கிடமாய்ப்
பூண்டவுனருந்திறனியிலாமடவார்போகமேதுகர்வதுபுகலே.

(இ - புணை.) யாதொன்றினுக்கும் அஞ்சாத வீரத்தன்மையையுடைய அவ் வரசன் மனைவியாகிய குமுதவதி யென்பவள் (ஒருகாள்) தன்கணவன்பாதத்தை த்தொழுது, பகைவனைப் பகைக்கும் வேற்படையும் யாவரும் (வியப்புடன்) பார்க்கத்தக்க கட்டழகும் நீதியும் தவமும் கல்வியும் அறிவும் மிக்குடைத் தாய் ஒப்பில்லாத என் நாயகரே! (தேய்வதும் வளர்வதுமில்லாமல்) எக்காலமும் ஒரேதன்மையாயிரானின்ற இளந்திங்களை யணிந்திருக்கும் சந்திரசேகரனுடைய பரமசிவனுடைய பூசையை ஆகமவிதிப்படி செய்கின்றநீர் பாவத்துக்கிடமாய்ப் பொருந்திய மாமிசங்களைத்தின்று, முறைமையில்லாமல் ஸ்திரீகள் போகங்களை யே அனுபவிக்கின்றது (என்னகாரணம்) அடியாளுக்குச் சொல்லவேண்டுமென்ற னள். எ - று. (அ)

என்றவளுரைத்தவாசகங்கேளாவிறைமகன்குறுநகைகோட்டிக்
குன்றெனவுயர்ந்தகுவிமுலைமடவாய்கூறுவல்கேட்டிநீயென்ன
முன்றவப்பயனுலிறந்ததுநிகழ்வுமுன்வருங்காலமுமுணர்ந்தேன்
அன்றுமுற்பவத்தோர்ஞமலியாய்ப்பம்பையணிநகரதனின்வந்துதித்தேன்

(இ - புணை.) (இப்படிக்கொத்த பாவ கிருத்தியங்களைச் செய்வதற்குக் கார ணமென்ன) சொல்லுமென்று தன்மனைவிசொன்ன வார்த்தையைக்கேட்டு அவ்வரசன் புன்னகைசெய்து, பொன்மலைபோல் உயர்ந்து குவிந்த ஸ்தனங்களை யுடையபெண்ணே! நான்சொல்லுவது கேட்பாயாக; பூர்வஞ்செய்த தவப்பயனால் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் அறிந்தேன்; முற்பிறப்பில் நான் ஒருநாயாய்ப்பிறந்து அழகுள்ளதாகிய பம்பைநகரத்தில்வாசமாயிருந்தேன்.எ-று.

கேளா செய்யா என்னும் வாய்பாட்டுவினைபெச்சம். நுமலி-நாய். (ஈ)

மாலயன்காணவடிமுடிக்குரிசின்மதியணிபம்பைநாயகன்றன்
ஆலயங்குறுகிப் பலிக்கிடமடிசிலருந்துவான்புகுந்திடுமளவிற்
காலவன்றூதரிவனைக்கண்டோர்கல்லிஞற்கையினற்றுரப்ப [ன்.
ஓலமிடுவெருவியாலயம்வலங்கொண்டோடினேனுயிர்பிழைத்துய்வா

(இ - புணை.) (பம்பைநகரத்தில் வாசமாயிருக்கும்போது) விஷ்ணு பன்றி யுருவங்கொண்டு பாதாளத்தைப் பிளந்துகொண்டுபோய்த் தேடியுங்காணப்படாத திருவடிகளையும், பிரமன் (அன்னமாக உருவங்கொண்டு பறந்துமேலுலகம்போய்த் தேடியுங்காணாத) திருமுடியையுமுடைய இறைவனும் சந்திரசேகருமான பம் பையென்னுந்தலத்தில் வீற்றிராநின்ற பரமசிவனது ஆலயத்திற்சேர்ந்து, பலிக் காக வைக்கும் அன்னத்தை உண்ணச் சென்றகாலத்தில், யமனுடை தூதரிவர்க ளென்றுசொல்லும்படி என்னைக்கண்டவர்கள் கல்லினாலும் தடியினாலும் அடித் துத்துரத்த நான்பயந்து குனாத்துக்கொண்டு உயிர்தப்பிப்பிழைக்க அந்த ஆலய த்தை வலமாகச்சுற்றிக்கொண் டோடினேன், எ - று, ஓல் - ஓலம். (கo)

சினகரமொருவிப்போகுவான்வழிகணேடினேன் கண்டிலேன்றினைகத்
மனவலியினோத்தும்பலிசொரிபிடமருங்குநின்றீசனேகோக்க [தேன்
அனகனுக்கன்றசிவனிசியாகவருஞ்சுடர்த்தீபமோடெடுத்தல் [தேன்.
வினையறக்கண்டேன்கண்டெழியொருவன்வெஞ்சரத்தாலும்வினிக்

(இ - புணை.) (ஓடியதான்) அந்த ஆலயத்தை நீங்கிப்போவதற்கு வழிகள் தேடிக்காணுமல் திகைத்து, மனவலியும் இனைத்துப் பலிபோடுகினற பீடத்தின் அருகில்நின்று சிவலிங்கப்பெருமானைப் பார்த்தேன்; அன்றுசிவராத்திரி யாதலினல் நிர்மலனுகிய அந்தச்சிவலிங்கப்பெருமானுக்கு (யாவரும் தரிசனஞ்செய்யக்) கிடைப்பதற்கரிய சுடரினையுடைய தீபாராதனை முதல் சில ஆராதனை செய்வதை என்பாவங்களெல்லாம் நீங்கும்படிக்கண்டேன். அப்படிக்கண்டவளவில் (ஒருவன் வில்லவனைத்து) கொடியபாணத்தை பிரயோகஞ்செய்ய (அதனைன்மேல்தைத்தவு டன்) இறந்தேன். எ - று. அனகன் - பாவமற்றவன்; அகம்-பாவம் மலம். ()

அருஞ்சுடர்த்தீபமெடுத்தபூசனையினமலனைமாலையம்போது
விரிஞ்சனுங்காணுமணிமுடிதமியேன்விளிந்திடும்வேலைகண்டதனுற்
பரஞ்சுடர்கோயில்வலங்கொளப்புகுந்தபண்பினுற்பாரினிற்பகைஞ
ருரஞ்சுடுகெடுவேலிறைவனுயுதித்தேன்காலமூன்றினையுமுற்றுணர்ந்தேன்.

(இ - புணை.) அந்திப்பொழுது (செய்யுஞ் சோடசோபசாரங்களில் ஒன்று கிய) அரியசுடர்த்தீபமேந்திய பூசாகாலத்தில் பிரமனுலுங்காணப்படாத அப்பர மபதியினுடைய திருமுடியைத் தமியேனுகிய நான் இறக்குஞ்சமயத்தில் தரிசித் தலினுலும், அந்தப்பரஞ்சுடர் வீற்றிருக்கும் ஆலயத்தைப் பிரதக்ஷணம் வந்த தன்மையினுலும், இந்தவுலகத்தில் பகைவருடைய மார்பைச் சுடத்தக்க நெடியவேலாயுதத்தையுடைய அரசனுகப்பிறந்தேன். (அவ்வாறு பிறந்தநிலும்) திரிகாலங்களையும் அறிந்தவனுனேன். எ - று. (கஉ)

ஆதலானிந்தநல்வினைப்பலத்தையளித்ததுசிவனிசியென்னு
மாதராயின்றும்வருமதிதோறும்வளர்பிறைதேய்பிறையிரண்டிற்
போதுமப்பக்கமேழிரண்டெய்திற்பொருந்துமச்சிவனிசிபோல
மேதகுபூசையனுதினந்தன்னின்விசேடமாய்வழிபடுகின்றேன்.

(இ-புணை.) ஆதலால் பெண்ணே! சிவராத்திரியானது (உலகத்தில் இழிவு ள்ள செந்துவாகிய நாயாகப் பிறந்திருந்த எனக்கும் இப்படிக்கொத்த அரசபோக த்தை அனுபவிக்கத்தக்க, நல்வினைப்பயனைக் கொடுத்ததென்றுட்கொண்டு,இந்தப் பிறப்பிலும் மாதமாதம் வருகின்ற பூர்வபக்ஷம் அபரபக்ஷம் என்னுமிரண்டு பக்ஷங்களிலும் பதிஞன்காம் திதியாகிய சதுர்த்தசியில் மாசிமாதத்தில் பொ ருந்துகின்ற அம்மகாசிவராத்திரியில் பூசைசெய்வதுபோலவே மேன்மை பொருந்திய சிவபூசனை நித்யத்திலும்விசேஷமாகச் செய்துவருகின்றேன், எ-று.

இன்னணம்புரியும்பூசையிற்றீமையகற்றுமோவெனவினவுதியேன்

செந்நிறப்பொறித்தீதுழைந்தரீரூக்குஞ்செய்கைபோற்பவமெலாந்தீர்க்கும்
அன்னதானீயுமரணடிக்கமலத்தருச்சனைபுரிதியாரணங்கே.

(இ-ரை.) தெய்வப்பெண்ணை யொத்தவளே! இவ்விதமாகச்செய்யும் பூசையினல் பாபங்கள் நீங்குமோ? என்று கேட்டையாகில், சொல்லுகிறேன் கேட்டாய்; தேவர்களுக்கெல்லாம் இறைவனும், ஸ்ரீகயிலாசத்தில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டிய வரங்களை ஈவோனுமாகிய சாம்பசிவமூர்த்தியை ஒருதரம் தோத்திரஞ்செய்தால், மலைபோலப் போரிட்ட விறகுகளைச் செம்மை நிறமுடைய தீப்பொறியானது நுழைந்து சாம்பராக்கிவிடுந் தன்மைபோலப் பாபங்களையெல்லாம் நீக்கிவிடும். ஆகையால், நீயும் பரமசிவனுடைய திருவடித் தாமரைகளை அருச்சனைசெய்யக்கடவாய். எ-று. இந்தனம்-விறகு. (கச)

என்றதுகேட்டதுடியிடைமடவாளினிலாழுறுவண்முன்றோன்ற
மன்பதையுள்ளுங்காலமூன்றுணரவல்லியேலெனக்குமுற்பிறப்பின்
வன்புறுதோற்றமுழுதுரையென்னமல்லிகார்ச்சுனவான்மன்னி
யின்புறுகோயிற்புறவதாயுதித்தாங்கிருந்தநீயிரைகவர்ந்துண்பான்.

(இ-ரை.) இவ்வாறு தன்கணவன் சொன்னவார்த்தையைக்கேட்ட தமருகம்போன்ற இடையினையுடைய அம்மாதானவள் சந்திரனது இளங்கதிர் போற்புன்சிரிப்புவிளங்க, நீர் மனிதர்கள் நினைக்கும் திரிகாலங்களையும் அறியமாட்டுவீராதலால், எனக்கு முன்பிறப்பில் என்ன சென்மம் நேரிட்டிருந்ததோ? அந்தச்சென்மத்தையும் அதில் நடந்த செய்திகள் யாவையும் சொல்லுமென்று விளவ, மல்லிகார்ச்சுனேஸ்வரர் அன்புடன் வீற்றிராநின்ற கோயிற்புறவாகப் பிறந்து, அவ்விடத்திலிருந்த நீ ஒருகால் இரைதேடியுண்ணுவதற்காக. எ-று. துடியிடை-உடுக்கைபோன்ற இடை. மன்பதை-மனிதர். (கஞ)

செந்நிறத்தசையொன்றெடுத்தரீவாலுஞ்சினவிழியெருவைவவ்வணுகி
யன்னதுவவ்வித்திற்கவர்வனென்றுன்னையழன்றுபின்னுடர்த்தலும்வெரு
விப், பொன்னெடுங்கோயில்வலங்கொடுபெறந்தபொருவிடைக்கொடி
நெடுங்கம்பத், தன்னுபுகரந்தங்கொதுங்கிநீயிருப்பத்தொடர்ந்தவக்கங்
கழுங்கண்டே.

(இ-ரை.) செம்மை நிறத்தையுடைய ஒரு மாமிசத்துண்டினை நீ யெடுத்துக்கொண்டு வரும்போது, கோபத்தால் சிவந்தகண்களையுடைய ஒரு பருந்து வந்துசேர்ந்து, அந்த மாமிசத்தைக் கிரகித்துக்கொள்ளுவனென்று கோபித்து உன்னைப்பின் தொடரவே நீ பயந்து, பொன்னாற்செய்யப்பட்ட அந்தப் பெரிய கோயிலைப் பிரதக்ஷிணமாகப் பறந்துபோய்ப் போர் செய்யத்தக்க ரூபக்கொடி கட்டும் பெரிய கம்பத்தில் தங்கி, மறைந்தொருபக்கத்திலிருக்க; அப்படிமறை

ந்திருந்தும் உன்னைத்தொடர்ந்துவந்த பருந்தும் உன்னைக்கண்டு. எ-று. எருவை கங்கம்-பருந்து. (கசு)

சூழிமால்கரியின்மேற்பட்டியிற்கூர்ந்ததுண்டவெம்படையினற்கொத்தி
வாழியவுன்னையுயிர்செகுத்தந்தவன்றனைசகழுகுகொண்மேடக
வீழுநீயிசன்சன்னிதிப்பட்டுவிளிதலான்முன்வலஞ்செயலால்
ஆழிநீருடுத்ததராபதிமகளாயவதரித்தெம்மையுமடைந்தாய்.

(இ-புனை.) அப்படிக் கண்ட பருந்தானது முகபடாங்கட்டிய யானையைக் கொத்துகிற அங்குசத்தைப்போலக் கூர்மையுள்ள தன் அலகாகியவெவ்விய ஆயுதத்தினல் உன்னைக்கொத்தி உயிரைக்கொன்று, (நீ கொண்டுவந்த கொழுத்த) அத்தவலிய மாமிசத்தைக் கவர்ந்துகொண்டு போய்விட; துசஸ்தம்பத்திலிருந்து விழுகின்ற நீ சிவசன்னிதிக்கெதிரில் விழுந்து இறந்ததினலும், முன்னே பிரதக்ஷினஞ் செய்தலினலும், சமுத்திரஞ்சூழ்ந்த பூமிக்கிறைவனுகிய அரசன் புத்திரியாகப் பிறந்து என்னையும் விவாகஞ்செய்து கொண்டாய். எ-று, வாழிய என்பது முன்னிலையசை. (கஎ)

வேறு.

இவ்வாறுகொற்றமுடிமன்னனிறத்தலோடுஞ்
செவ்வாய்மழலைக்கிளியன்னவள்செப்பலுற்றுள்
ஒவ்வாதவும்மையுடனிம்மையுமுற்றுணர்ந்தேன்
எவ்வாறினிமேலிருவோருமுறுப்பதென்றுள்.

(இ-புனை.) வெற்றியுள்ள மகுடவர்த்தனனுகிய அரசன் இப்படிச் சொன்னவுடன் சிவந்தவாயையும் மழலைச் சொல்லையுமுடைய கிளியொத்தவள் சொல்லுகின்றுள்; ஒவ்வாததாகிய முற்பிறப்பும் இப்பிறப்பும் நன்றுக அறிந்துகொண்டேன், இனிமேல் நாமிருவரும் எவ்விதப்பிறப்பாகச் சென்றிப்போமென்றுள். எ-று. முன்பிறப்பின் றன்மை மிருகமாகவும் பக்ஷியாகவும் சேரிட்டமையின் ஒவ்வாத வும்மையெனப்பட்டது. இறுத்தல்-சொல்லல்; உம்மை-முற்பிறப்பு. (கஅ)

கேளாயிரண்டாம்பவத்தன்மைகிளத்துவன்யான்
வாளார்விழியாய்புகழ்ச்சிந்துரன்னாட்டுவந்து
தாளார்கழன்மாமுடிமன்னவர்தாழ்ந்திறைஞ்சுஞ்
தோளாடல்வேந்தாயரசாள்வனித்தொல்லைஞாலம்.

(இ-புனை.) வாளொத்த கண்களையுடைய பெண்ணே! இனிவரும் இரண்டாம்பிறப்பின் தன்மையை நான் சொல்லுகிறேன் கேட்பாய்; புகழ்தங்கிய நல்ல சிந்து தேசத்தில் பிறந்து வீரகண்டைகட்டிய காலையும் பெரிய கிரீடம் அணிந்த முடியையுமுடைய அரசர்கள் தாழ்ந்து வணங்கும்படியான வெற்றிபொருந்திய தோள்வலியையுடைய மன்னவனுகிப் பழையதாகிய இத்தப்பூமியை என்னுக்கி னைக்குட்படுத்தி அரசாட்சிசெய்வேன். எ - று. (கக)

செல்லார்கறும்பூங்குழற்காமருசெல்வியீயு
மல்லார்புயன்றருசயன்றந்தமடந்தையாகித்
தொல்லாரணத்தின்முறையேதாடைசூட்டியெற்கே
யில்லாகிமுல்லைவடமீனினையத்துவாழ்வை.

(இ-புணை.) நீருண்டமேகம்போற் கறுத்து வாசனைதங்கிய பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய அழகிய பெண்ணே! நீயோவென்றால், பலம்பொருந்திய தோளையுடைய தஞ்சயனென்னும் அரசன் புத்திரியாகிப் பழைய வேத விதிப்படி யெனக்கே மணமாலைசூட்டி மனைவியாகி, கற்பிற்சிறந்த அருந்ததி போல வாழ்குவை. எ-று. முல்லை - கற்பு. வடமீன் - அருந்ததி. (உ0)

வேறு.

பாசிழைப்பரவையல்குற்பனிமொழியணங்குகேளா
யாசின்மூன்றும்பவத்திலணிசவுராட்டிநாட்டில்
வாசவன்றிருவின்மிக்கமன்னனுய்த்தோன்றியந்தக்
காசினிமுழுதுய்யானேபொதுவறக்காவல்பூண்பேன்.

(இ-புணை.) பைம்பொன்னற் செய்யப்பட்ட மேகலாபரணம் அணியும் பரந்த அல்குலையும், குளிர்ச்சிதங்கிய வசனத்தையுமுடைய பெண்ணே! கேட்பாயாக; குற்றமில்லாத மூன்றும்பிறப்பில் அழகிய சவுராட்டிரநாட்டில் இந்திர செல்வத்தினுமிக்க செல்வமுள்ள மன்னவனுய்ப்பிறந்து, அந்தத் தேச முழுவதும் பொதுவின்றி நானே அரசு செய்வேன். எ-று. (உக)

கொங்குடைந்தொழுகும்பைந்தார்க்குவிமுலையணங்கேகேளா
யங்குல்கண்டடுக்குந்தண்காவளந்திகழ்கலிங்கநாட்டிற்
செங்கைவேற்கலிங்கர்கோமான்றிருமகளாகத்தோன்றி
யங்கெனக்குரிமையாகிவைகுவையளப்பில்காலம்.

(இ-புணை.) முருக்குடைந்து தேனொழுகாநின்ற பசிய பூமாலையணிந்ததனங்களையுடைய பெண்ணே! நீயும் மேகம் கண்வளரும்படி (உயர்வாகிக்) குளிர்ச்சிபொருந்திய சோலைகள்சூழ்ந்த வளப்பமிருந்த கலிங்கதேசத்தில் வேலேந்திய செங்கையையுடைய கலிங்கராசன் திருமகளாய்ப்பிறந்து, அந்தச் சென்மத்திலும் எனக்குரிமையுள்ள மனைவியாகி, அளவில்லாதகாலம் வாழ்ந்து கொண்டிருப்பை. எ-று. மேகம் கண்வளர்தலாவது - நீங்காமல் சூழ்ந்து கொண்டிருத்தல். (உஉ)

குழலினிற்பாகிற்றேனிற்குயிலினிலமிழ்திற்றேரூய்ந்த
மழலையஞ்சொல்லாய்காலாம்பவத்தினின்மணிசெய்மாட

நிழலிருள்சிக்குஞ்செவ்விநிறைந்தகாந்தாரநாட்டிற்
கழல்புனைதுணைத்தாள்வைவீவனிறைவனுபுலகங்காப்பீடன்.

(இ-புனை) (அந்த மூன்றும்பிறப்பு நீங்கினபின்பு) வேய்ங்குழலினிசை யிடத்தும் வெல்லப்பாகினிடத்தும் தேனினிடத்தும் குயிலோசையினிடத்தும் தேவாமிர்தத்தினிடத்தும் தோய்ந்ததுபோல மிகுந்த மதுரம்பொருந்திய மழலைச்சொல்லே யுடையவளே! நாலாவது பிறப்பில் யான் அரதனங்கள் பதித்திருக்கும் மாளிகைகளின் ஒளியானது இருளைக்கெடுக்கும்படியான அழகுநிறைந்த காந்தாரதேசத்தில் வீரகண்டையணிபுங் கால்களையுடைய கூர்மைபொருந்திய வேலாயுதமேந்தும் அரசனுகிப் பூலோகத்தை ரகூஷிப்பேன் எ - று.

வை - கூர்மை. (உக)

நஞ்சினிலமிழ்திற்றோய்ந்துலந்திகழ்கெடியவாட்கண்
வஞ்சிநுண்ணிடையாய்நீயுமகதர்கோன்மகளாய்த்தோன்றி
யஞ்சனக்கடல்சூழ்வையமளிக்குமென்மனைவியாகிப்
பஞ்சின்மெல்லடியார்போற்றப்பரிவுடன்வாழ்வைமாதோ.

(இ-புனை) விஷத்திலும் அமிர்தத்திலும் தோய்ந்து அழகுடன் விளங்குகின்ற நெடியவாள்போன்ற கண்களையும், பூங்கொடிபோன்ற இடையினையுமுடையவளே! நீயும் மகததேசாதிபதி மகளாய்ப்பிறந்து, கருமைநிறமுள்ள கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை இரகூஷிக்கும் என்மனைவியாகி, பஞ்சினைப்போல மிருதுவாகியபாதங்களையுடைய மாதர்கள்போற்றப் பரிவுடன்வாழ்குவை. எ-று.

ஆடவருக்குப் பொதுப்பார்வையால் வருத்தத்தையும், சிறப்புப்பார்வையால் இன்பத்தையும் தருதலின், நஞ்சிலும் அமிழ்திலும் தோய்ந்த கண்களென்றார். (உச)

வேறு.

பண்ணியன்மகரவீணையுங்குழலும்பழுத்தமுதளவியகுதலைப்
பெண்ணணங்கைகந்தாம்பிறப்பினிலவந்திப்பெயருடைப்பெரியநாடளிக்கும்
அண்ணலஞ்செங்கோலரசன்யாணுகவருவனீதசாருகன்மகளாய்
மண்ணியவிழவில்மாலையென்புயத்தில்வனமுகுவைமணந்தினிதிருப்போம்

(இ-புனை.) (அந்தநாலாம்பிறப்பு நீங்கினபின்பு) முழங்குஇசைபாடு மியல்பினையுடைய மகரவீணையைப் போலவும் வேய்ங்குழலைப்போலவும் மதுரமுதிர்ந்து, தேவாமிர்தத்தைக் கலந்ததுபோலிராநின்ற குதலைச்சொற்களையுடைய பெண்ணணங்கே! ஐந்தாம்பிறப்பில் அவந்தியென்னும்பெயருள்ள பெரியதேச

த்தையளிக்கும் பெருமைபொருந்திய அழகிய செங்கோற்செலுத்தும் அரசனுக நான்பிறப்பேன்; நீ தசாருகனென்னும் அரசன்மகனாய்ப் பிறந்து, அலங்காரஞ்செய்த கல்யாணமண்டபத்தில் என்புசங்களில் மாலைசூட்டுவை; அதற்கு மேல் நாமிருவருங்கூடி வாழ்குவோம். எ - று. வீணைகள் பெரும்பான்மை நால்வகைப்படும். அவை பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ். பேரியாழிற்கு நரம்பு (உக.) மகரயாழிற்கு (கள.) சகோடயாழிற்கு (கசு.) செங்கோட்டியாழிற்கு (எ.) (உஞ)

வெண்பா.

பேரியாழ்பின்னுமகாஞ்சகோடமுடன்
சீர்பொலியுஞ்செங்கோடுசெப்பினர்—தார்பொலிந்து
மன்னுக்திருமார்பாவண்கூடற்கோமானே
பின்னுமுளவோபிற.

ஒன்றேழிருபதுமோரோழ்மேற்பத்துடனே
நின்றபதினேறழுகேடுங்காற்—குன்றுத
நால்வகையாழிற்குநன்னரம்புசொன்முறையே
மேல்வகைநூலோர்விதி.

குழலானது மூங்கில் சந்தனம் வெண்கலம் செங்காலி கருங்காலி
என்னுமிவைகளில் ஒன்றுற் செய்யப்படுவது.

வாங்கியமூங்கிலுமாசந்தும்வெண்கலமும்
பாங்குடைச்செங்காலிகருங்காலி—பூங்குழலாய்
கண்ணனுவந்தகனைழக்கிவைகளாமென்பார்
பண்ணமைத்தநூல்வல்லோர்பார்த்து.

மூங்கிலிறற்செய்வதே உத்தமம்; இவை சிலப்பதிகாரத்திற்காண்க.

வாளெனத்துளங்கிக்குருதிதோய்வேலின்வரிபரந்தமுதொடுவிடத்தின்
கோளுறப்பிறழுகெடுங்கணுயாழுங்குலப்பிறப்பதனின்யானத்தின்
கீள்பெயர்காட்டிற்காசனுய்வருவனீயும்போயயாதிகன்னிகையாய்
காளணிவிழவினல்லணியணிந்தென்னன்மனையாகிவாழ்குவையால்.

(இ - புனை.) வாளாயுதம்போல ஒளிபொருந்தியும், பகைவருதிரந் தோயத்தக்க வேலாயுதம்போல வரிபொருந்தியும், அமுதம்போல நன்மையைத் தருவதும், விஷம்போலத் தீமையைத்தருவதுமாகப் பிரகாசிக்கும் நெடியகண் களையுடைய தாயகியே! சிரேட்டமான ஆரும்பிறப்பில் நான் அஸ்திரைபு

யினுக்கு மன்னவனுய்ப் வருவேன்; நீயும் யயாதிராசன்மகனாய்ப்பிறந்து அலங் காரஞ்செய்யும் கலியாணத்தில் கல்லமுகூர்த்தத்தில் மாங்கலியக்கூத்திரம் தரித் துக்கொண்டு எனக்கு நல்லமனைவியாய் வாழ்குவை. எ-று.

அந்த ஆரும்பிறப்பு நீங்கின் பின்பு. (உசு)

வேற்று.

வம்பைமுனித்துமுகங்கறுத்துமணிவாறுத்துமநவிழக்
கொம்பைவெகுண்டதுணைமுலையாயேழாம்பிறப்பிற்கூடற்கோ
னிம்பமணியுந்தமிழ்ப்பாண்டிநிருபன்றனக்குமகளுகி
யம்பைந்தொழிற்சகாமனிவனென்னவுலகினவதரித்தே

(இ - புணை.) கச்சினைமீறியும் முகங்கறுத்தும் அந்தக் கச்சினைச்சேர்த்து முடியப்பட்ட வாரினையறுத்தும் மதமுள்ள யானைக்கொம்பையுங் கோபித்துப் பூரித்த உபய தனங்களையுடைய நாயகியே! ஏழாம்பிறப்பில் மதுரைக்கிறைவ னுகி வேப்பம்பூமாலையணியும் தமிழ்விளங்கும்பாண்டியதேயவரசன் புத்திரனுகி ப்பஞ்சபாணங்களையும் (கருப்புவில்லையும்) ஒழித்துவந்திருக்கு மன்மதனிவனே யென்று யாவருஞ்சொல்லத்தக்க அழகுடன் வுலகத்திற்பிறந்து. எ-று.

நிம்பம் - வேம்பு. (உஎ)

பதுமவருணனெனுமெயருமபடைத்துப்பாடைக்குங்கொடைதனக்கு
முதியவெண்ணெண்கலைக்குநிகர்மொழியினிணையிலிவற்கென்ன
மதியம்வளருமபடியெனயான்வளருநாளின்மாமயினீ
நதியம்வளங்கூர்விதகவளநாட்டிற்கரசன்மகளாக.

(இ - புணை.) பதுமவர்ணன் என்கிற பெயரும்பெற்று, ஆயுதப்பயிற்சியி லும் நியாகத்திலும் பழமையாகிய அறுபத்துநாலு கலைகளிலும் இவனுக்கொப் புச் சொல்லத்துணியில் வேறொருவருமில்லை யென்னும்படி, பிறைவளருந் தன்மைபோல நான்வளருநாளில், பெருமைபொருந்தியமயில்போன்றவளே! நீ ஆற்றின் வளப்பத்தைத்தரத்தக்க விதேகநாட்டரசன் புத்திரியாக. எ - று.

நதியம் - நதி; அம் சாரியை. (உஅ)

முளரிப்பொகுட்டுவட்டவணைமுருகுகாறுமலர்க்கோயின்
விளரிக்குதலைச்செந்திருவும்விழையுமழகினுடன்பிறந்து
வளருநீயும்வசுமதியென்றொருபோர்புனைந்துவாழுநாள்
தளருமிடைநின்றிருந்தாதையமைச்சருடனேசாற்றுவான்.

(இ - புணை.) வட்ட வடிவமுள்ள பூங்கொட்டை ஆசனத்தில், வாசனை கமழ்கின்ற செந்தாமரைப் பூங்கோயிலில் வீற்றிராநின்ற இராகத்தையொத்த

குதலைச்சொல்லையுடைய மகாலட்சுமியும் (ஆண்மைத் தன்மைகொள்ளுப்படி) விரும்பத்தக்க அழகுடன்பிறந்து, வளருகின்ற நீலகுமதியென்கிற ஒப்பற்ற பெயர்பெற்று வாழும்நாளில், மெலிகின்ற (நுண்ணியதாகிய) இடையினையுடைய உன்னைப்பெற்ற சிறப்புள்ள பிதாவானவன் மந்திரிகளுடன் சொல்லுவான். எ-று. ஆடவர்கள் சவுந்தரியமுள்ள மற்றோராடவனைக்கண்டால் தாகங்கள் ஸ்திரிகளாகப்பிறந்து அந்த ஆடவர்களைச் சேரவேண்டுமென்று ஆசைகொள்வதும், மாதர்கள் அழகுள்ள மற்றொரு மாதினைக்கண்டால் அவ்வாறு எண்ணுவதும் இயல்பு. "ஆடவர் பெண்டையவாவுந் தோளினுய்" என்று கம்பர் கூறினதும் இதுபற்றியே எண்க. மேற்செய்யுளீற்றிலுள்ள மகளாக என்ற எச்சம் இச்செய்யுளில் பிறந்து என்பதைக்கொண்டு முடிந்தது. (உக)

பாலையனையமொழிக்குமங்கைப்பருவம்வந்ததுதுயோழ்தின்
மாலையணியுஞ்சுயம்வாஞ்செய்மணிமண்டபமுங்குதினைமைத்
தோலையெழுதித்திசைமன்னர்க்குய்ம்மினென்னவாங்கவருங்
காலைமணிமண்டபமியற்றித்தூதிலேலை நடத்துய்க்கார்.

(இ - புணை) (மந்திரிகளை) பாலின் மதுரத்தையொத்த சொல்லையுடைய நம்முடைய புத்திரிக்கு இப்போது மங்கைப்பருவம் வந்தது; (ஆதலால்) பூமாலைசூட்டும் சுயம்வரஞ்செய்யும்படியான அழகியமண்டபமும் வினாவாக ஏற்படுத்தி, கல்யாண வோலையெழுதி ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் அனுப்புங்களென்று சொல்ல; (அத்தவார்த்தையைக்கேட்ட) மந்திரிகள் (அவ்வரசன்சொன்ன மறுநாள்) வைகறைப்போதில் இரத்தினங்கள் பதித்த கல்யாண மண்டபம் அலங்காரஞ்செய்து, வினாவாகத் தூதர்களிடத்தில் மண வோலையும் அனுப்பினர்கள். எ - று. (உ0)

முடங்கற்பொருளாயுற்றுணர்ந்துழிந்தேரின்முடங்குளைய
மடங்கல்வருவதனைத்தமதுநிகமங்கடல்போன்மருங்குவாக்
கடங்கள்கடந்துகதி+டந்துகாடுகாடுங்கழியப்போய்த்
தடங்கொள்விதேகர்நாடையுந்தார்வேண்மன்னர்திறம்புகல்வாம்.

(இ - புணை.) அந்தக்கல்யாண வோலைவந்து சேர்ந்தவுடன் அதிலெழுதியிருக்குஞ் செய்தியை நன்றாகக்கேட்டுணர்ந்து, (தங்கள் தங்கள்) பலம்பொருந்திய தேர்களிலேறிக்கொண்டு, வளைந்த பிடரி மயிரினையுடைய சிங்கங்கள் வருதல்போலத் தங்கள் நகரத்திலிருப்பவர்களுடன் சைந்தியங்களும் கூடிக்கடல்போலவர; அருநெறிகள்கடந்தும் காலாறுகள் கடந்தும் காடுகளும் நாடுகளும் பின்னிடப்போய் விசாலமுள்ள விதேகநாட்டினை யடைகின்ற வேலாயுதமேந்தும் அரசர்கள் திறத்தினை இனிச் சொல்வாம். எ - று. (உக)

கள்ளக்கருங்கட்கடைசியர்வாண்முகம்போற்கமலங்கவின்காட்டி-
யள்ளற்பழனந்தொறுமலருமயோத்திநகரமரசாளும்
வெள்ளைக்கணிகைத்தனிச்செங்கோல்வேந்தன்வேந்தர்முடியுழுதாள்
வள்ளற்றகையாங்குருகுலத்தோர்மருமானரசர்பெருமானே.

(இ-புணை.) கள்ளத்தன்மையையுடைய கருமையாகிய கண்களுள்ள பள்ள
ஸ்திரிகளின் ஒளிபொருந்திய முகங்களைப்போலச் செந்தாமரைமலர்கள்
அழகுகாட்டிக் குழைசேற்றினையுடைய வயல்கள்தோறும் மலரும் அயோத்தி
நகரத்தில் அரசாட்சிசெய்கின்ற வெள்ளாக்குடையினையும் தனிமையான செங்
கோலையுமுடைய அரசனும், மறுதேசத்தரசர்களணிந்த மகுடங்கள்படும்படி
யான பாதத்தையும், இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாமற்கொடுக்
காநின்ற பெருமைப்பாட்டினையுடையவனும், கௌரவகுலத்தாருக்கு மருகனு
மாகிய மன்னர் மன்னவனும், எ - று. அயோத்திநகரமரசாளும் அரசர்பெரு
மான் எனக்கூட்டிமுடிக்க. மருடான் - மருகன். (நஉ)

(வேறு.)

வருகுலமகளிர்தங்கண்மனமெனத்திருத்துகோலான்
பெருகுலம்பொருததிண்டோட்பிறங்கலானிறங்கொள்வேலான்
முருகுலவாதசெங்கேழ்முண்டகமடந்தைதகேள்வன்
குருகுலத்தழையவத்தகுணசிலவயப்போர்வேந்தன்.

(இ - புணை.) தாய்மரபு தந்தைமரபு என்னும் இரண்டுமரபிலும் சந்ததி
பரம்பரையாய்க் கற்புநிலை தவறுமல் வருகின்ற குலஸ்திரீகள் மனம்போல
நீதியிற்றவறுத செங்கோலையுடையவனும், பெரிய திரண்ட கல்லுகளின் வலி
கெடச் செய்யத்தக்க மலையொத்த பலம்பொருந்திய தோளையுடையவனும்,
ஒளிபொருந்திய வேலையுடையவனும், வாசனைகொடாத செம்மைநிறமுள்ள
தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமியின் கணவனாகிய மகாவிஷ்ணுவைப்
போல ரக்ஷிக்குஞ் செய்கையுடையவனும், வளைந்த வில்லைக்கொண்டு போர்
செய்து ஜயம்பெறுகின்றவனுமாகிக் குருகுலம் பெருமைபெற்றோங்க உதித்த
அரசனும், எ - று. உலம் - திரண்டகல், உலத்தல் - கெடுதல். (நக)

மன்னவர்மகுடகோடிமணித்தொகையுழுததாளான்
கன்னவில்வயிரத்தோளான்கருணையங்கமலக்கண்ணன்
பொன்னவிர்சுணங்குபூத்தபொங்கிளமுலையினர்தம்
மின்னகுவார்விற்செங்கைகமீளிகாந்தாரவேந்தன்

(இ-புணை.) அரசர்களுடைய மகுடங்களில் பதித்திருக்கும் ரத்தினங்கள்
உரையப்பெற்ற தாள்களை யுடையவனும், மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற

பலம்பொருந்திய தோளையுடையவனும், கிருபைதங்கிய அழகிய செந்தாமரை மலர்போன்ற நேத்திரங்களை யுடையவனும், பொன்போலப் பிரகாசியாநின்ற தேமல்பரந்த விளங்குகின்ற இளமைதங்கிய தனங்களையுடைய ஸ்திரீகள்கண்டு தமக்குள் சந்தோஷிக்கத்தக்க (அழகுள்ளவனாகி) நீண்டவில்லையேந்திய செங்கையினையுடைய வீரனுமாகிய காந்தார தேசத்தரசனும். எ - று. (கச)

வேறு.

உதையகிரிக ளொாிரண்டினுதிக்குமுபயதபனரெனச்
சிதைவின்மகர குண்டலங்கடிளக்கக்கவினுந்திணிதோளான்
புதைகொள்பகழி யூழிமுறைபொழியுமுகிலிற்சொரியுமிகற்
குதைகொணெடியவரிசிலக்கைக்குந்திபோசன்குணமிக்கான்.

(இ - புை.) இரண்டு உதயகிரிகளிருந்து இரண்டு சூரியர்கள் உதயமாகுதற்போலக் கெடுதலில்லாத ரத்தினமகரகுண்டலங்கள்பொருந்தலால், அழகு செய்யுந் தோள்களையுடையவனும், கட்டுகள்கட்டப்பட்ட பாணங்களை ஊழிக்காலத்தில் முறையாக மழைபொழிகின்ற மேகம்போலப் பிரயோகஞ்செய்யும் படியான வயிரம்பற்றிய குதையினையுடைய நீண்டபெரிய விற்பிடிக்குங் கையினையுடையவனும், நல்லகுணத்திறல் உயர்ந்தவனுமாகிய குந்திபோசனென்னும் அரசனும், எ-று. குதை - வின்னுனி. (கஉ)

விலைவரம்பறியலாகாவெயின்மணியிமைக்குமார்பன்
கலைவரம்பறிந்தவுண்மைக்கருத்திலுனறத்தின்மிக்கான்
மலைவரம்பாயஞாலமுலையத்தில்வரிகொள்வேழச்
சிலைவரங்கொண்டவேலுருங்காமுறுஞ்சிந்துவேந்தன்.

(இ - புை.) விலையினளவை அறியக்கூடாதவைகளாய் ஒளியினையுடைய இரத்தினபரணங்கள் பிரகாசிக்கும் மார்பினையுடையவனும், சாஸ்திரங்களினளவை அறிந்த மெய்ம்மையான சித்தத்தையுடையவனும், தருமத்தில் மிகுந்தவனும், சக்கரவாளகிரியை எல்லையாகவுடைய இவ்வுலகவட்டத்தில் வண்டுகளாகும் காணிபொருந்திய கரும்புவிலலிறல் மென்மைகொண்டிருக்கும் மன்மதனும் (பெண்ணுருவங்கொண்டு புணரவேண்டுமென்று) விரும்பங் கொள்ளத்தக்க சவுந்தரியமுள்ளவனுமான சிந்துதேசத்தரசனும், எ - று.

மலையை எல்லையாகவுடைய உலகம் என்றமையால் சக்கிரவாகமலையென்றும்; வரி - வண்டு; வேழம் - கரும்பு. (கஉ)

கோளுறுமதியகாண்மீன்குழாத்திடைவருவதேய்ப்ப
வாளுறுத்தடக்கைமன்னர்புடைவரவருதிண்டேரான்

வேரூறுவனப்பின்மிக்கான்விரிதிரைவேலிஞாலங்
தோரூறப்பரிக்குமாணைத்துருபதன்சுடர்செய்பூணன்.

(இ - புணை.) நவக்கிரகங்களி லொன்றுகப்பொருந்திய சந்திரன் நக்ஷத்திரக்கூட்டங்களினடுவில் வருவதைப்போல, வாள்பொருந்திய கையையுடைய அரசர்கள் சூழ்ந்துவரும்படி வருகின்ற நிண்ணிய தேனையுடையவனும், மன்மதன் பெற்றிருக்கும் அழகிலும் மிகுந்த அழகுள்ளவனும், பரவிய அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூமிபாரத்தைத் தனதுதோளிற்பொருந்தத் தாங்கும் படியான ஆக்கினைசக்கரத்தையுடைய திருபதன் என்னும் பேருள்ளவனுமாகிய பிரகாசியாநின்ற ஆபரணங்களணிந்திருக்கும் அரசனும், எ - று. (கூஎ)

குடைநிழலிருளைக்காட்டக்குரைகழன்மன்னர்செங்கைப்
படைநிழல்வெயிலைக்காட்டச்செல்லுவம்பரித்திண்டேரான்
மடைவளர்சங்கமீன்றமணியினைக்கருவென்றன்னம்
அடைகிடந்துலவுதண்ணுட்டவந்தியனரசாகோமான்.

(இ - புணை.) குடைகளினிழ லிருளைக்காட்டவும் ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்த காலினையுடைய அரசர்கள் செங்கையிலிருக்கும் (வாளாயுதமுதலிய) ஆயுதங்களின் ஒளி (அவ்விருள்நீங்கும்படி) வெய்யிலைக்காட்டவும் (நால்வகைச்சேனையுடன்) செல்லும்படியான தாவுகின்ற குதிரைகள் பூட்டியவலுத்த தேனையுடையவனும், வயன் மடைகளில் தவழ்கின்ற சங்கங்களீன்ற முத்துக்களை அன்னங்கள் தங்கள் முட்டைகளென்றெண்ணி அடைகிடந்து சஞ்சரிக்கும்படியான நல்ல அவந்திதேசத்தை யாளுகின்றவனும், மன்னர் மன்னவனுமான ராசனும், எ - று. (கூஅ)

கண்ணகன்ஞாலமெல்லாங்கலிகடிந்தருளிற்காத்தோன்
வண்ணநீளலத்தினுன்றன்பின்வந்தமழையாம்வண்ணத்

புண்ணுறுபுலவுவாட்கைப்பாவனைறிவின்மிக்கான்.

(இ - புணை.) பாபத்தைதீக்கி (உயிர்களிடத்திற்) கிருபைவைத்து இடமகன்ற பூமியெல்லாம் காத்தவனும், அழகிய நீண்ட கலப்பை ஆயுதத்தையுடைய பலபத்திரருக்குப் பின்வந்த நீருண்டமேகம்போலும் கருமைநிறம்வாய்ந்த கிருஷ்ணமூர்த்தி திருவவதாரஞ்செய்த கீர்த்திப்பெற்ற பழமையாகிய எதுகுலத்திற்பிறந்து மாமிசப்பற்றுல் புலவுநாற்றம்வீசும் வாள்பிடிக்குங் கையையுடையவனும் அறிவில் மிகுந்தவனுமாகிய அரசனும், எ - று.

புண் - மாமிசம். (கூசு)

புல்லுவெகுளிவேகப்புனைதுக்கைமேற்புலிக்காலி
யெல்லொளியுதயத்தும்பரினையவதேபோலத்தோன்றுங்
கல்லுடுதிடோளாற்றற்காவல்லன்கரும்பின்வேலிப்
பல்லவதேசமாளும்பார்த்திபன்பகைவர்ச்செற்றோன்.

(இ - புனை.) விடியற்காலத்தில் சூரியன் ஒளியையுடைய உதயகிரியில் பொருந்துவதுபோல, புலியையுங் கொல்லுகின்ற கோபமும் வேகமுமுள்ள யானையின்மேல் தோன்றுகின்ற மலைகளையும் பிளக்கத்தக்க திரண்ட புஜவலியையுடைய காவலனும், பகைவர்களை (யுத்தத்தில்) கொன்றவனுமாகிய கருப்பஞ்சோலைகளை வேலியாகச் சூழ்ந்திருக்கத்தக்க பல்லவதேசத்தையாளும் அரசனும். எ - று. புல் - புலி. யானையின்மேற் சென்றுகின்ற காவலனும், அரசனும், எனமுடிக்க. (சo)

காரணங்கடந்தனானக்கண்ணுதல்சடையின்வாழும்
நீரணங்கூழிகாறுநீத்தருவளங்கூர்நாடன்
ஆரணமபுகலுநாவினந்தணர்க்களிக்குங்கையான்
வாரணம்பொருந்துதானைவாரணவாசிமன்னன்.

(இ புனை) தனக்குமேலொரு முதலில்லாமல் (யாவர்க்கும் யாவைக்குந் தானே முதலாயிராநின்ற) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் சடைமுடியில் வாழ்கின்ற நீருருவமாகிய கங்காதேவியானவள், ஊழிகாலம் வரைக்கும் நீங்காமல் பெருகிக் கொண்டிராநின்ற வளப்பமிகுந்த நாட்டினையுடையவனும், வேதமோதும் நாவினையுடைய பிராமணர்க்குத் தானங்கொடுக்குங் கையையுடையவனுமாகிய யானைப்படைகளையுடைய வாரணாசிப் பட்டணத்திலிருக்கும் அரசனும். எ - று. பிராமணர்கள் அழகிய சாந்தகுண முள்ளவர்களாதலால் அந்தணனெனக்கூறினர். இதை 'அந்தண னென்போரறவோர், என்னும் திருக்குறளினால்' அறிக. வீரர்கள் போர்க்களத்தில் சண்டை செய்திறந்தாலும் வீரசுவர்க்கம் அடையலாமென்கிற ஆசையைக்கொண்டு போர்செய்கின்றவர்கள்; யானை அப்படிக்கொத்த ஆசையில்லாமல் கோடமிருதியால் சண்டை செய்யத்தக்கதாகையால், அரசருக்குள்ள நால்வகைப்படையுள் யானைப் படையை விசேஷமாகச் சொல்வது. (சக)

கொல்லுலையகத்திற்காய்ந்துருகுருதிதோய்கொடியவேற்கண்
அல்லுருவமைந்தகோதையணங்கனைர்க்கமுதமன்னன்
எல்லுயர்கனகக்குன்றத்தெழுதியபழுதிலாற்றல்
வில்லுயர்துவசத்திண்டோள்வில்லவன்கொல்லிவேந்தன்.

(இ - புனை.) கொல்லன் உலைக்களத்திற் காய்ந்து பகைவருதிரத்திற் படிகின்ற கொடிதாகிய வேலாயுதம்போலக் (கூர்மையாகிய) கண்களையும்

இருளை உருவு கொண்டிருப்பதுபோலக் கருமை நிற்நந்தங்கிய அளகத்தையு முடைய தெய்வப்பெண்களையொத்த மாதர்களுக்கு (அழகினல்) அழுதம்போ லிருப்பவனும், ஒளியுடனுயர்ந்நிாநின்ற பொன்மலையாகிய மகமேருவினிடத் நிற்நீட்டிய குற்றமில்லாத பலமுள்ள உயர்ந்த விற்கொடிகட்டிய தேனையுடை யகொல்லிமலைக் கரசனுமாகிய சேரராசனும். எ - று. மகமேருவில் கொடிதீட் டினவ னென்பதினல் அரசர்களையெல்லாம் வென்றவனென்பதாயிற்று. விற் கொடி சேரனுக்குரியது. கொல்லிமலை சேரராஜ்ஜியத்திற் சிறேட்டமானமலை.

பண்டையமனுநூல்காட்டிப்படையெடுத்துடன்போர்வென்று
சண்டனைத்தனதுதேயத்தடைவதுதவிர்த்தவீரன்
கொண்டலையிடங்களென்றுகோளரிமுழங்கிச்சீறி
மண்டமர்புரியுநேரிமலையினுண்வளவர்கோமான்.

(இ - புனை.) பழமையாகிய மனுநூலின் முறையைக்காட்டிப் படை யெடுத்துப்போய், கொல்லுந்தொழிலையுடைய போர்செய்துவென்று, யமதரும ராசனைத்தன்னுடைய தேசத்தில் வரவொட்டாமல் தடுத்தவனும் மேகங்களை யானைகளென்றெண்ணி ஆரவாரித்துச்சீறியெதிர்ற்றுப் போர்புரியும்படியான சிங்கங்கள் வாசஞ்செய்கின்ற நேரிமலையை யுடையவனுமாகிய சோழராசனும். எ-று. நேரிமலை சோழராஜ்ஜியத்திற் சிறேட்டமலை. (சக)

என்றிவர்முதலவேந்தர்யாவருஞ்சுயம்வரத்தின்
பொன்றிகழ்மண்டபத்தேதடுகுதயான்புகுதலோடு
மன்றலந்தண்டார்நீயென்மணிப்புயத்தணிதல்கண்டு
கன்றியமனத்தராகிக்காவலர்வெகுளிமிக்கார்.

(இ-புனை.) ஆகிய இந்த அரசர்கள் முதலாகிய அரசர்களெல்லாரும் பொன்னுற் செய்யப்பட்டுப் பிரகாசியாநின்ற சுயம்வரமண்டபத்தில் வந்து சேர; நானும் வந்து சேர்ந்தவளவில், நீ வாசனையும் குளிர்ச்சியமுள்ள பூமாலையை என்னுடைய அழகிய புஜத்தில் சூட்டினதை அங்கு வந்திருந்த அரசர்களெல்லாரும் பார்த்து, மனம் வெம்பினவர்களாய் மிகுந்த கோடங் கொண்டார்கள். எ - று. மன்றலத்தண் எனபதியின் இடையிலிருக்கும் அம் - சாரியை. அழகெனவுங் கூறப்படும். (சச)

வேறு.

யாம்பலொருவனீண்டிவன்மணஞ்செய்து
போம்பழிக்கியாமுளம்பொருந்திலோமென
வாம்பரித்தேர்கடாய்வந்துமற்றவர்
பாய்ப்பினங்குரு னேப்பகைக்குப்பண்பினை.

(இ-புணை.) (இப்படிக் கோபங்கொண்ட அந்த அரசர்கள், யாம் பல போரா யிருக்கின்றோம்; இப்போது மரலேகூட்டிக்கொண்ட இவ்வரசன் ஒருவன்; (அப்படியிருக்க நமக்கெல்லாம் இகழ்ச்சி நேரும்படி) இவன் விவாகஞ் செய்துகொண்டுபோம் பழிக்கு நம்முடைய மனம் ஒருமையடையாதென்று (தங்களில் ஆலோசனைபண்ணித்,) தாவுகின்ற குதிரைகள் பூட்டிய தேர்களைச் செலுத்திப் பாம்புக்கூட்டங்கள் கருடனுடன் சண்டை செய்ய விரும்பிபகைத்து எதிர்க்குந் தன்மைபோல என்னெதிரில்வந்து எ-று. பாம்பினம் கருடனை வளையுப்பண்பினை என்றும்பாடம். (சரு)

அவாமதெதிர்சலுமழலெழவிழியா
இவருயிர்பருகுவனெனிதினினெனவே
யுவர்படுகடனிலமுவளுறவடுதேர்
பவனனில்விசையுறுபரிகொடுகடவா.

(இ-புணை.) அந்த அரசர்கள் சண்டைசெய்யும்படி எதிர்க்க நான் என் கண்களில் அக்கினிப்பொறிபரவும்படி அவர்களை உறுக்கி விழித்து, இவர் களுயிரை யெளிதாக இப்போது வாங்கி விடுகிறேனென்று, உவர்க்கடல் சூழ்ந்த பூமியும் வாடும்படிப் பிளந்துகொண்டு செல்லுகின்ற என்னுடைய தேரை வாயுவைவப்பார்க்கிலும் விசையுடன் செல்லுகின்ற குதிரைகளைக்கொ ண்டு அவர்களெதிரிற் செலுத்தி. எ-று. பவனன் - வாயுதேவன். (சசு)

தேரணிபரியணிசிறுதுகளுறவுந்
தாரணிபடையணிதரைமிசைகெடவுங்
காரணியெனமதகளிறுகள்விழிவும்
போரணிகருவிகள்பொடிபொடிபடவும்.

(இ-புணை.) தேர்ப்படை வகுப்பும் குதிரைப்படை வகுப்பும் சிறியதுகள்போலாகவும், தும்பைப்பூ மாலையணிந்த காலாட்படை வகுப்பு (கால் வேறு கைவேறு தலைவேறுக அறுபட்டுப்) பூமியில் விழவும், மேகவொழுங்கு போல யானைப்படை வகுப்புகள் அறுபட்டு விழவும், போர் செய்வதற்காகச் சாணை பிடித்திராநின்ற ஆயுதவர்க்கங்கள் பொடிப்பொடியா யுதிர்ந்து விழ வும், எ-று. தார் என்றது படை விகற்பங்களுள் ஒருவகை பேதமென்றும், பின் படை என்றது பெரும்படையென்றும் கூறுவர்.

மன்னவர்தேர்மிசைமந்திரமொழிவார்
சென்னிகள்விழுவவர்தேர்மிசையிறையோர்
பொன்னவிர்முடிவிழுபூசலின்வெருவா
அன்னவரொடுமவரடவிகள்புகுவார்.

(இ-புணை.) (இவ்வாறு நடக்கின்ற போர்க்களத்தில்) ஒருபுறத்தில் அரசர்களிருக்குந் தேர்களினிடத்தில் மந்திரிகளுடைய தலைகள்விழ, மற்றொரு புறத்தில் மந்திரிகளிருக்குந் தேர்களினிடத்தில் அரசர்களின் பொற்பிரகாசமுடைய கிரீடம் அணிந்திருக்குந் தலைகள்விழும்; இத்தகைய அச்சண்டையிற் பயந்து, (இறந்தவர்கள்போகப் பிழைத்திருக்கும்) அரசர்களும் மந்திரிகளும் காட்டிற்போ யொளித்துக்கொள்ளுவார்கள். எ-று. (சஎ)

வேறு

சுயமரத்தெதிர்ந்தோர்தம்மைத்துருபதன்றனையைக்காக
வயமலிசிலையால்வென்றவாகைவேல்விசயனேபோற்
கயமலர்க்கண்ணிநிற்காக்காவலர்தம்மைவென்று
புயலெறுபுரிசைசூடனின்னெடும்புகுந்தபின்னர்.

(இ - புணை) (இத்தன்மையாகப் போரில் தோற்று ஓடிப்போகும்படி) சுயம்வரத்தில் எதிர்த்தஅரசர்களைத் துருபதராசன் புத்திரியாகிய துரோபதைக்காக, வெற்றிமாலையணியும் வேலாயுதத்தையுடைய அருச்சுனனனவன் வென்றிமிகுந்த காண்டீபத்தினல் செயங்கொண்டதுபோல், தடாகத்தில் மலருந் தாமரைமலரையொத்த கண்களையுடைய ஈயகியே! உன்பொருட்டு எதிர்த்த அரசர்களையெல்லாம் வென்று, உன்னை ,என் தேரில்வைத்துக்கொண்டு) மேக மண்டலத்தை யளாவுகின்ற மதில்சூழ்ந்த மதுரையில் நான்சேர்ந்தபின்பு- எ-று. துருபதராசன் - பாஞ்சாலராசன். (சக)

ஆயிழைநீயும்யானுமளப்பருங்காலமின்ப
மோய்வறத்துய்த்துநேமியொருதுடைநிழல்கொண்டோச்சி
காயெரிக்கடவுண்முன்னர்க்கணக்கிலமகங்கள்செய்து
சேயுயர்விசும்பின்வாழுந்தேவர்தங்கடன்கடீர்த்தும்.

(இ - புணை.) நல்ல ஆபரணங்களை அணிந்திருக்குந் தலைவியே! நானும் நீயும் அனேகங்காலம் ஒழிவில்லாமல் இன்ப மனுபவித்து, இந்தப்பூமியை என் ஒற்றைக்குடைநிழலில் வைத்து ஆஞ்ஞாசக்கரமுருட்டியும், சுவாலைவிட்டெழுகின்ற அக்கினிதேவன் முன்னுக அளவில்லாத மகங்கள்செய்தும், மிகவும் உயர்ந்ததாகிய சுவர்க்கலோகத்தில் வாழுந் தேவர்கள் கடன்களைத்தீர்த்தும். எ-று. யாகம்-ரு. அவை பிரமயாகம் தேவயாகம் பூதயாகம் பிதிர்யாகம் மானுஷயாகம் என்பவைகளாம். இவைகளில்பிரமயாகம் வேதமோதுதல் தேவயாகம் வேள்வி செய்தல், பூதயாகம் பலியிடுதல், பிதிர்யாகம் தர்ப்பணஞ் செய்தல்; மானுஷயாகம் இரப்போர்க்கு ஆகாரமுதலியவை கொடுத்தல். (ரo)

அந்தணர்தங்களெனைஞ்சுத்தவாக்கெடத்தானமீந்துஞ்
செந்தழல்புரையுமேனிச்சிவனடிபூசைசெய்தும்

ணைத்தொழிதியும்யாணும்டண்டுசெய்தவத்திணேலார்
ாந்தனைபினைவந்தமைந்தணுமறையோர்தம்பால்.

(அ - புரை.) பிராமணர்கள் மனதிலுண்டாகும் ஆசைநீங்கும்படித் தானங் கொடுத்தும், சிவந்த அக்கினியைபொத்த திருமேனியையுடைய பரமசிவத்தினை திருவீதியைப் பூசித்தும், மாற்றுயர்ந்த பொன்றேற் செய்த வளையலணிந்த கையையுடையவளாகிய மனைவியே! நீயும் நானும் பூர்வஞ்செய்த தபோபலத்தி னலே ஒருபுத்திரனைப்பெற ; அந்தபுத்திரன் (வேதமுதலாகிய சாஸ்திரங்கள் கற்பிக்கும்) பிராமணர்களிடத்தில். எ - று (நக)

கலைபலபயின்றுழுக்கட்கடவுளுக்கடிமைபூண்டு
நிலையிலாவுலகுதன்னினிலே'பெறப்புகழ்நிறீஇயுஞ்
சிலைவலித்திரடோளாற்றற்சேருநாளமைச்சர்தம்மோ
டிலகடற்பாரமெல்லாமவன்வயினளித்துயாணும்.

(இ - புரை.) அறுபத்துநாலு கலைகளுங்கற்றுணர்ந்து, திரிநேத்திரங்களை யுடைய பரமசிவனுக்கு அடிமையாகி, நிலையில்லாததாகிய இவ்வுலகத்தில் தன் புகழ் நிலைநிற்கும்படி நிறுத்தியும், விற்போர்செய்யும் பலமுள்ள திரண்ட புஜப ராக்கிரமஞ்சேர்ந்தாளில், மந்திரிகளோடு அலைவீசும் சமுத்திரஞ் சூழ்ந்த பூமி பாரமெல்லாவற்றையும் அந்தப் புத்திரனிடத்திற்கொடுத்து அதன் பின்பு யா ணும். எ - று. (நஉ)

பொய்யுடலெடுத்துமாயப்புணரிகணீந்திநீந்திக்
கையிணைகடுத்துமீண்டக்கடலிலாழ்ந்திறந்துபோக
ையுறுபிறவிமாய்த்துமறைகளின்சிரத்தினிற்கு
மெய்யுறுநிலைமைதேர்வான்வேட்கைகூருளத்தனாகி.

(இ - தனை) பொய்யாகிய இவ்வுடலெடுத்து மாயையாகிய சமுத்திரங் களை நீந்தி நீந்தி, கைகளுங்கடுத்து (தளைசேரக்கூடாமையால் பின்னும் அந்த ச்சமுத்திரங்களில் ஆழ்ந்திறந்து போகும்படியான குற்றம் பொருந்திய பிறவி யையொழித்து, வேதங்களின்முடிவிலிராநின்ற உண்மையாகிய நிலையை அறி யவேண்டுமென்கிற விருப்பமிகுந்த மனமுள்ளவனாகி. எ - று. காமத்திலல் மாயைகளை நீங்கவேண்டுமல்லேன் மேலும் அம்மாயைகள் விருத்தியாகும்; ஆகவே, மனம் வருந்தும் என்பார், புணரிகணீந்தி நீந்திக்கையினை கடுத்தும் என்றார் ஞானத்திலல் கடக்கலாம் என்பது தணிவு. (நக)

பொன்னெடுங்குன்றமன்னபுணர்முலைப்பொலன்கொம்பொப்பா
யென்னெடுஞ்செல்வமெல்லாமெனதலவென்றுநீத்து

நின்னெனு நம்போகிவேலைநெடுங்கடலங்கைகொண்ட
மன்னெனெடுத்தவத்தின்மிக்கமாதவனிருந்துவாழும்.

(இ - புணர்.) (உண்மை நிலையை அறியவேண்டுமென்கிற விருப்பம்என் மனதில் உண்டானதினால்) நெடிய பொன்மலையையொத்த நெருங்கிய தனங் களையுடைய பொற்கொம்பினை நிகர்த்த நாயகியே! அந்நானத்தினால் என் னுடையதென்று நினைத்துக்கொண்டிருந்த பெரியசெல்வங்களை யெல்லாம் என்னுடையதல்லவென்று நீக்கிவிட்டு, உன்னுடன்போய்த் திசைகளையுடைய அளவிடக்கூடாத சமுத்திரநீரை உள்ளங்கையிலேற்றுக் கொண்டுண்ட நிலை பெற்ற பெரிய தவத்தின்மிகுந்த அகஸ்திய முனிவரிருந்து வாசஞ்செய்யும். எ-று. வேலை - புனற்றினை. (நுச)

சந்தனப்பொதும்பர்சூழப்பொருகையத்தாமநாற்றிச்
செந்தமிழ்முதுமன்றற்றென்றலங்கன்றுகல்குஞ்
சுந்தரப்பொதியக்குன்றைத்தொழுதனம்வலங்கொண்டேறிக்
கொந்தழலெந்திறைப்படண்கோதறுதவஞ்செய்காலை.

(இ - புணர்.) சந்தனச்சோலை சூழ்ந்திருக்கத் தாம்பிரபருணி நதியென் னும் பூமாலையை நாலவிட்டு, இயல் இசை நாடகம் என்கிற தமிழென்னும்அமு தத்தையும் வாசனை வீசுகின்ற இளந்தென்றற் காற்றினையும் தருகின்ற அழகு ள்ள பொதியமலையை காம் பிரதக்ஷிணஞ்செய்து தொழு, தோத்திரஞ்செய்து, அதன்மீதேறிச் சிதைவிட்டெரிகின்ற பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண்டு குற்றமில்லாத தவஞ்செய்யுங் காலத்தில். எ - று. (நுரு)

குறுமுனிவந்துதோன்றிக்கொடும்பவக்கடலைமாய்த்து
மறுவுறுபிறவிமாயமம்மர்நோயகற்றிப்பின்னர்
அறுசமயங்களுக்குமதிதமாஞ்சிவயோகத்தை
யுறுதியாயுபதேசிப்பயாமந்தவுபதேசத்தால்.

(இ - புணர்.) அகஸ்திய முனிவர்வந்து கொடியதாகிய பாவக்கடலை யொ ழித்துக் குற்றந்தங்கிய பிறவிநீங்கும்படி மயக்கமாகிய பிணியைத்தொலைத்துப் பின்பு, அறுசமயங்களுக்கும் அதிதமாகிய சிவயோகத்தை உறுதியாக உபதே சிக்க ; நாம் அந்த உபதேசத்தினால். எ - று. சிவயோகமாவது ஞானசாரியர் கிருபையினால் தன்னையுந் சிவத்தையுங்கண்டு தற்போதஞ் சீவியாமலிருப்பது.

எள்ளுறுமெண்ணெய்போலெவ்வுகணும்பரந்துநின்ற
வள்ளறன்வழிவுகண்டுமனத்தினைநெருங்கழுமி
வின்னுதலில்லாவின்பம்விளைசிவவனுபூதிக்கே
கள்ளுறுமலர்வீழ்வண்டின்முத்தியிற்கனிப்பேங்கண்டாய்.

(இ - புணை.) என்னினிடத்திற் பொருந்திய எண்ணெய்போல எவ்விடத்தும் நிறைந்திருக்கும் பரமசிவனுடைய சொரூபத்தைக்கண்டு, மனதில் ஆனந்தமூறப்பெற்று, ஒருக்காலும் ஒழியாத பேரின்பம் விளையாநின்ற சிவானுபூதியையனுபவிக்கும் பொருட்டுத்தேன்விடாது பெருகாநின்றமலர்களிற்றங்கிஅத்தேனையுண்ணும் வண்டுகளைப்போல மோக்ஷத்தில் ஆனந்தமுற்றிருப்போம். எ-று. விள்ளுதலிலாத இன்பம்என்றதற்கு அனுபவிகளும் இத்தகையது என்று வாய்விண்டு சொல்லப்படாதது என்பதும் பொருள். (நுஎ)

வேறு.

என்றுமனனவன்றுதனனப்பனரும்சைதான
அன்றுநாயுருவெடுத்தியானிறந்திடுமளவிற்
கொன்றையஞ்சடைக்குரிசிலக்கண்ணுறுங்கொள்கை
தொன்றுபட்டதாற்பிறப்பெலாந்துரிசறவுணர்ந்தேன்.

(இ - புணை.) இவ்வாறு பேரானந்தம் அடைவோமென்று சொல்வினவுணய் அவ்வரசன் பின்னுஞ்சொல்வான், நான் முன்னளில் நாயுருவெடுத்திருந்து இறக்குங்காலத்தில், கொன்றைப் பூமாலையணிந்த அழகிய சடாமகுடத்தையுடைய பரமசிவனைத் தரிசிக்குந் தன்மை முன்னமே கிடைத்ததினால், பிறப்புகளையெல்லாங் களங்கமற அறிந்தேன். எ - று. தரிசு - களங்கம். (நுஅ)

வேறு.

பாவையுலகிற்பதினாலாம்பக்கத்
திரவுதோறுஞ்சிவனேயத்தியடிபேணி
யிவைபிறவியகற்றுவாயென்று
குரிசின்மொழிந்தான்குலக்கொடியுங்கேட்டே.

(இ - புணை) மனைவியே! (சிவராத்திரியில் பரமசிவனைத் தரிசித்ததினாலே இப்படிக்கொத்த மேலான பதங்கிடைத்தது; ஆதலால், நீயும்) சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தில் சிவராத்திரிதோறும் பரமசிவனுடைய திருவடிகளைப் பூசித்துத் தோத்திரஞ்செய்து, பிறவியை நீக்கிக்கொள்ளென்று அரசன் சொன்னான், அந்தவார்த்தையை அம்மாதுகேட்டு. எ-று. (நுக)

நன்றுசிவராசியினன்மையெனாவிலா
அன்றுமுதலானையாயிழையும்பூசித்தாள்
மன்றல்கமழ்செழுந்தார்மன்னவனுமாதருமாய்ச்
சென்றுபிறப்பேழ்கழியச்சின்மயவீடெய்தினர்.

(இ - புணை.) (இப்படியாகத் தன்கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட ராஜஸ்திரியானவள்) சிவராத்திரியின்பலன் மிகவும் நன்மையானதா

யிருக்கிறதென்றுசொல்லி, அந்தாள்முதல் அவளும் சிவராத்திரியில் பரம சிவனைப் பூசித்துவந்தாள். (அப்படிப் பூசித்துக்கொண்டிருந்து ஏழாப்பிறப்பு நீங்கினவுடன் வாசனைபரிமளிக்காநின்ற பூமாலை யணிந்திருக்கும் அந்த அரசனும் அவன் மனைவியும் ஒரேதினத்தில் (இவ்வுலகத்தை விட்டுநீக்கி) மோக்ஷத்திற்போய்ச்சேர்ந்தார்கள். எ-று. ஏழ்பிறப்புகழிய என்றது இவர்கட்கு நேர்ந்த ஏழ்பிறப்பேயன்றி, ஏழுவகைத்தோற்றத்தையும் கடந்தார்கள் என்பதும் ஒன்று. (சுo)

வேறு.

இத்தகையவாமென்றேயீறிலாம்பக்கத்தின்
மெய்த்திறனுமீசன்விளையாட்டின்மித்தகமும்
பத்திவழியடியார்பான்மையுமற்றுங்கவர்தா
முத்திபெறும்வழியுமென்றன்முனிவரனே.

(இ - புனை) பராசரமுனியானவர் விமரிசராசனைப்பார்த்து, அரசனே! சிவராத்திரியின் உண்மையான மகத்துவமும், பரமசிவனுடைய திருவிளையாட்டின் மகத்துவமும், பத்திமார்க்கத்திற்செல்லும் அடியார்கள் தன்மையும், அந்த அடியார்கள் மோக்ஷம்பெறுகிற முறைமையும், இத்தன்மையனவாமென்று சொன்னார். எ-று. மற்று-ஆங்கு-அசைநிலைகள். (சுக)

போதிவின்மாமுனிவன்பின்னருநன்றேறுதிரை
வாரிபுடைசூழுலகின்மன்னுயிர்கள்யாவர்க்கும்
நீரணியுஞ்வேணிநிமலனேதெய்வதமும்
ஈரமுறுகேளுமிருடூர்குரவனுமே.

(இ - புனை.) ஞானவறிவினையுடைய கவுதமருஷியானவர் இதுவரையிற் சொன்னதுமல்லாமல் மேலும் விளக்கமுறச் சொல்லுகிறார் நாற்புறமுஞ் சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்திலிராநின்ற நிலையாகிய உயிர்களுக்கெல்லாம் கங்கையை அணிந்த சடையையுடைய பரமசிவனே தெய்வமும், அன்புள்ள சுற்றத்தாரும், அஞ்ஞானத்தை நீக்குகின்ற ஞானாசாரியருமாவர். எ-று. உடல்அநித்தியம், உயிர் நித்தியம் என்னு முறைமைபற்றி மன்னுயிரென்றார். நிமலனே என்பதில் ஏகாரம் தேற்றத்துடன் பிரிநிலை. (சுஉ)

என்னுழுமைமனக்கொண்டுசென்றனைநோக்கி
மன்னுமகமுடிப்பார்மந்திரங்கள்சிந்திப்பார்
அன்னையுதரத்தடையார்மறந்துமென
முன்னையருமறைகள்யாவுமொழியுமால்.

(இ-புணர்.) என்கிற வார்த்தை மன்றில் கம்பீகண்க்யர்க்கொண்டு (அத் தன்மையுள்ள) பரமசிவனைக்குறித்து,- அழியாத யாகங்களைச் செய்கின்றவர் களும், மந்திரங்களை யுச்சரிப்பவர்களும், இவ்வுடலைவிட்டு நீங்கினபின்பு மறந்தாகிலும் தாய்வயிற்றிற் கருவாகத் தங்கார்களென்று பழமையாகிய வேத ங்களெல்லாம் மொழியாநின்றன. எ-று. மறந்துமென்றது பிறவார்களென் கிற துணிவுபற்றியெனக்கொள்க. (சுக)

வேதமுறைசெய்தவிதியேபலுங்கைகவிட்டுச்
சீதமதிவேணிச்சிவனடியைப்பூசிக்கும்
போதமுடையபுராதனரோபொய்ப்பிறவி
வாதனையைநீக்கிமறைவீட்டின்வைகுவார்.

(இ - புணை.) வேதங்களாற்சொல்லப்பட்ட விதிகளையாலுலும், அவை களைச்செய்யாமல் விட்டொழிந்து, குளிர்ச்சிபொருந்திய இளந்திங்களை யணி ந்த சடாமகுடத்தையுடைய பரமசிவத்தின் பாதங்களைப்பூசிக்கும் ஞானத்தை யுடைய பெரியோர்களை நிலையில்லாத பிறவித் துன்பத்தை நீக்கி, வேதங் களிற் சொல்லப்பட்ட (நித்தியமாகிய) மோகூடத்தில் எக்காலமும் பொருந்தி யிருப்பார்கள். எ-று. வேதவிதியை ஒருபோதும் கைவிடலாகாது. அவற்றைவிடி னும் சிவபூசையை விடலாகாதென்பார், 'சிவனடியைப்பூசிக்கும் போதமுடை யார்.' என்றார். அங்ஙனம் பூசையொன்றினையேனும் நித்யமாய்ச் செய்வார் அவ்வேதம்கூறும் வீட்டைடப் பெறுவாரொன்பார் 'மறைவீட்டின் வைகுவார்' என்றார். (சுச)

வாழுமனைமேன்மதலையர்மேல்வான்பொருண்மேல்
வீழுமனமவற்றின்வீழாதுதாணெம்பித்
தாழுமவிர்சடையோன்றாள்விழையப்பெற்றவரே
யேழுபவக்கடலுமேறும்புணைபெற்றார்.

(இ - புணை.) வாழ்கின்ற மனைவியரிடத்திலும் புத்திரர்களிடத்திலும் சிறப்புள்ளதாகிய பொருள்களிடத்திலும் விருப்புறுகின்ற மனத்தை, அவைக ளில்விரும்பாமற்காத்து, பிரகாசியாநின்ற நீண்டசடையையுடைய பரமசிவன் திருவடிகளை விரும்பப்பெற்றவரே எழுபிறப்பாகிய சமுத்திரக்கரையுங் கடந்து மோகூடமாகிய கரையிலேறுகின்ற தெப்பத்தை யடைந்தவராவார்கள். எ-று.

கங்கைபணிவேணியான்காமன்றனைவென்றோன்
மங்கையொருபாகன்றனக்குவழியடியார்

தங்கள்பெருஞ்செல்வமெலாந்தாழாதளிப்பான்றி
யங்கமரிவாளாலரிந்துங்கொடுப்பாரோ.

(இ - புணை.) கங்கையையணிந்த சடையையுடையவரும், மன்மதனை வென்றவரும், பார்வதியை யொருபாகத்தில் வைத்தருளியவருமாகிய பரமசிவனுக்குப் பரம்பரையாகிய அடியவர்கள் தங்களுடைய பெரியசெல்வங்களெல்லாம் மறுக்காது ஈவார்கள்; அதுவுமல்லாமல், தங்கள் சரீரத்தையும் வாளால் அரிந்துங் கொடுப்பார்கள். எ-று. அங்கமரிந்துங் கொடுப்பார் என்றது திருநெடுமுனிவர் சிபிச்சக்கரவர்த்தியார் முதலியோரைக் குறித்தபடி. (சுசு)

கண்ணுதலாலயமோக்குங்கண்களேகண்கள்

பெண்ணெருடாகவணப்பணியுந்தலைகளேதலைகள்
பிஞ்ஞகவணட்பூசிக்குங்கைகளேகைகள்
பண்ணவன்றன்சீர்பாடுநன்னாவேநன்னா
பான்சரிதையேகேட்கப்படுஞ்செவியேசெவிகள்
அண்ணல்பொலங்கழனினைக்குநெஞ்சமேநெஞ்சம்
அவனடிக்கீழடிமைபுகுமடிமையேயடிமை.

(இ - புணை.) நெற்றிக் கண்களையுடைய பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயங்களைத் தரிசிக்குங்கண்களே நல்லகண்கள், காளகண்டத்தையுடைய அந்தப் பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயங்களுக்குச் செல்லுகின்ற கால்களே நல்ல கால்கள், பார்வதியை யிடப்பாகத்தில் வைத்தருளிய அந்தக்கடவுளை வணங்குகின்ற தலைகளே நல்லதலைகள், பிஞ்ஞகனென்னு மொரு திருப்பெயரையுடைய அந்தக்கடவுளை அருச்சிக்குங்கைகளே நல்லகைகள், தேவநாயகர் புகழைப் பாடுகின்ற நாவேநல்லநா, பரமசிவனுடைய சரிதங்களைப் பெரியோர்களால் கேட்கப்படுங் காதுகளே நல்லகாதுகள், பெருமையிற்சிறந்த அந்தக்கடவுளுடைய பொன்மயமாகிய வீரகண்டையணிந்த திருவடிகளைத் தியானிக்கும் மனமே நல்லமனம், அவருடைய திருவடிகளுக்கு அடிமையாகிற அடிமைத்திறமே நல்ல அடிமைத்திறம். எ - று. (சுஎ)

வேறு.

குணமிலாராயினுங்குலீனராயினு
மணமலிகருங்குழன்மகளிராயினும்

பணமணியரவணைப்பரமனன்பரே
கணமணியுலகெலாம்பரவுங்காட்சியார்.

(இ - புணை.) நற்குண மில்லாதவர்களே யாணலும் நல்ல குலமற்றவர் களே யாணலும், வாசனைபொருந்திய கருமையாகிய அனகபாரத்தை யுடைய மாதர்களே யாணலும், மாணிக்கம் பொருந்திய படத்தைப்பெற்ற பாம்பினைக் கச்சாகத்தரித்திருக்கும் அரையினையுடைய பரமசிவனடியார்களே கூட்டமாக வுள்ள திரிலோகத்தாரும் துதிசெய்யும்படியான பெருமையையுடைய ராவார் கள். எ - று. பரமன் அன்பரே பரவுங் காட்சியாவெனப் பொருடருதலின், எகாரம் தேற்றத்தோடு பிரிந்து. (சுஅ)

ன்னதன்மையதனவீசனன்பர்சீர்

மன்னு
பின்னுமோர்பெருங்கதைபேசினனரோ.

(இ - புணை,) பரமசிவனுடைய அடியார்கள் புகழ் இத்தன்மை யான தெனப் பிரமதேவனுக்கும் அறியத்தக்க தல்லவென்று, அழியாத பெரிய தவத்தையுடைய நைமிசாரணியமுனிவர்களே ! அறிந்துகொள்ளுங்களென்று பின்னும் ஒருபெரிய சரித்திரத்தைப்பேசுவாராயினர். எ - று. (சுக)

நான்காவது - சிவராத்திரியில் விமரிசன்

முத்திபெற்ற அத்தியாயம்

முற்றிற்று.

ஆக விருத்தம் உகக.

சனிப்பிரதோஷத்தில்சந்திரசேனன்

பூசைசெய்த அத்தியாயம்.

அகழணிநாஞ்சில்சூழாய்பொன்மூதெயில்
திகழுமுச்சினியாஞ்செல்வமாநகர்க்
கிகழ்நுங்குணத்திறைவிறைமைபூண்டுளான்
புகழணிதகைமையான்புலவுவேவிறல்.

(இ - புணை.) அகழியும் அழகிய உறுப்புகளையுடையதாய்ச் சூழ்ந்திருக்கும் நல்ல பொன்னாலாய பழையமதிலும் விளங்கும், செல்வமுள்ள உச்சினியென்னும் நகரத்துக்கு இகழ்ச்சியற்ற நற்குணங்களோடி அரசுத்தன்மை கொண்டிருப்பவனும், புகழையே ஆபரணமாகததரிக்கும் தகுதியையுடையவனும், பகைவருதிரந் தோய்ந்த வேலாயுதத்தையுடையவனும். எ-று.

மாநகர்க்கு இறைமை பூண்டுளான் எனமுடிக்க. மூதெயில் என்றமையின் இவ்வரசனுடைய மூதாதையராவியற்றியதெனத் தெளியப்படும். என்க.

இந்திரன்றிருவெனவிசைக்குஞ்செல்வத்தான்
மந்தரமலையெனவளருந்தோளினன்
செந்திருவணமுலைதிளைக்குமார்பினன்
சந்திரசேனனுந்தரணிமன்னனே.

(இ - புணை) தேவேந்திர செல்வத்துககு ஒப்பானதென்று சொல்லத்தக்க செல்வத்தையுடையவனும், மந்தரகிரியைப்போல வளரும் தோள்களையுடையவனும, வீரலக்ஷுமியின் அழகுபொருந்திய தனங்களைப் புணருமார்பையுடைய மகாவிஷ்ணுவைவப் போல்பவனும், சந்திரசேனனென்கிற பெயருடையவனுமாகிய இவ்வுலகத்தையாளும் அரசன் ஒருவனுளன. எ - று.

இவ்வரசனைத்திருமாலுக்கு ஒப்பிட்டுக்கூறியது "திருவுடைமன் னைக் காணிற திருமாலைக் கண்டேனென்னும்" என்னும் திருவாக்கைப்போல, (உ)

மன்னவனங்ஙகர்மாகாளேசுரன்
என்னவாழீசனையிமயம்பூத்தருள்

கண்ணியோர்பாகனைக்கருத்தினைத்தியே
பொன்னடியருச்சனைபுரியுங்காலையே.

(இ - புணை.) இத்தன்மையுள்ள அந்த அரசனைவன் அங்ஙகரத்தில் மாகாளேசுரனென்று திருநாமத்தினையுடையவரும், மலையனையன் பெற்ற பார்வதியை யிடப்பாகத்தி லுடையவருமாகிய பெருமானை மனதிலே நினைத்துத் தியானஞ்செய்து அவருடைய அழகிய திருவடிகளில் பூசைசெய்யுங் காலத்தில். எ - று. (நு)

காணுவினேவவிற்றூரைகைக்கெலா
நாணிலாவெனக்கணநாதர்நாயகன்
வேணவாவுளத்தினண்விலங்கற்மேருனிறன்
மாணிபத்திரனெனவழங்குபோரினன்.

(இ - புணை.) சிவநேசமிருந்த மனமுடையவனும், மலைபோலத்திண்ணிய தோளையுடையவனும், மாணிபத்திரன் னெனவழங்கும் பெயரையுடையவனும், நக்ஷத்திரங்களுக்கெல்லாம் பூரணசந்திரன் தலைமைபெற்றிருப்பதுபோல சிவகணநாதர்களுக்கெல்லாம் தலைவனுமா யிருக்குமொருவன் பரமசிவனுடைய கட்டளையினலே. எ - று. (சு)

வேறு.

வந்துசந்திரசேனனைநோக்கிமன்னவனே
யெந்தைபூசனைக்கினையிலாய்நின்னுடைநட்பு
முந்தவேண்டுவனென்றுதான்வந்தமைமொழிய
அந்தவேந்தனுமகமகிழ்ந்தவனைநட்டான்.

(இ-புணை.) அவ்விடத்தில்வந்து சந்திரசேனனைப்பார்த்து, அரசனே! எம்மையனுகிய பரமசிவபூசையில் ஒப்பில்லாத பத்தினியை யுடையவனுகிய உன்னுடன் நட்புகொள்ள விரும்பினேனென்று, தான்வந்ததைச்சொல்ல; (அதுகேட்டு) அந்தவரசனும் அந்தக் கணநாதனுடன் சினேகித்தான். எ - று. (ரு)

இன்னவாறிவரிருவருமொழுகுமந்நாளின்
மன்னனன்பினுன்மாணிபத்திரனுளமகிழ்ந்து
துன்னுசோதிச்சிந்தாமணிச்சுடர்கெழுமணியை
நின்னதாகெனக்கொடுத்தனன்கொண்டனனிருபன்.

(இ - புணை,) இம்முறையாக இவ்விருவரும் நட்புற்று வாழுநாளில் சந்திரசேன மகாராசனுடைய அன்பினுக்கு மாணிபத்திரன் மனமகிழ்ந்து, சூரிய

ணக்கொப்பாகிய ஒளிபொருந்திய சிந்தாமணியென்கிற ஓர் அரிய அரதனத்தை (இது) உன்னுடையதாயிருக்கக்கடவது என்று கொடுத்தான். அப்படிக் கொடுத்த மணியை அந்தஅரசன் வாங்கிக்கொண்டான். எ - று. அன்பிணன் வேற்றுமைமயக்கம். (சு)

அந்தமாமணிப்பெருமையாமளப்பதற்கெளிதோ
சிந்தையாலனைதநினைப்பினுஞ்செல்வமேகொடுக்குங்
கந்தாண்மலருந்தியான்கவுத்துவமணியு
நந்தவாளொளிவிடுவதுஞாயிறொத்ததுவே.

(இ - புனை.) அந்தச் சிந்தாமணியின் பெருமையை நாம் அளவிட்டுச்சொல்லமுடியாது. அதை மனதிலுற் றியானித்தாலும் செல்வத்தைக் கொடுக்கும் (அன்றியும்) வாசனைபொருந்திய செந்தாமரைபோலும் நாபியினையுடைய திருமாலணிந்திருக்கும் கவுஸ்துவ மணியும் ஒளி கெடும்படி மிகுக ஒளியை விட்டு அநந்தங்கோடி) சூரியர்போல் கிரணங்களைப்பரப்பா நிற்கும். எ-று.(எ)

அரிதினுத்தமனளித்தசெம்மணியினையணியாப்
புனைபடுத்தினனணிதலும்புரவலன்மார்பில்
மரகதக்குலமலையினின்மழகதிர்க்கடவுள்
இரதம்விட்டிழிந்திருந்தெனவொளிதயங்கியதே.

(இ-புனை.) உத்தமனுகியமாணிபத்திரன் அரிதிற்கொடுத்தசெந்நிறமுள்ள சிந்தாமணியைத் தூளபடுத்திச் சந்திரசேன மகாராசன் தன்மார்பில் ஆபரணம்போற் றரித்துக்கொள்ளவும், உதய சூரியன் தானிருக்குந்தேரைவிட்டிழிந்து நல்ல மரகத மலையினிடத் திருப்பதுபோல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. எ-று.

இனையதனமணியணிபுனைதறமகனுடைய
வினையுமாமணித்திறனெலாமயலறக்கேட்டு
வினையமெண்ணியதிசைதொறுமேவியவேந்தர்
புனையும்வேட்கையாலியாவருந்துதரிற்புகன்றார்.

(இ - புனை,) இத்தன்மையுள்ள சிந்தாமணியைச் சந்திரசேன மகாராசன் தரித்து வாழுநாளில், அப்படித் தரித்துக்கொண்ட மணியின் பெருமையையெல்லாம் தேசங்கடோறும் பொருந்திய அரசர்களெல்லாரும் சந்தேகமில்லாமற் கேள்விப்பட்டு, அதைத்தாங்கள் தரித்துக்கொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தினால் தாதர்முன்னிலையிற் சொல்லியனுப்பினர்கள். எ-று.
மயல் - சந்தேகம். (கூ)

அன்பில்வேட்டனர்சிலர்சிலர்வினையினையடுபோர்
வன்பில்வேட்டனரன்னதுமனங்கொண்டமறவோர்
னென்புயங்களுமென்னுடைவரங்களுமிறந்த
பின்புநல்குவேன்மணியெனவஞ்சினம்பிழைத்தான்.

(இ - புணை.) சிலபேர் சிநேகத்தினால் விரும்பினவர்களாய்க் கேட்டனுப்பினர்கள் ; சிலபேர் கொல்லுகின்ற போர்வினையில் வன்பினால் வாங்கிக்கொள்வதாக விரும்பிச் சொல்லியனுப்பினர்கள். அப்படி யவர்களாற் சொல்லியனுப்பப்பட்ட தூதர்கள்வந்து சொல்லியதை அறிந்த சந்திரசேனமகாராசன் என்புஜபலமும் யான்பெற்றவரங்களு மொழிந்தபின்பு என்னிடத்திலிருக்குஞ் சிந்தாமணியைத் தருகிறேனென்று (தூதர்களுக்குச் சொல்லியனுப்பி) அதனை விரும்பிய மன்னர்மேல் தன்மனதில் வைரங் கொண்டவனையினன். எ - று. 'ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற் செல்லும்வாய் நோக்கிச் செயல்' என்னும் திருக்குறளின்படி அன்பினாலும் வன்பினாலும் வினைமுடிக்கத்துணிந்தாரென்பார் 'அன்பில்வேட்டனர் சிலர் வன்பில் வேட்டனர் சிலர்' என்றார். வைரங்கொள்ளுதல் அரசர்க்குரிய ஆற்றல்களிலொன்றும். (கo)

அன்னவாசகங்கேட்டலுமனிகாவலரின்
மன்னுமாகதாரியர்மத்திரர்மராடர்
துன்னுகேகயர்சாளுவரவந்தியர்துருக்கர்
கோசலர்சஞ்சையர்கவுரவர்விராடர்.

(இ - புணை.) சந்திரசேன மகாராசன் சொல்லியனுப்பிய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் இவ்வுலகத்தை யாளுகின்ற அரசர்களில் பொருந்திய மகததேசத்தாரும் ஆரியதேசத்தாரும் மாத்திரதேசத்தாரும் மராடதேசத்தாரும் நிலையாகிய கேகயதேசத்தாரும் சாளுவதேசத்தாரும் அவந்திதேசத்தாரும் துருக்கதேசத்தாரும் பிரகாசியாநின்ற கோசலதேசத்தாரும் சஞ்சயதேசத்தாரும் கவுரவதேசத்தாரும் விராடதேசத்தாரும். எ-று. (கக)

என்றுபேர்பெறுமன்னவர்யாவருமிகலிக்
கன்றுநெஞ்சினர்கடற்படைசென்றெதிங்கடுகி
வென்றுகோடுமுச்சினியையென்பதுவிளம்பிச்
சென்றுசூழ்ந்தனர்சூழ்ந்தலுஞ்சந்திரசேனன்.

(இ - புணை.) என்று சொல்லப்பட்ட கீர்த்திபெற்ற அரசர்களெல்லாரும் பகைகொண்டு கோபமுள்ள மனத்தராய் சமுத்திரம்போலும் படைகளையுடையவர்களாய் மூடுதி, உச்சினீ பட்டணத்தைவென்று நமது கைவசப்படு

த்திக் கொள்ளுவோமென்று சொல்லிக்கொண்டு, அந்தப்பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்; அப்படிச்சூழ்ந்தமாத்திரத்தில் சந்திரசேனமகாராசன். எறு கோடும் கொள்வோம். கோறும் வேறும் என்றுற்போல். (கஉ)

பகைகளர்வந்துதன்பதிவளைத்தன்னைக்கேட்டு
மிகைகடுஞ்சினன்வெருவலன்னினையிதன்றெனன்னனன்
மூகைகொள்கண்ணிபுனைந்தமுடிமுடாய்யொளிக்கலணும்
புகையுந்தீபமுமயினியும்புனலொடுமேந்தி.

(இ - புரை.) பகைவர்வந்து தன்னகரத்தைச் சூழ்ந்து கொண்டார்களென்று கேள்வியுற்றுத் தளராத மனத்தையுடையவனுய் அஞ்சாமலும், வேறொரு காரியஞ்செய்ய எண்ணுமலும், மலரும் பக்குவமுள்ள அரும்புகளால் தொடுத்த பூமாலையும் சந்தனமும் மிகுந்த ஒளியுள்ள ஆபரணங்களும் தூபமும் தீபமும் அன்னமும் திருமஞ்சனமும் ஏந்திக்கொண்டு. எ - று. (கஙு)

வேறு.

மாகாளமென்றுபெயர்மன்னுமான்மன்னும்
பூகாடவிச்சினகரத்தினிடைபோகி
யேகானுபூதியொடிருந்தியமமேவு
மோகாதிகத்தையுமுனிந்துபுறமாக்கி.

(இ-புரை.) மாகாளம் என்று பெயருள்ளதாய்ப்பரமசிவன் வீற்றிராநின்ற கழுகஞ்சோலைசூழ்ந்த ஆலயத்திற்போய்ப் (பரமசிவத்தின் திருவடியில் மனம் அயிக்கமாகும்படியான) நிஷ்டையிலிருந்து, இருதயத்திற்பொருந்திய மோகாதிசயங்களை யெல்லாங்கடிந்து புறமாகநீக்கி. எ - று. சினகரம்-கோயில். (கச)

மறையாகமங்களிடைமந்திரமனைத்துங்
குறையாமலோதியருளின்குரவர்கூறு
முறையாலருச்சனைசெய்தன்பினெடுமுந்நீர்க்
கறையார்களத்தனடியைக்கருதினனே.

(இ - புரை.) வேதங்களிலும் ஆகமங்களிலும் சொல்லப்பட்ட மந்திரங்களை யெல்லாம் குறைவுபடாமற்கூறி தோத்திரஞ்செய்து, அருளிலை ஆசாரியர் அனுக்கிரகஞ்செய்த முறைமையின்படி யருச்சித்து, சமுத்திரத்தில் உண்டாகிய விஷந்தங்கிய கண்டத்தையுடைய மாகாளேசுவரனுடைய திருவடிகளைத் தியானித்தான். எ - று. (கரு)

இவ்வாறுபூசையினைமவன்புரியுமேல்லை
யவ்வாலயத்தணுங்கியாயர்குலமன்னுஞ்

செவ்வாய்மடக்கிளியனுள்சிறுயவனேடே
மைவ்வாரணத்தூரிவையானடிவணங்கா.

(இ புனை.) சந்திரசேன மகாராசன் இத்தன்மையாகப் பூசைசெய்துகொ
ண்டிருக்குஞ் சமயத்தில், ஆயர்குலத்திற் பிறந்த சிவந்தவாயையும் அறியாமை
யையும் கிள்ளையின் (மொழியொத்த இனியமொழியையு முடைய) ஒருமாதா
னவள் தன்புத்திரனுடன் அந்த ஆலயத்திற்போய்க் காரிய யாணத்தோலைப்
போர்வையாகப்போர்த்த மாகாளேசுவரன் திருவடிகளைவணங்கி, எ-று. (கசு)

மனையிற்றிரும்பிவரலும்மவடன்மைந்த
னினைவுற்றுநென்னலிடைநீண்முடிமகீபன்
முனைவற்றொழும்பரிசுகண்டதனைமுன்ன
நனைமுற்றுபோதுகொடுநாடிவழிபடுவான்.

(இ - புனை) தன்வீட்டிற்குத் திரும்பிவரவும், (மறுநாள்) அவள்புத்திரன்
நெடியமகுடத்தையுடைய சந்திரசேனமகாராசன் மாகாளேசுவரனை மனதில்
தியானித்து, முந்தியநாள் தொழுததன்மையைத் தன்மனதிலுணர்ந்து, அரு
ம்புகள்முதிர்ந்த நல்ல மலர்களைக்கொண்டு முறைமையிலேடு பூசைசெய்பவ
னாய். எ - று. (கள)

வினையுற்றமாலிகைவிளக்குவடிதெண்ணீர்
புனையற்றதெள்ளமுதுபொன்னணிகளாடை
தனையுற்றபாசடைமணற்கொடுசமைத்தாங்
குனையற்றபூசனைசமாதிநிலையுற்றான்.

(இ-புனை) (பூசாத் திரவியங்களெல்லாந் தனக்கு நேரிடாமையால்) பச்சி
லைகளையும் மணலையுங்கொண்டு இவைகள் வாசனைபொருந்திய பூமாலையென்
றும், இவைகள் தீபங்களென்றும், இவைகள் வடித்த தெள்ளியதிருமஞ்சனமெ
ன்றும், இவைகள் குற்றமற்ற நல்ல அமுதமென்றும், இவைகள் பொன்னுபர
ணங்களென்றும், இவைகள் வஸ்திரங்களென்றும், எற்படுத்திக்கொண்டு சொ
ல்லுக்கடங்காத் (தன்மையுள்ள) பூசைசெய்தலாகிய சிவநிஷ்டையிலிருந்
தான். எ - று. ஆங்கு - அசை. (கஎ)

நம்புசிவநிட்டையினிருக்குமிடநண்ணிக்
யெம்பிமனவாவெனவியம்பவுமெழாதே.

(இ - புணா.) ஐம்புலன்வழியில் செல்லுகின்ற மனத்தைப்பற்றித்து, நம் புதலோடு சிவநிஷ்டையி விருக்குமிடத்திற்குக் கும்பம்போன்ற கனங்களையுடைய தாயானவள் தன்புத்திரனுடைய பசியைக்குறித்துப்போய், தம்பீ! (போஜனசஞ்செய்ய) வீட்டுக்கு வருவாயென்று அழைக்கவும் அவன் எழுந்திராமல் எ - று. மகனை எம்பி என்றது அன்பில்வந்த வழுவமைதி. (ஙஙு)

ஈசனதடிக்கமலமீதியவண்டைப்
போசமுறலைத்தவனிருந்தபடியெல்லா
நேசமுறுமன்னையறியாதிஃதுநேர
மாசிலுணவுண்பதுமறந்ததெதுபோலாம்.

(இ - புணா.) பரமசிவனுடைய திருவடித் தாமரையினிடத்தில் தன் இருதயமாகிய வண்டினை அன்பு பொருந்தவைத்துத் தன்மகனிருக்குந் தன்மைகளை (புத்திரனிடத்தில்) ஆசைமிகுந்த தாயானவள் அறியாமல, இந்த விளையாட்டொன்று உண்டாக, நல்லபோசனஞ்செய்வதை மறந்திருப்பது என்னகாரணமோ? என்று. எ - று. போல் ஆம் - அசைகள். (உ0)

என்றுவெகுளாமகனையெற்றினளடர்த்தாள்
வன்றிறலிரணுமமணனெனவைத்த
மின்றிகழ்கருஞ்சிலையெடுத்தகலவீசிக்
கன்றியமனத்தண்மனையிற்கடிதுபோனாள்.

(இ - புணா.) இவ்வாறு சொல்விக்கோபித்து, மகனைக் கையால் மோதியடித்தாள்; (அதுவுமல்லாமல் சிவபூசையில்) மிகுந்த உறுதிப்பாட்டையுடைய அந்தப்புத்திரன் சிவலிங்கப் பெருமானைப் பாவனைசெய்துவைத்த ஒளிவிளங்குகின்ற கருங்கல்லையெடுத்துத் தூரத்தில் எறிந்துவிட்டு, வெம்பியமனதையுடையவளாய்த் தன்வீட்டில் விரைவாகச்சென்றாள். எ - று. (உக)

எந்தையையெடுத்திவணகற்றினளெனத்தன்
சிந்தைமிகவொந்துமுறையிட்டழுதுசேயோன்
வெந்துயர்பொறுமலிருகன்னல்விழியாறுய்
முந்தியவுயிர்ப்புமறமூர்ச்சனையடைந்தான்.

(இ - புணா.) (அவள் எறிந்துவிட்டுப்போனதைப் பார்த்த பரிசுத்தனை அந்தப்புத்திரன்) என் ஐயருகிய பரமசிவனை இவ்விடத்திலிருந்தெடுத்தெறிந்துவிட்டாளென்று தன்மன மிகவும்வருந்தி முறையிட்டழுது, தனக்கு நேரிட்ட துயரத்தைச் சகிக்கமாட்டாமல் இரண்டுநாழிகையளவாயில் கண்களையுந்திறவாமல் சுவாசமுமில்லாமல் மூர்சனையடைந்தான். எ - று. கன்னல்-நாழிகை.

(வேறு.)

கணன் விழித்து நோக்கலும்பனைமுயமனெலாகவமணிவி
ளக்கம், பழித்துநின்றிமைக்கும்புரந்தராலயம்போற்பழுதறவிளங்கு
தல்கண்டா, னெழித்தனள கடிந்த விலிங்கந்திப்பியமாயொளிமணி
யொண்சுடர்ச்சோதி, கொழித்துநின்றிருந்தன்மைகண்டுள்ளங்குளி
ர்ந்தனனதிசயங்கொண்டான்.

(இ - புணை.) பின்பு மூர்ச்சை தெளிந்து கண்கள்விழிக்கவே, பழையதா
ன தனது இல்லம் முழுவதும் நவரத்தினங்கள் ஒளிபிகுந்து மாறுமல் பிரகா
சித்துக்கொண்டிராநின்ற தேவேந்திரன் கோவில்போல விளங்குவதைக் கண்
டான்; பின்னும் தன்தாயானவள் எடுத்தெறிந்துவிட்ட சிவலிங்கமானது திவ்
வியமானதாய் ஒளியுள்ள ரத்தினம்போலக் கிரணமுள்ள சோதியைக் கொழி
த்துக்கொண்டு அழியாத்தன்மையுடன் இருப்பதையுங்கண்டு, மனங்குளிர்ந்து
அதிசயங்கொண்டான். எ - று. புரந்தரன் - இந்திரன். திவ்வியம் என்பது
திடபியம் என்றுயிற்று. (உக)

தொல்லையம்பிறவிக் கடற்கணையேறத்தொண்டெனு மம்பியைக்
காட்டும், அல்லணிகண்டன்பூசனைப்பயனே வல்லதுதிருவிளையாட்
டோ, முல்லையங்கண்ணியெங்குலமுதல்வர்முறைசெய்தகல்வினைப்
பயனே, எல்லையிறவத்தோர்தமக்குமெய்தாததெளியனுக்கெய்தியதெ
ன்னே.

(இ - புணை.) பழமையாகிய பிறப்பென்னுஞ் சமுத்திரத்தைக் கடந்து
மோக்ஷமென்னுங்கரையிலேறுட்படி அடிமைத்திறமென்னும் தெப்பத்தைக்
காட்டிய இருள்நிறந்தங்கிய கண்டத்தை யுடைய பரமசிவனைப் பூசித்தலால்
உண்டாகும் பிரயோசனமோ ? அல்லது, அவருடைய திருவிளையாட்டோ ?
முல்லைப்பூவால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையணிந்த என்குலமுதலோர்
பூர்வம் முறைதவறுமல் செய்த புண்ணியத்தினால் உண்டாகும்பயனே ? அன
வில்லாததவத்தையுடையவர்களுக்கும் கிடைப்பதற்கரிய இப்பெருப்பேறு எளி
யனுக்குக் கிடைத்தது என்னகாரணமோ ? எ - று. அம்பி - தெப்பம். (உச)

சிறியருக்கியல்புதீவினையிழைத்தல்சிறியவர்சிற்றியலீதன்
றறிஞருக்கியல்புபொறுப்பதன்றுரைப்பரா,தலாலடியனேனன்னை
நெறியிலாதிழைத்தசிற்றியல்பொறுத்திநிமலனேகருணையங்கடலே
மறியுறைகரத்துவரதனேயென்னவாழ்த்தினன்மாசிலாத்தவத்தோன்.

(இ - புணை.) பிழைசெய்தல் சிறியோர்களுக்கியல்பு; சிறியோர்கள் பிழை
செய்த லிவ்வாறுதானென்று பொறுத்துக்கொள்ளுதல் பெரியோர்கள் கடன்

என்று சொல்லுவார்கள். ஆதலால், அடியேன் தாயானவள் முன்தமையில்லா மல்செய்த குற்றத்தை தேவரீர் பொறுத்துக்கொண்டருளவேண்டும்; நிருமல னே! அழகியகிருபைக்கடலே! மான்பொருந்திய திருக்கரமுடைய வரதனே! என்று வாழ்த்திணன் அக்குற்றமற்ற சிறுவன். எ - று. வரதன் - மாறுதவரந் தருபவன். (உரு)

தன்மனைபுகுந்துதுயின்றகற்றுயும்விழித்தலுந்தன்மனையெல்லாம்
பொன்மயமாகக்கண்டுமெய்ப்புளகம்பொங்கிடமகவினைநோக்கி
நன்மகவீன்றேனென்றுளங்களித்துராபதிக்குரைப்பனென்றுல்லை
மன்மனைகுறுகிப்புகுந்தவாறெல்லாமன்னனுக்குரைத்தலுமன்னன்,

(இ - புணை.) (இவ்விடத்தில் இவனிப்படி யிருக்கத் தன்மகன் சிவலிங் கமாகப்பாவனைசெய்துவைத்துப் பூசித்த கருங்கல்லையெறிந்துவிட்டு) தன்வீட் டிற்போய் நித்திரைசெய்த தாயானவளும் நித்திரை தெளிந்து பார்த்தமாத்திர த்தில், தன்வீடெல்லாம் பொன்மயமாயிருக்கக்கண்டு, சரீரத்தில் புளகமுண் டாகப் புத்திரனைப்பார்த்து, நல்லபுத்திரனைப்பெற்றேனென்று மனங்களித்து, (இச்செய்தியை) அரசனுக்குச் சொல்லுவேனென்று விரைவாக அரண்மனை க்குப்போய் அரசனைக்கண்டு, நடந்தசெய்திகளெல்லாம் சொன்னள்; அதைக் கேட்ட அரசன். எ - று. (உசு)

மந்திரவிதியினமைச்சருமாதிமறைவலாளரும்புடைசூழத்
தந்திரந்தழுவச்சேரிசென்றணுகித்தமனியமனைவளைநோக்கி
யந்தரத்தகடுகிழியநீள்பசும்பொனாலயம்வலங்கொடுபுகுந்து
நிரபவுலிதாளிணைவிதிமுறைதொழுதான்.

(இ - புணை.) மந்திராலோசனையின் முறைமையுணர்ந்த மந்திரிகளும் முதன்மையாகிய பிராமணர்களும் புடைசூழ்ந்துவரவும், நால்வகைச்சேனைகளு ஞ்சூழ்ந்துவரவும் ஆயர்சேரியிற்போய்ச் சேர்ந்து, பொன்மயமா யிராநின்ற வீட்டின் வளப்பத்தைப்பார்த்து, அண்ட முகடு கிழியும்படி உயர்ந்திராநின் ற ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து, சந்நிதியிற்போய்ச் சந்திரசேனனென் னும் அந்த அரசன் சந்திர சேகர னெகிய பரமசிவனுடைய திருவடிகளை முறை ப்படித்தொழுதான். எ-று. (உஎ)

வேதமும்வேதவிரிஞ்சனுமாதிவிண்டுவுமண்டருங்காண
ஆதியம்பரமனடியவர்க்குருகியருளினலடைந்தனனென்னுங்
காதலிற்பொதுவர்மதலையைத்தழுவிக்காவலன்களிமகிழ்வெய்த
ஓதநீருவாவினெனித்தினமூதூருவகையாலொலியெழுந்ததுவே.

(இ-புரை.) அப்படித்தொழுத அரசன் நான்கு வேதங்களும் வேதங்களை யுணர்ந்த பிரமதேவனும் அப்பிரமனுக்கு ஆதியாகிய விஷ்ணுவும் மற்றுமுள்ள தேவர்களுங் கண்டறியாத யாவர்க்கு மாதியாகிய பரமசிவன் அடியார்க்காகத் திருவுளமிரங்கிக் கிருபையினல் திருக்கோயில்கொண் டமர்ந்தாரென்கிற அன் பினல், அந்த இடைப்பிள்ளையைத் தழுவிக்கொண்டு, அரசன் மிகுந்த மகிழ்ச் சியையடைய, (அதைக்கண்ட) அந்தப்பழய நகரத்தாருக்குண்டாகிய சந்தோ ஷத்தினல் கோஷித்த ஆரவாரமானது பருவகாலத்தில் சமுத்திரங் கோஷிப் பதுபோல் இருந்தது. எ-று. பொதுவர்-இடையர்-உவா-பௌர்ணமை. (உஅ)

வரதவமதலூசனைபுரிந்தவண்மையுந்தண்மதிக்குழவிப்
புரிசடையண்ணலருளினுங்கடந்தபுதுமையும்புரவல்கண்டு
கனையிலாவுவகையுற்றதுகாரங்களிப்பதுங்காணவந்தனன்போற்
குனைகடனடுவுட்கதிர்க்குலம்பரப்பியெழுந்தனன்குணதிசைவெய்யோன்.

(இ - புரை.) சிரேஷ்டமுள்ள தவத்தையுடைய அந்தப்புத்திரனைவண் பூசைசெய்தவளப்பமும், குளிர்ச்சிபொருந்திய இளம்பிறையை யணிந்தமுருக் கிய சடாமகுடத்தையுடைய பரமசிவன் திருவருளினல் அவ்விடத்துத் திருக் கோயில்கொண்டமர்ந்த அற்புதமும் சந்திரசேன மகாராசன்கண்டு, ஊகில் லாத சந்தோஷம் அடைந்ததையும் நகரத்தாரெல்லாங் களிப்படைந்ததையுங் காணவந்தவன்போல, ஒலிக்காநின்ற சமுத்திரத்தினடுவில் ஆயிரங்கிரணங் களையும் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் சூரியன்உதயமானன். எ-று. வரம்-மேன்மை. (உக)

மூதெயில்வளைந்தகாவலரொற்றர்முழுதுமற்புதமெனவேகித்
காதவிழிதழிச்சடிலவானவனைச்சனிப்பிரதோடத்தினைருநாள்
காதுவேன்மன்னன்வழிபடக்கண்டகாளைசெய்பூசனைமுதலா
ஆதியம்பரமன்மேன்றியவளவுமவரவரசருக்குரைத்தார்.

(இ - புரை.) பழமையாகிய மதிலைச்சூழ்ந்து காவலராயுள்ள ஒற்றர்க ளெல்லாம் இது அதிசயமென்று பேசிக்கொண்டு சென்று, மகரந்தத்துடன் மலர்ந்த கொன்றைப்பூமாலையணிந்த சடாமகுடத்தை யுடைய பரமசிவனைச் சனிப்பிரதோஷத்தில், ஒருகாள் பகைவஞாக்காயும் வேலாயுதத்தையுடைய சந்திரசேனமகாராசன் பூசைசெய்யக்கண்ட ஒரு இடைப்பிள்ளையும் அவ் வாறுக செய்யத்தொடங்கிய பூசைமுதலாக ஆதியாகிய நம்மிறைவன் தரி சனங் கொடுத்தவளவும் (வழுவாமல்) ஒவ்வொருவரும் அரசர்களுக்குச் சொ ன்னர்கள். எ - று. (கo)

தம்முடிதுளக்கிக்கேட்டவேல்வேந்தர்தனித்தனிதண்ணெனவெ
ருவிக், கொம்மையங்கொங்கைக்கொடிபுனைதுகிற்கோகிலமிரங்கு

தீங்குநலி, யம்மைபன்னாளணடியவணிந்துவசனைபவமதித்தற்தே தா, வெம்மையினடைடங்தே மெனத்தமைமுனிந்துமேற்செயும் வினையமீ

(இ - புரை.) (போருக்கெனவந்து மதிலை வளைந்துகொண்டுள்ள) வேலேத்து மரசர்கள் தனித்தனி முடியசைத்து (இது ஆச்சரியமான காரியமா யிருக்கிறதென்று) தனித்தனியாக கடுக்கமுறப்பயந்து, இந்தச் சந்திரசேனமகாராசன் குவிந்த அழகுள்ள தனபாரத்தையும் பூங்கொடியையொத்த இடையினையும் குயிலோசைபோல வசனிக்கும் மதுரமுள்ள மழலைச் சொற்களையுமுடைய பார்வதிதேவியாருக்கு இடப்பாகமளித்தருளிய பரமசிவனுடைய மெய்யன்பனையிருக்கின்றான்; இதையறியாமல் இவனை அவமதித்துப் பகைகொண்டு வந்தோம்; என்று தங்களைத்தாங்களே வெறுத்துக்கொண்டு இனிநாம் செய்வேண்டியகாரிய மிதுவென்கிறதாக நினைத்து. எ-று. (கக)

கடற்படையனைத்துந்தத்தமூர்க்கேகக்கதுமெனப்பணித்தமைதிர்ந்தா
ரடற்கருஞ்சேனைச்சந்திரசேனனன்பமேதையமையுமென்றெண்ணிப்
படைக்கலந்தாங்தகைபினராகிப்பதிபுகுந்தரசனைப்பணிந்து
விடற்கருங்கட்புவேண்டினரிவனும்விள்ளலாகட்பெதிர்விழைந்தான்.

(இ - புரை.) சமுத்திரம்போல மிகுந்த தங்கள்தங்கள் சேனைகளையெல்லாம் தங்களூருக்குப்போகும்படி விளாவாக உத்தரவுசெய்தனுப்பிவிட்டு, யாவராலும் போர்செய்வதற்கரிய சேனைகளையுடைய சந்திரசேன மகாராசனுடைய சிநேகமே நமக்குப் போதுமானதென்று கருதிக்கொண்டு, தங்கள்கைகளிலிருந்த ஆயுதங்களையெல்லாம் நீங்கினவர்களாய், உச்சினீ பட்டணத்திற்குட்போய் அந்தஅரசனைக்கண்டுவணங்கி, அரசனே உம்முடையசிநேகம் எப்போதும்நீங்காமலிருக்கும்படி வேண்டினேமென்று பிரார்த்தித்தார்கள். அதைக்கேட்ட அவ்வரசனும் (அவர்களைப்பார்த்து,) அரசர்களே! உங்களுடைய சிநேகமும்என்னிடத்திலெப்போதும்நீங்காமலிருக்கும்படி நானும் விரும்பியிருக்கிறேனென்றான். எ - று. கதும் என்பது விரைவுப்பொருளைத் தருமோரிடைச்சொல். ()

மன்னனுகட்பின்மன்னருமேகிமாகாளரதனைவணங்கிப்
பின்னரோதாறுவன்பூசனைக்கெதிர்ந்தபிஞ்ஞகன்றனினைதொழுது
முன்னர்நின்றிறைஞ்சுமதலையைத்தழுவிமுகமனன்ககமகிழ்ந்தனையா
இந்நிலத்தாயர்குலங்கட்குநீயேயயிறைமகனெனவிசைத்தார்.

(இ-புரை.) இவ்வாறு சிநேகங்கொண்டபின்பு சந்திரசேனமகாராசனும் நட்பினராகிய மறுதேசத்தரசர்களும்போய் மாகாளேசுவரனை வணங்கி, உடனே இடைப்பிள்ளை செய்தபூசைக்காக எழுந்தருளிவீற்றிராநின்றசிவலிங்கமூர்

த்தினையும்டணிந்து, தங்களெதிரில்நின்று வணங்கிய அந்தப்பிள்ளையைத் தழுவிக்கொண்டு, மகிழ்ச்சியுடன் நல்லஉபசார வார்த்தைகள்சொல்லி, இந்த உலகத்திலிருக்கும் ஆயர்குலத்துக் கெல்லாம் நீயே யிறைவனையிருக்கக்கடவையென்று சொன்னார்கள். எ - று. தொறுவன் - இடையன். (௩௩)

(வேறு.)

அக்காலையின்வந்தானடலடையார்புரநூறப்
புக்கார்கலியிலங்கைப்பதிபுகையத்தழன்மடுத்துக்
கைக்கார்முகெடியோன்றனைக்கலுழன்றனிற்பொறுத்த
மிக்கான்கவிகுலராயனனுமானெனுமேலோன்.

(இ - புரை.) இவ்வாறு அரசர்கள் சொன்னபோது பலம்பொருந்திய பகைவராகிய அரசர்களுடைய பதியை அழிக்கும்படிப்போய்ச் சமுத்திரத்தினடிவிலிருக்கும் இலங்கையானது புகைந்தெரியத்தக்கதாகத்தீயூட்டி, கையினிடத்துக் கோதண்டத்தையுடைய இராமமூர்த்தியைப் போர்களத்திற் கருடனேப்போற்றாங்கிய மிகுந்த பராக்கிரமசாலியும் வானரர்களுக்குப் படைத்தலைவனுமாகிய அனுமானென்னும் பெயரையுடைய மேலானவன். எ - று. புக்கு - புகுந்து, ஆர்கலி-சமுத்திரம். கவி - குரங்கு. கார்முகம் - கோதண்டம். கலுழன் - கருடன். (௩௪)

அம்மாருதிவரக்கான்டலுமடிவீழ்ந்தடல்வேந்தன்
செம்மாந்தலர்மழைதூய்ப்பலவழிபாடுகள்செய்தே
யெம்மானிவணெய்தத்தவமென்செய்தனமெனவே
விம்மாவுளங்களித்தார்வமோடிருப்பக்கவிவீரன்.

(இ-புரை.) அத்தன்மையுள்ள அனுமான் வந்ததைக் கண்டமாத்திரத்தில் பலமுள்ள சந்திரசேனமகாராசன் அவர்பாதத்தில் சேவித்துக்கொண்டு, மிகுந்த களிப்படைந்து, மேகம்பொழிவதைப்போல மலர்களைச்சொரிந்து, பல வகையாகிய ஆராதனைகள்செய்து, எம்மிறைவன் இந்த நாட்டில் வரும்படி நாங்கள் என்னதவஞ் செய்தோமோவென்று துதிசெய்து, மனக்களிப்படைந்து ஆசையுடனிருந்தான்; அப்படியிருக்கும்போது அனுமான். எ-று. (௩௫)

கோபாலர்தங்குலச்சேயினைக்குளிர்மார்புறவணைத்தே
பூபாலர்கள்கேண்மின்னுறுபொருளொன்றையுமுனரா
மாபாலனிங்கிவன்செய்திடுவழிபாட்டினுண்மகிழ்ந்தே
காபாலிவந்தருள்செய்தமைகண்டூரிலையெல்லாம்.

(இ-புரை.) ஆயர்குலப்புத்திரனைக் குளிர்ச்சிபொருந்திய தன்மார்பில் அணைத்துக்கொண்டு, அரசர்களே! கேளுங்கள், உலகிற்பொருந்திய யாதொரு

ருவொருவனையும் அறியாத பெருமைபொருந்திய இந்தப்புத்திரன் செய்த ஆராதனைக்குத் திருவுள மகிழ்ந்து, பரமசிவன் தமது தரிசனம் பாலித்ததைக்கண்டீர்களா? இவைகளெல்லாம். எ - று. (நகசு)

இறைசந்திரசேனன்டுவியேழும்புகழ்ரவோன்
அறையுஞ்சனிவாரப்பிரதோடந்தனினரனை
மறையின்படிவழிபட்டமைகண்டிங்ஙனமதலை
பொறையொன்றியமனத்தாற்புரிபூசாபலம்போலும்

(இ-புணை.) ஏழுலகமும் புகழத்தக்க வல்லமையுடையவனாகிய சந்திரசேன மகாராசன் (வேதாகமங்களால்) விசேஷமாகச்சொல்லப்படுகிற சனிப்பிரதோஷத்தில் முறைமைப்படிப் பரமசிவனைப்பூசித்ததைக்கண்டு, இந்தப்புத்திரன் சாந்தந்தங்கிய மனத்துடன்செய்த பூசையின் பலமாகும். எ-று. மனத்தாற்புரி பூசை - மானதபூசை. (நஎ)

அப்பூசனைகண்டார்பெறும்பேறித்துணையளவோ
இப்போதிவன்வழியாய்வருமெட்டாந்தலைமுறையிற்
கைப்போதகமழைக்கும்மழைக்கார்வண்ணனைவளர்ப்பான்
மெய்ப்போதத்துநந்தனெனுங்கோன்றோன்றுவன்விளங்க.

(இ - புணை.) அத்தன்மையுள்ள சனிப்பிரதோஷ பூசையைக்கண்டவர் பெறும்பேறு இவ்வளவிலடங்குவதோ? இப்போது பூசைசெய்த இந்தப் புத்திரனுடைய சந்ததியாய் வருகின்ற எட்டாந்தலைமுறையில் (முதலைவாயிற் சிக்குண்ட) துதிக்கையையுடைய ஒரு காட்டானையானது அழைக்க அதைரக்ஷித்த மேகவண்ணங்கொண்ட மகாவிஷ்ணு (கிருஷ்ணாவதாரஞ்செய்வார்.) அவனைவளர்க்க உண்மை யறிவையுடைய நந்தனென்கிற ஆயர்கோனெருவன் அந்தக்குலம் விளங்கும்படி தோன்றுவன். எ-று. (நஅ)

இன்றேமுதல்வேல்வேந்தர்களெல்லீருமற்றிவனை
நன்றேதருபுகழ்ச்சீதரனெனவேபெயர்சூவில்வீர்
என்றேயடலனுமான்சிவபூசாபலத்தியல்பை
யன்றேதவமதலைக்கினிதருள்செய்தனன்போனன்.

(இ - புணை.) வேலாயுதத்தையுடைய அரசர்களே! நீங்களெல்லாரும் இன்றுமுதல் இந்தப்புத்திரனை நன்மையைத்தருகின்ற புகழினையுடைய சீதரனென்று பெயரிட்டழையுங்களென்று சொல்லி, மேலும் பராக்கிரமமுள்ள அனுமான் அப்போதே சிவபூசையின் கிரமத்தை தவத்தையுடைய அந்தப்புத்திரனுக்கு இனிதாக உபதேசித்தருளிப்போனர். எ - று. (நகக)

காற்றின்புதல்வன்போயபின்கருதாதமர்செல்லி
மாற்றஞ்சியபடைமன்னனைவழிக்கொள்ளுநம்பதிக்கென்
றாற்றுந்தருகரிதேர்பரியொண்பூண்டுகிலுதவிப்
போற்றுந்தவக்கோபாலனைழைத்தான்புனைதாரான்.

(இ - புரை.) வாயுபுத்திரனுகிய அனுமான் போய்விட்டபின்பு எண்ணற்ற போர்செய்வோமென்று சொல்லிக்கொண்டு வந்து, பின்புசண்டைசெய்யப்பயந்த சேனையுள்ள அரசர்களைப் பார்த்து, நீங்கள் உங்களூருக்குப் போங்களென்றுசொல்லி, வலிபொருந்திய யானைகளுந் தேர்களும் குதிரைகளும் ஒளியுள்ள ஆபரணங்களும் வஸ்திரங்களும் பரிசாகக்கொடுத்து அனுப்பிவிட்டுப் பூமாலையணிந்திருக்கும் அவ்வரசன் போற்றுகின்ற தவத்தையுடைய அந்தப்புத்திரனுடன் தன்னகரத்திலிருந்தான். எ - று. (சo)

நெடுநாளிருவோரூந்திருநிலமாமகள்போகங்
கடவாதினிதருந்திச்சிவன்கழல்பூசனைபுரிந்தே
முடியாவிறுதியினேறினர்முத்திக்கணையென்னப்
படுபாதகவினைவென்றவர்க்குரைத்தான்பழந்தவத்தோன்.

(இ - புரை) அரசனும் ஆயர்குலப்புத்திரனும் நெடுங்காலவரைக்கும் ஒருநாளாவது முட்டுப்படாமல் இவ்வுலகவின்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்து, பரமசிவனுடைய திருவடிகளையும் பூசித்து முடிவில்லாத அந்தியத்தில் மோக்ஷமாகிய கதியிலேறினர்களென்று பிறவிதோறும் பொருந்திய தீவினையைவென்ற நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லியருளினர். எ - று. (சக)

ஐந்தாவது சனிப்பிரதோஷத்தில் சந்திரசேனன்

பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் உஅo.

திருச்சிற்றம்பலம்.

ஆரூவது

சத்தியாதனன் பூசைசெய்த அத்தியாயம்.

பின்னுநான்மறைமுனிவர்பெருந்தவத்தோனே
முன்னைரோதுபிரதோடமும்பூசையின்முறையு
மன்னிநாடொறும்வழிபடுமவர்பேறுவரனும்
இன்னுமெங்களுக்கிருளறவியம்புதியென்றார்.

(இ-ஞை.) இவ்வாறு சூதமுனிவர் சொல்லக்கேட்டுப் பின்னரும் நான்குவேதங்களுமுணர்ந்த தைமிசாரணிய முனிவர்கள் (சூதமகாருஷியைப் பார்த்து) மிகுந்த தவத்தையுடைய சுவாமிகளே! முன்னுஞ்சொல்லிய பிரதோஷகாலமும், அந்தப்பிரதோஷ பூசையின் கிரமமும், இடைவிடாமல் நாடோறும் பூசிப்பவர்கள் பெறும்வரமும், இன்னமும் எங்களுக்கு மயக்கந் தீரும்படிச் சொல்லியருளவேண்டு மென்றார்கள். எ - று. (க)

முன்தைதூன்முனியன்னதைமொழிவலென்றுரைத்தான்
நின்றதெய்குதிர்பதின்மூன்றும்பக்கமாந்திவாவின்
அந்தமாகியமாலையேயிரதோடமாகும்
இந்துசேகரன்விரும்பியகாலமுமிஃதே.

(இ - ஞை.) அவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்; பதின்மூன்றாளாகிய திரயோதசி தினத்தில், பகற்பொழுதின் முடிவாகிய மாலைப்பொழுதே பிரதோஷமாம்; சந்திரசேகரனாகிய பரமசிவன் விரும்பியகாலமும் அதுவே யாமென்று வேதமுணர்ந்த சூதர் கூறியருளினர். எ - று. (உ)

ஆயகாலையினடையலர்திரிபுரமழலிற்
றீயவாணைகழுகிழ்த்தருள்செம்மலையல்லான்.
மாயனன்முகன்முதலியதேவரைவணங்கி
மேயபூசனைபுரிபவர்கரகிடைவீழ்வார்.

(இ - ஞை) அந்தப்பிரதோஷ காலத்தில் தேவவிரோதியர்களுடைய திரிபுரங்கள் அக்கினியாற்றீயும்படி ஒளிபொருந்திய புன்னகைசெய்தருளிய பரம

சிவனையேயன்றி, விஷ்ணு பிரமன் முதலாகிய தேவர்களை வணங்கி விருப்பிப் பூசைசெய்கின்றவர்கள் நரகத்தில் விழுவார்கள். எ - று. (கூ)

சொன்னகாலையிலீசனைவழிபடுந்தூயோர்
மன்னுமாக்கடலுலகந்தபார்முழுவதும்வணங்க
முன்னுபோகங்கள்யாவையுமுறையினிற்றுய்த்துப்
பின்னர்வீற்றினிதிருப்பராற்பேரின்பவீட்டின்.

(இ - புரை) மேற்சொல்லிய பிரதோஷகாலத்தில் பரமசிவனைப் பூசை செய்கின்ற பரிசுத்தர்கள் நிலைபெற்ற பெரிய கடல்சூழ்ந்த உலகத்தவர்களெல்லோரும் வணங்கும்படி (அரசர்களாய்ப்பிறந்து,) விரும்பிய போகங்களையெல்லாங் கிரமமாக அனுபவித்துப் பின்பு மோக்ஷவீட்டில் இனிதாக வீற்றிருப்பார்கள். எ-று. (சு)

அனையகாலையினருச்சனைபுரிந்துவீடடைந்தார்
எனையரென்றுநீர்வினவுதிரேலஞ்சினைசக்கேன்
வினையவென்றியான்விதற்பதேசாதிபனெழிலாற்
றனையொவ்வாதவேள்காமுறுஞ்சத்தியாதனனை.

(இ - புரை.) அத்தன்மையுள்ள பிரதோஷகாலத்தில் பரமசிவனை அருச்சித்து மோக்ஷமடைந்தவர்கள் யாவரென்று நீங்கள் வினவுவீராகில், அதைச் சொல்லுகிறேன் கேட்பீராக; போர்த்தொழிலில் வெற்றியை யுடையவனும் விதற்ப தேசாதிபதியும் மன்மதனும் ஒவ்வாத (சவுந்தரியமுள்ளவனுமான) சத்தியாதனனென்னும் பெயருள்ள ஒரு அரசன். எ - று. காமமுறுமென்பது விகாரவகையான் காமுறுமென நின்றது. காமம் உறும் எனப் பிரித்துக் கொள்க. (எ)

அறிவினீதிபின்வாய்மையினமைச்சினினழகிற்
பிறிதில்கல்வியிற்பெருமையினிருநிதிப்பெருக்கிற்
செறியுமூதரணுடைமையின்விரதத்திற்றிறல்வேல்
எறியலூறஞ்சாக்கடற்படையுடையினிசையின்.

- புரை.) அறிவினாலும் நீதியினாலும் சத்தியத்தினாலும் ஆலோசனையும் அழகினாலும் ஒப்பு வேறில்லாத கல்வியினாலும் பெருமையினாலும் பொருள் மிகுதியினாலும் அழியாமல் பழமையாகிய நால்வகை யரண்களையுடைமையினாலும் வீரத்தினாலும், வெற்றிபொருந்திய வேலாயுதத்தைப் பகைவர்கள் தங்கள்மேலெறிய அதனால் காயத்துக்குப் பயப்படாத சமுத்திரம் போன்ற சேனைகளை யுடைமையினாலும் புகழினாலும். எ - று. நால்வகை அரண்களாவன - மதிலரண் அகழரண் மலையரண் காடரண். (ஏ)

மற்றுமின்னன தருமிறைமாட்சியின்மலிவிற்
கொற்றவேந்தரினவனியினிகரிலாக்குரிசில்
பற்றலார்கள்வந்தடிதொழுகானிலம்பரித்தாங்
குற்றகானினிலவன்பகையாகியவுரவோர்.

(இ - புணை.) முன்சொன்னவைகளுமல்லாமல் இவைகள்போல இன்னமும் விசேஷ குணங்களமைந்த அரசுக்குரிய பெருமையின் மிகுதியினல் செயம்பெற்றிருக்கும் வேந்தர்களுக்குள் இந்த வுலகத்தில் ஒப்பில்லாத வாணெய்வினங்கும் இவ்வரசன், பகைமன்னர் வந்து தன்பாதத்தை வணங்கும்படித் தன்தேசத்தை யாண்டுகொண்டிருக்குநாளில், அவனுடையபகைவர்களாகிய பலமுள்ள வேந்தர்கள். எ - று. (எ)

விண்டலம்புகழ்சாலுவதேசத்தின்வேந்தர்
கொண்டலன்னதுன்மருடணன்முதலியோர்குழாங்கொண்
டெண்டிசாமுகந்தூளியின்மறைந்திடவெழுந்து
மண்டுதானையாற்சத்தியாதனன்பதிவளைத்தார்.

(இ - புணை.) தேவலோகத்தாரும் புகழத்தக்க பெருமையுள்ள சாலுவதேசத் தரசர்களாகிய மேகத்தையொத்த துன்மருடணன் முதலானவர்கள் கூட்டமாகச் சேர்ந்து, அஷ்டதிக்குகளும் தூளியிலல் மறையும்படி எதிர்சென்று நெருங்கிய நால்வகைச் சேனைகளால் சத்தியாதனனுடைய நகரத்தை வளைந்து கொண்டார்கள். எ - று. (அ)

முகையுடைந்துதார்மதுமழைபிலிற்றிடமுல்லை
நகைமடந்தையர்முலைபொருகலந்திகழ்மார்பன்
பகைகளர்வந்துதன்பதிவளைந்தனரெனப்பகரு
மிகையடைந்தசொறகேட்டலுங்கிலைவிளம்பும்.

(இ - புணை.) அரும்புகள் முருக்கவிழ்ந்துதேன்மழை பொழியும்படியாக, முல்லையரும்புகளை யொத்த நந்தபந்திகளுடைய மாதர்தனங்கள் பொருந்தத்தக்க பூமாலையணிந்திருக்கும் அழகமைந்த மார்பையுடைய சத்தியாதன மகாராஜன், பகைவர்கள்வந்து தன்னகரத்தை வளைந்துகொண்டார்களென்கிற குற்றம்பொருந்திய சொல்லைக்கேட்டமாத்திரத்தில் நகைத்துக்கொண்டு இந்தவார்த்தைச் சொன்னன். எ - று. மிகையடைந்தசொல் என்றமையால் நகைக்கவேண்டாதசொல் என்பதும் பொருள். நகுதல் - சிரித்தல். (கூ)

மன்றறங்கியமாலைவெற்றரசினயாற்றரசர்
வெனறியம்புயத்தருக்குமென்றடம்புயவிறலும்

இன்றுகாண்குவன்கடற்படையெழுகெனவியம்பித்
தென்றுதாரவனேறினன்சுடர்மணிநெடுந்தேர்.

(இ - புணை.) வாசனைதங்கிய மாலையணிந்த வேலாயுதத்தை யுடைய பகைமன்னவர் வெற்றிபொருந்திய அழகிய புஜவீரப்பையும் என்னுடைய பெரிய புஜபலத்தையும் இன்றறிகிறேனென்று, சமுத்திரம்போன்ற சேனைகளைப் புறப்படச்சொல்லி நெருங்கிய பூமாலையணிந்த அவ்வரசன் பிரகாசியாநின்ற தனது பெரிய தேரிலேறினன். எ - று. (௫0)

இருவர்தம்படைபொருஞ்சேனையுமேற்றெதிரிகலிப்
பொருகளத்தனின்விளைந்தபோரமலையிற்புழைங்கிக்
கருவழித்துருமுதிர்த்தனகார்க்குலமென்றுற்
பாவைமாநிலம்வெருவருந்தன்மையார்பகர்வார்.

(இ - புணை.) (சத்தியாதனராசன் போர்க்களத்திற் சென்றவுடன்) இருவர்சேனைகளும் எதிர்த்துப் பகைகொண்டு யுத்தஞ்செய்யும் போர்க்களத்தில் உண்டாகிய பெரிய ஓசையினால், மேகங்களும் பயந்து கருவழிந்து இடிகளைக்கக்கினவென்றால், சமுத்திரம்வளைந்த இவ்வுலகத்தார்பயமுற்றதன்மையினைத் தெரிந்து சொல்லுகின்றவர்கள் யாவர்; (ஒருவருமில்லை.) எ - று. அமலை - சத்தம். (௫௫)

நிணநெடும்படைதாக்கலினெடுங்குடர்சரிந்து
மணமலிந்தகார்சிரம்புயமணிகரந்துணிந்து
பிணம்விழுந்தவக்களவயிற்றுணங்கைகட்பேயுடனைக்
கணமெழுந்துநின்றுடினவெண்ணிலாக்கவந்தம்.

(இ - புணை.) பகைவர் நிணங்கள் பொருந்திய பெரிய ஆயுதங்கள் படுகிறதினால் நெடியகுடர்கள் சரிந்து, வாசனைதங்கிய மாலையணிந்திருக்கும் சில தலைகளும் புஜங்களும் அழகியகைகளும் அறுபட்டு, பிணங்கள் விழுந்த அந்தப் போர்க்களத்திற் கைகோத்துக்கொண்டாடுகின்ற பேய்களுடன் அப்பொழுதே அளவில்லாத கவந்தங்களும் எழுந்து நின்றுடின. எ - று. கவந்தம்-திரமற்றவுடல். (௫௬)

வினையமெண்ணுறுமந்திரத்தலைவரும்விரைத்தார்
புனையுந்திண்டியச்சேனைக்கடலரும்விண்புகுந்தார்
தினையபூசனிற்றுன்மருடணன்கொலவிறந்தான்
வினையும்வாட்கழற்சத்தியாதனனெனுமறவோன்.

(இ - புணை.) (இப்படியாக கடக்கும்போர்க்களத்தில்) சூழ்ச்சிமிக்கமந்திரிகளும், வாசனைபுள்ள வெற்றிமாலையணிபும் புசங்களையுடைய சேனாபதிகளும், இறந்துவீரசொர்க்கஞ் சேர்ந்தார்கள். அத்தன்மையுள்ள யுத்தத்தில் நீண்ட வீரகண்டை யணிந்திருக்கும் சத்தியாதனனென்னும் அரசன் துன்மருஷணனற் கொல்லப்பட்டிறந்தான். எ - று. (கக)

(வேறு.)

வென்றவேந்தர்தம்மணியையழித்துமாய்ந்தோன்னியன்பதியை
இன்றுகொண்டுகூட்டுண்மினென்னும்வெஞ்சொற்பொருன்போலக்
கன்றுசிந்தைக்கதிரவனுங்காயுங்கதிரையறச்சுருக்கிக்
குன்றினின்றுந்தேரோடுங்குடபாற்கடலிற்குப்புற்றான்.

(இ - புணை.) இவ்வாறு செயம்பெற்ற அரசர்கள் தம்முடையசேனைகளை அழைத்து, இறந்துபோன சத்தியாதனனுடைய பெரியநகரத்தைக் கொள்ளை கொள்ளுங்கள் என்றுசொல்லியதுகேட்டுச் சகிக்காதமனத்தன்போலச் சூரியன்காய்கின்ற தன்னுடைய கிரணங்கள்முழுவதுஞ் சுருக்கிக்கொண்டு, உதயகிரியினின்று தேருடன் மேற்குச்சமுத்திரத்திற் குதித்துவிட்டான். எ - று. சூரியதேவன் மேற்குச்சமுத்திரத்தில் குதித்தானென்றதாற் பகற்பொழுது போயிற்றென்பது தாற்பரியம். (கச)

கங்குல்வந்துபுகுமளவிற்கருதார்சேனபதிபுகுத
மங்குபோர்ச்சத்தியாதனன்றன்மனைவிசதியாமடநல்லாள்
அங்கைகொண்டுவயிற்றைறற்றியந்தோவினையேனெனைவாழ்த்திப்
பொங்குமிருணிற்றமியளாய்க்கரந்துகுடபாற்போயினாள்.

(இ - புணை.) இராக்காலம்வந்தவளவில் நகரத்தைக் கொள்ளையிடுப்படி அந்தச்சேனைகள் பிரவேசிக்க; அதையறிந்த போரில் இறந்துபோன சத்தியாதனன் மனைவியாகிய சதியென்னும் பெயருள்ள மாதானவள், இரண்டுகைகளினாலுந்தன்வயிற்றிலெற்றிக்கொண்டு, அந்தோ! பாவியானேனென்றழுது, அந்த இராப்பொழுதில் துணையின்றி தனியளாய் யாருமறியாதபடி மேற்குத்திசை நோக்கிப் போய்விட்டாள். எ - று. (கரு)

துன்பத்துணையேயன்றிமற்றோர்துணையொன்றையறிற்காணுதாள்
அன்பிற்சேவற்றுணையிழந்தவன்றிற்பெடைபோலழுதிரங்கி
வன்பிற்செலவுங்கருமுதிர்ந்தவருத்தமுறலானடைமாய்ந்து
முன்புற்றறியாதெடுங்கானவாவிக்கணையழுகினாள்.

(இ - புணை.) மேற்குத்திசை நோக்கிப்போனவள் துன்பமாகிய துணையேயல்லது வேறொருவனைத் துணையாக அயலிற்காணுதவளாய், அன்பினையு

டைய ஆணன்றிலேப்பிரிந்தடெட்டையன்றில்அழுவதுபோல அழுதிரங்கி, நடக்கமாட்டாமல் நடந்துபோகவும், கருப்பமுதிர்ந்த வருத்தத்தை யடைவதிலல் நடைதள்ளாடினவளாய் ஒருக்காலுஞ் சென்றுகண்டறியாத பெரியகாட்டிலிருக்கும் ஒருதடாகத்தின் கரையிற்சேர்ந்தாள். எ - று. (கசு)

வேறு.

மொல்லையினுறுவதென்னலுணருமென்றறிவிப்பாள்போற்
பல்லியந்துவைக்கமுன்றில்விழாக்களிபகலிற்றுய்த்தா

(இ - புரை.) நல்வினைப் பயன் நீங்கு முறைமையும் தீவினைப் பயன் சேருமுறைமையும் விரைவாகப்பொருந்துவதையெனலல் அறிந்துகொள்ளுங்களென்றுதெரிவிக்கின்றவள்போல,பலவாத்தியங்கள் சத்திக்கும்படித் தன் அந்தப்புரத்தினிடத்தில் நடக்கும் சிறப்புகளைக்கண்டு பகற்பொழுதில் சந்தோஷத்தை யனுபவித்தவள் இவ்விராப்பொழுதில் தனிமையானவளாய் வனதேவதைகள் வாசஞ்செய்யத்தக்க காட்டிலிருப்பவளானாள். எ - று. அணங்கு - தெய்வம், ஈங்குவன தெய்வம். (கள)

எற்றியவருத்தத்தாலுமெழுச்சியினடையினலு
முற்றியகருப்பமேன்மேல்வேதனைமுதிர்ந்துகாட்டப்
பெற்றனளென்பமன்னேபெரும்பகைகிழைத்துச்சென்ற
பக்கையினைக்கொல்லக்கண்ணாள்.

(இ - ப்புரை.) பகைவனைக் கொலைசெய்யுத்தக்க வேல்போன்ற கண்களையுடைய அந்த ராசஸ்திரியானவள் தனியாகக் காட்டிற் போனவுடன் புருஷனிறந்தபோது மோதிவருந்திய வருத்தத்தினலும், வழிநடந்த வருத்தத்தினலும், முதிர்ந்த கருப்பமானது அதி வேதனையைக்காட்ட, பகைகொண்டு போர்செய்துவென்ற அரசர்களுக்கு இடத்தோளும் இடக்கண்ணும் துடிக்கும்படி ஒருபுத்திரனைப்பெற்றாள். எ - று. இடத்தோளும் இடக்கண்ணுந் துடிப்பது இன்னலுக்காட்டு மோர்குறியாம். (கழ)

அருகெறிந்தலாணுமரசனைத்தணைத்தலாணுந்
திருமகன்றன்னையின்றவேதனைத்தியக்கத்தாலும்
ஒருமகளருண்ணுநீர்வேட்டோடையினிறங்கலோடுங்
கருநிறக்கொடியசிற்றக்காமுயிர்கவர்ந்ததன்றே.

(இ - பு.) அருமையான வழியைக்கடந்து வந்ததினலும், தன் கணவனாகிய அரசனை யிழந்ததினலும், சிறந்த புத்திரனை யின்ற உபத்திரவத்தின்

மயக்கத்திலுலும், ஒப்பற்ற அந்த ராசஸ்திரீயானவள் நீருண்ணவிரும்பி ஒரு நீரோடையி லிறங்கினமாத்திரத்தில் கரியநிறமுள்ள கொடியதாகிய கோபங் கொண்ட முதலையானது அவளுயினை வாங்கிக்கொண்டது. எ - று. ஏகாரம் அசை. (ஙங)

உதிரமுநிணமுமுண்டகாமுளையுமிழயிற்போக
அதிர்கடலவனியாளவவதரித்தானைக்காண்டான்
கதிரவன்றுதைதபோலக்கதுமெனக்கடலின்வந்தான்
மதலையைபபுரப்பாரின்றிவாய்திறந்தரற்றுங்காலை.

(இ - புரை-) அவளுடைய உதிரத்தையும் மாமிசத்தையுமுண்ட முதலை யானது சேற்றினிடத்திற் போக; ஒலிக்காநின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத் தையாள்வதற்காகப் பிறந்த புத்திரனைக்காண அவன் பிதாவந்ததுபோலச் சூரி யன் கடலினிடத்தி லுதயஞ்செய்தான். அக்குழந்தையை ஆதரிப்பவர்க ளில்லாமல் வாய்திறந்தழும்போது. எ - று. (உ0)

கமையினுள்ளைகமையுற்றுள்பார்ப்பினிவறுமைபூண்டா
ளமைவுறுகாதற்றன்சேயாண்டொன்றுபுக்கான்றன்னைச்
சுமையெனமருங்குனின்றுதுவண்டிடக்கையிற்றுங்கி
யுமையெனும்பெயரினுளவ்வோடையின்றீரமுற்றுள்.

(இ-புரை.) பொறுமையினையுடையவளும், கைம்பெண்தன்மை யடைந்த வளும், தரித்திரமுள்ளவளும், உமையெனும் பெயரையுடையவளுமாகிய ஒரு பிராமணஸ்திரீயானவள், ஆசை பொருந்திய ஒருவருஷத்துக் குழந்தையாகிய தன்புத்திரனை ஒரு பளுவைச் சுமப்பதுபோலாக இடையானது துவளும்படிக் கையிலேந்திக்கொண்டு அந்தத்தடாகத்தின் கரையிற்சேர்ந்தாள். எ - று. (உச)

தாயிழந்தாருமின்றித்தனையினிற்கிடந்துசெய்ய
வாய்திறந்தரற்றுகின்றமதலையையுற்றுநோக்கிக்
காய்கதிர்க்கடவுள்விம்பங்கடலினின்றுதித்தலோ
லேயுமிச்சேயையீன்றுள்யாவளோவென்றுதேர்வாள்.

(இ - புரை.) தாயையிழந்து வேறொருவரு மில்லாமல் மண்ணிற்கிடந்து சிவந்த வாயைத்திறந்து அழுகிறகுழந்தையின் சமீபத்திற்போய்ப்பார்த்துச் சூரி யதேவன் சமுத்திரத்தினின்றும் உதயமானதுபோலத் தேஜசுபொருந்திய இந் தக்குழந்தையைப் பெற்றவள் எவளோவென்று யோசிப்பாள். எ-று. (உட)

அரசிளங்குமாருகவந்தணன்மதலையாக
விருநிலத்திவரோயன்றியாவரோபெறுதற்பாலார்

நினைவனைபுனிற்றிரண்மற்றியான்டையாய்நின்ரூண்மைக்தன்
புரிகொடிநாபியின்னுமறுத்திலாள்புகுந்தனதன்றே.

(இ - புரை.) (இந்தப்பிள்ளை) இராசகுமாரனாகவேண்டும், அல்லதுபிரா மணப் பிள்ளையாகவேண்டும், டொரிய இந்தவுலகத்தில் மேற்சொல்லிய வருண த்தாரல்லாமல் இப்படிக்கொத்த அழகுள்ள பிள்ளையை மற்ற எவர்கள் பெறுந் தன்மையை யுடையவர்கள்; இதைப்பெற்றவள் எவ்விடத்திலிருக்கின்ரூளோ? இந்தக்குழந்தையின் கட்டுப்பட்டிருக்கும் கொப்பூழ்க்கொடியை இன்னமும் அறுக்காதவளா யிருந்தாளே மத்தியில் என்னைசம்பவித்ததோ? எ - று. (உட)

என்னிளங்குழவிக்கின்னைனிளவலாயின்பா லூட்டி
மன்னியகாதல்கூரவளர்ப்பமேனைவென்னவெண்ணு
மன்னிய வருணத்தானேலத்தனர்க்கடாதேயென்னுந்
தன்னிளங்குமரனேடுதாபதிமகவைப்பார்க்கும்.

(இ-புரை.) என்னுடைய இளங்குழந்தைக்கு இவன்தம்பியாக இனியபா லூட்டி நிலையான ஆசைமிகுதியாகும்படி வளர்ப்பேனேவென்று எண்ணுவாள்; மேற்சொல்லிய இரண்டு வருணமுமில்லாமல் அன்னியகுலத்துப் பிள்ளையா னால் இவ்வெண்ணம நமது குலத்துக்குத் தகாதே யென்றெண்ணுவாள்;தன்னு டைய புத்திரனேடு இராசகுமாரனைப் பார்ப்பாள். எ - று. (உச)

இத்திறமையமைத்திபிடைந்திவணிற்கும்வேலை
சத்திரங்கரகங்கொண்டோர்தவமுனியோடைசார்ந்து
புத்திரசோகமுற்றுப்பொன்னணினின்றவாறு
முத்தமக்குமரனவந்தவரனையுமுளத்தினேர்ந்தான.

(இ - புரை.) இப்படியாகச் சந்தேகத்தைப் பொருந்தியிவளிடைந்து நிற்கும்போது, ஒருகையிற்குடையும் மற்ரொருகையிற் கமண்டலமுமுடையவ ராய் ஒருருஷியானவர் அந்தமடுவினிடத்தில்வந்து,புத்திரசோகத்தையடைந்து இலக்குமிபோன்ற அழகுள்ள அந்த பிராமணஸ்திரீயானவள் நிற்கும் தன் மையையும் நன்மையுள்ள இராசகுமாரன் பிறந்தவகையையும் தமதுமனதில் எ - று. (உஞ)

ஐயமெய்தியவத்தணமாதுகே
டெய்யவோரையிற்ரேர்ந்தியதான்றலை
மையலின்றிமருவிவளாத்திடி
னெய்யுமுங்கள்குலமுமுலகுமே.

(இ - புணை.) சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கும் பிராமணமாதே! கேட்பாயாக. சுபமேவோனையிற் பிறந்த இந்தராசபுத்திரனைச் சந்தேகமில்லாமல் விரும்பி நீவளர்த்தால், உங்கள் குலமுடங் இந்தவுலகமும் உய்தலடையும். எ - று. (உசு)

என்னமாமுனிகூறலுமேந்திழை
மன்னுமாநிதிபோலுமகவுட
னின்னநீரவெடுத்துக்கொண்டேகினள்
மன்னர்மன்னன்மகனைமற்றென்பவே.

(இ-புணை.) இப்படியாக அந்தமுனிவர் சொல்லலும், அதைக்கேட்ட பிராமணஸ்திரீயானவள், நிலையானபெரிய நிதியொத்த தன்பிள்ளையுடன் சத்தியாதனன் புத்திரனைத் துன்பந்தீரும்படி யெடுத்துக்கொண்டு போனள். எ - று.

மற்று என்ப அசைகள். (உஎ)

போதலுற்றபுரிகுழற்பார்ப்பனி
மாகமுட்டியமாளிகைவான்றலை
மேகமுற்றுவிழைவுடன்கண்படு
மேகசக்கரமாகரெய்தினள்.

(இ-புணை.) இராசகுமாரனை யெடுத்துக்கொண்டு செல்கின்ற கடைகுழைந்த அளகத்தையுடைய பிராமணஸ்திரீயானவள், ஆகாயத்தையளாவிய மாளிகைகளின் பெரியசிகரங்களில் மேகங்கள்வந்து சந்தோஷத்துடனித்திரைசெய்யும்படியான ஏகசக்கிரமென்னும் பெயரையுடைய நகரத்திற்போனள். எ-று.

"தாதுலராதகோதை" எனத் திருவிளையாடற்புராணத்துள் அமங்கலிக்கு ஆண்டிருப்பதுபோல, ஈண்டும் புரிகுழல் என ஆண்டது வாளா பெயராகக் கொண்டதெனக்கொள்க. (உஅ)

ஈண்டுநல்குரவாற்பலியேற்றுண்டு
மாண்டசெல்வமகவிருவோரையும்
பூண்டவேதமுந்நூலும்புனைவித்தே.

(இ-புணை.) ஏகசக்கர புரத்துக்குப்போன அந்தப்பிராமணஸ்திரீயானவள் பொருந்திய வறுமையினால் அந்நகரத்தில் பிசைந்து யெடுத்துண்டு, மாட்சிமைபொருந்திய செல்வம் அடையத்தக்க இரண்டு பிள்ளைகளையும் மிகுந்தசிறப்புடன் வளர்த்து, உபநயன கல்யாணஞ்செய்வித்து விதிவிலக்குகளைச் சொல்லுந்தன்மையுள்ள வேதமுமோதுவித்து. எ-று. (உக)

மக்களோரிருவோருமறையவர்
புக்கிறைஞ்சென்றேறற்றிடும்போனகந்
தக்கதாயுடனுண்டுசதுர்மறை
யொக்கவேதியர்தம்மொடுமோதினர்.

(இ - புரை) அந்தப்பின்னாக ளிருவர்களும் பிராமணர்கள் வீடெள்தோறுஞ்சென்று, பிக்ஷையெடுத்துக்கொண்டு வருகிற அன்னத்தைக் கற்புள்ள தாயுந்தாங்களுமுண்டு, நான்குவேதங்களையும் ஒருங்கேபிராமணப்பிள்ளைகளுடன் அத்தியயனஞ் செய்துவந்தார்கள். எ - று. (௫0)

அரியவேதமுமங்கமும்விற்படைக்
குரியகல்விமுதலவுலகினின்
விரியுமெண்ணெண்கலைப்பின்விகற்பமுங்
கரியமாலும்பின்னோனுமெனக்கற்றார்.

(இ - புரை.) அருமையாகிய வேதங்களும் ஆறங்கங்களும் வில்லாதியான ஆயுதப்பயிற்சிக்குரிய கல்வியும், இவைமுதலாக உலகத்திற்பரந்த அறுபத்துநான்கு கலைகளின் விகற்பங்களும், இராம லட்சுமணர்கள் போலக் கற்றார்கள். எ - று.

வேதாங்கமாவன:—மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம் என்பவைகளாம். அறுபத்துநான்கு கலைகளாவன:—அக்ஷரலக்ஷணம் லிகிதம் கணிதம் புராணம் வேதம் வியாகரணம் நீதிசாஸ்திரம் சோதிடசாஸ்திரம் தருமசாஸ்திரம் யோகசாஸ்திரம் மந்திரசாஸ்திரம் சகுனசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் கனகபரிக்ஷை இரதபரிக்ஷை கஜபரிக்ஷை அசுவபரிக்ஷை வைத்தியசாஸ்திரம் உருவசாஸ்திரம் இதியாசம் காவியம் அலங்காரம் மதுரபாடணம் நாடகம் நிருத்தம் சத்தப்பிரமம் வீணை புள்ளாங்குழல் மிருதங்கம் தாளம் அஸ்திரபரிக்ஷை இரத்தினபரிக்ஷை பூமிபரிக்ஷை சங்கிராமவிலக்கணம் மல்லயுத்தம் ஆக்ருஷணம் உச்சாடணம் வித்துவேஷணம் மதனகாத்திரம் மோகனம் வசிகரணம் இரசவாதம் காந்தருவவாதம் பைபீலவாதம் கவுத்துகவாதம் தாதுவாதம் காலுருடம் நஷ்டம் முஷ்டி ஆகாயப்பிரவேசம் ஆகாயகமனம் பரகாயப்பிரவேசம் அதரிசியம் இந்திரசாலம் மகேந்திரசாலம் அக்கினிஸ்தம்பம் சலஸ்தம்பம் வாயுஸ்தம்பம் திடஸ்தம்பம் வாக்குஸ்தம்பம் சுக்கிலஸ்தம்பம் கன்னஸ்தம்பம் கட்கஸ்தம்பம் அவஸ்தைப்பிரயோகம் என்பவைகளாம். (௫௫)

(வேறு.)

இவ்வாறுமைத்தர்வளர்கின்றகாலையிலோடுமன்னியுமைமேய்
மைவாரணத்தினுரியாளர்கோயில்வழிபாடுசெய்துவருநாட்

சைவாகமத்தினெறிகன்றுணர்ந்தசாண்டில்லியனென்னுமுனிவன் செவ்வாய்மலர்ந்துமைபோடுவந்துதெருளத்தெருட்டல்புரிவான்.

(இ - புனை.) இவ்வாறு அந்த இரண்டுபுத்திரர்களும் வளர்கின்றகாலத்தில், இவர்களுடன் தாயாகிய உமையென்பவள் கறுத்தயானைத்தோல் போர்த்த பரமசிவனுடைய ஆலயத்திற்குப்போய் வந்தனை வழிபாடுசெய்து வருகிறநாளில், ஒருநாள் சைவாகமங்களைப் பழுதறவுணர்ந்த சாண்டில்லியனென்கிற ஒருமுனிவர் மகிழ்ச்சியுடன் உமையென்பவளிடத்தில் வந்து அவளுக்குத் தெரியும்படித் திருவாய்மலர்ந்து சொல்லுகின்றார். எ - று. (கஉ)

அந்தோசிவன்றன்விளையாடல்யாவுமரியாதிதேவரறியார்
மைந்தோரிலிந்தவிளையாளனக்குமகவாகிவந்தசெயலை
நந்தாதுரைக்கமுடியாததென்றுநவிலாமுனிங்கைபணியா
முந்தாவெனக்குண்மகிழத்தெரித்திமுறையாயென்மைந்தன்வாவே.

(இபுனை.) உமையென்பவளே! பரமசிவனுடைய திருவிளையாடலை யெல்லாம்விஷ்ணுமுதலாகிய தேவர்களு மறியமாட்டார்கள்; இத்தப்புத்திரர்களில் இளையவன் உனக்குப்புத்திரனாகி வந்தசெய்கையை விவரித்துச்சொல்ல முடியாதென்று சொல்வதற்குமுன் அவள்வணங்கி, பெரியோரே! மனமகிழ்ச்சியுண்டாகும்படி இளையபுத்திரனுற்பத்தியை முறைமையாக எனக்கருளிச்செய்யவேண்டுமென்றாள். எ - று. மைந்தர் என்னுஞ்சொல் ஈண்டு மைந்தரானநின்றது, வந்தோரில் என்றும பாடம். (கக)

(வேறு.)

என்னுமுமைக்குமாமுனிவனிசைத்தானிந்தமாமதலை
தன்னையீன்றதாதைபெயர்சத்தியாதனனுந்தார்வேந்தன்
மன்னர்மன்னன்வைகர்ப்பநாடனவன்போர்மருவலராற்
கன்னியமரிலுயிரிழந்தான்மனைவிசதியுங்கானடைந்தாள்.

(வேறு.)

(இ-புனை.) இளையபுத்திரன் உற்பத்தியைச் சொல்லவேண்டுமென்றுகேட்ட உமையென்பவளுக்குப் பெருமைபொருந்திய முனிவர் சொல்லுகின்றார்; இந்தப் புத்திரனைப்பெற்ற தகப்பன்பெயர் சத்தியாதனனென்பார்கள். (அவன் என்னவருணைத்தா னென்றால் மாலையணிந்திருக்கும் அரனையே கூடித்திரியவருணைத்தான்;) அரசர்களெல்லார்க்கும் அரசனையிருப்பவன், வைதர்ப்பதேசத்தையுடையவன், இத்தன்மையனானவன் வலியபோர்செய்கின்ற பகைவரால் அழிவில்லாத யுத்தகளத்தில் உயிர்விட்டிறந்தான்; அதையறிந்த அவன்மனைவியாகிய சதியென்பவள் பகைவர்க்கு அஞ்சித் தன்கற்பினைக் காத்துக்கொள்ளும்படிக் காட்டிற்போய்விட்டாள். எ - று. (கச)

அடைந்தவனத்தினின்மமகலைய
குடைந்துநீருண்பதுவேட்டுவாவியிடத்திற்குறுகுங்கான்
மிடைந்துவன்மீனுயிர்கவரவீழ்ந்தாள்பாலன்றனித்தழுதா
னுடைந்தகுரல்கேட்டுன்மகவாயெடுத்துவளர்த்தாயெனவுரைத்தான்.

(இ - புரை) அப்படியாகச் சென்றவனத்திற் சதியென்பவள் இந்தப் புத்திரனை யரிதாகப்பெற்ற வருத்தத்திலும், சரீரத்தைச் சுத்தி செய்துகொண்டு நீருண்ணவேண்டு மென்கிற விருப்பமுற்று ஒரு தடாகத்தினிடத்தில் போன போது, அதிலிருந்த ஒருமுதலையானதுவிழுங்க உயிரிழந்தான்; பிறந்தபுத்திரன் யாரும் ஆதரவில்லாமற் றனியாயழுது கொண்டிருந்தான்;நீ அவனழுங் குரலைக் கேட்டுப் போயெடுத்துவந்து உன்புத்திரனை வளர்த்தாயென்று சொல்லியரு ளினார். எ - று. வன்மீன் - முதலை. (நடு)

கேட்டவுமையுமிறும்பூதுகளிசைந்தடகவீழ்றேன்
வாட்டமிலணையாசாட்சிவருடீபோகத்தைநுகர்போதிற்
றோட்டுமமருளவுவியோன்றிகாலக்கதிகாலந்தவும்
காட்டினனடைந்துமிவனனினகாவாவிறந்தகாரணமும்.

(இ - புரை.) தன் இராயபுத்திரன் உற்பத்தியைச் சாண்டில்லிய முனி வர் சொல்லக்கேட்ட உமையென்னும் பிராமண ஸ்திரீயானவள் மிகுந்த ஆச் சரியமடைந்து, (அந்த முனிவனைப்பர்த்துப் பின்னுங் கேட்கின்றாள்; ஐயோ!) இந்தப்புத்திரனைப்பெற்ற வரசன் மனவாட்ட மில்லாதவனுய் அரசாட்சியினல் வருகிற போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்குங்காலத்தில், கூட்டமாகக் கூடிய போர்க்களத்தில் பகைவர்கள் யுத்தஞ்செய்து கொல்ல அவனுயிரிழந்த காரணமும், இந்தப்புத்திரனுக்குத் தாயானவள் நம்முடையகணவன் இல்லாத நகரத்திலிருந்தால் ஏதாவது அபாயம நேரிடுமென்று காட்டிற்சென்று முத லையினல உயிரிழந்த காரணமும், எ - று. (நசு)

இந்தமகவுமரசுரிமையெய்துங்காலமென்றனவு
மந்தமறையின்சேய்வறுமையகன்றுவாழ்வதென்றனவு
முன்தனைவகன்மறைமுனிவன்மொழியாற்றெளிந்துவளர்த்தேற்குச்
சிந்தைமகிழவுரைத்தவனேசெப்புகென்றுள்செப்புவான்.

(இ - ள்.) இந்தக் குழந்தை எக்காலத்தில் அரசுரிமை எய்துவானென் றும், இப்பிராமணச்சிறுவன் வறுமையினின்று எப்போது விலகுவானென்றும், நான் முன் காட்டிற்சென்றபோது ஒரு முனிவனைக் கேட்டுத்தெளிந்து, வளர் த்துவந்தனன் இவ்வரலாறுடைய எனக்கு, மேற்கூறிய காரணங்களை மொழி யவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ள; சாண்டில்லியமுனிவர் கூறுவா

ராயினர். எ - று. மேற்செய்யுளிற்கூறிய காரணமும் என்பது, இங்கு செப்ட கென்றுள் என்பதைக்கொண்டு முடிந்தது. (நஎ)

காளையிவன்றன் றுதைமுணங்கழிந்தபலத்திற்கைதவர்கோன்
பாளைவிரிந்துமணங்கமழுமதுராபுரிக்குப்பார்த்திபனாய்
வாளைமுனிந்துகடைசிவந்தவரிக்கண்மடவார்மாரனெனத்
தாளைவணங்கார்முடிவணங்கத்தருமச்செங்கோற்செலுத்தினான்.

(இ - புணர்.) உமையே ! நீகேட்ட இரண்டுகாரணமுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்தஇளையபுத்திரனுடைய பிதாவானவன் முற்பிறப்பில் பாண்டியராசன்; பாளைகள்விரிந்து வாசனைவீசும்படியான வளப்பத்தையுடைய மதுராபுரிக்குஅரசனுகியும், வாளாயுதத்தைக் கோபித்துக் கடைசிவந்து செவ்வரிபரந்த கண்களையுடைய மாதர்களுக்கு மன்மதனைபோல அழகுள்ளவனுகியும், தன் தாளைவணங்கார்களான பகைவர்களும்தங்கள் முடியினல் தன்பாதத்தைவணங்கத்தக்கதாகத் தருமநெறியில் வழுவாமல் செங்கோற் செலுத்திக் கொண்டிருந்தான். எ - று. கைதவர் - பாண்டியர். (நஅ)

ஈசனெண்ணெண்ணிலீளையாட்டுமியற்றிஞனங்கயற்கண்ணி
நேசன்றெண்டுபூண்டுசிவநேசநிச்சயின்முகந்தோறும
வாசவன்போல்வழிபட்டுவருபன்னளிஞருஞான்று
பேசுபதின்மூன்றுந்தினம்வந்தெதிர்ந்ததற்றைப்பிரதோடத்தின்.

(இ - புணர்.) ஈசுவரரும் அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளினவரும் அங்கயற் கண்ணியார் மணவாளருமாகிய சோமசுந்தரக் கடவுளுக்கு நேசனுகி அடிமைபூண்டு, பரமசிவன் விருப்பமுறத்தக்க பிரதோஷகாலந்தோறும், தேவேந்திரன் பூசைசெய்ததுபோலப் பூசைசெய்துகொண்டு வருகின்ற பலநாட்களில் ஒருநாள் திரயோதசிதினம்வந்தது, அந்தத்தினத்திற் பிரதோஷகாலத்தில், எ - று. (நக)

ஆலவாயினரன்றன்னியாசன்வழிபட்டலர்தூவும்
வேலைவளவன்முதலபகைவேந்தரமர்க்குமேவினரென்
ருலையோடுதூதர்வரவுவாரீர்க்கடலிஞலியெழுந்து
ஞாலம்புகழுந்தமிழ்மதுரைநடுங்கவரசனுருத்தெழுந்தான்.

(இ - புணர்.) திருவாலவாயில் வீற்றிராநின்ற சோமசுந்தரக் கடவுளை இந்தப்பாண்டியராசன் ஆராதனைசெய்து மலராலருச்சிக்கும்போது, சோழராசன் முதலாகிய பலதேசத்து மன்னவர்கள் பகைகொண்டுபோர்செய்யவந்தார்களென்று தூதர்கள்ஓலைகொண்டுவரவும், பருவகாலத்துச்சமுத்திரவோசைபோல ஒருபேரோசை யுண்டானதால், பூலோகத்தி லுள்ளவர்கள் புகழும்படியான

தமிழ்வளரும் மதுரையிலிருப்பவர்க ளெல்லாரும் பயந்து நடுங்கவும், இரக்கமறிந்த பாண்டியராசன் சோபித்தெழுந்தான். எ-று. ஒலியெழுந்து வினையெச்சத் திரிபு. (சo)

வேறு.)

கொன்றைபயங்கண்ணிக்கடவுள்பூசனையுமுடித்திலமென்பதுகுறியான், கன்றியமனத்தன்சேனைகாவலரைக்கதுமெனவப்பிங்களென்றுங், குன்றுறழ்மணித்தேர்பண்ணுதிவலவகொணர்திகீயென்றென்றுங்கூறிச், சென்றனன்கொழும்பொற்கோயில்வாய்கடந்தவீதிவாய்ச் செல்கின்றவேலை.

(இ - புணை.) கொன்றைப் பூமாலையணிந்த பரமசிவனுடைய பூசனையை முடித்திலோ மென்பதையுங் கருதாதவனாய், கொதிப்புள்ளமனத்துடன் சேனாதிபதிகளைப்பார்த்து நீங்கள் சேனைகளைக் கூட்டிக்கொண்டு விரைவாக வாருங்களென்றும், தேர்ச்சாரதியே நீமேலேபாலும் தேரைப்பூட்டிக்கொண்டு வருவாயென்றும், சொல்லிப்புறப்பட்டுச் செழுமையுள்ள பொன்னற்செய்யப்பட்ட தன் ஆசாரவாசல் கடந்து வீதியினிடத்திற் செல்லும்போது. எ-று. (சக)

மந்திரக்கிழவன்மாபெலவேக்தன்வரதனைப்பூசனைபுரிதல், சிங்கையினெண்ணிராற்படைசூழச்சேனைகாவலரொடுஞ்சென்று, தந்திரமிரியப்பொருது செம்பியனைத்தருக்கறப்பிணித்தனன்கொணர்ந்து, செந்தமிழ்மாரன் றிருமுனம்விடலுஞ்செழியர்கோன்வானிளந்தடிந்தான்.

(இ - புணை.) (இவ்வரசன் சிவபூசையையும் மத்தியில் நிறுத்திவிட்டுயுத்தஞ்செய்யப்புறப்பட்டது தெரியாமல்) அவனுடைய மந்திரியானவன் வலிய அரசன் சிவபூசைசெய்துகொண் டிருப்பதை மனதில் நினைந்து, அதற்கு விக்கினம் வராதபடித் தானே நால்வகைச் சேனைகளுஞ் சூழ்ந்துவரப் படைத்தலைவர்களோடும்போய், பகைவருடைய சேனைகளெல்லாம் ஓடும்படிப் போர்செய்து, சோழராசனை இறுமாப்புகெடக் கட்டிக்கொண்டுவந்து, செவ்விய தமிழை விருத்திசெய்த பாண்டியனைதிரில்விடவும், அவ்வரசனைத் தன்வாளினற் கொன்றான் எ - று. தந்திரம் - படை. (சஉ)

அடையலர்ச்செகுத்தசெருக்கிளற்றென்னெலவாயன்றிருப்பூசை, யிடையினிற்றணந்தேமுடித்திலமென்பதெண்ணிலனெல்வியினியினி, மடைவளஞ்சுரப்பவருந்தினனந்தமடமையான்மறுமையிற்போகங், கடைசெலவருந்தாதிடையினிலொன்னர்கருவியாற்கனத்தினின்மடிந்தான்.

(இ - புணா.) பகைவனைக்கொன்ற இறுமாப்பினல் பாண்டிய னனவன் திருவாலவாயில் வீற்றிருக்கும் சொக்கநாதர் திருவாராதனையை மத்தியில் நீங்கி நிறைவேற்றவில்லையே யென்பதை நினையாமல், இராப்பொழுதில் சட்டருசியுங் குறையாமல் வாய்க்கு இனிமையைத்தரத்தக்கதாக அன்னம் உண்டான். அந்த அறியாமையினல் மறுபிறப்பில் பூர்ணயுசுடனிருந்து போகங்களை அனுபவிக் காமல் அற்பவாயுவாய் பகைவருடைய ஆயுதத்தாற் போர்க்களத்தில் இறந் தான். எ - று. (சுஉ)

அன்றுமிக்குமானந்தவல்வழுநிக்கரும்பெறற்குமரனுயுதித் துத், தன்றிருத்தாதைசெய்கைபோற்றனுந்தரியலர்ச்செகுத்தனமென் னும், வென்றியிற்களித்துத்தாதையோடையின்றுவினை யெணென்றுயில் கொடுகழித்தான், றென்றுபட்டுளவாந்திமையாலின்னவறுமையாந்து யர்க்கடல்குளித்தான்.

(இ புணா.) அந்தநாளிலு மிந்தப்புத்திரன் வேலாயுதத்தையுடைய அந்தப் பாண்டியனுக்குப் பெறுதற்கரிய புத்திரனுய்ப்பிறந்து, சிறப்புள்ள தன்தகப்பன் செய்கைபோலத் தானும் பகைவனைக்கொன்றேமென்கிற வென்றியால் மம தையடைந்து, தகப்பனுடன் அன்னமருந்தித் தன் குற்றத்தை எண்ணுகி நித்தினைசெய்து இராப்பொழுதுகழித்தான். இவ்வாறுபழமையாய் வருகின்ற பாவத்தினல் இத்தன்மையுள்ள தரித்திரமாகிய துக்க சமுத்திரத்தில் முழுகி னன். எ - று. (சுச)

மற்றிவன் றுயுமந்தவாள்வழுதிமனைவியாய்வாழுமுற்பவத்தின்
வெற்றிவேண்மன்னன்பன்னியராய?வறுளமடவியர்க்கெல்லாம்
குற்றமேபுரிந்ததீவிடமருத்திக்கொலைபுரிபாவமேற்றிவனைப்
பெற்றநாளந்தமுதலிலவாய்ப்படுத்திபெய்வளையுயிர்கவர்ந்ததுவே.

(இ - புணா.) இவ்வாறு துக்கசாகரத்துள் அழுந்திய இவன்தாயானவ ளும் வாளாயுதமேந்திய அந்தப்பாண்டியராசன் மனைவியாய் வாழ்ந்துகொண்டி ருந்த முற்பிறப்பில், வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய அவ்வரசன் மனைவியர்களாகிய மற்றுமுள்ள மாதர்களுக் கெல்லாம் குற்றங்களையே செய்து, கொடியதாகிய விஷமிட்டுக் கொலைசெய்த பாவமே இவனைப் பெற்றநா ளில் அந்தமுதலிலவாயில் அகப்படச்செய்வித்து அவனுடைய பிராணனைக் கவர் ந்துவிட்டது எ - று. (சுரு)

(வேறு.)

ரியம்பரமனையருள்ளுழுவையக்
காதலின்முற்பவம்வழிபடாக்கலா

வேதனைவறுமையான்மெலிந்துமிப்பவத்
தேதமோடிடுபலியெடுப்பரின்சொலாய்.

(இ - புணை.) இனியசொல்லை யுடையவளே! ஆதியாகிய கிருபைக்கடலாகிய பரமசிவனை முற்பிறப்பில் அன்புடன்பூசைமுற்றச் செய்யாமையால் சம்பவித்த வேதனையைத்தருகின்ற தரித்திரத்திலல் வருந்தியும் இப்பிறப்பில் துன்பத்துடன் பிசைஷயை யெடுக்கின்றூர்கள். எ-று. (சசு)

மல்கியசெல்வமும்வளனுமைத்தரும்
பல்கியகிளைஞரும்பழுக்கவாழுநர்
நல்கியகிரீசனைநாளுநாடியே
யல்கலிற்பவந்தொறுமருச்சித்தேத்தினர்.

(இ - புணை.) நிறைந்தசெல்வமும் வளப்பமும் புத்திரர்களும் மிகுந்த சுற்றத்தாரும் செழித்திருக்கும்படி வாழ்கின்றவர்கள், மேற்சொல்லியவைகளெல்லாம் அருளிச்செய்கின்ற கயிலாசபதியை நாடோறு மனதில்தியானஞ்செய்து குறைதலில்லாத சனனங்கடோறும் அருச்சனைசெய்து துதிசெய்யப்பெற்றவர்களாவார்கள். எ - று. (சள)

வேறு.

மறையுமங்கமுமாகில்புராணமுஞ்
செறியுமாகமமுன்னின்றுசெப்புமாற்
பொறியினல்வினைபோக்கிமெய்வீட்டின்ப
மறியவல்குமரனடியென்னவே.

(இ-புணை.) அந்தச்சிவபூசையின் பலனானது ஐம்பொறிகளால் அனுபவிக்கத்தக்க தீவினையைநீக்கி, உண்மையாகிய மோக்ஷஇன்பத்தை அறிந்து, ஆனந்தமடையும்படி பரமசிவனுடைய திருவடியைத் தருமென்றுவேதங்களும் வேதாங்கங்களும் குற்றமில்லாத பதினெண்புராணங்களும் பொருந்திய இருபத்தெட்டாகமங்களும் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் நின்றுசொல்லுகின்றன.எ-று.

மன்னுமான்மியம்யாதெனின்மாதுகேள்
கன்னல்வேளையெரித்தகங்கண்ணுதல்
யாசனிமுகத்தினே.

(இ - புணை.) சொல்லிய இந்தப்பிரதோஷத்துக்கு நிலைபெற்ற இவ்வளவு மகத்துவம் உண்டான தென்னவென்றூல், அந்தணமாதே! சொல்லுகிறேன்

கேள்; கரும்புவில்லையுடைய மன்மதனையெரித்த நெற்றிக்கண்ணையுடைய நம் முடைய பரமசிவன் இத்தன்மையுள்ளதாகிய பிரதோஷகாலத்தில், எ - று. இரசனி-இரவு. ஈண்டு பிரதோடகாலத்தை யுணர்த்திற்று. (சுசு)

வேறு.

விண்டலமளக்கும்வெள்ளிவேதண்டத்தாதிதன்வியனெடுஞ்சிகரத் தெண்டிசாமுகமுமிருள்கெடவிமைக்கவெழுந்தபோராயமன்றின் அண்டநாயகிகண்டுவந்தெழிலளிமாலைசனத்தினிதுவீற்றிருப்ப கொண்டவினிறத்தோன்கொண்டலினுருமிற்குடமுழாக்குடங்கையின்முழக்க.

(இ - புணை.) ஆகாயத்தை யளக்கும்படியான கயிலாசகிரியில் விசால முள்ளதாய் உயர்ந்திருக்கும் சிகரத்தில், அஷ்டதிக்குகளிலும் இருள்கெடும் படிப் பிரகாசிக்க ஓங்கிய பெரிய ஆலயத்தின்சபையில், பார்வதிதேவியார்நோக் கிச் சந்தோஷித்து அழகுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கவும், விஷ்ணுவானவர் இடிமுழக்கம்போலக் குடமுழா வென்னும் வாத்தியத்தைத் தன்னுடைய அக ங்கையினால் முழக்கவும், எ-று. வேதண்டம் - மலை. கொண்டலினிறத்தோ னென்றது வாணனுமாம். (நo)

தும்புருவோடுநாரதர்பாடப்புரந்தரன்சுதியினிற்கூட்ட அம்புயமடந்தைதோரியவணிதையாகியேமகரயாழ்தடவ வம்பணிமுலையிற்கோடுறத்தழுவிமாடகமலர்க்கையான்முறுக்கி யம்பவளத்தின்வாய்மலர்திறந்தூதாமகளழுதப்பாட்டயர.

(இ - புணை.) தும்புருநாரதர்கள் இசைபாடவும், அதைத்தேவேந்திரன் சுதியிற்கூட்டவும், திருமகளானவள் ஒத்துப்பாடுகின்ற மகளிர்போல மகர வீணைவாசிக்கவும், சரஸ்வதி கச்சணிந்த தன்னுடைய தனங்களினிடத்தில் வீணைத்தண்டு பொருந்தும்படி சார்த்திக்கொண்டு செந்தாமரை மலர்போன்ற கையினால் முறுக்காணியைமுறுக்கி, அழகிய பவளத்தையொத்த வாயைத்திற ந்து அமுதம்போல மதுரமுள்ள இசைபாடவும், எ - று. (நக)

அவனியையீன்றவிரிஞ்சரோர்பதின்மக்காதியாஞ்சதுர்முகவிரிஞ்சன் புவனிவாணுலகஞ்செவிசெவிடெறியப்பொற்கரத்தாளத்தைச்சதியிற் சிவனடனத்துக்கிசையவேதாக்கத்தேவர்களனவருமேத்தத் தவளவெண்ணீற்றோளவில்பல்கோடிதபனரினுருவெடுத்தாடும்.

(இ - புணை.) இப்பூலோகத்தைச் சிருட்டித்த பத்துப் பிரமாக்களுக்கு ஆதியான சதுர்முகப் பிரமதேவன் பூலோகத்தவர்க்கும் தேவலோகத்தவர்க ளும் காதுகள் செவிடுபடும்படி அழகிய கைத்தாளத்தைத் தாளக் கிரமப்படி

சிவனுடைய நடனத்துக்கு இசையத்தாக்கவும், தேவர்களெல்லாருந் துதிசெய்யவும், வெள்ளிய விபூதியணிந்திருக்கும் பரமசிவன் அள்ளில்லாத பலகோடி சூரியர்கள்போலத் திருவுருவங்கொண்டு தாண்டவஞ்செய்யா நின்றனர். (ருஉ)

விண்டுவேமுதலாந்தேவர்களெவருமெதுவுறைசடிலவானவன்றன்
றண்டலினிருத்தங்காணியவேகுந்தண்மையாலன்னவெல்லா
மண்டுநீருலகமாதியஞ்சுடனைவழிபடுபூசனைதமதாய்க்
கொண்டுநின்றுவப்பொன்றுநான்மறையுங்கூறுடாகமங்களுங்கூறும்.

(இ - பொ.) விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாரும் சந்திரனை யணியும் சடாமகுடத்தையுடைய பரமசிவனது நித்யானந்த நிருத்தத்தைத் தரிசிக்கச் செல்லுந் தன்மையால், அவர்களெல்லாரும் சமுத்திரஞ்சூழ்ந்த இந்தவுலகத்தில் ஆதியாகிய பரமசிவனை ஆராதனைசெய்யும் பூசனை தங்களுடையதாகக் கொண்டு எக்காலும் மகிழ்ச்சி அடைவார்களென்று, நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களுஞ் சொல்லுகின்றன. எ று. (ருக)

அன்றியுமடவாய்நின்வபிஜுதித்தவரும்பெறற்காளைவேதியன்ரூன்
சென்றிடும்மைப்பிறபபின்வேதியருட்செல்வமிக்குடையனுபிருந்து
ங், கன்றியவுலோபஞ்சித்தையைக்கவற்றக்கைவிரித்தெவரளித்தாலும்
நன்றெனவேற்றவளநிதியோடுநாடொறுமபாவமுமீட்டி.

(இ-புனை.) ஓமடந்தையே! இதுவுமல்லாமல் உன்னிடத்திற்பிறந்த இந்தப் பிராமணப்பிள்ளையானவன் முற்பிறப்பிற் பிராமணகுலத்தில் மிகுந்த செல்வமுடையவனுயிருந்தும், கொடியதான லோபகுணமானது தன்மனதைப் பீடிப்பதினால், (தனக்குள்ளதைத்தானனுவியாமல்,) எவர்கள் கொடுத்தாலும் கைவிரித்துத் தானமாக வாங்கிக்கொள்ளும் பொருளுடனே பாவத்தையும் நாடோறும் சேர்த்து, எ-று. எவரளித்தாலும் என்றமையால் நல்லோர் பொருளேயன்றித் தீயோர்பொருளேவற்றலாகாதென்றும் ஏற்றல் பாவமேவருமென்றும்போதரும்.

வாழுநாளகத்துளொருபகலேனும்வறியவர்க்கிட்டுணைதாழ்ந்த
பீழையால்வறுமைப்பிணிபிடித்திந்தப்பிறப்பினிலின்னணமுழன்றான்
போழிளமதியமுடித்தசேகரனேப்பூசனைபுரிவரென்மைந்தர்க்
கூழுறுவறுமைபரிதிவானவன்முன்னெள்ளிருட்பிழம்பெனவொழியும்.

(இ - புனை.) (இவ்வாறு பெருந்தண்ஞ்சேகரித்து) வாழுநாளில் தன்வீட்டில் வருகின்ற யாசகருக்கு ஒருநாளாவது பிட்சையிட்டுண்ணுத குற்றத்தினால் வறுமைநோயடைந்து, இந்தப்பிறப்பில் இவ்விதமாக வருத்தமடைந்தான். ஏற்

றைக்கலை இளஞ்சந்திரனையணிந்த திருமுடியையுடைய பரமசிவனை (சனிப் பிரதோஷத்தில்) பூசனைசெய்வார்களானால் இந்தப் புத்திரர்களுக்கு ஊழினால் நேரிட்டிருக்கிற வறுமைநோயானது சூரியனைக்கண்ட இருட்கூட்டம் நீங்குவதுபோல நீங்கிவிடும். எ - து. (நிந)

இவ்வண்ணமுரைத்தமுனிவரன்மொழியையின்பொடுவிருப்புறக்கேட்டாங் கவ்வண்ணமெல்லாமனக்கொடுமகிழ்வுற்றன்னவள்பின்னருமந்த வெவ்வினையறுத்துமுனியுடன்கேட்டகதையெலாம்விளம்புவனென்றுச் செவ்வண்ணவேணிச்சூதமாமுனிவன்றெருளுறச்செப்பினனன்றே.

(இ - புரை.) இப்படியாகச் சொன்ன முனிவனுடைய வார்த்தையைச் சந்தோஷமும் இன்பமும் உண்டாகக்கேட்டு, அம்முறைமைகளையெல்லாம் மனதிலறிந்துகொண்டு மகிழ்ச்சியடைந்து, அந்தப்பிராமண ஸ்திரீயானவள் தீவினையையொழித்த அந்த முனிவனிடத்தில் மேலுமேலும் கேட்டகதையெல்லாம் சொல்லுகிறேனென்று செம்மைநிறமுள்ள சடையையுடைய சூதமுனிவானவர் நைமிசாரணிய முனிவர்களுக்குத் தெளிவுண்டாகும்படிச் சொல்லியருளினர். எ - று. (நிசு)

ஆறுவது - சத்தியாதனன்

பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் நூசு.

உ

சிவமயம்.

ஏழாவது

பிரதோஷபூசைசமகிமை அத்தியாயம்.

மன்னியகற்பினருந்ததியனையமடவரலுமையவள்கேட்டுத்
தன்னிருகாமுமுச்சிமேற்குவியத்தவமுனிமலரடிதாழ்ந்து
பன்னகாபரணன்பூசனைபுரியும்படியெலாமடியனேனறிய
நின்னருள்புரிந்துவாய்மலர்திறந்துநிகழ்த்தெனநெடுங்கவணுரைத்தான்.

(இ - புணை.) நிலைபெற்ற கற்பினையுடைய அருந்ததியையொத்த உமை யென்னும் பெயருள்ள பிராமணஸ்திரீயானவள் முனிவர் சொல்லியவெல் லாங்கேட்டு, தன்னுடைய இரண்டுகைகளையும் உச்சியின்மேற்குவித்து நமஸ் கரித்து, அவர்பாதங்களிற்சேவித்து, பரமசிவனைப் பூசனைசெய்யுங் கிரமமெ ல்லாம் அடியேன் தெரிந்துகொள்ளுட்படிக் கிருபைசெய்து திருவாய்மலர்ந்து சொல்லுமென்று கேட்க, அவர் கூறுவாராயினர். எ - று. (க)

வேறு.

திங்கடோறுங்குறையாதுதிகழுமிரண்டுபக்கத்துக்
கங்குண்முகங்கள்பன்மூன்றுநாளினத்துவந்தகாலமெலாம்
பொங்குந்தூயபுனலாடிப்பகற்போதுண்டிபொருந்தாம
லங்கண்மாலைப்போதுவரவலர்கம்பலத்தின்விதானித்தே.

(இ - புணை.) மாதந்தோறுங் குறையாமல் விளங்குகின்ற இரண்டுபக்கத் துப் பதின்மூன்றுநாளினில், பிரதோஷப்வருகிற காலமெல்லாம் மிகுந்த பரி சுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து, பகற்பொழுதில் ஆகாரங்கொள்ளாமல் அந்நாளில் மாலைப்பொழுது வருகிறகாலத்தில் பிரகாசிக்கின்ற பலவித சித்திர ங்களெழுதிய கம்பலத்தினால் மேல்விதானங்கட்டி. எ - று. இரண்டுபக்ஷமா வது பூர்வபக்ஷம் அபரபக்ஷம் என்பனவாகளாம். (உ)

புனிதமணிமண்டபம்புகுந்துபுரிநூற்கும்பமண்டலங்கண்
முனிவில்விதானமுறைபிறழாதியற்றிக்குரவன்மொழிபேணி
நனிசேர்சைவாகமவிதியும்புராணவிதியுங்கண்மறையி
னினியவிதியுமலிவுபடாதொன்றும்விதியினியல்போர்ந்து.

(இ - புணை.) இப்படியாகப்பந்தரிட்டு மேல் விதானங்கட்டின பரிசுத்த மான அழகியமண்டபத்திற் பிரவேசித்துக் கும்பங்களுக்கு நூற்சுற்றி, மண்ட லங்கள் குற்றமில்லாத சாத்திரமுறைக்கு மாறுபடாமல் ஏற்படுத்திக் குரூப தேசமொழியை விரும்பி, சைவாகமவிதியும் புராணவிதியும் இனிதாகிய வேத விதியும் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் சரியொத்திருக்கு முறைமையை யுண ர்ந்து. எ - று. (ங)

ஐந்துபுலனுமொருவழியேநிறுவிமனத்தினழுக்ககற்றிச்
சிந்தையாரப்பாவித்துவாயாற்றிருமந்திரஞ்செப்பி
மூந்துகரத்தாலலர்முதலவழிபாடுசெண்முறைமுடித்துக்
கந்தமலருநாற்றமுமேபோலபேதமாயகருத்தினனுய்.

(இ புனை.) ஐம்புலன்களை யொருவழிப்படுத்திக் காமவெகுளி மயக்கங் களைநீக்கிச் சித்தத்திற் பொருந்தப்பாவித்து, வாயிறற் பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக் கைகளினல் மலர்சாத்தலாகிய சோடசோபசாரங்களையும் செய்து, பூவும் மணமும்போல அபேதமான கருத்தையுடையவனுய், எ - று. (சு)

வெற்புக் நரையன்றிருமபிலமின்னற்பொலியுமேனியளை
யம்பமருங்கிற்கிடர்செய்யுமணிபூத்திருக்குழலியாளைக்
கற்புக்கரசிதனைச்சுருதிகலையார்மேகக்கருங்குழலைப்
பொற்புக்கழகுதருமவதனப்பொலம்பூங்கொம்பிற்பொலிவாளை.

(இ - புனை.) மலையனையன் புத்திரியாய் மயில்போன்ற சாயலையும் மின் னலைப்போற் காந்திபரப்பும் திருமேனியையும் சிறிய மருங்குலுக்குத் தன்பஞ் செய்யத்தக்கதாய அழகிய தனங்களையும கற்பரசியாம் தன்மையையும் சந்திர கலையென்கிற ஒருவித ஆபரணந்தங்கிய மேகமபோலும் காரியளகத்தையும் அழகுக்கு அழகினைத்தருவதாகிய திருமுக மண்டலத்தையு முடையவராய் பொறகொமடுபோலப் பொலிந்துவிளங்கும் பார்வதிதேவியாளை. எ று. (ரு)

வாமபாகத்தருச்சித்துவழிபட்டேத்திமணித்தவிசிற்
காமனுகமடலெசயக்கனலெவழங்குங்கடகரும்பைப்
பூமனர்தஞ்சிரங்கமழும்புலவையொழிப்படபொற்கொன்றைத்
தாமநாற்றந்திசைகமழுமணிமார்புடையதனிப்பொருளை.

(இ - புனை.) இரத்தினங்கள்பதித்த ஆசனத்தில் பரமசிவனுடைய இட ப்பாகத்தில் எழுந்தருளப்பண்ணி அருச்சனையுடன ஆராதனைசெய்து, மன் மதன் சரீரத்தை நீறுசெய்த விரூபாக்ஷத்தை யுடையவராய் அடியார்களுக்குக் கரும்புபோலிருக்கும் கடவுளும், பிரமகபாலத்தின முடை நாற்றத்தை நீக்கிப் பொன்னிறமுள்ள கொன்றைப்பூமாலையின் வாசன அஷ்டதிசை வனைக்கும் பரிமளிக்கும்படி அணிந்திருக்கும அழகிய மார்பையுடையவருமாகிய ஒப்பற்ற பரம்பொருளானவரும், எ - று. அடலை-சாம்பர். (சு)

வெள்ளியமலையின் மாணிக்கவெற்புவருதல்போல்விளங்கும்
பள்ளியுரகமால்விடையிற்பவனிபோதும்பரஞ்சுடரைத்
துள்ளிமதியோடிகலியலைதுளும்புங்கங்கைச்சடையானைப்
புள்ளியிளமான்கன்றுகளும்புண்டரீகக்கரத்தானை.

(இ - புனை.) வெள்ளிமலையினமேல் மாணிக்கமலை வருவதுபோல, விள ங்குகின்ற சர்ப்பசயனத்திற் பள்ளிகொள்ளும் விஷ்ணுவாகிய ரூபபவாகனத்திற்

பவனிசெல்லுகின்ற பரஞ்சுடரும், சந்திரனுடன் பகைத்துத்தூள்ளி அலைகள் ததும்பிக்கொண்டிருக்குங் கங்கையையணிந்த சடையையுடையவரும், இளமையாகிய புள்ளிமான் கன்று விளங்கிக்காண்டிருக்கும் செந்தாமரைமலர்போன்ற திருக்கரங்களை யுடையவரும், எ - று. வெள்ளிமலையில் மாணிக்கவெற்பு வருதல்போல் விடையிற்பவனிபோதும் எனக்கூட்டி முடிக்க. (ஈ)

வாங்குபலிநீர்வாரிதியுமலையுநிலனுமற்றெனையுந்
தாங்குபுயங்கநூபுரத்தின்பறைநின்றிரைக்குந்தாளானை
வீங்குபுனரியாலாலவிடமுண்டிருண்டகளத்தானை
யோங்குசிகைமுத்தியென்னவொளிருங்கழுமுட்படையானை.

(இ - புனை.) உலகத்தைச் சூழ்ந்திருக்கும் அலைநீரையுடைய சமுத்திரத்தையும் மலைகளையும் பூமியையும் மற்றுமுள்ள எல்லாவற்றையும் தாங்குகின்ற ஆதிசேஷனுடன் வேதமாகிய சிலம்புகள் சத்தித்துக்கொண்டிருக்குந் திருவடிகளையுடையவரும், நீர்மிகுந்த சமுத்திரத்தில் உண்டாகிய ஆலகால விஷத்தை உண்டு கறுத்த கண்டத்தினையுடையவரும், ஓங்குகின்ற சிகையினையுடைய முத்தீப்போல ஒளிருகின்ற சூலாயுதத்தையுடையவருமாகிய பரமசிவனை. எ-று. அ)

அன்பினிருத்திச்சிவாகமத்தினைமவிற்கருப்பூரத்தீப
மின்பநிறைக்குநறுந்தூபமியாவுங்குறையாதினிதமைத்து
நன்பொன்மலர்த்தார்முடித்தசடைநாதன்றுணைத்தாள்வழிபட்டாற்
றுன்பமில்லையார்மாட்டுமென்றுசுருதிமுறையிடுமே.

(இ - புனை.) அன்புடன் ஆசனத்திலெழுந்தருளப்பண்ணிச் சிவாகமத்திற்சொல்லியிருக்கு முறைமைப்படி கர்ப்பூரதீபமும் நல்லவாசனையைத் தருகின்ற தூபமும் மற்ற எல்லாவுபசாரமுங் குறைவுபடாமல் இனிதாகச்செய்து, நல்ல பொன்னிறமுள்ள கொன்றைப்பூமாலையை அணிந்த சடையையுடைய பரமசிவத்தின் இரண்டுதிருவடிகளையும் ஆராதித்த யாவரிடத்திலுந் துன்பமணுகமாட்டாதென்று வேதங்கள் முறையிடுகின்றன. எ - று. நன்பொன் மத்த முடித்தசடை என்றும் பாடம். (கூ)

வேறு.

இத்திறமிருவருமியற்றுவாரொனிற்
றொத்தினரிதழியான்றொண்டுபூண்டிடும்
பத்தியின்முன்னவன்வறுமைபாழ்படுத்
சத்திரத்திளவலுந்தாணிகாக்குமே.

(இ - புனை.) இப்படியாக இந்த இரண்டுபேரும் பிரதோஷகாலத்தில் தூசை செய்வார்களானால் கொத்தாகிய கொன்றைப் பூமாலையணிந்த கபி

லோசபதியின் அடிமைத்திறம்பொருந்திய பத்தியிலுலே மூத்தவனுடைய தரித்திரமானது பாழ்பட்டுப்போம்; இளையவன் அரசனுகி ஒருகுடையின் கீழிருந்து பூலோகத்தைக்காப்பான். எ - று. (கப)

வேறு.

என்னமுன்னமெழுந்திறைஞ்சினர்
முன்னமுன்னியவேலைகமுற்றுற
அன்னநின்னடியேமருந்துய
ருன்னுமேகெடவுய்ந்துவாழ்ந்தனம்.

(இ - புனா.) இவ்வாறு முனிவர்சொல்வதற்கு முன் அவர்களெழுந்து வணங்கினவர்களாய், எங்களுக்குத் தாயையொத்த மகானுபாவனே! உம்மால் நாங்கள் முன்னைய மகிழ்ச்சி பொருந்தவும் அடியேங்களுடைய துருமையாகிய துயரமொழிந்து போகவும், தீவினையினின்றும் பிழைத்து வாழ்வை யடைந்தோம். எ - று. (கக)

என்றரன்பினிரங்கிமாமுனி
நன்றுகென்றுநயந்துமைநற்பாற்
றன்றுணைஞ்சுகணுச்சிசாத்தியே
குன்றுமந்திரமூலங்கூறினன்.

(இ - புனா.) அன்புடனே இவ்வாறு சொன்னர்கள். அதைக்கேட்ட முனிவரானவர் கிருபைவைத்து உங்களுக்கு நன்மையுண்டாக்கக் கடவதென்று ஆசீர்வதித்து, அந்தப்புத்திரர்களுடைய சிரசிலும் நேத்திரங்களிலும் இருதயத்திலும் தம்முடைய பாதத்தைவைத்து, அழிவுபடாதமூலமந்திரத்தை உபதேசித்தார். எ - று. (கஉ)

கேட்டார்வல்வினைவேரொடேகெட
வூட்டாநல்வினைமேலுமோங்கிடச்
சேட்டார்மைந்தர்கடேசிகன்பதஞ்
சூட்டாநின்றனர்பின்னுஞ்சொல்லுவான்.

(இ - புனா.) அவ்வாறுமுனிவருபதேசித்த மந்திரத்தை வலியதீவினைகள் ஆணவமலத்துடன்கெடவும், ஆகாமியமேறச்செய்யாத நல்வினை மேன்மேலும் விர்த்தியாகவும் கேட்டுக்கொண்டு, இளமைப்பருவத்தையுடைய அந்தப்புத்திரர்கள் ஆசாரியராகிய முனிவருடையபாதங்களைத்தொழுதார்கள். (அவர்கள்தொழுதவுடன்) முனிவர்பின்னுஞ்சொல்லுகின்றனர். எ - று. (கங)

(வேறு.)

வல்லமறையோண்மதலைசுசிவிரதனெனவுமணிவயிரக்
கல்லிற்றிரடோளரசிளங்கோக்காளைதருமகுத்தனென்றுஞ்

சொல்லக்கடவதுலகமெனச்சொல்லிமுகமன்பலவியும்பிச்
செல்லறவிர்த்துமகிழ்வோடிங்குமரர்தம்மைச்செல்கென்றான்.

(இ - புணை.) வல்லமையையுடைய பிராமணபுத்திரனைச் சுசிவிரதனெனவும், அழகிய வயிரக்கற்போலும் திரண்டதோளையும் இளமைப் பருவத்தையுமுடைய ராசகுமாரனைத் தருமகுத்தனெனவும், உலகத்தார் சொல்லக்கடவனென்றுபெயரிட்டு, உபசாரவார்த்தைகள் பலவாகச்சொல்லித் துன்பத்தைநீக்கி, மகிழ்ச்சியுடன் அவ்விரண்டு புத்திரர்களையும் போங்களென்று உத்தரவுகொடுத்தார். எ - று. தருமகுத்தன் - தருமத்தைப் பாதுகாப்பவன். (கச)

வேதமுனிவன்விடைகொடுப்பவிளங்குகுமரரிருவோரும்
போதமுறுதந்தையருடன்மனையிற்புகுந்துபுரமெரித்த
நாதன்றன்னைநிசிமுகத்தினுளுநாளும்விசேடிதமாய்ப்
பாதகமலந்தாழுதேத்திவழிபாடனைத்தும்பண்ணியே.

(இ - புணை.) வேதங்களுணர்ந்த முனிவர் உத்தரவுகொடுப்ப, விளங்குகின்ற இரண்டு புத்திராகளும தெளிவுபெற்ற தாயாருடன் வீட்டில்வந்து, திரிபுரதகனரான பரமசிவனைப் பிரதோஷகாலத்தில் நாடோறும் விசேஷமாய்ச் சோடசோபசாரத்துடன் பூசைசெய்து திருவடித் தாமரைகளைவணங்கி, எ-று.

திங்களொருநான்கிவ்வாறுசெல்லச்செல்வரிருவோரிற்
பொங்குபுரிநூற்சுசிவிரதன்புனிதநதியிற்புனலாட
அங்கணெடுநசாரோகுதலும்தண்ணீர்பொருதவகன்கலாவாய்க்
கொய்கைக்குவமைசான்றதொருகுடத்தினிதியங்கண்ணுற்றான்.

(இ - புணை.) இவ்வாறு நாலுமாதஞ்செல்ல, அந்தப் புத்திரர்களிருவரில் பூணூல்விளங்கு மார்பினையுடைய சுசிவிரதன் அங்கு ஒருபுறத்திலுள்ள சுத்தமான நதியிற்றீர்த்தமாடச்சென்றான். அப்படிச் செல்லவும், தெளிந்த அலைநீர் மோதுகின்ற கணையினிடத்தில் மாதர்கள் கொங்கைக்கு ஒப்புளதான ஒருகுடத்தில் திரவியமிருக்கக்கண்டான். எ - று. (கசு)

ஓகையொடுநான்மறைவல்லோனுறுதிபொருள்கண்ணுற்றிடலும்
பாகைவிரவுமொழியுமையாள்பங்கன்பூசைப்பலனென்றே
தோகைபாகன்புகழ்பாடித்தோளிற்சுமக்குங்குடநிறைந்த
ஈகையொடுமினியகத்தினெய்தித்தாயர்க்கிதுசான்னான்.

(இ - புணை.) தான் கண்டறியாத திரவியத்தைக்கண்டவளவில், அப்பிராமணப்பிள்ளை சந்தோஷத்துடன் பாகுபோலும் மதுரவசனங்களையருளும் பார்வதியாளையிடப்பாகத்திலுடைய பரமசிவனைப் பூசித்தலால் கிடைத்த

பலனிதுவென்று அவருடைய புகழை யெடித்துப்பாடித் தோத்திரஞ்செய்து, பொன்னிறைந்த அந்தக் குடத்தையெடுத்துத் தோணில்லைவத்துக்கொண்டு வீட்டில்வந்து, தாயாருக்கு இந்த வார்த்தையைச்சொன்னன். எ - று.

ஈகை - பொன். (கஎ)

அன்பர்க்கெளியன்வெள்ளிமலையமர்ந்தமுதல்வனருள்பேணி
யின்புற்றியற்றும்பூசனையினெய்துபயன்காணிதுவென்னத்
துன்பக்கட.லினழுந்துமுமைதூயபுதல்வன்சொற்கேளா
என்பும்றுருகியகங்குளிர்ந்தங்கிளையான்முகம்பார்த்திதுசொல்வாள்.

(இ - புனா.) அம்மையே! அன்பர்க்கெளியரும் கையிலைவீற்றிருப்பவருமாகிய பரமசிவனுடைய திருவருளை விரும்பி இன்பம் பொருந்தச்செய்யும் பூசனையினால், அடைந்தபலன் இதுவென்று பரிசுத்தனாகிய தன்புத்திரன்சொல்லிய வார்த்தையைக்கேட்டு, முன் துக்கசாகரத்தில் அழுந்திய உமையென்னும் பெயரையுடைய தாயானவள் எலும்பு நெக்குவிட்டுருகி மனமகிழ்ச்சியடைந்து, அந்த இளையபுத்திரன் முகத்தைப்பார்த்து இந்த வசனஞ் சொல்லுவாள் எ - று. (கஅ)

மைந்தர்நீங்களிருவீருமாழைபகிர்ந்துகொண்மினெனக்
கந்துங்கழையும்பொருங்களிற்றுக்கழற்கால்வேந்தன்றிருப்புதல்வன்
அந்திவண்ணனளித்ததீதவற்கேயெமக்குமவனளிக்கும்
புந்தியவலமொழிகென்னுத்தாயர்த்தொழுதுபுகன்றனே.

(இ - புனா.) புத்திரர்களே! நீங்களிருவரும் இந்தத்திரவியத்தைப் பங்கிட்டுக்கொள்ளுங்களென்று சொல்ல; கட்டுத்தறியையும் குத்துக்கோலையும் முறிக்கத்தக்க யானைப்படைகளையுடைய வீரகண்டைகட்டிய காவினரசராசபுத்திரன் சொல்லுகின்றான்; தாயே! அந்திவண்ணரான பெருமான் என்தமையனுக்கு அருளிச்செய்த தாகையால் அவருக்கே யுரியதாம்; எனக்கும் அந்தக்கடவுள்கிருபைசெய்வார்; அம்மையே! உன்மனதிலிருக்குந் துயரத்தை நீக்கென்றுதாயை வணங்கிச்சொன்னன். எ - று. மாழை - பொன்; கந்து - கட்டுத்தறி. (கஈ)

(வேறு.)

பற்றவன்கூறியவண்ணமைந்தருஞ்
செற்றமிலன்னையுஞ்செல்வமோங்கவே
யுற்றநல்குரவினையொழிந்துவைகுநாட்
கொற்றவன்காதலன்கொள்ளைகூறுவாம்.

(இ-புணா.) அரசகுமாரன் சொல்லிய பிரகாரமே குற்றமில்லாத தாயும் புத்திரர்களும் நெநொளாகப் பொருந்திய தரித்திரத்தை யொழிந்து, செல்வம் அதிகரிக்க வாழுநாளில், அரச குமாரனுடைய செய்கையை இனிச் சொல்லுவாம். எ - று. (உ0)

ஐம்புலனெருவழியடக்கியாறணி
னைம்பொனரிகழியம்படலிலவேணியான்
வம்பறுமலரடிவணங்கியேத்தலும்
இம்பரிற்றிங்களாறிரண்டுசென்றவே.

(இ - புணா) பஞ்சேந்திரியங்களையும் ஒருவழியில் அடக்கி, கங்காநதியையும் மாற்றுயர்ந்த பொன்னிறமுள்ள கொன்றைப்பூமாலையையும் அணிந்த சடையினையுடைய பரமசிவத்தின் மணமருத் திருவடித்தாமரையை இவ்வுலகில் வணங்கித் துதிசெய்துகொண்டு வருகையில், பன்னிரண்டு மாதங்கள் சென்றன. எ - று. (உக)

அன்னதுநிகழவோராழிமேயதேர்
மன்னவன்வடதிசைவழிக்கொண்டேகுநாட்
கன்னலஞ்சிலைமதன்விழுவுகாணிய
வின்னிளவேனில்வந்திறுத்ததென்பவே.

(இ - புணா.) அந்தன்மையாகப் பன்னிரண்டுமாதம் அவன் பூசைசெய்துகொண்டிருக்க; ஒற்றையுருளமைந்த தேரையுடைய சூரியன் வடதிசை நோக்கிச் செல்லுநாளாகிய உத்தராயணத்தில், கருப்புவில்லையுடைய மன்மதன் தனக்குரியவிழாவைக்கொள்ள இனியதாகிய இளவேனிற்காலம் வந்தது. எ-று.

என்ப ஏ - அசைகள். இளவேனிற்காலம் சித்திரை வைசாக மாதங்கள்.

நறுமலர்ப்பாடலந்துணர்த்தநாகங்கள்
குறுமுகைவெண்மலர்கொழித்தகோங்கினங்
துறுமலர்பொதுளிப்பொன்னணிந்துதோன்றின
வெறிமலர்க்காஞ்சிப்பூப்பசந்தவீறினே.

(இ - புணா.) இளவேனிற்காலம் வந்தபோது வாசனைபொருந்திய மலர்களையுடைய பாதிரிமரங்கள் பூத்தன; புன்னை மரங்கள் சிறிய வெள்ளிய அரும்புகளையும் மலர்களையும் கொட்டின; கோங்கமரங்கள் நெருங்கிய மலர்களைப் பொருந்திப் பொன்னையணிந்து கொண்டதுபோலத் தோன்றின; வாசனைதங்கிய காஞ்சிமலர்கள் செழுமையுடன் பசலைநிறமுள்ளனவாயிருந்தன. எ-று.

பாசிலையுதிர்த்தனபழுவலப்பாதலும்
வீசியபணைதொறுந்தளிரின்வேய்ந்தன

காசறுசெம்பட்டாமொருவிக்காய்ந்தகதிர்
பூசுறுசெம்படாம்போர்த்தபோலுமே.

(இ - புணை.) ஆலமரங்கள் பச்சை இலைகளை உதிர்த்தன; (அப்படி யுதிர்த்தபின்பு) நீண்ட கிளைகள்தோறும் தளிர்கள்விட்டு அலங்காரிக்கப்பட்டது போலிருந்தன; (இவ்வாறு பச்சிலைகளுதிர்த்து செந்தளிர் தளிர்த்தது எப்படியிருந்த தென்றால்,) குற்றமற்ற பச்சைப்போர்வையை நீக்கிச் செந்தளிர் மிகுந்த சிவப்புப் போர்வையைப் போர்த்துக் கொண்டதுபோலிருந்தது. எ-று

பாதவம் - பாதத்தால் நீரைக்கொள்வது; எனவே மரங்கள் என்றபடி.

கொடியவுமிளந்தளிர்குழைத்தகோட்டவுங்
கடிமலர்குடைவனகள்ளுண்வண்டினம்
பெடையொடுகுயிலினம்பிறங்குதண்முறி
யிடையிடைகோதுவகானமெங்குமே.

(இ - புணை.) இவையேயன்றி, அந்த வனமெங்கும் மதுவைவுண்கின்ற வண்டினங்கள் கொடிகளிலும், இளந்தளிர்கள் தளிர்த்த கொம்புகளிலும், வாசனைபொருந்திய மலர்களிலும் குடைவனவாயிருந்தன; ஆண்குயில்களும் பெட்டைக்குயில்களும் பிரகாசியாநின்ற குளிர்ந்த தளிர்களை மூக்கிறைத் கோதுவனவாயிருந்தன. எ - று. மூறி - தளிர். (உடு)

கலைமகள்வடிவினைமராங்கவர்ந்தன
மலைமகளெழிலினைப்பூவைவவாங்கின
கொலைமகள்கவினைநீடிலவங்கொண்டன
அலைமகளழகினையசோகணிந்ததே.

(இ - புணை.) சரஸ்வதியின் சரீரநிறத்தை வெண்கடப்பமலர்களும், பார்வதிதேவியாருடைய திருமேனிநிறத்தைக் காயாமலர்களும், துர்க்கையினுடைய நிறத்தைப் பெரிய இலவமலர்களும், திருமகள் நிறத்தை அசோகமலர்களும், கொண்டு விளங்கினபோலப் பூத்துநின்றன. எ - று.

வெண்கடம்புமலர் வெள்ளைநிறமும், காயாம்பூ கறுப்புநிறமும், இலவம்பூ சிவப்புநிறமும், அசோகம்பூ பொன்னிறமுங் கொண்டுள்ள புட்பங்களைப் பூத்தன என்பது கருத்து. (உசு)

கிளிகளுங்குயில்களுங்கேசரங்களு
மளியுமதாதினுடனைந்தெதன்றலுந்
துளிபடுசினைதொறுந்துவன்றிமிலலாற்
களிமதன்பாசறைபோன்றகாவெலாம்.

(இ-புணர்) இளிகளும் குயில்களும் வண்டுகளும், வண்டுகள் மொய்க்கும் பூந்தாதுக்களைப்பூசிய தென்றற்காற்றும், தேன்துளிபொருந்திய கனைகள் தோறும் நெருங்கியிருப்பதினால், அவ்வனமெல்லாம் களிப்பினையுடைய மன்மதனது பாசறையென்னும் படைவீடுபோலிருந்தது. எ - று. கேசரம் வண்டு.

மன்மதனுக்குக் கிளி குதிரை, குயில் எக்காளம், வண்டுகள் வில்லிற்பூட்டும் நாண், தென்றற்காற்று தேர், இக்காரணம் பற்றிப் படைவீடென்றார் இதனை "ஆலைக் கரும்புசிலை யயங்கணைபூ நாண்சுரும்பு - மாலைக் கிளிபுரவி மாருதந் தேர் - வேலை, கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங் - கொடிமகரந் திங்கள் குடை." என்னும் இரத்தினச்சுருக்க வெண்பாவானுணர்க. (உ எ)

அந்தரவகடுபோழ்ந்தகன்றதண்டலைப
பைந்தருந்தொறுங்கொடிபடர்ந்துபற்றின
சுந்தரமிழந்துமூப்படைந்தகொன்மையோர்
மைந்துடனரம்புயர்வன்மைபோன்றவே.

(இ-புணர்.) ஆகாயத்தினகட்டைப் பிளக்கும்படியான உயரமுள்ளதாய்ப் பரந்த சோலையிலிருக்கும் பசிய மரங்கடோறும் கொடிகள்படர்ந்து பற்றிக் கொண்டிருக்கும் தன்மை, அழகினையிழந்து மூப்படைந்தவர்கள் (அவயவத்தில்) வலிமையுடன் நரம்புகள் மேற்றோன்றி நிற்பனபோலிருந்தன. எ - று. ()

தேசுறுகிளியினமொழுங்கிற்சேண்வழி
வீசியசிறையவாய்ப்பறத்தல்வேனில்வேள்
தாசைசூழுலகங்கொண்டதற்குக்கட்டிய
பாசிலைத்தோரணப்பான்மைபோன்றவே.

(இ - புணர்.) பச்சென்ற ஒளியினையுடைய கிளிக்கூட்டங்கள் ஆகாய மார்க்கத்தில் சிறைகளைவீசிக்கொண்டு ஒழுங்காகப்பறந்து செல்லுதல், வசந்த காலத்துக்குரிய மன்மதன் எட்டுத்திக்கிலுஞ் சூழப்பட்ட இவ்வுலகத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டதின்பொருட்டுப் பச்சிலைத்தோரணங்கட்டிய தன்மைபோலிருந்தது. எ - று. (உ கூ)

அரும்பவிழ்ந்றுமலர்சுலவவாயிடைச்
சுரும்பினந்தருமுதலினத்துஞ்சூழ்ந்தன
மரங்கிழம்படுதலின்வழாதமைந்துற
இரும்பினற்பூண்பிடித்திட்டதொத்தவே.

(இ - புணர்.) அரும்புகள்விரிந்த நறியமலர்களினிடத்தைச் சுழன்று தேனுண்ணுவதற்கு வண்டுகள் அவ்விடத்திலிருக்கும் விருகூஷங்கள் முதலானவைகளிற் சூழ்ந்துகொண்டிருத்தல், விருகூஷங்கள் கிழத்தன்மை யடைந்தபடியி

ஞல், இனி யொடிந்துபோமெனைக்கருதி, யொடியாம லிருக்கும்வண்ணம் இரு
ம்பினற் பூண் செய்து அமைத்தது போலிருந்தது. எ - று. (கூ0)

அலங்கல்வெண்கணிகைவேலரசரீட்டமு
மிலங்கிழைமகளிர்தோடிளைஞரீட்டமும்
டொலங்கொடிமாளிகைநீங்கிப்போந்தனி
துலங்குபூங்காவகந்துன்னிச்சேர்ந்தவே.

(இ - புணை.) வெற்றிமாலையினையும் வெள்ளைக் குடையினையும் வேலா யுதத்தையுமுடைய அரசர்கூட்டமும், பிரகாசியாநின்ற ஆபரணங்கள் அணிந் திருக்கும் மாதர்கூட்டமும், வாலிபர் கூட்டமும், பொன்னுற் செய்யப்பட்ட கொடிகள்கட்டிய மாளிகைகளை விட்டுச்சென்று, வண்டுகள் விளங்கிக்கொண் டிருக்கும் மலர்களையுடைய சோலையினிடத்தில் நெருங்கிச் சூழ்ந்தன. எ - று.

சோலையானது தளிர்விட்டுத்தழைந்து, அரும்புகள் மலர்ந்து, அதிககுளிர் ச்சியா யிருத்தலால, நீர் விளையாடியும் போதுகொய்தும் இன்பம் அனுபவித்த வின்பொருட்டுச் சென்றதெனக் கொள்க. (கூக)

இருநிலமன்னர்மார்பிலகுமாரம்போல்
அருவரைதெற்றிதாழருவியோடியும்
முருகயர்புலமெனமகளிர்முண்டக
மா

(இ - புணை.) பெரிய இவ்வுலகத்தை யாளுகின்ற அரசர்கள் மார்பில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் முத்தமாலைபோல பெரியமலையி னுச்சியி லிருந்துவிழுகிற அருவிநீரில் விளையாடியும், வாசனைதங்கி விளங்கும் நந்தனவன த்திற் பொருந்துவதுபோல மாதர்களானவர்கள் வாசனையுடன் மலருகின்ற அ ழகிய தடாகக்கரையில் பொருந்தியும். எ - று. அயர்தல்-ஈண்டுதங்கல்.(கூஉ)

சிலம்பெதிர்கூவியுஞ்சிற்றில்கோலியு
முலம்பொருகுவவுத்தாளுழுதகொங்கைமேற்
கலம்பலதிருத்தியுங்கலவையாடியு
நலம்பலதுய்த்தனர்நதியின்பாங்கரோ.

(இ - புணை.) மலைகளுக்கெதிரில் கூவியும், நதியின்கரையில் சிறுவீடுகட் டிவிளையாடியும், (தத்தங்கணவர்களுடைய) திரண்டகல்லையொத்துப் பருத்த, புசங்களில்படிந்த தனங்களின்மேல் பலவித ஆபரணங்களை அணிந்தும், வா சனைத்திரவியஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு பூசியும், இவ்வாறு பல இன்பங்களை அனுபவித்தார்கள். எ - று.

மலைகளுக்கெதிரிற் கூவிளுல், கூவுகின்றவர்கள் ஓசைபோலாவது அவர்கள் வசனம்போலாவது பிரதித் தொனியுணடாகு மாதலால், அதுவுமோர் விநோதமாகக் கொண்டாரொனக்கொள்ளுத லொருவகை. அவ்வாறன்றித் தங்கள் தங்கள் கணவர்களுடன் ஊடினவர்களுக்கு மகிழ்ச்சியின்மையால், மற்றெருருவினோதத்தில் மனஞ்செல்லாமல் பேச்சுத்துணைக்காக மலையுடன் கூவினரென்கொள்ளுத லொருவகை. கிள்ளை குயில் இவைகளுடன் பேசலாகாதோவெனின், அவைகளின் ஓசை விரகத்துக்கேதுவானது. இக்கருத்து "வெயினிறங்குறையச்சோதி மினனிழல்பரப்ப முன்னர்ச், துயிலுணர் செவ்வியாருக் தனியுறு முனிவிலேருன், குயிலொடு மினிதுபேசிச் சிலபொடு மினிதுகூவி" என்னும் கம்பராமாயணம் வனாகாட்சிப்படலம் உரை வது செய்யுளாலுமுணர்க. (கக)

சத்தியாதனன்றருதருமகுத்தனு
மெய்த்தவத்தோழனீங்கிவேறொரு
பத்திரமபொதுளியபழுவமெய்தினன்.

(இ - புரை.) இவ்விடத்தில் இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருக்க; அளவில்லாத சீரினையுடைய சத்தியாதனனின்ற தருமகுத்தனென்பவன் உண்மையாகிய தவத்தினையுடைய தன்தோழனைவிட்டு நீங்கி, தழை நிறைக்கள்ள வேறொரு வனத்திற்சென்றான். எ - று. பழுவம் - வனம். (கச)

(வேறு)

மஞ்சுசூழ்குடமிவெள்ளிவேதண்டமழுவலான்சென்னிசைநிறைக்கும், விஞ்சையர்பெருமான்றிருமகளாபவெள்வளைத்தோளியாங்கொருத்தி, வஞ்சிநுண்ணிடையார்பண்ணையுளாடும்வனப்பினைக்கண்டலுமயங்கிக், குஞ்சரநுகர்ந்தவெள்ளில்போன்மாழ்கிக்குழைந்துதன்னுளந்தனிற்குணித்தான்.

(இ - புரை.) (அப்படிபோன தருமகுத்தனனவன்) மேகங்களால் சூழப்பட்ட சிகரங்களையுடைய கயிலாசகிரியில் வீற்றிருக்கும் பரமசிவனுடைய திருச்செவிகளிற்பொருந்த இசைபாடுகின்ற வித்தியாதரமன்னவன் புத்திரியாகிய சங்குவளையலணிந்த கையினையுடைய ஒருமாதானவன், அவ்விடத்தில் பூங்கொடிபோல நுண்ணிய இடையினையுடைய தோழிமார் கூட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் அழகைக் கண்டமாத்திரத்தில், மனமயங்கி வேழமுண்ட விளாங்கனிபோலச் சோர்வுடன்மெலிந்து, தன்மனதில் இவ்வாறு நினைத்தான். எ - று.

வேழமுண்ட விளாங்கனி என்றது தேனொழுகுந்தெவிட்டாய் என்பது போன்றது; வேழம் தேனை என்பனவொருவகைநோய்; இதனைநச்சினார்க்கினியார் சிவகசிந்தாமணியில்வனைந்த உரையாலுமுணர்க. வேதண்டம் - மலை. (கஞ)

பூவுறைதிருவோகாகா.தங்கொடியோபொருப்புறைகுமுதவாய் மயிலோ, நேவர்தமுலகினின்றிழிக்தருளுஞ்செய்யவாய்மடமொழிக் கிளிசீயோ, யாவளிங்கிருந்தவேந்திழையென்னவிறைமகனெண்ணமுற் றிரங்கக், கோவிளங்குமரன்வனப்பினைநோக்கிக்கொடியிடைமடந்தை யுங்குறித்தாள்.

(இ - புனை.) இக்கிருக்கின்ற மாதானவள் செக்தாமணையில் வீற்றிருக்குந் திருமகளோ? நாககன்னிகையோ? டீலையில்வாழும் செவ்வல்லிபோதும் வாயி னையுடைய வனாயரமகளோ! தேவருலகத்திலிருந்துவந்த சிவந்தவானையும் மழலைச்சொல்லையுமுடைய கிள்ளையையொத்த ரப்பாள் திரீயோ? இன்னனென் றறு தெரிபவில்லையே யென்று அந்த ராசகுமாரன் எண்ணங்கொண்டு (காம விகாரத்தினால் வியாகுலமுடையவனையிருக்க: அவ்வரசகுமாரனைப் பார்த்துக் கொடிபோன்ற நுண்ணிய இடையையுடைய அந்தஸ்திரீயும் இச்சைகொண்டு இவ்வாறுநினைத்தாள் எ - று. (கூசு)

பணைநெறுகானவிஞ்சையருங்கிற்பாகசாதனன்றிருநாட்டின், மண்ணகவனைப்பினிளமையிலைதமிலைத்தின் வடிவினிவென்றனக்கினையார், கண்மணிகுளிர்ப்பவந்திவ்வுகாணடி றந்தகாடேவைவந்தனனென்ன, வுண ணிறையழியவுலையிடுமெழுகொத் தொருமொழி தோழியர்க்குரை த்தாள்.

(இ - புனை. இசைபொருந்திய கானம் பாடுகின்றவித்தியாதரருலகத்தி லும் தேவேந்திரனுடைய உலகத்திலும் பூலோகத்திலும் இளமை சவுந்தரியம் உருவம் இவைகளில் இவனுக்கு ஒப்டானவர்கள் யாரிருக்கின்றார்கள்; முன் னிறந்தபன்மதன் (போாக்கின்றவர்களுடைய) கண்மணி மகிழ்ச்சியடையும்படி உருவுகொண்டு வந்தாலேவென்று, உள்ளத்திலிருக்கும் கற்புகுலைய உலக்கள த்திலிட்டமெழுகைப்போல (மனமுருகி) தோழிகளைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லினாள். எ - று. (கூஎ)

மங்கைமீர்நீவிரினவருமிந்தவனத்தினுக்கப்புறம்போகிப் பொங்கரிற்புகுந்தாறுமலர்கொய்துபோதுமினென்றவர்ப்பணியா அங்கவர்யாருந்தணந்தபினிந்தவணங்கொருதமியளாயெதிர்ந்து பங்கயமுகத்துக்குமரன்மாட்டணுகிப்பரிவுடனினையனபகர்ந்தாள்.

(இ - புனை.) தோழிகளே! நீங்களெல்லாரும் இத்தவனத்துக் கப்புறம் போய்ச் சோலையிற்சேர்ந்து, வாசனைபொருந்திய மலாகள் பறித்துக்கொண்டு வாருங்களென்று அவர்களுக் குத்தரவுசெய்து, அவர்களெல்லாரும் நீங்கிப் போனபின்பு இந்த மாதானவள் தான் தனிமையாகப்போய்த் தாமரைமலா

போன்ற முகத்தினையுடைய ராசகுமாரன் சமீபத்தில் அடைத்து, விருப்பத்துடன் இந்த வார்த்தையைச்சொன்னள். எ - று. (நஅ)

கன்னலஞ்சிலேவளருருவுகொண்டனையகாளையீண்டடைந்தகாரணமுநின்னுடைநாடுநின்றிருமரபுநின்றிருட்பெயரும்யாவென்னப் பொன்னிளமுலையாள்வினவலுங்கேட்டுப்புந்தியினவள்குறிப்புணர்ந்து

(இ - புணை.) கருப்புவில்லேயுடைய மன்மதனனவன் முன்போல உருவுகொண்டதுபோன்ற பால்யனே! நீ இவ்விடத்திற்கு வந்தகாரணமும், உன்னுடையதேசமும், உன்னுடையகுலமும், அழகிய உன்பெயரும், யாவையென்று பொன்னிறமுள்ள தேமல்பரந்த இளமைபொருந்திய தனங்களையுடையவள் வினவவும், அவற்றைக்கேட்டுத் தன்மனதில் அவள் குறிப்பை அறிந்துகொண்டு, ஒளிபொருந்திய மகுடம் அணிந்த மன்னவனின்ற ராசகுமாரன் மனமகிழ்ந்து சொல்லுகின்றான். எ - று. யா - யாவை. (நக)

விரைமலர்நாற்றம்யோசனைகமழும் விதர்ப்பதேசாதிபன்விரிந்த, தரையெலாநிழற்றுமுழுமதிக்கவிகைச்சத்தியாதனன்றனக்கமைந்த, மரைமலர்த்திருவேயனையவள்சதியாமடவாறிருவியிற்றுதித்தே,னிரை வளைக்கரத்தாயென்னைதோர்பகைஞர்நெடும் படைக்களத்திடைமடிந் தான்.

(இ . புணை.) மலர்களின் மணம் யோசனைவரையும் பரிமளிக்கும் (சோலைகள்சூழ்ந்த) விதர்ப்பதேசத்துக்கு அரசனாகி, பரந்த உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் நிழலைச்செய்யும் பூர்ணசந்திரனையொத்த வெண்கொற்றக்குடையினை யுடையவனும், (ராச்சியபாரஞ்செய்த) சத்தியாதன ராசனுக்கு அமைந்த புட்பவாசியான திருமகளையொத்த (சவுக்தரியமுள்ள) சதியென்னும் பெயரிய மனைவி வயிற்றிற்பிறந்தேன்; வரிசையாக வளையலணிந்த கையையுடைய மாதே! என்பிதாவானவர் போர்செய்யவந்த பகைவருடைய பெரிய புத்தகளத்தினிடத்தில் (எதிர்த்துப் போர்செய்து) மடிந்தார். எ - று. (கo)

ன்றவெம்மாயுநீருணுங்கயத்தினிடங்கர்வாய்ப்பட்டனண்மடியத், தான்றியவுமையாம்பார்ப்பனியெனத்தன் ரோன்றலுக்கிளவலாய்வளர்த்தான், சான்றுசான்முனிவனெனக்குறுகாமந்தருமகுத்தன்னெனச்சாற்றி, யான்றவெந்துயரினழிவுரைவண்ணமரனடிக்கென்னையாட்கொடுத்தான்.

(இ - புணை.) (என்பிதா இறந்துபோகவே, என் தாயானவள் சுகரதத்தை விட்டுத் தனியேவனத்திற்போய் அவ்விடத்தில் என்னைப்பெற்று, அங்கிருக்கும்

சொல்லியிருக்கின்றதுடன், எனக்குண்டாகிய ஒருதலைக் காமத்தினாலேயாகாமல், நீயும் என்னிடத்தில் மோகங்கொண்டவனென்று பழைய ஊழ்வினையிலை நேரிட்டதென்று நெருங்கிய அளகத்தையுடைய அந்த மாதுசொல்லி அதற்கு மேல் இக்காரியத்தைச்செய்தாள். எ - று.

எண்வகை மணம்-பிரமம், தெய்வம், ஆரிஷம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தர்வம், இராக்கதம், பைசாசம். (சசு)

கொங்கையங்குவட்டிற்றாளமாலிகையைக்கொழுஞ்சுடர்க்குரு மணியாழி, யங்கையினேந்திமணிச்சிலம்பாற்றவன்னங்களலமராடந் து, சிங்கவேறனையாணுலம்பொருதடந்தோட்சேர்த்திணள்சேர்த்தலு மாச, புங்கவன்சிறுவனுவகைபூத்தந்தப்பொலங்கொடிக்கினையனபுக ன்றான்.

(இ - புணை.) பொன்மலையையொத்த தனங்களில் அணிந்திருக்கு முத் துமாலைகளைச் செழுமையுள்ள ஒளியினையும் நிறத்தினையுமுடைய ரத்தினங் கள்பதித்த மோதிரம் அணிந்த கையிலைக்கழற்றி யேந்திக்கொண்டு, மணிகள் பதித்த சிலம்புசத்திக்கவும், அன்னப்பகூகிகள் மயங்கவும் நடந்து, ஆண்சிங்கம் போன்ற ராசகுமாரனுடைய திரண்ட கல்லையொத்த புசங்களில் அணிந்தான்; அப்படி அணிந்தமாத்திரத்தில் ராஜசிரேஷ்டனுகிய சத்தியாதன மகாராஜா வின் புத்திரன் சந்தோஷமடைந்து பொற்கொடியையொத்த அந்த மாதைப் பார்த்து இந்தவார்த்தை சொன்னான். எ - று. அன்னம் அலமரல் தமக்கு இத்தகைய நன்னடை வாய்க்கவில்லையே என்ற வருத்தத்தாலென்க. (சஎ)

அரிழந்தந்தேதாவறுமைபூண்டுழல்வனணிபநின்னுரமாலிகையை த், திரமிடனெனுமுன்னுதைதேராதுசேர்த்தினையிஃதுளந்தேரிற், பர வருங்கற்பிற்பைந்தொடிமுறையின்பகுதியன்றேயெனப்பகர, மருமு லர்க்குழலாள் குறுநகைகோட்டி வணங்கிவாய்புதைத்துநின்றுணைத் தாள்.

(இ - புணை.) அரசாட்சியை யிழந்து தரித்திரமுள்ளவனு யுழன்றுகொ ண்டிருக்கிற யான் அணிந்துகொள்ளும்படி, உன் முத்துமாலையைத் திரமிஷ னென்கிற உன் பிதாவின் சம்மதியில்லாமல் என்புஜத்திற் றரித்தாய்; இந்தச் செய்கையை மனதில் ஆலோசிக்குமிடத்தில், புகழ்தற்கரிய பதிவிரதாதருமத் தையுடையவளே! இது நீதியின் பாற்பட்டதல்லவே என்று அவன்சொல்ல; வாசனைதங்கிய பூமாலையணிந்த அளகத்தையுடைய அந்தக் கந்தருவ மாதான வன் புன்னகைசெய்து வணங்கி, வாய்பொத்திக்கொண்டு நின்றுசொல்லுகி ருள். எ - று. ஆரம் - முத்து. (சஅ)

மன்னவன்சிறுவகேட்டிதீயுனைத்தவாசகமழகிதெயடிச்சி
நின்னுடைக்கருத்தினெண்ணியமுறைபேநிரப்புவனைனையுமீள
இந்தெவனத்தினெய்துதியென்னவேந்திழையாயமோடேகத்
'ச்சா)

(இ - புணை.) அரசகுமாரனே! நான் சொல்லுகிற வார்த்தையைக் கேட்பாயாக; நீசொன்ன வார்த்தை அழகுள்ளதாயிருக்கின்றது; அடிச்சியாகிய நான் உன்னுடைய மனதில் நினைத்தவைகளை முறைமைப்படி நிறைவேற்றுகிறேன்; காளையதினமும் நெடியதாகிய இவ்வனத்தில் வருவாயென்று சொல்லி, அந்தக்காந்தர்வ ஸ்ரீயானவள் தன்தோழிகளுடனே போக; தனக்கு ஒப்பில்லாதவளுகிய ராசகுமாரன் இந்தச் சேதியைத் தன்தமையனு யிருப்பவனுடன் சொல்லித் தன்பதியைச்சேர்ந்து, எ - று. (சக)

உமையெனுமன்னைக்கெதிர்ந்தனவாயவுவகையையப்படியுனைத்துச்,சுமையுடைத்திங்கட்சடிலவானவனைத்தொழுதுவந்தனைத்தொழிலியற்றி,யெமையளித்தருணீயென்றுகொண்டங்கவேந்திழையுனைத்திம்வழிநாள், அமைநினைந்தோங்கும்வனந்தனிற்புகுந்தியாழராசனேடரிவையைக்கண்டான்.

(இ - புணை.) தன்பதியிற்போன அரசகுமாரன் உமையென்னும் பெயரையுடைய தன்தாயைக்கண்டு, தனக்குநேரிட்ட சந்தோஷ சமாசாரத்தை நடந்தபடி சொல்லி, இளந்திங்களை யணிந்திருக்குஞ் சடாபாரத்தையுடைய பரமசிவனைத்தொழுதுஆராதித்து, அடியேங்களை ரக்ஷித்தருளுமென்று வேண்டிக்கொண்டு, காந்தர்வஸ்திரீ வரச்சொன்னபடி மறுநாள் மூங்கில்கள் வரிசைவரிசையாயோங்கி வளர்ந்திராநின்ற அந்த வனத்திற்போய்க் கந்தர்வராசனையும் அந்தமாதினையுங் கண்டான். எ - று. (நo)

கண்டவர்தம்மைக்கண்டியாழ்விஞ்சைக்கதிர்முடியாசுவப்போடு
வண்டமிர்தெரியலாசிளங்களிற்றவருகெனவாங்குபுதழுவி
யண்டரிறைருவனனவேதியனையடித்தனண்புல்லியாங்கிருத்திக்
துண்டவெண்பிறையான்கூறியமாற்றஞ்சுடர்முடியாசகேளென்றான்.

(இ - புணை.) ஒளிபொருந்திய கிரீடம் அணிந்திருக்கும் வித்தியாதர மன்னவன் தன்னைக்கண்டவர்களைத் தானும் பார்த்துச் சந்தோஷத்துடன் வண்டுகள் இசை பாடிக்கொண்டிருக்கும் பூமாலையணிந்த யானையையொத்த ராசகுமாரனே! வருவாயென்று சமீபத்தில் வரவழைத்துத் தழுவி, தேவர்களில்ஒருவனை பிராமணச்சிறுவனையும் அடித்துத்தழுவி,அவ்விடத்தில் தன்னுடன் இருக்கும்படிவைத்துக்கொண்டு,வெண்மையாகிய இளந்திங்களையணிந்த

பரபசிவன் அருளிச்செய்த திருவாக்கினைப் பிரகாசந்தங்கிய மகுடத்தையுடைய அரசகுமாரனே! கேளென்று சொன்னன். எ-று. (நாக)

விண்ணகடணவும்வெள்ளியங்கிரியின்விளங்குமாமணிசெய்பண்டபத்திற், பண்ணவர்பெருமானிணையடிக்கமலம்பணியயாமென்னலினைடந்தேன், கண்ணுதலடியர்க்கெளியவனமன்கருணைவாரிதியெனோக்கி,யுண்ணிறையுவகைபுறம்பொழிந்தோங்கவகமகிழ்ந்தின்னவாறுரைத்தான்.

(இ - புரை) அண்டமுகட்டைப் பொருந்திய அழகிய கயிலாயகிரியில் பிரகாசிக்கும் மாணிக்கமுதலாகிய ரத்தினங்களிறற் செய்யப்பட்ட மண்டபத்தில் தேவர்கடேவனென பரமசிவனுடைய இரண்டு திருவடித்தாமரைகளையும்வணங்க நான் நேற்றுப்போயினேன்; போனவிடத்தில் நெற்றிக்கண்ணையுடையவரும் அடியார்க்கெளியவரும் நிர்மலமானவரும் கிருபைக்கடலானவருமாகிய கயிலாசபதியானவர் அடியேனைப்பார்த்து, உள்ளேநிறைந்த சந்தோஷமானது புறத்தில்பெருகி யோங்கத்தக்கதாகத் திருவுளமகிழ்ந்து இவ்வாறு சொல்லியருளினர். எ - று. நென்னல் - நேற்று. (நாஉ)

ஆசில்சீர்க்குமரனினதுகற்றுயுமத்தனுமிறந்ததுமதன்பின்
மாசிலாளொருத்திபார்ப்பனிவளர்க்கவறுமையங்கடலிணழ்ந்ததுவுந்
தேசிகமுனியுன்பிறப்பெலாந்தெருட்டிச்சிவனேபூசியென்றதுவும்
ஈசனதடியினன்பினுன்மலர்பெய்தேத்தித்தீபூசைபண்ணியதும்.

(இ - புரை.) குற்றமில்லாத புகழினையுடைய ராசகுமாரனே! உன்னுடைய கல்ல தாயும் தகப்பனும் இறந்துபோனதும், அதன்பின் உத்தமியாகிய ஒரு பிராமணஸ்திரீயானவள் உன்னைவளர்க்க வளருநாளில் நீங்கள் தரித்திரமாகிய சமுத்திரத்தில் மூழ்கியிருந்ததும், ஒருமுனிவனாகிய ஆசிரியன்வந்து உன்பிறப்பின் விவரத்தைத்தெரிவித்து, நீ சிவனையே பூசித்துக்கொண்டிருவென்று சொல்லியதும், அவர்சொல்லியபடி நீ பரமசிவனுடைய திருவடியில் அன்புடன் மலர்களால் அருச்சித்துத்துதிசெய்து பூசைசெய்ததும். எ - று.

வறுமையங்கடல் என்பதினிடையிலிருக்கும் அம் சாரியை. (நாக)

அன்னதாலுன்மாட்டன்புமிக்குடையேமென்பதுமறிகெனவுரைத்துப், பின்னருனினதுதாதையைமாய்த்துப்பெரும்பதிவளனெலாங்கவர்ந்த, மன்னைவீட்டிக்கடற்படைதுணித்துவாகைகொண்டரசினங்குமரன், றன்னருட்கவிகையுலகெலாநிழற்றத்தருக்கொடுதுணெசெய்வாயென்றான்.

(இ - புரை.) அந்த முனிவர் சொற்படி பூசைசெய்த தன்மையினால், உன்னிடத்தில் மிகுந்த கிருபையைத்திருக்கிறே மென்பதும், அறியக்கடவை

யென்று சொல்லி, பின்னும் உன் தகப்பனைக்கொன்று பெரிய நகரமுதலா கிய வளப்பங்களையெல்லாம் அபகரித்துக்கொண்ட் அரசர்களையும் கடல்போ ன்ற அளவற்ற சேனைகளையுங்கொன்று, வெற்றியடைந்து, அத்தராசபுத்திரன் (இராச்சியபட்டாபிஷேகஞ்) செய்துகொண்டு உயிர்களுக்கெல்லாம் கிருபை செய்யத்தக்க வெண்ணிறக்குடை நிழல்செய்யும்படித் தருக்கொடு துணைசெய் யென்று எனக்குக் கட்டளையிட்டனர். எ - று.

அரசகுமாரன் முனிவன்சொற்படி நம்மைப் பூசித்ததினால், தன்பகை வனைவென்று அரசாட்சிசெய்வான்; அந்தக்காலத்தில் அவனுக்குச் சகாயஞ் செய்யென்று பரமசிவன் தனக்குக் கட்டளையிட்டதாக வித்தியாதரன் சொன் னன் என்பது தாற்பரியம் (௫௬)

முத்தலைச்சூலஞ்சுவன்மிசையிருத்துமுழுமுதலுனைதலைமேற் கொண், டதத்தலைநின்றுநகரின்வந்தணைவேற்கணங்கிவளரனுனைப்படி யே, கைத்தலமெல்லிக்கனியினின்மாபுங்கவினும்வந்துனைத்திடக்கே ளா, இத்தலமதன்சிவனருள்பெற்றுர்க்கெய்திடாப்பொருளுமொ ன்றுளதோ.

(இ புனை.) மூன்றுபிரிவாகிய சூலாயுதத்தைத் தமது திருத்தோளிற்றாங் கும் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைச் சிரமேலேற்றுக்கொண்டு, அவ் விடத்திருந்து என்னகரத்தைச்சேர்ந்த எனக்கு என்புத்திரியாகிய இந்தக்கன் னிகையானவள் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கின்படி கரதலாமலகம் போல உன்னுடைய மரபினையும் அழகினையும் சொல்லக்கேட்டு, (உன்னைக்கா ணும்பொருட்டு) இவ்விடத்தில் வந்தேன்; பரமசிவனுடைய கிருபையைப் பெற்றவர்க்குக் கிடையாத ஒருபொருளுமிருக்கின்றதோ? எ - று.

இவ்வுலகமெல்லாம் சிருஷ்டியாவதற்குமுன்னும் அவையெல்லாம் இறுதி யடைந்த பின்னும் எவற்றிற்குங் காரணராயிருப்பவராதலால், பரமசிவனை முழுமுதலென்றுர். இதனை, ''ஆதியு மந்தமுமாயினர்க்கு'' என்னுந் திரு வாசகத்தாலுணர்க. சுவல் - தோள். (௫௭)

ஆதலாலஞ்சுமதியிவணினக்கேயடிப்பணிசெய்கெனவளித்தேன் காதலாயெனப்பொற்கரகரீரவன்றன்கரத்தினின்விடுத்தபின்கமல மாதுகோர்மகளிர்நலமணிகனகமால்கரிதேர்பரிபதாதி [ன். மோதுபோர்க்கணியங்கவசம்வித்றாணிமூரிவேல்வாளிவைகொடுத்தா

(இ - புனை.) இத்த முறைமையினல் ஓ காதலனே! அஞ்சுமதியென்னும் பெயரையுடைய (என்புத்திரியாகிய) இந்தக்கன்னிகையை உனக்குப் பணி விடை செய்யக்கடவளென்று விருப்பத்துடன் கொடுத்தேனென்று, பொற் கரகத்திலிருக்கும் நீரை அவன்கையில் விட்டபின்பு, திருமகளையொத்த (அழ

குன்ன) தோழிகள் நவமணிகள் சுவர்ணம் பெரியயானைகள் தேர்கள் குதிரைகள் பதாதிகள் தாக்கும்படியான மழுவாயுதம் கவசம் தனுசு அம்பராத்தூணி பலம்பொருந்திய வேலாயுதம் வாளாயுதம் என்னும் இவைகளோயுங் கொடுத்தான். எ - று. கணியம் - மழுப்படை. (நிசு)

முனிவரன்புதல்வனையமுமுமழுவிராமன்போல
அனிகமோடெய்திக்கெவ்வரருங்கிளையறுத்துச்செங்கோ
னினிதினேச்சியபின்மைந்தற்கிறைமையீந்தம்பாலெய்தித்
தனிமுதல்பதத்திற்சேர்திதையலோடரசவென்றை.

(இ - ‘புரை.) இவைகளோக்கொடுத்த வித்தியாதரன் பின்னுஞ் சொல்லுகிறனை; அரசகுமாரனே! நீ சமதக்கினிமுனிவரருடைய புத்திரராகிய மழுவுங்காத பரசாயுதத்தையுடைய பரசுராமனைப்போல, இச் சைந்தியங்களோடுசென்று, வெல்லுதற்கரிய பகைவனைச் சுற்றத்தாருடன்கொன்று, உயிர்களுக்கெல்லாம் இன்பமுண்டாகும்படி செங்கோல்செலுத்திப் (புத்திரசம்பத்துமுதலாகிய அஷ்டசம்பத்துகளுடன் வாழ்ந்து,) அதன்பின்பு உன்புத்திரனுக்கு அரசாட்சிகொடுத்து, உன்மனைவியுடன் எம்மிடத்தில்வந்து ஒப்பற்ற பரமசிவனுடைய திருவடியிற் சேரக்கடவையென்றுசொல்லி. எ - று.

பரசு - கோடாரி. (நஎ)

எடுத்துறமுயங்கிநின்றவேந்திழைக்கினிதுசூடி
யடுத்தநற்சேனைமூற்றுமவன்றுணையாகத்தூண்டி
மடுத்தொளிமுரசமார்ப்பவாழ்த்தினன்மருமான்றன்னை
விடுத்தயன்விமானமூர்ந்துவெள்ளிவேதண்டஞ்சேர்ந்தான்.

(இ - புரை.) தன்புத்திரியையெடுத்து முகத்தோடு முகமுறத் தழுவி, அந்தமாதுக்கு இனியஉபசாரவார்த்தைகள் சொல்லிப் பொருந்திய சேனைகளையெல்லாம் ராசகுமாரனுக்குத் துணையாகச்செல்லும்படி அனுப்பி, ஒளிபொருந்திய பேரிகைவாத்திய முழங்கத்தக்கதாக வாழ்த்துதல்செய்து, மருமகனுக்கு விடைகொடுத்து, (அதற்குமேல் அந்த வித்தியாதரன்) பிரமலோகத்து விமானத்திலேறிச்சென்று, கைலையைச்சேர்ந்தான். எ - று.

மருமான் - மருகன். வேதண்டம் - மலை. (நஅ)

குங்குமக்குவடுபோலக்குவிந்தெழுவயிரத்தோளான்
மங்கையர்க்கரசியஞ்சுமதியெனுந்திருவிறைஞ்சும்
பங்கயத்தண்டார்முன்னைன்புடைவரப்பதாதிசூழத்
தங்குலக்குரிமையானவிதர்ப்பதேசத்தைச்சார்ந்தான்.

(இ - புரை.) (வித்தியாதரன்போனபின்பு) குங்கும மலைபோலத் திரண்டுயர்ந்த திண்ணிய தோள்களையுடைய ராசகுமாரன் (அழகு முதலிய வைகளா

ல்) மாதர்களுக்கு அரசியாகிய அஞ்சுமதியென்னுந் தன்மனைவியுடன் குளிர்ச்சிதங்கிய தாமனைமாலையணிந்த பிராமணனுகிய தமையன் தன் அருகி
ல்வரவும் சேனைகள்சூழவுஞ்சென்று, தன் குலத்தாருக்கு உரியதாகிய விதர்ப்ப
தேசத்தைச் சேர்த்தான். எ - று தன்குலக்கு இதில் அத்துச் சாரியை குறை
(நூ)
ந்து நின்றது.

நெடும்படைப்படைகவல்லாரோர்ந்துபோர்தருகவன்றேல்
அடும்படைத்தொழில்கைவிட்டெம்மடிப்பணிசெய்கதத்த
மிடும்பினைத்தடியவந்தேம்யாமெனவிறைமைசாற்றி
முடங்கலிற்பொறித்துத்தூதிற்போக்கினன்முழுவுத்தோளான்.

(இ - புனை.) இப்படியாக விதர்ப்பதேசத்தைச்சேர்ந்த மத்தளம்போலுந் திரண்டதோள்களையுடையதருமகுத்தனென்னும் ராசகுமாரன், மிகுந்தசேனை களையுடைய பகைவர்களாகிய மன்னவர்களே! நீங்களெல்லோரும்வந்து சண்டைசெய்யுங்கள்; இல்லாவிட்டால் போர்த்தொழிலவிட்டு நம்முடைய பாதத்தைவணங்கிக் குற்றேவல்செய்யக்கடவீர்கள்; உங்களுடைய அகங்காரங்களை அடக்க நாம்வந்தோமென்று அரசவீரத்தை ஓலையிலெழுதித் தூதர்கள் கையிற்
(நூ0)
கொடுத்தனுப்பினன். எ-று.

கேட்டமன்னவர்களெல்லாங்கிரித்திண்டோள்குலுங்கநக்காங்
கூட்டரக்கனையசெங்கண்சிவந்திவனெருவமேனெவம்
வாட்டிறற்கெதிர்வனென்னுவந்துவெங்களத்தானர்
கோட்டமில்குணத்துத்தன்மருத்தனும்போரினேற்றான்.

(இ-புனை) இவ்வாறு அனுப்பப்பட்ட ஓலையை வாசித்தறிந்த அரசர்களெல்லாரும் மலைபோன்ற புசங்கள் குலுங்கும்படிநகைத்துச் செந்தாமரைமலர் போன்றகண்கள் செம்மைநிறமேற்றிய அரக்குப்போலச்சிவக்கக் (கோபங்கொண்டு);இச்சிறுவனெருவனே?எங்கள் வாள்வலிக்கு அஞ்சாமல் எதிர்க்கத்தக்கவனென்று (அவமதித்துத்தங்கள்தங்கள்சேனைகளுடன்) வெவ்விதாகிய யுத்தகளத்தில் வந்து சேர்ந்தார்கள்; மாறுபடாத நற்குணத்தையுடைய தருமகுத்தனும் போர்க்களத்தில் எதிர்த்தான். எ - று. நக்காங்கு-இதில்ஆங்கு அசைநிலை. ()

எற்றெதிர்மலையவேந்தொறிபடைவடிவேலெந்திக்
கூற்றெனவுடன்றுசாபங்குழைத்தடுபகழிதூர்த்தார்
வேற்றடந்தானைவீரர்வெருவந்துறஞ்சியாங்கே
யாற்றலராணரன்னதரசிளங்குமரன்கண்டான்.

(இ - புனை.) இவ்வாறு எதிரிட்டு யுத்தஞ்செய்ய, பகைமன்னவர்கள் எறிந்து கொல்லத்தக்க ஆயுதங்களையும் வடித்த வேலையையும் ஏந்தி, யமன்போலக் கோபமுள்ளவர்களாய், வில்லிலவனைத்துப் பாணங்களைப் பிரயோகஞ்செய்

தார்கள்; (அந்தப்பாணன்கள்பட்டுத் தேர்ப்பாகர்முதலியவர்களுடைய தலை முதலாகிய அவயவங்கள் அறுபட்டுவிழுவதைக்கண்டு பயந்து, தன்படைவீரர் கள்எதிர்நின்று போர்செய்யமாட்டாதவர்களாய்ப் பின்னிட்டோடினர்கள். அதைத்தருமகுத்தனென்னும் ராசகுமாரன் கண்டான். எ - று. சாபம்-வில். பகழி அம்பு. உளறு - தண்பம். (சுஉ)

வரிசிலைகுழையவாங்கிவடிக்கணைதொடுத்துமாற்றார்
விரிபிணைக்குவையின்குப்பைவெற்பெனமலியவீட்டிப்
புரைபுறுவடிவேலந்தித்தானைகையுமுன்னம்போரிற்
றரையினிற்செற்றுன்செம்பொற்றலையறத்தடிந்திட்டானே.

(இ - புணை.) வரிந்துகட்டியவில்லை நன்றுகவளைத்துக் கூர்மையுள்ள பா ணங்களைப்பிரயோகஞ்செய்து, பகைவருடைய பிணக் குப்பைகள் எங்கும்பர ந்து மலைகள்போலக் குவியும்படிச்செய்து, முன்புவேலாயுதத்தை யுடையவ னுய்வந்து போர்க்களத்தில் தன்பிதாவின் தலையைப்பூமியில் வீழ்த்தினவனுடை யபொன்முடிமணிந்த தலையையறுத்துத் தள்ளினன். எ - று. (சுஙு)

வரிசிலை - வரிந்துகட்டிய வில்லெனப்பொருள்படலால், வினைப்பகுதி வி னையெச்சப்பொருளில்வந்தது; "வரிப்புனைபந்து" என்பதுபோல.

படைமலைவொழிகவென்னுப்பணைமுரசறைவித்தம்பொற்
குடைபுவிநிழற்றமன்னர்குரைகழற்றருளின்வீழ
இடையிடையமைச்சர்பாதத்தீதத்துபுவணங்கிநிற்பத்
தொடையணிமார்பன்றங்கடொன்னகரடைந்துபின்னுள்.

(இ-புணை.) (தருமகுத்தனென்கிற ராசகுமாரன் தன்பகைவனுடைய தலை யை அறுத்துத்தள்ளினவுடன்) இனிப்போர்செய்வதை யொழியுங்க ளென்று பெரிய செயபேரிகையாற்சாற்றுவித்து, அழகியபொன்மயமான வெற்றிக்குடை பூமிக்கெல்லாம் நிழல்செய்யவும் போர்செய்யவந்த மற்ற அரசர்கள் சத்திக்கும் வீரகண்டையணிந்த தன்னுடையபாதத்தில் விழுந்து பணியவும், செல்வமி டந்தோறும் வரிசைவரிசையாக மந்திரிகள் தன்பாதத்தைத் துதிசெய்து வண ங்கி நிற்பவும், வெற்றிமாலையணிந்த மார்பையுடையவனுய்ப் பழமையாகிய தங் கள் நகரத்திற்போய்ச்சேர்ந்து, மறுநாள். எ - று. (சுசு)

மந்திரக்கிழவர்சூழவண்ங்கலர்வணங்கிவாழ்த்தத்
தந்திரத்தலைவர்போற்றத்தமனியமகுடஞ்சூடி
யைந்தருக்கொடைகண்டேடத்தவவனியைமுழுதுங்காத்தான்
கந்தினைத்தழன்றுபாயுங்கடாமுகக்களிற்றினனே.

(இ - புணை.) ஆரவாரத்தோடு கோபங்கொண்டு கட்டுத்தறியை முறிக் கும் மதமொழுகும் யானைப்படைகளுடைய தருமகுத்தவரசன் மந்திரிகள் சூழ்

ந்திருக்கவும், பலகடன்னரா யிருந்தவர்களெல்லோரும் வணங்கிவாழ்த்தவும், சேனாதிபதிகள்போற்றிசெய்யவும், கற்பகத்தருக்களும்தான் கொடுக்குந் தியாகத்தைக்கண்டு புகழவும், பொன்மகுடஞ்சூடி பூமிமுழுவதையுங்காத்தான். எ-று.

பஞ்சதருக்கள் அரிச்சந்தனம் கற்பகம் சந்தானம் பாரிசாதம் மந்தாரம். மகுடஞ்சூடி காத்தான் என இயைக்க. (சுஇ)

வேறு.

மையணிகண்டன்றனையருச்சித்துவருப்பிரதோடத்தின்வலத்தாற்
செய்யமேகாறிசைகண்மீச்செலமாலத்திங்கள்வெண்குடைபுவிகவிப்ப
ஐயநின்னடிமையாமெனத்தெவ்வரடிதாழப்புவிமுழுதாண்டு
துய்யமேபாகங்கணுகாந்துபின்னிறந்துதுணைவியோடரன்பதமடைந்தான்.

(இ - புனை.) கருநிறந்தங்கிய கண்டத்தையுடைய பரசிவப்பெருமானைச் சனிப்பிரதோஷத்தில் அருச்சனை செய்துவந்த பலத்தால் செங்கோலானது அஷ்டதிக்குகளிலும் செல்லவும், பருவகால அந்திப்போதில் உதயமாகும்பூரண சந்திரனையொத்த வெள்ளைக்குடை பூமிமுழுவதையுங் கவித்துக்கொள்ளவும், பகைவராகிய அரசர்கள் இறைவனே நாங்கள் உன்னுடைய அடிமையென்று பாதத்தைவணங்கவும், பூமிமுழுவதையுமாண்டு நல்லபோகங்களை அனுபவித்துப் பின்பு இவ்வுடலத்தைவிட்டுத் தன்மனைவியுடன் சிவபதஞ்சேர்ந்தான். எ - று.

பூரணசந்திரனை குடைக்கு உபமானமாதலால், மாலை என்பதற்கு பருவகால மாலைப்போதைக்கூறினும். (சுஈ)

இன்னதேபருளுமிப்பிரதோடமென்னயாம்வழுத்துதற்கெளிதோ
அன்னவாகனனுங்கலுழவாகனனுமறிவதன்றதனுடைப்பிரமை
பன்னகாபரணன்பூசையினிதுபோற்பலந்தரும்பூசையின்றென்ன
முன்னநான்முழுதுமுணர்ந்தவன்மொழிந்தான்முனிவரனைவருமகிழ்ந்தார்

(இ - புனை.) சனிப்பிரதோஷ பூசையின்பலனைது இத்தன்மையான இகபரசவுக்கியங்களைத் தருமென்று நாம்விவரித்துச் சொல்வதற்கெளிதல்ல; அதனுடைய பெருமை பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும்அறியத்தக்கதுமல்ல; சர்ப்பாபரணரான பரமசிவனுக்குரிய பூசைகளில் இத்தப்பூசையைப்போலப் பலனைத்தரும் பூசைவேறொன்று மில்லையென்று வேதாகமசாஸ்திரங்களையெல்லாமுணர்ந்த சூதமுனிவர் சொல்லியருளினார். அதுகேட்டு சுமிசாரணிய முனிவர்களும் மனமகிழ்ந்தார்கள். (சுஎ)

ஏழாவது-பிரதோஷபூசைமகிமை. அத்தியாயம் முற்றிற்று.

அ விருத்தம் சாகை.

சிவமயம்.

எட்டாவது

சோமவாரவிரதமான்மிய அத்தியாயம்.

சீதமதிப்பிள்ளைவெள்ளையமுதங்காலுஞ்செஞ்சடைமைக்கருமி டற்றுப்பசியசாயன், மாதுவளரொருபுறத்துநீறுபூத்தமாணிக்கமலைய னையவருணமேனி, காதனதுசரித்திரத்தின்மேன்மையின்னுகவில்வ னெனத்தவமுனிவனொவருங்கேட்பச், சூதனெனும்புராணமுனியறை கணென்குஞ்சொன்னமுனியடிதாழுதுபின்னுஞ்சொன்னன்.

(இ - ள.) குளிர்ச்சிபொருந்திய இளந்திங்கள் வெண்ணிறமுள்ள அமிர்தகிரணத்தைப் பொழிந்துகொண்டிருக்கும் சிவந்தசடைமுடியினை யும், மேகம்போன்ற காளகண்டத்தினையும், பச்சைநிறமுள்ள பார்வதிதேவி யார் அமர்ந்த இடப்பாகத்தினையும், நீறுபூத்த மாணிக்கமலையையொத்த செம் மைநிறமுள்ள திருமேனியையுமுடைய பரமசிவனது சரித்திரத்தின் மேன் மையை யின்னுஞ் சொல்லுகிறேனென்று நைமிசாரண்யத்தில் தவஞ்செய்யு முனிவர்களெல்லாருங் கேட்குமபடிச் சூதனென்கிற புராணமுனிவரானவர் நான்குவேதங்களையுஞ் சொன்ன வியாசமுனிவர் பாதங்களை மனதில்சிந்தித்து வணங்கிப் பின்னுஞ் சொல்லுகின்றார். எ - று. (க)

நித்தியமாயானந்தவுருவமாகிநிறைவுபடும்பொருளாகிக்குறை படாது, சத்தியமாயனைத்துயிர்க்குமுள்ளீடாகிச்சங்கற்பவிகற்பங்கட் கயலதாகி, வைத்தசிவதத்துவத்தினியல்புதன்னைவருகுரவனருளினி னிதுணர்ந்துவாழும், அத்தகையர்பிறப்பாழியிடைநின்றேறியழியாத சிவகதியினடைவரன்றே.

(இ - ள.) முனிவர்களே! நித்தியப்பொருளாயும் ஆனந்தமே திருமே னியாகக்கொண்டவராயும் குறைவுபடாமல் எங்கும் நிறைந்தபொருளாகியும் சத்தியப்பொருளாயும் எல்லாவுயிர்க்குள்ளும் உயிராகியும் சங்கற்பவிகற்பக்கரு க்கு அன்னியமாகியும் பொருந்திய சிவதத்துவத்தின் இயற்கையைக் குருபை யால் எழுந்தருளிய ஆசாரியர் அனுக்கிரகித்த முறைமையினால் உணர்ந்து வாழ் கின்ற தன்மையையுடையவர்கள் பிறவிச் சமுத்திரத்தின்கரையேறி அழியாத சிவகதியை அடைவார்கள். எ - று. சங்கற்பம் மனவியாபாரம். (உ)

வாங்குதினைச்கடலுடுத்தநூலமீதின்மண்ணைசொன்னைச மகனிராசை, தீங்குதருமென்னக்கருதித்துறந்துதங்கள்சிந்தனையப்புல னெறியிற்செலுத்தாராகிப், பூங்கனகவனைச்சிலைகொண்டவுணர்மாயப் புரமெரித்தகயிலைமலைப்புனிதன்ரூளி, ணேங்குமறைநெறியின்வழிபா டுசெய்வோருதாரவழிவருங்கவலையொழிப்பர்மாதோ.

(இ - புரை.) அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகத்தில் மண்ணை சை பொன்னைசை பெண்ணைசை என்று மூவகையாசைகள் தீங்குதருமென்று கருதி அவற்றைத் துறந்து, தங்கள்மனதை யைம்புலன்வழியிற் செலுத்தாத வர்களாய்ப் பொலிவுள்ளமகமேருவாகிய வில்லைக்கொண்டு அவுணர்களெல் லோரும்மாயும்படித்திரிபுரங்களையெரித்தகயிலாசவாசராகிய சிவபெருமானின் திருவடிகளில் ஒங்கிய வேதவிதிப்படி பூசைசெய்கின்றவர்கள். தாய்வயிற்றில் தங்கிப்பிறக்கும் துன்பத்தை நீங்குவார்கள். எ - று. (க)

எண்ணரியவிடையங்களுடனேகூடியிடைவிடாதொழுகிடினும்யா வரோனும், கண்ணுதல்வானவனடியையமறவாதாகிக்கருத்தினின்வைத் துறுங்காலங்கழிக்குமாந்தர், மண்ணகநீள்வளைப்பின்வருபோகமெ ல்லாம்வைகிறுதுகர்ந்துடலமாயபேலி, விண்ணகநாடதனிடைச் சென்றடையுங்காலிவிடயத்தான்வருந்துயரமீள்வரன்றே.

(இ-புரை.) எண்ணரிய விஷயங்களுடனேகூடி இடைவிடாமற் போகா நுபவஞ்செய்யினும் நெற்றிக்கண்ணையுடைய பரமசிவத்தின் திருவடிகளை மற வாதவர்களாய்த் தங்களிருதயத்தில் அத்திருவடியைத் தியானித்துக்கொண்டு காலங்கழிக்குமாந்தர்கள் எவர்களேயாயினும், இப்பெரியவுலகத்தில்வரும் போகங்களை யெல்லாம் நாடோறும் அனுபவித்து இவ்வுடலம்நீங்க, தேவலோ கத்தில்செல்லுங்காலத்தில் முன் அனுபவித்த விஷயங்களால் சேரிடத்தக்க துயரங்களை அனுபவிக்கமாட்டார்கள். எ - று. (ங)

நீடுபெரும்போகநுகர்வேட்கையெல்லாநீத்தறியாவொருவனிரு வினையினீங்கி, வீடுபெறக்கருதியருந்தவங்கள்செய்தும்வேறுசமயத்த னடைந்துமாவதுண்டோ, கோடியருநெடுங்கயிலைமலையின்மன்னுங்கொ ழும்பவளமணிவரையினருணபாதத், தேடிமுழுமலரின்வழிபடுவானையி னிரும்போகநுகர்ந்துயர்வீடெய்துவானே.

(இ - புரை.) மிகுதியான போகங்களை அனுபவிக்க வேண்டுமென்கிற ஆசைகளைநீக்கவறியாத ஒருவன், கல்வினை தீவினையென்னும் இருவினையில் நின்றும் நீங்கி, மோக்ஷத்தை அடையவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு, அருமையாகிய தவங்கள்செய்தும், மற்றொருசமயத்திற் சென்றும், கிடைக்குமப

லன் வேறுமுண்டோ? சிகரங்களுயர்ந்த கயிலாயகிரியில் வீற்றிருக்கும் செழுமையரன பவளமலைபோன்ற பரமசிவத்தின் சீவச்சதிருவடிகளில் இதழ்கள் விரிந்த மலர்களால் வழிபடுவாரதில், இம்மை மறுமை யின்பங்களை அனுபவித்து அதற்குமேற் பதவிகளுக்கெல்லா மேலாகிய மோகூடத்தை அடைவான். எ - று. அருணம் - செந்நிறம். (நு)

பிறையிலெடுநெறையிதழித்தொடையும்வானிற்பெருகிவருஞ்சுரநதியுமுடித்தவேணிக், கறையணியுமணிமிடற்றுமுக்கட்செய்யகளிற்றுரிவையுந்தனன்றுள்பணியுமாந்தர், மறைகளொருநான்குமவற்றங்கமாயமன்னுபுராணங்கள்பதினெட்டுகோடி, யறையவரிதாயடியரெளிதிற்றேறுபழிவில்பெருஞ்சிவகதியையடைவர்தாமே.

(இ-புணை.) இளஞ்சந்திரனுடன்வாசனைதங்கிய கொன்றைப் பூமாலையும் ஆகாயத்திற் பெருகிவருகின்ற கங்காநதியையு முடித்துவிளங்கும் சடாமகுடமும் விஷந்தங்கிய காளகண்டமும் திரிநேத்திரமும் யானைத்தோற்போர்வையுமுடையபரமசிவனது திருவடியைப் பணியுமாந்தர்கள், நான்குவேதங்களும் அவைகளுக்குரிய ஆறங்கங்களும் நிலைபெற்ற பதினெண்புராணங்களும் ஆராய்ந்தறிந்து, சொல்வதற்கரியதாய் அடியவர்கள் எளிதில் உணரும்படியான அழிவில்லாத பெரியசிவகதியை அடைவார்கள். எ - று.

செய்யகளிறு என்றது யானைகளுக்குக்கூறு மிலக்கணங்களமைந்த தென்பது கருத்து. பரமசிவத்தை அந்தணனென்றது தேவோத்கிருஷ்டத்தை நோக்கியென்க. (சு)

சொன்னவிவையெவற்றினுக்குமேலாகிச்சுருதிசிவாகமம்புகலுஞ்சோமவார, மன்னிவரும்பிரதோடந்தோறுஞ்செம்பொன்பலச்சிலைவானவரீயுலகங்களீன்ற, கன்னியுடனுகமத்தின்வழிதப்பாதுசடிமலரின்வழிபாடுபுரியுமேலோ, ரின்னலெனும்பெருங்கடலின்கரைநின்றேறியிகபரத்தும்போகநுகர்ந்திடுவரன்றே.

(இ - புணை.) பரமசிவத்தைப் பூசிக்கும்படி இதுவரையிற்சொல்லியதந்தூசைகளெல்லாவற்றினு முயர்ந்ததாய், வேதங்களினும் சைவாகமங்களினுஞ் சொல்லப்படுகிற சோமவாரத்திற் பொருந்திவருகிற பிரதோஷந்தோறும், மேருவை வில்லாகவுடைய பரமசிவத்தையும் கன்னியாகிய அம்பிகையாரையும் ஆகமவிதிதவறுமல் மணமலர்களால் ஆராதனைசெய்யும் பெரியோர்கள், துன்பமென்கின்ற பெரியசமுத்திரத்தின் கரையிவர்ந்து இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் அனுபவிப்பார்கள். எ - று. (எ)

இலகுறதிணைகிழமைதனைபபூணுமா
மைபூண்டமாந்தர், தொல்லறத்தின்கொழுநருடன்வாழுமாதர்துணைவ

ர்தமையிழந்துதுயருழக்குமாதர், புல்லறத்தையொருவியரன்சோம வாரபூசனையேபுரிவரெனிற்புவனமீதி, னல்லலறுத்தன்னவருண்ணி னைந்தவெல்லாமவர்நினைவின்படியேவந்தடையுமன்றே.

(இ - புனை.) இல்வாழ்க்கையினுரிமையைப் பூணுதவர்களும், நிரமமாக இல்வாழ்க்கையைப் பூண்டவர்களும், பழமையாகிய அந்த இல்வாழ்க்கையில் சத்தங்கணவருடன் வாழுமாதர்களும், கணவர்களையிழந்து துயருறும் மாதர்க ளும், பொருந்திய அந்த இல்வாழ்க்கையைநீங்கிப் பரமசிவனது சோமவார பூச னையே செய்வார்களாலல், இவ்வுலகத்தினிடத்தில் துன்பங்கணீங்கி அவர்க ள்மனதில் கருதியபொருள்களெல்லாம் நினைவின்படி அடையப்பெறுவர்.எ-று.

''புல்லறத்தையொருவி யரன்சோமவாரபூசனையே புரிவரெனின்'' என்ப தற்கு செய்தற்குரிய வினையதருமங்களைவிட்டேனும், இச்சோமவார வழிபாட் டினை அவசியம் செய்யவேண்டுமென வற்புறுத்திக் கூறுதலுமொன்று. (அ)

என்றுபலதருமமெடுத்திசைத்தேமீட்டுமிமயமலையனையன்மட ப்பாவைகேள்வன், றொன்றுபடுமாகமங்களோறுமுண்மைச்சுருதிதா றும்புகன்றருளுஞ்சோமவாரத், தொன்றுபெருங்கதையனந்தமவற்று ண்மின்னுரொளியிழைசீமந்தனியென்றுலகம்போற்றுங், குன்றனைய பெருந்தவத்துக்கோதினீதிக்சொம்பனையாணைற்றகதைகூறுவாமே.

(இ - புனை.) இத்தகைய பலவாகிய சிவதருமசரித்திரத்தைச் சொல்லி, மீட்டும் பார்வதிதேவியார் கணவராகிய பரமசிவம் பழமையும் உண்மையுமா கிய ஆகமங்களிலும் வேதங்களிலும் சொல்லியருளிய சோமவாரபூசையைத் குறித்த சரித்திரங்களனந்தமாகும் அவைகளுக்குள் மின்போலும் ஒள்ளிய ஆபரணங்களணிந்த சீமந்தனியென்று உலகம் விதந்துகூறும் மலைபோலும் தவத்தினையும குற்றமற்ற நீதியினையுமுடைய ஒருமாது சோமவாரவிரதம அனுஷ்டித்த கதையினைச் சொல்லுவோமென்று கூறுவாராயினர். எ - று. மீட்டும் கூறுவாம் எனமுடிக்க. (கூ)

இளங்கதிர்தழைகலாவிருள்கொள்பூம்பொழில்
வளங்கெழுமாரியவர்த்தநாட்டினுன்
விளங்கொளிமணிமுடிமிலைந்தவேந்தர்கோ
னளந்தறிவருங்கலைக்காழியேயனுன்.

(இ - புனை.) சூரியனது இளங்கதிரும் தழையக்கூடாத இருள்சூழ்ந்த பூஞ்சோலைகளின் வளப்பங்கள்பொருந்திய ஆரியாவர்த்த நாட்டையுடைய விளங்குகின்ற இரத்தினமகுடமணிந்த அரசர்களுக்கு அரசனுயிருப்பவனும், அளந்தறிவிடுதற்கரிய கல்வியுணர்ச்சியில் சமுத்திரத்தை யொத்தவனும். எ-று.

எண்டிசைசூழுவதுநிமழுதுவண்புகழ்
மண்டலிகர்க்கெலாமகுடம்போல்பவன்
புண்டரநகொழுநிணப்புலவுநாறுவேற்
றிண்டிறற்சித்திரவருமனென்பவே.

(இ - புணை.) அஷ்டதிக்குகளிலும் எழுதிய வளவிய புகழுள்ளவனும் அரசர்களுக்கெல்லாம் மகுடம்போலிருப்பவனும் போர்முகத்தெதிர்க்கும் பகை வருடைய மாமிசத்தின்கொழுவிய நிணப்புலால்நாற்றம் காறும் வேற்படை யையுடையவனும், திண்ணிய வெற்றியையுடையவனுமான சித்திரவரும னென்னும்பெயருள்ள ஒரு அரசனிருந்தான். எ - று. என்ப ஏ அசைகள். புண் - மாமிசம். (கக)

ஆயவினண்ணிலாமகங்களாற்றியுந்
தாயெனவுயிரெலாந்தழையப்போற்றியு
மீயுறுமுகிலெனவெறுக்கைமாமழை
தூயகன்மறையவர்சுமப்பநல்கியும்.

(இ - புணை.) அந்த அரசன் அளவில்லாத யாகங்கள்செய்தும், தாயைப் போல உயிர்களெல்லாந் தழையும்படி ஆதரித்தும், ஆகாயத்திற்சஞ்சரிக்கும் மேகம்போலப் பொன்மழையைப் பரிசுத்தர்களான பிராமணர்கள் சுமந்துகொ ண்டு போம்படி கொடுத்தும். எ - று (கஉ)

மரகதவணை யெனவயங்குமாதவன்
குணகழல்வணங்கியுங்குன்றவில்லிறற்
புரமெரிகொளுவிடப்பொருதவன்கழ
லிரவினும்பகலினுமலர்பெய்தேத்தியும்.

(இ - புணை.) மரகதமலைபோலும் விளங்கும் விஷ்ணுமூர்த்தியின் ஒலிக் கும் வீரகண்டையணிந்த திருவடிகளை வணங்கியும், மேருவில்லினூற்றிரிபுரத் திற்றீப்பற்றப் போரியற்றிய பரமசிவனுடைய திருவடிகளை இரவும் பகலும் பூவிட்டிறைஞ்சித் துதிசெய்தும். எ - று. (கஉ)

முழவொலிபடுகடன்முத்தவெண்குடை
நிழலிடையுலகெலாநெறியிற்காக்குநாட்
குழன்மொழிமனோவியர்வயிற்றிற்கொல்சின
மழவிடையெனச்சிலமகட்பெற்றனரோ.

(இ-புரை) முழவம்போல ஓசை பொருந்திய கடலினிடத் தண்டான முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளைக் குடை நிழலில் முறையாக உலகத்தைக் காக்கு நாளில், வேய்ங்குழல்போலும் இனிய வசனத்தையுடைய மனைவியர்களிடத்துக் கொல்லத்தக்க கோபத்தையுடைய இளமையான இடபம் என்று சொல்லத் தக்க சில புத்திரர்களைப் பெற்றான். எ - று. (கச)

பெற்றபினிறைமதன்பெண்மகாரெமக்
குற்றிலனெனநினைந்தான்றலாதன
நற்றவமிழைப்பவோர்மனைவிநாண்மலர்ப்
பொற்றொடியெனவொருதிருவைப்பூத்தனள்.

(இ-புரை) புத்திரர்களைப் பெற்றபின் அவ்வரசன் பெண் குழந்தைகள் நமக்குண்டாக வில்லையே யென்று கருதிப் பலபல நல்ல தவங்களைச் செய்ய ; ஒரு மனைவியானவன் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் மகாலட்சுமியைப் போன்ற ஒரு புத்திரியைப் பெற்றாள். எ - று. (கரு)

(வேறு-)

தாமந்திகழ்தருபொய்ம்பொடுதழைசித்திரவருடன்
சீமந்தனியெனவேயருள்செல்விக்கமகிழ்வா
ணமந்தனமறைநீதியினன்னளிடைநவிலா
வாமந்திகழுணமையைத்தருமிமவானின்மகிழ்ந்தான்.

(இ-புரை.) வெற்றிமாலை பிரகாசித்துக்கொண்டிருக்கும் புசங்களோடு தழைந்துள்ள சித்திர வருடனென்னு மரசன் தான் பெற்ற புத்திரிக்கு மனமகிழ்ச்சியுடன் வேத விதிப்படி நல்ல தினத்தில் சீமந்தனி யெனப்பேர்கூறி சவுந்தரியமுள்ள உமயவளைத் தனக்குப் புத்திரியாகப் பெற்ற மலையரையன் போல மகிழ்ச்சி யடைந்தான். எ-று. (கசு)

மதவெங்களிறல்யாளனயமன்னன்றருமேவற்
குதவுந்தனதுழையோர்களையுயர்சோதிடநூலின்
விதமொன்றியமறைவாணனையழைமின்னெனவிடுப்பக்
கதமொன்றியகாலிற்கடிதேகிக்கொடுவரவே.

(இ-புரை.) மதமயக்கங் கொண்டிருக்கும் வெற்றிபொருந்திய யானைப் படையுடைய அவ்வரசன் தான் உத்தரவு செய்யும் எவலுக்குத் தடையில்லாமல் உதவுகின்றவர்களாகிய எவலாளிகளை நோக்கி, உயர்ந்த சோதிஷ சாஸ்திர வகைகளை யுணர்ந்த சாஸ்திரிகளை யழைத்துக் கொண்டு வாருங்களென்று அனுப்ப ; அவர்கள் சண்டமாருதம் போல அதி விரைவாகச் சென்று அழைத்துக் கொண்டு வர. எ - று. (கள)

கண்ணுற்றனனலனொப்பலகணிதத்துறைறவல்லீர்
பெண்ணிற்கணியெனயானருள்பெண்ணின்றிறனெல்லா
மண்ணிற்கருதெரண்ணுநிலவருசோதிடவிதியா
லெண்ணித்துணிவுறுசாதகமிடுகென்றிறைசொன்னன்.

(இ-புரை.) வந்த சோதிஷ சாஸ்திரிகளைப் பார்த்துப் பலவாகிய சோதிஷ சாஸ்திர முணர்ந்தவர்களே! பெண்களுக்கு ஆபரணம் போல நான் பெற்ற இப் பெண்ணிற்குச் சாதகபலன்களை யெல்லாம் இவ்வுலகத்தில் அறிதற்குரிய நிலேமையினை யுடைய சோதிஷ சாஸ்திர விதியால் ஆராய்ந்து, நிச்சயமான சாதக மெழுதுங்க ளென்று அவ்வரசன சொன்னன். எ று. (கஎ)

என்னருமனமொருவேதியனவடன்னிருவினையு
முன்னுநிலபெறுசாதகமுற்றும்படிபெழுதிப்
பொன்னுர்கனகபூண்மன்னவபுவிபாமகள்புணரு
மன்னுவினைவகேண்மோவெனவழுவாதுரைசெய்தான்.

(இ-புரை.) இவ்வாறு சொல்வதற்குமுன் ஒரு பிராமணன அந்தப் பெண்ணினுடைய இரு வினையையும் ஆராய்ந்து, நிலை பெற்ற சாதகமுங் குறைவில்லாம லெழுதிப் பொன்னுற் செய்யப்பட்ட வீரகண்டை யணிந்தவனும் பூதேவியை மணந்தவனுமான மன்னவனே! இவை கேளென்று சவருமற்சொன்னன். எ-று. (கஅ)

(வேறு.)

மணத்தினினுமையாண்மகப்பெறற்கதிதிவடிவினினுயர்தமயாகி
குணத்தினிற்சுமலகற்பினிற்சமகிகாழுங்கலைக்கியன்மகளென்னுப்
பணத்துறையுலகமுழுவதும்புகழும்படிபதினையிரம்பருவந்
தணப்பிலளாகக்கொழுமனைறையுநதராபதிநின்மகளென்றான்.

(இ-புரை) அரசனே! உம்முடைய புத்திரி கலியாணத்தில் உமையவளென்று சொல்லத் தக்கவள், புத்திராகளைப் பெறுவதில் அதிதியென்று சொல்லத் தக்கவள், சவுந்தரியத்தில் உயர்ந்த தமயந்தி யென்று சொல்லத் தக்கவள், நற்குணத்தில் திருமக ளென்னத் தக்கவள், பதிவிரதா தருமத்திற் சீதை யென்னத் தக்கவள், செழுமையுள்ள கலைஞருக்குச் சரஸ்வதி யென்று சொல்லத் தக்கவளென்று சொல்லி, ஆதிசேஷன் முடியில் பொருந்திய இவ் வுலக முழுவதும புகழும்படி பதினையிரவருஷங் கணவனை விட்டுப் பிரியாமல் வாழ்ந்துகொண் டிருப்பாள் என்று கூறினன். எ-று. (உ0)

என்றவனுரைத்தசாதகப்பொருளினியல்பெலாங்கேட்டுளமகிழ்ந்து, பொன்றணழுதினிமேதாட்புரவலனவற்குப்பொருணனிகொடுத்த

ணனிருட்படப், பின்றையுமொருவனேழிரண்டாண்டிற்பிறதுதன்மங் கலமிழக்கும், வென்றிவேலினைறவவென்றலுநிருபன்வெய்துயிர்த்த ணமினைசவிழுந்தான்.

(இ-புரை.) இவ்வாறு அந்தப் பிராமணன் சொல்லின சாதகப் பொரு ளி னியல்பை யெல்லாம் கேட்டு மன மகிழ்ந்து, அழகு நிறைந்த திண்ணிய தோளையுடைய அரசன் அவ் விப்பிரனுக்கு மிக்க பொருள் கொடுத்து, (சந் தோஷத்துடன்) இருக்க; மற்றொரு பிராமணன் (சாதகம் பார்த்து) வெற்றி பொருந்திய வேலாயுதத்தை யுடைய அரசனே! இந்தப் பெண்ணானவள் பதி ணன்காம் வருஷத்தில் மாங்கலிய மிழப்பா ளென்று சொன்னன். அப்படிச் சொல்லவே, அவ்வரசன் பெரு மூச்சு விட்டுக்கொண்டுசோகத்திலல் ஆசனத் தின்மேல் விழுந்தான். எ-று- (உக)

பைவிரியாவமிடிவிழவெருவும்டான்பையபோலோரிருகன்னல்
வெய்துயிர்த்திருந்துகணிதனைப்போக்கிவிதிவலியறிகுவமென்ன
செய்தவழ்வடிவேற்புரவலனுளத்தினினைவுடனெழுகுமங்காளின்
மைவிழிச்செவ்வாய்வெண்ணகையவட்குமங்கையம்பருவம்வந்ததுவே

(இ புரை.) பகையவர் நிணந்தோய்ந்த வேலேந்திய அவ்வரசனனவன் படத்தை விரித்த சர்ப்பம் இடி விழப் பயந்து சுருண்டு விழுந் தன்மைபோல, இரண்டு நாழிகை வரைக்கும் பெரு மூச்சு விட்டுக்கொண் டிருந்து, பின்பு ஒரு வாறு தெளிந்து, சோசியர்களை அழைப்பிவிட்டு, ஊழ் வினையின் வன்மையை அறிவோமென்று சிந்தித்திருக்கும் நாளில் மையணிந்த கண்களையும் சிவந்த வா யினையும் வெண்மைநிறம்பொருந்திய தந்தங்களையு முடைய அந்தக் கன்னிகை க்கு அழகிய மங்கைப் பருவம் வந்தது. எ - று. (உஉ)

மங்கையம்பருவம்வருதலுமவளைவழிபடுசேடியர்குறிகித்
திங்கள்வாணுதனீயெழிரண்டாண்டிற்றிருவிழந்திருக்குவையென்
வங்கவள்வெருவியாக்கியவர்க்கியாசியமுனிவரன்மனைவி
தங்கியசாலைசென்றவட்டொழுதுதன்னுறுதுயர்நிலைசொன்னாள்

(இ-புரை.) மங்கைப் பருவம் நேர்ந்த மாத்திரத்தில் அவளைப் போற்றி வரும் தோழிகள் வந்து, நிங்கள்போலும் ஒளி தங்கிய நெற்றியினை யுடையவ ளே! நீ பதினைன்காம் வருடத்தில் மாங்கலியம் இழந்துவிடுவை யென்று சொ ல்ல ; (அதைக் கேட்டு) அவள் பயந்து, யாக்கியவர்க்க முனிவர் பத்தினியாகி ய மயித்திரை யென்பவளிருக்கும், பர்ன சாலைக்குப்போய் அவ்வம்மை யைத் தொழுது, தனக்கு நேரிட்டிருக்கிற துயர் நிலையைச் சொல்லுவா ளாயினள். எ - று. திரு என்பது ஈண்டு மாங்கலியத் திருவை.

அருந்ததியனையகற்புடையன்னையடியனே னுரைப்பதான்றுள தாற், பெருந்திருவிழப்பன்யானெனக்கணிதர்பிதாவுடனுரைத்தனர தனைற், றிருந்தியநின்னைவந்தடைந்தனனித்தீவினைப்பிணியகற்றுதற் கோர், மருந்தருள்கென்றென்றடிதொழுதிரப்பவரமயித்திறையும்பின் னுரைத்தாள்.

(இ - புரை.) அருந் ததியை யொத்த கற்பினையுடைய அம்மையே! அடி யேன் விண்ணப்பித்துக்கொள்வதோர் வார்த்தையுண்டு; (அது என்னவெனில்) நான் பதினென்காமவருஷத்தில் மாங்கலியம் இழப்பே னென்று சோதிஷர்கள் என் பிதாவுடன் சொன்னார்கள்; அதனல் கற்பினல் மேன்மை பெற்ற உன்னைச் சரணென்றடைந்தேன்; இத்தத் தீவினையாகிய நோயை நீக்குவதற்கு ஒரு அவு ஷதம் கிருபை செய்ய வேண்டுமென்று பாதத்தை வணங்கி யிரப்பச் சிரேஷ் டமுள்ளமயித்திறை யென்பவள் பின்பு சொல்லுகிறான். எ-று. (உ)

பூரிகுழலணங்கேசோமவாரத்திற்புனிதநீரினிதுடனுழிப் பரிவுடனுணவுமுதலியதுறந்துபோனமாய்ப்பவித்திறையாகித் தெரிமலர்கொணர்ந்துபரமனேமைமையைச்சிவாகமவிதிமுறைவழுவா துரியபூசனைசெய்தருமறையவர்க்குமுவப்புடனன்னமுமளித்தே

(இ - புரை.) கட்டுப்பட்ட அளகத்தையுடைய பெண்ணே! சோமவா ரத்தில் பரிசுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, வெறுப்பின்றி ஆகார முதலானவைகளைநீக்கி, மவுனமாய்ப் புனிதையாய் மலர்களை ஆய்ந்துகொண்டு வந்து, பரமசிவனுடன் பார்வதிதேவியானையும் சைவாகமவிதி தவறுமற்பூசை செய்து, அரிய பிராமணர்களுக்குச் சந்தோஷத்துடன் அன்னமும் கொடு த்து. எ - று. பவித்திரம் - சுத்தம். (உ)

இன்னணமரனையேத்திநீவழிபட்டீசனேயென்னுறுதுணையே யுன்னுடையருளேவேண்டுவனென்னவுரைத்துநல்விரதமுழுமுடித்தால் மன்னியவிரதருந்தருமம்பெருகல்தான்டாதுநின்கணவனுக்குரிய வல்லதனுடனுலகமல்லதுவேண்டுந்தராதலமளவிலுளவாம்.

(இ - புரை.) இந்தப்பிரகாரம் பரமசிவனை ஆராதித்துத் துதிசெய்து, ஈசனே! எனக்குற்ற துணையே! தேவரீருடைய திருவருளையே விரும்புகிறே னெனறு பிராத்தித்து, நல்லவிரதத்தையும் நிறைவேறறினல், நிலைபெற்ற அவ்விரத விசேடத்தால் மாதே! உன்னுடைய கணவனுக்குரிய தேசமேயல் லாமலும் மற்றும் விரும்புந்தேசங்களும் அளவிறந்தன கிடைக்கும். எ - று.

விரதமுடித்தலாவது - உத்தியாபனஞ்செய்தல். (உ)

சந்தமுமலருமரிசனத்துடனேசாத்தினல்வளம்பலதனழைக்குங்
கந்தனிற்றூபமளித்திடினுடலநறுங்கடிகமழுமதல்லா
னந்தமிதீபமளிக்கினருளவாமவியளித்திடினுணவுளதாம்
டைங்கொடிபாகுவெள்ளிலையளிச்கிற்பதுமமாளிகைமயில்சேரும்.

(இ - புணை.) சீமந்தனியே! மஞ்சளுடன் சந்தனமும் மலர்களும் சாத்தினல் பலவளங்கள் உண்டாகும்; கெடுதலற்ற தூபங்கொடுத்தால் சரீரம் நல்லவாசனை கமழ்ந்துகொண்டிருக்கும்; இதுவுமன்றி குறைவுபடாத தீபங் கொடுத்தால் அழகுண்டாகும்; அன்னம் நிவேதித்தால் ஆகாரம் உண்டாகும்; பசியவளையணிந்த பெண்ணே! பாக்கும்வெற்றிலையும் நிவேதித்தால் பதுமாசனியான திருமகள் நிவாசங்கிடைக்கும். எ - று.

அரிசனம் - மஞ்சள். எ - அழகு. (உஎ)

அஞ்செழுத்தோதினட்டமாயோகமடைந்திடுமாகுதிபண்ணி
னெஞ்சினினினைத்தகருமங்கள்யாவுநினைத்தவாறெளிதினிற்கூடும்[ண
வஞ்சிநுண்ணிடையாயந்தணர்க்கடிசின்மகிழ்வுடன்வழங்கின்மற்றத
லெஞ்சலிற்றகுதிக்கடவுளெவருமிருங்களியெய்துவரோநீ.

(இ - புணை.) பஞ்சாக்ஷரஞ் செபித்தால் அட்டமாயோகஞ் சித்தியாம்; சிவயாகஞ்செய்து பூர்ணகுதியமைத்தால் இஷ்டசித்திகள் எளிதிற்கைகூடும்; பூங்கொடிபோல நுண்ணிய இடையை உடையவளே! மகிழ்ச்சியுடன் அந்தணர்களுக்கு அன்னங்கொடுத்தால் அதனல்குறைவற்ற மேம்பாட்டினையுடைய தேவர்களெல்லாரும் மிகுந்தகளிப்பையடைவார்களென்றுநீயறிவாயாக. எ-று

என்னுனைவழாமல்யான்மொழிந்தருளுர்ந்தவாறினமதிக்கொழு
ந்து, மன்னுமெஞ்சடிலவானவன்றன்னைமாதுடன்வழிபடத்துணிந்
தா, லுன்னுடையுளத்திற்கவலையுந்துயருமொழிந்திடுமுண்மையீதெ
ன்னுப், பன்னருஞ்சிறப்பிற்பார்ப்பனியுமாத்துணைந்தாடியேகௌ
ப்பணித்தாள்.

(இ - புணை.) என்மொழி தவறுமல் நான்சொல்லிய பிரகாரம் இளைத்திங்கட் கொழுந்துபொருந்திய செஞ்சடையையுடைய பரமசிவனைப் பார்வதி பாருடன் ஆராதனைசெய்யத் துணிந்தால், உன்னுடைய மனவியாதியும் துயரும் நீங்கிவிடும், இதுநிச்சயமென்று சொல்லுதற்காரிய சிறப்பினையுடைய பிராமணஸ்திரியாகிய மயித்தினியென்பவள் சொல்லிப் பசியவொன்னுற்செய்தவனையணிந்த மாதே! நீ உன்னகத்திற்குச் செல்லென்று உத்தரவு செய்தாள். எ - று. (உக)

தொழுகுலத்தணங்குபுகன்றவைகேட்டுச்சோமவாரந்தொறுஞ்
சிவனை, வழுவுறவுமையோடாகமவிதியின்மடவரல்வழிபடுநாளி, னெ
ழுவுறழ்திணிதாணனன்றருகுமாணிக்கிரசேனன்மாமதலை, முழுவலி
பெறுசந்திராங்கதனென்போன்முருகனிற்கட்டழகுடையோன்.

(இ - புரை.) பிராமணகுலமயித்திரையென்னும் மாது சொன்னைவ
ளைக்கேட்டுச் சீமந்தனியென்பவள் சோமவாரந்தோறும் யாதொரு வழுவுங்
கலவாமல ஆகமவிதிப்படிப் பார்வதிதேவியாருடன் பரமசிவனை ஆராதனைசெய்
யுநாளில், எழுத்துணம்போலும் பலம் பொருந்திய தோள்களையுடைய
னசக்கிரவர்த்தியின் பௌத்திரனும் இந்திரசேனனுடைய புத்திரனுமான
மிகுந்த பராக்கிரமம் பொருந்திய சுப்பிரமணியரைப்போல மிகுந்தசவுந்தரிய
முள்ளசந்திராங்கத னென்பவன். எ - று. (கo)

அன்னவன்றனக்குச்சந்திரவருமனரியமாதவத்தினின்ற
தன்னுறுதநயைவனிதையர்க்கணங்காய்த்தயங்குசீமந்தனியென்னுங்
கன்னிமபாகிழ்ந்துகொடுத்தலும்விதியிற்கடிமணமுடித்துநன்னலங்க
ளின்னமுதாகச்சிறிதுநாளுகந்தங்கிருந்தனனிருந்திடுநாளின்.

(இ-புரை) அந்தன்மையுள்ள சந்திராங்கத னெனபவனுக்குச் சித்திர
வருமனென்னும் அரசன் அரிய தவத்திறற் பெற்ற தன்னுடைய புத்திரியும்
மாதர்களுக்குட் டெய்வம்போல்பவளுமான சீமந்தனி யென்னுங் கன்னிகை
யை மகிழ்ச்சியுடன் பாணிக்கிரஹணம் செய்விக்க; அவனும் விதியோடு மணந்
து சிலநாள் கல்ல இன்பங்களை இனிய அமுதம்போல அனுபவித்துக்கொ
ண்டிருந்தான்; அப்படி யிருக்கும் நாளில். எ - று. (கக)

(வேறு)

கருவெனவழங்குவண்கைச்சந்திராங்கனுநண்பின
மருவியமேதாழர்தாமுமணிநிறயாணர்நன்னீர்
பெருகியயமுனையாற்றிற்பெயர்[illegible]ணிமீது
வெருவிலராகிப்பன்றேர்சோறினர்வேட்டகாட்டால்.

(இ-புரை.) கறபக விருக்ஷம்போல வழங்கும் வளமையினை யுடைய
சந்திராங்கதனும், அவன்தோழர்களும் சிலரும் நீலநிறம்பொருந்திய அழகிய நீர
பெருகுகின்ற யமுனையாற்றினிடத்தில் செல்லுகின்ற தோணியின்மேல் விதி
வசத்தால் அச்சமுறுதலவர்களாய் சென்னர்கள். எ - று. யாணர் - அழகு. (கஉ)

நினையெடுத்தெறிதலானுஞ்செலவிடுகடுப்பினலும்
நினைநினைமாந்தர்தொக்குநெருங்குதலானும்நீருள்

வினைவெடுதுவன்றிட் பாயும்வேகமிக்கிடுதலாலுங்
கனைகடப்பரிதாயோடங்கவிழ்ந்ததுகவிழ்தலோடும்.

(இ-புரை.) அலைகள் அதிகமாக வீசுவதினாலும் செல்லும்படி விடுகிற விரைவினாலும் வரிசை வரிசையாக மனிதர் சேர்ந்து கொருங்கி யிருப்பதி னாலும் நீரி னிடத்து விரைவுடன் பாயானது வேக மிகுந்து தன்னாதலி னாலும் கரை கடப்ப தரிதாய் அவ்வோடம் கவிழ்ந்தது; அடபடி கவிழ்ந்த மாத்திரத்தில். எ - று. கடுப்பு - விசை. (நுக)

சந்திராங்கதனுந்தோழர்தாங்களும்புனலினுழு
வெருதிறவிடங்கரந்தத்தோழனைவிழுங்கவேந்தன்
முந்தைநல்வினையின்பான்மைமுளைத்தெழுவுரகர்வாழு
மந்தமில்பிலத்துப்புக்சோரருந்திக்கனையைச்சார்ந்தான்.

(இ-புரை) (அந்தத் தோணியி லிருந்த) சந்திராங்கதனுடைய தோழர்களும் நீரில் மூழ்கிவிட; வெவ்விய வலியுள்ள முதலைகள் அந்தத் தோழரை விழுங்கி விட்டன. சந்திராங்கதனமாத்திரம் முற் செனனங்களிற்செய்த தருமம் முன் வந்துதவ நாகர்கள் வாழும் முடிவற்ற பிலத்துக்குட்போய் அவிடத்திருகளும் அரியநதிக் கரையைச் சார்ந்தான. எ-று (நுச)

நதியினிலுடுகின்றநாகாதமகளிர்நோக்கி
யதிசயமெய்தியின்னைஞ்சிகாவென்றருகுசேர்ந்து
புதியவன்றனைவினைந்தங்கடக்ககன்புரவுபூண்டு
வதிதருங்கோயிலாங்கண்வருகெனக்கொண்டுபுக்கார.

(இ-புரை.) அந்த நதியில விளையாடுகின்ற நாக கன்னியர்கள் வந்த அரசகுமாரனைப் பார்த்து ஆச்சரியமுற்று, இவன யாவனென்று அவனருகில் வந்து உண்மை தெளிந்து, விருந்தினனைய் வந்தவனைத் தங்களரசனுகிய தக்ஷக ன் காவல் கொண்டு வாசமா யிருக்கிற அரண்மனையினிடத்துக்கு வருவா யென்று அழைத்துக்கொண்டு போனார்கள். எ - று. (நுரு)

புக்கவரவினவாயிற்புறத்தினிலிறுவிப்போகித்
தக்ககனறிருமுன்காளையடைதலைமசாற்றலோடு
மக்கணத்தவனைநீவிரழமின்களென்னமாதர்
மக்களிற்றிலகவீண்டுவருகெனவேந்தர்வேந்தன்.

(இ - புரை.) போன மாதர்கள் அவனை வாயிலினிடத்து நிறுத்தித் தாம்கள்மாத்திரம் உள்ளேபோய்த் தக்ஷகன் சமுகத்தில் சந்திராங்கதன் வந்திருப்பதைச் சொல்லவும், அந்தக்ஷகன் அப்பொழுதே அழையுங்களென்றுகூற,

அந்தமாதாகள் சென்று மனிதர்களுக்குள் திலகம்போன்றவனே! வருவாயென்று கூட்டிக்கொண்டுபோகச் சென்ற அவ்வரசன். எ-று. இவ்வரசன் என்னும் எழுவாயை அடுத்தசெய்யுளில் கண்டான் என்பதனேடுமுடிக்க. (கூசு)

ஆயிரந்தபனர்தொக்காங்கவிர்கதிர்சொரிவதேய்ப்பப்
பாயொளிமவுலிதோறும்பருமணியிமைக்கலைவகு
காயகன்றன்னகமடந்தையர்கடுவட்டோன்றிச்
சேயுயர்விசும்பிற்றவிற்பொலிதருதேனைக்கண்டான்.

(இ - புனை.) ஆயிரஞ் சூரியர்கள் ஒன்றுகச்சேர்ந்து விளங்குகின்ற கதிர்களைச் சொரிவதையொப்பாகப் பரவுகின்ற ஒளியையுடைய பணமகுடந் தோறும் பருத்தமாணிக்கம் பிரகாசிக்கும்படி வீற்றிராநின்ற தக்ஷகனென்னும் நாகராசனுகிய தேவை அரமடந்தையர் கூட்டத்தினடுவில் தோன்றி மிகவும் உயர்ந்ததாகிய விண்ணுலகிலிருக்கும் இந்திரன்போலக் கண்டான். எ - று.()

கண்டடிதொழுதுநின்றகாலையக்காளதன்னைத்
திண்டிறல்வேலினுய்ந்நின்றேயழுங்குலனுமற்று
மொண்டிறற்றுணைதேருமுளைத்தியென்றுனைத்தலோடு
முண்டகழுகைபோற்சென்னிகூப்புபுமொழியலுற்றான்.

(இ-புனை.) அப்படிக்கண்டு தன்பாதத்தை வணங்கிநின்றபோது (தக்ஷக ராசன்) அந்த ராசகுமாரனைப்பார்த்துப் பலமும் வெற்றியுமுள்ள வேலாயுதத்தையுடையவனே! உன்னுடைய தேசமும் குலமும் வெற்றியையுடைய உன் பிதாவின்பெயரும் சொல்லென்று சொன்னவுடன் அரசன் தாமரையரும்புபோலக் கைகளைக் குவித்துக்கொண்டு சொல்லத்தொடங்கினன். எ - று.

நெடுங்கடல்வளாகவைப்பினிடதாடெனதுநாடு
கடுங்கலிக்கிகலாய்வந்தமன்னவன்கருதலார்க
ளடங்கிடப்பொருதவைவேலாற்றலானறத்தின்மிக்கா
னெடுங்கலின்மனத்துச்செங்கோணளனெனவுளனேர்வேந்தன்.

(இ - புனை.) நெடிய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தினிடத்தில் நிடத தேசமென்று சொல்லப்படுவது என்னுடைய தேசம்; கொடியதாகியபாபத்துக்குப் பகையாய் வந்த அரசனும், பகைவரா யிருப்பவர்கள் அடங்கத் தக்கதாக யுத்தஞ்செய்துவென்ற கூர்மைதங்கிய வேலாயுதமேந்தும் பராக்கிரமமுள்ளவனும், தருமத்தில் மிகுந்தவனும், கடுங்குதலில்லாத மனத்தையுடையவனுமாகிய நீதிசெலுத்துகின்ற நளனென்னும்பெயரையுடைய ஒரு ராசனுள்ளன். எ-று.

கொடையினினறிவின்மானக்குலத்தினிற்புகழினேரி
னடையலர்ச்செருக்கும்வைவேலாற்றனிறைருவரொவ்வான்

நுடையணிந்துடையதேவிதாழத்தகுவடமீனென்ன
கடையதிபுலவோத்திரவில்தமயந்தியென்பாள்.

(இ - புரை.) அவ்வாசன் இன்னும் எத்தன்மை யுள்ளவனென்றால், ஈகையிலும் அறிவிலும் மானமுள்ள குலத்திலும் புகழிலும் அழகிலும் சத்துருக்களைப் போர் செய்து கொல்லத் தக்க பராக்கிரமத்திலும் தனக்கு ஒருவருமொவ்வாதவன்; இவ்வாசன் மாலை சூட்டிய மனைவியானவள் எல்லாரும் வணங்கத்தக்க அருந்ததி யென்று நன்னெறியறிந்த அறிஞர்கள் புகழ்ந்து சொல்லத்தக்க தமயந்தியென்பவள். எ - று. (சு0)

அவடிருவயிற்றின்வந்தவரும்பெறற்புதல்வனை
திவள்பரிநிருபனிந்த்ரசேனன்மற்றெனதுதாதை
கவளமால்யானைச்சந்திராங்கதனெனும்பெயரினேன்யான்
றவளவாண்முறுவற்சீமந்தனிபைவேட்டுறையுநாளின்.

(இ-புரை.) அந்தத் தமயந்தியின் அழகிய கருப்பத்தினின்றும் உற்பவித்த நடனக் குதிரையையுடையை இந்திரசேனமகாராசன் என்னுடைய பிதா ஆகுவர். (போர்முனையில்) பெரியயானையையொத்தவனகிய சந்திராங்கதனென்னும் பெயரை யுடையகான் வெண்மைநிறந் தங்கிய ஒளியுள்ள பற்களையுடைய சீமந்தனியை விவாகஞ்செய்து கொண்டு வாழும்நாளில். எ - று.

தோழரும்யானும்வாவுதுணைபரிகடாவுமாபோ
லூழுறுவினையாலொன்றுமுணர்கிலாதோடமேறி
யாழுநீர்யமுனையாற்றுள்விடுதலுமம்பிதாழ்ந்து
காழுறுகளைழயுந்தள்ளிக்கவிழ்ந்ததுகவிழ்ந்தவேலை.

(இ - புரை.) தோழர்களும் நானும் தாவுகின்ற குதிரைகளைச் செலுத்துவதுபோலபழமையாகப்பொருந்திய வினையினுல்ஒன்றும்யோசியாமல் தோணியிலேறி ஆழ்ந்தநீரையுடைய யமுனையாற்றுள் (அதிவிரைவாகச் செல்லும்படி) விடவும், அந்ததோணிதாழ்ந்து வயிரம்பொருந்திய மூங்கிற்கோலையும்மீறிக் கொண்டு கவிழ்ந்துவிட்டது, அப்படிகவிழ்ந்தபோது. எ - று. அம்பி-தோணி.

இறந்தனர்நண்பரொல்லாம்யானினைவையய்துழுழாற்
றுறந்துயிர்விடாதுவந்துதிதாழுதனனென்றுகூற
அறந்தருசிந்தையாளுமதிசயித்தாசேரீங்க
டிறந்தெரிந்தேதத்துந்தேவன்யாவென்றுன்செம்மல்சொன்னன்.

(இ - புரை.) என்னுடைய தோழர்களெல்லாரும் இறந்துபோனர்கள். யான் உம்மை அடையும் ஊழிருத்தலால் உயிர்துறந்து போக்காமல் வந்து

தொழுதேனென்றுசொல்ல;தருமநிலையுடையதாகராஜனும் யுச்சனியமுற்று, அரசனே! நீங்கள் உண்மையறிந்து துதிசெய்யுங்கடவுள் யாவனென்றால்; அதற்குப் பெருமையிற் சிறந்தவனென சந்திராங்கதன் சொல்லுகின்றான். எ - று.

யாவனெருவனெவ்வுயிருமெல்லாவுலகங்களுமுடையான்
யாவனெருவன்கடவுளருக்கெல்லாமிறைமையுண்டுள்ளான்
யாவனெருவன்றிரிபுரமுமெரியக்கணகச்சிலைகுனித்தான்
யாவனெருவன்னிடநுகர்ந்தானவனேயெங்கட்கிறையோனே.

(இ - புணை.) எல்லாவுயிரையும் எல்லாவுலகங்களையுமுடைய ஒருவர் எவர்,தேவர்களுக்கெல்லாம் தேவராயிருக்கும் ஒருவர் எவர், திரிபுரங்களும் எரியும்படி பொன்மலையை வில்லாகவளைத்த ஒருவர் எவர், விஷமுண்டவர் எவர், அவரே யெங்களுக்குக் கடவுள். எ - று. (அ)

என்றுமெவனிராசதத்தினயனையின்றுபடைப்பிப்பா
னென்றுமெவன்சாத்துவிதத்தினரியையின்றுபுரப்பிப்பா
னென்றுமெவனேதாமதத்தினரனையின்றுதுடைப்பிப்பா
னென்றுமவனேயெங்குலத்தையினைத்தாணீழலளிக்குமால்.

(இ - புணை.) எந்நாளும் இராஜதகுணத்திற் பிரம தேவனை உண்டாக்கி இவ்வுலகங்களைச் சிருஷ்டிக்கச் செய்விப்பார் எவர், எக்காலமும் சத்துவகுணத்தில் விஷ்ணுவையுண்டாக்கி ரக்ஷிக்கச் செய்கின்றவர் எவர், எக்காலமும் தாமதகுணத்தில் அரனையுண்டாக்கி உயிர்களைச் சங்காரிக்கச்செய்கின்றவர் எவர், அவரே எக்காலமும் எங்களைத் தம்முடைய திருவடிநீழலில்வைத்துரக்ஷிப்பவர்.

ஆரணந்தனக்குமுன்னையாரணமாகிமன்னுங்
காரணங்களுக்குமுன்னைக்காரணமாகித்தோன்றும்
பூரணவொளிகட்கெல்லாம்பூரணவொளியாய்நின்று
காரணனுணர்கிலாதகாதன்யாமுணருகாதன்.

(இ - புணை.) வேதங்களுக் கெல்லாம் முதல்வேதமாகியும், நிலைபெற்ற காரணங்களுக்கு முதற்காரணமாகியும், தோற்றப்படும் பூரண வொளிகளுக் கெல்லாம் பூரண வொளியாயு மிருந்து விளங்கும் விஷ்ணுவினாலும் அறியப்படாத காதனே நாங்கள் தியானஞ் செய்யும் காதன். எ - று. (அசு)

வானமேமுதலாம்பூதவகைதொறுமுள்ளீடாகித்
தானருளுயிர்கட்கெல்லாஞ்சான்றுமாயவற்றினல்லா

சோமவார விரதமான்மியம்.

மானபத்தெனுன்றுமின்றியிரதன்னிஞ்சையாலே
யூனமிலுலகமெல்லாந்தன்வயத்தொழுகுன்றும்.

(இ - புரை.) ஆகாய முதலாகிய பஞ்சபூதங்களோடாறும் உள்ளீடாகியும், தாம் அருளப்பட்ட உயிர்கட்கெல்லாம் சாக்ஷியாகியும், அவைகளில் தமக் கொரு பற்றுமில்லாமல் அருமையாகிய தமது முடிவிலா ஆற்றலினாலே கெடு தலற்ற உலகமெல்லாம் தமது வசப்பட்டு நடக்க நின்றும். எ - று. (நள)

ஒருவனுய்முதல்வனுகியுறுவரங்கொடுப்போனுகி
மருவுமுக்குணங்கணீத்துமனத்திடைநினைத்தற்கொண்ணுத்
திருவருளுடையவுண்மைத்திகழொளியாயதெய்வங்
குருபரனருளின்யாங்கள்வழிபடக்குழையுந்தேவே.

(இ-புரை.) ஒப்பும் உயர்வு மில்லாத ஒருவனுயும், எல்லாவற்றிற்குங் காரணனுகியும், அன்பர்களுக்கு மிகுந்த வரங்கொடுப்பவனுகியும், பொருந்திய முக்குணங்களையும் நீக்கி மனதினிடத்தில் நினைத்தற்காரிய் திருவருளையுடைய உண்மையாய் விளங்குகின்ற சோதியாயுமிருக்குந் தெய்வமே, குருபரனருளினாலே நாங்கள் ஆராதனை செய்யத் திருவுளமிரங்குந் தெய்வமாம். எ-று. ()

நினைவரும்பாதகங்களைந்தையுநீக்கியின்பக்
கனைகடலுள்ளப்படிண்ணுங்கண்ணுதல்கருத்திலாது
தினையளவடியர்செய்தசிற்றியற்பூசையேனும்
பனையளவாகக்கொள்ளும்பரமனெம்பரமனுவான்.

(இ - புரை.) நினைத்தற்கரிய பஞ்சமா பாதங்களையும் அடியார்க்கு நீக்கிப் பேரின்பமாகிய கடலினிடத்துப் பொருந்தச் செய்யும் பரமசிவனும், அன்பில்லாமல் தினையளவாக அடியார்கள் செய்வது சிறிய பூசையேயாயினும் பனையளவாகக் கொள்ளும் பரமனுமானவனே, எங்களுக்குக் கடவுளானவர். எ-று கனை-ஒலி. சிற்றியற் பூசையாவது-ஆகமவிதி தவறிச் செய்யும்பூசை.

கங்கையைமுடியிற்சூடிக்கவுரியைப்பாகம்வைத்துப்
பொங்கரவங்கடம்மைப்புரிகுழையணிந்துபாதச்
செங்கமலத்தைதவேதச்சிரத்தினினிருத்தித்தேவ
ரங்கைகள்கூப்பநின்றவவனெமையளிக்குந்தேவே.

(இ-புரை.) கங்கையைத் திருமுடியில் அணிந்து பார்வதியை யிடதுபாகத்தில்வைத்து, விளங்குகின்ற சர்ப்பங்களை விரும்புங்குண்டலமாகத் திருச்செவியில் தரித்து, திருவடித் தாமரைகளை வேதமுடியில் வைத்துத் தேவர்களை

ஸ்லாரும் அழகிய கைகளைக் குவித்துத்தொழுதிருக்கும் தேவனே, எங்களை ரக்ஷிக்குந்தேவனும். எ - று. (கo)

அத்துவாவென் னுந்தூயவருமணித்தனிசினங்க
ளுத்தமமூர்த்தியாகியுயர்குணங்கடந்துவைகு
மித்தனேயெமக்கூராதனீண்முடிவேந்தேயென்று
கொத்தலர்நறியபைந்தார்க்கோமகனுரைத்தலோடும்.

(இ - புனை.) ஆறத்துவாக்களாகிய பரிசுத்தமுள்ள அழகிய ஆசனத்தினிடத்தில் உத்தமமூர்த்தியாகி, உயர்ந்தகுணங்களைக்கடந்து வீற்றிராநின்ற நித்தியனே எங்களுக்குக்கடவுள்; நீடியமகுடமுள்ள நாகராசனே! என்று கொத்தாகியமலர்களாற் பூசிக்கட்பட்ட வாசனைதங்கிய மாலையணிந்த ராசகுமாரன் சொல்லவும். எ - று. ஆறத்துவாக்கள் - மந்திரம் பதம் வர்ணம் புவனம் தத்துவம் கலை. (கக)

சிறியனீயாயுமென்முன்சிவனதுதகுதியெல்லா
மறிவுறமொழிதலாலேயருங்களியெய்துகின்றேன்
வெற்றிகமழ்தொடையாய்நின்பால்விளம்புவதான்றுண்டென்ன
பொறிவரிபபகுவாய்நாகர்புரவலன்புகலலுற்றான் [ப்

(இ - புரை.) வாசனைகமழ்கின்ற பூமாலையணிந்த ராசகுமாரனே! நீ சிறியவனுயிருக்கும் பரமசிவனுடைய பெருமைப்பாட்டினையெல்லாம் எனக்குத் தெரியும்படிச் சொன்னமையால், மிகுந்தகளிப்பினையடைந்தேன்; ஆகலால், இனி யுனனிடத்தில் நான் சொல்லும்வார்த்தை யொன்றுண்டென்று பொறிகளையும் வரிகளையும் பிளந்த வாய்களையுமுடைய நாகராசன் சொல்லுகிறான். எ - று. (கஉ)

இவ்வுலகனைத்தும்செய்யவெரிமணிமயமதாகு
மவ்வியமகன்றநாகமகளிருமரம்பையன்னார்
தவ்விடுபுனல்கள்யாவுஞ்சுரருணுமமுதமாகுந்
திவ்வியபொருள்களெல்லாஞ்செழுந்தருவாகுமன்றே.

(இ - புரை.) இந்த வுலகமெல்லாம் செவ்வியதாகிய தீநிறமுள்ள மாணிக்கமயமாயிருக்கும். பொறாமையற்ற நாகமகளிரோ அரம்பா ஸ்திரீகளையொத்தவாகளா யிருக்கிறார்கள், உண்ணத்தக்க நீரெல்லாம் தேவருண்ணும் அமிர்தமயமாயிருக்கின்றன, திவ்வியமான சோலைகளெல்லாம் கொழுமையுள்ள கற்பகச்சோலையாயிருக்கின்றன. எ - று. தவ - உணவு. (கங)

நனைதினைபருவாவெய்யநமன்றமர்ந்நுகல்செய்யா
நுனைதருகுரிசினீயிற்குறைகெனவுலாத்தலோடுந்

தனைபுகழ்ந்தையாவெனினயன்றித்தயரில்லான்
றினைதரும்பவளவாயென்மனைவியுஞ்சிறியளென்றான்.

(இ - புரை.) மேன்மை பொருந்திய ராசகுமாரனே! இங்கிருப்பவர்க ளனைரையுந்திரையும்பொருந்தா, யமதூதர்களிவ்விடத்துக்கு வராக்கள், ஆத லால் நீ இவ்விடத்திலேதானே வாசமா யிருவென்று சொன்னவுடன் ஐயா! பூலோகத்தவராற் புகழப்பட்ட என் பிதாவானவர் என்னை யல்லது வேறை பு த்திரரில்லாதவர் கடலிலுண்டாகும் பவளம்போன்ற செவ்வாயையுடைய என் மனைவியுஞ் சிறிய வயதையுடையவளென்று சொன்னேன். எ-று. (நச)

அன்றியுமன்னேரைப்பிகழியாறற்றுளாழ்ந்து
பொன்றினனென்னவன்றேபொன்றிதல்போ(
கன்றியகாலஞ்செய்தகற்பனையறிகிலேன்யான்
யென(

(இ - புரை) இதுவுமல்லாமல் ஆற்றில் தோணிகவிழ; நான் அதில் அமி ழ்ந்து இறந்தேனென்று அப்போதே அவர்களிறந்துபோனர்களோ? வெவ்விய காலஞ்செய்த கற்பனை இன்னதென்று நானறிகிலேன்; ஆதலால் வெற்றிபொ ருந்திய வேலையடைய நாகராசனே! எங்களூர்க்கு நான்போகிறேன், உத்தரவு கொடுவென்று ராசகுமாரன் சொன்னன். எ-று. (நரு)

ஈதவனுரைத்தலோடுவெழுந்தபேருவகைபொங்கக்
கோதறுகுணத்துநாகக்குரிசிலுமுழையர்க்கூவி
மேதகுகலன்களாடைமுதலியவெறுக்கைமற்றுங்
காதலிற்கொணர்திவென்றுகாவலற்களித்துப்பின்னும்.

(இ-புரை.) அந்த ராசகுமாரன் இந்த வார்த்தையைச் சொன்னபோது மிகுந்த சந்தோஷம் பொங்கக் குற்றமற்ற குணத்தையுடைய நாகராசன் ஏவ லாளிகளை யழைத்து, மேன்மை பொருந்திய ஆபரணங்கள் வஸ்திரங்கள் மு தலாகியவைகளும பொன்னும் மற்றுமுள்ளவைகளும் ஆசையுடன் கொண்டு வாருங்களென்று (உத்தரவுசெய்து, அவர்களால்கொண்டுவரப்பட்ட அப்பொ ருள்களை யெல்லாம்) அவ்வரசனுக்குக் கொடுத்துப் பின்னும்தருவான். எ-று.

வெறுக்கை - பொன். (நசு)

திரைக்கடலேழுஞ்சூழ்ந்துசேண்முகடளக்குமேரு
வரைத்தலைதன்னையொல்லைமண்டலமிட்டுமீரு
மூரைப்பரிதாயவேகத்தொருவப்பரியைநல்கி
ஷினைக்கனிகலவைச்சாந்தும்வேண்டுவவெறுப்பநல்கா.

(இ - புரை.) அலகளையுடைய எழுகடலையும் ஒவ்வொன்றாகச் சூழ்ந்து, அண்டமுகட்டையளக்காநின்ற சக்கிரவாளகிரியின் சிகரத்தையும் அதிகவிரைவாக மண்டலமிட்டு வரும் சொல்லுதற்கரிய வேகத்தையுடையபலமுள்ள ஒரு குதிரையுங் கொடுத்து, வாசனைதங்கிய கூட்டுலவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பும் வெறுக்கும்படி கொடுத்து. எ - று. (நஎ)

அளித்தலைசுமப்பமற்றோயிலையிற்றாக்கன்றன்னை
வினித்துடன்விடுத்துட்பின்னும்வேறொருபுயங்காசன்
களிப்புறுகுமரன்றன்னைக்காக்கெனப்பணித்தலோடுந்
துளித்தலைமுகிலன்னானுந்தொழுதனன்விடைகொடுத்தோகி.

(இ - புரை.) கொடுத்த இப்பொருளையெல்லாம் சுமந்து போவதற்காக கூர்மையான பற்களையுடைய ஒரு ராகூடனை அழைத்து, அவ்வரசனுடன் அனுப்பி, மேலும் வேறொரு நாகராசனை யழைத்துக் களிப்பையுடைய இந்த ராசகுமாரனைப் பாதுகாத்துக்கொண்டு போவென்று உத்தரவுசெய்தான். அப்படி உத்தரவுசெய்த வுடன் துளித்தலைச் செய்யும் மேகத்தையொத்த ராசகுமாரனும் நாகராசனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு விரைவுடன் சென்று. எ-று. (நஅ)

குளைபுனலதனுணைகுமரனுங்ருதவரனும
புளையறுமனத்தராகிப்புரிவுகொண்டருகிற்போத
வினைபரியுகைத்துநீருள்வெய்யவனெழுதன்மானத்
தனைபுகழ்குரிசிலேறன்றியமுனையங்கனையைச்சார்ந்தான்.

(இ - புரை.) ஒலிக்கும் நீரையுடைய யமுனையாற்றினிடத்தில் நாக குமாரனும், அரக்கனும் குற்றமில்லாத மனத்தையுடையவர்களாய்ப் பாதுகாத்துக்கொண்டு தன் அருகில்வர; விரைவுடன்செல்லுகின்ற குதிரையை செலுத்திக்கொண்டு சமுத்திரத்தில் சூரியன் உதயமாவது போல, உலகம் புகழ்கின்ற ராசகுமாரன் நீர்மேலெழுந்து அழகிய யமுனை ஆற்றங் கரையைச் சார்ந்தான். எ-று. நிருதன்-அரக்கன்-புரிவு-ஆசை. (நக)

பாதலந்தனன்னவ்ழந்துபடருழவாதுவந்த
காதலர்நியமாலத்தராபதிகுமரன்செய்கை
யோதினனிப்பாலன்மேலுற்றதற்குற்றமுற்ற
தீதுறுதுயரமெல்லாந்தெளிவுறச்செப்பலுற்றான்.

(இ - புரை) பாதாளத்தில் வீழ்ந்து யாதொரு தன்பமுமடையாமல்வந்த மகரந்தத்துடன் மலர்கின்ற வாசனைதங்கிய மாலையணிந்த ராசகுமாரன்செயலையை இதுவரையிற் சொன்னேன். இனி அவன் ஆற்றில் வீழ்ந்ததற்காக

அவனுடைய சுற்றத்தார் பொருந்திய கொடிய துயரங்களை யெல்லாம் விவரமாகச் சொல்லுகின்றேன். எ-று. (சுo)

தெளிதிரையமுனையாற்றினீர்விளையாடல்செய்து
தளிதருபுயலினல்குஞ்சந்திராங்கதனுமன்ன
னளிபெறுதாழுன்மாருமப்பியிற்கவிழ்ந்தகுரின்
விளிதருதன்மையெல்லாமாதுளன்விளம்பிற்கேட்டான்.

(இ - புரை.) தெளிகின்ற அலையையுடைய யமுனையாற்றினீரில் நீர் விளையாடலைச் செய்து, துளியைத் தருகின்ற மேகம்போலத் தானங் கொடுக்கத்தக்க சந்திராங்கதனும் அவனுடைய தயையைப்பொருந்திய தோழர்களும் தோணியுடன் கவிழ்ந்து, நீரில் இறந்துபோன தன்மை யெல்லாம் அவன் மாமனாகிய சித்திரவன்மன் அப்போதே கேள்விப் பட்டான். எ-று. தளி-துளி. மாதுலன்-மாமன். (சுக)

கேட்டலுமெழுந்தியாற்றின்கிளர்கரைகுறுகிவந்து
வாட்டிறற்குரிசிலேயென்மருகவோமருகவோவென்
றீட்டியதுயரமீக்கொண்டெடுத்தெடுத்தழைத்தல்கேளாக்
கோட்டமின்மனத்துமன்னன்குமரருமயங்கிவீழ்ந்தார்.

(இ - புரை.) கேள்விப்பட்டமாத்திரத்தில் எழுந்து அந்த நதியின் கரையில் வந்துசேர்ந்து, வாள்யுத்தஞ் செய்யத்தக்க வல்லமையையுடைய ராசனே! என்மருமகனே! என்மருமகனே! என்று நேரிட்ட துயரம் அதிமமாகக் கொண்டு பலவாறு அழைத்தலைக் கேட்டு, மாறுபடுதலில்லாத மனதையுடைய அவ்வரசன் புத்திரர்களு மயங்கிச்சோர்ந்தார்கள். எ-று. (சுஎ)

மற்றவன்மனைவிமாருமனக்குழைந்தழுதலைந்தார்
செற்றமில்கமலையன்னதெரிவைசீமந்தனிக்குஞ்
சொற்றனரவளுங்கேட்டுச்சுடுதொழிலுருமுவீழப்
புற்றரவழுங்குமாபோற்புரண்டனள்புலம்புகின்றாள்.

(இ - ள்.) அவனுடைய மனைவியர்களு மனமுருகி அழுதலை மெலிந்தார்கள்; குற்றமில்லாத திருமகளையொத்த சீமந்தனியென்னு மாதுக்குஞ்சொன்னார்கள்; அவள் அந்தச்சேதியைக்கேட்டுச் சுடுகின்ற செய்கையையுடைய இடிவிழ, புற்றிலிருக்கும் சர்ப்பங்கள் வருந்துவதுபோலப் புரண்டு புரண்டு புலம்புவாளாயினள். எ - று. (சுஅ)

வேறு.

நீர்மலிந்தபண்ணைநிடதத்தார்மன்னவனே
தார்மலிந்தமார்பாதமியேனுயிர்த்துணையே

சீர்மலிந்தசெல்வாணர்தியகலிக்கோடைதெறுங்
கார்மலிந்தவண்கைக்களிறேகளிறேயோ.

(இ - ள்) சீர்நிறைந்த வயல்களையுடைய நிடததேசத்தி லிருப்பவர்க ளுக்கு அரசனே! பூமாலைநிறைந்த மார்பையுடையவனே! தமியேனது உயிர்த் துணையே! சீர்பொருந்திய ப்ாவலர்களுடைய கொடிய வறுமையாகிய கோடை யைக் கெடுக்கத்தக்கமேகம்போன்ற வளப்பந்தங்கிய கையையுடைய மதகஜ மே! மதகஜமே! எ - று. (சுச)

புன்னைச்செழுங்காவிற்பூவணையின்யாமுயங்கு
முன்னைப்பெரும்போகம்வேண்டாய்முனிந்துதா
னென்னைப்பிரிந்தாய்நீயென்றுலுமயான்றமியே
னுன்னைப்பிரிந்தாவியுய்யேன்மற்றுய்யேனே.

(இ - ள்) செழுமைதங்கிய புன்னைவனத்தில் மலர்மஞ்சமேல் நாமிருவரு ஞ்சேர்ந்தனுபவிக்கும் முன்போகத்தை விரும்பாமல் வெறுத்து, நீயென்னைப் பிரிந்துவிட்டாலும், நானுன்னைப்பிரிந்து தமியளாயுயிர்பிழைத்திரோன் பிழைத் திரோன். எ - று. (சுஎ)

என்றென்றரற்றியிலங்கிழைதன்கைம்மலாற்
குன்றென்றுகொங்கைகுழையும்படிபுடைத்து
நின்றென்றுஞ்சொல்லாணெருப்பிடைபுக்கியான்விழுந்து
பொன்றும்பொழுதன்றிப்போமோதுபொன்றாள்.

(இ - ள்.) சீமந்தனியானவள் இவ்வாறு சொல்லிச்சொல்லியழுது செந்தா மரைமலர்போன்ற தன்கைகளால் மலையையொத்த தனங்கள்குழையும்படிமோ திக்கொண்டு, வேறொன்றும் பேசாமல் நான் நெருப்பில்விழுந்து இறந்தகா லத்திலல்லது இந்தத்துக்கந்தீருமோ என்றாள். எ-று. (சுசு)

இங்கிவடானிவ்வண்ணமையவிகல்வேந்தன்
பொங்குதுயர்மாதவமாற்போக்கியுளந்தெளிந்து
திங்கடிருவாண்முகத்துச்சீமந்தனியுறையு
மங்குலுறுசென்னிமணிக்கோயில்வந்தடைந்தான்.

(இ - ள்.) சீமந்தனியானவள் இவ்வாறு துயரப்பட்டுக்கொண்டிருக்க; பலமுள்ளராசனனவன் தனக்குண்டான துயரத்தை முனிவர்களால் நீங்கப் பெற்றுத்தெளிந்து, சந்திரனையொத்த அழகினையும் ஒளியினையும் பொருந்திய முகத்தினையுடைய சீமந்தனியிருக்கும் மேகத்தையளாவுகின்ற சிகரத்தையு டைய ரத்தினங்கள்பதித்த மாளிகையிற் சேர்ந்தான். எ - று.

வேந்தன் தெளிந்து கோயிலடைந்தான் எனமுடிக்க. (சுஎ)

தாண்தனையக்கண்டுள்ளந்தளர்ராவடிவீழ்ந்த
மாதினைத்தன்னையாரவாங்கியெடுத்தணைத்துப்
பூதலத்துயாவர்வினையைப்புறங்கண்டார்
காதலித்துமாதேகவலாதொழிகென்றான்.

(இ - புணை.) வந்தபிதாவைக்கண்டு மனந்தளர்ந்து பாதத்தில் விழுந்த புத்திரியைத் தன்கைகள் பொருந்தவாரி யெடுத்தணைத்து, மகளே! பூலோகத் திலிருப்பவர்களில் வினையைக்கடந்தவர்கள்யாருமில்லை; (ஆதலால்)கணவனிடத் திலிருப்பம்வைத்துவருந்தாதேயென்றான். எ-று.—கவலுதல்-வருந்துதல். ()

என்னுழுரையுமிகந்துபடருழந்து
தன்னுளையர்ந்துதலிவன்றனையுடைவான்
வன்னிபுகுவதன்றிவாழ்வெனவரற்று

(இ - புணை.) இவ்வாறு தன்தகப்பன் சொன்னசொல்லையுந் தவிர்த்துத் தனக்குள் துன்பமடைந்து சோகங்கொண்டு கணவனிடத்திற் போய்ச்சேர அக்கினிப் பிரவேசமாவதையல்லாமல், இனி யுயிருடன் வாழ்வெனன்று சொல்லியழுகிற மின்னலைப்போலும் நுண்ணிய இடையையுடையவளாகிய தன்மகளை அக்கினிப்பிரவேசமாக வொட்டாமல் அவ்வரசன் விலக்கினான். எ - று. வன்னி - நெருப்பு. (சுகு)

தந்தைவிலக்கத்தளிரியலாள்சாவோரீஇச்
சிந்தைகலியுந்துயரஞ்சிறிதகற்றிப்
புந்திதெளியச்சிவனேயபூசைசெய்வே
னெந்தையறிவாயெனக்கயினியாயினாள்.

(இ - புணை.) தன்பிதா தடுத்ததினால் மாந்தளிர்போன்ற சாயலையுடைய சீமந்தனியானவள் சாதலையொழிந்து, மனம் வருந்தும்படியான துயரஞ் சிறிது நீங்கப்பெற்று, எந்தையே! என்புந்தி தெளிவடையும்படி இனிப் பரமசிவனை யேபூசைசெய்வேன், நீயறிவாயென்று சொல்லி விதந்தவாயினாள். எ - று. கயினி-விதந்து. (எ0)

எண்ணூர்தொழுவாழிகவிந்திரசேனன்
றண்ணூர்புனல்வீழ்ந்துதன்மதலைமாய்ந்ததுவும்
பெண்ணூரணங்குகைமைபெற்றதுவுங்கேட்டாற்றிக்
கண்ணூரவலப்புனலாற்கடல்செய்தான்.

(இ - புணை.) பகைவரெல்லாம் வணங்கும்படி வாழ்கின்றபலமுள்ள தன்புத்திரன் குளிர்ச்சிபொருந்திய

விழுத்து இறந்ததும், மருகி லகம்பெண்ணை தலுங் கேள்விப்பட்டழுது, கண்களிலிருந்துபெருகாநின்ற துக்கநீரினுல் சமுத்திரமொன்றுண்டாக்கினுன். எ - று. எனவே மிக்கதுரடைத்தானென்பது கருத்து. (எக)

சுற்றமுநற்றுயுத்துயர்க்கடலின்மூழ்கினர்
மற்றுநிடதத்தாரெல்லாமனங்கவன்று
கொற்றவனேயெங்கெளித்தாயென்றுட்குழைந்தழுதார்
பற்றலருங்கேட்டார்பழம்பகைதீர்ந்தோமென்றூர்.

(இ - புணை.) உறவினரும் நல்லதாயும் துக்கசாகரத்தில் மூழுகினர்கள். இவர்களுமன்றி, நிடததேசத்தாரெல்லாரும் மனக்கவலையுற்று, எங்களரசனே! எக்கே யொளித்தாயோ என்று மனங்குழைந்து அழுதார்கள். பகைவர் இச்தச் செய்தியைக்கேள்விப்பட்டுப்பழம்பகைதீர்ந்தோமென்றுகளித்தார்கள். எ - று.

காலமிஃதென்னைக்கலிமாவுங்கைமாவும்
வேலிலகுதானையுடன்மேவார்சமர்வேட்டுக்
கோலியமராடிகளன்கோமகனைத்தேவியுடன்
ஞாலமெலாநொந்துநடுங்கச்சிறைவைத்தார்.

(இ - புணை.) (அப்படிக்கேள்விப்பட்டபகைவர்கள்இந்திரசேனனைவெல்லுதற்கு) இதுதான் காலமென்று குதிரைகளும் யானைகளும் வேலேந்தியபதாதிகளும் உடன்வரச்சென்று யுத்தஞ்செய்தலே விரும்பிச்சூழ்ந்து போர்செய்து, இந்திரசேனனை அவன் மனைவியுடன் கொண்டுபோய்த் தேசமெல்லாம் கொந்து நடுங்கும்படிச் சிறையில்வைத்தார்கள். எ - று. (எஉ)

செல்வமுழுதுஞ்செறுநரோகைக்கொண்டு
பல்பகல்வந்தாளுநாட்பாதலத்தைவிட்டெழுந்த
வில்கெழுதோண்மைத்தன்னினையம்விளம்புவாம்.

(இ - புணை.) நிறைந்தநிதிகளையும் வளப்பம்பொருந்திய நாட்டினையும் பெருமை பொருந்திய நகரத்தையும் மற்றுமுள்ள செல்வமெல்லாவற்றையும் பகைவர்கள்கைக்கொண்டு பலகாலாண்டுகொண்டிருக்கும்நாளில், பாதாளத்தை விட்டுவந்த விற்பொருந்திய புயத்தையுடைய சந்திராங்கதனுடைய செய்தியைச்சொல்லுகிறேம். எ - று. செறுநர் - பகைவர். (எசு)

வேறு.

நன்னதிக்கரையின்வந்தானன்றருமிந்திரசேன
னின்னருண்மதலைவாமாவியல்புடனேறுமேல்லை

யன்னவன்மனைவியாயத்தவர்களோடனுங்கித்தானும்
பொன்னிருகரையுஞ்சிந்தும்பூம்புனலாடவந்தாள்.

(இ - புணை.) களச்சக்கிரவர்த்தியின் பவுத்திரனை சந்திராங்கன் கல்லியமூமனையாற்றங்கரையில் வந்து தாவிச்செல்லுங் குதிரையின்மேல் இயல்புடனேறும்போது, அவன் மனைவியாகிய சீமந்தனியானவள் தோழிக்கூட்டங்களுடன்சென்று இருகரைகளிலும் பொன்னேயொதுக்கும் யமுனையாற்றில் நீராட வந்தான். எ - று. (எடு)

ஐயிருகாதஞ்சந்தத்தருங்கடிகமழ்செம்பொன்
மெய்யணிதிகழ்கொய்யவெண்டுகின்மருங்கிற்சாத்திக்
துய்யவரிருவர்காணத்துணைப்பரியேறியாடு
மையறுகுமரற்கண்டுமனமறுகுற்றுநின்றாள்.

(இ - புணை.) (நீராடவந்தவள்) பத்துக்காதம்வரையில் அரியசந்தனவாசனைபரிமளிக்கவும், சரீரத்தி லணிந்திருக்கும் ஆபரணங்கள்பிரகாசிக்கவும், நுண்ணியதாகிய வெள்ளவஸ்திரம் இடையிலணிந்து, பரிசுத்தர்களானநாகராசனும் இராக்கதனுமாகிய இருவரும் பார்க்கும்படி, வேகமாகச்செல்லும் குதிரையி லேறிக்கொண்டு விளையாடுகின்ற குற்றமீக்கிய அந்த ராசகுமாரனைக்கண்டு மனக்கலங்கிநின்றாள். எ - று. (எசு)

மங்கலமிழந்துமெய்யின்மணவணிதுறந்துநின்ற
கொங்கலர்கோதைதன்னைக்குமரனுங்குறுகிநோக்கித்
திங்கள்வாணுதனீயார்கொறிருமணம்புணர்ந்தான்யாவ
னிங்குநீகைமையானகாரணமென்கொலென்றான்.

(இ - புணை.) மாங்கலியத்தையும் அங்கத்திலணியும் மங்களத்துக்குரிய ஆபரணங்களையு மிழந்துநின்ற சீமந்தனியைச் சந்திராங்கதன் சென்றுகண்டு, ஓ சந்திரவதனீ யீயார்? உன்னைச்சிறப்புடன் விவாகஞ்செய்துகொண்டவன் யாவன், இப்போது நீகைம்பெண்ணையிருக்குங் காரண மென்னவென்றான். எ-று. கொங்கலர்கோதை என்றது சீமந்தனியைக்குரிக்கும் ஒரு பெயர். (எஎ)

அவணைவினவலோடுமரிவையுநாணிநிற்பக்
கவலுறுமவடன்றோழியொருமகள்கழறுகின்றாள்
னிவன்பிதாச்சித்திரவன்மனிருநிலமுழுதுங்காக்குந்
தவலருங்கேள்விச்சந்திராங்கதனிவடலைவனுமால்.

(இ - புணை.) இவ்வாறு அவன் வினவவே சீமந்தனிநாணத்துடன் விலகி நிற்றலையுணர்ந்த கவலையடைந்திருக்கும் அவளுடைய தோழிகளுளொருத்தி

சொல்லுகின்றாள் : (இராஜகுமாரனேகேள்) இவளுடைய தந்தை சித்திரவர்மன், இவள் கணவனேவெண்டுல் பெருமைபொருந்திய பூமிமுழுமையுங்காக்கும் கெடுதலற்ற நல்லகேள்வியையுடைய சந்திராங்கதனென்பவன். எ-று. ()

கொடுவினை தரப்பமற்றக்கோமகன் றனதுமுண்ணட்
டொடுபுனல்யமுனையாற்றுட்டுஞ்சிடத்துயரமெய்தி
யுடுபதியிழந்துமாழ்குமோணியினெனியைநீத்து
வடுவகல்கற்பினங்கைகமங்கலமிழந்துநின்றாள்.

(இ - புனை.) இவள்கைம்பெண்ணானதற்குக் காரணமென்னவெனில், இவள்வாழ்ந்துகொண்டிருக்கும் நாளிலொருநாள் கொடியவினையானது செலுத்ததலினாலே ஆழ்ந்தபுனலையுடைய யமுனையாற்றில் இவள்கணவனாகிய அந்த ராஜகுமாரன் இறந்துபோனதினால் குற்றமில்லாத கற்பினையுடைய இந்தமாதானவள் துயரம் அடைந்து, சந்திரனையிழந்து விசனப்படுகின்ற ரோகணி நக்ஷத்திரம்போல வொளியிழந்து மங்கலமிழந்திருக்கின்றாள். எ - று. (எக)

மங்கலமிழந்துசென்றவருடமூன்றுகுமையா
திங்களங்கண்ணிவேய்ந்தசிவனதுசோமவாரம்
கொங்கையங்கண்ணிகோற்பாள்குளிர்புனலாடல்வேண்டி
யிங்கெழிலாயமெல்லாஞ்சூழ்வரவிவய்திலளே.

(இ - புனை.) அரசகுமாரனே ! இம்மங்கை மாங்கலியமிழந்து மூன்று வருஷமாயிற்று. அன்றுமுதல் இவள் சந்திரக்கண்ணியணிந்த பரமசிவனுக்குரிய சோமவாரவிரதம் அனுஷ்டிக்கின்றாள் ; அதன்பொருட்டு ஸ்நானஞ்செய்பவிரும்பி, அழகுள்ள தோழியர் கூட்டஞ்சூழ இவ்விடத்தில் வந்தனள்.எ-று.

அன்றியுமிவடன்கேள்வனரும்பெறற்றுணைதன்னைக்
கன்றியதெவ்வர்பற்றிக்கடுஞ்சிறைவைத்துநீதி
யொன்றியநாட்டையெல்லாமொருங்குடன்புரவாநின்றார்
வென்றிவேற்குமரகேண்மோவென்றவள்விளம்புங்காலை.

(இ - புனை.) வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசனே! இது வுமல்லாமல் இவள்கணவனுடைய தாதையைப் பகைகொண்ட சத்துருக்கள் கொடிய சிறையில்வைத்து நீதிபொருந்திய நாட்டையெல்லாம் ஒருங்காகக் கைப்பற்றி அரசுசெய்கின்றார்கள். என்று அந்தத்தோழி சொன்னபோது.எ-று.

நாணெடுநின்றநங்கைநாணிகந்தவிருஞ்செம்பொற்
பூணணிமார்பனேநீபுதுமலர்ப்பழிசேர்க்குந்
தாணியுஞ்சிலையுமிலாதத்தொடுகழன்மதவேணவன்றிச்
சேணுயர்விசும்பிற்றேவகுமரசேணைசெட்டுகென்றாள்.

(இ - புரை.) காலனத்துடனின்ற சீமந்தனியானவள் பின்பு காணம்விட்டுப் பிரகாசியாநின்ற செம்பொன்னுலாகிய ஆபரணங்களணிந்த மார்பையுடைய மன்னவனே! நீ புதியமன்க்களைகள்வைக்கும் அணியும் கருப்புவில்லுமின்றிவந்த வீரகண்டையணிந்த மன்மதனே? அல்லது மிகவுழுயர்ந்த தேவலோகத்தில் வாசஞ்செய்யுந் தேவகுமாரனே? சொல்லென்றுள். எ - று. (அ2)

என்றவண்மீட்டுமென்றனின்னிலைமுதலவெல்லா
மொன்றறப்புகலக்கேட்டாயெனையுநீயுணர்ந்திகொல்லைக
கன்றியமனத்தேனின்னைக்கனவிடைக்கண்டேன்போலு
ங்கா

(இ - புரை.) அவளிவ்வாறு சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறுள். எனக்குநேரிட்ட துன்பங்கள் முதலானவைகளெல்லாம்ஒன்றும் வழுவாமற்கேட்டனை, நீயென்னை அறிவையோ? வருந்திய மனத்தையுடைய நான் உன்னைக் கனவிற்கண்டவளா யிருக்கின்றேன்; இங்குநின்ற நீயாவன்; ஒளிக்காமலிப் பொழுதே சொல்லவேண்டுமென்றுள். எ - று. (அங)

மற்றவனுரைத்தான்யாரேர்மானிடனல்லனெண்ணிற்
செற்றமில்குணத்துதங்காய்சித்திபெற்றுடையதேவ
னற்றமில்புவனமெங்குமொல்லையினடைந்துமீளக்
கற்றவனுவனென்றுகாந்தளுஞ்செங்கைபற்றி.

(இ - புரை.) அவளிவ்வாறு விறுவ சந்திராங்கதன் சொல்லுகிறன்; குற்றமில்லாத குணத்தையுடைய மாதே! நான்மனிதர்களுக்குள் ஒருவனல்லன்; எண்ணிப்பார்க்கில் சித்திகளைப்பெற்ற தேவரிலொருவன்; பழுதில்லாத உலகங்களெங்கும் அதிவிரைவாகச் சென்றுவரக் கற்றவன்; என்று சொல்லி அவளுடைய செங்காந்தள்போன்ற கரத்தைப்பிடித்துக்கொண்டு. எ - று. ()

அருகுறவழைப்பமாதரையுறவெய்திப்பின்னும்
பருகுவார்போலநோக்கிப்பணைமுலைபுளகங்கொள்ள
வெருவினாகிற்பமன்னன்மின்னிடைச்செவியின்மெல்லென்
றிருருமொழியுறுதியாகவுவப்புடனுரைப்பதானன்

(இ - புரை) (அவ்வரசகுமாரன்) சமீபத்தில் வரும்படி அழைக்க; (அதைக்கண்ட) தோழிமார்கள் சந்தேகமுற்றுப்பின்னும் (அவ்வரசனை)விடாது பார்த்துப் பருத்ததனங்கள் புளகத்தையடைவதுமன்றிப் பயமுமடைந்துநிற்க, சந்திராங்கதன் சீமந்தனியின்காதில் சந்தோஷத்துடன மெதுவாக ஒருவார்த்தையுறுதியுடன் சொல்லலானன். எ - று. (அ)

உன்னுறு துணைவன்வேறோருலகத்திலுள்ளான்மாதே
யன்னவன்றனக்குயாதுமாருயிர்தீதோழனந்த
மன்னனுமிரண்டுகாளிஸ்வந்தனதவலசீக்கு
மின்னதுபுகல்வான்வந்தேனென்றனனெழிலின்மிக்கான்.

(இ - புணை.) மாதே! உன்கணவன் வேறுருலகத்திலிருக்கிறான்; அவனுக்கு நான் உயிர்போன்ற சிநேகன், அந்தமன்னனு மிரண்டுநாளையில்வந்து உனது துக்கத்தை நீக்குவான்; இந்தச்சேதி யுனக்குச்சொல்லவே யான்வந்தேனென்று அழகில்மிகுந்த சந்திராங்கதன் சொன்னான். எ - று. (அசு)

நெஞ்சினினைவலகீத்திநெற்றியங்கண்ணனுசின
வஞ்சிநுண்ணிடையாயன்லென்வருவதேதிண்ணமாகுக்
தஞ்சமென்றிதனையார்ச்சூழ்ந்சாற்றலியென்றுசாற்றிப்
பஞ்சின்மெல்லடியிளைட்குமீட்டிநுடகாலுற்றான்.

(இ - புணை.) வஞ்சிக்கொடிபோலும் நுண்ணிய இடையை யுடையவளே! உன்மனதிலிருக்குக துண்பத்தைதீங்குவை, நெற்றிக்கண்ணரான பரமசிவனுணைப்படி அவன்வருவது நிச்சயமாம்; நான்சொன்ன வார்த்தையை எளிதாகக்கருதி யாருடனுஞ்சொல்லாதே, என்று சொல்லி, செம்பஞ்சினுமெல்லியபாதத்தையுடைய சீமந்தனிக்கு மறுபடியுமிந்தவார்த்தைசொல்லுகின்றான். எ-று.

தெரிவைநின்கொழுநற்குற்றதிறமனைலாந்தெரியச்சொன்னேன்
பரிவுறுமெனதுதாதைதாயர்தம்பரிவுதீர்க்க
விரைவினினெனதுதேயத்தேகுவனென்றுவேகக்
குரகதந்தூண்டினைவேற்குரிசிலுங்கடிதிற்போனான்.

(இ - புணை.) மாதே! உன்கணவனுக்குப் பொருந்திய செய்கையெல்லாம் உனக்குத்தெரியும்படிச்சொன்னேன்; இனி என்னிடத்தில்விருப்பம்வைத்திருக்கும் என்தாய்தந்தையருடைய வருத்தத்தைதீர்க்க, விரைவாக என்தேசத்துக்குச் செல்லுகிறேனென்றுசொல்லி, கூர்மைதங்கிய வேலாயுதத்தையுடைய சந்திராங்கதனுனவன் வேகமாகச்செலுதும் குதிரையை நடத்திக்கொண்டு தரிதமாகப்போனான். எ - று. குரகதம் - குதிரை. (அஎ)

சேயொளிக்குரிசில்போயபின்னைத்திருவினல்லாண்
மாயமோவன்றிநெஞ்சின்மயக்கமோகனவுகொல்லோ
போயவனுனைத்தவெல்லாம்பொய்கொலோமெய்கொலோவென்
றாயவளழுதேதம்பியவலங்கொண்டினையசொன்னாள்.

(இ - புணை.) செவ்வியதான ஒளியையுடைய சித்திராங்கதன் போய்விட்டபின்பு திருமகளினுஞ்சிறந்த அழகுள்ள சீமந்தனியானவள் இப்போதுபோன

இந்தத் தேவகுமாரன் சொன்னவெல்லாம் மாய்கையோ? அல்லது நம்முடைய மனதிலிருக்கு மயக்கந்தானே? அல்லது சொப்பனமோ? பொய்யோ? அல்லது மெய்யோ? என்று அழுது தேம்பித் துன்பங்கொண்டு இச்சுலோகத்தைசொன்
ன - று. (அக)

வேறு.

என்னுறுசிந்தனையென்கணவன்பான்
மன்னுவகல்லகமற்றொருவன்மேற்
றானெனுவதனதுணர்வுமிருந்தமையாலே
னென்னவனேயெனையாளுநலத்தோன்.

(இ - புணர்.) என்மனமானது என்கணவனிடத்திற் பொருந்துமே யல்லது மற்றொருவனிடத்திற் பொருந்துவதன்று; (ஆதலாலிப்போது) என்னிடம் நடந்ததை ஆலோசிக்குமிடத்தில் இக்குவந்துபோன மகாபுருஷனே என்னையாளத்தக்க தன்மையையுடைய என்கணவனேயாகும். எ - று. (கூ0)

யாக்கையுயர்கோதமலவுறைநல்லாள்
வாக்கியநம்பிமழுப்படைவள்ள
லாக்கினையாலவனுக்கருள்பூசைப்
பாக்கியம்வந்துபலித்தது கொல்லோ.

(இ - புணர்.) யாக்கியவர்க்க ரென்னு முனிவருடைய பத்தினியாகிய மயிதினைசொல்லிய வார்த்தையைநம்பி, மழுவாயுதமேந்திய பரமசிவனது ஆக்கினையாகிய சைவாகமவிதிப்படி அவனுக்குச்செய்த பூசையின்பாக்கியம்நமக்குவந்துபலித்ததுவோ? எ - று. கொல்-ஐயப்பொருளது. (கூக

குன்றிருவோர்பதினையிரகாடு
மன்றல்செய்தோனுடன்வாழ்குவளென்ற
நன்றறுசொன்னெறிநண்ணியதேயோ.

(இ - புணர்.) இதுவுமல்லாமல் முன்னமொருபிராமணன்உன்குமாரத், பதினையிரவருஷம் கணவனுடன் வாழ்வாளென்று என்பிதாவுடன் சொன்ன நன்மையறிந்த சொல்லின் மூன்றமைபொருந்தியதோ? எ - று. (கூஉ

நிரந்தாரற்சொனிமித்தமுமுண்டா
கரந்தநறுங்குழலையபோகன்
வரந்தருபூசைமயிழ்ந்தனைவாழ்வித்
தாங்கைகெடுப்பானையாராயிற்பார்.

(இ - ளை.) எப்போதும் நல்லவாக்கியங்களாகிய சகுனங்களுமுண்டாகின்றன. எல்லோர்க்குமினிய தேவியாரை யிடப்பாகத்திலுடைய பரமசிவன் அனுக்கிரகஞ் செய்யத்தக்கதாகிய எமது பூசைக்கு மிகும்க்ஷேமம் வாழ்வித்துத் துன்பங்கெடுப்பதை யாரறியவல்லவர்கள், எ - று. (கஈ)

பாவியன்னதுபகுதறிவிலனென
ஞெகியனனடையும்மிவணென்றென்,
றேவியமாசுறலொத்தவள்வைகிக்
காவியினேர்தருகை

(இ - புணர்.) பாவியாகிய நான் எது பகுத்தறியக்கூடுவேன், என்னுயிர்போன்ற கணவன் எங்ஙன் இங்குவந்து சேர்வானேனென்று, அழுக்குற்ற சித்திரமொத்தவள் தனித்திருந்து நீலோற்பலம்போன்ற கண்களில் நீர்சோரும்படி வருந்தியிருந்தாள். எ - று. (கூச)

இருந்துபுலம்புமிளங்கிளிதன்னை
வருந்தல்வருந்தன்மடக்கொடியென்றே
பொருந்தியதோழியர்பூம்புனலாட்ட
அருந்ததிகோயிலடைந்தனளிப்பால்.

(இ - புணர்.) இப்படிப் புலம்பாநின்ற இளங்கிளிபோல்பவளைத் தோழியர்கள் தாயே! வருந்தாதே வருந்தாதேயென்று தேறுதல்சொல்லி ஸ்நானஞ் செய்விக்க; அருந்ததியையொத்த கற்புள்ள சீமந்தனியென்பவள் தன்மாளிகையிற்போய்ச் சேர்ந்தாள். அதற்குமேல் நடந்ததென்னவெனில். எ - று. (கூரு)

போரணிமாமிசைபோகியவேலோ
னீரணிசூழ்நிடதத்திருநாட்டிற்
றோரணநீடியதான்னகர்முன்னர்க்
காரணிசோலைகளிப்பொடடைந்தான்.

(இ - புணர்.) போர்க்கோலமணிந்த குதிரையின்மேற் சென்ற வேலேந்திய ராஜகுமாரன் நீர்வளமிகுந்த அழகியநிடதநாட்டில் தோரணங்கள் ஓங்கிய பழமையாகிய நகரத்துக்கு முன்னிருக்கும் மேகமண்டலமளாவிய சோலையினிடத்தில் களிப்புடன் சேர்ந்தான. எ - று, (கூசு)

[illegible]வந்திநிசெல்லலகற்றிப்
[illegible]பொலந்திருமார்ப
ணண்மருவுஞ்சிலைநாகருமாரன்
வாண்முகநோக்கியோர்மாற்றமுரைத்தான்.

(இ - புணை.) அதிகாரம் வழிகடந்த வருத்தத்தை நீக்கிக்கொண்டு ஆபரணங்கள் நிறைந்துள்ள பொன்னிறந்தங்கிய அழகியமார்பையுடைய அந்தராஜகுமாரன், காணிபூட்டத்தக்க வில்லினைப்பெற்ற நாககுமாரனுடைய ஒள்ளிய முகத்தைப்பார்த்து ஒருவார்த்தைச் சொல்லுகின்றான். எ - று. (கஎ)

பாதலமேவியதும்பணிநாதன்
மேதகுமெய்வரல்கியதும்மிப்
பூதலமுற்றதுமின்றுபொருந்தார்க்
கோதுதிபின்னருமோதுவதுண்டால்.

(இ - புணை.) யமுனையாற்றில்வீழ்ந்த நான் பாதாளலோகத்திற் சென்றதையும், அங்கிருக்கும் நாகராஜன் எனக்கு மேன்மையுற்ற கல்லவரங்களைக் கொடுத்ததையும், அந்த வரம்பெற்றுக்கொண்டு பூலோகத்தில் வந்ததையும் இப்போது நீபோய்நம்முடைய பகைவருக்குச் சொல்லுவாய். இதுவுமல்லாமல் இன்னமுஞ் சொல்வதுண்டு, அதென்னவெனில். எ - று. (கஅ)

எண்ணுறுதாதையிருஞ்சிறையோடெங்
கண்ணகலிடந்தகாலம்விடாரேன்
மண்ணுலகாளுமதிப்பையொழித்தே
விண்ணுலகாளவிடுக்குவனென்பாய்.

(இ - புணை.) யாவரு மதிக்கத்தக்க என்பிதாவின் சிறையையும் எமது இடமகன்ற தேசத்தையும் இப்போது விடாராகில், மண்ணுலகத்தையாளும்படி அவர்க்குள்ள எண்ணத்தையொழித்து, விண்ணுலகத்தை யாளும்படி அனுப்புவனென்றுஞ் சொல்லுவாய். எ - று. (கஉ)

என்றவனேவலினைந்தனனேகிக்
குன்றெனநீடியகோபுரமூதூர்ச்
சென்றுபுகுந்தடுசேரலர்தம்பாற்
கன்றியநெஞ்சொடுகட்டுரைசெய்வான்.

(இ - புணை.) இவ்வண்ணஞ் சொல்லிய ராசகுமாரனேவலுக்கு நாககுமாரன் சம்மதித்தவனாகிச்சென்று, மலைபோலுயர்ந்த கோபுரத்தையுடைய பழமையாகிய நகரத்திற்சேர்ந்து, கொல்லுகின்ற பகைமன்னரைக்கண்டு கோபங்கொண்டமனதுடன் உறுதியானவார்த்தைச் சொல்லுகின்றான். எ - று. ()

இந்திரசேனனெனும்புகழ்மன்னன்
மைந்தனுதித்திறல்வாகுவலத்தான்
றந்திரமேவியதக்கனல்க
அந்தமிலாதவரங்கொடடைந்தான்.

(இ - புரை) இந்திரசேனனென்னும் பெயர்பெற்ற புகழுள்ள மன்னவனுடைய புத்திரனும், சத்துருக்களைப் போர்முகத்திற் கொல்லும்படியான புசபலத்தையுடையவனும், நாகப்படைகளையுடைய தகுகனென்னும் நாசுராசன் கொடுக்க அளவில்லாத வரங்கள் பெறறுக்கொண்டவனுமான சந்திராங்கதனவந்திருக்கின்றான். எ - று. தந்திரம் - சைந்தியம். (கoக)

ஆதலினலவனேடமராடல்
பேதைமையென்றறிவீரபிழைசெய்தீர்
தாதையும்விட்டுயர்தண்ணைடையும்விட்
டேதமுறுவகையேகுமினென்றான்.

(இ - புரை.) ஆகையாலவனுடன் போர்செய்குதல் உங்களுக்கு அறிவில்லாமை யென்றறியுங்கள்; நீங்களோ மிகுந்த குற்றஞ்செய்திருக்கிறீர்கள்; ஆகிலுமிப்போது நீங்கள் தேஷமமடையவேண்டுமெனகிற எண்ணமிருந்தால், அவன் தகப்பன் சிறையைநீக்கி, அவனதேசத்தையும் விட்டு, நீங்கள் யாதுகுறையுமில்லாமல் போய்விடுங்களென்று சொன்னான். எ - று.

தண்ணைட - காடு. (கoஎ)

இத்திறாகதகுமாரனியம்ப
மத்தகயானைமறப்படையன்னர்

தத்தமரும்பதிபோயினர்சார்ந்தார்.

(இ - புரை.) இப்படியாக நாகதகுமாரன் சொல்ல; மத்தகத்தையுடைய யானைமுதலாகிய வீரத்தன்மையுள்ள நால்வகைப் படையோடுங்கூடிய அந்த மன்னவர்கள் மேன்மைபொருந்திய இந்திரசேனனைச் சிறைவிடுத்துத் தங்கள் தங்கள் நகரத்திற்போய்ச் சேர்ந்தார்கள். எ - று.

"யானையுடைய படைகாண்டல் முன்னினிதே" என்பதனல் யானையைக் கூறினார். அத்தகை என்பதில் அகரம் உயர்த்தற்கண்வந்தது. (கoஅ)

வேறு.

மேவலாளர்போயபின்னர்வேந்தன்மாமகன்வர
வேவலாளர்கூறக்கேட்டுளின்புமுற்றமைச்சரைக்
கூவியொல்லையென்மகற்கொணர்மினீணடெனவவர்
பூவர்சோலையுட்குபுக்குபுண்ணியற்கொடுவந்தார்.

(இ - புரை.) பகைமன்னர் போய்விட்டபின்பு இந்திரசேனனென்னும் அரசன் தன் மகன்வந்திருப்பதை யேவலாளர் சொல்லக்கேட்டு மனமகிழ்ச்சியடைந்து மந்திரிகளை அழைந்து, என்புத்திரனை விரைவினில் இவ்விடத்துக்கு

அழைத்துக்கொண்டு வாருங்களென்று சொல்ல; அந்த மந்திரிகள் மலர்களை யுடைய சோலையினிடத்துக்குப் போய்ப் புண்ணியனுகிய அந்தக்குமாரனை அழைத்துவந்தார்கள். எ - று. (கoச)

வந்துதந்தைதாளின்வீழ்ந்தன்மைந்தனைப்பொன்மார்புறத்
தந்தையும்பரிந்துதன்றடக்கையாலணைத்திடா
எந்தைதண்புனறகுள்வீழ்ந்திறந்தநீபிழைத்ததென்
முந்தையோர்கள்செய்தவமுடித்தநன்மையாலென்றான்.

(இ - புனை.) புத்திரன்வந்து தகப்பனுகிய இந்திரசேனன் பாதத்தில் வணங்கினவுடன் அவனை யெடுத்துத் தன்மார்பிற்பொருந்த நீண்டகைகளினால் அணைத்துக்கொண்டு, என்னையனே! என்பெரியோர்கள் செய்தற்குரிய தவஞ் செய்துமுடித்த நன்மையால் குளிர்ச்சியுள்ள ஆற்றில்விழுந்து இறந்த நீ பிழைத்தது என்றான். எ - று. (கoஏ)

என்டதாயநன்கினியம்டமைந்தனும்மெழுந்
தன்புகூருமன்னைதன்னடிவணங்கவன்னையுந்
தன்பவாரிவிட்டகன்றுசூழ்கரைக்கடந்ததேர்
இன்பவாரிபூடுபுக்கெழாதுழுழ்கினளரோ.

(இ - புனை.) இவ்வண்ணஞ் சொல்லுவதாகிய நல்லவார்த்தைகளை யினி தாகத் தகப்பன்சொல்ல; (அதன்பின்பு) புத்திரனுனவன் அன்புமிகுந்த தன் தாயினுடைய பாதத்தைவணங்க; அந்தத் தாயும் துக்கசமுத்திரத்தை விட்டு நீங்கி சூழ்ந்த கரைகடந்ததாகிய பெரிய இன்பசமுத்திரத்தில் புகுந்து, எழாத வண்ணம் முழுகினாள். எ - று. (கoசு)

ஏனைநற்கிளைஞருமிரும்படிதியுண்மாந்தரும்
போனவாவிபெற்றுடையர்போன்மகிழ்வுகூர்ந்தபின்
மானமன்னன்மைந்தவுற்றவாறெலாங்கிளத்தெனத்
தேனெய்மாரிபெய்வதென்னச்செம்மல்யாவுஞ்செப்பினான்.

(இ-புனை.) இவர்களுமல்லாமல் மற்றைச்சுற்றத்தாரும் பெருமைபொருந்திய நகரத்தாரும் தாங்கள் முன்பிழந்த உயிரைப்பின்னும் பெற்றவர்கள்போல் மகிழ்ச்சியடைந்தபின்பு, பெருமைபெற்ற அரசபுத்திரனைப்பார்த்து, மைந்தனே! நீ கதியில்விழுந்தபின்பு நடந்த சேதியெல்லாம் சொல்லென்று வினவ, தேனும் நெய்யுமேகலந்து மழைபொழிவதுபோல நடந்த சேதியெல்லாம் ராசகுமாரன் சொல்லி. எ - று. (கoஎ)

தக்கசன்பரிந்தளித்ததாவில்பல்வளனெலா
மிக்கதாதைபாலளிப்பவேந்தனுண்மகிழ்ந்தபின்

புக்கவாறுசித்திரவன்மனுக்குரைத்திர்போதிரென்
றக்கணத்திலேலதூதினன்புடன்விடுப்பவே.

(இ - புணை.) தரூகன் பரிவுடன்கொடுத்த கெடுதலற்ற பொருள்களை யெல்லாம் அன்புமிகுந்த பிதாவினிடத்தில் கொடுக்க; அத்தராசன்பார்த்து மன மகிழ்ந்து, அப்பொழுதே யோலையெழுதித் தூதர்கையிற்கொடுத்து, நீங்கள் சித்திரவன்ம ராசனிடத்திற்குப்போய் என்குமாரன்வந்த சேதியைச் சொல்லுங்க ளென்று அனுப்பினன். எ - று. (கஎஅ)

ஆரியவருத்தாடடைந்துதூதவோலையை
வேரியார்தருந்தெரியல்வேந்தனுக்களித்தலுஞ்
சோரிவேலினனுமோலிசொற்பொருளுணர்ந்துடல்
பூரியாவிருந்துதன்னைமைச்சுடன்புகன்றனன்.

(இ - புணை.) (அப்படி யனுப்பப்பட்ட தூதர்கள்) ஆரியவருத்த தேசம் போய்ச்சேர்ந்து, தங்களிடத்திலிருக்கு மோலையைத் தெனிறைந்து வாசனைதங் கிய மாலையணிந்த சித்திரவன்மனுக்குக் கொடுக்கவும், இரத்தக்கறைதோய்ந்த வேலாயுதத்தையுடைய அவ்வரசன் தூதர்கொடுத்த வோலையிலெழுதியிருக்கும் சேதியைப் படித்துணர்ந்த மாத்திரத்தில் உடல்பூரிப்படைந்திருந்து தன் மந் திரியுடன் சொன்னன். எ - று. (கஎக)

சொன்னவாய்மைகேட்டவன்றுறக்கமேவினனென
மன்னர்மன்னன்வன்கழல்வழுத்திநிற்பமன்னனும்
அன்னவாறுதன்மகட்குரைப்பவந்தவன்னமுந்
தன்னையீன்றதாதைதாளின்வீழ்த்தாதைசாற்றுவான்.

(இ - புணை.) இவ்வாறு அரசன் வார்த்தையைக்கேட்ட மந்திரியானவன் சுவர்க்கலோகத் தின்பம்பெற்றவன்போல மகிழ்ச்சியடைந்து, இராஜாதிராசன் பாதத்தை வணங்கித் துதிசெய்திருப்ப; பின்னும் அவ்வரசன் ஓலைவந்தசேதி யைத் தன்மகளாகிய சீமந்தனிக்குச்சொல்ல; அன்னதடைபோன்ற நடையை யுடைய சீமந்தனியும் மகிழ்ச்சிகொண்டு தன்னைப்பெற்ற பிதாவின் பாதத்தில் வணங்கிநிற்ப; அவ்வரசன் சொல்லுகிறான். எ - று. (கஅ0)

கங்கைதங்குசெஞ்சடைக்கணீச்சிவானவற்குநீ
யங்கையாலருச்சனைபுரிந்தடைந்தகன்னையான்
மங்கையுன்றன்மன்னனுய்ந்துவந்தவென்றுகூறிடாப்
பொங்குதீயவெந்துயர்ப்புணரிநின்றுமேறினன்.

(இ - புணை.) புத்திரியே! கங்கைபொருந்திய சடாமகுடத்தையுடைய மழுவாயுதமேந்திய பரமசிவனுக்கு நீ அங்கையினல் அருச்சனைசெய்து வந்த

நன்மையினுலே, உன்கணவன் பிழைத்துவந்ததென்று சொல்லிப்பொங்குகின்ற தியதாகிய வெவ்விய துக்கசமுத்திரத்தினின்றுங் கரையேறினன். எ - று. கணிச்சி-மழு. (கஉக)

மாசுமூழ்குமாமணிகழீஇயவாறுபோலவே
பாசிழையைப்பைம்புனலிற்ட்டிப்பாலினுவியக்
தூசுடுத்தியொண்மலர்ச்சுரிகுழல்வனைந்துபின்
பூசுசாந்தணிந்துசெய்யபொற்கலன்கள்சேர்த்தினர்.

(இ - புணை.) அழுக்கடைந்த மாணிக்கத்தைக் கழுவியதுபோலப் பசும் பொன்னிஞற்செய்த ஆபரணங்க ளணிந்துள்ளவளாகிய சீமந்தனிக்கு நல்ல நீரினுல் ஸ்நானஞ்செய்வித்து, பாலின்புகைபோலும் அழகுள்ள வஸ்திரமணிந்தும், வாசனையுள்ளமலர்களைக் கூந்தலிலணிந்தும்,பின்பு சந்தனம் பூசிச்செவ்விதாகிய பொன்னுற்செய்யப்பட்ட ரத்நாபரணங்களு மணிந்தார்கள். எ-று.

கோலமைக்கண்மாதைகவாவுகாய்யுளைப்பரித்திண்டேர்
மேலிருத்திச்சேடியர்நெருங்கவெண்சங்கார்ப்பெழப்
பாலிமைத்தவேலையிற்பரந்துசேனைசூழ்வாக்
காலியற்கலினமாவிவர்ந்துகாவலன்சென்றான்.

(இ - புணை.) இவ்வாறு அலங்காரஞ்செய்தபின்பு அழகிய மையிட்ட நேத்திரத்தையுடைய சீமந்தனியைத் தாவிச்செல்லும் பிடரி மயிரினையுடைய குதிரைகள்கட்டிய பலம்பொருந்திய தேர்மேலேற்றித் தோழிகள்சூழவும், தவளச்சங்கம் ஆரவாரிக்கவும், பாற்சமுத்திரம்போலச் சேனைகள் சூழ்ந்துவரவும், காற்றைப்போல அதிவேகமாகச் செல்லுகின்ற சேணம்பூட்டிய குதிரையின்மேல் அவ்வாசன் ஏறிச்சென்றான். எ - று. கலினம் - குதிரைச்சேணம்.

நீடுசெங்நெறிகடந்துநென்மலிகிடதமா
நாடுமேவியிந்திரசேனனன்னகர்ப்புறத்திறை
ஏடவிழ்ந்தபூம்பொழிலிருந்துதூதுபோக்கியே
யாடல்வேந்தனுக்குத்தானடைந்தவாறறிவித்தான்.

(இ - புணை.) (அவ்வாறு சென்ற அரசன்) நெடியதாகிய மார்க்கத்தைக் கடந்து செந்நெற்பயிர்நிறைந்த பெருமைபொருந்திய நிடதநாட்டைச்சேர்ந்து, இந்திரசேன ராஜனுடைய நகரின்புறத்திலிருக்கும் இதழ்கள்விரிந்த மலர்களையுடைய ஒருசோலையினிடத்திருந்து, தூதரையனுப்பித் தான்வந்திருப்பதை வெற்றியினையுடைய இந்திரசேன மகாராசனுக்குத் தெரிவித்தான். எ - று. ஆடல் - வெற்றி. (ககச)

வெங்கலிகெடத்துரந்தவேந்தர்வேந்தனுமுணர்ந்
தங்குகின்றெழுந்ததண்ணமைச்சரோடெதிர்கொளா
மங்குறங்குகோயில்வாய்வருகெனக்கொண்டேகியே
பொங்குமோகைகூர்யோடவண்புதுவிருந்தூட்டினான்.

(இ - புனை.) கொடிய கலிப்படையை நீக்கிய மன்னர் மன்னனு இந்திரசேனன் சித்திரவன்மனென்னு மரசன் வந்திருப்பதைத் தூதர்களாலறிந்து, தன்மந்திரிகளுடன் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு எதிர்கொண்டு, மேகங்கள் பொருந்தும்படியாகிய உன்னதமுள்ள தன்அரண்மனைக்குவருவீரென்று அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் மிகுந்த சந்தோஷத்துடன் புதுமையான விருந்துசெய்வித்தனன். எ - று. (கடு)

சந்திராங்கதனும்வந்துதாழ்ந்துமாதுலனடிக்
கந்தநாண்மலர்வணங்கக்கையினுலெடுத்தணைத்
திந்தமாதினுவியோடுமெங்களாஷியாவையும்
உய்ந்துவாழுவென்றுரீயுமுய்ந்துவந்ததாமரோ.

(இ - புனை.) (சித்திரவன்மனுவன் விருந்துண்டிருக்கும்போது) சந்திராங்கதன்வந்து தன்மாதுலனுடைய அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்கினமாத்திரத்தில், அவன் மருகனைக் கையினுலெடுத்தணைத்து மார்புடன் தழுவிக்கொண்டு, இந்தச்சீமந்தனி யுயிரும் எங்களுயிரும் பிழைத்து வாழும்படியாகவே நீயும்பிழைத்துவந்தது, என்று கூறினன். எ - று. கந்தம் - வாசனை. (கஅ)

என்றுகூறியன்றுசந்திராங்கதற்கினையந்தாட்
டென்றுசோதிடத்தர்சொல்லவோரையிற்சுருதிநூல்
லொன்றுநீதியந்தணருரைப்பவொள்ளழலின்முன்
மன்றலுறுகாதையமறுமணம்புணர்த்தினான்.

(இ - புனை.) இவ்வாறு சொல்லி, அதன்பின்பு சந்திராங்கனுக்குப் பொருந்திய கல்லதாளின்னாளென்று அங்குவந்திருந்த சோதிடர்கள் சொல்ல; அந்தலக்கினத்தில் வேதசாஸ்திரங்களுணர்ந்த நீதியாளர்களாகிய பிராமணர்கள் மந்திரங்களைக்கூற; ஓமாக்கினியின்முன் சீமந்தனியை மறுமணஞ்செய்வித்தான். எ - று. ஒள்ளழல் - ஒளியுள்ள தீ. (கக)

மணஞ்செய்வித்தபின்னரன்புமன்னுசித்திரவன்மன்னீ
றிணங்குகல்லமைச்சர்சாமிருபுறமுஞ்சூழ்வரக்
கணங்கொடானேயோடுதேர்கடாவியேகியூர்புகுந்
தணங்கனார்கலத்தின்மூழ்கியண்டர்கோனின்வைகினான்.

(இ - புணை.) மறுமணஞ் செய்வித்தபின்பு அன்புள்ள சித்திரவண்மனை வன் பெருமைபொருந்திய கல்லைமந்திரிகள் இருபுறத்திலும்வரும்படிக் கூட்ட மாகிய சேனைகளுடன் புறப்பட்டுத் தேரைச்செலுத்திக்கொண்டுபோய்த் தன் பதியிற்சேர்ந்து, தெய்வமகளிரையொத்த தனக்குரிய மாதர்களுடன் இன்பம் அனுபவித்துக்கொண்டு தேவேந்திரன்போலிருந்தான். எ - று. (கசஅ)

வேறு.

பூமண்டலத்தைப்பொறுக்கும்புயங்கேசனீந்த
தாமந்துகில்பூணிறைசந்தினையாவுநல்கிச்
சீமந்தனியைத்திருமேவருஞ்செம்பொன்மார்பன்
றாமங்கமழுஞ்செழுஞ்சேக்கையிற்றேயுநாளின்

(இ - புணை.) இந்தப் பூமியைத் தாங்கும்படியான நாகராசன்கொடுத்த மாலை வஸ்திரம் ஆபரணம் நிறைந்தசந்தனம் என்னுமிவைகளைச் சிமந்தனிக் குகொடுத்துத் திருமகள்மேவிய மார்பையுடைய சந்திராங்கதன் தாமரைமலரும் செழுமையுள்ளபுட்பசயனத்தில் அவளுடன் கூடிக்குலாவி வாழுநாளில். எ-று.

நெய்வண்ணவேற்கைநிகராருமிலேறனைற்குக்
கொய்வண்ணமாலைக்கொழும்பொன்முடிசூட்டிமன்னன்
பொய்வண்ணமாயவுடலான்வருபோகநீங்கி
மெய்வண்ணமேவத்துறவின்றலைமேவினானே.

(இ - புணை.) இந்திரசேனனென்னுமரசன் நினைத்தங்கிய வேலேந்துங் கையையுடையவனும் ஒருவருமொப்பிலாத ரூபலாவண்யமென்ற நடையையுடைய வனுமான தன்புத்திரனுக்குக் கொய்து கட்டிய வண்ணமாலை சூழ்ந்த பொன் முடிசூட்டி, பொய்த்தன்மையுள்ள மாயாசம்யுக்தப்பட்ட உடலினுல் வரத் தக்க போகங்களை வெறுத்துநீங்கி, உண்மைப்பொருளாகிய மோக்ஷமடையத் துறவடைந்தான். எ - று. (கஉ0)

தன்ரூதைதபோய்நற்றவஞ்செய்திடத்தாமவேலோன்
பொன்ரூழ்குடைக்கீழகன்ரூலம்புரக்குமேல்வை
நன்ரூயுமைந்தரிருநால்வரையீன்றுநற்பொற்
குன்ரூர்முலைமங்கையோர்கொம்பினையும்பயந்தான்.

(இ - புணை.) இப்படியாகத் தன்பிதா வனத்திற்போய் நல்ல தவஞ்செ ய்துகொண்டிருக்க ; வெற்றிமாலை யணிந்த வேலையுடைய சந்திராங்கதன் அழகுதங்கிய குடையின்கீழிருந்து அகன்ற பூமியைக் காக்கும்நாளில், நன்னெ றியை யுணரத்தக்க அறிவினையுடைய எட்டுப்புத்திரர்களோடுபெற்றுப் பின்னும் கல்லபொன்மலையொத்த தனத்தையுடைய பூங்கொம்புபோன்ற ஒருபுத்திரி யையும் பெற்றான். எ - று. (கஉக)

மாவண்ணகமன்னன்மகப்பேற்றின்மனங்களித்துப்
பாவந்தவிர்த்துபதினாயிரமாண்டுபோரிற்
றூவின்றியின்பநுகர்ந்தான்றனிஞானவாழ்வு
மேவுந்தவத்தீரெனச்சூதன்விளம்பினனே.

(இ - புரை) ஒப்பற்ற ஞானவாழ்வினையுடைய தவத்தர்களாகிய நைமிசாரணியமுனிவர்களே! மிகுந்த வளப்பந்தங்கிய கரத்தையுடைய சந்திராங்கதன் புத்திரர்கள்பிறந்து நன்மார்க்கத்தில் நடக்கத்தக்கவர்களாயிருப்பதினால் மனமகிழ்ச்சியடைந்து, (நீதியுடன் செங்கோற்செலுத்தி) பாவஞ்சேராத வண்ணம்நீக்கி யிவ்வுலகத்தில் பதினாயிரம்வருஷம் குறைவில்லாமல் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தானென்று சூதமுனிவர் சொன்னார். எ - று. (கஉஉ)

எட்டாவது சோமவாரவிரதபூசை அத்தியாயம் முற்றிற்று.

திருவிருத்தம். ருஉசு.

ஒன்பதாவது

சோமவாரத்திற்சீமந்தனிபாவவிமோசனம்பெற்ற அத்தியாயம்.

பின்னுமாதவர்விழைவுறப்பெருந்தவியாதன்
அன்னசூதமாமுனிவனரண்ருளடியார்
மன்னுசெய்கையுஞ்சோமவாரத்தின்மான்மியமும்
இன்னுமோதுவதுண்டன்வகேண்மினென்றிசைத்தான்.

(இ - புரை.) நைமிசாரணிய முனிவர்கள் பின்னும் சந்தோஷம் அடையும்படி பெரியதவத்தையுடைய வியாசரையொத்த சூதமுனிவர் பரமசிவனருள் பெற்ற அடியார்களுடைய நிலைபெற்ற செய்கையும் சோமவாரவிரதமகிமையும் இன்னமுஞ்சொல்லத் தக்கதுண்டு; அவைகளைக் கேட்பீர்களென்று சொல்லியருளினார். எ - று. (க)

பொங்குவெள்ளிமீன்புனைதயிலுஞ்சகட்டினைப்போழ்ந்து
பங்குவேறினுமடுமழைப்பருவம்பொய்த்தாலுந்
திங்கண்மும்மழைத்திறம்பிலவாய்வளஞ்சுரக்கும்
மங்குலோய்பொழில்வைதர்ப்பகாட்டில்வாழ்மறையோர்.

(இ - புரை.) விளங்குகின்ற சுக்கிரனென்னுங் கிரகமானது மூடத்தில் விழுந்தாலும், உரோகணி நக்ஷத்திரத்தைப் பேதித்துக்கொண்டு சனிக்கிரகம்

வக்கிரித்துச்சென்றலும், நியதியாகப்பொருந்திய மழைப்பருவமும் தப்பிறலும், மாதந்தோறு மும்மாரிமாறுபடாமல் வளங்கள் சுரக்கப்பெற்ற மேகமண்டலவளையிற் பொருந்திய சோலைசூழ்ந்த வைதர்ப்பநாட்டில் வாழ்கின்ற பிராமணர்களுக்குள்ளே. எ - று. சகடு - உரோகணி. பங்கு - சனி. (உ)

இனியகண்பொடுவேதமித்திரன்றவத்தின்ற
புனிதநான்மறைபுகல்சுமேதாவுநற்புகழோன்
யுனியிலாமதியாலுயர்சார்ச்சுதன்றேர்ன்றல்
தனிமெய்ஞ்ஞானநூற்சாமவானெனுந்தகவோனும்.

(இ - புணை.) வேதமித்திரனென்பவன் அன்புடன்செய்த தவத்தினாற் பெற்ற புனிதமாகிய நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்த சுமேதா என்பவனும், நல்ல புகழையுடையவனைத் துன்பமடையாத புத்தியினாலுயர்ந்த சார்ச்சுதனென்பவனுடைய புத்திரனாகிய ஒப்பற்ற மெய்ஞ்ஞான நூற்களையோதியுணர்ந்த மேன்மையுள்ள சாமவானென்பவனும். எ - று. (ஙு)

அரியநான்மறைமுதலியவங்கங்களாறுந்
தெரிவரும்பொருட்புராணமுமாகமத்தெளிவும்
விரியுமாறுளகலைகளுங்குரவனுல்விளங்கிக்
கரியகாமனுஞ்சாமனுமெனக்கவினமைந்தார்.

(இ - புணை.) அருமையாகிய காலுவேதங்களும் ஆறங்கங்களும் தெரிதற்கரிய பொருளமைந்த பதினெண்புராணங்களும் ஆகமங்களிற் சொல்லுகிற சிக்சயப்பொருளும் பரந்திராநின்ற மற்றுமுள்ளகலைகளும் ஆசாரியரமல்கற்றுணர்ந்து, மன்மதனும்அவன்தம்பியாகியசாமனும்போலழகமைந்தார்கள். எ-று.

மைந்தர்கல்வியுமிளமையுமனக்கொடுமைகிழ்ந்த
அந்தணாளர்தமரும்பெறற்புதல்வனாகோக்கிச்
சிந்தையோகையாற்சிறுவர்சீர்புவிக்கெலாமணியாம்
இந்தமாநிலவைதர்ப்பமேவுதன்மாட்டெய்தி.

(இ - புணை.) தங்கள் புத்திரர்கள் சிறுவயதில் கற்றுணர்ந்த கல்வியின் நிறத்தையும் பெற்றுள்ள வாலிபத்தையும் மனங்கொண்டு, மகிழ்ச்சியடைந்த பிராமணரிருவர்களும் பெறுதற்கரிய தங்கள் புத்திரர்களைப்பார்த்து உள்ளத்திலுண்டான சந்தோஷத்தினால், சிறுவர்களே! நீங்கள் இவ்வுலகத்துக்கு ஆபரணம்போல் விளங்குகின்ற பெரியஇடத்தையுடைய இந்தவைதர்ப்பநாட்டிலரசசென்று. எ - று. (ஙி)

கற்றகல்வியாற்காவலன்சிந்தைகளிக்கனிவித்
துற்றமாநிதிப்பரிசிலாங்குவகையினேற்றுப்
பெற்றசெம்பொனற்கன்னியர்கடிமணம்பேணி
முற்றுமில்லறம்புரிவதேமேற்கொண்டுமுயல்வீர்.

(இ - புணை.) நீங்கள் கற்றகல்வியால் அரசன் மனங்கனியச்செய்து, அவன் பரிசிலாகக்கொடுக்கு மிகுந்த திரவியத்தைச் சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டுவந்து, நீங்கள் பெற்றுக்கொண்ட அந்தத்திரவியத்தினால் கன்னிகை களை விவாகஞ்செய்து, குறைவில்லாத இல்லறம் நடத்துவதை மேற்கொண்டு நன் முயற்சியில் முயலுங்கள். என்று கூறினர்கள். எ - று. (சு)

என்றுகூறலுமிருவருமிசைந்தனரேகிக்
குன்றுபோலுயர்கோயிலிற்கொற்றவற்குறுகி
நின்றுதங்குலவிஞ்சைகணிகழ்த்தலுநிருபன்
நன்றுநன்றுநீர்வேட்டவைபெறுகெனநவின்றான்.

(இ - புணை.) இவ்வாறு அவ்விருவர் பிதாக்களுஞ்சொல்ல, அதற்குச்சம் மதித்துச் சென்று, மலையொத்துயர்ந்த அவ்வரசன் மாளிகையிற் சேர்ந்து அவனைக்கண்டு, நாங்கள் கற்றிருக்குங் கல்விகளைப் பிரசங்கித்தார்கள். அர சன் அதைக்கேட்டு உங்கள் பிரசங்கமுங் கல்வியும் மிகவும் நன்றுயிருக்கின் றன. ஆகையால் உங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்க ளென்றான். எ - று. (எ)

மாலிவெண்குடைமன்னவர்மன்னமற்றிதுகேள்
சேலிவென்றகட்டிருந்திழையார்மணமுடிப்பான்
ஏலவந்தனமிருநிதிதந்தருளென்னக்
கோலவெள்ளெயிறிலங்கிடநகைத்திதுகூறும்.

(இ - புணை.) வெற்றிமாலையும் வெண்வளட்டக்குடையுமுடைய மன்னவர் மன்னனே! நாங்கள் சொல்லுவதைக்கேட்பாயாக; கயல்மீனைவென்ற அழ குள்ள பார்வையையுடைய கன்னியரை விவாகஞ்செய்துகொள்ள மனதிலுத் தேசித்து உன்னிடத்துக்கு வந்தோம். அதற்குத் தகுதியாக மிகுந்த திரவி யங்களை எங்களுக்குக் கொடுவென்றுசொல்ல; அதைக்கேட்டஅரசன் அழகிய பற்கள் விளங்க நகைத்து இந்த வார்த்தையைச் சொல்லுகின்றான். எ - று. ()

மண்டுதீம்புனனிடதத்தர்கோமகன்மனையாள்
கொண்டகற்புடைக்கோதைசிமந்தனிக்கொம்பர்
தண்டவெண்பிறைவேணியான்சோமவாரத்தில்
அண்டருங்கண்டுவியப்புறவருச்சஃ

(இ - புனை.) மிக்க நீர்வள நிறைந்த நிடததேசத்தரசன் மனைவியாகிய கற்பினையுடைய பூமாலைபோன்ற சீமந்தனியென்பவள் இளந்திங்களணிந்த சடையையுடைய பரமசிவனைச் சோமவாரத்தில் தேவர்களுங்கண்டு ஆச்சரியப்படும்படி அருச்சனைசெய்து. எ - று. (க)

அந்தவேலையிளன்மறைமுனிவரையடங்கச்
சந்தமென்முலைதையலாரொடுவரச்சாற்றி
புந்தியான்மகிழ்ந்தருச்சனைவழிபடல்புரியா.

(இ - புனை.) அந்தச் சோமவார காலத்திற் பிராமணர்களைச் சந்தனம் பூசப்பெற்ற தனங்களையுடைய அவரவர் பத்தினிமாருடன்வரும்படிச் சொல்லியனுப்பி, வந்தவர்களை உமாமகேசுவரர்களாக மனதிற் பாவித்து மகிழ்ந்து அருச்சனைசெய்து. எ - று. (கo)

வேண்டுநன்கலன்வெறுக்கைகண்மிகவவர்க்களிக்கும்
ஆண்டுநீவிர்களிருவரிலொருவனண்டகையாய்ப்
பூண்டகோலத்தின்மனைவியாயொருவனைப்புனைந்து
காண்டகுஞ்சிறப்பினைமகள்பாற்சென்றுகடிதின்.

(இ - புனை.) அவர்கள் வேண்டிய நல்ல ஆபரணங்களும் திரவியமும் மிகுதியாகக் கொடுக்கிறாள். ஆதலால், நீங்களிருவரிலொருவன் ஆண்மகனுகவும் ஒருவன் கோலம்பூண்ட அவன் மனைவியாகவும் அலங்கரித்துக்கொண்டு, அழகிறைற் றக்க சிறப்பினையுடைய ராசகுமாரத்தியாகிய சீமந்தனியிடத்தில் விரைவிற்போய். எ - று. வெறுக்கை - பொன். காண் - அழகு. (கக)

கைதவத்தினுலவடருமவெறுக்கைகள்கவர்ந்து
மைதழைத்தகண்மடவியர்கடிமணமருவி
யுய்திரென்னுமைமறுத்திரேற்றண்டமுண்டென்னைக்
கொய்துணர்த்தொடைவேந்துரைத்தலுமுளங்குலைந்தார்.

(இ - புனை.) இப்படிக்கொத்த வஞ்சகத்தினுல் அவள்கொடுக்கிற திரவியத்தை அபகரித்து மைபொருந்திய கண்ணையுடைய கன்னியர்களை விளக்கமுள்ள விவாகஞ்செய்துகொண்டு வாழுங்கள்; என்சொல்லைத் தடுப்பீர்களானுல் உங்களுக்குத்தண்டனைகிடைக்கும் என்று, கொய்த பூங்கொத்துக்களாற்றொடுக்கப்பட்ட மாலையணிந்த அரசன் சொல்லவும் அவர்கள் மனம் வருந்தி. எ-று.

வேறு.

அந்தோவந்தோவெங்கடமக்கீதழகிற்றே
கொந்தார்மாலைக்கொற்றவகோயில்குறுகுற்றால்

நந்தாகின்றவஞ்சனைவேடனணுகுற்றால்
எந்தாயெந்தைதங்குலமுதலோடிறுவாரே.

(இ - புணை.) (இப்படி அந்த ராசன் சொன்னதைக்கேட்ட பிராமணச் சிறுவர்களவனை நோக்கி,) ஐயையோ! வேதமுதலாகிய சாஸ்திரங்களையெல்லாங் கற்றிருக்கும் எங்களுக்கு இந்தக்காரியம் நன்மையுடையதோ? அரசனே! உனது அரண்மனையைக்குறுகிய நாங்கள் வஞ்சனையான வேஷத்தைப்பொருந்தினால் எங்கள் மாதாபிதாக்கள் குலமுதலுடனழிந்துபோவார்களே! எ - று.

இம்மைதனக்குமறுமைதனக்குமெழுமைக்கும்
வெம்மைசெய்கேடுநரகும்விளைக்கும்விறல்வேந்தே
செம்மையகற்பித்தாயெனினின்றேசெய்வேமென்
றம்மறையோர்நின்றஞ்சியுரைப்பவடல்வேந்தன்.

(இ - புணை.) அரசனே! நீ சொன்னதுபோல் செய்வேமாகில் இம்மை மறுமையென்னுமிரண்டினு மல்லாமல், எழுபிறப்பிலுந் துன்பஞ் செய்யும் கெடுதியையும் நரகினையும் உண்டாக்கும், வெற்றியுள்ள அரசனே! நன் மார்க்கத்தைக் கற்பித்தாயானால், இப்பொழுதே செய்கிறோமென்று அந்தப் பிராமணர்கள் எதிர்நின்று பயந்துசொல்ல ; (அதைக்கேட்ட) வலியுள்ள அவ் வரசன். எ - று.

(கச)

வெஞ்சினமூளக்கண்கள்சிவக்கவெடிசொல்லாற்
செஞ்சொலுரைக்குந்தெரிகிற்றவர்திறல்வேந்தர்
தஞ்சொனவின்றாலம்மொழிகேளாத்தகவில்லோர்
அஞ்சிநடுங்கத்தண்டமிழைப்பதறமென்னை.

(இ - புணை.) செவ்விய வார்த்தையைச் சொல்லுங் குரு தேவர்கள் வென்றியுள்ள அரசர்கள் என்னுமிவர்கள் எதாவதொரு சொல்லைக்கூறினால், அவர்கள் வார்த்தையைக்கேளாத தருதியில்லாதவர்களைப் பயந்துநடுங்கும்படித் தண்டனை செய்வது தருமமென்று வெவ்விய கோபம் அதிகரிக்கக் கண்கள்சிவக்க வெடித்த சொல்லால் கூறுவானையினன். எ - று. (கரு)

என்னுரைகேளீராமெனினுங்களையிப்போதே
யன்னியகீழ்மைக்குலமாய்வேதியராகாது
கொன்னுறுதண்டஞ்செய்குவனென்றிறைகூற
மூன்னுறநிற்குந்வேதியர்வெருவாமொழிகுற்றார்.

(இ - புணை.) இவ்வாறு சொன்ன அரசன், என் வார்த்தையை நீங்கள் கேளாவிட்டால், உங்களை யிப்பொழுதே பிராமணனென்கிற யோக்கியதையில்

லாமல் நான்கு வருணத்துக்கும் அன்னியமான தாழ்ந்தசாதியாய்ப் போகத் தக்க கொடிய தண்டனை செய்விப்பேன் என்று கடிந்துகூற, எதிரிலிருக்கும் பிராமணர்கள் பயந்து சொல்லுகின்றார்கள். எ - று. (கசு)

மனைஞ்சிறலையுன்றன்றிருவுள்ளப்
பேறலதுண்டோநின்குடைவாழப்பெற்றோர்க்குத்
தாறலைபூகத்தொடுகனிதேமாத்தலைசாய
ஆறலைமோதுநிடதத்திருநாடனையோமே.

(இ - புணை.) மன்னவனே கோபஞ் செய்யாதே உனதுகுடை நிழலில் வாழப்பெற்றவர்களுக்கு உன் திருவுளப்பேறன்றி வேறென்றுண்டோ? இல்லையாதலால், குலைகள் அசைந்துகொண்டிருக்கும் கமுகமரமும், பழங்களையுடைய தேமாமரங்களும், தலைசாயும் வண்ணம் ஆறுனதுஅலையினால் மோதத்தக்க நீர் வளம்பெற்ற நிடததேசத்துக்குப் போகின்றோம். எ - று. (கஎ)

என்றவர்கூறச்சிந்தையுவந்தேதயிகல்வேந்தன்
ஒன்றியசாமவான்மடமாதருருவென்னப்
பொன்றணிபெண்மைக்கேயும்வனப்புப்புனைகென்னத்
துன்றியனைத்தார்கைபுனைவண்ணத்தொழில்வல்லோர்.

(இ - புணை.) இவ்வாறு அவர்கள் சொல்லலும் சிறந்த வலியுள்ள அவ்வரசன் மனமகிழ்ந்து, அலங்காரஞ் செய்விக்கும் நல்லதொழில் வல்லவர்களை அழைப்பித்து, இந்தச் சாமவானுக்குப் பெண்ணுருவத்திற்கியைந்த வனப்பினைச் செய்யுங்களென்று சொல்ல, வண்ணஞ்செய்வோர் அவ்வாறு செய்யத் துணிந்தார்கள். எ - று. (கஅ)

மங்கையர்போலக்கொங்கைகள்வேறவனைவித்துக்
குங்குமசந்தத்தேய்வைகள்கோட்டிக்குளிர்முத்தத்
தொங்கல்வளைந்திட்டினமலர்பெய்தசுருளோதி
பொங்கிருணீணச்சிகழிகையாகப்பொற்பித்தார்.

(இ - புணை.) மாதர்களைப்போலிருக்குப்படி வேறே தனங்கள் நூதனமாக அமைத்து, குங்குமம் முதலிய வாசனைத்திரவியஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு பூசி, குளிர்ந்த முத்துமாலைகளையணிந்து, பூமாலைசூட்டிய அளகபாரத்தை இருளும் நாணும்படிக் கொண்டையாக அலங்கரித்தார்கள். எ - று. தேய்வை-சந்தனக்குழம்பு. சிகழிகை-மயிர்க்கொண்டை. (கக)

கோலவிழிக்குக்கருமைசிறக்குங்கோதீட்டி
யாலெனும்பொற்குண்டலமுங்காதணிசெய்து

பாலறுதற்குப்புண்டரமிட்டுப்படர்வேலை
ஞாலமும்விற்குந்நசுமைத்தார்நவையற்றார்.

(இ - புணை.) அழகுள்ள நேத்திரங்களுக்குக் கறுத்த மையைச் சிறக்கும் னாியக்கோலாலெழுதி, அசையும்படி யிரண்டு காதிலும் பொற்குண்டலங்கள் தரித்து, நெற்றியினிடத்திற் றிரிபுண்டரமாக விபூதியணிந்து, பரந்த சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தையே விலைமதிக்கத்தக்க வஸ்திரமுமணிந்தார்கள்; அலங்காரஞ்செய்யுந்தொழிலில் குற்றமற்றவர்களாகிய வண்ணமாதர்கள். எ-று. கோல் - மைதீட்டுங்கோல். பாலறுதல் - மீமிசைப்பதம். (உ0)

வேறு.

நகாவனத்தினெதிர்ந்தகாண்மாயனுர்மாயம்
புரிதருபெண்மைமோகினிரூபம்பொருவுறப்பொற்பலங்கரித்து
நரபதிதனக்குக்காட்டலுமகிழ்ந்துநன்றெனவவன்விடைகொடுப்பத்
தெரிவையரோடும்புகுந்தருமறையோர்குழாத்தொடுமிவர்களுஞ்சென்றார்.

(இ-புணை.) இருடிகள் மயங்கும்படித் தாருகாவனத்தில் சென்றநாளில் விஷ்ணுவானவர் மாயத்தினுற்கொண்ட மோகினியென்னும் பெண்ணுருவையொப்பாக அழகுடனலங்கரித்து, அரசனுக்குக்காட்டினவுடன் அவன்மகிழ்ந்து கன்றுகவிருக்கின்றதென்றுசொல்லி உத்தாவு தரப்பெற்றுக்கொண்டு, சீமந்தனியிடத்துக்குத் தங்கள் தங்கள் பத்தினிகளுடன் செல்லுகின்ற பிராமணக் கூட்டங்களுடன் போனர்கள். எ - று. (உக)

குடங்கையினடங்காநெடுங்கணிருத்தகோயிலிற்குமரனுங்கோல
வடந்தருமுலையாளாயுருவெடுத்தமைந்தனும்வருதலுமகிழா
கடந்தெதிர்சென்றுங்கருக்கியமுதலாகவையறுபூசனைபுரிந்தாங்
கடைந்தமாதவரோடிருக்கெனவிவற்குமகமகிழ்ந்தாசனமளித்தாள்.

(இ - புணை.) அகங்கையினளவிலடங்காத நெடியகண்களையுடைய சீமந்தனியிருக்குங்கோயிலிற் சுமேதாவென்பவனும் அழகிய மணிவடமணிந்த தனங்களையுடைய பெண்ணுருவமைந்த சாமவானென்பவனும் செல்லுதலும், சீமந்தனி அவர்களைக்கண்டு மனமகிழ்ந்து, எதிர்கொண்டுபோய் அருக்கியமுதலியவற்றுற் குற்றமற்ற பூசைசெய்து, அவ்விடத்தில் வந்திருக்கும் பிராமணர்களுடன் மகிழ்ந்திருங்களென்று இவர்களுக்கும் ஆசனங்கொடுத்தாள். எ - று.

சுழிபடுகங்கைச்சடிலவானவன்றஞ்சோமவாரத்தினிற்றொக்க
பழிபடுதீமைமுனிந்தவேதியரைப்பன்னியமோடுபன்முறையால்
வழிபடுமனையத்திவர்முகநோக்கினமந்தரிங்கிவரெனமதித்துப்
பொழியருட்கண்ணுணைகைமுகங்கோட்டிப்பொருக்கெனமறைந்திதுசெய்தாள்

(இ - புணை.) சுழிகள்பொருந்திய கங்கையையணிந்த சடாமகுடத்தை யுடைய பரமசிவனுக்குரிய சோமவாரதினத்தில் தன்னிடத்தில் வந்திருக்கும் பழியும் நீமையுமற்ற பிராமணர்களை அவரவர்கள்பத்தினிமாருடன் பலமுறை யோடு பூசனைசெய்யுங்காலத்தில், இவர்கள் முகத்தைப்பார்த்து, இவர்களிரு வரும் ஆண்மக்களென்று தனக்குளறிந்து, அருளைப்பொழிகின்ற கண்களை யுடைய அச்சீமந்தனி நகைமுகத்தைச் சற்றுவளைத்துக்கொண்டு வினாவுடன் இந்தக்காரியஞ் செய்தனள். எ - று. (உங)

எத்திறத்தானுமடைந்தவெல்லாமீசனுமுமையுமேயென்னு
அத்திரவிழியாள்வேதநான்முறையுமாகமமுறையுமாயடுத்துப்
பத்திசெய்பூசைவிதிமுறைபுரிந்துபால்பழந்தேன்கழைத்தீம்பால்
சித்திரக்கனகவள்ளத்தினேந்திச்சிற்றுண்டியடிசிலோடளித்தாள்.

(இ - புணை.) எந்த வேடத்திலாவது சோமவாரதினத்தில் வந்தவர்க ளெல்லாரும் பரமசிவனும் பார்வதியுமேயென்று தனக்குள் பாவித்து, அத்திரம் போலும் கண்களையுடையவள் வேதமுறையையும் ஆகமமுறைமையினையுந் தழுவிப் பத்திவினோயத்தக்க பூசையினை விதிதவறுமாற் செய்து, பால் பழம் தேன் மதுரமுள்ள கருப்பஞ்சாறு என்னு மிவைகளைத் தனித்தனியாகச் சித் திரமமைந்த பொன்வட்டிலினிலேந்திச் சிற்றுண்டியோடு அன்னமும்கொடுத் தாள். எ - று. (உச)

நறுமலர்மாலைசந்தனத்தேய்வைநவையறுமாடையாபரணம்
பிறையெனவொளிருங்கருப்புரநறியபிளவுவெள்ளிலையினையுதவி
யறையவர்தம்மைமவரதனேடுமைமையைவழுத்துவபோலநின்றேத்தி
நெறியினடைப்படர்திரெனவருள்செய்தாணிடததேசாதிபன்மனையாள்.

(இ - புணை.) சீமந்தினியானவள் பூமாலை சந்தனக்குழம்பு கல்ல வஸ்த் திரம் ஆபரணம் பிறைபோல் விளங்கும் பச்சைக்கருப்பூரம் மணமுள்ள தாம் பூலமென்னு மிவைகளைக்கொடுத்துப் பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் பூசிப்பதுபோல பிராமணர்களைப்பூசித்து எதிரினின்று துதிசெய்து, நீங்கள் செல்லுங்களென்று உத்தரவுகொடுத்தாள். எ - று. (உஞ)

அன்னவருமையுமீசனுமென்னவருச்சனைபுரிந்தபாவனையாற்
றன்னிகரிலாதசாமவானெடுத்தகோலம்போற்றளிரியறருளுய்
முன்னைநாண்மைந்தனென்பதுமறந்துமொய்குழலாமெனமுயங்கத்
தன்னெடுநெறியிற்போதருஞ்சுமேதாத்தனைமுகநோக்கினின்றணைக்கும்.

(இ - புணை.) அத்தன்மையுள்ள சீமந்தனியானவள் பார்வதியும் பரம சிவனுமாகப் பாவனைசெய்து பூசித்த நன்மையினாலே, கல்வியாற் றனக்கொப் பில்லாத சாமவானென்பவன் தான்கொண்ட கோலம்போலவே பெண்ணுரு வமைந்து முன்னம் தான் ஆண்மகனென்பதையு மறந்து, மாதர்போலவே

புணரவிரும்பித் நன்னேடு மார்க்கத்தில்வருகின்ற சுமேதாவென்பவன் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறான். எ - று. (உசு)

துணைவகீபோதலொழிந்திந்தவனத்திற்றுணர்க்கொடிகுலாயமண்டபத்தென் பணைமுலைநினதுமணிப்புயத்தழுந்தப்பவளவாயிதழ்முறைபருகி யணைகுதியலதுமறுத்தியேலின்னையாருயிர்முடிக்குவனன்றிக் கணைபுரைகண்ணிர்விரும்பிடமறுத்தல்காளையர்க்கறனலகண்டாய்.

(இ - புணை.) துணைவனே! நீ போவதைவிட்டு இந்தவனத்திற் பூங்கொத்துக்களையுடைய கொடிகள் பிரகாசித்துக்கொண்டிருக்கும் இம்மண்டபத்தில் என்னுடைய பருத்ததனங்கள் உன்னுடைய அழகிய புயங்களில் அழுந்தும்படிப் பவளம்போன்ற அதரத்தை முறையாகப் பருகிப் புணர்ச்சி செய்குவை, அல்லது தடுப்பையேயானால், இப்பொழுதே கானிறந்துபோவேன். இதுவுமல்லாமல் கணையையொத்த கண்களையுடைய மாதர்கள் விரும்பிலும் சம்மதியாமற் றடுப்பது ஆடவர்க்குத் தருமமல்ல. எ - று. (உஎ)

என்றிவைமொழிந்துகாமநோய்தலைக்கொண்டிரத்தலுமேகிடந்சுமேதா, தன்றுணைத்தோழன்விரைதவாய்மையிற்சாற்றியதிதுவெனவெண்ணி, ஒன்றெடுத்துரையான்வழிச்செலக்கண்டவற்பலவிழியிணைமீட்டும், பொன்றிணிதோளாயெனையணைந்தன்றிப்போகலையெனச்சென்றுதடுத்தாள்.

(இ - புணை.) இந்த மாதானவள் இவ்வாறு மொழிந்த காமநோயதிகரித்து இரந்து சொல்லுதலும், செல்லுகின்ற சுமேதாவானவன் அந்தவார்த்தையைக்கேட்டுத் தன் சிநேகன் விரைத வார்த்தையிது லிப்படிச் சொல்லுகிறானென்று நினைத்துப் பிரதி யுத்தரவு வேறொன்றுஞ் சொல்லாமல் கடக்கவும், அதனைக்கண்ட நீலோற்பலம்போன்ற கண்களையுடைய அந்த மாது மறுபடியும் அழகுநிறைந்த தோளனே! என்னையணைந்தல்லது நீபோகக்கூடாதென்று சொல்லித்தடுத்தாள். எ - று. (உஅ)

வனப்புறுபெண்மைமருவியதறியாமறையவனுத்தவள்வதனங் கனைப்பிரியாததோழனென்றெண்ணித்தருக்கொடுபொருக்கெனநோக்கித் தினைத்துணையெனுமாண்வடிவின்றிச்செயற்கைசெய்வடிவமுங்காந்து கனத்தடிபரந்தமுலையிளங்கொடியாய்நிற்றலுங்கண்டதிசயித்தான்.

(இ - புணை.) பெண்ணுருவமைந்த சாடவா னிவ்வாறு தடுக்கவே, தன் தோழன் அழகுள்ள பெண்ணுருவமானதை அறியாத சுமேதாவென்னும் பிராமணன் இவன் நம்முடைய தோழன்றானே, இப்போதிவ்வண்ணஞ் சொல்லுகிறானே, இதென்னகாரணமென்று தன்மனதிலெண்ணித் தருக்குடன் விரை

வாகச்சமீபத்திற்போய் அவள் முகத்தைப்பார்த்துத் தினையளவும் ஐண்வடிவ மென்பதில்லாமல் கோலஞ்செய்யும் அவயவங்களும் மறைந்து, கணமுள்ளதாயடிபரந்த தனங்களையுடைய இளங்கொடிபோன்ற பெண்ணுருவுக்குள்ள அடையாளத்துடனிருக்கவே, அவற்றைப்பார்த்து அதிசயித்தான். எ - று.

குங்குமமெழுதிக்கதிர்த்தடிபரந்தகுலவிளங்கொங்கையேமமலர் சூழ், கங்குலிற்சிறந்து நெறித்து நெய்த்திருண்ட கருங்குழற் கற்றை யோகலேசர், திங்களிற்பொலிந்ததிருமுகத்தழகோதிங்களிற்கிடந்த சேலென்னப், பங்கயமலருங்காவியுங்கடந்தபடைநெடுந்துணைவிழிவ டிவோ.

(இ - புணை.) அப்படி அதிசயித்தவன், குங்குமப்பூக்குழம்பிலுல் ரேகை களெழுதப்பட்டுப்பூரித்து அடிபரந்து மேலேகுவிந்திருக்கும் தனங்களின் அழ கினையோ,இருளைப்போலக் கருமைநிறஞ்சிறந்து நெறிப்பாகி நெய்த்துக் கறுத்த அளகபாரத்தின் அழகினையோ, பதினாறுகலைகளும் நிறைந்துள்ள பூரணசந்தி ரன்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் முகத்தினழகினையோ, அச்சந்திர னிடத்தில் விரண்டு சேற்கெண்டைகளிருக்கின்றதென்று சொல்லும்படி (முகத் தினிடத்திருக்கும்) செந்தாமரை மலரையும் நீலோற்பலமலரையும்வென்ற வாட்படைபோலும் நெடியதாகிய இரண்டு கண்கள் மாம்பிஞ்சினையொத்தி ருக்கும் அழகினையோ, எ - று. (கo)

மாந்தளிரனையமேனியின்வனப்போவரிவளைமுன்கையிற்கவிதை, காந்தளஞ்செங்கை மெல்விரலணியோ கதிர்மணிமேகலையொளியோ, ஏந்தெழிலல்குற்செவ்வியோவிவற்று ளெதையான்புகழ்ந்தெடுத்துரை க்கேன்,பூந்தவிசுறையுந்திருமகளன்றிப்புவியில்வேருளிவள்போல்வார்.

(இ - புணை.) மாந்தளிரையொத்த மேனியினழகினையோ, வரிவளை யணிந்த முன்கையின் அழகினையோ,செங்காந்தள் மலர்போன்ற மெல்லியகை விரல் அழகினையோ, ஒளிபொருந்திய மணிவடத்தாலாகிய மேகலாபரணத்தின் ஒளியினையோ,அழகுபொருந்திய அல்குலினழகினையோ,இவைகளுக்குள் எதனை ப்பெரிதென்று நான் தனித்தனியாகப் புகழ்ந்து சொல்லுவேன். செந்தாமரை மலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் திருமகளே யல்லது இவ்வுலகத்திருக்கும் மாதர்களில் இவளுக்கொப்பாகின்றவர்கள் யாரிருக்கின்றார்கள். எ - று. (கக)

எனமனத்தெண்ணிமடந்தையோனெஞ்சோழிணைடிவ்வனத்த டைந்தே, னனையவன்றன்னைக்காண்கிலேனின்னையருகுகண்டதிசய முற்றேன், புனைமலர்த்திருவேயானைநீயிங்குப்புகுந்தவாறென்புகலெ ன்னச், சுனைமலர்க்குழலாண்முறுவலித்தெனதுதோணவகேளென்றி தைசொன்னாள்.

(இ - புணை.) இவ்வாறுக மனதிலெண்ணிச் சாமவான் கூறுகின்றான். மாதே! நான் என் சிகேகலுடன் இவ்வனத்தி லடைக்தேன், இப்போது அவ னைக்காணேன், அருகில் உன்னைக்கண்டதிசயமடைந்தேன்; அலங்காரம மைந்த செந்தாமனைமலரில் வீற்றிருக்கும் திருமகள்போன்பவளே! நீ யாவள்? நீ இவ்விடத்தில் வந்த காரணம்யாது? சொல்லென்னவே, சுனைப்பூவணிந்த அளகத்தையுடைய அந்தமாதானவள் நலகத்து என் துணைவனே! என்வார்த் தையைக் கேளென்று சொல்லுகிறாள். எ - று. (கூ)

முன்னினின்றுணைவன்சாமவான்சாமவதியெனுமொய்குழலாகி, நின்னுடைமனையாய்நின்னையேபுணருநேயத்தானினைத்துதிசெய்தே ன், பொன்னைவிர்சுணங்கென்முலையுறுவண்ணம்புணருதிபொருபுடை மாரன், கன்னலான்மெலிக்தேனென்றவளிரப்பக்காணேவேதியனிஃதுரைத்தான்,

(இ - புணை.) முன்னம் நான் உன் துணைவனுகிய சாமவானென்பவனே: இப்போது சாமவதியென்னு மாதாகி, உன்மனையவளாய் உன்னையே புணர வேண்டுமென்கிற இச்சையினால் உன்னைத் துதிசெய்தேன். பொன்போல் விளங்கும் தேமல் என்தனங்களில் பொருந்தாத வண்ணம் புணர்வாயாக. பொ ருகின்ற படையையுடைய மன்மதன் கரும்புவில்லினால் வருத்த வருந்தினே ன். என்றவளிரந்துகூற, வாலிபனுகிய அந்த வேதியன் இந்த வார்த்தையைச் சொல்லுகிறான். எ - று. (கூ)

தீங்குரைசெய்தாய்பாவிநீபொல்லாய்தெருண்டசாரச்சு தன்றந்தே யோங்கியமரபுநின்றிருக்குலமுமுயர்தவப்பெருமையுமறந்து பூங்கணிகையர்போற்றியுரைதவின்றுபொற்புமத்திறத்தவாய்வேதந் தாங்கியநீதிநூலினையெல்லாந்தணக்கவெண்சமைந்தவாறென்றான்.

(இ - புணை.) பாவியே! கொடியவார்த்தைசொன்னாய், நீ பொல்லாதவள். வேதமுதலானவைகளை யோதியுணர்ந்த சாரச்சுதனுற் பெறப்பட்ட நீ மேலான வுன்மரபினையும் சிறந்த குலத்தினையும் உயர்ந்த தவப்பெருமையினையுமறந்து அழகுள்ள வேசையர்போல் கொடியவார்த்தையினைச்சொல்லிக்குணமுமதற் குத்தக்கதாய், வேதத்திற்சொல்லப்பட்ட நீதிமுறைகளையெல்லாம் நீக்கும்புடி இவ்வாறுனதற்குக் காரணம்யாதோ? வென்றான். எ - று. (கூ)

ரமாதருக்

புரியுநான்மார்பவென்றுணைக்கொழுகுபுந்தியினையமின்றெழுக [ன் வரிவையையான்மற்றுனைலெனென்பதமர்ந்துநின்றிருக்கணற்காண லெறிபசும்பூணிளவயவமனைத்துமேந்தன்முன்புலப்படுத்தினளால்.

(இ - புணை.) பரந்தகடலாற் சூழப்பட்ட உலகத்தில்வாழு மாதர்களுக் கெல்லாம் வேண்டியபொருள் கலவியல்லவோ? முதுக்கியமுப்புரிநூலணிந்த மார்பனே! எனது கணவனே! உன் மனதிலிருக்குஞ் சந்தேகத்தை யிப்போ தொழியக்கடவை; நான் பெண்மகளே யல்லது ஆண்மகனல்லெனன்பதை உன்கண்ணுல்நன்றுகப்பார்க்கக்கடவையென்று,விளங்குகின்றபூணணிந்திருப்ப வள் தன் அவயவங்களையெல்லாம்அந்தப்பிராமணனுக் கெதிரில் தெரியும்படிச் செய்தாள். எ - று. (கூ)

கண்டனன்மகிழாவதிசயித்திற்றக்காரிகைதன்னவயவம்போல்
மண்டுநீர்சுலாயவையகத்தெந்தமடந்தையரவயவமுடையா
ரண்டர்நாயகன்றன்சோமவாரத்தினமர்ந்தசிமந்தனியகத்திற்
கொண்டபாவனையில்விளைந்தவாறெண்ணக்குழைந்தனனுரைமறந்திரு
ந்தான்.

(இ - புணை.) அவள் தன்னவயவத்தைக்காட்டவே, கண்டுமகிழ்ந்து அதிசயமுற்று, இம்மாதின் அவயவம்போல அவயவமுடைய மாதர்கள் இவ்வுல கத்தில் யாருமில்லை, பரமசிவனுடைய சோமவாரதினத்தில்வருகிற (பிராமணர் களையும் அவர்கள் பத்தினிமார்களையும்) சீமந்தனி தனது மனதில் சத்தி சிவ ரூபமாகப் பாவனைசெய்யுந்தன்மையினல் இவ்வாறு விளைந்ததென்றெண்ணி மனங்குழைந்து வசனிப்பதுமின்றித் தன்னைமறந்திருந்தான். எ - று. (கூசு)

காளைவேதியநீயவ்வயவமுற்றுங் கண்டனையையமுங்கடிந்தாய்,
தோளையேவிரும்பியணைகெனவிரந்தேன் றுயர்விடாய் கெடவணைகெ
ன்ன, வாளைநேர்விழியாளுனைத்தலுங்கேட்டமறைவலான்மனந்துய
ரெய்திப், பாளைசேர்கமுகின் கழுத்திறுப்பீகட்டியெனவவன் பற்பல
மொழிந்தான்.

(இ - புணை.) கட்டிளமையையுடைய பிராமணனே! என்னவயவமெல்லாங் கண்டு சந்தேகமும் நீங்கினை; இனி என்னுடைய தோளை விருப்பங்கொண்டு, புணருவா யென்று இரக்கின்றேன்; ஆதலால், தடைசொல்லாமல் தயாரமுள்ள காமவிடாய்க்கெடும்படி அணைவாயென்று வாளையொத்த கண்களையுடையவள் சொல்லலும், அந்தவார்த்தையைக்கேட்ட பிராமணன் மனதில் தயாரமுற்றுப் பாளைகள்பொருந்திய கமுகம்போலும் கழுத்தினையுடையாய் கேளென்று பல மொழிகள் சொன்னன். எ - று. (கஎ)

வேறு.

வேதமும்பலமேதகுநூல்களனும்
ஓதிநன்கலமுற்றுமுணர்ந்தோன்

சாதியுந்தருமத்தையும்விட்டிட்
பாதகந்தருபண்டையினிழைத்தேம்.

(இ - புணர்.) வேதங்களும் மற்றும் மேன்மைபொருந்திய பலசாஸ்திரங்களும் சொல்லுகின்ற கல்லகலைகள் முழுவதையும் உணர்ந்தோம். (இப்படிக் கொத்ததன்மையுள்ள நாம் இப்போது) குலாசாரத்தையும் தருமநெறியையும் விட்டுப் பாவத்தைத்தரும்படியான இந்தச்செய்கையைச் செய்தோம். எ - று. சாஸ்திரங்களாவன:—வேதாகமம் வைசேடிகம் பாட்டம் பிரபாகரம் பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என்னும் ஆறுமாம். (கஎ)

உற்றதாதையரோடுமுணர்த்தேம்
வெற்றிவேலிறைவஞ்சம்வினைப்பான்
சொற்றகைதவஞ்சூழ்ந்தனமாகி
நற்றவக்கொடியானணுகுற்றேம்.

(இ - புணர்.) (நாம் அரசனிடத்துக்குப்போனபோது அவன்சொன்னதை) நம்முடைய பிதாக்களுடன் சொல்லாமற் போனேம், கெடுதி சேரும்படி அரசன்சொன்ன வஞ்சனைக் குடன்பட்டவர்களாய் நல்லதவமுள்ள சீமந்தனியிடத்துக்குப் போனேம். எ - று. கைதவம்-வஞ்சனை. (கஉ)

கைதவத்தையறிந்துமக்கற்பினள்
செய்தவத்திற்சிவனேடுமையென
வையமற்றங்கருச்சனைசெய்தலிற்
றையலித்துயர்தன்னெடுசார்ந்தனம்.

(இ - புணர்.) கற்பினையுடைய அந்தச்சீமந்தனி நம்முடையவஞ்சகத்தை அறிந்தும் அவள் தவத்திறல் பார்வதியும் பரமசிவனுமாக நம்மைப்பாவித்து உண்மையாகப்பூசித்ததிறல், பெண்ணே! இந்தத்தியரத்துடன் வந்தோம்.

புன்மைநெஞ்சிற்பொறியறுபாதக
வன்மைவஞ்சகர்வருவதெண்ணுமேல
நன்மையோர்க்குநலைவகளியற்றிடுந்
தன்மைதங்களுக்கேவந்துசாருமால்.

(இ - புணர்.) அற்பநெஞ்சினையுடைய அறிவற்ற கடுமனத்துள்ள வஞ்சகர்கள்மேல் தமக்குவருவதையெண்ணுமல் பெரியோர்களுக்குச் செய்யுங் குற்றமானது தங்களுக்கேவந்துசாரும். எ - று. பொறி-அறிவு. (கஊ)

ஆதலாவிவ்விடையருந்தவ
மாதவத்தினின்மாற்றுவமாற்றிடாப்

போதுநின்னைப்புணர்வதுநின்னைமென்
றேதிலனென்மறுத்தாள்பின்னுமோதினன்.

(இ - புணை.) ஆகையால், இப்போது நமக்குரோரிட்ட இத்துன்பத்தை அரியதவத்திலல் நீந்திக்கொள்ளுவோம்; அங்ஙனம்மாற்றக்கூடாதபோது கிச்சயமாக உன்னைப்புணருகிறேனென்று சொன்னன். அதனைக்கேட்ட அவள் விகாரத்தாற்றடிக்கவும் பின்னும் கூறுகிறுன். எ - று. (சஉ)

வேழமின்பிடிபோலும்விளங்கிழா
யாழிசேர்மணங்குலக்கேற்பதோ
சூழியானையமன்னர்தொழிலென்றான்
மாழைமான்விழிமாதுமிதுசெய்தாள்.

(இ - புணை.) பிடியானையினைப்போன்ற பெண்ணே! காந்தருவவிவாகம் நம்முடைய குலத்துக்கேற்றதோ? அது முகபடாமணிந்த யானைனையுடைய அரசர்க்குரிய தொழிலாயிற்றே என்றனன். அவனப்படிச் சொல்லியும் பொன் மானைப்போன்ற கண்களையுடைய அம்மாது பின்னரும் இதனைச்செய்தாள். எ - று. யாழிசேர்மணம்-காந்தர்வமணம். இது தலைவனும் தலைவியும் தனித் தவிடத்திற் ருமாகக்கலத்தல். மாழை-பொன். (சக)

காமபாணங்கலக்கக்கருத்தழிந்
தாமதல்லவிதென்பதறிவுறாள்
வாமமுன்கைவளைவினிற்பற்றியே
தூமமென்குழறேய்ந்திடர்தீங்கினள்

(இ - புணை.) காமபாணமானது கலக்குவதினுலே இது செய்வது இது விலக்குதென்பது உணராமற் கருத்தழிந்தவளாய், அவனுடைய அழகிய முன்கையைப்பற்றி யிழுத்துப் பலாத்காரமாகப்புணர்ந்து தனது காமத்துன் பம் நீங்கினுள். எ - று (சச)

வன்பிலன்னவள்புல்லவுமைந்தனு
மின்பமுற்றிலனின்னலுற்றேதுவான்
முன்பயந்தகந்தாதையர்முன்சென்று
துன்பமுற்றதொடர்பையுணர்த்துவான்.

(இ - புணை.) அவள் இவ்வாறு பலாத்காரமாகப் புணர்ச்சிசெய்யவே அவனிண்டமுருமல் துன்பங்கொண்டு சொல்லுகிறுன். முன்னைத் தம்மிருவ்னா யும் பெற்ற பிதாக்களிடத்திற்போய்த் துன்பமடைந்த இத்தச்சங்கதியைச்சொ ல்லுதற்கு, எ - று. (சஎ)

வருதியென்னெனுமென்றவழிக்கொளா
வரிதினீனிடைநீக்கியகனகர்
பரிதியன்னதன்ரூதைதன்பான்மரீஇச்
சுருதிநூல்வல்லமேதான்றல்சான்ரனரோ.

(இ - புணர்.) பெண்ணே! என்னுடன் வருவாயென்று கடந்து அரிய மார்க்கத்தைக் கடந்துபோய் விசாலமுள்ள நகரத்தையடைந்து, சூரியனைப் போன்ற தன் தகப்பனிடத்திற்சேர்ந்து, வேதமுணர்ந்த அந்தப்பிராமணச்சிறுவன் சொல்லுகிறான். எ - று. (சசு)

நஞ்சையொத்தவிதர்ப்பத்திறைநவில்
வஞ்சகத்துருவஞ்சமரீயதும்
பஞ்சினிற்றிகழ்சிறடிப்பாவைகண்
உஞ்சலித்தவிலாயிழையானதும்.

(இ - புணர்.) விஷத்தையொத்த விதர்ப்பதேசத்து அரசன்சொல்லிய வஞ்சகத்தினால் வஞ்சவேஷங்கொண்டு தாங்கள் சென்றதையும், சீமந்தனி தன் பூசைசெயதலினால தனதுணவன பெண்ணனதும, எ - று. பஞ்சினியிற்றிகழ்சிறடிப்பாவை-செம்பஞ்சுக்குழம்புடன் விளங்கும் பாதத்தையுடைய சீமந்தனி. (சஎ)

அழுதுகூறினனன்னனையாவையும்
பழுதிலாதவன்ரூதையப்பாவையாற்
தொழுதுலகத்தவன்ரூதைக்குச்சொல்லலு
முழுதுங்கேட்டவன்மொய்ம்பொடுசீறியே.

(இ - புணர்.) அழுதுகொண்டு சொன்னன், அவன் சொன்னதை யெல்லாம் குற்றமில்லாத தந்தை கேட்டுப் பெண்ணுருவான பிராமணனுடைய தகப்பனிடத்திற்போய்ச்சொன்னன். அந்தச்சங்கதியெல்லாங் கேட்டவன் மிகுந்த கோபங்கொண்டு, எ - று. (சஅ)

காயநதமவருஞனம்மாயகனனமறழா
வாய்ந்தசிந்தையனல்லவைசெய்திடும்
வேந்தன்முன்னர்விரைந்துசென்றேமைமந்தன்
போந்தவாறும்புகுந்ததுமோதியே.

(இ - புணர்.) வெதும்பிய வெவ்வியசினத்துடன்மனங்கொதித்தெழுந்து ஆய்ந்த சித்தத்தையுடைய அப்பிராமணன் தகாத காரியத்தைச்செய்த அரசனிடத்துக்குப்போனமுறைமையும் அதன்பின் கோரிட்டமுறைமையினையுஞ் சொல்லி, எ - று. (சக)

வேறு.

ஆதலாருன்பொருள்விரும்பினரடைந்தா
லீதலதுவன்றிநிதியில்லையகல்வீரென்
றோதனிலையன்றியுளுலோபகபடத்தான்
மாதயருழப்பவிடன்மன்னவவழக்கோ.

(இ - புணை.) அரசனே! இரப்பவர்கள் பொருளை விரும்பி உன்னிடம் வந்தால், கொடுக்கவேண்டும்; அல்லது என்னிடத்தில் பொருளில்லையென்று சொல்லவேண்டும்; இவ்விரண்டு செய்கையு மில்லாமல் நீ உலோபத்தன்மையுள்ள கபடத்திலுல் இரப்பவர்கள் மிகுந்த துயரத்தை யடைய விடுதல் மன்னவர்கள் முறைமையோ? எ-று.

ஈசன்விரதத்தினையியற்றுமவடனபா
னீசர்புரிதீமைசெயுநீதுயருறுமே
மாசின்மறையோதியமகற்கிதுவினைத்தாய்
சீசினினைமன்னவர்சிரிக்கவசைகொண்டாய்.

(இ - புணை.) சிவவிரதம் அனுஷ்டிப்பவளிடத்தில் நீசர் செய்கின்ற பாபச்செய்கையைச் செய்வித்த நீ துன்பம் அடையாமல், குற்றமற்ற வேதங்களையோதியுணர்ந்த என்புத்திரனுக்கு இப்படிக்கொத்த தீமையை உண்டாக்கினை, சீசீ யென்று அரசர்கள் உன்னைக்கண்டால் சிரிக்கும்படி வசை தேடிக்கொண்டாய். எ - று. (௬க)

புத்திரனில்லாதவர்கள்பொன்னுலகெய்தாரென்
னித்தகையபுத்திரனையீன்றினிநமக்கே
யுத்தமவரும்பதமுமுண்டெனமதித்தேன்
றமழித்தகரகச்சிறையிலிட்டாய்.

(இ - புணை.) புத்திரபாக்யமில்லாதார் சுவர்க்கலோகத்தை யடையார்களென்று கல்விகேள்விகளாற் பெருமையுடைய இந்தப்புத்திரனைகாம்பெற்று இனி நமக்கே அரியதாகிய நல்லபதமும் உண்டென்று மதித்துக்கொண்டிருந்தேன். என்னுடைய எண்ணத்தைக்கெடுத்து நரகமாகிய சிறையினிடத்திலிட்டனையே. எ - று. (ருஉ)

மைந்தன்மணநல்லணிகள்கண்டுமகிழ்வெய்து
மிந்தவிழியாலிவனதிவ்வுருவுகாண
முந்தைவினையோவிதுமுடித்ததுகொலென்னுச்
சிந்தையலமந்தலறிமீட்டுமுரைசெய்தான்.

(இ - புணை.) புத்திரனுடைய கல்ல மணக்கோலத்தைக்கண்டு மகிழ்ச்சியடையத்தக்க இக்கன்னனால் இவனுடைய இத்தப் பெண்ணுருவைக் காணுதற்குப் பழைவினை இவ்வகை விளைந்ததோ? அல்லது முற்பிறப்பிற்செய்தவிதானிப்படிமுடித்ததோ! என்று மனமானது சுழலும்படி அழுது மறுபடியுஞ் சொல்லுகின்றான். எ - று. (நகூ)

இவ்வுருவெடுத்திவனிருப்பனினியாதும்
அவ்வையுமனத்துயர்பொறுத்தலரிதம்மா
கவ்வையுடலத்திலுயிரித்தலைகழிப்பேம்
பவ்வவுலகத்தவர்பழிக்கவுனையென்றான்.

(இ - புணை.) இத்தப்பெண்ணுருவெடுத்து இவனிருப்பதினால் இனிநாணும் இவனுடையதாயு மனவியாகூலத்தைச் சகிப்பதரிதாகும். (ஆதலினால்) சமுத்திரஞ் சூழ்ந்த இந்த வுலகத்திலுள்ளவர் உன்னைப்பழிக்கும்படி தன்பத்துக்கிடமாகிய சரீரத்திலிருக்கு முயிரை உனக்கெதிரிலே யொழித்துவிடுகிறேமென்று சொன்னான். எ-று. அவ்வை-தாய், கவ்வை-துயர், பவ்வம்-சமுத்திரம். (நஉ)

சொல்லியமொழிக்கனல்செவித்தொளைவெதுப்ப
நல்லுரைகொடுக்கவறியானடுநடுங்கிச்
சல்லியமுறைதப்பமருமங்கிழிதரச்சாய்
வல்லியமெனப்புவியின்மன்னவன்விழுந்தான்.

(இ - புணை.) இவ்வாறு அந்தப்பிராமணன் சொல்லிய தீச்சொற்கள் தனது காதின்றொளையைச் சுடுதலினால் பிராமணனுக்கு நல்லவார்த்தை சொல்லத் தெரியாதவனுய் நடுக்கல் கொண்டு, முள்ளம்பன்றி கிழிக்க மார்புபிளக்து விழுகின்ற புலியைப்போல அத்தராசன் மண்ணில்விழுந்தான். எ - று. சல்லியம்-முட்பன்றி. வல்லியம்-புலி. (நஙி)

வீழ்ந்தவன்மனத்தையிதுவெய்யசுடர்வேற்போற்
போழ்ந்திடவெருக்கொடுபொருக்கெனவெழுந்தாங்
காழ்ந்தவிரதத்திருவினற்புதம்வழுத்தாத்
தாழ்ந்தனன்முனித்தலைவர்தம்மொடிதுசொன்னான்.

(இ-புணை.) அப்படி விழுந்தவனுடைய மனதைப் பிராமணன் சொன்னவார்த்தையானது கொடிய சுடர்வேற்போலப்பிளப்பதினால், அச்சங்கொண்டு வினைவில் எழுந்து முதிர்ந்த விரதத்தையுடைய சீமந்தனியின் அற்புதமான செய்கையைப் புகழ்ந்து வணங்கி, முனிச்சிரேஷ்டர்களுடன் இச்சேதியைச் சொல்லுகிறான். எ - று. (நசு)

கேட்டயலிருந்தமுனிவீரிஃ்துகேண்மி
ணைட்டமொருமூன்றுடையநம்பினவழுத்தும்
வாட்டமிறவத்தினண்மநிக்தபடிமாதாய்க்
காட்டியதுபாவமொருகட்டுரையுமுண்டோ.

(இ - புனை.) வந்தபிராமணன் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு என் னருகிலிருக்கும் முனிவர்களே! நான்சொல்லுமிந்த மொழியையுங் கேளுங்கள், திரிசேத்திரங்களையுடைய பரமசிவனைத் துதிசெய்கின்ற தவறுதலில்லாத தவ நெறியையுடைய சீமந்தனி தன்மனதில் பாவித்தபடி இந்தப்பிராமணன்மகன் பெண்ணுருவமானது என்பாவமே யல்லது வேறுசொல்ல ஒரு கட்டுரையு முண்டோ? எ - று. (இ)

வந்தமறைமாணிபெறுவல்லுருவொழிப்பா
னெந்தவழிமாதவமிபற்றிடுவன்யானீர்
அந்தவகையோதுகெனவாங்கரசுரைப்பப்
பந்தமில்பாத்துவசமாமுனிபகர்ந்தான்.

(இ - புனை.) வேதங்களுணர்ந்த பிரமசாரியாகிய பிராமணச்சிறுவன் அடைந்த மாதுருவத்தையொழிக்க, நான் எந்தமுறைமையினால் பெரியதவத் தைச்செய்குவேன், நீங்கள் அந்தவகையைச் சொல்லுங்களென்று அரசன்சொ ல்ல; பாசங்களையொழித்த பாரத்துவாசமுனிவர் சொல்லுகின்றார். எ - று மாணி-பிரமசாரி. (உ)

கண்ணுதல்கழற்றுணைகருத்துறவழுத்தும்
புண்ணியர்தருக்குமிவிரதத்தினதுபொற்பும்
விண்ணுலகினிற்பழவிரிஞ்சன்முதலோர்முன்
மண்ணுலகினிற்சிறியமானிடர்கொலோர்வார்.

(இ - புனை.) பரமசிவனுடைய உபயதிருவடிகளுஞ் சித்தத்திற் பொருந் தும்படித் துதிசெய்யத்தக்க புண்ணியர்களுடைய களிப்புக்கொள்ளும் விரதத் தின் பெருமையைப் பழமையான பிரமன் முதலாகிய தேவர்களும் அறியமாட் டார்களென்றால், இம்மண்ணுலகிலிருக்கு மானிடர்களோ அறியத்தக்கவர் கள். எ - று. (ஊ)

வேறு.

எப்பாதகஞ்செய்திபினைப்பரிசுற்றுளோருஞ்
செப்பாரிளங்கொங்கைமனோன்மணியீசனேவி
துப்பார்மலர்ச்சேவடிபோற்றித்துதிப்பாயிற்
றப்பாமலெய்துங்கதிதீமைதணந்துபோமால்.

(இ - புணை.) எவ்விதமான பாதகங்களைச்செய்து பின்பு எந்தத்தன்மை யை அடைந்தவர்களும் செப்புபோலும் திருத்தனங்களையுடைய மலைன்மணி யாரான அம்பிகையாருடைய பவளம்போலும் திருவடிகளைத்துதிசெய்வார்களா னல், தவறுபடாமல் நல்லகதிகிடைக்கப்பெறுவர்; தீமையும் நீங்கிவிடும். எ-று.

வெங்காரிருள்பா லுவிளங்கவொதுங்குமாபோற்
கொங்கார்குழற்பார்வதியேழுலகுங்கொடுத்தான்
மங்காதவன்பின்வழிபட்டவர்தங்கண்மாட்டுத்
தங்காதுதீமையிதற்கேமறைசான்றுவேந்தே.

(இ - புணை.) சூரியன் உதயமானுல் மிகுந்த கருமைநிறமுள்ள இருள் நீங்கிவிடுதல்போலப் பதினன்குலோகங்களையுமீன்ற இயற்கையான வாசனை யுள்ள அளகத்தையுடைய பார்வதிதேவியாரைக் கெடுதலில்லாத அன்புடன் பூசைசெய்தவர்களிடத்தில் யாதொரு பொல்லாங்குந் தங்காது. அரசனே! இத ற்கே வேதஞ்சாக்ஷியாயிருக்கின்றது. எ-று. கொங்கு - வாசனை. (கூக)

ஆணவதன்பமனக்கோட்டமகற்றிஞானக்
காணுர்குழலம்மையைநாடிக்கருத்தின்வைத்துப்
பாணினிரவினிம்மந்திரம்பற்றியோதி
நாணுவிதமாம்வழிபாடுநயந்துசெய்வாய்.

(இ - புணை.) அரசனே! தேவிபூசை யித்தன்மையுடையதாதலால், நீங் காத தன்பமுள்ள மனதிற் பற்றியிருக்குங் காமமுதலாகிய குற்றங்களைநீக்கி, ஞானமாகிய வாசனைதங்கிய அளகபாரத்தையுடைய உமையம்மையைப் பாவ னைசெய்து, சித்தத்தில்வைத்துப் பாதிராத்திரிப்பொழுதில் இந்தமந்திரத்தை இடைவிடாதுஉச்சரித்துப் பலவிதமான பூசையும் அன்புடன் செய்வாயாக.

என்னுமுனிவனுமைமந்திரமீதென்றீந்து
நன்னயகிதன்றிருக்கோயிலினுளும்வைகிப்
பொன்னுரமார்பபுரிபூசனையென்னலோடுங்
கொன்னுளும்வேலானிமவான்மகள்கோயில்புக்கான்.

(இ - புணை.) பாரத்துவாசமுனிவ ரிவ்வாறு சொல்லி உமையம்மை மந் திரத்தையும் உபதேசித்துப் பொன்னுரமணிந்த மார்பனே! பார்வதிதேவியா ருடைய ஆலயத்திற்போயிருந்து நாடோறும் பூசைசெய்யென்று சொல்லவும், அந்த வலிபெற்ற வேற்படையினையுடைய அரசன் பார்வதியார் கோயிலிற்போ ன். எ - று. கொன் - வலிமை. (கூங)

பொறியைந்தமாற்றிப்புலனும்மவையோடுபோக்கி
நெறிநின்றசிந்தைநிருபனருட்டொண்டுபூண்டு

மறியொன்றுசெங்கைவாதன்றிருத்தேவிபூசை
பிறிதன்றிக்கங்குலொருமூன்றவண்பேணலோடும்.

(இ - புணை.) ஐம்பொறிமாற்றி அவற்றுடன் ஐம்புலன்களையுமொழித்து கன்னெறியினின்ற சிந்தையையுடைய அரசன் வரம்பெறுதற்கேதுவான அடிமைத்திறம்பூண்டு, மானேந்திய திருக்கரமுள்ள பரமசிவனுடைய சிறந்ததேவியாராகிய உமாதேவிபூசையினை யாதொருகுறைவுமில்லாமல் அந்த ஆலயத்தில் மூன்றுநாள் செய்யவும், எ - று. மறி - மான். (சுச)

அற்றைப்படுகங்குலினம்மையுமுண்மகிழ்ந்து
கொற்றச்சுடர்வேலினைறவன்மூனங்கோடிகோடி
கற்றைக்கதிர்வெண்மதிபோனிழன்மேனிகாட்டப்
பொற்றைத்திருக்கோயிலுணின்றும்புறம்படுவந்தாள்.

(இ - புணை.) அந்த மூன்றுநாளிரவில் பார்வதியார் திருவுள்ளமகிழ்ந்து அவ்வரசனுக்கெதிரில் நிறைந்த வெண்கதிரையுடைய அநந்தங்கோடி சந்திரர்கள்போல ஒளிவிளங்கும் திருமேனியோடு தரிசனங்கொடுக்கப் பொன்மலை போன்ற திருக்கோயிலின் புறத்துவந்தாள். எ - று. பொற்றை - மலை. (சுடு)

வந்தாளவணங்கிவழுத்தியமன்னர்மன்னன்
மூந்தாகுலந்தீர்ந்தனமென்றுளமுன்னிநின்று
னந்தாவிளக்கேயன்டார்கணையந்தபொன்னே
சிந்தாமணியேசிறியேன்றுயர்தீர்த்தியென்றான்.

(இ - புணை.) அந்த வரசன் தனக்குத் தரிசனங்கொடுத்த பார்வதிதேவியைத் தொழுது நம்மூடைய துயரந்தீர்ந்தோமென்பதாக எண்ணங்கொண்டு நின்று, கெடாத ரத்தின தீபமே! பரமசிவனுடைய இடப்பாகத்தை விரும்பியதாயே! அடியார்க்குச் சிந்தாமணிபோன்றவளே! எளியேனுடைய துயரத்தைத் தீர்த்தருளென்றான். எ - று. (சுசு)

அன்புற்றிரக்குமரசேயினியஞ்சனெஞ்சி
னின்புற்றதேதுபுகலாயென்றிறைவிகேட்பத்
துன்பற்றவிந்தமறையோன்சிறுதேதான்றல்வேட
முன்பிற்றிகழ்வருளென்றனன்மூரிவேலோன்.

(இ - புணை.) இவ்வாறு வரங்கேட்பவனைநோக்கி அன்புடையவனைய்த் தரிசெய்கின்ற அரசனே! இனிபயப்படாதே உன்மனதிலுள்ளான விருப்பம் யாதென்று பார்வதிதேவியார்கேட்க; வலிய வேற்படையையுடைய மன்னவன் துன்பம் அடைந்திருக்கும் இந்தப்பிராமணப் பிள்ளையானவன் முன்போல

ஆணுருவம் அடையும்படித் தாயே! அருள்செய்யென்று விண்ணப்பம்பண்ணினான். எ - று. (சுஎ)

பருவத்தொருகோடிதவத்துளம்பற்றிணுலும்
நிருபற்கிறைகேளெனதன்பர்நினைந்தபான்மை
யொருவர்க்குமெம்மீசர்தமக்குமொழிக்கலாமோ
தருகுற்றணம்வேறுளகேளெனத்தையல்சொன்னுள்.

(இ - புனை.) அரசனே! கேட்பாயாக; ஒருகோடிவருஷம் தவத்திலிருந்தாலும் என்னன்பர்கள் நினைத்ததன்மையை எம்மிறைவருக்கும் மற்றயாவருக்கும் ஒழிக்கமுடியுமோ? ஆதலால், வேறெவரங்கேள்தருகிறேனும் என்று பார்வதிதேவியார் சொல்லியருளினார். எ - று. (சுஅ)

நல்லாயிவண்மைத்தனையின்றிநவையுறுமம்
மில்லாள்வயிற்றின்னுமோர்மைந்தனையீதியென்று
சொல்லாமுன்றந்தனமென்றுனைசொல்விக்கோல
வில்லார்நுதலாளிதமீட்டும்விளம்பலுற்றுள்.

(இ - புனை.) தாயே! இவன்புத்திரரின்றித் தன்பப்படாமல் இவன் மனைவியிற்றினிடமாக இன்னுமொரு புத்திரனை அருள்செய்யென்று அரசன் விண்ணம்பஞ்செய்வதற்குமுன் அப்படியே கிருபைசெய்கிறேனென்று சொலலி, அழகிய வில்லையொத்த நெற்றியையுடைய பார்வதிதேவியார் மறுபடியும் இந்த வார்த்தை யருளிச்செய்கின்றார். எ - று. (சுக)

மயிலொத்தசாமவதிதன்னையிம்மைமந்தனுக்கே
பயில்வுற்றவேதவிதியேமணம்பண்ணுவிப்பாய்
வெயிலொத்தவேலோயெனச்சொல்லிவிரைவினேகிக்
குயிலொத்தமென்சொல்லுமையாடிருக்கோயில்புக்காள்.

(இ - புனை.) வெயில்போலுங் காந்திபரப்பும் வேலினையுடைய அரசனே! மயிலையொத்த சாயலையுடைய சாமவதியென்னு மிந்தமாதினை வழங்கப்படுகின்ற வேதவிதிப்படி இந்தப் பிராமணப்பிள்ளைக்கே விவாகஞ்செய்விக்கக் கடவை என்று சொல்லி, குயில்போலும் வசனங்களையுடைய பார்வதிதேவியார் விரைவுத் திருக்கோயிலுக் கெழுந்தருளினார். எ - று. (எ0)

வெங்கோபயானைவிறன்மன்னன்வியந்துசாலப்
பொங்கோதவேலைப்புவிபோற்றவிப்பூவைதன்னை
சங்கோதவிம்மமறைமாணிதனக்குநல்கிக்
கொங்கோதியோடுமெனைவாழ்க்கைகுறித்துவாழ்ந்தான்.

(இ - புணை.) இவ்வாறு சொல்லிய பார்வதிதேவியாருடைய திருவாக்கைக்கேட்ட வெவ்விய யானைப்படையினையுடைய அவ்வரசன் மிகவும் சந்தோஷித்து, மிகவும் பொங்குகின்ற கடல்வளைந்தஇவ்வுலகத்திலுள்ளவர்கள் வாழ்த்தவும் சக்கரதானஞ்செய்யவும் சாமவதியென்பவளைப் பிரமசாரியாகிய பிராமணனுக்கு விவாகஞ்செய்வித்துத் தன்மனைவியினுடன் இல்லறம்வழுவாமல் வாழ்ந்தான். எ - று. (எக)

துயருற்றதாதைமனையாளொடுசோகநீங்கி
மயர்வற்றகேள்விமகப்பேற்றினிதுழிவாழ்ந்தான்
அயர்வுற்றமன்னன்மகிழ்வோங்கியனந்தகாலம்
உயர்வுற்றசெங்கோலினிதாச்சியுலகையாண்டான்.

(இ - புணை.) அதன்பின்பு தன்புத்திரனைக்குறித்துத் துன்பம் அடைந்ததகப்பனுகிய பிராமணனும் அவன்மனைவியும்துயரம்நீங்கி, மயக்கமில்லாத கேள்வியையுடைய புத்திரனைப்பெற்று நெடுங்காலம் இனிதாகவாழ்ந்தார்கள். சோர்வுற்ற அரசன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு மேன்மைதங்கிய செங்கோலினிதாகச்செலுத்தி அனந்தங்காலம் உலகத்தையாண்டனன். எ-று. மயர்வு-மயக்கம்.

மாயாதஞானவரதனடிவாழ்த்தமன்பர்க்
கேயாதனவுமுளவோவென்றியம்பியேத்தித்
தேயாதசைவநெறிச்சூதன்றெரிந்துகூற
ஓயாதுவாழ்த்தமுனிவோர்நெஞ்சுவகைபூத்தார்.

(இ - புணை.) நிலைபெற்ற ஞானசொரூபராகிய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்யும் அடியார்களுக்குக் கிடையாதபொருள்களுமுண்டோ? என்றுசொல்லித்துதித்து, அழிவுபடாதசைவசமயநெறியையுடையசூதமுனிவர் தெரிந்துசொல்ல, அதைக்கேட்ட நைமிசாரணியமுனிவர்கள் இடைவிடாமல் வாழ்த்தி மனமகிழ்ந்தார்கள். எ - று. (எசு)

ஒன்பதாவது சீமந்தனிபாவனைசெய்த அத்தியாயம் முற்றியது.

ஆ திருவிருத்தம் நிகஎ.

பத்தாவது

சிவயோகமகிமையுரைத்த அத்தியாயம்.

சீர்பெறுசித்திரவேள்விமுனித்தவர்தீவினையற்றிடநீள்
கார்விடமுற்றணியானகளத்திறைகாலன்வெருக்கொளவே
பாரினுதைத்தவர்தாளவழுத்தியபான்மையர்பெற்றவெலாஞ்
சோர்வறவுத்தமகூறுகெனக்கதைசூதனுரைத்தனனே.

(இ - புனை.) சீர்பொருந்திய சிறந்த யாகஞ்செய்யும் தவசிகளாகிய முனிவர்கள் சூதமுனிவரைவணங்கி, உத்தமரே! எங்கள் தீவினைகளெல்லாம் நீங்கும்படி மிக்க கருநிறந்தங்கிய விஷபானஞ்செய்து அழகுபெற்ற கண்டத்தையுடைய இறையவரும் யமன் பயங்கொண்டு பூமியில் விழும்படி யுதைத்தவருமாகிய பரமசிவனுடைய திருவடிகளைத்துதிசெய்த அன்பினையுடையவர்கள் அடைந்த பேறுகளையெல்லாம் சோர்வில்லாமல் அருளிச் செய்யவேண்டுமென்ன; அந்தச் சிவசரித்திரத்தைச் சூதமுனிவர் உரைப்பாராயினர். எ - று.

காதனுருத்திரனுதியினித்தறனாலமர்ந்தத்துவும்
மேதினியிற்சிறுமானிடர்முத்தியின்மேவமறைப்பொருணூ
லோதியதத்துவநீதிவிகற்பமுமோகைகொள்பத்தர்கள்பால்
ஏதமில்சித்தாலீலவினோத்சதுமயாவருரைக்கவலார்.

(இ - புரை.) காதனுகிய ருத்திரமூர்த்தியானவர் பூதியிலே இத்தச்சிறந்த வுலகத்தைச் சிருட்டித்தத்துவும், இவ்வுலகத்திலிருக்கும் சிறுமானிடர்கள் மோக்ஷத்திற்பொருந்த வேதப்பொருளாகிய சாம்பவமூர்த்தி வேதநூல்களிற் சொல்லிய தத்துவநீதியின் விகற்பமும், மகிழ்ச்சியுடைய அன்பர்களிடத்தில் குற்றமில்லாத வினோதமான திருவிளையாடல் செய்ததும், யாவர்தெரிந்துசக்கவர்கள். எ - று. (உ)

ஆயினுமெற்குவியாதனுரைத்தமையாதரவத்துடனே
மேயமுனித்தலைவோர்கள்செவிப்புலன்மேவவுரைக்குவனற்
றாயனவிக்கதைபாவவனத்திரள்சூறைபடச்சுடவே
சேபோல்வனவற்புதகாரணமுற்றிடுமால்.

(இ - புரை.) முனிசிரேஷ்டர்களே! சிவசரித்திரம் அருமையுள்ளதா யிருந்தாலும் வியாசமுனிவர் எனக்குச் சொன்னவைகளை உங்கள் காதுகளிற் பொருந்தும்படிச்சொல்லுகிறேன்; தாய்மையதாகிய இந்தச் சிவசரித்திரம் விருப்பமுள்ளவர்களுடைய பாவமாகிய காடுகள்அழியும்படித் தீய்த்தக்காயும் தீச்சிகைபோல்வனவாகும், அற்புதமுள்ள காரணங்களும் அமைந்திருக்கும். எ - று.

டந்தியினஞ்செறிபொங்காவந்தியின்மந்தரனென்றொருபே
ரந்தணன்முன்புளன்வண்கனகங்களனந்தமிகுந்தமையாற்
சுந்தியும்வந்தனையுஞ்செபமுங்குலதந்திரமும்பிறவுஞ்
சிந்தைமறந்திழியுங்குலமங்கையர்கொங்கைதினம்புணர்வான்.

(இ - புரை.) வானரக்கூட்ட மிகுந்துள்ள சோலைசூழ்ந்த அவந்தி தேசத்தில் மந்தரனென்கிற பெயருள்ள ஒருபிராமணன் முன்னமிருந்தான்; அவனுக்கு வளப்பம்பொருந்திய திரவியங்கள் அனந்தமாக இருந்ததினால் சந்தியாவந்தனத்தையும் சிவார்ச்சனையையும் செபத்தையும் தன்குலத்துக்குரிய கருமங்களையும் மற்றுமுள்ளவைகளையும் மனதிலும் நினையாமல் மறந்து, இழிவான சாதியிலுள்ள குலமாதரைத் தினந்தோறும் புணருவானாயினன். எ - று. (சு)

எக்குலமங்கையரெத்தொழினின்றவிழிப்பினென்றுணரான்
மைக்கண்மடந்தையருற்றனரென்றமகிழ்ச்சியினங்கவர்பாற்
றுய்க்குமரும்பதமட்டினறுந்தசைதொப்பிகள்கண்டவெலா
மொக்கவிருந்துகளிப்பினருந்தியுளத்தின்மகிழ்ந்திடுவான்.

(இ - புரை.) இவர்கள் எந்தச்சாதிமாதரோ எவ்விதத் தொழில் செய்கின்ற இழிவுள்ளவர்களோ என்று ஆராய்ந்து பாராதவனாய், மையணிந்த கண்களையுடைய மாதர்கள் கிடைத்தார்களென்கிற மகிழ்ச்சியினால், அவர்களிடத்தில் உண்ணுதற்குரிய அன்னமும் அளவிலாத மாமிசமும் பலவிதமான கள்ளும் இவ்விதமாகக் கண்ணினாற் பார்த்தவைகளையெல்லாம் அம்மாதர்களுடனிருந்து களிப்புடனுண்டு, தன்னுள்ளத்தின் மகிழ்ச்சியடைவான். எ-று. தொப்பி-கள்.

கங்கைபிளங்கொடிபிங்கலியென்றமடந்தையுடன்புணரா
வங்கவள்குங்குமகொங்கைமுயங்கியழித்தவசம்பெறலா
லிங்கிதனன்செயலன்றிதுபுன்செயலென்பதுளங்கருதான்
கங்குலுநண்பகலுங்களிகொண்டுகலந்துமயங்குறுவான்.

(இ - புரை.) மங்கைப் பருவமுள்ளவளா யிளங்கொடிபோன்ற பிங்கலியென்கிற பெயரையுடைய மாதுடன்சேர்ந்து, அவளுடைய குங்கும மணிந்துள்ள ஸ்தனங்களிற்புணர்ந்து, அந்த வின்பத்தினால் அறிவழிந்து, பரவசப்படுவதினால், இதுகல்லசெய்கையென்றும் இது தீச்செய்கையென்றும் மனதில்அறி

யாமல் இரவும் பகலும் களிப்புள்ளவனுய்ச் சேர்ந்து, மயங்கிக் கொண்டிருப்பான். எ - று. (சு)

வேறு.

டரைவருநஞ்சணிகளகந்தரனருள
புனையுஞ்சிவதவமொன்றியபுனிதன்பயமறவே
விஜனையொன்றறநிலைநின்றிடுவிரதன்பெயர்விடபன்.

(இ - புனை.) ஒலிக்குங் கடலிலுண்டான விஷந்தங்கிய காளகண்டத்தையுடைய பரமசிவனது கிருபையைப்பெற்ற சிவதவம் பொருந்திய பரிசுத்தனும், பிறவிக்கும்பட்டி அறிவடங்கிய துரியாவஸ்தைபோல சாக்கிராவஸ்தையிற் பொருந்திய மதியினுற் றற்செயலென்ப தொன்றுமில்லாமல் நீக்கத்தக்கதாக நிலைதவருமலிருக்கின்ற விரதமுள்ளவனும், விடபனென்னும் பெயருள்ளவருமாகிய ஒருசிவயோகியானவர். எ - று. துரியாவஸ்தையில் ஆன்மா தங்கினபோது ஒன்றுந் தோன்றுமலிருப்பதுபோல சாக்கிராவஸ்தையிலும் தத்துவவியாபகமின்றிச் சிவத்துடன் கலந்திருத்தலால், "விஜனையொன்றற நிலைநின்றிடுவிரதன்" எனக்கூறினர். சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்பன ஐவகை அவஸ்தைகள். (எ)

வந்தானிவருறையுந்திருமனைமுன்றினின்வரலுங்
கொந்தார்குழலவளோடுமிம்மறையோனெதிர்குறுகி
முந்தாவுபசாரங்களுமுறையின்பயிலுதவிச்
சந்தார்துகண்மலரொன்றியசயனத்திடலையா.

(இ - புனை.) மேற்சொல்லிய பிராமணனும் அவனுடைய மனைவியும் வாழும் வீட்டின் முற்றத்தில் வந்தார். அவ்வாறு வரலும், கொத்தாகிய மலர்களணிந்த அளகபாரத்தையுடைய தன்மனைவியுடன் இந்தப்பிராமணன் சிவயோகிக்கெதிரிற் சென்று, முறையின்படி உபசாரங்கள் செய்து, அழகுபொருந்திய மகரந்தம் நிறைந்த மலர்பரப்பிய ஆசனத்தி லிருக்கச்செய்து, எ - று. உபசாரங்கள் அருக்கிய பாத்திய ஆசமனங்கள். (அ)

சேதாவினரும்பாலொடுதேமாங்கனிபழனும்
நாதாநுகருதியென்றவர்களிநீரொடுநல்கிப்
போதார்மலர்தூவிக்குளிர்சந்தம்புனைவித்தங்
கோதாமுகமன்கூறிவெள்ளிலபாகுடனுதவி.

(இ - புனை.) அவர்கள் கல்ல பசுவின்பாலும் மதுரமுள்ள மாம்பழமும் நாதனே! உண்ணென்று கொடுத்தபின்பு, குளிர்ச்சி தங்கிய சலமும் கொடு

த்து மலரால் அருச்சித்துச், சேதளமுள்ள சந்தனமணிந்து, ஸ்வஸ்திவாசகம் நல்ல உபசார வார்த்தைகளுஞ் சொல்லி தாம்பூலமுங்கொடுத்து, எ - று. (க)

அற்றைப்படுகங்குறபொழுதகலுந்துணையளவுங்
கற்றைக்குழன்மடவாளொடுகலிமாமறையவனும்
பற்றற்றமுனித்தேவிருபாதத்துணைவருடச்
சிற்றச்சிறுகாலேமுனிசென்றுணிவுர்ந்நின்றார்.

(இ - புணை.) அன்று ராத்திரிமுதல் விடியற்காலவரையில் அதபபிராமணனும் அவன் மனைவியும் அம்முனிவருடைய இரண்டுபாதங்களையும் வருடிக் கொண்டிருக்கத்தயிலமர்ந்து, இருவகைப்பற்றும் நீங்கினவராகிய அம்முனிவர் உதயகாலத்துக்கு முன்னரே யெழுந்து போய்விட்டார். அவர்களிருவரும் தங்களிடத்திலேதானே யிருந்தார்கள். எ - று. இருவகைப்பற்று - உட்பற்றும் புறப்பற்றும். (ஒ)

பின்னும்மறையவனுஞ்சிறுபிறைவாணுதலவளு
மன்னுங்கழைமதனுந்துணைவியுமென்னமணந்தே
துன்னுஞ்சிலநாள்சென்றனதொடருந்பழவினையா
முன்னும்பினுமாயங்கவரிருவோருமுழுடிந்தார்.

(இ - புணை.) பின்னும் அப்பிராமணனும் சிறியபிறைபோலும் ஒளிதங்கியநெற்றியையுடையவளும் கரும்புவில்லையுடைய மதனும் ரதியும்போல இன்பமனுபவித்துக்கொண்டிருக்க, சிலநாள் சென்றபின்பு, பழவினைத்தொடர்ச்சியினால் முன்னும் பின்னுமாக அந்த இருவரு மிறந்துபோனார்கள். எ - று.

முடிந்தவேதியன்றருமமுநீதியுமுறைமையும்பிறழாது
கடிந்துமாமுகில்பொழிதரவளம்படுதசானனந்தனியாளுங்
கடிந்ததீவினைவச்சிரவாகுவின்காதலியுதரத்தி
னடைந்துகல்லுருத்தங்கியகருப்பமாயமர்ந்திடுமமையத்தில்.

(இ - புணை.) அவ்வாறு இறந்தபிராமணன், தருமமும் நீதியும் முறைமையும் மாறுபடாமல் மேகங்கள்மின்னி மழைபொழியும்படி வளப்பமுள்ள தசானன நகரத்தையாளுகின்ற பாவத்தைநீக்கிய வச்சிரவாகு வென்னும் அரசனுடைய மனைவியின் கருப்பத்தி லடைந்து, கல்லுருவத்தங்கிய கருப்பமாய்ப் பொருந்திய காலத்தில், எ - று. தனியாளுதல், ஐம்பத்தாறுதேசங்களையும் தனியொருவனேயாளுதல். தடிந்து-மின்னி. (எ)

கருப்பழுற்றவள்பின்வருந்தேவியரனைவருங்கனன்றீண்டி
விருப்பமாயவளகட்டுணைதருழவினைவினிவுசெய்குவமென்ன

உருப்பலல்லிடமுணவினேடனித்தனருண்டனலுதரத்தின்
நெருப்பையொத்துநின்றெரிந்ததுகரிந்ததுநிகரிலாளுருவம்மா.

(இ - புணர்) கருப்பம் அடைந்தவளுக்குப் பின்வந்த தேவிமார்கள் (மனப் பொருமையினால்) கோபங்கொண்டு எல்லாரு மொன்றுகச் சேர்ந்து, மூத்தவள் வயிற்றில் பொருந்திய சிசுவைக் கொன்றுபோடுவோமென்று ஆலோசனைசெய்தி, அவளுக்கு விருப்பமாய் ஆகாரங் கொடுப்பவர்போல் கொடியவிஷத்தைக் கலந்துகொடுத்தார்கள். அந்தவிஷம் அவள்வயற்றில் நெருப்பையொத்து எரிந்தது, அதனால் அவளுருவமுங் கரிந்தது. எ - று. அகடு- வயிறு. (உஉ)

உண்டவல்விடவெம்மையாற்பிணிபலவுதரத்துமுடன்முற்றுங்
கொண்டுமூழ்வினைப்பகுதியான்முடிந்திலள்சூழவியும்விளியாம
லண்டர்நாயகனருளினுலீன்றனளீன்றவுமழிநோயின்
புண்டனுண்மெலிந்தாற்றினார்சுமதியும்புதல்வனும்பொறுதந்தே.

(இ - புணர்). உண்டவிஷத்தின்வெப்பத்தினுல் வயிற்றிலும் உடல்முழுதிலும் பலவகையாகிய வியாதிகொண்டும், ஊழ்வினைப்பகுதியினுல் இறந்திலளாய்ப் பரமசிவனுடைய கிருபையினுல் இறவாமலிருந்த சிசுவையும் பெற்றுள். பெற்றபின்பு சுமதியென்னுந் தாயும் அவள் புதல்வனும் அழிநோயுள்ள புண்ணினுல் வருந்திச் சிக்கமாட்டாமல் அழுதார்கள். எ - று.

அந்தோ இரக்க இடைச்சொல் (உச)

இடைவிடாதிவரார்றிடுமோதைகேட்டிறையவனயர்வெய்தி
யடையும்வாகடர்தங்களோயிட்பிணியகற்றுதிரெனலோடு
மிடையுமாயுணாற்கல்வியான்வழிக்குலவிஞ்சையான்வினையத்தால்
உடையநண்மருந்தளப்பிலசெய்தலுமுறுபிணிதணியாதால்.

(இ - புணர்.) இவ்வண்ணமிவர்கள் இடைவிடாமல் அழுகிறவோசையை வச்சிரவாகுவென்னும் அரசன்கேட்டுத் துயரமடைந்து, வருகின்ற வயித்தியர்களைநோக்கி இந்தவியாதியை நீக்குங்களென்று சொல்ல; தாங்கள் ஆராய்ச்சிசெய்திருக்கின்ற வைத்தியசாஸ்திரப் பயிற்சியின் திறத்தினுலும் தங்கள் முன்னோர்கள் கற்பித்திருக்கும் கல்வியினுலும் உத்தியினுலும் செய்யப்பட்டிருக்கும் நல்ல அவுஷதங்கள் பலபலவாக கொடுத்தும், அப்பெரியபிணிதீர்ந்ததில்லை. எ - று. வாகடர் என்னுமொரு முனிவரால்செய்யப்பட்ட வைத்தியசாஸ்திரத்துக்கு வாகடமென்றுபெயர்; வைத்தியர்கள் அந்தசாஸ்திரத்தை வாசித்துணர்ந்தவர்களாதலால் அவர்களுக்கும் வாகடரெனப்பெயர் வழங்குவர்.

பிணிமுதிர்ந்திடவாகடரெங்களாற்பெயர்க்கரிதரிதென்ன
மணிபுனைந்தசார்மன்னவற்குரைத்தலுமன்னவன்மனக்கொள்வா

ணணிகொண்மேகலைமடவரலழுகையுமரும்பெறற்புதல்வன்ரூன்
றணிவிலாதரற்ரூதையுங்கேட்டிபரர்தனிவிழி துயில்கிற்பார்.

(இ - புரை.) ஈவத்தியர்கள் தங்களால் கூடியமட்டும் பார்த்தும் பிணி தீராமல் அதிகரித்ததினால் ரத்தினமாலையணிந்த அரசனைநோக்கி, இந்த நோயைத்தீர்க்க எங்களாலாகாதென்றுசொல்ல; அதைக்கேட்ட அவ்வரசன்பெறுதற்கரிய கம்முடைய புத்திரன் ஓயாமல் அழுகிறஓசையையும் அதைக்குறித்து அழுகுபொருந்திய மேகலாபரணமணிந்த கம்முடைய மனைவியானவள் அழுகிற ஓசையையுங்கேட்டு, யார்தான் நித்திரைசெய்வார்களென்று கருதி, எ - று. தனிவிழி - ஒப்பில்லாதகண் எனப்பொருளுரைத்துக்கொள்க. (கசு)

நோவினுலுயிரிறப்பநோவிறக்கிலரன்றியிந்நோய்நீங்கி
மேவுநல்லுருப்பெறுவரோபெறுகிலர்வினையையார்விலக்கிற்பார்
பாவகாரியரிவர்கமனுலையப்பழுகுகாற்ரூது
நாவினுலெடுத்தேதாதொணுகுறுகானிலத்தனில்வந்தார்.

(இ - புரை.) நோவினால் உயிரிறப்பார்களோவென்றூல், இறக்கிறதுமில்லை. அல்லது இந்த நோய்நீங்கி நல்லுருவத்தை அடைவார்களோ வென்றூல், அடைவதுமில்லை. அடையக்கூடாத வினையை எவர்கள் நீக்கிக் கொள்ளத்தக்கவர்கள், இவர்கள் மகாபாவிகள், நமனுடைய ஆலயத்திலிருக்கும் பழமையான நரகத்தில் வைத்தால் அதுவுஞ் சகிக்கமாட்டாது, ஆகையால் நாவினுலெடுத்துச் சொல்லவொண்ணுத கொடியநரகம் ஒன்றுண்டாகி யதில்விழும்படி யிவ்வுலகத்தில் வந்தார்கள். எ - று. (கஎ)

என்றுசிந்தையினவர்களையிகழ்ந்துமற்றினையாமனையரம்மாட்
டென்றுமன்பினுகிமற்றவர்நலனுண்டுவாழிகல்வேந்தன்
கன்றுநெஞ்சினன்சூதனைக்கூவியிக்கயத்தினையமகவோடும் [ன்.
இன்றுதேர்மிசைக்கொண்டுபோய்க்காட்டகத்திடைவிட்டுமீள்கென்ரூ

(இ - புரை) இவ்வாறு மனதிலெண்ணி அப்பிள்ளையையும் மனைவியையும் இகழ்ந்து, இளையமனைவியர்களிடத்தில் ஆசைபொருந்தி அவர்களுடைய இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அவ்வரசன், ஒருதினம் மூத்தமனைவியையும் புத்திரனையும் வெறுத்து, வெம்பிய மனதையுடையவனுய்த் தேர்ப்பாகனை அழைத்து, இத்தப்பாவியையும் இவள் புத்திரனையும் இன்று தேரிலேற்றிக்கொண்டுபோய்க் காட்டினிடத்தில் விடுத்து மீளுவாய்என்றனன். எ - று.

சூதன் - தேர்ப்பாகன். (கஅ)

விட்டுமீடியென்றுரைத்தலும்வலவனும்வேந்தர்வேந்துரைபேணிக்
கட்டுவாம்பரிக்கொடிநெடுந்தேர்மிசைக்கன்னியமகவோடும்

இட்டேன்னெனிகீந்திமூட்கானகத்திறக்கிவிட்டனன்மீண்டு
வட்டவாணிருஞ்புவனிகாவலவன்மூன்வந்தடியினைதாழ்ந்தான்.

(இ - புனை) இவர்களைக் காட்டில் விட்டுவாவென்று அரசன் சொல்லிய வார்த்தையைத் தேர்ப்பாகன் ஏற்றுக்கொண்டு, அவர்களிருவரையும் தாவிச்செல்லும் குதிரைபூட்டிய தேரின்மேலேற்றிக்கொண்டுபோய் கல்லமார்க்கத்தைக் கடந்து, மூள்ளுகளையுடைய காட்டிலிறக்கிவிட்டுவந்து, வட்டமாகிய சுழுத்திரஞ்சூழ்ந்த உலகத்திற் காவல்பூண்ட அவ்வரசன் பாதத்தில் வணங்கினான். எ - று. (கக)

அப்புறத்துவெங்கானிடைத்தமியளாயரும்பெறன்மகவோடும்
வெப்புறுத்துநோய்முதிர்வினனின்கதிர்வெதுப்பலாவிடரெய்தி
யெப்புறத்திணமலைகையுழுழுவையுமேனமுமிடர்செய்யச்
செப்பெனத்திரண்முலையினளொருசிறைசெல்லவும்வழிகாணாள்.

(இ - புனை.) தேர்ப்பாகன்போய்விட்டபின் செப்புச்சிமிழ்போல் திரண்ட தனமுடைய இராசஸ்திரியானவள் அந்தவெவ்வியகாட்டில் தனித்தவளாய் வருத்தப்படுத்துகிறநோயின்மிகுதியினாலும்சூரியகிரணவெப்பத்தினாலும்தாகமும் தன்புத்திரனும் தன்பமடைந்து, காலுபுறத்திலும் பேய்களும் புலிகளும்பன்றிகளும்தன்பப்படுத்த, ஒரு இடத்துக்குப்போகவும்வழிகாணாதவளானாள். எ-று.
இனன்-சூரியன். (கo)

அரியதாகியவிதியினைவெறுக்குநொந்தயர்வுறுமழுதெங்கும்
உரியகாதலன்கொடுமையைநினைந்துகண்ணுறுபுனலிடைத்தோயும்
விரியுநோய்பெறுதாற்றியகுழவிவாய்மென்முலையினைத்தூட்டும்
எரியினின்றுதன்னுடல்சுடுபசியினையிடருழந்திதுசெய்தாள்.

(இ - புனை.) அரியதாகிய விதியைவெறுப்பாள், நொந்து சோர்வுறுவாள், தனக்குரிய கணவனுடைய கொடுமையை நினைந்து கண்கள்பொழிகின்ற நீரிற் நோய்வாள், மிகுந்தநோயைச் சகிக்கமாட்டாமல் அழுகிறதன்பிள்ளையை மார்புடனணைத்துப் பாலூட்டுவாள், தீயையொத்து இடைவிடாமலிருந்து தன்னுடலைச் சுடுகின்ற பசியினால் துன்பங் கொண்டு ஒருகாரியஞ்செய்தாள். எ-று.

வெஞ்சினக்கொலைமாப்பயில்கானகம்விலங்கியோர்புடையேகி
பஞ்சின்மெல்லடிகுருதிகான்றிடத்தனிப்பயப்பயச்செல்லுங்கால்
அஞ்சிலோதியோரணிகர்கண்டதனிடைப்புகுந்தனளந்த
இஞ்சிமாநகர்தனக்கிறையாகியவெறுழ்வலிவணிகேசன்.

(இ - புனை) கொடிய கோபங்கொண்டு கொல்லுந்தொழிலையுடைய மிருகங்கள் சஞ்சரிக்கிற காட்டைவிட்டு நீங்கி ஒருபுறத்திற்சென்று, பஞ்சினும் மெல்

லியதாகிய தன்பாதத்தில் உதிரம்பெருகும்படி மெல்ல மெல்ல கடந்து போம் போது, அழகிய பொன்வட்டத்தகடணிந்த கூந்தலையுடைய அந்த ராஜஸ்திரி யானவள் அழகுள்ளதாகிய ஒருநகரத்தைக்கண்டு அவ்விடத்திற்போய்ன் (அப் பொழுது) மதில்சூழ்ந்த அந்த நகரத்திற்குத் தலைவனுகிய சிறப்புள்ள வச்ச கன், எ - று. பைய் - மெல்ல. சில்-சடைப்பில்லையென்னும் பொன்வட்டத் தகடு. இஞ்சி - மதில். (உஉ)

மல்குமாநிதியுடைப்பதுமாகரன்மனையினிலொருகோழிப்
பல்கியேவல்செய்சிலதியர்தம்மிலோர்பாவைமற்றவட்கண்டு
செல்வமைந்தனுந்திருமகணீயுமிதெருவிலுதுலர்போல
ஒல்கியொல்கிவந்தடைந்தவாறெதனக்குணர்த்திநீயெனச்சொன்னள்.

(இ - புணர்.) மிகுந்த திரவியத்தையுடைய பதுமாகரனென்னும் பெய ரையுடைய அத்தவர்த்தகன் வீட்டிற் றொழில் செய்துகொண்டிருக்கும் ஒரு கோடித்தோழிகளில் ஒருதோழியானவள் அந்த ராஜஸ்திரியைப்பார்த்து, நீ இராஜஸ்திரிபோலிருக்கின்றனை, அப்படியிருக்க நீயும் இதப் புத்திரனுஞ் ஏழைகள் போலச் சோர்வடைந்து இந்தத்தெருவில் வந்ததற்குக் காரணம் யாது? எனக்குச்சொல்லென்றுள் எ - று.

சிலநியர்-தோழியர்; ஆதலர்-ஏழைகள். (உந)

விம்மிவிம்மிநெஞ்சழிந்துவாய்புலர்ந்திடவிழிவழிநீர்சோர
அம்மவம்மமேவாவூழ்வினைவினைந்தமையார்க்குரைக்குவனென்னு
வெம்மைநெஞ்சுடைத்தலைமகளினைழத்சுதுமேதிலார்வினையீட்ட
இம்மையிவ்விடருற்றிவண்புகுதகுதுமிற்றெனவுரைசெய்தான்.

(இ - புணர்.) அவ்வாறு தோழிகேட்டவுடன் விம்மி விம்மி நெஞ்சழிந்து அழுதுகொண்டு கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகவும், வாயுலரவும், தாயே! விளைந்த ஊழ்வினை எவர்களுக்குச் சொல்லுவேனென்று இரக்கமில் லாத தன்கணவன் செய்ததையும், அயலவர்களாகிய சகளத்திமார் கொடிய செய்கைசெய்ய (அதனல்) இப்பிறப்பிலேதானே இப்படிக்கொத்த துன்ப மடைந்து இவ்விடத்தில் அடைந்ததும், இவ்வாறென்றுசொன்னள். எ - று.

அம்மா - இரக்க விடைச்சொல். (உன)

கேட்டிவல்விரைந்தோடினள்சென்றனள்கெழுமுசீர்வணிகேசன்
ரூட்டுணைத்தொழுதையருங்கடிநகர்சார்ந்தொருகுலத்தையுள்
வாட்டடங்கணிளைத்தியமகளினுள்வருந்தியுமுதுகோயாள்
காட்டின்மன்னவன்விடுத்திடவந்துநங்கையுடனடைந்தனனென்னுள்.

(இ - புணை) இதனைக்கேட்ட அத்தோழியானவள் மிக்கவிசையோடு சென்று, செல்வச்செறிப்பினையுடைய வணிகனைவணங்கி, ஐயனே! நமது காவலனைமந்தகக்காரத்தை வான்போலுங்கண்களையுடைய ஒருமாதானவள் கையில்ஒரு மகனையேந்திக்கொண்டு அடைக்கலமிருக்கின்றாள். அவள் மிக்கநோயுடையவள், அவன்புருடனைஅரசன் காட்டில்விட்டுவிடவந்தவளாம் என்றனள். எ - று.

தருமசிந்தையினீதியிற்கொடையினிற்றயவினினிகரில்லான்
கருமமக்கதுகேட்டலுங்குழைவுறுங்கருத்தினன்புறம்போந்தான்
கருமருந்தனமகனையுந்தாயையுங்கண்டதிசயித்திங்கன்
வருதிறன்மெருருவேதியன்மனையினின்மற்றவர்தமைவைத்தே.

(இ - புணை) தருமசிந்தையிலும் தியாகத்திலும் நீதியிலும் நயையிலும் தணக்கொப்பில்லாதவனுகிய அந்த வணிகேசன் அவள் சொன்ன காரியத்தைக்கேட்டமாத்திரத்தில் வருந்துகின்ற மனதையுடையவனுய் வெளியில் வந்து, அவ்விடத்திலிருக்கும்அருமருந்தையொத்தகுழந்தையையுந் தாயையும்பார்த்து அதிசயித்து, இங்கேவாருங்களென்று அழைத்துக் கொண்டுபோய் ஒரு பிராமணனவீட்டில் அவர்களைவைத்து, எ - று. (உசு)

உற்றவாயுள்வேதியரெலாம்வருகுவென்றுறுநிதிமழிசிந்தி
முற்றும்வல்விடநோயினைமருந்தினன்முரித்திர்மற்றிவளென்னைப்
பெற்றதாயிவண்மகவுமென்பெருந்துணையென்றவன்பலதேசக்
கற்றனூல்புகன்மருந்தெலாமருத்தவுங்கனன்றதுமுதுநோயே.

(இ - புணை.) அவ்விடத்திலிருக்கும் வைத்தியர்களையெல்லாம் வரவழைத்து மிகுந்தநிராவியங்கொடுத்து, இந்த ராசஸ்திரி யென்னைப்பெற்றதாய், இவள் குழந்தை என்னுடைய சகோதரன், ஆதலால் இவர்களுக்குப் பொருந்திய கொடிய விஷநோயை அவுஷதங்களால் முரித்துவிடுங்களென்று அவர்களுக்குச்சொல்ல; அதைக்கேட்ட வைத்தியர்கள் தாங்கள் கற்றுணர்ந்த வைத்திய சாஸ்திரத்திற் சொல்லும் அவுஷதங்களையெல்லாம் வகையறிந்து கொடுத்தார்கள். அப்படியவர்கள் கொடுக்கக் கொடுக்கப் பழமையாகிய வியாதியானது கொடுமையுடன் அதிகரித்தது. எ - று. (உஎ)

இழுதபெய்குடமெறிதலுங்கனற்சிகையெழுவபோலெண்ணில்லாப்
பழுதினன்மருந்திடுதொறுமுதிர்ந்துநோய்படர்செயப்பல்காலும்
அழுதுமாழ்கியபாலகனிறத்தலுமளவிலாத்துயர்பொங்கப்
புழுதிநீணிலத்தருண்டனளுருமுவீழ்புற்றுறையாவென்ன.

(இ - புணை.) நெய்நிறைந்த குடத்தை எறிந்தமாத்திரத்தில் அக்கினியானது சிகைவிட்டெழுந்த தன்மைபோல, அளவில்லாத கல்ல மருந்துகளை

கொடுக்குந்தோறும் அத்தவியாதி மேவிட்டுத் துன்பஞ்செய்தலினல், இடை விடாமல் அழுதுசோர்ந்த புத்திரனிறந்தனன். அவனிறக்கவே, அளவிலாத துயரம் உண்டாகப் புற்றிலிருக்குஞ் சர்ப்பமானது இடிவிழுந்தாற் றடிப்பது போலப் பூமியில்விழுந்து புரண்டாள். எ - று.

இழுது - நெய். படர் - துன்பம். உருமு - இடி. (உஅ)

வீழுமெய்பதைத்தெழுமழும்வெதும்பிடும்விம்மும்வெந்துயருள்ளிச்
தாழுங்கைகளான்முலைமுகட்டெற்றிடுந்தளர்வொடுகனிசோரும்
போழுமம்புபாய்மயிலெனமாழ்குறும்பொருமும்புத்திரசோபத்
தாழுநின்றுநின்றுருகும்வெய்துயிர்த்திடுமலக்கணுற்றிடுமன்னே.

(இ - புனை) பூமியில் விழுவள், உடல்பதைத்தெழுந்தழுவள், வெதும்பி விம்முவள், தனக்கு நேரிட்ட துயரத்தை நினைத்துச்சோர்வள், இரண்டு கைகளாலும் முலைமுகட்டில் மோதிக்கொள்வள், மிகுந்தமெலிவோடுசோர்வள், அம்புபாய்ந்த மயிலைப்போல மாழ்குவள், தேம்புவள், புத்திரசோகத்தில் அமிழ்ந்து நின்று நின்றுருகுவள், பெருமூச்சுவிடுவள், இத்தகைய துன்பம் அடைவாள்.

வேறு.

அயலகத்துறையத்தணைமாதரு
மயலகத்துவணிகமகளிருங்
கயலையொத்தகட்காரிகைபாலெய்திச்
செயலுணர்த்தித்தெருட்டவுந்தேறலாள்.

(இ - புனை.) இவ்வாறு துயரப்படுகிறவளைப் பார்த்து அயல் வீட்டிலிருக்கும் பிராமணஸ்திரிகளும் இம்மாதின் றுயரத்தால் மயங்கிய வைசிய மாதர்களும் கயல்போலும் கண்களையுடைய அத்தராசஸ்திரியினிடத்திற் சென்று, இவ்வுடல் அசித்தியமே யல்லாமல் நித்தியமல்லவென்பதை அனேக திருஷ்டாந்தங்களாற்சொல்லித் தெளிவிக்கவும் அவள் துக்கம் நீங்காதவளாகி, எ - று.

ஐபனேநம்மரசன்விடுத்தலிற்
கையறத்தளர்வேனீகைவிடும்
வெய்யகேண்மைவெதுப்பமெலிந்துளேன்
உய்யலேனினியுன்னைவிடுத்துமே.

(இ - புனை.) அப்பனே! என்னை அரசன் கீக்கிவிட்டபடியால், இடமின்றி வருத்துகிற என்னை நீயுங்கைவிட நேர்ந்த இக்கேண்மையானது என்னை மெலிவிக்க மெலிவடைந்தேன், உன்னைப்பிரிந்தும் இனிப் பிழைத்திருக்கமாட்டேன். எ - று. கை - இடம், ஈண்டுச்சார்விடத்தைக்குறித்தது. (உக)

*

என்றுபன்னிருங்குஞ்சுமதிதான்
சென்றுகாய்கன்றெறிருட்டவுந்தேறளாள்
கன்றிமர்ழ்குறுங்காலியிலாங்குணை
தொனறுதேர்விடபன்வந்துதோன்றினன்.

(இ - புரை) இவ்வாறு சொல்லிச்சொல்லி அழுகின்ற சுமதியென்பவன், தன்னை யாதரிக்கும் வர்த்தகன் வந்து பலவார்த்தைகளாற் றேற்றவுந் தேறு மல் மனம்வருந்திச் சோபழுறும்போது, பழமை அறியத்தக்க விடபன் என்னும் ஒரு சிவயோகி அவ்விடத்திலெழுந்தருளினார். எ - று.

பன்னுதல் - கூறுதல். (கூஉ)

வந்தியோகிமலரடிதார்ழ்ந்தெழுந்
தெந்தைதீயிவளித்துயர்தீர்த்தியென்
றந்தாய்கனுரைப்பவருந்தவன்

றன்.

(இ - புரை.) வந்த சிவயோகியை அந்த வர்த்தகன் கண்டு பாதங்களில் வணங்கி, என்னையனே ! இந்தாசஸ்திரியின் அரிபதுயாத்தை எவ்வாறுவது தீர்த்தருளவேண்டு மென்று சொலல, பூங்கொத்துகளணிந்த கூந்தலையுடைய அவளைப்பார்த்துச் சிவயோகி யிந்தவார்த்தை சொலறுகின்றார். எ - று. (கூங)

என்னைமாழ்கியிரங்குவமீதனைழந்
பொன்னுமாவிபொருந்தியகாயமு
மின்னுமொக்குளுமபோனனிலீதிடம்
அன்னதுள்ளியறிருராழிவுறார்.

(இ - புரை.) ஏழைத்தன்மையுடையமாதே! நீ யிரக்கித் துயரப்படுவதில் என்ன பிரயோசனம், நிரவியழும் உயிர்பொருந்திய இவ்வுடலமும் மின்ன லைப்போலவும் நீர்க்குமிழியைப்போலவும் விரைவில அழியத்தகுவையே: ஆகை யால், அவறறைக்கருதி அறிவுள்ளவர்கள் வருந்தாகள். எ - று. மின்னல் தோ ன்றி மறைதலால் அது செல்வத்திற்கும் குமிழி தோன்றும்போதேயழிதலால அது உடலுக்கும் உபமானமாயின. "தோறறமுண்டேடல்மரணமுண்டு" என்ற சுந்தாமூர்த்திநாயனார் திருப்பாட்டினையும் அறிக. (கூச)

கூறுசாத்திகங்கூடிடிற்றேவரா
மாறிராசகனுசேர்ந்திடினமாந்தராம்
வேறுதாமதமேவிலவிலங்குதாம
வேறுதோறற்றங்கன்முக்குணத்தற்றிடம்.

(இ - புணை.) சொல்லுகின்ற சத்துவகுணம் கூடுமோனுல் தேவர்களாவார்கள், அக்குணத்துக்கு மாறுகிய இராசதகுணங்கூடினுல் மனிதராவார்கள், அதிலும் வேறுகிய தாமதகுணங் கூடினுல் மிருகமாவார்கள், இவ்வாறு மூக்குணத்தினுல் பிறப்புண்டாகும். எ - று. (கூடு)

மூக்குணத்தின்முயற்சியிலோரொன்று
தொக்கவாறு துவன்றுங்குறியினன்
மக்கடேவர்விலங்கெனவந்தவை
துய்க்கும்போகந்தொலையத்தொலையுமே.

(இ - புணை.) மூன்று விதகுணத்தின் முயற்சியில் ஒவ்வொரு குணஞ் சேர்ந்தமுறைமைப்படி உண்டாகும் குறியினுல், மனிதர்களென்றும் தேவர்களென்றும் மிருகங்களென்றும்ஜனித்து, அவைகள் அனுபவிக்கவேண்டிய போகங்களை அனுபவித்துத் தொலைந்தபின் உடலும் அழிந்துபோம். எ - று.

துய்த்தல் - அனுபவித்தல். போகநுகர்வுமுடிவே, தேகமுடிவாதலால், ‘போகந்தொலையத்தொலையும்’’ என்றார். “வினைதானெழிந்தால் தினைப்போதளவுநில்லாது’’ என்று ஆன்றோர்கூறியதும் இக்கருத்தே. (கூசு)

பண்டைவாசனைதொக்கபயிற்சியாற்
கொண்டகாயநிலையெனக்கொள்வரோ
அண்டரேனும்பிறப்புளதாமெனின்
விண்டுகாயமிறப்பதுமெய்யரோ.

(இ - புணை.) பூர்வவாசனைசேர்ந்த பயிற்சியினு லுண்டான இச்சரீரத்தை நிலைமையென்று எண்ணுவார்களோ? தேவர்களேயானுலும் மறுபிறப்புண்டென்றல், உயிரானது சரீரத்தைவிட்டு நீங்கிப்போவது உண்மையாகும் அல்லவா? எ - று. (கூஎ)

அங்குமொன்றினருந்தியவற்றிறற்
றங்குதீமலநாளுந்தணந்திடு
மங்கைநீயதற்கித்துயர்வைத்திலை
யிங்குமாண்டமலத்துக்கெனேங்குவாய்.

(இ - புணை.) ஒருசரீரத்தில் உண்ட புசிப்பிறற் பொருந்தியதீயமலமானது நாடோறும் நீங்கிவிடும், தாயே! நீ அதைக்குறித்து உன்மனதில்இப்படிக் கொத்த துயரத்தை வையாதே, இப்போது இச்சிறுவனுக்கு நீங்கிய மலத்தைக் குறித்து ஏன் ஏக்கங்கொள்கின்றனை? எ - று. (கூஅ)

சாவதும்பிறப்புமெனுந்தன்மையைத்
தேவருங்கடவாரிதுதிண்ணமே

பாவைநீ துயர்பட்டிடிற்றீருமோ
யாவர்முன்னழுதின்னையிர்மீட்டுளார்.

(இ - புணை.) இறப்பதும் பிறப்பதுமாகிய தன்மையைத் தேவர்களுங் கடக்கமாட்டார்கள், இதுஉறுதியாகும்; தாயே! நீ துயரப்படுவதினால்வந்ததுக் கம் நீங்குமோ? சென்றவுயிரைப்பற்றி அழுது மீட்டுக்கொண்டவர்கள் முன் னர் யாரிருக்கின்றார்கள். எ - று. (உசு)

படர்கிரித்தலைப்பான்மதிபோற்கரிப்
பிடர்நீழற்றுகவிகையிற்போந்தவர்
கடனிலத்திற்கவிழ்ந்தனரன்றிமற்
றுடலெடுத்தெவர்சானவையொருவினர்.

(இ - புணை.) பெரியமலையினுச்சியில் சந்திரோதயமானதுபோல யானை யின்பிடரியிலேறிக்கொண்டு நிழலச்செய்கின்ற குடையின்கீழாகப் பவனிவந்த ஆசர்களும் கடல்சூழ்ந்த உலகத்தில் விழுந்திறந்து போனர்களேயல்லது இவ் வுடலையெடுத்தவர்களுள் எவர்கள் இறப்பை நீங்கினவர்கள். எ - று. (சo)

உற்றுநம்விருப்பானுதித்தானலன்
மற்றுநம்வெறுப்பான்மடிந்தானலன்
சுற்றுங்கட்சியொழியத்துறந்துவா
னுற்றபுள்ளினுடல்விட்டொளித்தளான்.

(இ - புணை) இறந்துபோன இப்புத்திரன் உங்கள் விருப்பத்தினால் பிறந் தவனுமல்லன், மேலும் உங்கள் வெறுப்பினல் மடிந்தவனு மல்லன்; பின்னப் பட்ட கூட்டைவிட்டு நீங்கி யாகாயத்திற் பறந்துபோகின்ற பட்சியைப்போல இவ்வுடலை விட்டு மறைந்துபோனன். எ - று. கட்சி - பக்ஷிக்கூடு. (சக)

தாயர்தந்தையரின்பத்தருக்கினை
லாயசுக்கிலசோணிதமங்கொரு
காயமாகக்கருக்கொளுமுன்னமே
மாயுமங்கவர்நொந்துவருந்தவே.

(இ - புணை) மாதாபிதாக்களுடைய இன்பச்செருக்கினல் உண்டாகிய சுக் கிலசோணிதமான து கருவாகத் தரிப்பதற்கு முன்னரே அவர்கள் நொந்து வருந்தும்படி மாயவுங்கூடும். எ - று. (சஉ)

அங்குமாய்ந்ததின்றென்னினவயவுந்
தங்கியையிருதிங்கடணந்தபின்

வங்கவாரிசூழ்மண்ணிடைத்தோன்றியே
பொங்குநற்கிளைகண்டுழப்பொன்றுமே.

(இ - புரை.) கருப்பத்திலேதானே இறக்காவிட்டாலும் உறுப்புக்களெல்லாம் பொருந்திப் பத்துமாதமுமானபின்பு கப்பல்கள் செல்லும் கடல்வளைந்த இவ்வுலகத்திற்பிறந்து பந்துசனங்கள் கண்டுழும்படி இறந்து போகவுங்கூடும். எ - று. வங்கம்-கப்பல். (கக)

பொன்றறீர்ந்திடிற்பொற்பிறைபோல்வளர்க்
தொன்றுகேள்வியுணர்வமையுகாட்
டின்றுபூங்குழறுஞ்சிணுந்துஞ்சுமற்
றன்றுவீதலொழிந்தெழிலாகியே.

(இ - புரை.) பூவையணிந்த அளகத்தையுடையவளே! பிறந்தவுடன் இறவாமலிருந்தால், அழகிய பிறைபோல்வளர்ந்து பொருந்திய கல்விகளைப் பகுத்தறிந்து கொள்ளும்படியான பருவத்திலிறந்தாலு மிறக்கக் கூடும், அல்லது அப்போது இறத்தலின்றி அழகுடன் வளர்ந்து, எ - று. (கஉ)

காமனேயெனக்கண்டவர்கண்கலர்
வாமநல்லுருவோடுமரீஇயபின்
சேமநல்விடைபோன்மணஞ்செய்வுழித்
தூமவார்குழறுஞ்சிணுந்துஞ்சுமே.

(இ - புரை) அகிற்புகையூட்டத்தக்க அளகத்தையுடையவளே! மன்மதனைப்போலக் கண்டவர்கள் பார்வையைக் கிரகிக்கும் படியான சௌந்தரியமுள்ள உருவத்துடன் வளர்ந்தபின்பு இன்பமுள்ள நல்ல ருஷபம்போலக் காளைப்பருவம் பொருந்தி விவாகஞ் செய்யுங்காலத்தில் இறந்தாலும் இருக்கவுங்கூடும். எ - று. வாமம் - அழகு. (கரு)

கல்விமைந்தர்களிப்புந்திருவொடு
செல்வவுக்கமுந்துய்த்துச்செழிக்குநாட்
பல்குபாவப்பயப்புலிபற்றலு
மொல்கிவாவுமுழையெனமாயுமே.

(இ - புரை) கல்விநிறைந்த வாலிபர்கள் சந்தோஷத்தையுஞ் செல்வச் செருக்கையும் அனுபவித்துச் செழுமையாக வாழுநாளில், மிகுந்தபாவமாகிய அச்சந்தரும் புலிப்பற்றினமாத்திரத்திற்சோர்ந்து, மானிறப்பதுபோல இறந்துவார்கள். எ - று. உழை - மான். (கசு)

கூனிமூத்தகுரங்கெனக்கோல்பிடித்
தேனையோருமிகழ்விருமலர்

தானேயோடுசரித்திடச்சாவது
மானிலேக்கினல்லாயொருவண்ணமே.

(இ - புரை,) மான்போர்வைபோல் மருண்டபார்வையையுடைய நல்லவனே! கிழக்குரங்குபோல உடல்வளைந்து கையிற் கோல்பிடித்தான்றிக்கொண்டு, மற்றயாவரும் இகழும்படி மலசலங்கள் வஸ்திரத்திலேதானே கழலவொன்றுந் தெரியாமலிருக்க இறந்துபோவதும் ஒருவிதமாம். எ - று. (சஎ)

காலமென்பர்சிலர்சிலர்கன்மமே
மூலமென்பர்சிலர்மூக்குணமென்பர்
ஞாலமென்புனலாதியநல்லுட
லேலுமூன்றிற்குமேற்றதென்பார்சிலர்.

(இ - புரை) இறப்பதற்குக் காலந்தான் காரணமென்று சிலர் சொல்லுவார்கள், அவனவனுடைய கர்மந்தான்காரணமென்று சிலர் சொல்லுவார்கள், சிலர் மூக்குணமே காரணமென்பார், பிருதிவி அப்பு முதலாகிய பஞ்சபூத சம்பந்தமான இவ்வுடல் மேற்சொல்லிய மூன்றுக்கும் ஏற்றதென்று சிலர் சொல்வார்கள். எ - று. (சஅ)

ஆதலானித்திறமுடையாக்கையைப்
போதமுற்றவர்பொய்யெனக்கொண்டுபின்
சாதலுக்கும்பிறத்தற்குந்தம்மனத்
தேதமோடுவப்பின்றியிருப்பரே.

(இ - புரை.) ஆகையினாலே, இப்படிப்பட்ட சரீரத்தை ஞானமுற்ற பெரியோர்கள் பொய்யென வெண்ணிச் சாதலிலும்பிறத்தலிலும் அக்கமுஞ்சந்தோஷமு மில்லாமலிருப்பார்கள். எ - று. (சக)

எவ்விகற்பத்தவெவ்வுடலங்களு
மவ்வியத்தத்திற்மேனின்றியடங்கிடும்
பவ்வமுற்றியபாரினமுந்துகள்
கொவ்வைவாய்க்கொடிமீண்டதிற்கூடல்போல்.

(இ - புரை.) கொவ்வைக்கனிபோலும் வாயினையுடைய கொடிபோன்றவளே! பூமியில் எழுகின்ற துகள்கள் மறுபடியும் அத்தப்பூமியிலேதானே அடங்குவதுபோல, எவ்விதமாகிய விகற்பங்களையுடைய எவ்வித சரீரங்களும் மாயையிற்றோன்றி அதிலேதானே ஒடுங்கும். எ - று. அவ்வியத்தம்-பிரகிருதி, மாயை. (கூ)

உன்னையின்றவருன்னுதித்தவர்
மன்னுமுற்பவந்தோறுமணந்தவ

ரன்னமேதிரையாழியிலண்மலை
றன்னையெண்ணிலுமென்னுளத்தஞ்சோ.

(இ - புணர்). அன்னம்போல்வதனே! பொருந்திய பூர்வசென்மத்தில் உன்னைப்பெற்றவர்களும் உன்னுற் பெறப்பட்டவர்களும் உன்னை விவாகஞ்செய்துகொண்டவர்களும் அலைகளையுடைய சமுத்திரத்தின் நிறமணலை யெண்ணினாலும் எண்ணும் அளவையுடையவர்களோ? எ - று. (நக)

பாகெனுஞ்சொலினுய்படர்காலமா
காகவாயினினனிலந்தன்னில்வாழ்
போகமானிடத்தேதனைபொருந்தியு
மோகையுஞ்சிறிதுற்றிடுமோசொலாய்.

(இ-புணர்.) பாகுபோலும் மதுரமுள்ள வசனத்தையுடையவளே! காலமாகிய பாம்பின்வாயிலகப்பட்டுக்கொண்டு போகத்தையே விரும்பும் மனிதர்களாகிய தேரைகளுக்குச் சந்தோஷமுஞ் சிறிது முண்டாகுமோ? சொல்லுவாய். எ - று. (நஉ)

முகைதானமுகனமுனைமபடைதுட
றந்தநாளிற்றனுகரணங்களும்
புந்திசேர்புவனத்தொடுபோகமும்
பந்தமாமிடைவேறென்றுபற்றுமோ.

(இ - புணர்) பழமையாகிய பிரமதேவன் ஆதியிலிந்த உடலைச் சிருட்டித்துத் தந்தநாளிலேயே, தனுகரணங்களும் நினைக்கும்படியாகிய புவனபோகங்களும் தொடர்ச்சியாகவே அமைந்திருக்கின்றமையால், மத்தியில் நூதனமாக ஒன்று வரவுங்கூடுமோ? எ - று. (நக)

தோலுமெண்புரம்புமிறைச்சியு
மேலுமீரலும்பித்துமிரத்தமும்
சீழுமிட்டகுழிசில்கினைதந்தது
போலுநீயிதற்கென்கொல்புலம்பலே.

(இ - புணர்.) தோலும் எலும்பும் நரம்பும் மாமிசமும் ஈரலும் பித்தநீரும் உதிரமும் சீழும் நிறைத்துவைத்த ஒருகடமானது உடைந்துபோய்விட்டது போலாக்கும் இச்சரீரம் இறந்தது; இதற்காக நீபுலம்புவது என்னைகாரணம். ()

முக்கணையகன்முப்புரந்தியெழு
நக்கநாயகனுவ்மலர்த்தாடொழு

மக்களன்றிமறனிலையவென்றிடத்

நன.

(இ - புணை.) சரீரம் இத்தன்மைத்தா யிருப்பதிலலே, திரிநேத்திரங்களை யுடையவரும் திரிபுரங்களில் நிபற்றாகைத்தவருமாகிய பரமசிவனுடைய அன்ற லர்ந்த அம்புஜம்போன்ற பாதங்களினவணங்கும் அன்பர்கள் சமனை வெல்லுவா ரேயன்றி, மற்றவர்களுள் யார்தான் வெல்லத்தக்கவர்களென்று சிவயோகி சொல்லியருளினர். எ - று. (நிரு)

வேறு.

கேட்டாளெழுந்தாள்கிளியென்னமிழற்றுசொல்லாள்
வாட்டாரைக்காந்தண்மலர்கொண்டெதிர்வீவுமாபோற்
றீட்டாதமைக்கண்பொழியாவிசிறந்தசங்கம்
பூட்டாதகையாற்றுடைத்தின்னபுகல்வதாளுள்.

(இ-புணை.) கிளிபோல் வசனிக்குஞ் சொல்லையுடைய ராசஸ்திரியானவள் சிவயோகிகள் சொன்னதை யெல்லாங்கேட்டு உடனேயெழுந்து, வாளிலுண்டாகும் நீர்த்தாரையைக் காந்தள்மலரால் துடைப்பதுபோல, மைதீட்டாத கண்பொழிகின்ற நீர்த்துளியை வளையலணியாமலிருக்கின்ற கையால் துடைத்து, இத்தவார்த்தை சொல்லுகின்றாள். எ- று. காட்டில்வாசம்பண்ணைசேர்ந்தமையால், மைதீட்டாதகண்ணென்றும் சங்கம்பூட்டாதகையென்றுங்கூறினர்.

கள்ளாருமாலைமுடிவேந்துகனன்றுநீக்க
வுள்ளாவிவாட்டுமுதுநோயிதுணங்குவேற்குத்
தள்ளாவிழுச்சீர்ப்புதல்வன்னெடுசாதலுனே
விள்ளாததுன்பத்துழலாதவிரதமென்ன.

(இ - புணை.) தேனிறைந்த பூமாலையணிந்த மகுடந்தரித்த அரசன் கோபங்கொண்டு நீக்கிவிட்டதினால், உள்ளுயிரைவருத்தும் காமநோயினால் மெலிகின்ற எனக்கு, நீக்கமற்றசிறப்பினையுடைய இறந்துபோன என்புத்திரனுடன் நானும் இறந்துபோவதே நீங்காததுன்பத்தில் விழாதவிரதமென்றுசொல்லி, ()

அளிகொண்டசிந்தையறத்தேதாய்நின்னருட்கணேக்கம்
வினிகின்றகாலத்தெதிர்த்தேன்வினைவெம்மைதீர்ந்தேன்
முளிகொண்டபைங்கூழ்த்தெறுகோடைமுதிர்ச்சிதீரத்
தளிகொண்டல்சிந்திப்புரந்தாற்றிடதன்மைபோலும்.

(இ - புணை.) தீயுந்தன்மைகொண்ட பகையைவாட்டுகின்ற கோடைவெப்பந்தீரும்படியாக மேகங்கள் நீர்த்துளியைச்சிந்தி வைப்பதையாற்றுந் தன்மை

போலக் கிருபைபொருந்திய மனதையுடைய முனிவரே! தேவரீர்தந்தருளிய கிருபாநோக்கத்தை ஈனிறக்குந் சமயத்திற் பெற்றுக்கொண்டு தீவினைக்கொடுமையை நீங்குகிறேன். எ - று. முளிதல் - தீய்தல். (நஅ)

என்னுவிவள்சாதற்கினையந்துளமெய்ம்மையுள்ள
முன்னுமுராணவழிபாடுபுரிந்தமுற்பவத்திற்
பொன்னுரமார்பின்மகவென்பதுந்தேர்ந்துபூவை
தன்னுர்வமைந்தனுயிர்மீட்குந்தகைமைசெய்தான்.

(இ - புணை.) இவ்வாறு சொல்லி அந்த ராசஸ்திரி இறப்பதற்குத் துணிந்த நிச்சயத்தையறிந்து, பொன்னுரமணிந்த மார்பினனுன இந்தப்புத்திரன் முற்பிறப்பில் தனக்கு உபசாரஞ் செய்தவனென்பதையுமெண்ணி, அவனுடைய ஆசைப்புத்திர னுயிரைமீட்கும்வகையை அம்முனிவர் செய்தருளினர். எ-று.

டாலைாத்திலகுந்திருநீறுபரிந்தெடுத்து
வாலப்பிறைபோல்பவனெற்றிவயங்கச்சாத்தி
யாலத்திருண்டகளத்தான்பொன்னடியையேத்தி
மூலத்திருமந்திரங்காதின்மொழியலோதும்.

(இ - புணை.) பாலைப்போன்ற வெண்மைநிறங்கொண்டு விளங்காநின்ற நிருநீற்றினைப் பரிவுடனெடுத்து, பாலசந்திரன் போல்பவனுகிய அப்புத்திர னுடைய நெற்றியில் பிரகாசிக்கும்படி தரித்து, விஷத்தினால் கறுத்த கண்டத்தையுடைய பரமசிவத்தின் திருவடிகளைத் துதிசெய்து, பஞ்சாக்ஷரத்தைக் காதில் உபதேசித்த அளவில், எ - று. (நக)

பைந்தாட்கமலங்கண்மலர்ந்தெனப்பாலன்செங்க
ணந்தாதுவிழித்திடநற்றுயினீங்கிணன்போன்
முந்தாவெழுந்தேமுலையுண்ணமுயலுமவேலை
செந்தாமரைமேற்றிருவண்ணவள்சோர்ந்துபுல்லி.

(இ - புணை.) பசியதாளையுடைய தாமரைமலர்கள் மலர்ந்ததுபோல இறந்திருக்கும்புத்திரன் கண்களைத்திறந்து நித்திரைநீங்கினவன்போ லெழுந்து முந்தி முலையுண்ணத்தாவினபோது, திருமகளையொத்த அந்த ராசஸ்திரி தன் புத்திரனைக்கிட்டி அணைத்துக்கொண்டு, எ - று. (நக)

பொல்லாவலுமைத்துயர்பூண்டபொறியிலாள
னில்லாதசெம்பொன்னிடைத்தாங்கணிழந்துமீள
நல்லாதரவத்தொடுபெற்றெனநங்கையோகை
நில்லாதுபொங்கக்கனியெய்தினனின்றகாலை.

(இ - புணை.) கொடியவ்வுறுமைத் துயரத்தைக் கொண்டிருந்த அங்கப் பழுதுமுள்ளவளெனிய ஒருவன்தனக்கில்லாத திரவியத்தைப்பெற்று உடனேயிழந்து, மறுபடியும் அந்தத்திரவியத்தை மிகும்தவுசையுடன் பெற்றுக்கொண்டது போல, அந்த ராசஸ்திரியானவள் சந்தோஷத்தனக்குள் ளடங்காமல்பொங்கக் களிப்பை அடைந்துநின்றபோத்து, எ - று. நங்கை-பெண்தகுதியின்மிக்கவள்.

மீட்டுங்கருணைக்கடல்போலவிளங்கும்யோகி
தோட்டங்கமலத்துகட்டாதுசொரிவதேபோல்
வாட்டங்குகையான்மகன்மேலுமனவிமேலுங்
காட்(

(இ - புணை.) கிருபாசமுத்திரம்போல் விளங்குகின்ற அந்தச் சிவயோகியானவர் இதழ்களையுடைய தாமரைமலரானது மகரந்தப்பொடியைச் சிந்துவதுபோலத் தம்முடைய கையினல் விபூதியை ராசகுமாரன்மேலும் ராசன் மனவிமேலும் தரித்தார். எ - று. தோடு - இதழ். (சுஙு)

வெண்ணீரவனன்யொடுசாத்தலும்வெற்றிரும்பு
தெண்ணீரிரதத்துளிருத்தச்செழும்பொனுகி
மண்ணீர்பெற்றுலெனமற்றவர்மேனிநோயின்
புண்ணீர்மைநீங்கிப்பசும்பொன்னுருவெய்தினின்றார்.

(இ - புணை.) அவர் விபூதி தரித்தமாத்திரத்தில் வெறுவிய இரும்பினிடத்தில் தெளிவானதன்மையுள்ள ரசத்துளியைச்சேர்த்தினவுடன் அவ்விரும்பு நல்லபொன்னுகி அலங்காரமுள்ள தன்மையைப் பெற்றதுபோல, நோயினையுடைய புண்தன்மைநீங்கி, அவர்கள் சரீரம் பொன்னிறம் பொருந்தினர்கள். எ - று. மண்ணல் - விளக்கமடைதல். (சுசு)

கங்காதரனன்புறுதொண்டன்கழிந்தவாவி
மங்காதமீட்கவுயிர்வந்தபின்மைந்தனேடு
கொங்கார்குழலாடிருமேனியிற்கொண்டபுண்ணேய்
தங்காதுநீங்கத்திருநீறவன்சாத்தலோடும்.

(இ - புணை.) இறந்துபோனவுயிர் அப்படியே போகாமல் பரமசிவனிடத்தில் அன்புள்ள தொண்டராகிய சிவயோகியானவர்மீட்க, உயிர்பெற்ற புத்திரனுடைய சரீரத்திலும் தாயின் சரீரத்திலும் பொருந்திய புண்ணென்னு கொஞ்சமுமிராமல் நீங்கும்படி விபூதிதரித்த அளவில், எ - று. (சுரு)

தண்டாததேவர்விமானமோர்ந்துலகத்தையலாரும்
வண்டாதரிக்குந்தொடைமாலைவண்டமிழ்மாரும்

கண்டார்மகிழ்ந்தார்வியந்தார்களித்தார்கடனஞ்
சுண்டான்றிருத்தாடொழுதேத்தெடுத்தோதுகின்றூர்.

(இ - புரை.) எப்போதும் யாகஞ்செய்துகொண்டிருக்கும் பிராமணகுல மாதர்களும், வண்டுகள்மொய்க்கும் மூல்லைமாலையணிந்த அந்தவர்த்தகனுடைய வீட்டு மாதர்களும், பார்த்துச் சந்தோஷித்து அதிசயமடைந்து களிப்புற்று விஷ்ணபாணம்பண்ணிய பரமசிவனுடைய திருவடிகளைத்தொழுது தோத்திரஞ் செய்தார்கள். எ - று. (சுசு)

வாவுந்திரையார்கலிசூழும்வளாகங்காக்குங்
கோவின்பெருந்தேவியுமைந்தனுங்கோதிலாத
தேவின்கழற்றாள்பணியோகிதன்செய்யபொற்றா
ணாவின்புறவேத்திவணங்கிநவிலலுற்றார்.

(இ - புரை) தாவிமேலெழுகின்ற அலையையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியைக் காக்கும் அரசன்மனைவியும் புத்திரனும் பாசரகிதராகிய பரமசிவனுடைய வீரகண்டையணிந்த திருவடியைப்பணிகின்ற சிவயோகியின் செவ்விய பாதங்களை நாவிறல் துதிசெய்துபணிந்து சொல்லுகின்றார்கள். எ-று. ஆர்கலி-சமுத்திரம். வளாகம் - பூமி. (சுஎ)

துஞ்சுஞ்சிறுவனுயிரீந்துந்தொடர்ந்தகோயா
லஞ்சுந்துயரங்களைக்காத்துமளியைங்கின்றாய்
வஞ்சம்புணர்மானிடரேதுகைம்மாறுசெய்வேங்
தஞ்சந்திருத்தாளெனயோகிதன்றாளில்வீழ்ந்தார்.

(இ - புரை) இறந்த புத்திரனுடைய பிராணனைக்கொடுத்தும் எங்களுக்குநேரிட்டகோயினல் அஞ்சுகின்ற துயரந்தீர்த்தும் கிருபையுள்ளவராயிருக்கின்ற தேவரீருக்கு, வஞ்சகத்தையுடைய மானிடர்களாகிய நாங்கள் என்ன பிறது உபகாரஞ்செய்வோம்; எங்களுக்கு உம்முடைய திருவடியே ஆதாரவென்றுசிவயோகியினுடைய பாதத்தைவணங்கினர்கள். எ - று. (சுஅ)

வேறு.

இறைஞ்சிவீழ்ந்திடுமிருவர்தம்மையுஞ்
சிறந்தகைகளாலெடுத்துச்சீரியோ
னிறைந்தவோகையானிகழ்த்துமாசிக
ளறைந்துநாமமுமுறியக்கூறினன்.

(இ - புரை.) இவ்வாறுசொல்லிவணங்கிய அவ்விருவரையும் சிவயோகியானவர் தம்முடைய திருக்கைகளாலெடுத்து நிறைந்த சந்தோஷத்துடன் சொல்லத்தக்க ஆசிர்வாதஞ்செய்து, அத்தப்புத்திரனுக்குப் பெயருங் கூறியருளினர். எ - று. (சுக)

பத்திராயுவிப்பாலனுமமென்
றெத்தலங்களுமிசைக்கநின்மகன்
மைத்தடங்கணெய்வளருங்காறுமில்
லுய்த்துநீணிதிவனிகணேம்பவே.

(இ - புணை.) இத்தப்புத்திரன்பெயர் பத்திராயு என்று எவ்விடத்தும் எல்லாருஞ்சொல்லக்கடவர். மைதிட்டுங்கண்களையுடையவளே! உன்புத்திரன் வளர்கிறவரைக்கும் தன்வீட்டில் இவ்வர்த்தகன் ஆதரிக்கக்கடவன். எ-று.(எ0)

இங்குவைகுநின்னெழில்கொள்பாலகன்
பொங்குநற்கலைப்புணரிநீந்திணன்
மங்கில்செல்வமுமாசிலாட்சியு
மெங்கணையகனருளினெய்திடீய.

(இ - புணை.) இவ்விடத்திலிருக்கும் உன்புத்திரன் மிக்க நல்ல சாஸ்திரங்களை யெல்லா மோதியுணர்ந்து எம்மிறைவன் கிருபையால் கெடாத செல்வமும் நல்ல அரசாட்சியும் அடையக்கடவன். எ - று. (எக)

வணைந்தநீண்முடிமன்னனாகியே
யனந்தகாலமுமவனிகாத்திடு
மினைந்தமூப்புநோயிகந்ததேவர்போற்
கனைந்துவண்டிலாங்கண்ணிமைந்தனே.

(இ - புணை) வண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும்படியான பூமாலை யணிந்த உன்புத்திரன் முடிதரித்துக்கொண்டு மன்னவனாகி வருந்துகின்ற மூப்புப்பருவமும் வியாதியுமில்லாமலிருக்கிற தேவர்களைப்போல இவ்வுலகத்தைக் காத்துக்கொண்டு நெடுநாளிருப்பான். எ - று. கண்ணி-மாலை. (எஉ)

என்றுபாலனுக்கெதிர்பயாவையு
மன்றல்வார்குழற்கியம்பிமாதவன்
சென்றனன்னனைத்தெளியக்கூறினன்
றொன்றுமார்க்கதகூதனென்பமே.

(இ - புணை) இவ்வாறு சொல்லியதுமன்றி அந்தப்புத்திரனுக்கு மேல்வரத்தக்கவைகளையும் அவன் தாயுடன் சொல்லிச் சிவயோகி போய்விட்டாரென்று, சூதமுனிவரானவர் மகத்துவமுள்ள பழமையான இந்தச்சரித்திரத்தை நைமிசாரணிய முனிவர்களுக்குத் தெளியும்படிச்சொன்னர். எ - று.

எதிர்ப - வரத்தக்கவை. (எங)

சிவயோகிமகிமையுரைத்த - அத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம். சுஎ0.

பதினென்றுவது

பத்திராயுவுக்கு அரசியலளித்த அத்தியாயம்

ஐந்துமுகத்தானடியார்செயல்கேட்டிங்
குய்ந்தனம்யாமென்னுமுனிவோருளங்களிக்க
மைந்துடலம்பெற்றூர்க்குமுத்திவழிகாட்டும்
பந்தமற்றஞானமுனிமீட்டும்பகர்ந்தனனே.

(இ - புணை.) ஐந்து திருமுகங்களுள்ள பரமசிவனுடைய அடியார் செய்கையைக்கேட்டு, நாங்கள் உய்ந்தோமென்று சொல்லிய நைமிசாரணியமுனிவர்கள் மனஞ் சந்தோஷிக்க, வன்மையுடன் உடல்பெற்றவர்களுக்கு மோக்ஷவழியைக் காட்டுகின்ற ஞானவானகிய சூதமுனிவர் மறுபடியுஞ் சொல்லுகின்றூர். எ - று.

ஐந்து திருமுகங்களாவன: ஈசானம் தற்புருஷம் வாமம் அகோரம் யோசாதம் என்பன. ஈசானமுகம் படிகநிறமுள்ளதாக மேல்நோக்கிய பார்வையாயிருக்கும், தற்புருஷமுகம் பொன்னிறமுள்ளதாய்க் கீழ்த்திசைநோக்கியிருக்கும், அகோரமுகம் தெற்குநோக்கி நீலநிறமுள்ளதாயிருக்கும், வாமமுகம் பொன்னிறமுடன் வடக்குநோக்கியிருக்கும், சத்தியோசாதமுகம் வெண்மைநிறமுள்ளதாய் மேற்குநோக்கியிருக்கும். சிவாலயங்களில் தீபாராதனைசெய்யும் போது நாலுதீபத்தட்டும் நாலுதிக்கிலும் அந்தநாலின் மத்தியில் ஒருதட்டுமாக வைத்தல் சிவபெருமானுக்கு பஞ்சமுகங்களுக்குந் தீபாராதனை செய்கிறபாவனையாம். மத்தியில்வைத்திருக்கிற ஈசானமுகத்தட்டு முதலிலும் பின்பு தற்புருடமுகத்தட்டுமுதல் நான்குதட்டும் மேற்சொல்லிய திருமுகக்கிரமப்படியெடுத்துத் தீபாராதனைசெய்வது மரபு. சிவலிங்கப்பெருமான் மேற்குநோக்கிய சந்நிதியாயிருந்தால் அந்தத்திக்குநோக்கிய திருமுகமே தற்புருஷமுகமாகத் தற்புருஷத் தட்டுவைத்துத் தீபாராதனைசெய்யும்படி ஆகமவிதியாம். தெற்கு வடக்கு நோக்கிய சந்நிதிகளாயிருந்தால் அந்தந்தத்திசையே தற்புருஷமாகக் கொள்ளவேண்டும். இவ்விடயம் ஈண்டு விரிக்கிற்பெருகும். (க)

பிங்கலையென்றோதும்பெருங்கணிகையோரிராத்
துங்கமிகுநவத்துத்தொல்லோன்விடபனுக்குச்

செங்கமலத்தாள்வருடிச்செய்தவழிபாட்டினை
லங்கவளருஞாலத்தலர்மடந்தைபோலவே.

(இ - புணை.) பிங்கலையென்று சொல்லப்படுகிற ஒருகணிகை மாதானவள் தவத்தாய்மையுடைய விடபனென்னுஞ் சிவயோகிக்கு ஒருநாளிராத்திரி திருவடிகள் வருடிச்செய்த உபசாரத்தினால், அந்தப்பிங்கலையானவள் இவ்வுலகத்தில் திருமகள்வந்துற்பவித்ததுபோல, எ - று. (உ)

போர்கெழுவேல்வேந்தன்புகழ்ச்சந்திராங்கதற்குச்
சீர்கெழுமுதாரமாஞ்சீமந்தனிவயிற்றின்
வார்பெய்முலைக்கீர்த்திமாலினியென்னுமமொடுங்
தார்புனைமெல்லோதித்தளிரியலாய்த்தோன்றினாள்.

(இ - புணை.) போர்செய்வதற் கேதுவாகப்பொருந்திய வேலாயுதத்தையுடையவனுய்ப் புகழ்பெற்ற சந்திராங்கதனென்னும் அரசனுக்குக் கற்புள்ளமனைவியாகிய சீமந்தனிவயிற்றில் கச்சையாலிறுக்கும் தனங்களும் தாரணிந்தமெல்லியகூந்தலும் தளிர்போலும்சாயலுமுடைய கீர்த்திமாலினி என்னும் பெயர்பெற்ற பெண்ணைகப் பிறந்தாள். எ - று. (க)

வானமிருடூரவளருமதிப்பிள்ளையைப்போற்
றேனமருந்தார்வேந்தன்செல்வக்குலமோங்கக்
கானமருங்கூந்தற்கனிவாய்க்கழைமென்றோட்
பானல்விழியாள்வளர்காளுற்றசெயல்பன்னுவாம்,

(இ - புணை.) ஆகாயத்தில் இருள்நீங்க வளர்கின்ற இளஞ்சந்திரனைப்போல, சந்திராங்கதனுடைய குலமானது ஓங்கும்படி வாசனையமர்ந்த கூந்தலும் கனிபோலும் வாயும் கழைபோலும் தோளும் நீலோற்பலம்போலும் கண்களும் பெற்றுக், கீர்த்திமாலினியென்னும் பெண்ணைனவள் வளருகிறகாளில் பொருந்திய செய்கையைச் சொல்லுகிறோம். எ - று. (ச)

விஞ்சையறிநல்யாழ்விதம்பயின்றுவேதமுதல்
வஞ்சமிலாவாறங்கநீதிமனுவாராய்ந்து
கொஞ்சுகரிபரிதேரூர்ந்துகொலைப்படைக
ணெஞ்சங்களிக்கநிகரில்லார்கற்றுணர்ந்தார்.

(இ - புணை.) தங்களுக்கு ஒப்பில்லாத பத்திராயு சுனையன் என்பவர்கள் வித்தியாதரனைப்போல வீணையின் வகைகளைக்கற்றும், வேதமுதலாக ஆறங்கங்களும் மனு என்னும் நீதிசாஸ்திரமும், மெதுவாக நடக்கும் யானை யேற்றம் குதிரையேற்றம் தேரேற்றம் வாளுமுதலாகிய ஆயுதப்பயிற்சியும் மனங்களிக்கக் கற்றுணர்ந்தார்கள். எ - று. (ஞ)

மற்றநிருபன்மகன்பத்திராயுவெனுஞ்
சிற்றச்சிறுகுடிமிச்செவ்வாய்மழகளிறுஞ்
செற்றவணிகன்றநயன்சுனையனுமா
யுற்றுமருவியுடலுயிர்போல்வைகினர்.

(இ - புணை.) சிறியகுடுமியும் செவ்வாயுமுள்ள இளமையான யானைக் கன்றினையொத்த ராசபுத்திரனுகிய பத்திராயுவென்பவனும் இவர்களை யாதரிக்கும் வணிகனுடைய புத்திரனுகிய சுனையன் என்பவனும் ஒருவனைவிட்டொருவன் பிரியாமல் உடலுமுயிரும்போல இருந்தார்கள். எ - று. (சு)

தக்கமறையோர்தழன்மாட்டவிசொரிந்து
மிக்கசடங்கியற்றநாய்கன்விழவோடுங்
தொக்கவிரவலர்பாற்சொன்னமழைபோழிய
வொக்கவிருவோருமுன்னாலுவந்தணிந்தார்.

(இ - புணை.) தகுதியுள்ள பிராமணர்கள் ஓமாக்கினியினிடத்தில் அவிர்ப்பாகங்கொடுத்துச் சடங்குகள்செய்ய, அந்தவணிகன் வந்திருக்கிற இரவலர்களுக்கு மழைபொழிவதுபோல விழைவினுடன் திரவியங்கொடுக்கவும், அந்த இரண்டுபுத்திரர்களும் ஏககாலத்தில் உபயனஞ் செய்துகொண்டார்கள். எ - று.
நாய்கன் - வணிகன். (எ)

ஞானநூலாதிபலவிஞ்சைநயந்தளித்த
வானவர்தன்தேசிகனேபோல்வான்மணமகிழ
வூனமில்சிரோன்மணியும்பொன்னுமுவந்தளித்துத்
தேனமர்தார்மைந்தர்திருவயதிரட்டடைந்தார்.

(இ - புணை.) ஞானசாஸ்திர முதலாகிய பலகலைகளை விருப்பத்துடன் அருள்செய்த தேவகுருவையொத்த ஆசாரியர் மகிழும்படிக் காணிக்கையாகச் சிரேட்டமான ரத்தினங்களும் பொன்னு மகிழ்ந்துகொடுத்துப் பதினுறு வயதுள்ளவர்களானார்கள். எ - று. (அ)

மண்டுபுருவச்சிலைகுனித்துவாட்கண்ணை
கொண்டகொடுங்கணையாயெய்வான்குழுஉக்கொண்டு
கண்டமகளிர்கடற்பார்முழுதாளுந்
திண்டிறல்வேற்காளைதிருமார்பத்தெய்யுநாள்.

(இ - புணை.) நெருங்கிய புருவச்சிலையைக்குனித்து வாள்போன்ற கண்களை கணையாகக்கொண்டு எய்யும்படிக் கூட்டங்கூட்டமாகத் திரண்டுகண்ட மகளிர்கள், கடல்வளைத்த உலகத்தையாளும் திண்ணிய திறலமைத்த வேற்ப

டையினையுடைய காளைபோலும் அவ்வரசகுமாரனுடைய மார்பகத்தெய்வாரா னர். எ - று. கட்கணையை எய்தலாவது, காண்டலென்னும் பொருளது. (சு)

தீர்ந்தவுயிர்முன்னளித்தசிவயோகி
வார்ந்தசடிலஞ்சுவற்புளவங்தெய்த
கோர்ந்தசுமதியெனுகோரிழையுகெஞ்சமருள்
கூர்ந்தகுமரனுமக்கோதிலான்றுடொழுதார்.

(இ - புனை.) நீங்கிய உயிரை முன்னங்கொடுத்த சிவுயோகியானவர் நீண்ட சடையானது தோளினிடத்துப்புரண் டசையும்படிவர, நேரிற்கண்டு அந்த ராசஸ்திரியும் மனதில்மிகுந்த கிருபையுள்ள அவள்புத்திரனும் பரிசுத்த ான அந்தச்சிவயோகியின் பாதத்தில் வணங்கினர்கள். சுவல்-தோள். எ-று.

மாண்டபெருந்தவத்தோன்சிந்தைமகிழ்வெய்தப்
பூண்டபரிவினராய்ப்பொன்னுண்மலர்தூவிக்
காண்டகுபால்செந்தேன்கனிபொற்கலத்தேந்தி
யாண்டுமிகும்பூசைவழிபாட்டினளித்தார்.

(இ - புனை.) மாட்சிமைதங்கிய சிவயோகி மனமகிழ்ச்சி யடையத்தக்க தாக அன்புள்ளவர்களாய் நல்லமலர்கள்தூவிப், பார்வைக்கினிய மதுரமுள்ள பால் தேன் பழங்களைப்பொற்கலத்தில்வைத்து ஆராதனைசெய்து,அமுதுகொள் ளச் செய்தார்கள். எ - று. (கக)

கோடம்பவளக்குறுஞ்சடிலமாவிரதி
வாடுஞ்சிறுமருங்குற்செல்வியையுமைந்தனையு
நாடுங்கருணைபுரிந்துநகைமுகத்தாற்
றேடிட்பொருளனையீர்தீதிலீவையென்றுரையா.

(இ-புனை-) வளைவாகத்தொங்குகின்ற பவளம்போலும் சடையையுடைய சிவயோகியானவர், தம்மைவணங்கிய வாட்டமுற்ற சிறிய மருங்கினையுடைய அம்மாதையும் குமரனையும் ஆசீர்வசனஞ்சொல்லிக் கருணைபுரிந்து நகைமுகத் தாய் தேடுதற்குரிய நற்பொருள்போன்றவரே! சுகமாயிருக்கிறீர்களா என்று விணவினர். எ - று. (கஉ)

வாவுபரித்தேர்வேந்தன்மைந்தன்முகநோக்கி
மேவுகலையுள்ளவிகற்பமெல்லாங்கற்றனையோ
தேவனெனத்தேசிகனைச்சிந்தைமகிழ்வித்தனையோ
வேவுசுடர்வேலோயெனையுநினைப்பாயோ.

(இ - புனை.) தாவிச்செல்லுகின்ற குதிரைக்கூட்டிய தேரினையுடைய ராச குமாரன் முகத்தைப்பார்த்து, யாவரும் விரும்புகின்ற அறுபத்து நான்குகலை

களுங் கற்றுக்கொண்டனையா? ஆசாரியனைக் கடவுளாகப் பாவனைசெய்து அவர் மனம் சந்தோஷிக்கும்படிச் செய்தனையா? பகைவர்மேல் செலுத்தும்படியான வேலையுடைய புத்திரனே! எம்மையும் எப்போதாவது நினைத்திருப்பையா? எ - று. (கூட)

சொல்லாயெனமுனிவன்சொல்லுமுறைகேட்டு
நல்லாளடிதொழுதுநானிலத்துமாய்ந்தவர்போற்
புல்லார்புறங்காட்டிற்போடாதுயிரளித்த
வல்லாய்நினையுமறந்திருக்கவல்லோமோ.

(இ - புணை.) சொல்லென்று சிவயோகி சொல்லியவார்த்தையை ராசஸ்திரிகேட்டு, அவர்பாதத்தைவணங்கிச் சுவாமி! இவ்வுலகத்தில்இறந்தவர்களைக் கொண்டுபோய்ப் போடுவதுபோல முன்னிறந்திருந்த புத்திரனைப் புற்கள் நிறைந்த சுடலையிற் போட்டுவிடாதபடிக்கு உயிர்கொடுத்தவல்லவரே! உம்மையும் நாங்கள் மறந்திருக்கவல்லமா? எ - று. (கச)

நீணிலமேல்வீந்தவுயிர்கீயளிக்கப்பெற்றோனை
மாணவகனுகமறைமுனியேகொண்டருளிக்
காணரியசெய்யகோற்காவலவர்நீதிபுகன்
றுணவநீடாதவறிவுமளிப்பாயென்றுள்.

(இ - புணை.) சிவயோகியே இந்தப்பெரிய வுலகில் இறந்த வுயிரை தேவரீர் கொடுக்கப்பிழைத்திருக்கும் என்புத்திரனைச் சீஷனாகக்கொண்டு, இந்தன்மைத்தென்று எளிதில் அறியக்கூடாத செங்கோல் செலுத்தும் அரசர்களுக்குரிய நீதிகளைச்சொல்லி, ஆணவம் மேலிடாத வண்ணம் ஞானமும் அருள் செய்யுமென்று சொன்னுள். எ - று. மாணவகன் - மாணாக்கன். (கடு)

இத்தகையமாற்றமிவளுரைப்பக்கேட்டமுனி
சித்தமுவந்தசிறுவன்முகநோக்கிக்
கொத்தவிழும்பைந்தார்க்குமாநீகேட்டியென
உத்தமனன்னீதிமனுநூலுணர்த்தினன்.

(இ - புணை.) இத்தன்மையுள்ள வசனங்களை அந்தராசஸ்திரி சொல்லக் கேட்ட சிவயோகியானவர் மனஞ் சந்தோஷித்துப் புத்திரன் முகத்தைப்பார்த்துப் பூங்கொத்துக்கள் மலர்ந்திருக்கும் மாலையணிந்தகுமரனே! நீ கேளென்று நல்ல நீதிகளைச் சொல்லும் மனுநூலை அருளிச்செய்தார். எ - று. (கசு)

ஆழியுலகத்தினந்தணரேயாதியாய்
வாழுமொருநான்குவருணத்தோர்தம்மையெல்லா

ழுழிமுதல்வனுருவெடுத்துச்செங்கோலாற்
சூழிமதயானைத்தொல்வேந்தாய்க்காக்குமே.

(இ - புணை.) சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் வாழுகின்ற பிராமணர் முதலாகிய சான்குவருணத்தாரையெல்லாம் ஊழிமுதல்வனெனிய பரமசிவனே நெற்றிப்பட்டங்கட்டிய மதத்தயானையையுடைய பழமையாகிய அரசர் களாகத்திருமேனிகொண்டு நீதியிறற்காத்தருளுவர். எ - று. (கள)

வேந்தன்முறைதிறம்பின்வேதவிதிதிறம்பு
மேந்திழையார்தங்கற்புமில்லறமுநில்லாவா
மாந்தர்பசியாலுணங்கமழைவறக்கு
பாந்தண்முடிக்கிடந்தபாரின்விளைவஞ்சுமால்.

(இ - புணை.) அரசன நீதிதவறினால் வேதவிதிகள் தவறும், மாதர்களுடைய கற்பும் இல்லறமு மாறிப்போம், மனிதர்கள் பசியால்வருந்தும்படி மழை பெய்யாமல் ஆதிசேடன் முடியிலிருக்கும் பூமியினிடத்தில் பயிர்விளைவுகுறைந்துவிடும். எ - று. (கழ)

தீயூட்டித்தாமுண்ணுஞ்செய்தவத்தோரானினங்க
ணேயூட்டுகாயமிகழ்ந்தியற்றுநோன்பிலோர்
வேயூட்டுதோளார்விருத்தர்சிறுபாலர்தமைத்
தாயூட்டிப்போற்றுதல்போற்றூர்வேந்தன்காக்குமால்.

(இ - புணை.) அக்கினிதேவனுக்கு அவிர்ப்பாகங்கொடுத்து உண்ணுகின்ற பிராமணர்கள் பசுக்கள் நோயைத்தருகின்ற உடலெவெறுத்துத் தவஞ்செய்கின்ற முனிவர்கள் பசியமூங்கிலையொத்த தோள்களையுடைய ஸ்திரிகள் விருத்தர்கள் இவர்களைத் தாயானவள் சிறுபிள்ளைகளை யூட்டிவளர்ப்பதுபோல, வெற்றி மாலையணிந்த அரசன் காப்பன். எ - று. (கஙு)

தேவர்நிலைகடவார்மேலோர்நிறம்பிழையார்
நாவினிரண்டுரையார்கன்கல்லைவடுரியார்
காவன்முறைதிறம்பார்காமச்செயல்பெருக்கார்
பூவலயங்காவல்புரியும்புரவலரே.

(இ - புணை.) இவ்வுலகத்தைக்காக்கும் அரசரானவர்கள் தேவர்கள் நிலைமையைக்கடவார்கள், பெரியோரிடத்துக் குற்றஞ் செய்யார்கள், நாவிலற்றவறியுரையார்கள், நன்றல்லாத காரியங்களைச் செய்யார்கள், காவலின்முறைமை மாறூர்கள், காமச்செய்கை அதிகப்படுத்தார்கள். எ - று. (உ0)

உற்றவூறஞ்சாப்படையுமுயர்குடியு
முற்றுலவாப்பைங்கூழுமுன்வருதல்சேமிக்கும்
பெற்றியமைச்சுமுதவும்பெருந்துணையுங்
கொற்றவாணுமுடையானேகோமகனே.

(இ - புணை.) ஆயுதங்களால் தங்கள் சரீரத்திற் பொருந்திய காயங்களுக் குப் பயப்படாத சேனையும், உயர்வானகுடியும், முழுவதுங் கெடாத பசியபயி ரும், மேல்வருவதையறிந்து முன்னதாகக் காத்துக்கொள்ளுகிற தன்மையுள்ள மந்திரிகளும், உதவிசெய்யத்தக்கபெரியதுணையும், வெற்றிபொருந்திய மதில ரண் முதலிய நால்வகையாணுமுள்ளவனே அரசனென்று சொல்லுவார்கள். எ - று. நால்வகை அரணுவது, மதில் அகழ் காடு மலை என்பனவைகளாம். (உக)

ஏடவிழ்ந்தைந்தாரோயிமையோர்பதம்பெறினு
நாடுநடுங்குநன்கல்லனபுரியார்
வேடர்புரிவேட்டஞ்செய்யார்வினைதருஞ்சூ
தாடநினையார்மட்டுண்ணுரரசரே.

(இ - புணை.) இதழ்விரிந்த மாலையணியும் ராசகுமாரனே ! அரசர்கள் தேவர்பதவிபெற்றாலும், தேசத்திலுள்ளவர் நடுங்கும்படி நன்மையல்லாத காரி யங்களைச்செய்யார்கள்; வேடர்களைப்போல வேட்டைத்தொழில் செய்யார்கள், பாபத்தைத்தருகின்ற சூதாடலை நினையார்கள், மதுபானஞ்செய்யார்கள். எ-று. மட்டு - மது. (உஉ)

சூரவர்தமைக்காப்பர்செய்ந்நன்றிகொல்லார்
கரவடனைக்காய்வர்பழிகண்ணேட்டஞ்செய்யா
ரிரவலருக்கீவரெதிர்த்தோர்முனையின்
விரவுதமதுயிருமெண்ணுர்கள்வேந்தரே.

(இ - புணை.) அரசர்கள் பெரியோரைக் காப்பார்கள், ஒருவர்செய்த உத வியைமறவார்கள், வஞ்சகனைக்கோபிப்பார்கள், பழிசெய்யார்கள், தாக்ஷணியம் பாராட்டுவார்கள், இரப்பவர்களுக்குக் கொடுப்பார்கள், பகைவரால் சூரிட்டசண்டை யில் தங்களுயிரைப் பெரிதாகவெண்ணுவார்கள். எ - று. (உந)

வேறு.

வைகறையெழுந்துபுனிதநீராடிவான்முறையீசனைவணங்கித்
தெய்வவேதியருக்கான்குலநிதியந்தெளிபுனற்பழனமோடுதவி
மைதவழ்கண்டனடியவர்பகவராதியர்மருவினரெவர்க்குங்
கைகவிறுநெய்தீம்பயறுன்பால்கன்னன்முப்பழுக்காதுங்கலந்து.

(இ - புணை.) உதயகாலத்தில் நித்திரைதெளிந்தெழுந்து பரிசுத்தமுள்ள நீரில் ஸ்நானஞ்செய்து, ஆகமவிதிப்படிப் பரமசிவனைப்பணிந்து, தெய்வத்தனமையுள்ள பிராமணர்களுக்குப் பசுக்களும் திரவியமும் தெளிவாகிய நீர் நிறைந்த விளைநிலங்களுந் தானமாகக்கொடுத்து, பரமசிவனுடைய அடியார்களும் முனிவர்களுக்கும் யதிகளுக்கும் கையிற்பற்றிக்கொள்ளத்தக்க வாசனையுள்ள நெய் மதுரமுள்ளபருப்பு பசுவின்பால் வெல்லக்கட்டி மூப்பழங்கள் இவைகளுடன்சேர்த்து, எ - று. வைகறை-விடியற்காலம். பகவர்-முனிவர். ()

வாசனன்கருணையடிசிலுமருத்திமருவியவிருந்தாடுந்துய்த்தர்
பாசிலைபிளவுகருப்புரமருந்திப்பரிமளக்கலவைத்தன்சாந்தம்
யோசனைகமழுவணிந்துகல்லணிகளானிமுடியாதியடையினந்தா
கீசகத்தடைக்குமாவியக்தானகிளரொளிமருங்குறச்சாத்தி.

(இ - புணை.) வாசனைதங்கிய கல்லடொளியலுடன் அன்னம் உண்பித்து, வந்திருக்கிற விருந்தாளிகளுடன் தாமுமுண்டு, பச்சைக்கருப்பூர முதலாகிய வாசனையுடன்தாம்பூலம்தரித்துக்கொண்டு, வாசனையுள்ளகூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு யோசனைதூரம் பரிமளிக்கும்படிப்பூசிக்கொண்டு, மகுடமுதலாகிய கல்ல ஆபரணங்களணிந்துகொண்டு, மூன்றிற்குழையில் தடைக்குத்தக்கதாகப் பாலின்புகையையொத்துள்ள அதிகமெல்லியவஸ்திரத்தை இடையிலுடுத்துக்கொண்டும், எ-று. கருனை-பொளிக்கறி, கீசகம்-மூங்கிற்குழை. ()

அண்டர்கள்சூழப்புரந்தரனிருந்தவையெனவருமணிகுயின்ற
தண்டிறன்மடங்கற்றவிசின்வீற்றிருந்துமேலைத்தர்வந்திடுந்திறையளிப்பக்
கொண்டவின்முரசமுன்றினின்முழங்கவரசினங்குமரருங்கதிர்வேல்
மண்டலாதிபருஞ்சேனகாவலருமந்திரத்தலைவரும்வணங்க.

(இ - புணை.) தேவர்கள் தன்னைச்சூழ்ந்துகொள்ளடிருக்கும்படித் தேவேந்திரன் வீற்றிருக்கும் சபையைப்போல் கிடைப்பதற்கரிய ரத்தினங்கள்பதித்த மிகுந்தபலமுள்ள சிங்காசனத்தில்வீற்றிருந்து, பகைவர்கள்வந்து தாக்கள் கட்டுகிற திறையை அளந்துகொடுக்கவும், அரண்மனை முகப்பில் மேகம்போல் பேரிகைமுழங்கவும், ராசகுமாரர்களும் ஒளிதங்கிய வேலையுடைய மண்டலாதிபரும், சேனாதிபர்களும் மந்திரிமார்களும் வணங்கவும், எ - று. (உசு)

நீதியுமொற்றுகிரிலாக்கண்ணுநீணிலத்தில்லையெழுதிக்கும்
வேதியர்தேவர்மெலிந்துளார்வறிஞர்மெலிவறக்குறைத்திறம்வினை
மோதருங்குடியுமுலப்பிலாநிதியுமுயர்ந்திடலறுதினங்காத்துஞ்
சூதினிற்பகைவர்திருவினைக்கவருஞ்சூட்சியும்வினையமுஞ்சூழ்ந்து.

(இ - புனை.) நீதியும் தூதர்களுமே தமக்குக் கண்களாகக்கொண்டு, இவ்வுலகில் பாவத்தையொழித்தும், பிராமணர்கள் தேவர்கள் மெலிவடைந்தவர்கள் வறுமையாளர் இவர்கள் வருத்தம் நீங்கும்படிக் குறைப்பாட்டைவிலவியும், சொல்லுதற்கரியகுடிகளும், அழியாதநிதியும் அதிகரிக்கும்படி அனுதினங் காத்தும், சூதினுலே பகைவருடைய செல்வத்தை அபகரிக்கும்படியான தந்திரத்தையும் அதற்கேற்ற முயற்சியையும் ஆலோசித்தும், எ - று. (உஎ)

தருமநூலாய்ந்தமைடந்தவர்ப்புரந்துந்தடுப்பருங்காலங்களுணர்ந்து
மெரிபசும்பூணுர்கடத்தொழில்கண்டுமியாழிஞரின்னிசைகேட்டும்
விரியிருண்மாலைப்பொழுதெலாமனங்கன்விழாவணிநடத்துதல்போல
புரிகுழன்மடவார்கலவியிற்றினைத்தும்போக்குவர்புரவலர்பொழுதே.

(இ - பனை.) பகற்பொழுதில் தருமசாஸ்திரங்களை ஆராய்ந்தும், தம்மை அடைந்தவர்களைக் காப்பாற்றியும், தடுப்பதற்கரிய காலங்களை அறிந்தும், பிரகாசிக்கும் பொன்னுபரணமணிந்த நடனப்பெண்கள் ஆடும் நாடகத்தைப்பார்த்தும், வீணைவாசிப்பவர்கள் இனிய இசையைக்கேட்டும், இராப்பொழுதில் மன்மதனுக்குத் திருவிழாச்செய்வதுபோல் தங்களுக்குரிய மனைவியரிடத்தில் கலவித்தொழில்புரிந்தும், அரசர்கள் பொழுதுபோக்குவார்கள். எ - று. காலங் களுணர்தல் தனக்குச் செயம்வரத்தக்க காலங்களையறிதல். (உஅ)

இத்திறமவனிபுரக்கவினிறவதிண்ணிலதிண்ணிலகாலஞ்
சத்திரமொன்மிற்றரைமுழுதாண்டுதமனியகடும்படியாள
உத்தமவேள்விக்களறறுறைமுடித்திவ்வுருவொழித்தும்பராய்வான்மேற்
சித்திரவிமானத்தரம்பையரோடும்வைகுர்சிறுவகேளின்னம்.

(இ - புனை.) இத்தன்மையாகப் பூமியைக்காத்த அனேகம் அரசர்கள் அனேகங்காலம் ஒருகுடையின்கீழ் உலகமுழுவதையும் ஆண்டு, பொன்னுலகமாகிய சுவர்க்கத்தை யாள்வதற்காக யாகங்கள்செய்து, நிறைவேற்றி இவ்வுருவத்தையொழித்துத் தேவர்களாய் வானுலகத்தில், சித்திரவிமானமேறிச்சென்று, அரம்பாஸ்திரிகளுடன் இருக்கின்றூர்கள். புத்திரனே! இன்னமுஞ் சொல்லுகிறேன்கேள். எ - று. (உக)

அவ்வணநீயுங்கடைப்பிடித்தொழுகியரனடிக்கமலமேயரணைப்
பவ்வநீருலகமுழுவதுந்தனிவெண்பனிபதிக்கவிகையிற்புரப்பாய்
வெவ்வினையகற்றுஞ்சிவசுவசமும்யான்விளம்புகேணுனக்குவிரைவாத்
தெவ்வினையொறுக்குஞ்சயந்தரும்பாவமறுத்திடுமென்றுசெப்பினனால்.

(இ - புனை.) அத்தந்தன்மையை நீயுமனங்கொண்டுநடந்து, பரமசிவனுடைய திருவடித்தாமரையே துணையாகச் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகமுழு

வதையும் ஒப்பில்லாததாய்க் குளிர்ச்சிதங்கிய சந்திரவட்டக் குடையின்கீழ் ஆளுவாயாக; அன்றியும், கொடியவினைகளை நீக்கத்தக்கதான சிவகவசமும் உனக்குநான் சொல்லுகிறேன், அத்தச் சிவகவசமானது உன்னைக்கூடியிராத பகைகளை அறுக்கும், வெற்றியைக்கொடுக்கும், பாவங்களை நீக்கிவிடும், என்று சிவயோகி சொல்லியருளினார். எ - று. கவசம்போன்று காத்தலையுடைமையால் கவசமென்று பெயர்பெற்றது. (கo)

சிவயோகி பத்திராயுவுக்கு அரசியலளித்த அத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எoo.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

பன்னிரண்டாவது.

சிவகசவமுரைத்த அத்தியாயம்.

பங்கயத்தவிசின்மேவியிருந்துடற்பற்றுநீக்கி
யங்குரற்பூதசுத்தியடைவுடன்செய்தபின்னர்க்
கங்கையைத்தரித்தசென்னிக்கற்பகத்தருவைச்செம்பொற்
கொங்கைவெற்பனையபச்சைக்கொடியொடுமுளத்தின்வைத்தே.

(இ - புை.) பதமாசனத்திலிருந்து சரீரப்பற்றினையொழித்துப் பூதசுத்தி கிரமப்படி செய்தபிற்பாடு, கங்கையைத்தரித்த திருமுடியுடைய கற்பகவிருக்ஷம்போன்ற பரமசிவத்தையும் பொன்மலைபோன்ற தனங்களையுடைய பச்சைக்கொடியொத்த பார்வதிதேவியாரையும் மனதில் தியானித்து, எ - று. பெருமான் வேண்டுவார்வேண்டியதை ஈயவல்லவராதலால், கற்பகத்தரு என்று கூறினார். பத்மாசனமாவது இரண்டுதொடைமேலும் இரண்டு உள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல். (க)

அகிலநாயகனேய்ஞானவானந்தரூபியாகித்
தடருமணுவாய்வெற்பின்மேருற்றமாயுயிரையெல்லாங்
rியாகித்தரிப்பவனெம்மையிந்த
rிக்காக்க.

(இ - புரை,) எல்லாவற்றிற்குந் தலைவனுகியும், ஞானனைந்த சொரூபியாகியும், அகளாகிய அணுத்தன்மையாகியும், மலைபோலப் பெரியதாகியும், பூமியுமாகித் தகுதியுடன் ஆத்துமகோடிகளைத் தாங்குகின்ற கடவுள் இந்த உலகத்தில் தீங்குகோரிடாவண்ணம் அருள்செய்து எங்களைக் காக்கக்கடவர். எ - று

குரைபுனலுருவங்கொண்டுகூழ்தொறும்பயன்கணல்கித்
தரையிடையுயிர்கள்யாவுந்தளர்ந்திடாவண்ணங்காப்போ
னிரைநிரைமுகில்களீண்டிநெடுவரைமுகட்டிற்பெய்ய
விரைபுனலதனுள்வீழ்ந்துவிளிந்திடாதெம்மைக்காக்க.

(இ - புரை.) ஒலிக்காநின்ற சலரூபங்கொண்டு பயிர்கள்தோறும் பயன் கொடுத்து, இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களெல்லாந் தளர்ச்சியடையாதபடிக் காப்பவனுகிய கடவுள், வரிசைவரிசையாய்வருகின்ற மேகக்கன்சேர்ந்து பெரியமலைகளில் மழைபொழியப் பெருக்கெடுத்தோடும் சலத்தில் விழுந்து இறவாவண்ணம் எங்களைக்காக்கக்கடவர். எ - று. (ங)

கடையுகந்தன்னிலெல்லாவுலகமுங்கடவுட்டீயா
லடலைசெய்தமலைதாளமறைதாகடிக்குமீச
னிடைநெறிவளைதாபத்திலெறிதருசூறைக்காற்றிற்
றடைபடாதெம்மையிந்தத்தடங்கடலுலகிற்காக்க.

(இ - புரை.) யுகத்தின் இறுதியில் எல்லாவுலகத்தையும் தெய்வத்தன்மையுள்ள தீயிஞற் சாம்பராகச் செய்து, பார்வதிதேவியார் தாளமறையும்படி நடஞ்னசெய்யும் பரமசிவன் மார்க்கத்தின் மத்தியில் வளைத்துக்கொள்ளும் தீவெப்பத்துடன் வீசுகின்ற சூறைக்காற்றிஞற் றடைபடாமல் பெரிய சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் எம்மைக்காக்கக்கடவர். எ - று. அடல் - சாம்பர். தாபம் - அக்னி. (சு)

தூயகண்மூன்றிலேடுசுடருமிளம்பொன்வதனநான்கும்
பாயுமான்மழுவிலேடும்பகர்வரதாபயங்கண்
மேயதிண்புயங்களுணன்குமிளிருமின்னனேயதேசு
மாயதற்புருடனெம்மைக்குணதிசையதனிற்காக்க.

(இ - புரை.) பரிசுத்தமுள்ள திரிநேத்திரங்களும் பிரகாசியாநின்றவொன்னிறமுள்ள நான்கு திருமுகங்களும், பாய்கின்ற மான் மழுவினுடன் சொல்லுகின்றவரதமும் அபயமும் பொருந்திய திண்ணிய நான்குபுயங்களும், வினவ்

குகின்ற மின்னலே யொத்த திருமேனிக் காந்தியுமுள்ள தற்புருட மூர்த்தியானவர் கிழக்குத் திசையில் எம்மைக் காக்கக்கடவர். எ - று. வரதம்-வரங்கள் கொடுக்கிற குறிப்பால் கீழ்நோக்கிய இடதுதிருக்கரம். அபயம்-சரணஞ்செய்த அன்பர்கட்கு அச்சமில்லாமையைக்குறிக்கு மேனோக்கிய வலதுதிருக்கரம். (ரு)

மான்மழுசூலங்தோட்டிவனிதருகயனமாலே
கூன்மலியங்குசந்தித்தமருகங்கொண்டசெங்கை
நான்முகமுக்கணீலநள்ளிருள்வருணங்கொண்டே
யான்வருமகோரமூர்த்திதென்றிசையதனிற்காக்க.

(இ - புணை.) மான் மழு சூலம் கோடாரி புனையப்பட்டஉருத்திராகூஷ மாலை வஜ்ரவாகிய அங்குசம் தீ தமருகம் என்னு மிவைகளைத்தாங்கியசெங்கைகளும் நான்குதிருமுகங்களும் திரிநேத்திரங்களும் நீலம்போலச் செறிந்த இருணிறமுங்கொண்டு ருஷபத்தி லேறிவருகின்ற அகோரமூர்த்தியானவர் தெற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர். எ - று. தோட்டி - கோடாரி. நயனமாலை - ருத்திராகூஷமாலை, அகூஷம் - கண். தமருகம் - உடுக்கை என்னும் வாச்சியம். (சூ)

திவண்மறியக்கமாலேசெங்கையோரிரண்டுந்தாங்க
அவிர்தருமிரண்டுசெங்கைவரதத்தோடபயந்தாங்கக்
கவினிறவதனான்குங்கண்ணெருமூன்றுங்காட்டுங்
கவளமாமேனிச்சத்தியோசாதன்மேற்றிசையிற்காக்க.

(இ - புணை.) தாவுகின்ற மானையும் உருத்திராகூஷ மாலையினையும் இரண்டுதிருக்கரங்கள் தாங்கவும், பிரகாசியாகின்ற இரண்டு திருக்கரங்கள் அபயவரதம் தாங்கவும், அழகு நிறைந்த நான்குமுகங்களும் மூன்றுகண்களும் விளங்குகின்ற வெண்மை நிறமுமுள்ள சத்தியோசாதமூர்த்தியானவர் மேற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர். எ - று. மறி - மான். (எ)

கறைகெழுமழுவுமானுமபயமுங்கண்ணிணை
மறைதருந்தாடையுஞ்செய்யவங்கைகணான்குமேந்திப்
பொறைகொணான்முகத்துமுக்கட்பொன்னிறமேனியோடு
மறைபுகழ்வாமதேவன்வடதிசையதனிற்காக்க.

(இ - புணை.) உதிரந்தோயப்பெற்ற மழுவாயுதத்தையும் மானையும் அபயவரதங்களையும் உருத்திராகூஷமாலையினையும் சிவந்த நான்கு திருவதங்களிலும் தாங்கிச் சாந்தந்தங்கிய நான்குதிருமுகங்களிலும் மும்மூன்று கண்களும்

பொன்னிறமேனியுமுள்ள வேதங்களாற் புகழத்தக்க வாமதேவமூர்த்தி வடக்
குத்திசையிற் காக்கக்கடவர். எ - று. (அ)

அங்குசங்கபாலஞ்சூலமணிவரதாபயங்கள்
சங்குமான்பாசமக்கந்தமருகங்கரங்களேந்தித்
திங்களிற்றவளமேனித்திருமுகமைந்தும்பெற்ற
வெங்களீசானதேவனிருவிசும்பெங்குங்காக்க.

(இ - புனை.) அங்குசம் கபாலம் சூலம் அழகிய வரதாபயங்கள் சங்கம் மான் பாசம் ருத்திராக்ஷம் தமருகம் என்னு மிவைகளைப் பத்துத் திருக்கரங்க ளிலுமேந்தி, சந்திரனைப்போல வெண்மைநிறங்கொண்ட திருமேனியும் ஐந்து திருமுகங்களும் பெற்றுள்ள எங்கள் ஈசானமூர்த்தியானவர் பெரிய ஆகாய மெங்குங் காக்கக்கடவர். எ - று. (கூ)

சுருக்கம்

மைந்துறுபகன்கண்டொட்டோன்வரிவிழியகிலநாதன்
கொந்துணர்காசிவேதங்கூறுவோன்செவிகபாலி
யந்தில்செங்கபோலந்தாயவைம்முகன்வதனமுற்றும்.

(இ - புரை.) சந்திரசேகர மூர்த்தியானவர் எங்கள் சிரசினையும், ஒப் பற்ற நெற்றிக்கண்ணையுடையவரான பாலலோசனமூர்த்தியானவர் நெற்றி யையும், வலிபொருந்திய பகனென்னுஞ்சூரியனுடைய கண்ணைப்பறித்த மூர்த் தியானவர் நீண்டகண்களையும், விசுவநாதரானவர் பூங்கொத்தின் வாசனையை அறியத்தக்க நாசியினையும், வேதமருளிச்செய்த மூர்த்தியானவர் காதுகளையும், கபாலியென்பவர் செவ்விதாகிய கபோலத்தையும், பரிசுத்தமுள்ள பஞ்சானன மூர்த்தியானவர் முகத்தினையும், (காக்கக்கடவர்.) எ - று. அந்தில் - அசை. பன்னிரண்டுசூரியரில் பகன் ஒருசூரியன், இச்சூரியன்கண் தக்க யாகத்தில்பறிக் கப்பட்டது. அகிலநாதனென்றது - விசுவநாதரை, விசுவம் - உலகம். (கo)

வளமறைபயிலுநாவணிமணிநீலகண்டன்
களமடுபிணைகபாணிகையினைதருமவாகு
கிளர்புயந்தக்கன்யாகங்கெடுத்தவன்மார்புதூய
வொளிதருமேமருவில்லியுதாரமன்மதனைக்காய்ந்தோன்.

(இ - புனை.) வளப்பமுள்ள வேதங்களைப் பயில்கின்ற நாவுள்ள மூர்த்தி யானவர் நாவினையும், நீலகண்ட மூர்த்தியானவர் கண்டத்தினையும், போர் செய்யத்தக்க பிணைகளென்னும் வில்லேந்திய பிணைபாணியானவர் கைகளையும், தர்மவாகு என்பவர் விளங்குகின்ற புயங்களையும், தக்கனுடைய யாகத்தைஅழித்

தமூர்த்தியானவர் மார்பினையும், கல்ல ஒளியைத் தருகின்ற மேருவில்லியென்னு மூர்த்தியானவர் வயிற்றினையும், (காக்கக்கடவர்) எ - று. கனம் - கண்டம்.(கக)

இடையிடமுகத்தோன்றுதைதபுந்திரம்மீசன்மன்னும்
புடைவளராரைகுபேரமித்திரன்பொருவில்வாமம்
படர்சகதீசன்சானுபாய்தருமிடபகேது
விடைதெறிகணைக்காலெய்ந்தவிமலன்செம்பாதங்காக்க.

(இ-புணை.) காமதகன மூர்த்தியானவர், இடையினையும், கணபதியின் பிதாவாகிய சிவபெருமானவர் நாபியினையும், நம்முடைய ஈசுவரரானவர் புடைபரந்த அரையினையும், குபேரன்முழுனுகிய மூர்த்தியானவர் ஒப்பில் லாத தொடையினையும், வியாபகராகிய சகதீசன்முழங்காலையும், பாய்கின்ற ருஷபகேதுவானவர் ருஷபத்தின் திமிலையொத்த கணைக்காலையும், பொருந்திய விமலமூர்த்தியானவர் செவ்வியபாதத்தையுந் தனித்தனிகாக்கக்கடவர் எ-று. சானு -முழந்தாள். மேற்பாட்டினீற்றில் 'மதனைக்காய்ந்தோன்' என்பதின் உரையை இங்கு கூட்டப்பட்டது. (கஉ)

வருபவன்முதல்யாமத்துமகேசன்பின்னிரண்டாம்யாமம்
பொருவருவாமதேவன்புகன்றிடுமூன்றும்யாமஞ்
செருமலிமழுவாளங்கைத்திரியம்பகனுலாம்யாமம்
பெருவலியிடபவூர்திபிணியறவினிதுகாக்க.

(இ - புணை.) வேதங்களில் வழங்கப்படுகிற பவன் என்னும் திருப்பெ யருள்ள மூர்த்தியானவர் முதற்சாமத்தும், மகேசுரன் இரண்டாஞ் சாமத்தும், ஒப்பில்லாத வாமதேவர் மூன்றுஞ்சாமத்தும், போருக்கேற்ற மழுவாயுதமேந் திய திருக்கரத்தையுடைய திரியம்பகர் காலாஞ்சாமத்தும், மிகுந்த சரீரவன் மையானது பிணியால் சோர்வுறுதபடி ருஷபவாகன மூர்த்தியானவர் காக் கக்கடவர். எ - று. (கஙு)

கங்குலின்முதல்யாமத்துக்கலைமதிமுடித்தோன்காக்க
தங்கியவிரண்டாமியாமஞ்சானவிதரித்தோன்காக்க
பொங்கியமூன்றும்யாமம்புரிசடையண்ணல்காக்க
யகாக்க.

(இ-புணை.) இராத்திரியின் முதற்சாமத்தில் சந்திரசேகரமூர்த்தி காக்கக்க டவர். இரண்டாஞ்சாமத்தில் கங்காதரமூர்த்திகாக்கக்கடவர், மூன்றாஞ் சாமத் தில் சடாமகுட மூர்த்தியானவர் காக்கக்கடவர், கெடுதலில்லாத காலாஞ் சாமத்தில் உமாபதிகாக்கக்கடவர், எ - று. (கசு)

அனைத்துளகாலமெமலலாமந்தகறகடிஙம்தாணுள்ளுங்
தனிப்பெருமுதலாயுள்ளசங்கரன்புறமுந்தாணு
வனைப்புறுநடுவுந்தூயபசுபதிமற்றுமெங்கு
நினைத்திடற்கரியதொன்மைச்சதாசிவநிமலன்காக்க.

(இ - புனை.) எல்லாக் காலங்களிலும் காலசங்காரமூர்த்தியும், உட்புறத்தில் ஒப்பற்ற முதற்காரண கர்த்தாவாகிய சங்கரமூர்த்தியும், வெளிப்புறத்து ஸ்தாணுமூர்த்தியும், நடுப்புறத்துத்தூயபசுபதியும், மற்றெவ்விடத்திலும் நினைப்பதற்கரிய சதாசிவமூர்த்தியுமாகத் தனித்தனிக்காக்கக்கடவர். எ - று. (கடு)

நிற்புழிபுனைநாதனேகுழிநிமலன்மேனி
பொற்புறுமாதிநாதனிருப்புழிபொருவிலாத
வற்புதவேதவெத்தியருந்துயில்கொள்ளுமாங்கண்
டற்பசிவன்விழிக்கிற்சாமளருத்திரன்காக்க.

(இ - புனை.) நிற்குமிடத்துப் புவனநாதரும், நடக்குமிடத்து நிர்மலமூர்த்தியும், சரீரத்தின் அழகினை ஆதிமூர்த்தியும், இருக்குமிடத்து ஒப்பில்லாத அற்புத மூர்த்தியாகிய வேதவேத்தியனும், நித்திரை செய்யுமிடத்துத் தற்பரசிவனும், விழிக்கும்பொழுதிற் சாமளருத்திரனுமாகத் தனித்தனிக்காக்கக்கடவர்கள். எ - று. (கசு)

மலைமுதற்றருக்கந்தன்னிற்புராரிகாத்திடுகமன்னுஞ்
சிலைமலீலைடரூபன்செறிந்தகாண்கத்திற்காக்க
கொலையமர்கற்பத்தண்டகோடிகள்குலுங்கநக்குப்
பலபடகடிக்கும்வீரபத்திரன்முழுதுங்காக்க.

(இ - புனை.) மலைமுதலாகிய தருக்கங்களில் புராரிகாக்கக்கடவர், சர்வசங்கார முண்டாகுங் கற்பகாலத்தில் அண்டகோடிகளெல்லாம் நடுங்கும்படி கடனஞ்செய்கின்ற வீரபத்திரராணவர் முழுதுங்காக்கக்கடவர். எ - று. (கஎ)

பல்லுலாப்புரவித்திண்டேர்படுமதக்களிறுபாய்மா
வில்லுடைட்படாதிதாக்குமிடைந்திடுமெண்ணில்கோடி
கொல்லியின்மாலைவேற்குறுகலர்குறுகுங்காலை
வல்லியோர்பாகன்சங்கைமழுப்படைதுணித்துமாய்க்க.

(இ-புனை.) பிடரி மயிரினையுடைய குதிரைகள்கட்டிய பலமுள்ளதேர்கள் மதநீரொழுகும் யானைகள் தாவிச்செல்லுங் குதிரைகள் வில்லேந்தியபதாதிகள் என்னுமிவைகள் சேர்ந்துநெருங்கி, அளவில்லாதவர்களாய்ப்போரில் வெற்றி மாலையணிந்த கூர்மையான கொலைவேலுள்ள பகைவர்கள் போருக்கு வந்தகாலத்தில், அவர்களைப் பார்வதிபாகன் திருக்கரத்திலிருக்கும் மழுவாயுதம் துணித்துக்காக்கக்கடவது. எ - று. (கஅ)

கீர்ப்புணரியாடைத்தரணியைச்சுமந்துமானப
பைத்தலைநெடியபாந்தள்பம்மறலியனைத்துந்தேய்ந்து
முத்தலைபடைத்ததொக்குமூரிவெங்கனற்கொள்சூலம்
பொய்த்தொழிற்கள்வர்தம்மைப்பொருதழித்தினிதுகாக்க.

(இ - புணை.) பெருமைபெற்ற படத்தினையுடைய பெரியஆதிசேஷனும், தாவுகின்ற அலைகளையுடைய நீர்நிறைந்த சமுத்திரத்தையே ஆடையாக உடுத்த பூமியைத்தாங்கி, பலதலைகள்தேய்ந்து மூன்றுதலை படைத்ததைப்போலும் பலமும் வெவ்விய தீயையுங் கொண்ட சூலமானது, பொய்த்தொழிலை யுடைய கள்வர்களைப்பொர்புரிந்து அழித்து இனிதாகக் காக்கக்கடவது. எ - று. சூலம் காக்க என முடிக்க. (கஅ)

மூடங்குளைமுதலாய்நின்றமுழுவலிக்கொடியமாக்க
ளடங்கலும்பிணங்கொல்கவென்றிவையினைத்துமுள்ளந்
திடம்படநினைத்துபாவந்தீர்த்துசிவகவசத்தன்னை
யுடன்படத்தரிப்பையாளுலம்பொருகுவவுத்தோளாய்.

(இ . புணை·) திரண்டகல்லையொத்துக் குவிந்த தோள்களையுடையவனே! மடங்கிய பிடரிமயிரினையுடைய சிங்கமுதலாயிருக்கும் மிகுந்த பலமுள்ள கொடிய மிருகங்களை யெல்லாம் பிணகம் என்கிற .வில்லானது கொல்லக்கட வது, என்றிவ்வாறு எல்லாவற்றையும் இருதயத்தில் உறுதிகொள்ள தியானித் துப் பாவங்களைவெல்லும் சிவகவசத்தைத் தரித்துக் கொள்ளையாளும், எ-று. சிவகவசத்தைத் தரித்தலென்பது விபூதியைத்தரித்தல். (உ ப)

வேறு.

பஞ்சமாபாதகங்கள்போம்பகைகண்மாய்ந்திடு
மஞ்சலின்மறலியுமஞ்சியாட்செயும்
வஞ்சமேயொழிந்திடும்வறுமைநீங்கிடுந்
தஞ்சமென்றிதனைத்தரித்தல்வேண்டுமால்.

(இ - புணை.) பஞ்சமாபாதகங்கள் நீங்கும், பகைகள் கெட்டுப்போம், ஒரு வருக்கும் அஞ்சாதயமனும் உனக்குப்பயந்து பணிவிடை செய்குவான், கொடி. யவியாதிகளுந்தீர்ந்து விடும், தரித்திரந்தொலையும், ஆதலால் இதுவே சமயக்கா தாரமென்று நீதரித்துக்கொள்ளவேண்டும். எ - று. (உக)

என்றிறைகவசத்தினியல்பியம்பிய
னன்றறிமாதவனையந்துபின்னரும்
வன்றிறல்புரிவடிவாளரந்தெவ்வரை
வென்றிகொள்சங்கமும்விருட்பினல்கியே.

(இ - புரை.) இவ்வாறு சிவகவசத்தின்றன்மையைச்சொல்லி, நன்மார்க்க மறிந்து அச்சிவயோகியானவர் பின்னும் ராசபுத்திரனிடத்தில் கிருபைவைத்து, யுத்தமுகத்தில் மிகுந்தபராக்கிரமஞ் செய்யத்தக்க வடிவாளும், பகைவனைச் செயங்கொள்ளுகின்ற சங்கமும், விருப்பத்துடன் கொடுத்து, எ - று. (உஉ)

கடவுணீறவனுடல்கவினச்சாத்தியே
யடுகரிபன்னிரண்டாயிரத்தடை
நெடுவலியளித்துநீடுவாழ்கென
வடுவறவாழ்த்தியேவழிக்கொண்டானரோ.

(இ-புரை.) தெய்வத்தன்மையுள்ள விபூதியை அவன் சரீரத்தில் அழகுபெறத் தரித்து, போரில் பகைவரை வெல்லத்தக்க பன்னீராயிரம் யானைபலமுங் கொடுத்து, நீநெடுங்காலம் தீர்க்காயுசுள்ளவனுய் வாழக்கடனைவையென்று நன்முக ஆசீர்வதித்துப் போய்விட்டார். எ - று. (உக)

பன்னிரண்டாவது-சிவகவசமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-எஉக.

சிவமயம்.

பதின்மூன்றுவது

பத்திராயுவின்கதைதுரைத்த அத்தியாயம்.

ஈதவீறுயர்சிவகவசத்தியல்பென்ன
வேதவேள்விசெய்முனிவர்யாவர்க்கும்விளம்பிக்
காதல்வென்றிவேற்பத்திராயுவின்கைதன்னிற்
சூதமாமுனிபின்னருமொருகதைசொன்னன்.

(இ-னை.) சிவகவசத்தின்தன்மை யிப்படிக்கொத்தென்று வேதங்களின் விதிப்படி யாகஞ்செய்கின்ற முனிவர்களுக்குச்சொல்லி, பின்னும் பகைவரை வெல்லத்தக்க வெற்றிவேலையுடைய பத்திராயுவின் சரித்திரங்களில் ஒரு சரித்திரஞ் சூதமுனிவர் சொல்லுவாராயினர். எ - று. (க)

வணிகமைந்தனுமன்னவன்சிறுவனும்வளர்நாட்
பிணியிணண்பொரீஇமனையொடுமெதலையைப்பிரிக்த
வணிகொள்வச்சிரவாகுவின்குலப்பகையான
றிணிதடம்புயனளப்பருஞ்செறிகடற்படைடையோன்.

(இ-புணை.) வணிகனுடைய புத்திரனும் ராசபுத்திரனும் வளருகாளில், தன்மனைவிக்கும் புத்திரனுக்குங்கண்டிருந்த வியாதியினல் அவர்களிடத்தில் விருப்பம்நீங்கிக் காட்டுக்கு அவர்களை யனுப்பிவிட்ட வச்சிரவாகுவென்னும் அரசனுக்குக் குலப்பகையாகிய மிகுந்த புசபலமுள்ளவனும் அளவிடுதற்கரியசேனை சமுத்திரத்தை யுடையவனும், எ - று. (உ)

ஏமத்தேரினனெனும்பெயர்மகதர்கோனெழுந்து
சேமத்தேர்பதினயிரஞ்சூழ்வரச்சென்று
வாமத்தின்சிலைவச்சிரவாகுவென்றுரைக்கும்
காமத்தோளினென்றசானணங்கொள்வதுசமைந்தான்.

(இ - னை.) பதினயிரம் சேமத்தேர்கள் சூழ்ந்துவரும்படிப் புறப்பட்டுப் போய் அழகும்பலமுமுள்ள வில்லேந்திய ஏமத்தேரினன் என்னும் பெயருள்ள மகததேசாதிபதியானவன் மாலையணிந்த தோளையுடைய வச்சிரவாகுவினது தசானனமென்னும் பதியையபகரித்துக்கொள்ள எண்ணங்கொண்டான். எ-று.

வதிகடோறுநின்றுறலெப்படத்தியும்வாவிக்
குதிகொள்கன்றினந்துயருறவானிரைகொண்டும்
பதிகடோறும்வெங்கனலெரிபரப்பியும்பனிவாய்ப்
மதியுலாவருபுரிசையையவளைந்தனன்மறமேவான்.

(இ - புணை.) அவ்வாறு எண்ணங்கொண்ட மகததேசாதிபதி மார்க்கங்கள்தோறுமிருந்து வழிநடக்கும் அத்தேசத்தாரை யடித்துப் பறித்தும், தாவிக்குதிக்குங் கன்றுகள் துன்பமுறும்படிப் பசுமந்தைகளை யுபகரித்தும், ஊர்களையெல்லாந் தீயினல் கொளுத்தியும், குளிர்ச்சியும் வெண்மைநிறமுமுள்ள சந்திரமண்டலத்தையளாவுகின்றமதிலையவளைந்துகொண்டான். எ-று. வதி-வழி. (ச)

வேறு.

மாறுசெய்மன்னன்வந்துவளைந்தான்மதிலென்னச்
சீறியமன்னன்வச்சிரவாகுசெருவேட்டு
வீறுடைமன்னுந்தாளிணையுண்டாம்விறலுண்டாம்
பாறுகடின்னுங்கூரயிலுண்டாம்பகையுண்டோ.

(இ - புணை.) பகைகொண்ட மகததேசத்தான்வந்து மதிலையவளைத்துக்கொண்டானென்று சொல்லக்கேட்ட வச்சிரவாகு வென்னும் அரசன், கோபத்துடன் யுத்தஞ்செய்ய விருப்பங்கொண்டு, வீரூப்புடன் பொருந்தும் நம்முடைய இரண்டுதோள்களும் துணையாயிருக்கின்றன; பராக்கிரமமுண்டாயிருக்கின்றது; பருந்துகள் மாம்சப்பற்றுக்காக மேலேசுழலத்தக்ககூர்மையுள்ளவேலாயுதமுண்டாயிருக்கின்றது; நமக்குப்பகைவருமுண்டோ? எ-று. பாறு-பருந்து.

என்னவுரைத்தாங்கேறினணற்றேரேறுமுன்
றுன்னினகொற்றஞ்சேர்படைவெற்றந்தொலையாத
மன்னரெதிர்த்தஞ்சாரணிமுற்றும்மடிவெய்த
வந்நிலைமைக்கண்டேவர்வியக்குமமர்செய்தான்.

(இ - புணை.) இவ்வாறுசொல்லி நல்லதேரிலேறினன், அப்படியேறுவ தற்குமுன்னே, வெற்றியுள்ளபடைகளுமவ்வதுசூழ்ந்தன; அழியாத வெற்றியை யுடைய அரசர்களாகிய எதிர்த்த பகைவருடைய சேனவகுப்பெல்லாம் மடி யும்படித் தேவர்களுங்கண்டு ஆச்சரியப்படயுத்தஞ்செய்தான். எ - று.

வெற்றம் - வெற்றி. (சு)

திண்டிறல்வேலான்செய்தகொடும்போர்த்திறனெல்லாங்
கண்டொருதேன்றிருகண்ணுங்கனல்பொங்க
வண்டமர்தாரோனேமதன்போர்வயவேந்தன்
புண்டருவேலான்செங்களமஞ்சப்போர்செய்தான்.

(இ - புணை.) மிகுந்தபலம்பொருந்திய வேலாயுதத்தையுடைய வச்சிரவா குசெய்த கொடிதான சண்டைத்திறத்தை யெல்லாங்கண்டு மனம்பொருமல், தன்னிரு கண்களிலும் தீப்பொறிபொங்க, வண்டுகள்பொருந்திய மாலையணிந் திருக்கும் மரதனென்னும் வெற்றியுள்ள அரசனவன் பகைவருடைய உட லில் எய்யத்தக்க வேலையுடைய வச்சிரவாகுவின்போர்க்களம் அஞ்சும்படி யுத் தஞ்செய்தான். எ - று. (எ)

மாறுடன்னோரிருவாருமறமொன்றிச்
சீறினர்தீயின்கண்கள்சிவந்தார்சிலகாண்மே
லூறுறுநூறுமம்புதொடுத்தார்கொடியிற்று
மேறியதின்டேர்முட்டவிடுத்தாரிகல்செய்தார்.

(இ - புணை.) பெருமை பெற்ற அவ்விருமன்னவரும் பகையுடன்கோபங் கொண்டுசீறிக் கண்கள் தீப்போலச்சிவந்து, வில்லிலுணில்வைத்து ஒவ்வொரு தரத்துக்கு நூறுநூறுகப் பாணங்களை அமோகமாகவிட்டு, கொடிப்பொழுதில் தாங்கள் ஏறிக்கொண்டிருக்கிற தேர்கள் ஒன்றுடனொன்று முட்டவிட்டுப் போர் செய்தார்கள். எ - று. (அ)

ஆயிரமம்போரொருவன்விடுக்கவனைவையெல்லா
மாயிரமம்பாலொருமன்னனறவெய்யு
மாயிருஞாலத்திருவருமொப்பும்வலிகண்டே
சேயிருவானத்தேவருநன்றெனருவென்றார்.

(இ - புணை.) ஒருவன் ஆயிரம்பாணங்கள் விடுக்க அனைகளையெல்லாம் ஆயிரம் அம்புகளால் மற்றொரு அரசன் அறுத்துத்தள்ளுவான், இவ்வாறுபெரிய

இவ்வுலகத்தில் இவ்விருவரும் அம்புகள் விடுக்குந்திறங்கண்டு அதிதூரத்திலிருக்கும் தேவர்கள் இவர்கள் செய்யும்போரானது அதிசயிக்கத்தக்கதென்றுகொண்டாடினர்கள். எ - று. (சு)

இத்திறம்வெம்போர்மன்னரியற்றிடுமேல்வைக்கண்
கொத்தலர்ளடந்தாரோமரதன்றன்குலமைந்தர்
முத்தணிமார்பன்வச்சிரவாகுபடைமுற்று
மத்திரமேவிக்கொன்றுகுவித்துமமையாராய்.

(இ - புணை.) இவ்வகையாக அவர்கள் கொடிய போர்செய்யும் சமயத்தில் கொத்தாகிய பூமாலையணிந்த ஏமாதனுடைய புத்திரர்கள் முத்துமாலையணிந்த மார்பையுடைய வச்சிரவாகுவின்சேனைகளெல்லாம் அம்புகளேவிக்கொன்று, பிணமலையாகக் குவித்துங் கோபந்தணியாதவர்களாய், எ - று.

எல்லை-சமயம். (சு0)

சேவறு.

சேர்த்தார்கலினமான்றிண்டோள்த்தசானனனே
யார்த்தார்தந்தாதையதிர்மணித்தேர்க்கட்டிலிட்டார்
நீர்த்தாமொருநாளுந்தீராப்பகையென்றூர்
பார்த்தார்திண்டோளேப்பணைமுரசஞ்சாற்றுகென்றூர்.

(இ - புணை.) சேணம்பூட்டிய குதிரைகட்டியபலமுள்ள தேரையுடைய தசானன் என்னும் அரசனைக்கட்டித் தன்தகப்பன் தேர்த்தட்டிலிலிட்டு, ஒருநாளுந் தீராதிருந்தபகையை இன்றேடொழித்தோமென்று தங்கள் புசபலத்தைவியந்து செயபேரி அடிக்கச்சொன்னர்கள். எ - று. கலினம்-குதிரைச்சேணம்.

மாதங்கந்திண்டோர்வயமாத்தொகைகவர்ந்தார்
காதம்பலதேன்றுங்கன்னியெயின்மடித்தார்
சீதஞ்செய்சோலைகர்செந்தீக்குணவளித்தார்
கோதம்புரிமனத்தார்கோயில்வளங்கூட்டுண்டார்.

(இ - புணை.) யானைகள் தேர்கள் குதிரைகள் என்னுந் சேனைத்தொகையைத் தங்கள்வசப்படுத்திக்கொண்டு, பலகாதவனையில் தோன்றுகின்ற உயர்முள்ள அழியாதமதிலை இடித்தார்கள்;குளிர்ச்சிதருகிற சோலையையும் நகரத்தையும் அக்கினிக்கு ஆகாரமாகக் கொடுத்துப் பின்னுங் குரோதங்கொண்ட மனத்தர்களாய் ராசன் அரண்மனையிலுள்ள பொருள்களையெல்லா கொள்ளைகொண்டார்கள். எ-று.மாதங்கம்-யானை.குரோதம் என்னும் வடமொழித்திரிபுகோதம்.

காடுகரந்தார்கடற்படைகைவிட்டாரென்
றோடுகெடுந்தேர்மகதற்கோகையெல்லாங்கூறியே

வீடுபெறாகண்ணுறும்விழைவினர்போற்றங்கடிரு
நாடனையுங்காவலர்க்குநண்ணியதுகூறுவாம்.

(இ - புனை.) எதிர்த்தசேனையிலுள்ளார் கையிலிருந்த ஆயுதங்களெயெல்லாம் போட்டுவிட்டுக் காட்டிலோடிப்போயொளித்துக்கொண்டார்களென்று, செல்லுகின்ற பெரிய தேரையுடைய மகததேசத்தரசனுக்குச் சந்தோஷ சமாசாரமெல்லாஞ்சொல்லி, மோகூவீட்டினை அடைவதற்கு விருப்பமுள்ள ஞானவான்களைப்போல அதிக சந்தோஷத்தை யுடையவர்களாய்த் தங்கள்சிறப்புள்ள தேசத்துக்குச் செல்லும் அந்த அரசர்களுக்குச் சம்பவித்ததைச் சொல்லுகிறும். எ - று. (கஉ)

தாமமணித்தோள்விடபன்றந்தசுடர்வாளு
மேமமுறுவெண்சங்குமேந்திநெடுவீதியின்வாய்
காமனுருவாய்ந்தனையகாளையிளந்தோழனெடுங்
கோமகனுநின்றுன்பதிகரிதுகூறுவார்.

(இ - புனை.) விடபன் என்னும் சிவயோகிகொடுத்த ஒளியுள்ள வாளாயுதத்தையும் இன்பந்தரத்தக்க ஜயசங்கத்தையும் பூமாலையணிகின்ற தோளில் தாங்கிக்கொண்டு மன்மதன் உருவம்பெற்றதுபோலஅழகுள்ள காளையாகிய இளமைப்பருவமுள்ள தன் தோழனுடன் ராசகுமாரன் நெடிய வீதியினிடத்து நின்றான். அப்போது வழிநடப்பவர்கள் இந்தவார்த்தை சொல்லுகிறார்கள். எ-று.

டாவியலுந்திண்டேர்மகதர்கோன்வாளமரிற்
கோவியலுமாற்றிக்கொடிகருந்தீக்கொளுவி
யேவியலுந்திண்சிலையான்வச்சிரவாகென்னுமொரு
சேவகனைச்சேர்த்துக்கொடுபதியிற்செல்கின்றான்.

(இ - புனை.) குதிரைகட்டிய திண்ணியதேரையுடைய மகததேசத்தரசன் கொலைசெய்யும்போரிலால் அரசாட்சியைமாற்றிக் கொடிகட்டியபட்டனத்தைக்கொளுத்திவிட்டுப் பாணங்கள் தொடுக்கும்படியான வில்லையுடைய வச்சிரவாகு என்னும் ஒருராசனைக் கட்டிக்கொண்டு தன்னகரத்துக்குப் போகின்றான். எ - று. (கரு)

மன்னனழுதாற்றல்கேட்டுமதிமயங்கி
யின்னலொடும்போகின்றானென்றுசெனுங்கடுஞ்சொற்
கன்னமுறுகாராசங்காய்ச்சிச்சொரிகியபோற்
பொன்னைமருந்தோள்விடலைகேட்டுப்புகைந்துசொன்னான்.

(இ - புனை.) அந்த வராசன் அழுகிறதைக்கேட்டு மதிமயங்கித் தின்பதுடன் போகின்றோம்என்றுசொன்னார்கள்; அவ்வாறு அவர்கள்சொல்லிய கொ

டுஞ்சொல் நாராசத்தைக்காய்ச்சிக் காதில் சொருகினதுபோலக் கேட்டு வீரலக்ஷ்மி குடிகொண்ட தோளையுடைய பத்திராயுகோபங்கொண்டு சொல்லுகிறான். எ - று. (கசு)

எங்கள்குலவேந்துக்கிடுதிறையிட்டேவல்செய்த
மங்குல்பொதியிஞ்சிமகதன்வலிபெற்றனனும்
சிங்கவடலோயச்சிறுமுயலும்வெல்லுமினிப்
பொங்கொளியோன்மங்கப்புதையிருளுங்காயுமே.

(இ-புனை.) எங்கள்குலத்து அரசனுக்குத் திறைகொண்டுவந்துகொடுத்து ஏவற்பணிசெய்கின்ற மேகமண்டலத்தையளாவிய மதில்சூழ்ந்தமகததேசத்தான் இப்போது பலம்பெற்றான். இனிமேல் சிங்கத்தின்வலிகெடச் சிறியமுயலும் வெல்லும்; சூரியன் மழுங்கத்தக்கதாக உலகத்தைமூடும் இருளுங்காயும். எ-று.

ஆனதசெங்கோலடன்மகதன்சேனையெல்லாம்
வானுடுகொள்ளவின்றுவாளாற்றுணித்திலனேனும்
பானுறுதேன்மொழியாளைத்தப்பதருஞ்சனிக்காத்
தானுடுவானடியார்தம்மடியானல்லேனே.

(இ-னை.) நீங்காத செங்கோல்நடத்தும் வலியுள்ள மகதனுடைய சேனைகளையெல்லாம் வீரசுவர்க்கத்திற் சேரும்படி இப்போது என்வாளால் துண்டஞ்செய்யாவிட்டால், பால்போல்மதுரிக்குந் திருமொழியினையுடைய பார்வதிதேவியார் எத்தும்படிப் பதஞ்சலிக்காக நடனஞ்செய்யும் பரமசிவனுடைய அடியார்க்கடியனல்லனாகக்கடவேன்.என்று சபதங்கூறி, எ - று. (கஅ)

என்றான்கடிதினெழுந்தான்றுணைவனைநோக்கி
சென்றான்வெகுண்டான்றிறல்வாளுறைகழித்தான்
குன்றுதகுலத்தின்கொற்றம்பழிபடுத்த
தன்றுணையின்னறவிர்க்குந்தகவோனே.

(இ - புனை.) குன்றுத தங்கள் குலத்தின் வெற்றிக்குப் பழியுண்டாக்கிய தன்பிதாவின் துன்பத்தை நீக்குந் தகுதியுள்ள பத்திராயு இவ்வாறு சொல்லி, விரைவாக எழுந்து தன்தோழனோடு சென்று, சேனையைப்பார்த்துக் கோபங்கொண்டு வாளை உறையினின்றும் நீக்கினான். எ - று. (கக)

இந்தனஞ்சேர்கானகத்தைதுங்குமெரிபோலச்
சந்தமுடைமார்பன்றட்டக்கையுடைவானிளைஞன்
மந்தரம்போனீடுகவிமான்றேர்மதவேழம்
பந்தியணிவாம்புரவிபார்மின்விழுதூறினான்.

(இ - புணை.) விறகுகள் சேர்ந்திருக்குங் காட்டினை அக்கினிபற்றி யெரிப்பதுபோல, அழகுள்ளமார்பனுகிய பத்திராயு உறையினின்றும் நீக்கிய தன்பெரியவாளினால், ஒலிக்குங் குதிரைகட்டியதாய்மக்தரகிரிபோல் உயர்ந்ததேர்களும் மதயானைகளும் பந்திபந்தியாகிய குதிரைகளும் பூமியில் விழும்படி வெட்டியெறிந்தான். எ - று. இந்தனம்-விறகு. (20)

வந்தவந்தவீரர்மணித்தோள்படையோடுஞ்
சிந்திவிழக்கொய்துஞ்சினம்பெருகத்தீராதா
லுந்துதடந்தேரோடுருவன்றனைமுருக்கி
யந்தனெடுந்தேரேறியண்டமுறநின்றுருத்தான்.

(இ - னை.) எதிரிட்டுவந்த வீரர்களுடைய அழகியதோள்களைப் பிடித்த ஆயுதங்களுடன் துண்டித்துவிழும்படிஅறுத்தும், கோபம் அடங்காமல் மேலுமேலுமூளப்பெரியதேரிலேறிக்கொண்டுபோர்செய்யும் ஒருவீரனைக்கொன்றும், அந்தத்தேரில்தானேறிக்கொண்டு ஆகாயத்தில்பொருந்த ஆரவாரித்தான். எ-று.

காகம்பொருந்துங்களப்போர்கடந்ததந்தை
சோகந்தவிர்க்குஞ்சுடர்மணித்தேர்வாள்வேந்த
னைகங்குருதியணிதோழன்சூதனை
மாகந்துறந்தமழகதிர்போற்றேரன்றினான்-

(இ - புணை.) காக்கைக்கூட்டங்கள் பொருந்திய போர்க்களத்தைக் கடந்து, பிதாவின் சோகத்தைநீக்கும் பத்திராயுவானவன், தன்சரீரத்தில் உதிரம் பொருந்தநிற்கும் தோழனை தேர்ப்பாகனாக அமைத்துக்கொண்டு, ஒளிதங்கிய தேரிலேறி ஆகாயத்தை விட்டுவந்த இளஞ் சூரியனைப்போலத் தோன்றினான். எ - று. சூதனாக என்பது சூதனை எனநின்றது. (22)

பாறுதாழ்செவ்வேற்படைப்பத்திராயுவினன்
மாறிலாவெம்போர்மகதர்கோன்வாட்டானை
சீறியோர்கானிலடுஞ்சிங்கந்தறவெருவி
யாறலாவாறுபடரான்குலம்போலாயினவே.

(இ-புணை.) பருந்துகள் வட்டமிட்டுத்தவழும் வேலையேந்தித் (தேரேறிய) பத்திராயுவினால், மாறுபடாதவெவ்வியபோர்செய்யும் வாளேந்தியமகதர்கோன் சேனையெல்லாம், மிருகங்களைக்கொன்று காட்டில் சஞ்சரிக்கும் ஒரு சிங்கம் வந்து கொல்லப்பயந்து, மார்க்கமல்லாத மார்க்கத்தில் ஓடிப்போகிற பசுக்கூட்டம்போல ஓடின. எ - று. (23)

கண்டானம்பையுடைதலைமாதன்கண்டுபயங்
கொண்டானிவனுமொருகூற்றமோவென்றுளையாத்

திண்டோர்திரித்துப்புறங்கொடுப்பத்தேர்ந்திடலும்
வண்டாமமாழுகத்தான்வண்சங்கம்வாய்வைத்தான்.

(இ - புணை.) தன்சேனைகள் தோற்று ஓடிப்போவதை ஏமரதனென்னு மரசன் பார்த்தான், அப்படிப்பார்த்தவன் பயங்கொண்டு இவனுமொரு யம னேவென்றுசொல்லி, தன்னுடைய தேனைத்திருப்பிமுகுதுகாட்டியோட எத் தனித்தவளவில், அதையறிந்த நல்ல செந்தாமனைபோன்ற முகத்தையுடைய பத்திராயுவானவன் தனது வெற்றிச்சங்கத்தை முழக்கினன். எ - று. (உ-சு)

முற்றுமிடிமுழக்கங்கேட்டுமுழையொடுங்கிப்
புற்றரவமஞ்சிப்புரளுந்தகைமைபோல்
வெற்றியுறுவேல்வேந்தன்வெண்சங்கவோசையிறற்
கொற்றமுறுஞ்சேனையொடுகோவேந்தன்வீழ்ந்தயர்ந்தான்,

(இ - புணை.) மிகுந்த இடியின் முழக்கத்தைக்கேட்டுச் சர்ப்பங்கள்பய ந்து புற்றுகளில் ஒடுங்கிப் புரளுந்தன்மைபோல, ஜயந்தங்கிய வேல்வேந்தனுகி ய பத்திராயு தொனிசெய்த ஜயசங்கநாதத்தினுல், மகததேசத்தான் தனது சைந்தியங்களோடுதானும் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான். எ - று. (உஐ)

கோதைதபுனைவேன்மகதர்கோமானையுமவன்றன்
காதலுறுமைந்தனையுங்காவற்றளைப்படுத்திந்
தாதைசிறைநீக்கியவன்முடோழுதுதங்குலத்துக்
கோதுபழிதீர்த்தானுயர்வெண்குடையோனே.

(இ - புணை.) உயர்ந்த வெண்குடையோனுகிய பத்திராயு வெற்றிமாலை யணிந்த வேலையுடைய மகததேசத்தானையும் அவனுடைய ஆசைபொருந்திய புத்திரர்களையும் காவலிலே விலங்கினையிட்டு, பிதாவின்சிறையைநீக்கி, அவன் பாதத்தில் வணங்கித் தங்கள்குலத்துக்கு நேரிட்ட பழியைத்தீர்த்தான். எ-று.

தந்நிகரில்சேனைபதிகடமைவிடித்து
மன்னுடனேநீவிர்வளநகரத்தெய்துகெனச்
சொன்னமொழிகேட்டுத்துயர்தீர்தசானனர்கோ
னந்நிலையேயார்வநிறைந்தாங்கவனைப்பார்த்துரைத்தான்.

(இ - புணை.) தங்களுக்கு ஒப்பில்லாத சேனைதிபதிகளையும் விடுவித்து நம் முடைய அரசனுடன் வளப்பம்பொருந்திய நகரத்துக்குச் செல்லுங்களென்று பத்திராயு சொன்ன வார்த்தையைக்கேட்டு, துயரநீங்கிய தசானனதேசத்தர சன் மிகுந்த அன்புள்ளவனுய் அப்பொழுதே பத்திராயுவைப் பார்த்துச்சொல் ?ன். எ - று. (உஎ)

எங்கள்குலவேந்தர்தவப்பயன்போலிங்கெதிர்ந்து
பங்கமுமென்னையும்பழியுந்தவிர்த்தோனே
சிங்கமனையாய்நினக்குச்செய்யுங்கைமாறுண்டேன்
மங்குலுக்குக்கைமாறுமன்னுயிருஞ்செய்திடுமே.

(இ - புணை.) எங்கள்குலத்தரசர்செய்த தவப்பயன்வந்துஉதவியதுபோல வந்து, எனக்குநேரிட்ட பங்கத்தையுந் துயரத்தையும் இழிவையும் நீக்கிய புண்ணியகீர்த்தியே சிங்கத்தையொத்தவனே! நான் உனக்குச்செய்யத்தக்க பிரதியுபகார முண்டாயிருக்குமாலில், மழைபொழிந்துகாக்கும் மேகத்துக்கு இவ்வுலகத்தில் நிலைபெற்றிருக்கும் உயிர்களும் கைம்மாறுசெய்யும். எ-று. எனவே ஒப்பிலா உபகாரமென்பதாயிற்று. (உஅ)

நின்றமர்யார்நிற்பயந்தார்யாவர்நினதூரே
வன்றிறலாய்நின்பெயரென்வந்தவரவேதுணையா
யொன்றெழிபத்தக்குரோணிசேனையொருங்கவிய
லென்றருகதுவொள்வாள்விதிர்த்தவிறலோனே.

(இ - புணை.) மகதனுடைய ஒன்பது, அக்ரோணிசேனையையும் வென்று உருத்தும் ஒள்ளிய வாளினைவிதிர்க்கும் மிகுந்தபலமுள்ளவனே! உன்னுடைய சுற்றத்தார்யாவர்? உன்னைப்பெற்றவர்கள்யாவர்? உன்னுடைய ஊர் எது? உன்பெயரென்ன? நீ யிங்குவந்ததற்குக் காரணமென்னை? வீரனே கூறுவாயாக. எ - று. (உக)

வில்லாயெனதுபெயர்வீறுபத்திராயுமற்ற
வெல்லாமுணரவியம்புகேன்மேலென்று
சொல்லாவெண்டேரழன்சுனதனிவன்றனை
நல்லாதரவணிகனன்கியற்றவாழ்கின்றோம்.

(இ - புணை.) வில்லையுடைய மகாராசனே! என்பெயர் பத்திராயு, மற்றவையெல்லாம் உனக்குத்தெரியும்படிப் பின்னர்ச் சொல்லுகிறே னென்று சொல்லி, இந்தச்சுனதனென்பவன் என்துணைவன், இவன்பிதாவாகிய மிகுந்த அன்புள்ள வணிகேசனென்பவன் எங்களை ஆதரிக்க யாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எ - று. (உ0)

என்னுவிறற்சியிகல்வேந்தன்வெஞ்சிறையை
மன்னுவிடேல்யான்வருந்துணையுமென்றுரைத்துத்
தன்னெடுதேர்மழனெடுஞ்சார்ந்தானற்றியடைந்து
பொன்னுரமார்பீர்புகுந்ததுரையீரென்றாள்.

(இ - புணை.) என்றிவ்வாறு சொல்லிப்பணிந்து, மகாராசாவே! இந்தப் பகைமன்னவன் சிறையை மறுபடியும் நான்வருகிறவனையில் விடாதேயெ

ன்றுசொல்லித் தோழனைக்கூட்டிக்கொண்டு தன்னரட்டிற்போய்ச் சேர்ந்தான். தாயானவள் அவர்கள் யுத்தகோலங்களைக்கண்டு பொன்னரமணிந்த மார்பை யுடையவர்களே! நடந்தசேதியென்ன சொல்லுங்களென்று கேட்டனள். எ-று.

மாறுபடும்போரின்மகதர்கோன்வாகைகொண்டு
சாரயருழுதூர்த்தசானனழுந்தீமடித்து
கீறுசெய்துமெந்தைதெடுஞ்சிறையிற்கொண்டேடகச்
சீறியமர்வென்றுசிறைவிடுத்தேமென்றுரைத்தான்.

(இ - புனை.) பகைகொண்ட யுத்தமுகத்தில் மகததேசத்தன் வெற்றி யடைந்து, விழாக்கள்கடந்து கொண்டிருக்கும் பழமையான தசானன மென்னும் ஊரைக்கொளுத்தி கீழுக்கி, என்பிதாவை விடாத காவற்படுத்திக்கொண்டுபோக; அதையறிந்து நாங்கள் அம்மகத்தரோடு போர்செய்துவென்றுதந்தையின் சிறையினையும்மீட்டோம் என்று சொன்னன். எ - று. சாறு-திருவிழா.

(வேறு.)

கேட்டாளாசன்பெருந்தேவிதன்கேள்வனின்னல்
வாட்டாரைகண்ணீர்முலைமுன்னில்வாக்கலுழ்ந்தாள்
கோட்டானைவீரர்குலையச்செருச்செய்துமைந்தன்
மீட்டானெனலுங்குளிர்ந்தாளறன்வேண்டநின்றாள்.

(இ - புனை.) தருமதேவதை வேண்டும்படிக்கு நிற்பவளான அவ்வாசன் மனைவி அவர்கள் தன்கணவனுக்கு நேரிட்ட துன்பத்தைச் சொல்லக்கேட்டு, வாளையொத்த கண்ணீர் தனங்களின்மேல் விழும்படி அழுதாள்; வலிதங்கிய பகைவராகிய சேனவீரர் அணிகுலைந்து ஓடும்படி உன்மகன் போர்செய்து உன்கணவனைமீட்டானென்று சொன்னவளவில் சந்தோஷ முடையவளாஞள் எ - று. தருமம் அவளிடத்திலிருக்க விரும்பும் என்றமையால், அப்பெண்ணின் கற்புவிசேடம் கூறியபடியாயிற்று. (நஅ)

துணிவுற்றவேந்தின்சிறைதீர்த்தனன்றேறன்றவென்னத்
தணிவுற்றதொல்சீர்வணிகேசநுந்தக்கதென்றான்
மணிமொய்த்தமாலைப்புயன்வச்சிரவாகுவொன்னர்
பணியத்திருநாடடைந்தேதபைகயின்றிவாழ்ந்தான்.

(இ - புனை.) துணிவுபொருந்திய வச்சிரவாகுவென்னும் அரசனைப் பத்திராயு சிறைமீட்டானென்று பழமையாகமிருந்தசெல்வமுள்ள வணிகன்கேள்விப்பட்டு, இது புத்திரன் செய்யத்தக்க நன்மையான காரியந்தானென்றான். இரத்தினமாலையணிந்த புயங்களையுடைய வச்சிரவாகுவானவன் பகைவர்வந்து தன்னைவணங்கும்படித் தன்னரட்டிற்சேர்ந்து பகையில்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தான். எ - று. (நக)

வேதப்பொருளினடிபேணும்விடபனென்னுஞ்
சீதப்புயலற்றையிராவினிற்சிந்தையெண்ணி
நீதிப்பயிருக்கறநீர்பெய்கிடதாசன்
கோதற்றகேள்விக்குலபூபதிகோயில்சார்ந்தான்.

(இ-புரை.) வேதப்பொருளாகிய பரமசிவனுடைய திருவடியையே விரும்பிக்கொண்டிருக்கும் குளிர்ச்சியுள்ள மேகம்போன்ற விடபனென்னுஞ் சிவயோகியானவர் அன்றிராத்திரி தமதுமனதில் ஆலோசித்து, தருமமாகிய பயிருக்கு நீதியாகிய நீர்ப்பாய்ச்சும் குற்றமற்ற கேள்விகளையுடைய கிடததேசத்தரசன் அரண்மனைக்குப்போனார். எ - று. (கூடு)

வந்தமுனிக்குமகிழ்சிமந்தனியும்வேந்தனுந்
சிந்தைகுளிர்ந்துவுறிபாடுகள்செய்துபோற்றி
யந்தந்தருமாரணந்தேறுமடிகள்பாத
மொந்துசிவப்பவருமாறுநுவறியென்றான்.

(இ - புரை.) அவ்வாறுவந்த விடபன் என்னுஞ் சிவயோகிக்கு சீமந்தனியும் அவள் கணவனும் மனமகிழ்ந்து ஆராதனைசெய்து துதித்து, முக்தியென்னும் அழகினைத்தரும் வேதங்களையுணர்ந்த சுவாமிகளுடைய திருவடிகள் வருந்திச் சிவக்கும்படி நடந்துவந்தருளியதற்குக் காரணம் என்னையோ? அதனைக் கட்டளையிடவேண்டுமென்றான். எ - று. (கூசு)

வந்தாமிறைவமகட்பேசவயற்கண்வாளை
நந்தோலிடப்பாயுந்தசான்னநாட்டின்மன்னன்
கந்தார்களிற்றுனவன்காதலிணைமந்தேணடுந்
சிந்தாகுலத்தாற்கடுங்கானகஞ்செல்லநீத்தான்.

(இ - புரை.) அரசனே! நாம் பெண்பேச வந்திருக்கின்றோம், சங்குகள் ஒலிக்க வயல்களில் வாளைமீன்கள் பாயும்படியான நீர்வளப்பத்தையுடைய தசான்னன நாட்டிற்கு அரசனுகிய கம்பத்திற் கட்டற்குரிய யானைப்படைகளுடைய வச்சிரவாகு என்னும் மன்னன், ஏதோ வியாகுலத்தால் தன் மனவியைப் புத்திரனுடன் காட்டிற்குப்போகும்படி நீக்கிவிட்டான். எ-று. (கூஎ)

பொம்மன்முலையாள்கடுங்கானிற்புகுந்துவேறூர்
மைம்மன்னுசோலைகர்வைகிடமாதுகாத
லம்மைந்தனையாமளித்தோமவனன்புபூண்டு
தெம்மன்னர்தாதைக்கிடர்செய்யச்சென்றுமீட்டான்.

(இ - புரை.) பொலிவுள்ள தனத்தையுடைய அந்தராசஸ்திரியானவள் கொடியகாட்டிற்போய் மேகங்கள்வந்து தவழ்கின்ற சோலைசூழ்ந்த ஒருகாதத்

திற்சேர்ந்திருக்க;(அவ்விடத்தில்அவள்புத்திரன்இறக்குபோனான்.) அவனைநாம் பிழைப்பித்து வாட்படை முதலியவைகளைக் கொடுத்து ரக்ஷித்தோம்; அங்ஙன மிருக்க அவன் பிதாவை மறுதேசத்தரசன் யுத்தஞ்செய்துவென்று தேரிற் கட்டிக்கொண்டுபோவதை அந்தப்புத்திரனறிந்து பிதாவென்கிற அன்புகொண்டு போய்ப் போர்செய்து பகைவனைவென்று தந்தையை மீட்டுவிட்டான். எ - று.

வேறு.

அன்னவன்றனைக்கருளவேண்டுநின்
கன்னிகீர்த்திமாலினியைக்கற்புடைப்
பொன்னெனென்றவன்புகழ்த்துகூறலு
மன்னன்சந்திராங்கதன்வழங்குவான்.

(இ - புரை.) அந்தப்புத்திரனுக்கு உன்குமார்த்தியாகிய கற்புள்ள கீர்த்திமாலினியைக் கொடுக்கவேண்டுமென்று சிவயோகி புகழ்ந்துசொன்னர், அதற்குச் சந்திராங்கதன் என்னும் அரசன் மகிழ்ந்துசொல்லுகிறான். எ - று.

கோசிகன்னெனவுலகங்கூறிநிற்
றேசிகாவினிச்சொடுவேண்டுமோ
காசுலாமுலைக்காமற்கன்னியை
மாசிலானுக்கேவழங்குகேனென.

(இ - புரை.) கோசிகனே யென்று பெரியோர்கள் சொல்லத்தக்க தேசிகனே! நான்வேறே சொல்லவேண்டுமோ? அரசனவடம் பொருந்திய தனங்களையுடைய என்மகளைக் குற்றமில்லாத அந்த ராசகுமாரனுக்கே கொடுக்கிறேனென்று கூறி, எ - று. காசு-மணி. காமர்-அழகு. (சுO)

முனிவனன்புறமுகமன்கூறியே
புனிதவேகெனவிடுத்துப்பூடதி
யனிகவீரர்போயரசன்னைமந்தின
யினிதுகொண்டிவண்வருதியென்றனன்.

(இ - புரை.) சிவயோகியானவர் அன்புறும்படி வார்த்தைகளைச் சொல்லிச் சுவாமிகளே! ஆசிர்மத்திக்கு எழுந்தருளலாமென்று அனுப்பிவிட்டுச் சந்திராங்கதனென்னும் மன்னவன் தன்தளகர்த்தனை யனுப்பி, அந்தராசகுமாரிடத்துக்கு அழைத்துக்கொண்டுவாருங்களென்றேவினன். எ - று

ததுவாமபார்த்தானைகாவலா
பத்திராயுனைவப்பணிந்துகாளைநீ
யுய்த்தணர்கெனவெவையுமோதினர்
மத்தயானையான்மகிழ்ச்சிமேயினன்.

(இ-புனை.) தாவிச்செல்லுங் குதிரைகளையுடைய சேனாதிபதிகள்போய்ப் பத்திராயுவைக்கண்டுபணிந்து, அரசனே! நீயிதனைக்கேளென்று நடந்தசேதிக ளெல்லாம் சொன்னர்கள் அதைக்கேட்டு மதயானைகளையுடைய அந்தப்புதி ரன் மகிழ்ச்சியடைந்தான். எ - று. (சஉ)

தாயுமின்னோய்தவிர்த்தாய்கனச்
சேயுமுன்செலச்சேனைசூழ்வாப்
போய்மணம்புணர்பதிபுகுந்தனன்
பாயும்வாம்பரிப்பத்திராயுவே.

(இ - புனை.) பாய்ந்துசெல்லுங் குதிரைகளையுடைய பத்திராயுவானவன் தன்தாயும் தங்கள் துன்பத்தைதீர்த்து ஆதரித்தவணிகேசனும் அவன் புத்திரனு முன்னேபோகும்படித் தான் அவர்கள் பின்னே சேனைசூழ்ந்துவரப் புறப்பட் டுப்போய் விவாகஞ் செய்துகொள்ளும் பட்டணஞ்சேர்ந்தான். எ - று. (சஙட)

சார்ந்தபோழ்தினைசந்திராங்கத
னூர்ந்தகண்புகூர்ந்தளவளாவியே
பூந்தண்வார்குழற்பொருவில்கன்னியை.
யீந்தனன்மகிழ்ந்திளவறிகன்பவே.

(இ - புனை-) இவ்வாறு பத்திராயுவந்தபோது சந்திராங்கதன் மிகுந்த அன்புகொண்டு அளவளாவி, பூமாலையணிந்து குளிர்ச்சிதங்கிய நீண்ட அளகத் தையுடைய ஒப்பற்ற தன்கன்னிகையை விவாகஞ்செய்துகொடுத்தான். எ - று.

யையாவணப்பச்சைமேகமுஞ்
செய்யதாமரைத்திருவும்போலவே
யையநுண்ணிடையணங்குமண்ணலுந்
துய்யபூவணைத்துறக்கமேவினர்.

(இ - புனை.) படமுள்ள சர்ப்பசயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் திரு மாலும் செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளும்போல், உண்டோ இல் லையோவென்று சந்தேகிக்கும் இடையினையுடைய கீர்த்திமாலினியும் பத்திரா யுவும் சுவர்க்கலோகம்போன்ற பரிசுத்தமுள்ள புட்பசயனத்திற்பொருந்தினர் கள். எ - று. துறக்கம்-தேவலோகம். (சஙஅ)

குங்குமஞ்செறிகுவவுக்கொங்கைமேற்
றங்கியின்பமார்சலதிமூழ்கினை
னங்கவள்புயத்தடங்கிமாதரும்
பொங்குநாதலம்புணரிமூழ்கினள்.

(இ - புணை.) பத்திராயு குங்குமப்பூசேர்த்த சந்தனக்குழம்பணிந்தநாய்க் குவிவாயிருக்கும் தன்மனைவிதனத்தினிடத்தில் பொருந்தி, இன்பசமுத்திரத்தி லாழ்ந்தான். கீர்த்திமாலினியும் அவன் புயத்திலடங்கி ஆசைவெள்ளத்தி லாழ்ந்தாள். எ- று. (சசு)

இடையறுமலையெழில்கொண்மைந்தனு
மடமைமாதருமருவிவைகுநா
ளிடையலாருயிரருந்துங்காலவே
னிடதராசனுனிகழ்ந்தகூறுவாம்.

(இ - புணை.) அழகுபொருந்திய பத்திராயுவும்பேதமைந்தன்மையுடைய கீர்த்திமாலினியும் இவ்வாறு பிரியாமல் வாழுநாளில், சத்துருக்களுடைய உயி ரைவாங்கத்தக்க வேலையுடைய நிடதராசனுல் நடந்த சேதிகளைச் சொல்லுகி றேம். எ - று.

மன்னர்மன்னனுமவ்விரப்புய
னென்னும்வேந்தனீயிண்டையுழத்தவன்
பன்னிதன்னையும்பாலன்றன்னையுந்
துன்னுவிப்பதேதகூழ்ச்சியாமெனு.

(இ - புணை.) அரசர்க்கரசனுகிய வச்சிரவாகு என்னும் அரசனை இவ்வி டத்துக்கு வரவழைத்து, அவன் மனைவியையும் புத்திரனையும் அவனுடன் கூட்டி அனுப்புவதே தக்க யோசனையென்று துணிந்து, எ - று. (சுஅ)

மடங்கலன்னவோர்மன்னற்காணவே
யிடங்கொள்சிந்தைமீதழுந்தவார்வத்தேன்
கடங்கணீங்கியேகாணவம்மெனு
முடங்கல்போக்கினுன்முழுவுத்தோளினுன்.

(இ - புணை.) மத்தளம்போலத் திரண்டதோளையுடைய நிடதராசன் சிங்கம்போன்ற வச்சிரவாகு மகாராசாவே! உம்மைப்பார்க்க என்மனம் விரும்பு கின்றமையால், நீர் உம்முடைய தேசம்விட்டுப்புறப்பட்டு வழிகளைக்கடந்து நான் பார்க்கும்படி வரவேண்டுமென்று திருமுகமனுப்பினேன். எ-று. முடங் கல்-திருமுகம். இது ஓலை. (சுக)

வேறு.

தன்னிகரினிடதர்பிரான்றருந்துதர்தரணனர்கோன்றன்மாட் டெய்திப், பொன்னியலுங்கினைகழலான்வரவிதத்தவோலையெனப்புக ன்றுகாட்ட, மின்னியலுங்கதிர்வேலான்குறிப்புணர்ந்துவேறொருவ ன்விளைந்துவாங்கிப், பன்னுவதேனெனக்கேட்டாங்கிறைபணிப்பப் பாசுரத்தைதப்பகராலுற்றுன்.

(இ - புணை.) தனக்கொப்பில்லாதவளுகிய நிடததேசத்தரசனல் அனுப்பப்பட்ட தூதர்கள் தசான்னதேசத் தரசனிட.த்திற்போய், பொன்னுற்செய்யப்பட்டு ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்த காலையுடைய நிடதமகாராசன் வரவிடுத்த திருமுகத்தைக்கொண்டுவந்தோமென்றுசொல்லி அதைக்காண்பித்தவளவில், அங்கிருந்த ஒருகருணீகன் அரசன் குறிப்பறிந்து விளைய அவ்வோலையை வாங்கிவாசிக்கும்படிக் கட்டளைவேண்டுமென்று கேட்டு, அரசன் உத்தரவு கொடுக்க அவ்வோலையை வாசிக்கின்றான். எ - று. (நo)

போராண்மைநிலவேந்தர்முடியுழுதுசிவந்தபொற்றுட்புகழோய்காண்க
போராசைமிகவுடையேனுதலினன்னகரம்பெயர்ந்துவந்தென்
சீராருநகர்டைந்துபின்னினதுதிருநகர்கீசேறல்வேண்டும்.

(இ - புணை.) மிகுந்த பராக்கிரமமுள்ள மறுதேசத்தரசர்கள் மகுடங்கள் பட்டுச் சிவந்த வீரகண்டையணிந்த காலையுடைய வச்சிரவாகு மகாராசாவே! நிடததேசத்தரசனுகிய நாம் உமக்கு எழுதியனுப்பிய ஓலையைவாசித்துக் காண்பீராக ; என்னவெனில், உம்மைக்காணவேண்டுமென்று நாம் அதிக ஆசைகூடிகொண்டிருக்கிறோமாதலால், உம்முடைய நகரம்விட்டுப் புறப்பட்டு வந்து சிறப்புள்ள எமதுதேசத்திற் சேர்ந்திருந்து பின்பு உம்முடைய நகரத்திற்குப் போகவேண்டும். எ - று. (நக)

என்றரசன்வரவிடுத்த வோலையிற்பாசுரமுழுது மிபம்பக்கேட்டுக். குன்றெனவான்முகடணவுங் குடுமிநெடுங்குருமணித்தேர் கொணர்கென்றேறி, மின்றிகழும்படைவேந்தர்தற்சூழமுரசதிரவெண்சங்கார்ப்பத், தொன்றுவரும்படைநடுங்கவெழுந்தனன்மன்னவனேடுந்தொடர்புகொள்வான்.

(இ - புணை.) இவ்வண்ணம் எழுதி நிடதராசன் அனுப்பிய ஓலையிலிருந்தவாக்கியங்களைச் சொல்லக்கேட்டு, அவ்வரசனுடனட்புகொள்ள மேருமலைபோல் வான்முகட்டை யளாவுஞ் சிகரத்தையுடைய நிறமுள்ள ரத்தினங்கள் பதித்த தேரைக்கொண்டுவரச்சொல்லி அதிலேறிக்கொண்டு, ஒளிவிளங்கும் ஆயுதங்களையுடைய அரசர்கள் தன்னைச்சூழ்ந்துவரவும் பேரியொலிக்கவும் தவளச்சங்கம் ஆரவாரிக்கவும் பழமையாய்வருகின்ற எதிரிகள் படை நடுங்கவும் புறப்பட்டான். எ - று. (நஉ)

மாறிலாப்பெருங்குணத்தான்வருகின்றானெனக்கேட்டமன்னர்மன்னனுறியோசனையளவாயணிபரப்பியெதிர்ந்தவனையன்பிற்புல்லி
வீறிலுயர்ந்தபெருந்தன்பதியினமைவித்துவியப்பிலேனுங்
தாறிலனெம்பூகந்தலைவணங்குந்தசான்னர்க்குத்தக்கசெய்தான்.

(இ - புணா.) எக்காலத்திலு மாறுபடாத பெருங்குணத்தையுடைய வச் சிரவாகுமகராசன்வருகின்றானெனைக்கேள்விப்பட்ட நிடதராசன் ஆறுயோசனை தூரவளவில் தன்சேனைகள் பரந்திருக்கும்படி அனுப்பித் தானும் புறப்பட்டுப் போய் அந்தராசனைக்கண்டு, அன்புடன் அளவளாவி, எல்லாச்செல்வத்திலும் உயர்ந்தஸ்தான தன்னகரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்ச்சேர்த்துச் சுகோதா வத்துடன் குலைகளின் மிகுதியால் கழுகமரங்கள் தலைவளைந்திருக்கும்படியான தசான்னதேசத்தரசனுக்குத் தக்கபடி உபசாரஞ்செய்தான். எ-று. தாறு-குலை.

காவலவன்றனைக்களித்தசிறப்பினையுங்கண்டுமெய்ங்கதிர்வேல் மன்னன், பூவலயந்தனினிவன்போனட்பினர்வேறிலரென்னப்புகழ்ந் தவேலை, மாவலவன்பலகலையும்பயில்பத்திராயுவெனுமைந்தனைத்தி யாவலுடன்விருத்தானையடிபணிந்துவாய்புதைத்தங்கருகுநின்றான்.

(இ-புணா.) நிடததேசத்தரசன் தனக்குச்செய்த உபசாரங்களையெல்லாம் காந்தியுடைய வேற்படையைத் தாங்கிய வச்சிரவாகுவென்னுமரசன் பார்த் தச் சந்தோஷித்துப், பூலோகத்திலிவனைப்போல கம்பீடத்தில் கட்புள்ளவர் கள் வேறொருவருமில்லையென்று புகழ்ச்சிசெய்தபோது, குதிரையேறிப்பொரு துவதில் வல்லவனும் பலசாஸ்திரங்களையுணர்ந்தவனுமாகிய பத்திராயுவைத் தன்புடன் தன்தகப்பன்பாதத்திற்பணிந்து வாய்புதைத்து, அவனுக்குச் சமீப மாக நின்றான். எ - று. (௩௮)

கண்டவுடன்வச்சிரவாகென்னுமடல்வேற்கணைகளித்துநோ க்கித், திண்டிறலாய்வடிவாட்கைச்சேவகனேயிவன்வருகவருகவென் று, வண்டமர்தார்நிடதர்பிரான்றனைமுகம்பார்த்திவன்கொடியமகத தன்றன்னை, யொண்டிறலும்படைச்செருக்குமழித்தெனைக்காத்துயிர ளித்தவரானோவெனென்றான்.

(இ - புணா.) அவனைப் பார்த்தவுடன் வச்சிரவாகு என்கிற பராக்கிரம முள்ள அரசன் மனக்களிப்புடனே நோக்கி, மிகுந்த பலமுள்ளவனே! வடிவா ளேந்திய கையையுடையவீரனே! என்சமீபத்தில் வருவாயென்று சொல்லி, வண்டுகள்பொருந்திய மாலையணிந்த நிடதராசன் முகத்தைப்பார்த்து, இந்தச் சிறுவன் கொடியவனுகிய மகததேசத்தன் பலத்தையும் அவன்சேனையின் இறுமாப்பையும் அழித்து என்னைக்காத்துயிர்கொடுத்தபுண்ணியவானென்று சொன்னான். எ - று. (௩௯)

பின்னுமிந்நிலத்திரைக்கின்றனிவனையருந்தவப்பயன்போற்பெற்றோ ன்யாவன், மன்னுமிவன்பதுமையதுமரபேதிதற்குதவிசெயவந்ததேது, பொன்னமரும்புயத்தோய்கின்மருகனிலையெனக்கடைவேபுகரியென் னப், பன்னினனங்குகுகேட்டநிடதர்பிரான் முறுவலித்துப்பகரலுற் றான்.

(இ - புணை.) மேலுஞ்சொல்லுகிறன், இத்தப்பிள்ளையை அரிய தவப்பயன்போலப்பெற்றவன்யாவன், இவனிருக்கும்படி எது, மரபென்ன, எனக்கு உதவிசெய்யும்படிவந்த காரணமென்ன, ஜயலக்ஷிமி வாசமாயிருக்கும்புயத்தையுடைய அரசனே! உன்மருமகனுடையவரலாறெல்லாம் எனக்கு விவரமாகச் சொல்லவேண்டுமென்றன். அதைக்கேட்ட கிடதேசத்து அரசன் கைத்தலச்சொல்லுகின்றன். எ - று. முறுவல்-புன்சிரிப்பு. (நசு)

திங்களெனப்பொலிதாமவெண்குடையோயொருகதையான்செப்பக்கேட்டி, மங்குல்வளமறுதமிதாருநிருநாடண்டதுபுரக்குமன்னர் மன்ன, னங்கவன்றன்மனைவியையும்பாலனையும்பழிகருதாதகற்றிவிட்டான், சங்கணிவார்குழைப்பரமனருளினொருவணிகனவர்தம்மைக் காத்தான்.

(இ - புணை.) சந்திரனைப்போல விளங்கும் முத்துமாலை அலங்கரித்த வெண்குடையையுடைய ராசனே! நான் ஒருகதை சொல்லுகிறேன், அதை நீ கேட்பாயாக, மேகங்கள் காலந்தப்பாமல் மழைபொழிகின்ற வளப்பத்தங்கிய ஒருநகரமுண்டு, அதை ஆளுகின்ற அரசன் ஒருவனுண்டு, அவன்பழியையெண்ணமல் தன்மனைவியையும் புத்திரனையும் நீக்கிவிட்டான், சங்கக்குழையணிந்த பரமசிவனுடைய கிருபையினால் ஒருவணிகன் அவர்களைக்காப்பாற்றினன். எ-று.

குலநாய்கன்றான்கருதிப்புரந்தளிக்குநானிலத்தக்குமரன்மாய்ந்தான்
சிலமானுந்திருப்புருவத்தேவியழக்கண்டெடுத்தெய்வயோகி
யிலையாமனின்னுயிர்பெற்றெழுகவெனவெழுந்தலைவுக்கறமுங்கூறித்
தொலையாதவலியுமொருசங்கமும்வாளுங்கொடுத்துத்துயரந்தீர்த்தான்

(இ - புணை.) உத்தமகுலத்தானுகிய அந்தவணிகன் ஆதரிக்கும்காளில் அச்சிறுவனே உயிர்துறந்துவிட்டான், அத்தத்துயரத்தினால் வில்லையொத்த புருவத்தையுடைய ராசஸ்திரி அழுதுகொண்டிருக்க, அப்போது அவ்விடத்தில் வந்த ஒருசிவயோகியானவர் அவள் அழுவதைக்கண்டு (மனமிரங்கி)வருந்தாமலிருக்கும்படி இறந்தவனுக்கு உயிர்கொடுத்தெழுப்பி, அதன்பின்பு அத்தப்புத்திரனுக்கு ராசநீதிகளைப்போதித்து, மாறுதமிருந்தபலமும்வாளுஞ்சங்கமும்கொடுத்து அச்சிறுவனுடைய துயரத்தை நீக்கினன். எ - று. (நஅ)

நற்றவத்தேதான்றிருவருளாலிறைமகனுமெழுடொருகாலுநாளுந்,
கற்றினிற்பொலிதிணிதோட்காளையாயிளமையெழில் கனியுநாளிற்,
பற்றலர்தன்றுணைதையைவென்றிருந்தளையிட்டுடன்கொடுப்போம்படி
கேட்டெய்தச், செற்றவனைத்தளைப்படுத்திந்தாதைசிறைமீட்டனன்
போர்ச்சிங்கமன்னன்.

(இ - புரை.) இவ்வாறு சிவயோகி அருளினுல் ராசபுத்திரன் ஈளுக்கு நாள் பலம் அதிகரிக்கத் திரண்டகல்லைப்போலப் பருத்ததோளையுடைய காளைப்பருவமாய் இளமையும் செளந்தரியமும் மிகுதியாகுங்காலத்தில், தன் தகப்பனிடத்தில் பகைவர் போர்செய்து செயம்பெற்று அவனைச் சிறைப்படுத்திக் கொண்டுபோகக் கேள்விப்பட்டு, அழகிய சிங்கத்தையொத்த அந்தப்புத்திரன் அவ்விடத்திற்போய் அவர்களைவென்று சிறைப்படுத்தித் தன் தகப்பன் சிறையையும் நீக்கிவிட்டான். எ - று. எறுழ் - வலி. (எகூ)

இக்கதைபோலொருகதைமுன்கேட்டதுண்டே வியம்புகெனவி யம்பிவீறு, தக்கபெரும்புகழாவோயுரைத்தகதைக்குரியரையுஞ்சாற் றக்கேட்டி, செக்கமலச்செங்கனிவாய்ச்சேயுமிவன்முதையுநீ சிறந்த கற்பான், மிக்ககுலத்தேவியுநின்மனையென்முன்மதிமயங்கிவேந்தன் வீழ்ந்தான்.

(இ - புரை.) இந்தக் கதைபோல ஒருகதை நீ கேள்விப்பட்ட துண்டா யிருந்தால் சொல்லென்று சொல்லி, விளங்குகின்ற தகுதியுள்ள பெரும்புகழ் பெற்ற மகாராசனே! இப்போது நான் சொல்லிய கதைக்கு உரியவர்களையுஞ் சொல்லக் கேட்பாயாக; செந்தாமரைமலர்போன்ற வாயையுடைய அந்தப்புத் திரனும் இந்தப் புத்திரன்முன், தகப்பனும் நீதான், கற்பிறைச்சிறந்த இவன் தாயானவள் உன்மனைவிதான், என்று சொன்னன். அதைக்கேட்ட அரசன் அறிவுமயங்கிக் கீழேவிழுந்துவிட்டான். எ - று. (சுo)

வீழ்ந்தமன்னன்தனையெடுத்துவெயர்புலரமுகம்விளக்கிவேந்தி யெம்மை, யாழ்ந்தவிதிசெய்ததுயர்யாமுழுந்தோடீயதலைமூங்கவேண் டாந், தாழ்ந்தமனந்தனைத்தெளிவித்தெழுகவெனத்தான்புரிந்த தவறு நெஞ்சைப், போழ்ந்துணர்வையழிக்கவிருந்தயர்வுயிர்த்துமகனையுறப் புல்லிச்சொன்னன்.

(இ - புரை.) அப்படிவிழுந்த அரசனையெடுத்து வியர்வைமாற்றி முகந் துடைத்து மூர்ச்சைநீக்கி, என்னையனே! எங்களைப்பற்றிய வினைவிளைத்த துன் பத்தை நாங்களனுபவித்தோம், அதற்காக நீர் வருந்தவேண்டிய தில்லையென்று மனத்தைத்தெளிவித்து, எழுந்திருவென்று சொல்ல ; எழுந்து அவ்வரசன் தான்செய்தகுற்றந் தன்மனத்தைப்பிளந்து அறிவைக் கலக்கிவிட ஒன்றுந் தோன்றுமலிருந்து பின்புதேறி, மகனை அணைத்துக்கொண்டு சொல்லுகிறான். எ-று.

கடுங்கானத்திடைகனியேநுமைவிடுத்துவரப்பணித்தகடியனெஞ்சக் கொடுப்பாவித்தனமகதன்கொல்லாமலுயிரளித்தகுமராவீண்டு கடுங்காமலுயிர்பொருந்தப்புல்லவுகருணைசெய்தாய்நூலமென்னை யடுங்காலமென்பதலாலரசனென்றுசொலத்தகுமோ வந்தோவந்தோ.

(இ - புணை.) கடுமையாகிய காட்டில் உங்களை விட்டுவரும்படி உத்தரவு செய்த வலியநெஞ்சையுடைய கொடும்பாவியாகிய என்னை," மகததேசத்தான் கொல்லாமல் உயிர்கொடுத்த புத்திரனே! இப்போது நான் அஞ்சாமல் உடலோடுடல்பொருந்தும்படிப் புல்லிக்கொள்ளவும் இருபைசெய்தாய், இதையறிந்த உலகத்தார் என்னை நமனென்று சொல்லுவார்களேயல்லது அரசனென்று சொல்லமாட்டார்கள் அந்தோ என்றிரங்கி, எ - று. (சுஉ)

அறத்திறநிறைகருதாமலரினையையும்புதல்வனையுமகன்கானத்தின், மறத்தின்வழிவிடுத்தேதனுமன்னவமை நீசர்தொழின் மருவிநின்றோ, னிறப்பதுவே கருமமெனத்துணிந்தெழுந்ததசானனர்கோன்சூட்சிறு லோர், நிறக்கதிர்வேனிடதர்பிரான்றெருட்டலருந்துயர்சிறிதுநீங்கிச் சின்னாள்.

(இ - புணை.) கருமநெறியை எண்ணுமல் மனைவியையும் புத்திரனையும் காட்டினிடத்தி லனுப்பிவிட்ட காலும் அரசனே? புலையர்செய்யுந் தொழிலுள் ளவனையிருந்தேன்; ஆதலாலினி இவ்வாழ்க்கை நீங்கிவிடுவதே தருமமென்று துணிவுகொண்டு எழுந்த தசாண்ணதேசத்தரசன் அங்கிருந்த மந்திரிகளும் ஒளிதங்கிய வேலாயுதத்தையுடைய நிடததேசத்து அரசனும் சமாதானஞ்சொன்னதினால் துன்பஞ் சற்றுநீங்கிச் சிறிதுகாள் இருந்து, எ - று. (சுஊ)

வேறு.

சந்திராங்கதனன்புகூறலைதங்கிநீங்கருந்தொடர்புகொண்டுபின் சிந்துரானனச்சுமதிதன்னெடுஞ் செம்பொனீள்கொடித்தேரிலேறியே மைந்தன்வீரவேற்பத்திராயுவுமருகிகீர்த்திமாலினியும்பின்வரக் கொந்துலாமலர்க்காலுமாறுநீள்குன்றுநீந்திப்போகரங்கூடினான்.

(இ-புணை.) நிடததேசத்து அரசனுகிய சந்திராங்கதன் அன்புகூரும்படி அவனிடமிருந்து, அவ்வரசன் சினேகத்தை மிகுதியாகப் பெற்றுக்கொண்டு, பின்பு சிந்துரதத்திலகமனைய முகத்தையுடைய தன்மனைவியுடன் செம் பொன்மயமாய்ப் பெரிய கொடிகட்டப்பட்ட தேரிலேறிக்கொண்டு, தன்புத் திரனுகிய பத்திராயுவும் மருமகளாகிய கீர்த்திமாலினியும் பின்னேவரக் கொத் தாகியமலரையுடைய காடும் நதிகளும் உயர்ந்தமலைகளும் நீங்கித் தன்னகரத் திற்போய்ச் சேர்ந்தான். எ - று. (சுஎ)

நகரின்வாழுநர்கண்டுமைந்தனைநறியமாமலர்சிதறியேத்துவார் புகர்செயானையாயூழிகாறுநீபூமிகாத்தனைப்புரத்தியாலென்பார் தகரவார்குழல்வனிதைசெல்விசாரங்கபாணியேயிவனென்றேத்துவார் நிகரின்மைந்தனுக்காவதாகயாமெடிதுவாழுகாளெனநிகழ்த்துவார்.

(இ - புணை.) அந்தககாரத்தில் வாழ்கின்றவர்கள் பத்திராயுவைப்பார்த்து வாசனைதங்கிய மலர்கள்தூவித் துதிசெய்வார்கள்; சிலர் புகர்முகயானைப்படை யையுடைய அரசனே! ஊழிகாலவரையில் இவ்வுலகத்தைக்காத்து எம்மை ரக்ஷிக்கக்கடவையென்று சொல்வார்கள். சிலர் இப்பத்திராயு மகாவிஷ்ணுவே யவிர்ச்சாத்தணிந்த தீண்டகுழலையுடைய இவன் மனைவி மகாலட்சுமியே என் பார்கள். சிலர் நாம்வாழுநாளாகிய நம்முடைய ஆயுசு இத்தப்புத்திரனுக்கே யா கக்கடவதென்று வாழ்த்துவார்கள். எ - று. (சுரு)

பகைகளைஞ்சவேபொருதுதந்தைதன்படைகளைத்தோள்பார்த்தி லினென்பார், புகைசெய்வேலினைஞிறைபூண்டிவண்புகுதமெய்த்த வம்புரிந்தோளானென்பார், மகதராசன்றன்வல்லிபிற்படவாகைகொண் டகூர்வாளரிசோவென்பார், சகரீர்சுலாம்புவியிவன்றிருந்தாணிழற்க ணைதங்குமாவென்பார்.

(இ-புணை.) சிலர் சத்துருக்கள்பயப்படத்தக்கதாகப் போர்செய்து தகட்ப லுக்கு நேரிட்ட மனவருத்தத்தை நீக்கியபுயத்தைப் பாருங்களென்பார்கள். சிலர் புகையைத்தருவதாகிய வேலாயுதத்தையுடைய இவன் அரசாட்சிபெற் றுக்கொண்டு இவ்விடத்தில்வர நாம் உண்மையான தவஞ்செய்தோமென்பார் கள். சிலர் மகதராசன் விலங்கிற்படும்படி வெற்றிகொண்ட சூரியவாள் இது தான் பாருங்களென்பார்கள். சிலர் சமுத்திரஞ்சூழ்ந்த உலகமெல்லாம் இவன் காலின்கீழே தங்குமென்பார்கள். எ - று. வல்லி - விலங்கு. (சுசு)

என்றுகூறியமாந்தரின்புறவேந்தலோடும்போ யெழில்கொண்மன்னவன், குன்றுபோலுயர்கோயில்வைகியோர்குடைநிழற்புவிகாத்தனந்தகாட், சென்றபின்னைரமகதன்றன்னையுந்திறையளக்கெனச்செப்பிவிட்டபின், பொன்றிவானுலகாடன்மேயினனம்புதலவன்பூதலம்புறப்பதாயினன்.

(இ - புணை.) என்று இவ்வாறு சொல்லிய நகர்ச்சனங்கள் இன்பம் பொருந்தும்படித் தன்புத்திரனுடன்போய், வச்சிரவாகுமகாராசன் மகமேரு வையொத்த தன் அரண்மனையிலிருந்து, ஒருகுடைநீழலில் பூமியைக்காத்து நெடுநாள் சென்றபின்பு, மகதராசனைச்சிறைநீக்கி இனிநீ திறைகட்டிக்கொ ண்டிருவென்று சொல்லி அனுப்பிவிட்டபின் இந்தத்தேசத்தைவிட்டு நீக்கிச் சுவர்க்கலோகம்பெற்றான். பத்திராயு அரசுசெய்துகொண்டிருந்தான். எ - று.

பத்திராயுவின்கதையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - எசுo.

பதினன்காவது

பத்திராயுழுத்திபெற்ற அத்தியாயம்.

திருந்தலர்வணங்கரீந்திமல்கச்செங்கோலோச்சிப்
பூந்தனைலகமெல்லாம்பொதுவறவென்றுசூத
னிருந்தவமுனிவர்க்கெல்லாமியல்பினியம்பிபீட்டு
மருந்தவனனையபத்திராயுவின்சரிதஞ்சொன்னன்.

(இ - புரை.) சத்துருக்கள்வந்து பணியவும் மிருந்தநிதிகள்வந்து சேரவும் செங்கோல்செலுத்திப் பொதுவில்லாமல் உலகத்தைக்தகாத்து அரசுசெய்துகொண்டிருந்தானென்று, சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களுக்குச் சொல்லிப் பின்னும் அம்முனிவர் பத்திராயுவின் சரித்திரஞ்சொல்லுகிறார். எ - று.

கன்னவிறிரட்டாண்முத்தக்கதிர்மணிக்கவிகைச்செங்கோன்
மன்னவனமைச்சரோடுமலிகடற்றானையோடும்
பொன்னணிந்திகிரிமன்னும்புவியந்தேர்மேற்கொண்டு
மின்னிடைத்துணைவிபோடுவிரைமலர்க்கானம்புக்கான்.

(இ - புரை,) மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற திரண்டவடிவாயிருக்குந்தோள்களையும்முத்துகளால் அலங்கரித்தகுடையினையுமுடையவனைச்செங்கோல்நடத்தும் பத்திராயு என்னும்அரசன்,மந்திரிகளும்மிகுதியாயுள்ளசேனையுஞ் சூழ்ந்துவரப் பொன்னாற்செய்யப்பட்ட உருளையுண்டதேரில் தானும்மின்னல்போலு மிடையையுடைய தன்மனைவியுமாக ஏறிக்கொண்டுவாசனையுள்ளகானகத்திற்சென்றான். எ - று.

(உ)

சண்பகம்பனசப்பூகஞ்சந்தனந்தமாலந்தேமா
விண்பகநிமிருங்கோங்குவெள்ளின்மந்தாரந்துற்றுக்
கண்புகவரிதாய்வாசங்காவதங்கமழுஞ்சோலை
பண்பயில்வண்டுந்தேனுங்கிள்ளையும்படிவதம்மா.

(இ - புரை.) அங்கு, சண்பகம் பலாகமுகு சந்தனம் தேமா பச்சிலை அன்டமுகடு பிளக்கும்படி உயர்ந்திருக்கும் கோங்கு விளா மந்தாரம் என்னும் விருக்ஷங்கள் பார்ப்பவர்கள் பார்வை நுழைவதற்கிடமில்லாமல் நெருங்கி, ஒருகாத

தாரமட்டும் வாசனை பரிமளிக்கும்படி விளக்கிய சோலையானது, இசைபாடும் வண்டுகளும் தேனென்கிற வண்டுகளுங் கிள்ளைகளும் வாசமாயிருக்கத்தக்கது. எ - று. தமாலம் - பச்சிலைமரம். (ங)

மவ்வலங்குழலாள்கீர்த்திமாலினியணங்கிறை
மவ்வனந்தன்னின்மன்னனயர்வுயிர்த்திருந்தகாலை
கொவ்வையங்கனிவாய்க்கற்பிற்கொடியொடோரந்தணாளன்
கவ்வையான்முறையிட்டெடுத்திக்காவலற்கிதனைச்சான்றான்.

(இ - புணை.) இத்தன்மையுள்ள வனத்தில் பத்திராயு என்னும் அரசன் முல்லைமுடித்த கூந்தலையுடைய கீர்த்திமாலினியென்னு மனைவியுடன்வழிவந்த இளைப்புநீங்கியிருக்கும்போது, ஒருபிராமணன் கோவைக்கனியையொத்த செவ்வியவாயினையுடைய மனைவியுடன் தயாமுள்ளவனுய் முறையிட்டுக்கொண்டு வந்து அரசனுக்கு இந்தவார்த்தை சொல்லுகிறான். எ - று. மவ்வல் - முல்லை. கவ்வை - துன்பம். (ச)

அறத்தினிலுலகங்காக்குமரசனேயரசர்சேரே
மறப்புலிதாடர்ந்துகொல்வான்வருகின்றதனைநீயுன்
றிறப்படையேவியாங்கேசெகுத்துயிர்கவர்ந்துயங்க
ளிறப்பதுதவிர்த்துளாவியீந்தமைப்புரப்பாயென்றான்.

(இ - புணை.) தர்மத்துடன் உலகத்தைக்காக்கும் அரசனே! அரசர்களாகிய யானைகளுக்குச் சிங்கம்போலிருப்பவனே! கொடிதான ஒருபுலி எங்களைக் கொல்லத் தொடர்ந்துவருகின்றது, அதனை உன்கையிலிருக்கும் வலியபாணத்தையேவி அவ்விடத்திலேவிழுந்து சாம்படிகொன்று, நாங்கள் இறப்பதைநீக்கிப் பிழைக்கும்படி எங்கள் பிராணனைக்கொடுத்துக் காப்பாற்றவேண்டுமென்று சொன்னான். எ - று. (ஞ)

வேறு.

மறையவன்னுதியவாசகமவன்றன
யறைகழன்மன்னவனஞ்செவியெய்தப்
பிறைநிகர்வாட்சிலைவாளிபிடித்துக்
கறுவுகொள்வெம்புலியைக்கடிதெய்வான்.

(இ - புணை.) இவ்வாறு பிராமணன்சொல்லிய வார்த்தையானது, ஒலிக்கும் வீரகண்டைகட்டிய அவ்வரசன் காதிற்கேட்டவுடன், பிறைபோல்வளைந்த பெரியவில்லையும் பாணத்தையும் கையிலேந்திக் கோபங்கொண்டுவருகிற வெய்யபுலியை விரைவினிற் கொல்லுவதற்கு எத்தனித்தான். எ - று. (ட)

உற்றனனுற்றவனென்றுதன்முன்னம்
பற்றியவெம்புலிபார்ப்பினிதன்னை

யெற்றியணைத்துபிடித்தலுமேங்கு
முற்றிழையாளரசன்முகநோக்கி.

(இ - புணை.) அப்படி யெத்தனித்தவன் வருவதறகுமுன் தொடர்ந்து வந்த புலியானது, அந்தப் பிராமணத்தியை அடித்துப் பிடித்துக்கொள்ளவே, அழுகிற அந்தப் பிராமணஸ்திரியானவள் அரசன் முகத்தைப்பார்த்து, எ-று.

மன்னவனேபுலிவாயினடையுற்றே
னென்னுயிர்நினபாமென்றிதுகூறி
மின்னவிர்செஞ்சடைமெய்ப்பொருணமம்
பன்னினளாவிநடந்ததுபாவம்.

(இ - புணை.) அரசனே! நான் புலிவாயி லகப்பட்டுக்கொண்டேன், என் உயிரைக்காப்பது உன்பாரம் என்று சொல்லி, மின்னலைப்போலவிளங்குஞ் செஞ்சடையையுடைய உண்மைப்பொருளாகிய சிவபெருமானுடைய திருநாமத்தை யுச்சரித்தாள் பிராணனுநீங்கிவிட்டது, இதுபாவமானகாரியம். எ-று.()

வேதியன்மாதுவிளம்பியசொல்லான்
மாதுயரெய்தியமன்னன்வெகுண்டே
காதவிடுத்தகடுங்கணைசென்றே
போதெனவீழ்ந்ததுபுண்டரிகத்தின்.

(இ-புணை.) அந்தப் பிராமணஸ்திரியானவள்சொல்லியசொல்லினுல்துய ரங்கொண்ட அவ்வரசன் கோபமுள்ளவனுய்க் கொல்லும்படிவிடுத்த பாணமானது சென்று, புலியின்மேல், பூவைப்போல்விழுந்தது. எ - று. காதல்-கொல்லுதல். புண்டரீகம் - புலி. (கூ)

கண்டுபொறுமைகருத்தைவெதுப்பத்
திண்டிறல்வேலவனின்றுதிகைத்தான்
புண்டரிகமதறுபூவையையுங்கொண்
டுண்டிடவெம்முழைதேடியோதுங்க.

(இ - புணை.) தன்பாணம் பூவைப்போல விழுந்ததைக்கண்டு பொறுத லெஞ்சமானது மனதைவருத்த, மிகுந்த பலமுள்ள வேலேந்தும் அவ்வரசன் ஒன்றுந் தோன்றுமல திகைத்து நின்றுவிட்டான. புலியானது தன்னுற்கொல்லப்பட்ட அவளை யுண்ணுதற்குக் கவ்விக்கொண்டு ஓர் மலையில்கொடிய குகையை நாடிச்சென்றது. எ - று. (கo)

அச்சமுறுதவரும்புலிபோக
வச்சிரவாகுமகன்றுயருற்றான்

விச்சையுணர்ந்தறிவேதியன்மாதை
யிச்சகமீதினிழந்தனனென்றான்.

(இ - டுரை.) எவ்வளவும் பயமில்லாமல் அந்தப்பெரும்புலியானதுபோய் விடவே, வச்சிரவாகு புத்திரனாகிய பத்திராயு என்பவன் மிக்கதயாமனடைந்தான். வேதசாஸ்திரங்களுணர்ந்த பிராமணனென்பவன் என் மனைவியை இவ்வுலகத்தி லிழந்துவிட்டேனே யென்றுசொல்லி, எ - று. விச்சை - கல்வி. (கக)

வேறு.

அருந்ததியுமொவ்வாதகற்புடையமனையவளே யந்தோவந்தோ, பெரும்புலியின்பகுவாயினுயிரிழக்குமுற்பவத்திற்பிழைத்ததுண்டோ, குரும்பைமுலைத்தரளநகைக்கொடியிடையாய் நீவிளிந்த கொடுமைகண்டு, மிருப்பனேயகொமெனங்கொண்டின்னமூனாணிறவாமலிருக்கின்றேனே.

(இ - டுரை.) பதிவிரதாதருமத்தில் அருந்ததியும் நிகராகாத மனைவியே! ஐயையோ? பெரும்புலியின் பிளந்த வாயில் அகப்பட்டுக்கொள்ளும்படி முன் சென்மத்திற்செய்த வினையுண்டோ? தென்னங் குரும்பையையொத்த தனங்களும் முத்துக்களை யொத்த தந்தங்களும் பூங்கொடியையொத்த இடையினையும் உடையவளே! நீஇறந்த கொடுமையைக்கண்டும் இரும்பையொத்த வன்னெஞ்சங்கொண்டு இன்னமும் நானிறவாமலிருக்கின்றேனே, எனறு புலம்பினான். எ - று. (கஉ)

என்றென்றுபற்பலவும்பன்னியெடுத்தழுதுமனமிடின்மூழ்கிக்
கன்றொன்றுதனையிழந்தகறவைபோனெடிதுயிர்த்துக்கவன்றுமாழ்கி
யின்றொன்றுதுணிகுவன்யானிங்கென்னநினைந்துகடிதெழுந்துநின்று
குன்றொன்றுதிரள்புயத்துக்கோமகன்மேல்வெகுண்டினயகூறினனே

(இ - டுரை.) என்றென்று பலபலவாக தன் மனைவியின் குணாதிசயங்களை எடுத்தெடுத்துச்சொல்லி, துன்பத்தில் மனது அழுந்திடக், கன்றினையிழந்த பசுவைப்போலப் பெருமூச்சுவிட்டுக் கவலையுடன் சோர்ந்து, இப்போது ஒரு காரியஞ்செய்யத் துணிகுவனென்று தன்மனதில் நிச்சயித்துக்கொண்டெழுந்து, மலையையொத்த திரண்டபுயத்தையுடைய பத்திராயுவாகிய அரசன்மேல் கோபித்துக்கொண்டு இந்த வார்த்தைகளைச்சொல்லுகிறான். எ - று. கறவை-ஈன்றபசு. (கஊ)

மறையவருக்கிறைநிவந்தாலவருயிருக்குதவிசெய்யாமன்னரேறே
கறையிருக்குந்தீவாய்வெங்கனற்றறுகட்கொடுவரிகின்கண்முன்னுகப்
பிறைநுதற்குப்படரியற்றியுயிர்கவர்ந்துபிலம்புகுதப்பிடித்தவில்லோ
டுறைகழித்தகணையோந்திகின்றனகின்னரசியலுக்குவமையுண்டோ.

(இ - புனை.) பிராமணர்களுக்குத் தன்பதோரிட்டவிடத்தில் அவர்களுயி ரிறுக்கு உதவிசெய்யாத மன்னவர்கள் சிங்கமே! உதிரம் பொருந்தியிருக்கும் பொல்லாதவாயும் வெவ்விய தீப்பொறியைக் கக்கும் கண்களுமுள்ள ஒரு புலி யானது, உன்கண்ணுக்கெதிராகப் பிறைபோலும்நெற்றியினையுடைய என்மனை விக்கு வருத்தத்தைச்செய்து உயிரைவாங்கிக் குகையிற்போகவும், பிடித்தவில் லும் அணியிலிருந்தெடுத்த அம்பும் ஏந்திக்கொண்டுநின்றாய்; ஆலதால், உன் னரசியலுக்கொப்பான அரசியல்வேறுன்றுமில்லையென்று பழித்து, எ - று. தறுகண் - அஞ்சாமை. படர் - துன்பம். (கச)

ஆறிரட்டியாயிரம்வெங்களியாணைபலமுனக்குண்டதனைவேந்தே, பாறிரட்டுங்கதிர்வடிவேற்பகைவரிடத்தீந்தவராற்புயங்கொண்டாயோ, தூறிரட்டித்தெழுந்தமரக்கானகத்திலென்றுணையைத்தொடர்ந்துநெ ய்த்தோர்ச், சேறிரட்டித்திரும்பிலவாய்ப்புலிதவரமீட்டிலீ செய்த தென்னே.

(இ - புனை.) பன்னீராயிரம் யானைபலம் உனக்கு இருக்கின்றது, அர சனே! அந்தப்பலத்தினைப் பருந்துகளைக் கூட்டமாய்ச்சேர்க்கும் ஒளிதங்கிய வடிவேலையுடைய பகைமன்னரிடத்திற் கொடுத்துவிட்டுப் பயம்பெற்றுக் கொண்டனையோ! சிறுசெடிகளால் நெருங்கப்பட்டு மரங்கள் மேலோங்கியிருக் கும் இத்தப்பெரியகாட்டில் உதிரஞ்சோரும்படிப் பிலம்போன்ற வாயையுடைய புலியானதுதொடர்ந்து என் மனையாளைப்பிடித்துக்கொண்டுபோய்விட்டதே, அதனைத்தடுக்காமல் என்னைசெய்தாய். எ - று. தூறு-சிறுசெடியின் நெருக்கம். நெய்த்தோர்-இரத்தம். (கரு)

கடுங்கானிற்புலியெனதுகனங்குழையைக்குருதியுண்ணக்கருதிநின்மு னடுங்காலத்தனையுயிரழித்திலைநின்னுயிர்ப்புறங்காத்தஞ்சின்னூய் கொடுங்காலதூதாடுகளத்தினிற்பப்பகைவர்வந்துகொடும்போர்செய்யி னடுங்காதுபகைதுரந்துன்னரசுநிலைநிறுத்துவையோநாமமேலோய்.

(இ - புனை.) பகைவர் அஞ்சத்தக்க வேலாயுதமேந்திய அரசனே! கொடு மையுள்ள இக்தக்காட்டில் இப்புலியானது என்மனையவளை உதிரமுண்ணும் படிநினைத்துக் கொல்லும்போது, அந்தப்புலியைக்கொல்லாமல் உன்னுயிரைக் காத்துக்கொள்ளும்பொருட்டுப் பயந்துநின்றனை; கொடுமையுள்ள யமதூதர் வந்து போர்க்களத்தி லிருக்க உன்னெதிரிகள் வெவ்வியதான யுத்தஞ்செய்தால் அந்தச்சமயத்தில் நடுங்காமல் பகைவனைத்துரத்தி உன்னரசாட்சியை நிலைநிறு த்துவையோ? எ - று. (கசு)

பெண்ணெனியங்கணர்தம்பேதையுமாய்நினக்கபயம்பேணினளென
யெண்ணுதுகொலும்வேங்கைக்குணவளித்துயிர்காத்தவேழைவேந்தே

மண்ணாளவெண்ணுதியோவின்னமுமாருயிர்சுமந்துவலியிற்றூங்கு நண்ணார்தமிழிபுரைக்குநாணுயோவென்றுபலருடங்கச்சொன்னான்.

(இ - புணை.) பெண்பிறப்டாகியும் அந்தப்பிறப்பிலும் பிராமணஸ்திரியாகியும்உனக்கு அபயமென்று முறையிட்ட இவளைக்காக்கவேண்டுமென்று உன்மனதி லெண்ணடல், கொல்லும்புலிக்கு ஆகாரமாகக் கொடுத்துவிட்டு, உன்னுயிரைக் காத்துக்கொண்ட ஏழ்மையுள்ள அரசனே! பலத்தினிற்குறைந்தும் இன்னமும் பிராணனைத் தாங்கிக்கொண்டு ஊராள எண்ணுகிறீயா! பகைவர்கள் இழிவாகப்பேசுவார்களே அதற்கும் நாணமுறுயோ? என்றிவ்வாறு பலபலதுவகணவார்த்தைகளை அவனடங்கும்படிச் சொன்னான். எ - று. (உஎ)

என்னலுமேமதிமயங்கிவடிவேல்கொண்டகன்மார்பத் தெறிந்ததென்னக், கன்னியையவெம்புலிகவர்ந்தகொடுப்பழியுநான்மறையோன்கடியசொல்லு, மந்நிலையேயகம்வெதுப்பவருந்தியரக்கடவிடையாழ்ந்தழுங்குதோறு, மன்னர்பிரானரசியலுஞ்செல்வமுநீத்திறப்பனெனுமனத்தனனன்.

(இ - புணை.) இவ்வாறு அந்தப்பிராமணன் சொல்லவே, அரசன் மதிமயங்கி வடிவேலைப்பரந்தமார்பில் எறிந்ததுபோலப் பிராமண ஸ்திரியைப்புலி கொன்ற கொடும்பழியும் பிராமணன்சொல்லுங் கடுமையான வார்த்தையும் அப்போதே மனதை வெதுப்ப, நீங்குதற்கரிய துக்கசாகரத்தி லழுந்த வருந்தோறும் அவ்வரசன் இந்த அரசாட்சியையும் செல்வத்தையும் ஒழித்துவிட்டு இறக்கவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனானன். எ - று. எறிந்ததென்ன வெதுப்ப என முடித்துக்கொள்க. (கஅ)

வேதியருக்கிடர்களையாவேந்தனெருவிலங்கெனவேவேதங்கூறலாதியினிற்கேட்டிருந்துமவர்க்கிறுதிவந்தவிடத்தஞ்சிநின்றேறன் போதுமினியுயிர்சுமத்தல்சுமந்தாலும்வழியலதுபுகழுமுண்டோ தீதுதருஞ்வாழ்க்கையினுஞ்சீர்த்தியுறப்பொன்றுவதேசிரிதென்னை.

(இ - புணை.) பிராமணர்களுக்கு கோரிட்ட இடனைக்காத அரசன் ஒருமிருகமேயல்லது அரசனுகான் என்று வேதஞ்சொல்லுவதை ஆதியிலே கேட்டறிந்தும், இப்போது பிராமணருக்கு இடர்நேரிட்டவிடத்தில் பயந்து நின்றேறன்; உயிரைத் தாங்கிக்கொண்டிருந்தது இம்மட்டிற்போதும், அல்லது உயிரைச்சுமந்துகொண்டிருந்தாலும் பழிவருமேயல்லது புகழுண்டாவதில்லை; ஆதலால், தீங்கைத்தருகிற இந்தவாழ்வி லிருப்பதைப்பார்க்கிலும் உயிரைவிடுவதே நன்மையுண்டாக்கும் புகழாகமுடியும். எ - று. (கக)

மடமானைதப்புவிக்குணவாவழங்கியெந்தையருழக்குமறையோன்முனிற் றடமார்புமணிமுடியுநிலம்படியவீழ்ந்துதுயர்தவிர்தியென்னு மிடலானதொன்றுமிலாத்தமியேன்நீரகத்தின்வீழ்கின்றேனென்னு ணடைநாடுமென்குலமுநிதியமுநின்வயத்தவென்றுணுறவுத்தோளான்.

(இ - புரை.) என்றிவ்வாறெண்ணித் தன்மனைவியைப் புலிக்கு ஆகாரமாகக்கொடுத்துவிட்டுத் தயாரப்பட்டுக்கொண்டிருக்கிற பிராமணனுடைய பாதத்தில் அகன்றமார்பும் நாற்றினைங்கள் பதித்த மகுடமும் பூமியிற்படும்படிப் பத்திராயுவென்னும் அரசன்பணிந்து, ஐயனே! தன்பப்படவேண்டாமென்று சொல்லிப் பலமென்ப தொன்றுமில்லாத தமிழ்ப்பன் நிரகத்தில் விழுகின்றான், என்னுடைய தேசமுங் குலமும் திரவியமும் தேவரீர்வசமாக ஒப்புவித்தே னென்று சொன்னான். எ - று. (உ0)

மாறிலாத்திறல்வேந்தன்வாய்மொழிகேட்டருமறையோன்வழங் குங்கண்ணினின், வீறிலான்விரைமிழந்தானபலியெடுத்தான்சுகமிழந்தான் விஜனயின்மூங்கைகட், டேறுளாறுளிழந்தான்மஜனயிழந்தாணிரைதரும்பேறுநீத்தா, ணாறிலுலைப்படுநம்மீரவரசவெனக்கூறியிஃதறையலுற்றான்.

(இ - புரை.) மாறாத வெற்றியையுடைய அரசன் சொன்ன வார்த்தையைக்கேட்டு அந்தப்பிராமணன் சொலலுகிறான், அரசனே! கண்ணொளியிழந்தவனும் வன்மைமிழந்தவனும் பிணிஷையெடுத்தவனும் சுகமிழந்தவனும் பாவத்திலுல் லுமைத்தன்மையுடையவனும் பூணுறாவிழந்தவனும் மனைவியையியழந்தவனும் இம்மைப்படயனிழந்தவனுமாயிருப்பவன விசனம்நீங்கிச் சொல்லத் தக்கதெனனிருக்கின்றது, எனறுசொல்லிப் பின்னும் அந்தப்பிராமணன் இந்த வார்த்தையைச் சொல்லத்தொடங்கினான். எ - று. ஆறினன் என்பது, முற்றெச்சம். (உக)

என்னுடையதுயரமுந்தீர்ந்தாவியுங்கொண்டிருந்தவங்களியற்ற வேண்டி, னுன்னுடையகுலவனிதைகீர்த்திமாலினியையெனக்குதவல் வேண்டு, மன்னவவென்றலுங்கொடியவடிவுரைவேல்போலாசன்மரு மத்தூன்ற, நன்னெறிதீரிழிபுரைநீயிங்குரைத்தாயிவ்வுரையையவிலற் பாற்றோ.

(இ - புரை.) அரசனே! என்னுடைய துயரம்நீங்கப் பிராணனை வைத்துக்கொண்டு நான் தவங்கள் செய்யவேண்டுமென்கிற எண்ணம் உனக்கிருக் குமாலல், உன்னுடைய தருமபத்தினியாகிய கீர்த்திமாலினியை யெனக்குக் கொடுக்கவேண்டுமென்றுசொன்னேன்; அப்படிச்சொன்னவுடன் அந்தக்கொடிய வார்த்தையானது அரசனுடைய மார்பில் வேல் தைத்ததுபோலிருந்ததினால், ஐயோ! தர்மத்துக்கு மாறான இழிவுள்ள வசனஞ்சொன்னீர், இந்தவார்த்தை சொல்லலாமோ? என்றுஅரசன்சொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான். எ - று.

கனைகுரற்றெண்கடலுடுத்தகாகினியின்மறைவல்லோய்கலிவல் லோர்க்கு, முனையிடத்திறுபிர்கொடுப்பர்முழுநிதியத்தொன்கைகொடுப்

பர்மூகமன்சொல்வர், துணைபரித்தேர்கொடுப்பர்கரிகொடுப்பர்பரிகொ
டுப்பரன்றித்துணையாயுள்ள, மணிகொடுத்துப்புகழ்படைத்தமன்னரு
ண்டேலுனையென்றுன்மன்னர்கோமான்.

(இ - புனை.) பத்ராயு என்னும் மன்னர்பெருமான் அத்தணைநோக்கி, பிராண்மச்சிரேஷ்டரே! ஒலிக்கும் ஓசையுடையதாய்த்தெளிவுள்ளகடல்சூழ்ந்த இவ்வுலகில் அரசர்களாயிருப்பவர்கள், பிராமணர்கள் பொருட்டுத் தங்களுயி ரைக்கொடுப்பார்கள், மிகுத்தநிரவியங்கொடுப்பார்கள், உபசாரவார்த்தைசொல் வார்கள்; வினாவாகச்செல்லுங் குதிரைகட்டியதேர்கொடுப்பார்கள், குதிரை கள் யானைகள் கொடுப்பார்கள், இவ்வளவே யல்லது இல்லறத்துக்குத் துணை யாகிய மனைவியைக்கொடுத்துஇந்நிலவுலகத்தில் புகழ்படைத்த அரசர்களுண் டாயிருந்தால் சொல்லுமென்றுன் எ - று. (உக)

செங்கோன்மையரசர்பிரான்செப்பியசொல்செவிபுகுதச்சிவத்துநோக்கி
வெங்கோன்மையரசியற்றும்விறல்வேந்தேபழியிதனன்மேவினுலுந்
தங்காதவகையியற்றுஞ்சாந்தியமேவேணங்கைத்தருதியின்றே
னுங்காருந்தழனரகம்புகுதியெனச்சபிப்பனினிறுவதியென்றுன்.

(இ - புனை) செங்கோன்மையுடைய வரசனிவ்வாறு சொல்லிய சொல் லானது காதிற்பட்டமாத்திரத்தில் பிராமணன் கண்சிவக்கநோக்கிக் கொடுங் கோன்மை செலுத்தி ராசாங்கஞ்செய்யும் அரசனே! இதனுலே யெனக்குப் பாவந் சம்பவிப்பதாயிருந்தாலும் அது தொடராதவண்ணம் சாந்திசெய்துகொ ள்ள என்னுலாகும்; ஆதலால், உன்மனையாளைக்கொடு, கொடாவிட்டால் பாவி களை யுண்ணத்தக்க தீநரகில்விழும்படி உனக்குச்சாபங்கொடுப்பேன்; இனியெ ன்ன சொல்லுகிறுய் சொல் என்றுன். எ - று. (உச)

வேறு.

ஆழ்ந்தமேன்மைமறையோனைறையுஞ்சுடுசொல்வாளாற்
போழ்ந்தநெஞ்சங்கருகப்பொருமிப்பொருமிப்புவிமேல்
வீழ்ந்துவீழ்ந்தாங்கெழுந்துவிழிநீர்க்கடலுள்ளழியா
தாழ்ந்தநெஞ்சங்கூர்ந்துதனைவேந்திவைகுணினையும்.

(இ - புனை.) வேதக்கேன்வியில் ஆராய்தலுடைய அத்தப்பிராமணன் சொல்லுஞ் சுடுசொல்லாகிய வாளினுல் பிளக்கப்பட்ட மனம்வெதும்பி அழு தழுது, பூமியில்விழுந்து விழுந்து, பின்னுமெழுந்து கண்ணீர்த்தாரைக் கடல் போற்பெருக அதிலாழ்ந்தவனுய் ஒன்றுந்தோன்றுத மனமுள்ளவனை பெரு மைப்பாலுள்ள வவ்வரசன் இவைகளை யெண்ணுகிறுன். எ - று. (உஞ)

மாறுக்கற்பினிவளைமறையோற்களிக்கின்வசையாம்
வேறுய்மறத்தின்றுணைத்தால்வினையேபுரியுமறையோன்

கூருய்வளரும்பிறையுங்கொன்றைத்தணைருஞ்செருகி
யாருதரிக்குஞ்சடையோனருளேதெனவுமறியேன்.

(இ - புணை.) அழியாத கற்புநிலையுள்ள இவளைப் பிராமணனுக்குக்கொடுத்தால் வசைவந்தநேரிடும், அல்லது மறுத்து வேருகச்சொன்னல் பிராமணன் சாபங்கொடுப்பான், ஒருகலையுடனிருக்கும் பிறையினையுங் கொன்றைமாலையினையுந்தரித்துக் கங்கையினையும்தரித்துவிளங்கும் முடியையுடைய பரமசிவத்தின் திருவருள் எவ்வாறிருக்கின்றதோ தெரிந்திலன். எ - று. (உசு)

பொல்லாநரகத்திடையேபுகுமாறுயிருக்கெளிதோ
நல்லாடனையுமிங்ஙனயந்தமறையோற்குதவி
வில்லார்மணிப்பூண்வேக்தர்வினையங்கேட்டுவியப்பக்
கல்லாமாந்தரிழிப்பக்கனல்வாய்ப்புகுவேனென்ன.

(இ - புணை.) பொல்லாத நரகத்தில் உயிர் விழுகிறதென்றல் அது எளிதானதல்லவே; ஆதலால், மனையவளைவிரும்பிக்கேட்கிற பிராமணனுக்குக் கொடுத்து, ஒளியுள்ள ரத்தினபரணங்களணிந்த மன்னவர்கள் இந்தச் சேதியைக் கேட்டுச் சந்தோஷிக்கவும் கல்வியுணராத மாந்தர்கள் இழிவுசொல்லவும் தீயில் விழுவேனென்று துணிந்து, எ - று. (உஎ)

இருந்தமறையோய்நினக்கேயீந்தேனிவளீயீந்தேன்
பொருந்தும்பதியிற்கொடுநீபோவாயென்றேபுகலாத்
திருந்துமனையாடன்னைத்தாயேசெல்கென்றேறத்தி
யருந்துமமிர்தம்போல்வானனலைக்கடிதினமைத்தே.

(இ - புணை.) தனக்குள் எண்ணிக்கொண்டு, கோபங்கொண்டிருக்கும் வேதப் பிராமணரே! இவளை யுமக்குக்கொடுத்தேன் கொடுத்தேன், நீர்வாசமாயிருக்கும் நகரத்துக்குக் கொண்டுபோமென்று சொல்லிக் கற்புள்ளமனைவியைப்பார்த்து, தாயே! இந்தப் பிராமணனுடன்போவாயென்று சொல்லித் துதித்து, உண்ணுமமிர்தம்போன்ற அரசன் விசைவாகத்தீவளர்த்து, எ - று. பிராமணருக்கு மனைவியாகக்கொடுக்க இசைந்தபின் அவள் பாதாரமாளுளாதலால், தன்மனையைத் தாயே என்று விளித்தான். (உஅ)

கண்ணீர்கலுழ்தன்மாற்றிக்கருத்துமொருபானிறுவித்
தெண்ணீர்மூழ்கியெழுந்துசிவமந்திரமுட்கருதி
விண்ணூருலவுங்கதிரும்வெதும்பச்சினைகொள்கனல்வா
யுண்ணீர்மையிலுண்வீழ்வாரெனருப்பட்டிலயுங்காலை.

(இ . புணை.) கண்ணிலிருந்து நீர்வருதலைமாற்றி, மனதை யொருவழிப்படுத்தித் தெளிவுள்ள நீரில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீபஞ்சாக்ஷரமந்திரத்தை யுள்ளேயுச்

சரித்து, ஆகாயத்திற்செல்லுஞ் சூரியனும் வெப்பங்கொள்ளச் சிகைவிட்டெழு
கின்ற தீயில் அன்புடன்விழ ஒருமைப்பட்டி அக்குண்டத்தைப் பிரதக்ஷிணஞ்
செய்யும்போது. எ - று. (உசு)

ஐந்துமுகமுமொளிரவிர்செஞ்சடையின்மீதே
யிந்துமொளிகொண்டிலகவிடையேயிடையேயிதழிக்
கொந்தின்றுணர்நின்றசையக்கொக்கின்சிறகுமறுகுஞ்
சிந்தும்பனிநண்டிவலைச்செழுநீர்மகளுந்திகழ.

(இ - புரை.) ஐந்து திருமுகங்களும் பிரகாசிக்கவும் விளக்குகின்ற செஞ்
சடையில் இளந்திங்கள் ஒளியுடன் பிரகாசிக்கவும் அதன்மத்திகளில் கொன்
றைப்பூங்கொத்துக்களிருத்தசையவும் கொக்கினிறகும் அறுகும் சிந்துகின்ற
குளிர்ந்த தெளிகளையுடைய கங்கையும் பிரகாசிக்கவும், எ - று. (உ0)

மூன்றுகண்ணுஞ்சுடரமுரலுஞ்சங்கக்கடல்வாய்
கான்றவிடமுண்டிருண்டகண்டமணியிற்கனிய
வான்றவீரேழுலகுமல்லாப்புவனத்தமுக்கு
மீன்றுங்கண்ணியென்னவிருந்தாள்வாமத்திலே.

(இ-புரை) திரிநேத்திரங்களும் பிரகாசிக்கவும் ஒலிக்குங்கடலிற்றோன்றி
விஷபானஞ் செய்து கறுத்த காளகண்டம் நீலரத்தினம்போல விளங்கவும்
நிறைந்துள்ள பதினான்குலோகங்களும் அவைகளேயன்றி மற்றப்புவனகோடி
களையும் பெற்றும் கன்னியாயிருக்கும் உமையவள் இடப்பாகத்தில் விளங்க
வும், எ - று. (உக)

பவளவரையிற்றழ்ந்தபடியுநீலப்புயல்போற்
கவளயானையுரியைக்கவினருருவம்போர்ப்பத்
திவளும்புலியினதளைச்சேர்த்திப்புயங்கநீவி
துவளநீற்றின்றவளச்சுடர்ப்புண்டரமுந்தோற்ற.

(இ - புரை.) பவளமலையிற் கருமேகம் படிந்திருப்பதுபோல யானைத்
தோற்போர்வை திருமேனி போர்ப்பவும், விளங்குகின்ற புலித்தோலையுடுத்து
அதன்மேற் சர்ப்பக்கச்சணியப்பட்டுத் தொங்கி அசையவும், வெள்ளியவிபூ
தித் திரிபுண்டரங்களும் பிரகாசிக்கவும், எ - று. (உஉ)

தெய்வமகளிர்நடிக்கச்சிறந்தமுழவங்கறங்க
வையமனுங்கநடிக்குமழிவெள்விடையினேறிக்
கொய்யுமலர்கொண்டடியிற்குளிரப்புனைவார்க்கெளிதிற்
றக்கடல்வந்தெதிர்ந்தான்.

(இ-புணை.) அரம்பாஸ்திரிகள் கடனஞ்செய்யவும்சிறந்ததாகிய குடமுழா ஒலிக்கவும், திரிபுரதகனஞ்செய்யும்போதமைத்த தேரினச்சு முறியக்கண்டு எதிரில்வந்து நடித்ததாகிய இளமையும் வெண்மைநிறமுமுள்ள திருமாலாகிய ருஷபவாகனத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு, கொய்த திருப்பள்ளித் தாமங்கொண்டு குளிரும்படித்திருவடியில் அருச்சிப்பவர்களுக்கு எளிதாகமோ க்ஷத்தையருளுங் கிருபைக்கடலாகிய பரமசிவம் தரிசனங்கொடுத்தருளினர். எ-று. வையம் நுங்க நடிக்கும்என்றுபாடமாயின், இவ்வுலகத்தை யுண்ணநடித்த மால்விடையெனப் பொருளுரைத்துக்கொள்க. முன்னுரைக்கு வையம்-தேர்.

கண்ணுமனமுங்குளிரக்கண்டானரசர்க்கரசன்
றிண்ணம்பிறவிப்பகையைச்செற்றேமென்றுகருதி
யுண்ணுமமிர்தமுண்டாரெருவனென்னக்களித்து
விண்ணுமண்ணும்பிறவுமாரேனடியில்வீழ்ந்தான்.

(இ - புணை.) இங்ஙனம் பெருமான் விடையிவர்ந்து காட்சிதரவே, அரசர்க்கரசனென்வன் தன்கண்களுமனமுங் குளிரும்படித்தரிசித்து, நிச்சயமாக இப்பிறவிப்பகையை ஒழித்தோமென்றெண்ணித் தேவர்களாலுண்ணத்தக்க அமுதத்தை யுண்டுகளித்த ஒருவனைப்போலக் களித்து, ஆகாயமும் பூமியும் மற்றனைவகளுமாய் நிறைந்துள்ள பரமசிவத்தின் திருவடியிற்பணிந்தான். எ - று. வேறு.

தேவாதிதேவனுய்ச்சிற்குணனுயற்புதனுய்
மூவாமுதலாய்முழுப்பொருளாய்நின்றுயை
காவாய்பிறவிக்கடனீந்திக்கையினாத்தே
னுவாயெனவேவின்னுண்மலர்த்தான்பெற்றேனே.

(இ - புணை.) தேவர்களுக்கெல்லாம் முதலாகிய தேவனுகியும் சிற்குணனுகியும் அற்புதனுகியும் மூவாமுதலாகியும் கடவுட்டன்மைநிறைந்தபொருளாகியும் வீற்றிருக்குங்கடவுளே! அடியேனைக்காத்தருளவேண்டும் ; பிறவிச்சமுத்திரத்தை நீந்திக் கரையேறமாட்டாமல் கையினாத்தேன், அந்தக்கடலைநீந்துவதற்குக் கப்பலைப்போல உம்முடைய திருவடித்தாமரைமலரை இப்போது பெற்றுக்கொண்டேன். எ - று. மூவாமுதல்-கொடாதமுதல். நாவாய்-ஓடம்.

உண்ணுநறையாயுவட்டாததெள்ளமுதாய்
மண்ணுமணியாய்மறைப்பொருளாய்நின்றுயை
யெண்ணுவளவுபடாத்துன்பத்திடருழந்தேன்
கண்ணுலுறநோக்கிக்கையாற்றெழுகின்றேன்.

(இ - புணை.) உண்ணப்படாத தேனுகியும் தெவிட்டாத மதுரமுள்ள அமிர்தமாகியும் கழுவப்படாதமாணிக்கமணியாகியும் வேதப்பொருளாகியு மிரு

க்குங் கடவுளே! இலக்கத்திறுஞ் அளவுபடாத துன்பத்திறுல் வருத்தங்கொ
ண்ட அடியேன் உம்மைக் கண்ணினுற்றரிசித்துக் கைகளாற்றொழுகின்றேன்
எ - று. மண்ணுமணி - சாணையாலொளிபெறுது இயற்கையால் ஒளிபெற்ற
மணி. மண்ணல்-தழுவல் சாணைபிடித்தல் முதலிய பலபொருளொருசொல்.

அன்புக்கோரன்பாயறத்துக்குநல்லறமாய்
வன்புக்குவன்பாய்வழிலொருவிநின்றுயை
முன்புக்குணர்விலுயிர்மூங்கைத்தொழில்புரிந்தே
னென்புகுருகவெளிதிற்பணிகின்றேன.

(இ - புரை.) அன்புக்கு அன்பாகியும் தருமத்துக்குத் தருமமாகியும் கடி
னத்துக்குக் கடினமாகியும், உருவமின்றிநின்ற தேவரீரை, முன்பு சோதத்தக்க
ஞானமில்லாதவுறுய் ஊமைத்தன்மை யுள்ளவன்போலிருந்தேன்; இப்போது
எலும்புகள் நெக்குவிட்டுருகும்படி எளிதில் பணிகின்றேன். எ - று. (நூ)

என்றேறயாசன்களிபெருகியேத்தெடுப்பக்
குன்றுவிடயக்குலக்கொழுந்தின்கோமானும்
பின்றுதகாட்சிபபெரியோயெழுகவெனத்
தன்றுளில்வீழ்ந்தாஜனத்தன்றிருகையாலெடுத்தான்.

(இ - புரை) பத்திராயு என்னும் அரசன் இவ்வாறு சொல்லி ஆனந்த
பாவசுறுய்த் தோத்திரஞ்செய்ய, குன்றுதலிலாத மலையரையன் புத்திரியாகிய
அம்பிகை பாகரானவர் அன்புழுதிர்ந்தவனே! எழுந்திருவென்று தன்திருவ
டியில் பணிந்தவனைத் திருக்கரங்களால் எடுத்தருளினர். எ - று. (நூ)

எந்நிலையுந்தாணுமிறைவனெடுத்தனது
மன்னுநிலைதோவான்மற்றையவுறுய்வந்ததுநாம்
பொன்னவிரமாமேனிப்பொருப்பனையன்றன்மகள்காண்
டன்னிகரில்பார்ப்பனியாய்ச்சாந்ததளிரியலே.

(இ - புரை.) எப்பொருளுந்தாணுகிய இறைவன் எடுத்தருளி, அன்பனே!
உன்னுடைய பத்திநிலையை எல்லாரும் அறியத்தக்கதாக நாமே பிராமணரூக
வந்தோம்; தனக்குநிகரில்லாத பிராமணஸ்திரியாகவந்ததும் பொன்மயமான
மேனியையுடைய மலையரையன் புத்திரியாகிய பார்வதிதேவியாம். எ - று. ()

வந்துமறஞ்செய்தமறப்புலியுமாயைகாண்
சிந்தைகவலாதொழிநீயுன்றேவியுமா
யிந்தவுமையுடனேயெம்மையும்பூசித்ததுறற்
புந்திமகிழ்ந்தேதம்பொருந்துவாங்கேனென்றுன்.

(இ - புணை.) இக்கேவர்து பிராமணஸ்திரியை அடித்துத் தாக்கிக்கொண்டுபோன வீரபுள்ள புலியோவென்றால் மாயையாகும்; நீ உன்மனதிற் கவலைப்படவேண்டுவதில்லை, நீயும் உன்மனைவியும் எம்மையும் உமையவளையும் பூசித்தநலல் உள்ளத்தில் மகிழ்ந்தோம்; உனக்குவேண்டிய வரங்கேளென்றார். எ - று. (கூ)

வேந்தர்பிரானுமதுகேட்டுமெய்ப்பனிப்ப
வேந்துழுலைமென்றோளிமயத்திற்றேவியொடும்
போந்தபரிசெளிதாவேறோர்பொருளுமுண்டோ
நீந்துதுயரக்கடலைநீந்தினேற்கென்றுரைத்தான்.

(இ - புணை.) பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கைக்கேட்ட பத்திராயு உடல் கம்பிதங்கொண்டு, உயர்ந்ததனங்களும்மென்மையானதோள்களுமுடைய பார்வதிதேவியாருடன் சுவாமிகள் எழுந்தருளியது எளிதானதோ? துயரக்கட லைநீந்திய அடியேற்குக் கேட்கவேண்டிய வரமும் வேறேயிருக்கிறதோ? எ-று.

நீதிவரம்பிகந்துநின்றேனுமென்மனையுந்
தாதையுமென்னாயுந்தமியேம்படருழந்த
வேதமறக்காத்தவிளங்கோவுமைமந்தனுன்
பாதமலர்சேரப்பணிப்பாயெனலோடும்.

(இ - புணை.) நீதிவரம்பைக் கடந்துநின்ற அடியனேனும் என்மனைவியும் அடியேன் தாயும் தகப்பனும் எங்களைக் காத்துரகூஷித்த வணிகேசனும் அவன் புத்திரனும் தேவரீருடைய திருவடிமலரைச் சேரும்படி அருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். எ - று. (கூ)

காவலவன்றேவியுமெங்காரணனேயெற்பயந்த
மாவலவன்வண்புகழான்மன்னுசந்திராங்கதனு
மேவலருங்கண்ணொளிலங்கிழைசீமந்தனியாம்
பூவையுநின்பாதம்புகுதப்பணியென்றாள்.

(இ - புணை.) அந்தராசன்தேவியானவள் சுவாமியை நோக்கி, எங்கள் ஆண்டவரே! அடியாளைப்பெற்ற குதிரைச்சேவகத்தில் வல்லவனும் புகழுள்ள வனுமான சந்திராங்கதனும் பாணக்களையொத்தகண்களையுடைய சீமந்தனியும் தேவரீர் திருவடிகளை அடையும்படி அருள்செய்யவேண்டுமென்றாள். எ - று. மாவலவன் - என்பதற்கு மிக்கவல்லமையுடையவன்என்னலுமொன்று. (கூ)

இயாலையுந்தானைவிறையோன்றனதிருத்

மாவியலுக்தோர்தாண்டிமானவேன்மன்னவனுங்
காவிகெடுங்கண்ணியோடிங்காடர்பதிபுகுந்தான்.

(இ - புணை.) எல்லாப்பொருளுந் தாமாயிருக்கும் கயிலாசபதியானவர் அவர்கள் சொல்லியவரம் அருளிச்செய்து, பார்வதிதேவியாருடன் எழுந்தருளி விட்டார். பத்திராயு நீலோற்பலமலர்போன்ற கண்களையுடையதன்மனையுடன் தோளிலேறிக்கொண்டு தன் அழகியபதியிற்சேர்ந்தான். எ - று. (சச)

வையம்பொதுநீங்கமன்னர்திறையளப்பச்
செய்யதனியாணைசெல்லவொருகோலோச்சிப்
பொய்யில்பதினுயிரம்பருவம்பூதலங்காத்
தெய்யும்வரிசிலையானேந்தற்காசளித்தான்.

(இ - புணை.) தன்பதியிற்சேர்ந்த அவ்வரசன் இவ்வுலகம் பொதுவின்றித் தன்னதேயாகவும், மறுதேசத்தரசர்கள் திறைகொண்டுவந்தளக்கவும், தன்மையுள்ள தன் ஆக்கிணைசக்கரம் நிகரின்றிநடக்கவும் செங்கோல்செலுத்திச் சரியாகப் பதினுயிரம்வருஷம் பூமியைக்காத்து அரசுசெய்து, பாணமெய்தற்குரிய வில்லேக்கிய அவ்வரசன் தன்புத்திரனுக்கு அரசாட்சியைக் கொடுத்தான். எ - று. (சஅ)

வேயனையமென்றோள்விளங்கிழையிடைதிர்ந்த
பாயும்விடையோன்வாமனித்தபான்மையினின்
மாயனுநான்முகனுந்தேரார்மறைமுடியின்
சேயபதந்தேவியொடுதோன்றன்சேர்ந்தானே.

(இ - புணை.) பாயாநின்ற ருஷபவாகனமுடைய சாம்பசிவமூர்த்தியானவர் முன்னம் பசியமுங்கிலையொத்த தோள்களையுடைய பார்வதிதேவியாருடன் எழுந்தருளிவந்து வரமருளிச்செய்த தன்மையினும், பத்திராயுவென்னும் அரசன் தன்மனையாளுடன் திருமாலும் பிரமதேவனுங் காணுத வேதாந்தப்பொருளாய் விளங்கும் மோகூத்தையடைந்தான். எ - று. (சக)

மன்னர்பரவவருஞ்சந்திராங்கதனுந்
தன்னிகரிறைவியொடுஞ்சார்ந்தான்சிவலோக
மென்னமுனிசூதனியம்பவதுகேளாமு
னன்னெறிசேர்மாமுனிவர்காதனிசைபாடினர்.

(இ - புணை.) அரசர்களெல்லாரும் புகழும்படி ராசாங்கஞ் செலுத்திய சந்திராங்கதராசன் தன்தேவியுடன் சிவலோகஞ்சேர்ந்தானென்றுசூதமுனிவர் சொல்ல; நல்லொழுக்கமுள்ள மைமிசாரணியமுனிவர்கள் அந்தச்சரித்திரங் கேட்டவுடன் பரமசிவத்தின் அருட்டிறப் பெருமையைப் புகழ்ந்து பாடினர்கள். எ - று. (சள)

பதினைன்காவது. பத்திராயுமுத்திப்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-அகூஎ.

உ

சிவமயம்.

பதினைந்தாவது

விபூதிமகிமையுணர்த்த அத்தியாயம்.

மற்றுமோர்கனவிளம்பனவருந்தவர்வழங்கச்
செற்றமால்குணவாமதேவன்புரிசெயலுங்
கற்றைபஞ்சடைக்கடவுள்வெண்ணீற்றின்மாக்கதையுஞ்
சொற்றதன்மைநூறருஞ்சூதமாமுனிவரன்சொல்வான்.

(இ - புணை.) இன்னமுஞ் சிவசரித்திரம் அருளிச்செய்யவேண்டுமென்று னைமிசாரணிய முனிவர்கள்கேட்க, நற்குணங்களையுடைய வாமதேவனென் னும் ஒரு முனிவர்செய்தசெய்கையும், செஞ்சடையையுடைய கயிலாசபதியின் பரிசுத்தமான நிறமுள்ளதாய்ப் பெருமைதங்கிய விபூதிமான்மியமும், சொல்லு கின்ற தன்மையுடைய வேதமுதலான சாத்திரங்களுணர்ந்த சூதமுனிவர் சொல்லுவாராயினர். எ - று. (க)

கொலைபெருக்கியகொடுந்தொழில்வாழ்க்கையரேனுந்
தலைமைபெற்றவிக்கதையினைக்கேட்டதன்மையினோர்
நிலைமைபற்றியபவத்தொடுமும்மலநீங்கி
யலைவறப்பரசிவபதமுத்தியேயடைவார்.

(இ - புணை.) எப்போதும் உயிர்க்கொலைசெய்கின்ற கொடிய தொழிலை யுடைய பாதகரேயாலுஞ், மூதன்மையாகிய இந்தச்சரிதையைக்கேட்குந்தன் மையர்கள் தொடர்ந்துவருகின்ற பிறவியும் மும்மலமும் நீங்கி, அலைவற்றிருக் கும்படிச் சிவபதமாகிய முத்தியை அடைவார்கள். எ - று. (உ)

காமதேவனைமுருக்கியகடல்
காமதேவனைவழிபடுதகுதியன்றவத்தாற்
றூமதேவனும்புனிதநற்றுறவினர்துதிக்கும்
வாமதேவனென்றுளனொருமாசிலாக்குணத்தோன்.

(இ - புணை.) மன்மதனை நெற்றிக்கண்ணினலெரித்தவரும் கொன்றைப் பூமாலையணிந்தவருமாகிய பரமபதியினை ஆராதிக்கும் அன்பினையுடையவனும்,

தவத்திலுல் அக்கினிதேவனு முனிவர்களும் புகழும்படியாகிய பரிசுத்தமான குணமுள்ளவனுமாகிய வாமதேவனென்னும் ஒருமுனிவனுளன். எ - று.

தமம் - அக்னி. (உ)

கருத்துமேவலகத்தற்றவன்புறத்தறைக்கருமத்
தருத்தியில்லவணீற்றினுல்விளங்குமெய்யணியன்
விரித்தவேணியன்சிரைபண்விளங்குவெண்கபாலந்

(இ - புணை.) மோகூத்தில் கருத்தைவைத்திருப்பவன், உலகசம்பந்தமான காரியத்தில் விருப்பமில்லாதவன், விபூதியே பூஷணமாகத் தரித்துக்கொண்டு விளங்குந் திருமேனியையுள்ளவன், பரந்தசடையினையுடையவன், அரையில் மரவுரிதரித்திருப்பவன், விளங்குகின்ற வெண்கபாலந்தரித்த செங்கையையுடையவனுகுகின்றவர்கள்போலவேஷம்பூண்டு, எ-று, கேவலம்-மோகூம்.

புவனிமாந்தருக்கின்னருள்சுரந்திடும்பொறையாற்
கவணமோடுலகெங்கணுந்திரிந்திடுகழலான்
சிவனேநேர்பவன்செய்தொழிலிகந்தவனிறைருஞான்
றவனியோர்புகழன்றிலப்பெருவனமடைந்தான்.

(இ - புணை.) இவ்வுலகத்தி லிருப்பவர்களுக்கு இனிய அருள்பொழியுஞ் சாந்தகுணத்திலுல் விரைவாகத் தேசமெங்குஞ் சஞ்சரிக்கும் பாதத்தையுடையவனும், சிவனுக்கொப்பானவனும் செய்யுந்தொழிலை நீங்கினவனுமான அம்முனிவன் ஒருநாள் இவ்வுலகத்தார் புகழும் அன்றில் வனத்தையடைந்தான். எ - று

அரியமாமுனியடைதலுமயிலெயிற்றகல்வாய்க்
கரியமாசுணக்கச்சினவுரகங்கணத்தா
னெரியுநீள்கடற்றிரையெனவெளிபுருவத்தான்
பெரியமால்வரைமுழையெனவிரிந்தபேழ்வாயான்.

(இ - புணை.) அருமையாகிய தவமுள்ள வாமதேவமுனிவர் அந்தவனத்தில் அடைந்தவளவில், வேலியொத்த பற்களும் அகன்றவாயும் கருகாகக்கச்சும் சர்ப்பகங்கணமும் நெருங்கிய நீண்டகடலின் அலைபோல் மேலெறிட்ட புருவமும் பெரியமலையின் குகைபோலிருக்கும் ஆழ்ந்த வாயுமுடையவனுய், எ - று.

நெட்டைவெண்மினைறயிரண்டெனநிணப்புலால்கமழ்ந்
தட்டமென்றுமொன்றரக்கியவதரத்தன்றழலாய்
வட்டமிட்டுழல்கண்ணினன்வடனைவளஞ்சிகைபோல்
விட்டெழுந்தசெங்குஞ்சியன்வெடிகூரனகையான்.

(இ - ளை.) நீண்டு வெண்மையாகிய இரண்டுபிறையை வைத்திருப்பது போன்று நிலைத்கள் காறிக்கொண்டிருக்கும் பற்களால் மென்று மென்று அரக்கிக்கொண்டிருக்கும் உதட்டினையும் அக்கினிமயமாய் வட்டமிட்டுச் சுழன்று கொண்டிருக்கும் கண்களையும் வடவாமுகாக்கினியின் சிகைபோலச் கொழுந்துவிட்டு மேலெழுந்த செம்மயிரினையுடையவனும் இடிபோல ஒலிக்குங் குரலோசையுட னகைசெய்கின்றவனுமாய், எ - று. (எ)

அஞ்சனக்கிரிதாள்கொடுடங்தனவடைத்து
வஞ்சகத்துவலலாக்கன்மாமுனிவனைவதைப்பான்
நெஞ்சுருத்துநீடோகலிநிற்றியென்றுரையா
வெஞ்சினத்தொடுதழீஇயதன்கரங்களால்விசித்தான்.

(இ - புனை.) வஞ்சகத்தையுடைய வலிய ஒருராகூதன் நீலமலையானது கால்பெற்றுக்கொண்டு நடந்து வருவதுபோல வந்து, பெருமை பொருந்திய வாமதேவமுனிவனைக்கொல்ல மனதிற்கோபங்கொண்டு, அம்முனிவனைப்பார்த்து நீ போகாதே நில்லுநில்லென்று உருத்துச்சொல்லிக் கொடியதான கோபத்துடன் பிடித்துக்கொண்ட தனகைகளால இறுக்கினன், எ - று. (அ)

நீள்பனைக்கையாற்றழுவினனிறுக்கவங்கிமலன்
றோள்களிற்றிருநீறுமெய்படுதலாற்றொடலான்
வாளரக்கன்வல்லுருவமும்பாவமுமாய
வேளனததிகழுருவொடுநின்றனன்விளங்க.

(இ - புனை) பனைபோன்ற நீண்டகைகளால் தழுவியிறுக்கவும் பரிசுத்தலுகிய அம்முனிவனுடைய திருத்தோள்களிற் பூசியிருக்கும் விபூதியானது அவ்வரக்கன்சரீரத்திற் பட்டதிலுலும் அம்முனிவன் திருமேனியைப் பரிசித்ததிலுலும், அந்தராகூதனுடைய கோரரூபமும் பாபமுந் தொலையவே, மன்மதன் போலப் பிரகாசியாநின்ற சௌந்தரியமுள்ள சரீரத்துடன் நின்றான். எ - று. (கூ)

எரிசிகைத்தழற்கடவுளையடைந்தனையவும்
விரியுநலஞழலுருவமாய்விளங்குமாறென்னக்
கரியவல்லுருவொழியவல்லரக்கனக்கணத்தி
லுருவப்பையபொனிலெனியவிர்மேனிபெற்றுயர்ந்தான்.

(இ - புனை.) எரிகின்ற சிகையையுடைய அக்கினிதேவனை அடைந்த பொருள்களெல்லால் பரந்த நல்ல அக்கினிமயமாய் விளங்குவதுபோல, கருமைநிறமுள்ள வலிய உருவமொழிந்த மாத்திரத்தில் அப்பொழுதே அவ்வரக்கன்மாற்றுயர்ந்த பொன்போலவிளங்கு மேனிபெற்றுயர்ந்தான். எ - று, (கo)

தன்னுருக்காந்தொழிந்திடத்தாசுமும்பசியுந்
தன்னுதிக்குணந்தொலைந்ததுபாவங்களெலையவே
மன்னுமூற்பவத்தியற்றியதேன்றலுமனத்தான்
முன்னிமாதவமேகேட்டியென்றிறைஞ்சினன்மொழிந்தான்.

(இ - புரை) தன்னுருவம் மறைந்து நீங்கவே, அந்தராகூந்தனுக்குத் தாகமும் பசியும் மாறுமலிருந்த தீயகுணமுந்தொலைந்தது, இப்போது பாவங்கள் தொலையவே பூர்வசென்மத்தின் இயற்கைகளையறிந்து, மனதாற்றியானித்து வாமதேவமுனிவனேவணங்கி மகாதபசியாகிய முனிவரேகேளுமென்று சொல்லுகிறான். எ - று. (கசு)

வெப்பிணுறுபசியினுன்வனத்திடைமெலிதே
னெப்பிலாத்தவமுனிவநின்னூறுபெற்றதனை
லப்புலாலுடலரும்பசிகொலைத்தொழிலகலச்
செப்பலாயதன்றுயதோர்திருவுருவமைந்தேன்.

(இ - புரை.) வெப்பத்துடன் எப்போது மாறுமலிருக்கும் பசியினால் இக்காட்டில் வருந்தினேன், ஒப்பில்லாத தவமுனிவரே! உம்முடைய டரிசத்தை அடியேனபெற்றதினால் அந்தராகூந்த உருவமும் அடக்கக்கூடாத பசியும் கொலைத்தொழிலும் நீங்கிச் சொல்லத்தகாத கல்லுருவத்தையு மடைந்தேன். எ-று. உளறு - பரிசம். (கஉ)

உற்றுநின்றிருக்கண்களாலொருகணேரக்கப்
பெற்றநாயடியேனுழல்பிறவிநோயகற்றப்
பற்றறுங்குணப்பரமன்வாழ்பரகதியடைய
முற்றுமென்னினீபுரப்பதுகடனெனமொழிந்தான்.

(இ - புரை.) ஒருகணப்போது உம்முடைய கண்களால் என்னைப்பார்க்குப்படிப்பாக்கியம்பெற்ற காடழியேன், இயல்பாகவே பற்றற்றகுணத்தையுடைய பரசிவத்தின் திருப்பதியைப்பெறவும் இன்னமும் இவ்வுலகத்தில் உழலுகின்ற பிறவிப்பிணி நீங்கவும் என்னை ரகூஷிப்பது தேவரீர் கடமையேயாமென்றுசொன்னான். எ - று. (கஊ)

கேட்டமாமுனியுவகையுங்கருணையுங்கெழுமிக்
காட்டகத்தொறுந்திரிதருகடுந்தொழிலரக்க
னாட்டினீயெவனிங்குவந்தமையதுநலைவா
லீட்டுதியுருவெடுக்கவென்னியற்றினேயென்றான்.

(இ - புனை.) நல்லுருவம்பெற்றவன் இப்படிச் சொல்லியதைக்கேட்ட வாமமுனிவர் சந்தோஷமும் கிருபையும் பொருந்தி அவனைப்பார்த்து, காட்டிடமெங்குஞ் சஞ்சரிக்கின்ற கொடியசட்டையையுடைய அரக்கனே! இவ்வண்ணம்பேசுகிறநீயாவன்? இவ்விடத்தில் வந்தகாரணமென்னை? பாவத்திலல்வரத்தக்க நீயதாகிய ராக்ஷதரூபம் எடுக்கும்படி என்னபிழை செய்தனை? என்று கேட்டருளினர். எ - று. (கச)

அந்தவாசகங்கேட்டலுமகமகிழ்ந்தரக்க
னெந்தைதின்னருட்பேற்றினலெழுமையுமுணர்ந்தேன்
வந்தவாறெலாமோதுகேன்கேளெனவணங்கி
முந்தையற்றதும்புகுந்ததுஞ்சோர்வறமொழிந்தான்.

(இ - புனை,) அந்த வார்த்தையை அவ்வரக்கன் கேட்டவுடன் மனமகிழ்ந்து வணங்கி, என்னையனே! உன்னுடைய கிருபையைப் பெற்றதினல் எழுபிறப்பும் அறிந்தேன், நான்வந்த வரலாற்றையெல்லாஞ் சொல்லுகிறேன், கேட்பீரென்று, முன்னே சம்பவித்ததையும்வனத்தில்வந்ததையும் ஒழிவில்லாமற் சொல்லுவானுயினன். எ - று. (கரு)

வேறு

ஐயனேகேட்டியிந்தப்பிறவிக்கைபந்தாம்தோற்றம்
னையகம்புகழுவாழ்துச்சயனென்னுமன்னனென்ன
லெப்பயபாதகங்கள்செய்யுமிலேச்சர்க்குவேந்தனகிச்
செய்திதாழினன்கெண்ணுதுதிறுதிதாழியற்றினின்றேன்.

(இ-புனை.) ஐயனே! கேட்பீராக, இந்தச் சனனத்துக்குமுன் இருபத்தைந்தாம்பிறவியில் இவ்வுலகம் புகழும்படிவாழ்கின்ற துச்சயனென்னும் ராசனுய்க் கொடுமையான பாவங்களைச்செய்யும் மிலேச்சர்களுக்கிறைவனுகி, நல்லதொழிலைச்செய்யாமெண்ணுமல், இழிதொழிலைச் செய்துகொண்டிருந்தேன். எ-று

வாழுநாளுலகுக்கெல்லாம்வருத்தடகொடுங்கோல்செய்தேன்
வீழிவாய்மயிலன்னார்கள்வெண்டுகிர்தமைவருத்துஞ்
சூழிமாலியாலேயென்னவொருபகற்றேய்ந்துகாத்துப்
பாழிபஞ்சிறையிலெண்ணிர்ல்பானவையர்க்கலக்கண்செய்தேன்.

(இ - புனை.) அவ்வாறு வாழுநாளில் உலகுக்கெல்லாம் வருத்தம் உண்டாகும்படிக் கொடுங்கோல் செலுத்தினேன், வீழிக்கனிபோன்றவாயும் மயில்போன்றசாயலுமுடையமாதர்களில எனக்கு விருப்பமானவர்களையெல்லாம் விவாகஞ்செய்துகொண்டு வருத்துகின்ற முகபடாதத்தினையுடைய யானைபோல ஒருநாளவர்களைப்புணர்ந்து, அதன்பின்பு பலமான சிறையினிடத்திற் காவற்பத்தி, அனேகமாதர்களுக்குத் துன்பத்தைச் செய்தேன். எ-று. சூழி-முகபடாம்.

பின்னரோர்போழ்துங்தோயேன்பீடுசாலுழுகுலத்திற்
கன்னிமாரசர்மாதர்வணிகர்தங்கற்பின்மிக்கோர்
தொன்னெறிவேளாண்செல்வத்தோகையராதியாக
வன்னியவருணத்துள்ளமகளிர்களனந்தங்கோடி.

(இ - புணை.) விவாகஞ் செய்துகொண்ட தினத்தில் புணர்வதையன்றி மறுபடியும் ஒருநாளாவது அம்மாதரைப்புணரேன், பெருமைமிகுந்தபிராமண குலமாதர்கள் க்ஷத்திரியகுலமாதர்கள் வைசியகுலமாதர்கள் பழமையானமுறையையுடைய சூத்திரகுலமாதர்கள் முதலாக அன்னியசாதியிலுள்ள மாதர்கள் அனந்தங்கோடியரும், எ - று. (கஅ)

கம்மியமகளிர்சூனமடந்தையர்சழிகாரோடக்
கொம்மைவெம்முலையார்குன்றக்கொடிச்சியர்குறுங்கமாதர்
தம்மியற்குலாலமாதர்மஞ்சிகத்தையனல்லார்
சும்மையம்பரதமாதர்சுடுதொழிற்புலையமாதர்.

(இ - புணை.) கம்மாளக்குலமாதர்களும் ஊன்விற்குமாதர்களும் காரோடர்குலத்திற்பிறந்த விருப்பத்தைத்தருந் தனமுள்ளமாதர்களும் மலையில்வாழுங் குறமாதர்களும் தோல்வினைஞர் மாதர்களும் தம்மியற்கைடாழுத குயவர்குலமாதர்களும் நாவிதக்குலமாதர்களும் நுளையர்குலமாதர்களும் நீசகுலமாதர்களும், எ-று. சூனர்-ஊன்விற்போர். குறுங்கர்-தோல்தொழிலோர். மஞ்சிகர்-நாவிதர்.

பங்கயன்படைத்தவிந்தவருணத்தின்பகுதிதம்மை
யிங்கியான்கணித்துக்கூறற்கெளியவன்றவற்றிலுள்ள
மங்கையர்குலங்கடோறுமனந்தமாய்வளர்ந்ததன்றித்
தங்கியகாதற்றீரப்பெற்றிலேன்காமந்தன்னால்.

(இ - புணை.) பிரமதேவன் சிருஷ்டித்த இந்தப்பகுப்புள்ள சாதிகளை நான் அளவிட்டுச்சொல்ல எளிதல்ல, அந்தந்தச் சாதிகடோறும் அனந்தமாதர்களை விவாகஞ்செய்ததேயல்லது காமமிகுதியால் எனக்குண்டாகிய ஆசை நீங்கினேனில்லை. எ - று. (உ0)

பிறிதொறுசெயலுஞ்செய்யேன்காமநோய்பிணித்தநெஞ்சி
னறிவொருசிறிதுமிலையேனமைச்சர்தமொழியுங்கொள்ளேன்
சிறுதொழின்மருவிநின்றேனரசியல்சிறிதுந்தேரேன்
றெறில்பரிப்புதல்வர்தாமுமிகழ்ந்திடநோயின்மாய்ந்தேன்.

(இ - புணை.) வேறொருதொழிலுஞ் செய்கிறதில்லை, காமமென்கிறநோய் பொருந்திய நெஞ்சில் கொஞ்சமேனும் அறிவைவைப்பதில்லை, மந்திரிகள் சொல்லையும் ஏற்றுக்கொள்ளேன், ஈனத்தொழிலைப் பொருந்தியிருந்தேன். அரசாட்

யின் தன்மையைச்சிறிதும் விசாரித்தறியேன், வேகத்தையுடைய வெற்றி பொருந்திய குதிரையேறிச்செலுத்தும் புத்திரர்களும் இகழத்தக்க சோய்கொ ண்டு இறந்தேன். எ - று. தொறில் - வினைவு. (உக)

இறந்தபின்காலதூதர்பாசத்தாலார்த்துவீக்கி
நிறைந்தெரிதாளிபரப்பிரும்புத்தூண்டிலென்குறியிலினோ
யறைந்தனர்பறியீர்த்தங்கந்தன்றிருமுன்காட்டச்
சிறந்தெரிபரந்தபூணன்சிலதனரதநோக்கிச்சொன்னன்.

(இ-புனை.) இவ்விதமாக இறந்தபின்பு, காலதூதர்கள்பாசத்தினை விறுக்கி, ஒளிநிறைந்துபரந்த இருப்புத்தூண்டின்முள்ளை என்னுடையகோசத்தினோராக அறைந்து இழுத்துக்கொண்டுபோய் இயமன் முன்னேகாட்ட; சிறந்த ஒளி மிகுந்த ஆபரணமணிந்த அத்தருமன ஏவலாளிகளைப்பார்த்துச் சொல்வி னன். எ - று. (உஉ)

அரியம்துகின்மின்னையனைகலான்சிறையிற்செய்த
பாவினையென்றுந்தீராப்படிற்றெழுக்கத்தினைனக்
கோவியலழியத்தாதுகுழம்புசேர்கும்பிதன்னுண்
மேவனீர்விடுதிரென்னவெடிபடவிளம்பினனே.

(இ - புனை.) பாலின்புகைபோல வெண்மையு மிருதுவுமுள்ள அழகிய வஸ்திரமணிந்த தன்மனைவியரைப்புணராமல், சிறையில்வைத்த பாவியும், எப்போதும் நீங்காத பொய்யொழுக்கமுள்ளவனுமாகிய இவனைப் பெருமைப் பாடுகெடும்படி இந்திரியக்குழம்புநிறைந்த கும்பிபாகமென்னும் நரகில் நீங்கள் விடுங்களென்று மிகுந்தகோனியுடன் சொன்னன். எ - று. (உக)

கடனிலும்பெரியவாயரகிடைக்கடிதினுய்ப்ப
முடைகொளிந்திரியந்தன்னின்மூழ்கியுநீந்திநீந்திக்
குடலயிறகல்விலாவுநிறைதரக்குடித்துமிவ்வா
றடைவுறுவருடமைஆறுயிரமலக்கணுற்றேன்.

(இ - புனை.) அத்தூதுவர்கள் சமுத்திரத்தைப் பார்க்கிலும் பெரியதாகிய நரகத்தில் விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்க்க; நாறுகின்ற இந்திரியத்தில் முழுகியும் நீந்தியும் குடம்போன்ற வயிறும் பரந்தவிலாப்புறமும் நிறையும்படி குடித்தும் இவ்வாறு மூப்பதினாயிரம்வருஷந் தன்பமுற்றேன். எ - று. (உச)

அழிமுடைநரகநீங்கியாண்குறிகோடிதூங்கும்
டழியுறுமுடலங்கொண்டபசாசுருவெடுத்துக்கானிற்
கழிவுறுத்தெய்வயாண்டுநூறவண்கழித்துமாய்ந்து
விழியழல்பொழியுஞ்சீற்றவெங்கொலியுழுவையானேன்.

(இ - புணை.) செட்டநாற்றத்தையுடைய நரகத்தைவிட்டுநீங்கி ஒருகோடி ஆண்குறியோடு பழிபொருந்திய பேயுருவங்கொண்டு காட்டில் நீங்காமல் நூறுதேவவருஷம் கழித்து, பின்பிறந்து கண்களில்தீப்பொறியைச்சொரிகின்ற கொலத்தொழிலையுடைய புலியாகப்பிறந்தேன். எ - று. (உ)

படுமலமுணழுயின்வைகும்பாந்களாய்த்தோன்றினேன்பின்
சடைமயிர்சஞ்சாயாகத்தாணியிலுதித்தமாய்ந்தேன்
கடைமலமருந்துர்ப்பன்றியாயினேன்காமரூபி
யுடையதியுருவைப்பெற்றேன்ஞாயியாயுதித்துநின்றேன்.

(இ - புணை.) பின்பு மலக்குகையிலிருக்கும் பாம்பாக இம்பூமியிற்பிறந்தேன், பின்பு சடை மயிரையுடைய செஞ்சாயாகப் பூமியிற்பிறந்து மாண்டேன், அதன் பின்பு மலஞ்சேர்ந்திருக்கும் கடைபட்ட பன்றியாகப்பிறந்தேன், பச்சோந்தியினுடைய உருவத்தைப்பெற்றேன், சாயாய்ப்பிறந்திருந்தேன். எ - று. காமரூபி - பச்சோந்தி. (உக)

வீழ்முகநரியாய்வஃந்தென்விளிந்துபின்முயலாய்வந்தேன்
றாழ்வுறமானையானேனென்றத்தவானரமுமானேன்
காழ்சினைறக்கங்கமானேன்கடுநடைநகுலமானே
னூழ்வினைத்தூரப்பக்காகத்துருவெடுத்துழன்றுவீழ்ந்தேன்.

(இ-புணை.) நீண்டமுகமுள்ளநரியாய்ப்பிறந்தேன், இறந்தபின்புமுசலாய்ப்பிறந்தேன், பின்பு தாழ்ச்சியுற்ற மானாய்ப்பிறந்தேன், அதன்பின்பு தத்துகின்ற குரங்காயும்பிறந்தேன், பின்பு உறுதியான சிறகுள்ள பருந்தாய்ப்பிறந்தேன், கடுநடையுள்ள கீரியுமானேன், ஊழ்வினையானது துரத்தலுலச்செய்யக்காக்கையாய்ப்பிறந்துழன்று இறந்தேன். எ - று. (உஎ)

வல்லுகிரெண்குமானேன்வருபுவனத்துவாழும்
பல்பொறிக்கோழியானேன்பாதகக்கரமுமானே
னில்லுறைபூசையானேனெறிகுரற்றலையானேன்
கல்லிரீருண்ணுங்கூவக்கயத்துறைகயடமானேன்.

(இ - புணை.) வலியநகத்தையுடைய கரடியாயும்பிறந்தேன், இந்தப் பூமியில்வாழும் பலபுள்ளிகளையுடைய கோழியானேன், பாவமுள்ள கழுதையுமானேன், இல்லங்களில்வாழும் பூனையானேன், கத்துகிறகுரலையுடைய தவளையானேன், தோண்டுதலால் உண்ணும்படியுண்டான நீர்நிறைந்த இணைகுளங்களில் ஆமையாய்ப்பிறந்தேன். எ - று. பூசை - பூனை. (உஅ)

வரியுடைமீனுமானேன்மாய்ந்துழுமிகழுமானேன்
பரியபைங்கழலவுண்சட்படர்சிறைக்கூகையானே

சொரிமதத்தருவிதூங்குந்துளக்கைமாலியாஎனையானே
னிருபத்தேதாடைந்தாந்தோற்றமிவ்வனத்தரக்கனேனென்.

(இ - புணை.) வரிகள்பொருந்திய மீனேனென், இறந்து பெருச்சாளியுமானேன், டருந்தகாலும் நீப்பொறிகக்கும் கண்களுஞ் பரந்தசிறகுமுள்ள கோட்டானேனென், அருவிபோல மதநீர்பொழியுந் துதிக்கையுள்ள யானையுமானேன், இருபத்தைந்தாம்பிறப்பில் இவ்வனத்தில் ராக்ஷதனேனென். எ - று.

பரிய - பருத்த. (உக)

பயந்தவெங்கானத்தன்னிற்பறவைபல்விலங்குமக்க
ணிரந்தாந்தொடர்ந்துபறறிக்கொலைசெய்துதிணங்கியத்து
மாந்தைவெம்பசிதீராமலயர்வற்றேனமுதவாரி
சொரிந்திடும்புயலையொப்பாய்நினைக்கண்டேன்றுயராங்காணேன்.

(இ-புணை.) விசாலமாகிய இக்காட்டில் பலபக்ஷிகளையும் மிருகங்களையும் பலமனிதர்களையும் கண்டுபிடித்துக் கொன்று மாமிசங்களைத்தின்றும் வருத்தத்தைத்தருகிற பசியடங்காமல் துன்பங்கொண்டிருந்தேன், இப்படியிருக்கையில் அமிர்தமழைபொழியும் மேகம்போலக் கிருபைபொழியும் உம்மைக்கண்டேன்; முன்னிருந்த துயரத்தையும் விண்டவனேனென். எ - று. (உ0)

படியினனெடுத்தகாயம்படலையவற்றினெல்லாங்
கொடியவெம்பாவமன்றித்தருமத்தைக்குறிக்கொண்டில்லை
னடியனேனினினைக்கண்டின்றபரணைதற்கென்செய்தே
னெடியனெனவாக்கஞ்சொல்லத்தவமுனிறுவல்வதானன்.

(இ - புணை.) இவ்வுலகத்தில் நானெடுத்த சரீரம் அனேகங்களாகும், அவ்வுடலங்களோறும் கொடிய பாவங்களைச்செய்ததல்லது புண்ணியமென்பதை நினைத்ததுமில்லை: அடியேன் இப்போது தேவரீரைத்தரிசித்துத் தேவனேனென். இப்படியாவதற்கு என்னபுண்ணியஞ்செய்திருக்கிறேன் சொல்லவேண்டும், ஐயனே! என்று அரக்கன்சொல்லத் தவமுனி சொல்லுகிறார். எ - று.

நொடித்தல் - கூறல். (உ.க)

முட்டெறுகானத்தென்னை முடுகிநின்னைகளாரக்
கட்டியகாலையென்மேறகவினிபதிருவெண்ணீறு
பட்டதுநின்மேலந்தப்பான்மையாற்பாவநீங்கி
விட்டதவ்வளவோமுன்னைப்பிறவியுய்வினங்கமேலாய்.

(இ - புணை.) முட்கள் தைக்கும் இத்தக்கானகத்தில் ஓடிவந்து என்னை உன் கைகளாற் கட்டிப்பிடித்தபோது என்சரீரத்தில் அழகுள்ளதாயிருந்த திருநீறுனது உன்மேற்பட்டது; அதனால்உன்பாவம்நீங்கிவிட்டது, அவ்வளவுதானே? முற்பிறப்பின் தன்மைகளுஞ் தெரியப்பெற்றனை. எ - று. (உ0)

நோயிலாதியன்றயாக்கைகத்தேவனுய்நொய்தினின்றுய்
வேயுலாந்தோளிபங்கன்விபூதியின்பெருமைமுற்றுந்
தூயநான்முகனுமாலுந்துணிகலாந்தகைமைத்தென்றூற்
காயமாறுடிச்சொல்லுமனிதரோகருதற்பாலார்.

(இ-புணை.) புண்ணியமுடையயானே! எளிதாகப் பிணியென்ப தில்லாமற் பொருந்திய திவ்யசரீரத்தையுடைய தேவனுய் நின்றனை, மூங்கிலையொத்த தோள்களையுடைய பார்வதிபாகனுகிய பரமசிவத்தினுடைய திருமேற்றின்பெருமையை முழுவதும் பரிசுத்தனை பிரமதேவனும் மாயவனும் நிச்சயித்து அறியக்கூடாத தன்மையையுடையதென்றுல், வெவ்வேறு தேகமெடுத்துப்பிறந்து உழலுகிற மனிதர்களோ அறியத்தக்கவர்கள். எ - று. மேலோய் என்றதை இங்குகூட்டி உரைக்கப்பட்டது. (கக)

என்னினுந்திருமேற்றுண்மையியம்புவன்சிறிதுகேட்டி
தென்னவன்தமிழ்நாட்டங்கோர்தித்தொழின்மறைவல்லாளன்
பன்னெடுங்காலம்பாரிற்பாவமும்பழியுமீட்டி.
யந்நிலைதெறியுரீங்கியத்தணர்திறனும்விட்டான்.

(இ - புணை.) மனிதர்களுக்கு அரிதென்றலும் திருமேற்றின் பெருமையைச் சிறிதுசொல்லுகிறேன்கேட்பாயாக; பாண்டியனுடைய தமிழ்நாட்டினிடத்தில் கொடிய செய்கையையுடைய ஒருபிராமணன் இவ்வுலகத்தில் பாவமும் பழியுஞ்சம்பாதித்து அதற்குச்சரியாக ஒழுக்கத்தினுலு மாறுபட்டுப் பிராமணத்தன்மையும் விட்டான். எ - று. (கக)

பொய்க்கவறுடலானும்புன்றொழிற்களவினுங்
கைக்கொள்வான்பொருள்களெல்லாங்கணிகையர்திறத்திலீந்து
மைக்கணேர்வயத்தனுகிக்காமநோய்மலியமீமன்மீ
லிக்குமேவள்கணைகள்பாயநிறையழித்திடையுநாளில்.

(இ - புணை.) பொய் சொல்லத்தக்க சூதாடுதலினுலும் இழிவான செய்கையென்கிற திருட்டினுலும் சம்பாதித்த மிகுந்தரவியங்களை யெல்லாம் வேசையர்களுக்குக்கொடுத்து, மையணிந்தகண்களையுடைய அந்தவேசையர் வசப்பட்டவனுகிக் காமநோய் வருத்துதலினுலும் காமசரம் பாய்தலினுலும் நிறையழிந்து இளைக்கு நாளில், எ - று. (கஎ)

ஒருபெருங்கங்குற்போழ்தினுள்விழைபுலையனில்லின்
மருவியமனைவிதன்னைக்காவினின்மணக்குங்காலத்
திருகுவெஞ்சினத்தினீசன்செங்கைவாளுறையினீக்கி.
வெருவாத்தீதான்றியார்த்துவீசினன்விளிந்துவீழ்ந்தான்.

(இ - புணை.) ஒருநாள் அர்த்தராத்திரியில் ஊனையே விரும்புகின்ற ஒரு நீசன்வீட்டிலிருக்கும்அவன்மனையாளைச்சோரத்தனமாகப் புணரும்போது, அந்த நீசன் கண்டு மிகுந்த கோபமுள்ளவனாய்க் கைவாளை உறையினின்றுங் கழற்றி அக்கொடியன் பயப்படும்படி ஆரவாரித்து வீச அவன்றந்தான். எ - று.(உக)

பட்டபின்றூளைப்பற்றிப்புலமகன்படர்ந்துசேரிக்
கிட்டமுள்வேலிக்கப்பாலெறிந்திடும்பிணத்தின்மீதச்
சுட்டவெண்சாம்பலேறுங்காற்சுணங்கன்வெம்பசியாலேறித்
தட்டவாய்கொண்டுகவ்வித்தசைபறித்தருந்துங்காலை.

(இ - புணை.) அந்தச்சோரன் இறந்தபின்பு அந்நீசனவன் பிணத்தின் காலைப் பற்றிச் சேரிக்கிட்டிருக்கிறமுள்வேலிக்கு அப்புறத்தில்எறிந்துவிட்டான்; அந்தப்பிணத்தின்மேல் வேறொருபிணத்தைச் சுட்டவெண்சாம்பலிற் படிந்த காலையுடைய நாயானது ஏறித் தனக்குள்ள பசியினால் பற்களையுடைய வாயைக் கொண்டு கவ்வி மாமிசத்தைப் பிடுங்கித்தின்னும்போது, எ - று. தடம்-பல்.

திண்டிறற்காலதூதர்சேர்ந்தவன்காலைப்பற்றிக்
கொண்டனரேகித்தீவாய்கும்பியின்வீழ்த்துமாங்கண்
கண்டனருணையாள்பங்கன்கணங்களக்கணத்தினெய்தித்
தண்டஞ்செய்காலதூதர்தங்களைத்தண்டஞ்செய்யா.

(இ - புணை.) மிகுந்த பலமுள்ள யமதூதர்கள் வந்து இறந்தவனைப் பிடித்துக்கொண்டுபோய்த் தீநரகிற் றள்ளும்போது பரமசிவனுடைய கணங் கள்கண்டு இறந்தவனைத் தண்டிக்கிற காலதூதர்களைத் தண்டித்து, எ - று. ()

கும்பியின்வீழ்வோன்றன்னைக்குருமணிவிமானத்தேற்றி
யும்பரினேகுவார்முன்கரியகோட்டெருமையூர்ந்து
வெம்பியமறலியெய்திவிழுத்தகவொன்றிலானை
யம்பினைகபாகன்றன்பால்விடுவதற்கடுத்ததென்னே.

(இ - புணை.) நரகத்தில் விழுகின்றவனை நிறமுள்ள ரத்தினங்கள் பதித் த விமானத்திலேற்றி ஆகாயத்தற் செல்லுகின்றவர்களைநீர், மனக்கொதிப் புள்ள இயமன் கரியகொம்பினையுடைய எருமைக்கடாவிலேறிவந்து மேலான தகுதிஎவ்வளவுமில்லாதஇவனைப் பார்வதிபாகனிடத்தில் விடுப்பதற்குண்டான நிமித்தமென்னை? கூறவேண்டுமென்றான். எ - று. (உக)

சொல்லுதிரெனலுமீசன்றூதுவர்சொல்வரின்னேன்
புல்லியபிரேதவங்கம்பூதியிற்பொலிதலாலே
வல்லியத்துருவையார்த்தமறைமுதன்மறையோன்றன்பாற்
செல்லுதிர்கொணர்திரென்னவீடைதரயாங்கள்சேர்ந்தோம்.

(இ - புணை.) சொல்லுங்களென்று இயமன்கூறவே சிவதூதர்கள் சொல்லுகிறார்கள், இவனுடைய பிரேதசரீரம் பூதியிற்படிந்தபடியினாலே புலித்தோல் உடைதரித்தருளியபரமசிவன்நீங்கள்சென்றுஅவனைநம்மிடத்துக்குக் கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டதினல் நாங்கள் வந்தோம். எ - று. (சப)

பொன்னவிர்சடையினன்றனேவலிற்புகுந்துநின்றே
மின்னவிர்பூணினுய்கீவிலக்குதற்கெளியமல்லே
மென்னகேவார்மாற்றங்கூறியெரிமணிவிமானத்தேறு
மன்னவன்றன்னைக்கொண்டாங்கமனுலகடைந்தாரன்றே.

(இ-புணை.) பொன்னிறம்வாய்ந்த சடைமுடியையுடைய பரமசிவன் கட்டளையினல் நாங்கள் வந்தோம், ஒளிவிளக்கும் ஆபரணமணிந்தவனை; நாங்கள் உன்னுல் விலக்கத்தக்க எளியர்களல்லோம் என்று ஒருவார்த்தை சொல்லி விட்டு, அவனை ரத்தின விமானத்தி லிருத்திக்கொண்டு சிவலோகத்தைக்கொண்டு போய்ச் சேர்ந்தார்கள். எ - று. (சக)

ஆதலினிருதலண்ணலெனிதிருநீற்றின்றன்மை
யோதுதற்கெளிதோடொல்லாவுருவெடுத்துலகிற்றீராப்
பேதமுறுமுணர்வின்பாவப்பிணிபிறரேனுந்தொட்ட
போதினேபுனிதராகிப்பொன்னுலகடைவரன்றே.

(இ - புணை.) ஆதலால் ராஜேந்த அண்ணலே! திருநீற்றின்பெருமை சொல்லுதற் கெளிதானதல்ல; பொல்லாத உருவமெடுத்து உலகில் நீங்காத துன்பமடைகின்ற உணர்வற்ற பாவிகளேயானலும் விபூதியைத் தொட்டமாத்திரத்திற் புனிதர்களாய்ப் பொன்னுலகமடைவார்கள். எ - று. (சஉ)

அந்தவெண்ணீற்றையானுமான்றிருவடியார்போல
விந்தமெய்முழுதும்பால்போலிலங்கிடவணிந்தின்றென்
மந்தரச்சிகரிபோலுமணிப்புயத்தரக்கவென்று
சிந்தைபிலனியவாமத்தேவன்றுன்செப்பினனே.

(இ - புணை.) மந்தரமலையின் சிகரத்தை யொத்திருக்கின்ற அழகியபுயமுள்ள அரக்கனே! அந்தவிபூதியை நாளும் சிவனடியார்கள் தரித்துக்கொண்டிருப்பதுபோல இந்தச்சரீர முழுவதும் பாலைப்போல விளங்கும்படி தரித்துக் கொண்டிருக்கிறேன் என்று, மனதில் கிருபையுள்ள வாமதேவ முனிவர்சொல்லியருளினர், எ - று. (சங)

ஐயனேபோற்றிபோற்றியமலனேபோற்றிபோற்றி
துய்யநீறணிந்தென்பாவத்தொடர்பறித்திட்டாய்போற்றி

யுய்யுமாறதுயேனின்னெதிர்தரவுய்த்தகன்மை
மையறுஞாணத்தாயுன்றன்றிருவருள்வள்த்தாற்சொல்லேன்.

(இ - புணை.) ஐயனே போற்றி போற்றி, நிர்மலனே போற்றி போற்று, னையதாயெ நிருநீறு கொடுத்து அடியேன் பாவத்தொடர்ச்சியை அறுத்தவனே போற்றி, அடியேன் கடைத்தேறும்படித் தேவரீரைத் தரிசிக்கக் கூட்டிய என் மை எனக்கு நேர்ந்தது குற்றமற்றகுணச்சிரேட்டரே! உம்முடைய அருளின் பெருமையென்றே சொல்லுவேன். எ - று. (அக)

மூடங்குலைத்தவிசினேறிமுன்னைதமுற்பிறப்பினையே
ணடுங்கொடின்மிலேச்சதேசத்தரசியனடாத்துங்காலத்
தொடங்கியமறையோன்றன்பாற்றாழ்சீர்பழனமொன்றைக்
குடங்கையிற்றெண்ணீரேந்திக்கோடியென்றுதகஞ்செய்தேன்.

(இ - புணை.) காயேன் முற்பிறப்பில் சிங்காசனத்திலிருந்து மிலேச்ச தேசத்தில் அரசாட்சிசெய்யும்போது, வேதமோதிய ஒருபிராமணனிடத்தில் என்னுள்ளங்கையில நீவார்த்துக்கொண்டு இந்தவினைநிலத்தை நீ தானம் வாங் கிக்கொள்ளென்று தந்தஞ்செய்து கொடுத்தேன், எ - று. (அஞ)

பருமரத்துடலைவையோடும்பருவங்கள்பலன்கள்பொய்யாத்
திருமலிகழனியொன்றையளித்தருள்செய்தகன்கா
லிருபதோடைந்தாந்தோற்றத்திருந்தவயோகினையக்கண்
டருவினைதுலைப்பாயென்னமறவியுமன்றுசொன்னன்.

(இ - புணை.) பருத்தமரங்களுள்ள சோலையுடன் காலந்தோறும் பலன் தப்பாமற் கொடுக்கும் வளமிகுந்த ஒருவினைநிலத்தைத் தானஞ்செய்த நன்மை யால், இருபத்தைந்தாம் பிறவியில் ஒருசிவயோகினையத் தரிசித்துப் பாவம் நீங்கு வாயென்று யமதர்மராசனும் அங்காளிந்சொன்னன். எ - று. (அசு)

அன்னதவினைந்தன்காலடியனெனின்னைக்கண்டு
தன்னியபாவநீங்கித்தூயதல்லுருவமெய்தி
நன்னிலைவுணர்வும்பெற்றேனலையிலாயின்னுமொன்று
பன்னுவதுண்டுகேட்டியென்றடிபணிந்துசொன்னன்.

(இ - புணை) அத்தன்மையாகவே; இப்போது விளைந்தன்மையால் அடி யேன் தேவரீரைத்தரிசித்து, பற்றிய பாவங்களை நீக்கப்பெற்றுப் பரிசுத்தமான தேவருபத்துடன் நல்லநிலைமையுள்ள உணர்ச்சியும் பெற்றேன்; குற்றமில்லாத வரே ! இன்னமொன்று சொல்வதுண்டு, அதையும் கேட்கத்தகுமென்று அவர்பாதத்தைப் பணிந்து சொல்லுகிறான், எ - று. (அஎ)

வெள்ளெவெண்ணீறுதன்னைமேனியிலணியுமாறுங்
கொல்லெவெம்பிறவிநீக்குமந்திரந்துதிக்குமாறும்
பிள்ளைவெண்பிறையாணீறுபிடித்திடுங்காலந்தானுங்
கொள்ளெவெவ்வினைகடீர்த்தாய்கூறெனமேலோன்கூறும்.

(இ - புணை.) மிகுந்தகொடுமையுள்ள என் வினைதீர்த்தவரே! வெண்மை நிறமுள்ள திருநீற்றைச் சரீரத்தில் தரித்துக் கொள்ளுகிற கிரமமும், கொடிய தாகிய பழையபிறவியைக் கெடுக்கத்தக்க திருமந்திரஞ் செபிக்கிற கிரமமும், இளம்பிறையணிந்த பரமசிவன் விபூதியை உண்டாக்குங்காலமும், சொல்லியருளவேண்டுமென்ன முனிவர்சொல்லுகிறார். எ - று. (உஅ)

பதினைந்தாவது விபூதிமான்மியமுரைத்தஅத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் அ அரு.

சிவமயம்.

பதினாறாவது
திரிபுண்டர அத்தியாயம்.

அந்தரத்தகடணவியசிகரத்தமகன்ற
கந்தரத்திலும்விஞ்சையர்கடிமணமயரும்
சுந்தரத்துணர்க்கற்பகப்பொங்கர்சூழ்சாரன்
மந்தரக்கிரியெனப்பெயருடையமால்வரையின்.

(இ - புணை.) ஆகாயமுகட்டை யளாவிய சிகரத்திலும் விசாலமாகிய குகைகளிலும் வித்தியாதரர்கள் விவாகஞ் செய்து கொள்ளத்தக்க சுந்தரமானபூங்கொத்துக்களையுடைய கற்பகச்சோலைசூழ்ந்த சாரலுள்ள மந்தரகிரியெனப்பெயர்பெற்ற பெரியமலையில், எ - று. கந்தரம் - குகை. (க)

தேங்குகங்கையுந்திங்களுந்திருமுடிக்கணியா
லோங்கல்போல்வருமுருத்திரருலப்பில்பல்கோடி
தாங்குமால்விடைப்பரிந்தின்றுமிழிந்தடிதாழ்ந்து
வீங்குதோளினர்மான்மழுக்கரத்தினர்மிடைய.

(இ - புணை.) நிறைந்த நீர்வடிவமாகிய கங்கையையும் சந்திரனையுமணிந்து, மலைகள்போலப் பருத்த சரீரிகளாகி வருகின்ற பலகோடி ருத்திரர்கள்,

தாங்குகின்ற பெரியரூஷபவாகனத்தினின்றிழிந்து, பரமசிவனுடையபாதத்தில் வணங்கிப் பருத்த தோள்களையுடையவர்களும் மான்மழுவேந்திய கையையுடையவர்களுமாய் நெருங்கவும், எ - று. பரித்தலுடையது பரி - தாங்கல். இங்கு வாகனம் என்னும் பொருள். தாழ்ந்து மிடைய எனக்கூட்ட. (உ)

ஆழியேழுதலும்படையங்கையினேந்தி
வாழிகாரணரெண்ணிலர்வழுத்துபுநிற்ப
ஆழிகாண்முதலுலகுயிர்யாவையும்படைக்கும்
பாழியம்புயகான்முகரளப்பிலர்பணிய.

(இ - புணை.) சக்கரமுதலாகிய பஞ்சாயுதங்களை அழகிய கைகளில் தாங்கிக்கொண்டு அளவில்லாத விஷ்ணுக்கள் துதிசெய்துகொண்டுநிற்கவும், ஊழிகாலமுதல் உலகத்துயிரையெல்லாம் சிருட்டிக்கும் தாமரைப்பூவாசியான நான்முகங்களையுடைய அளவற்ற பிரமர்கள்பணியவும், எ - று. (ஊ)

இந்திராதியர்வானவர்விஞ்சையரியக்கர்
சந்திராதித்தர்கின்னரர்தானவராக்கர்
சிந்துரானனவணமுலைத்தெரிவையரெழுவர்
விந்தையீன்றருளேங்கரன்வேளிளங்குமரன்.

(இ - புணை.) தேவேந்திரன் முதலானதேவர்களும் வித்தியாதரர்கள் இயக்கர்கள் சந்திரசூரியர்கள் கின்னரர்கள் தானவர்கள் அரக்கர்களும் சிந்தூரப்பொட்டணிந்த முகத்தையும் அழகிய தனங்களையுமுடைய சப்தமாதர்களும் பார்வதிதேவியார் பெற்றருளிய விநாயகர் வேலாயுதமேந்திய சுப்பிரமணியக்கடவுளும், எ-று.

சப்தமாதர்கள்:அபிராமி மாகேச்சுவரி கௌமாரி காராயணி வராகி இந்திராணி காளி. ஆனனம் - முகம். (எ)

நாகமன்னவர்நாரதராதியர்கவிலும்
போகமேவியபொன்னுலகத்துமாமுனிவர்
யாகநூனெறிவகுட்டனுமிருந்தவன்முதலாச்
சோகமோகமின்மறைமுனித்தலைவர்கள்சூழ.

(இ - புணை) நாகராசர்களும் நாரதர் முதலாகச் சொல்லப்பட்ட போகம் பொருந்திய தேவலோகத்துமுனிவர்களும் யாகங்கள்செய்யும் வேதசாஸ்திரமுறைமைதெரிந்த வசிஷ்டர்முதலாகிய காமாதிகளைநீக்கிய பிராமணருஷிசிரேஷ்டர்களும் சூழவும், எ - று. (ஏ)

கருப்புவிற்றுணையெனப்பொலிகரியகீள்புருவ
வுருப்பசித்திருமுதலியவரம்பையரோடும்

பொருப்பினிற்பிறக்கிழிதருபுனிதநீர்க்கங்கைத்
திருத்தமாதியநதிக்குலவனிதையர்செறிய.

(இ - புணை.) இரண்டு கருப்புவில்லை வனைத்தளவத்ததுபோ லிருக்கும் கரியநிறமுள்ள நீண்டபுருவமுடைய உருப்பசிமுதலாகிய ரம்பாஸ்திரிகளும், இமயமலையில் உற்பத்தியாய்வருகின்ற கங்கைநதிமுதலான சல்லநதிக்குலமாதர் களும் சூழவும், எ - று. (சு)

எண்டொகைப்படும்வசுக்களுமருத்துவரெவரு
மண்டர்வர்க்கத்தில்பிதிர்க்களுமாடிநின்றேத்தக்
கொண்டலொத்துநின்றிரைத்திடுவயிரவக்குழாமு
மண்டுவேள்வியசெய்தக்கனுமுறைமுறைவழுத்த.

(இ - புணை.) அஷ்டவசுக்களும் மருத்துவதேவர்களும் தேவர் வர்க்கத் திற்சேர்ந்த பிதிரர்களும் ஆனந்தக்கூத்தாடிக்கொண்டுதுதிக்கவும், மேகம்போல ஒலிக்கும் வயிரவக்கூட்டமும் யாகஞ்செய்ததக்கனும் முறைமுறையாக நின்று துதிக்கவும். எ - று.

அஷ்டவசுக்கள் - அனலன் அனிலன் ஆபச்சைவன் சோமன் தரன் துரு வன் பிரத்தியூசன் பிரபாசன். (எ)

தமரநூபுரமெட்டைமீவதாளவாகனத்துக்
குமரனுகியவீரன்வெம்படையொடுங்குறுக
வமரில்வந்தெதிர்த்தணிமுறிந்தவுணர்கெட்டோடச்
சமரில்வாரணப்பிடர்வருசாத்தனுந்தழுவ.

(இ - புணை.) ஒலியுள்ள சிலம்பணிந்த நெடியவேதாளவாகனத்தை யுடைய வீரபத்திரர் படையுடன்வரவும், அவுணர்கள் போரில்வந்தெதிர்த்துப் படைமுறிந்து கெட்டோடும்படி யுத்தகளத்தில் யானையின் பிடரியில் ஏறிவரும் அரிகரபுத்திரர் வரவும், எ - று. (அ)

ஊதுலைக்கனற்புகையெனவுயிர்ப்புலாந்துண்டக்
கோதினைட்டெயிற்றகல்பிலவாய்க்குறுங்கூளிப்
பூதமுற்றியகணங்களுமொருவில்வெண்சங்க
நாதநற்றெழிற்பாணுகம்பனும்வந்துநண்ண.

(இ - புணை.) உலைக்களத்தில் ஊதுகின்ற நீப்புகைபோல உயிர்ப்பினைப் பெற்ற நாசியினையும் பழுதில்லாமல் நீண்டபற்களையும் அகன்ற பிலத்துவாரம் போன்ற வாயையுமுடைய குட்டையாகிய பூதகணங்களும், ஒப்பில்லாத தவ ளைச் சங்காதத்தினாழில்செய்யும் பாணுகம்பனும் வந்துபொருந்தவும், எ - று.

சங்குகன்னனற்மணிமே
மங்குல்போலுருள்மாணிபத்திரன்மகோதரன்சொற்
பிங்கிரீடிவிருகோதரப்பெருந்தகைப்பெரும்பூண்
பொங்குநீளொளிவிகடன்குண்டோதரன்பொருந்த.

(இ - புனை.) சங்குகன்னனும் ஒப்பற்ற மணிகன்னனும் தையல்மேக த்தையொத்த அருளும் மாணிபத்திரனும் மகோதரனும் சொல்லுகின்ற பிரு ங்கிருஷியும் மேலான தருதியையுடைய விருகோதரனும் பெரிய ஆபரணங்க ளணிந்து மிருதியான ஒளியையுடைய விகடனும் குண்டோதரனும் பொருந்த வும், எ - று. (கo)

மாலையம்புயமகாகாளர்புலிவதனத்தோ
ராலும்வாணமுகத்தினராளிமாமுகத்தோர்
வாலவெள்ளெயிற்றரவமுமடங்கன்மாவேறும்
போலுநீள்வதனத்தினரெண்ணிலர்பொருந்த.

(இ - புனை.) மாலையணிந்த புயமுள்ள மகாகாளரும் புலிமுகத்தரும் அசைகின்ற யானைமுகத்தரும் ஆளிமுகத்தரும் வெண்மையாகிய தந்தங்களை யுடைய சர்ப்பமுகத்தரும் சிங்கமுகதத்தரும் ஆகிய கணத்தவர்கள் அளவில்லாத வர்களாய் வந்து பொருந்தவும், எ - று. (கக)

முகடுபோழ்ந்திடநீண்டவர்மொழிவதற்கரிதாம்
விகடமாகியவேறுவேறுருவத்தாவிளங்கும்
பகடுபோலுமோர்காத்தினர்பலபலகாத்தர்
தகடுவேய்பொலன்கழலினரெண்ணிலர்தழுவ.

(இ - புனை.) அண்டமுகடும் பிளக்கும்படி உயர்ந்த வடிவமுள்ளவர்களும் சொல்லுதற்கரிய விகடமான பற்பலவுருவத்தையுடையவர்களும் விளங்கு கின்ற யானைபோல ஒருகையுடையவர்களும் பலவாகிய கைகளுடையவர்களும் தகட்டுவடிவாய்ப்பொன்றற்செய்த வீரகண்டையுடையுடையவர்களுமாக எண்ணில் லாதவர்கள் பொருந்தவும், எ - று. (கஉ)

படர்ந்தநீணிலஞ்சுமந்தசேடன்பம்ற்றலைபோன்
மிடைந்தெழுந்ததிண்டோட்களிலார்த்தவார்விசித் துக்

லடங்குமாமுழவாயிரமுகத்திணமைறைய.

(இ - புனை.) பரந்தநீண்ட பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனுடைய ஆயிரத்தலைபோல நெருங்கியுயர்ந்திருக்கும் திண்ணிய தோள்களில், கட்டியவா

ரை விசித்தக்கொண்டு, தனது ஆயிரங்கைகளையுங்கொண்டுவாணசாரனனவன் மேகத்தி னிடியோசையுங் குறையும்படிப் பெரியகுடமுழாவை ஆயிரமுகத்தி னும் அறையவும், எ - று. (கஉ)

முருகுவிண்டதார்தேவரைமுறைமுறைநிறுவித்
திருகுவெஞ்சினத்தவுணரையொருபுடைசேர்த்தி
யுருகுபொன்னிறக்கணங்களையொருவழிசெறித்துப்
பெருகுவான்புகழ்நந்திகைப்பிரம்பெடுத்துலவ.

(இ - புணை.) வாசனையுடன் மலர்ந்த மாலையணிந்த தேவர்களை வரிசை வரிசையாய் நிற்கச்செய்து, மாறுபடுகின்ற கோபமுள்ள அசுரர்களை யொருபுற த்தில் வரிசையாகநிறுத்தி, உருகிய பொன்னிறமுள்ள கணங்களையொருபுறத் தில்நிறுத்தி, மிகுந்த சிறப்புள்ள நந்திதேவர் கையிற் பிரம்பேந்திக்கொண்டு உலாவவும், எ - று. (கசு)

இலகுநல்லனைவாடுவனேயெழிலரிசுமந்த
வலகிலாகவமணிகளுமொளிகெடவவிருங்
குலவுமாணிக்கங்குயிற்றியகொழுந்தவிசேறி
யுலகமூன்றுக்குமொருபொருளெம்மையாளுடையான்.

(இ - புணை.) திரிலோகங்களுக்கும் ஒப்பற்றபொருளாகி எம்மையுமடிமை யாகவுடைய பமசிவன் பிரகாசிக்கும் நல்லசபையினடுவில் அழகிய சிங்கங்கள் சுமந்த அளவில்லாத நவரத்தினங்களும் ஒளிமழுங்கும்படிப் பிரகாசிக்கும் மாணிக்கங்கள்பதித்த செழுமையுள்ள ஆசனத்தில் வீற்றிருந்து, எ - று. அரி சுமந்த தவிசு எனமுடிக்க. (கஎ)

கோடிசெங்கதிராதபர்கோடிவெண்மதியங்
கோடிபூழியின்வடவனலோரிடங்குழுமி
நீடுமோருருவெடுத்தனநிரயத்தினிருளு
மோடியெங்கணுநிலையறவுலோகத்திலொதுங்க.

(இ - புணை.) செவ்விய கிரணங்களுடைய கோடிசூரியர்களும் கோடி சந்திரர்களும் கோடிவடவாமுகாக்கினியும் ஓரிடத்திற்கூடி பெரியவுருவம் எடு த்ததுபோன்றதாய், நரகத்தினிருளும் ஓடி எவ்விடத்தும் நிலைபெறாமல் அவ லோகத்தில் ஒதுங்கத் தக்கதாகவும், எ - று. ஆதபர் - சூரியர். அவலோகம்- இல்லாலோகம்; எனவே வெளி என்றபடி. (கஅ)

வேலையேழையுமொருகணவேலையினுகருங்

பாலலோசனத்துணைவிழிமுச்சுடர்பகைப்பச்
சூலமாதியபடையொடுந்தோள்பல துளங்க.

(இ - புணை.) எழுசமுத்திரங்களையும் ஒருகணப்பொழுதில் உண்ணத்தக்க ஊழித்தீப்போலச் செய்யசடைகள்பொலியவும், நெற்றிக்கண்ணும் மற்ற இரண்டுகண்களுமாகிய சோமசூரியாக்கினிகளுடன்பகைக்கும் காந்திபெற்ற சூலாயுதமுதலிய ஆயுதங்களோடு பலதோள்கள் விளங்கவும், எ - று. வேலை என்பனவற்றுள் முன்னது சமுத்திரம், பின்னது காலம். (கஎ)

அனந்தன்வாசுகிதக்ககன்முதலியவரவம்
புனைந்தபல்கலனெனவடிமுடிமுதல்புனைந்து
கனைந்துவண்டுணுமிதழிவாசிகையிடைகவின
வனைந்தவிந்துவுங்கங்கையுமமுதலிவழங்க.

(இ - புணை.) ஆதிசேஷன் வாசுகி தக்ஷகன் முதலான நாகங்களை ஆபரணங்களாகத் திருமுடிமுதல் திருவடிவரையும் அணிந்தும், இசைபாடும் வண்டுகள் தேனுண்ணும் கொன்றைப்பூவாற்றொடுத்தமாலை அழகுடன் மத்தியில் விளங்கவும், திருமுடியில்தரித்த சந்திரன் அமுதத்தைவழங்கவும், கங்கை அலைவீசவும், எ - று. வாசிகை - தொடுத்தமாலை. (கஅ)

காய்சினக்கொடுவரியுரிகலையினிற்பொலியப்
பூசலிட்டபுழைக்கைமாவுரிவைமெய்போர்ப்பத்
தேசுபெற்றிடுமுத்தரீயத்தொளிதிகழ
மாசறுத்தொளிர்மின்னெனமார்பினூல்வயங்க.

(இ - புணை.) காய்கின்ற கோபத்தையுடைய புலியின்றோல் வஸ்திரமாகத் திருவரையில்விளங்கவும், போர்செய்து கொல்லுந்தன்மையையுடைய யானையின்றோல் போர்வையாகத் திருமேனியிற்போர்ப்பவும், ஒளிபொருந்திய உத்தரீயத்தின் பிரகாசம்விளங்கவும், மாசுநீக்கி யொளிர்கின்ற மின்னல்போல பூணூல் திருமார்பில் விளங்கவும், எ - று. (கக)

தொல்லியம்பழமறையெலாமிறுதியிற்சொல்லு
மெல்லைகண்டவரல்லதுகாண்கிலாவிறைவ
னல்லியத்துணர்த்தேறன்மொண்டிலகுதாதன்னிச்
செல்லுமன்றலந்தென்றல்வந்துலவவீற்றிருந்தான்.

(இ - புணை.) பழமையாகிய வேதங்களெல்லா முடிவிற்சொல்லும் அளவையைக்கண்டவர்கள் காணலாமேயன்றி மற்றவர்களாற் காணப்படாத பரமசிவன் அகவிதழினையுடைய பூங்கொத்துக்களிற் றேனையும் மகரந்தங்களையும் அள்ளிக்கொண்டுவரும் இளந்தென்றற்காற்று உலவும்படி வீற்றிருந்தார். எ-று.

முதற்செய்யுள்தொடங்கி இதுவரையும் ஒன்றாகவடந்து (மேற்கூறிய விசேடங்கள் விளக்க.) பரமசிவம் வீற்றிருந்தாரென முடிந்ததுகாண்க. (உ0)

அந்தவேலையிலாதிநான்முகனுளத்தறிவில்
வந்துதோன்றியமவுனஞானத்தினின்வதிந்தோன்
பந்தமற்றிகழ்சனற்குமாரன்பணிந்தேத்தி
முந்துநல்லிசைபணிதொறும்பணிதொறுமொழிந்தே.

(இ - புணர்.) அக்காலத்தில், ஆதியாகிய பிரமதேவனுடைய உள்ளத்தில் ஞானத்துடன் அவதரித்த மவுனஞானநிலையிற் பொருந்தியவராய்ப் பாசபந்தங்களைவிட்டொழித்த சனற்குமாரமுனிவர் பெருமானைப்பணிந்து துதித்துப் பரமசிவனுடைய முதன்மையான கல்லபுகழினைக்கூறி, எ - று. (உக)

ஐயகேட்டிடீயேகலிடத்தரியதாந்தரும
மெய்யுமாறெனக்குரையெனவொளிநிலாமுறுவற்
செய்யவாய்மலர்திறந்துதேன்றுளிக்குமாபோல
வையமேழுடையாயகன்மகிழ்வுறவுரைத்தான்.

(இ - புணர்.) எங்கள் ஐயனே! இவ்வுலகத்தில் அரியதாகிய தருமங்களை அடியேன் உய்யுமாறு கட்டளையிட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து கொள்ளவே, ஏழுலகத்தையுமுடைய பரமசிவன் ஒளியுள்ள நிலாவையொத்த நகையுடன் திருவாய்மலர்ந்து தேன்றுளி துளிப்பதுபோல மகிழ்ச்சியுண்டாக அருள்செய்கின்றார். எ - று. (உஉ)

கேட்டஞான நூலனைத்தையுங்கிளத்தினேபுவியி
லீட்டுகன்மத்திலிருவினையியற்றியமுறையே
யூட்டவுண்ணுமானிடர்களுமுத்தியையுறுவா
ணாட்டுநற்சிவதருமமாய்நாடுதற்கெளிதாய்.

(இ - புணர்.) அடியேன் விண்ணப்பம் பண்ணிக்கொண்டபடி ஞான சாஸ்திரமெல்லாம் அருளினீர், உலகத்திற் செய்கின்ற கர்மத்திலுல் நல்வினை தீவினைகள் முறைமைப்படியூட்ட அதையுண்டு களிக்கின்ற மானிடர்களும் மோக்ஷம் அடையும்படி காட்டுகின்ற நல்ல சிவதருமமாகியும் நாடுவதற்கெளிதாகியும், எ - று. (உக)

வருத்தமில்லதாயிருவினையகற்றுகண்மருந்தா
யருத்தியோடிறைப்போதினிலறிவுறுமதுவாய்க்
கருத்தில்வேட்டவையிம்மையிலுதவுகற்பகமாய்
விரித்தவேதமுற்றருமமொன்றுமையெனவினம்பி.

(இ - புணை.) வருத்தமில்லாததாகியும் இருவினையை கீக்குகின்ற நல்ல மருந்தாகியும் ஒருகூணப்பொழுதில் அன்புடன் ஞானங்கொடுப்பதாகியும் மனதில் விரும்பியபொருளை இம்மையிலே கொடுக்கும் கற்பகவிருக்ஷம்போன்றதாகியும் விதிக்கப்பட்ட வேதத்திற் சொல்லுவதாகியுமிருக்கிற தர்மமொன்று கட்டளையிடவேண்டுமென்றுசொல்லி, எ - று. (உச)

அஞ்சலித்தடியிணைமிசையலர்மழைதூவி
வஞ்சமொன்றிலாமறைமுனிகேட்டற்குமகிழ்ந்து
நஞ்சமுண்டகாலாக்கினிருத்திரநாதன்
செஞ்செவேயவனுளங்கொண்டுதிருவுறச்செப்பும்.

(இ - புணை.) கைகுவித்து வணங்கித் திருவடிகளில் மலர்களால் அருச்சித்து, உண்மைநெறியுள்ள அந்தச் சனற்குமாரமுனிவர் விண்ணப்பம் பண்ணிக் கொண்டதற்கு விஷபானஞ்செய்த காலாக்கினி ருத்திரமூர்த்தியானவர் களிகூர்ந்து, அம்முனிவர் தமதுள்ளத்திற் செவ்வையாக அறிந்துகொள்ளும்படி உபதேசிப்பாராயினர். எ - று. (உஎ)

அங்கமாறுடைவேதமுமாகமமுகமு
மெங்குமோதிடுமுபநிடதத்தினதியலுஞ்
சங்குபோலும்வெண்ணீற்றிலுற்றயங்குபுண்டரத்தைத்
துங்கநெற்றியிலணிவதேதருமமாச்சொல்லும்.

(இ-புணை.) ஆறங்கங்களையுடைய வேதங்களும் ஆகமத்தின்முதலும்எங்குமோதுகின்ற உபநிடதத்தின் உண்மையும் சங்குபோல்விளங்கும் வெண்ணீற்றினுல் பிரகாசிக்கும் திரிபுண்டரத்தைப் பரிசுத்தமான நெற்றியிற்றரிப்பதே தர்மமாகச்சொல்லும். எ - று. திரிபுண்டரம்- இருபுருவக்கடைவரையும் தரிக்கும் மூன்று விபூதிரேகை. இது, மும்மலத்தையும்போக்குமென்றகுறிப்பு.()

வேறு.

என்னப்பரமன்கூறுதல்கேட்டெழுந்தவுவகைச்சனற்குமான்
முன்னைப்பொருளேயடியேயோடுமுடியுமில்லாமுழுமுதலே
யுன்னிப்புகன்றதிருநீறேதுரைத்ததிரிபுண்டரமேது
பின்னர்த்தரிக்குமிடனேதுபேசுந்திருமந்திரமேதோ.

(இ - புணை.) இவ்வாறு பரமசிவன் அருளிச்செய்ததைக் கேட்டுச் சந்தோஷமுண்டாகிய சனற்குமாரமுனிவர் ஆதியானபொருளே ! ஆதியந்தமில்லாதமுதலே! தேவரீர் கருதிச்சொல்லியருளிய விபூதியென்பது யாது? சொல்லிய திரிபுண்டரமென்பது யாது? மற்றும் அதை எந்தவிடத்திற்றரிப்பது? அதனைத் தரிக்குங்காலத்திற்சொல்லும் திருமந்திரம் யாது? என்றனர். எ-று.(உஎ)

காலமேதோவளவேதோகருதப்படுந்தெய்வதமேதோ
சீலமேதோதிரவியமற்றேதோதரிக்கிற்பலனேதோ
மூலமுளையாய்நெடுந்தருவாய்வித்தினடங்குமுறைபோல
ஞாலமெல்லாமாயையின்பாலுதிப்பித்தொடுக்குநம்பரனே.

(இ-புனை.) வேரும் முளையுமாய் நெடியவிருகூமாய் விதையில் அடங்கு முறைமையையும்போல உலகமெல்லாம் மாயையினிடத்து உதித்து ஒடுங்கச் செய்யும் எங்கள் பரமனே! தரிக்குங்காலமெதுவோ? அளவுயாது? தியானிக்கப் படுந் தேவதையாது? ஒழுக்கம்யாது? அதற்குரிய திரவியம்யாது? தரித்தால் வரும் பலன் யாது என்றனர். எ - று. (உ அ)

என்றுவினவுமுனிக்கீசனியம்புமுறைத்திருநீறு
துன்றுதீம்பாற்கோமயத்தைச்சுட்டவடலையாகுங்கா
ணின்றதிரிபுண்டரமதுதான்சென்னிநெற்றிகளநிமிர்தோ
ளொன்றுமார்புநாபிபுறமுருவமுதலுத்தூளணமாய்.

(இ - புனை.) என்று வினவிய முனிவருக்குப் பரமசிவன் அருளிச்செய் கின்றார். வேதாகமத்திற் சொல்லப்பட்ட திருநீறுனது மந்திரமுள்ள பாலைத் தரும் பசுவின் சாணத்தை ஓமாக்கினியில் பாகமாகும்படி வைத்த திருநீறு கும்; திரிபுண்டரமாவது சிரசு நெற்றி கழுத்து தோள் மார்பு கொப்பூழ் பின் புறம் இவ்விடங்களில் முதலிலே உத்தூளனமாகவும், எ - று. (உக)

குழைத்துத்தைவந்ததற்பின்னர்க்குழைத்தநீற்றைவெண்ணிலவி
னிழைத்ததென்னச்சொன்னவிடத்தியற்றும்போழ்தினெற்றியின்கண்
டழைத்தவிரலினுநீக்கியத்தற்சனியாலணுமிகையாற்
பிழைத்தலறவேதரித்ததிராப்பெரியவிரலானுவணிந்தால்.

(இ - புனை.) குழைத்துத்தடவி அதன்பின்பு முன்குழைத்த அந்தவிபூ தியை வெண்மையான நிலவிலுல் செய்ததுபோல மேற்சொன்ன இடங்களில் தரிக்கும்போது, நெற்றியினிடத்தில் செழுமையுள்ள விரல்களில் நடுவிரலை விட்டு சுட்டுவிரலாலும் மோதிரமணியத்தக்க விரலாலும் குற்றமறத்தரித்துப் பின்பு பெரியவிரலால் நடுவே எதிராக அணிந்தால், எ - று. தற்சனி-சுட்டுவி ரல், அனாமிகை - ஆழிவிரல். (உo)

அதுவேதிரிபுண்டரமுரைத்தவங்கமவையேயிடனுகும்
பதியாலுரைத்தமந்திரங்கள்பஞ்சப்பிரமமுபநிடதம்
விதியால்வேதத்தெடுத்துரைத்தவியன்மந்திரங்களென்றறிவாய்
புதிதாய்நின்றகாலங்கண்முப்போதுகளெப்போதினுமாம்.

(இ - புனை.) அதுவே திரிபுண்டரமாகும், முன்சொன்ன அங்கங்களே திரிபுண்டரந்தரிக்குமிடமாகும்; நம்மால் அதற்கெனச் சொல்லப்பட்டமந்தி

ரங்கள் பஞ்சப்பிரமவுபநிடதம், இம்மந்திரம் வேதத்தில் முறையாக எடுத்துரைத்த மேன்மைபொருந்திய மந்திரங்களென்று அறிவாயாக; அதற்காக கவமாக நின்ற காலங்கள் மூன்றுபோதுகளேயாம்; அன்றியும் எப்போதுமாம். எ - று.

நீளம்புருவத்தளவாகுமிடையினீக்கமொருவிரலா
மாளுந்தெய்வமுருத்திரனேடரியமகேசன்சதாசிவனு
காளுஞ்சிலங்கடைப்பிடியாய்நன்காயீட்டுந்திரவியங்க
ளேந்தருபால்வெண்ணீறுமூலகுக்குயிராந்தோயமுமே.

(இ - புணை.) நெற்றியில் தரிக்கின்ற நீளம் புருவத்தின் அளவேயாகும்; திரிபுண்டரமாகிய மூன்று கீற்றுக்குள் மத்தியில் ஒருவிரல் அளவு இடம்வேண்டும்; அதற்குரிய தேவதைகள் உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் கடவுளர்களாம், இந்த ஒழுக்கத்தை யொருநாளுமறவாம லிருப்பாயாக; ஆன்மாக்கள் நன்மையுடன் சேர்க்கும் திரவியங்கள் பஸ்மவடிவான திருநீறும் உலகுக்குயிராகிய நீருமேயாம். எ - று. (ஊஉ)

பலத்தின்பெருமைமாமுனியேபகரிலேவர்தாமறிவார்
நிலத்தின்மீதுமானிடர்க்குமுத்திக்கிதுபோனெறியுண்டோ
சொலற்குத்தகுநால்வருணத்தோர்வருணச்சிரமத்தாழில்புரிவோர்
கலத்திற்கினையயாவிழிகுலத்தோர்கலன்பூண்மகளீர் கைமையுற்றோர்.

(இ - புணை.) பெருமையுள்ள முனிவரே! விபூதியைத்திரிபுண்டரமாகத் தரிப்பதினால் வரும் பலனைச்சொல்லுமிடத்தில் எவர்களறியத்தக்கவர்கள், இவ்வுலகத்திற் பிறந்தமனிதர்களுக்கு மோக்ஷந்தர இதைப்போல் சொல்லலாமென்றால் வேறுபொருளில்லை, பிராமணர்முதலிய நான்குவருணத்தார் பிரமசரிய முதலிய நான்கு ஆச்சிரமமுள்ளவர்கள் அபாத்திரர்களாகிய இழிகுலத்தோர் மாங்கலியஸ்திரிகள் கைம்பெண்கள், எ - று. (ஊங)

இயாவரேனுமித்தருமமியன்றகாலத்தியற்றுவரேற்
பாவமாயத்தலையறுத்துப்பாரிற்பிறவிக்கடனீந்தித்
தேவர்போகம்பொன்னுலகிற்சென்றுதுய்த்துச்சிவனருளா
நாவினுலும்வழுத்தரியமுத்தியின்பநண்ணுவரால்.

(இ - புணை.) இப்போது சொல்லிய இவர்களில் எவர்களேயாயினுந் திரிபுண்டரந்தரிப்பதாகிய தருமஞ்செய்வார்களேயாலல், பாபமாகிய பந்தத்தையறுத்துப் பூமியில்பிறக்கும் பிறவிக்கடலை நீந்திச் சுவர்க்கலோகத்திற் றேவபோகத்தை அனுபவித்துப் பின்பு பரமசிவனுடைய திருவருளினால் நாவைவக்கொண்டு சொல்வதற்கரிய முத்தியின்பம் அடைவார்கள். எ - று. (ஊச)

கோறல்களவுகள்ளுண்டல்குருவைவப்பிழைத்தல்கூட்டென்னத்
தேறும்பஞ்சபாதகத்தையொழியாதியற்றுஞ்சிறியோரு
மாறிலொன்றுதாங்கொள்ளாதநீதியியற்றியறமிகுந்த
பாறுபடிவேன்மன்னவரும்பயந்தோர்க்கொன்றபாதகரும்.

(இ - புணை.) கொலைசெய்தல் திருடுதல் மதுபானஞ்செய்தல் ஆசாரியா பசாரம் காமம் என்று சொல்லப்படுகிற பஞ்சமாபாதகத்தை எப்போதுஞ் செய் கின்ற கீழோர்களும், ஆறிலொருபாகம் வாங்கிக்கொள்ளாமல் அநீதிபுரிந்து தர்ம்மத்தையொழித்த பருந்து சூழும்படியான வேலேந்திய மன்னவர்களும், மாதாபிதாக்களைக் கொன்ற பாதகரும், எ - று. (கூ)

செய்தநன்றிமறந்தோருந்தீவைத்தில்லஞ்சிதைத்தோரும்
கொய்துபசுவைத்தின்றோருங்கொண்டோர்ப்பிழைத்துத்திரிந்தோரு
மொய்திற்கரிபொய்த்துரைத்தோருகோன்பையிகழ்ந்துகொடித்தோரும்
வைதுபழித்துப்பிபாய்யென்றுமுன்னூலிகழ்ந்தவஞ்சகரும்.

(இ - புணை.) செய்தநன்றி மறந்தவர்களும் தீமூட்டி இல்லங்களை எரித்த வர்களும் பசுவைக் கிதைத்துத் தின்றவர்களும் கொண்டவருக்குத் துரோகஞ் செய்த சோரஸ்திரிகளும் எளிதெனமதித்துப் பொய்சாக்ஷிசொன்னவர்களும் விரதங்களை யிகழ்ந்துசொன்னவர்களும் சாஸ்திரங்களைப் பழித்துப் பொய் யென்று இகழ்ச்சிசெய்த பாதகரும், எ - று. கொடித்தல்-பேசல். (கூசு)

கருப்பம்வீழ்த்திக்திரிந்தோருங்கலவாதவலாக்கலந்தோரும்
பரித்தவொருதேவினைவழுத்திப்பலதேவனையும்பழித்தோரு
மருத்திவிடந்தாற்கொன்றோருமற்றூர்க்கறுதுவதிந்தோரும்
விருத்தர்பாலர்மடவார்கணடுங்கவினைகள்செய்தோரும்.

(இ - புணை.) கருவை யழித்துத்திரிந்தவர்களும் சோத்தகாதவர்களு டன்சேர்ந்தவர்களும் தமது உள்ளத்திற்கொண்ட ஒருதெய்வத்தைத் துதித்து மற்றக்கடவுளணைப்பழித்தவர்களும், விஷங்கொடுத்துக் கொன்றவர்களும் தரி த்திரர்களுக்கு உதவாமலிருந்தவர்களும் விருத்தர் பாலர் மாதர்கள் என்னுமிவர் கள் பயப்படும்படிக் கொடிய செய்கைகளைச் செய்தவர்களும், எ - று. (கூஎ)

அடைந்தோர்க்கருளாதிருந்தோருமமரிலரசன்படைவெருவி
மிடைந்துவெரிநிட்டோடினரும்வெறியகுறளைபகர்ந்தோரு
மிடைந்தவறியோர்க்கீயாமனிதியமீட்டியிருந்தோருங்
குடைந்துநீருண்கூவல்குளங்குட்டஞ்சிதைத்தகொடியோரும்.

(இ - புணை.) தங்களை அடைக்கலமடைந்தவர்களுக்கு உபகாரஞ்செய் யாதவர்களும் அரசன்படையிற்போய்ச்சண்டை கூரிட்டவிடத்திற் பயந்து

முதுகுகாட்டியோடினவர்களும், பலனில்லாதகோள்சொன்னவர்களும் வருந்தியிருக்கும் வறுமையுள்ளவர்களுக்குக் கொடாமல் பொருளைச்சம்பாதித்துக் காத்துவைத்திருப்பவர்களும், முழுஞ்சீருண்ணுமம்படியான கிணறு குளம் குட்டை இவைகளை யழித்த பாவிகளும், எ - று. வெரிந்-முதுகு. (கூஅ)

ஆராமங்களழித்தோருமதிதிவருந்தவயின்றேருந்
தீராவிடும்பைபகைவருக்குந்தவசிலருக்குஞ்செய்தோருஞ்
சோராநிலையைச்சேர்ந்தொழுகித்தீவேட்டுண்ணுந்திறந்திறம்பிப்
பாராவாரங்கலத்தேதறிந்திவேட்டுழன்றபார்ப்பாரும்.

(இ - புணை.) பூஞ்சோலையை அழித்தவர்களும் அதிதிகள் பசியால்வருந்திருக்க உண்பவர்களும் பகைவராயிருப்பவர்களுக்கும் தவசீலர்களாகிய முனிவர்களுக்கும் ஒழியாத துன்பத்தைச்செய்கின்றவர்களும், சேரத்தகாததன்மையைப்பொருந்தி, யந்தவழியில்நடந்து நித்தியாகுதிசெய்து பின்பு போசனங் கொள்ளுந் தன்மைமாறி பொருளையிச்சித்துக் கப்பலேறிச் சமுத்திரத்திற்சென்று உழலுகிற பிராமணர்களும், எ - று. ஆராமம்-பூஞ்சோலை. பாராவாரம்-கடல். (கூக)

இன்னுங்கொடும்பாதகம்புரிந்தோரியாவரேனுமவரெல்லாம்
பின்னுஞ்சடிலமாமுனியேதிருநீறணியப்பெறின்வாழ்வான்
மன்னும்பிறவிமுதலவினைமுழுதுமாயும்வயங்கொளியோன்
மின்னுங்கனகவுதயவனைமேவவிருள்வீந்திடுவதுபோல்.

(இ - புணை.) பின்னலாகிய சடையையுடைய முனிவனே! இப்போது சொல்லிவந்த பாதகங்களுமல்லாமல் மற்றுமுள்ள பாவங்கள் செய்தவர்களேயாகிலும், அவர்களெல்லாரும் திருநீறணியப்பெறுவார்களாகில், அவர்களிடத்தில் நிலைபெற்ற பிறவிமுதலான வினைகளெல்லாம் சூரியன் சொன்னமயமான உதயகிரியிற் றோன்றினவளவில் இருளொழிவதுபோல நீங்கிவிடும். எ-று. (கo)

எள்ளப்படுகீழ்மக்களெனுமிழிந்தகுலத்தோன்றிலும்
வள்ளற்பரமன்றிருநீறுமணியுமணிந்தமாண்பினரை
யுள்ளத்துள்ளேயிருபொழுதுமுணர்ந்துதருண்டுசிவனெனவே
கொள்ளத்தகையவறிவினரேபிறவிக்கடலிற்குளியாதார்.

(இ - புணை.) இகழப்படுங் கீழ்மக்களாகிற இழிகுலத்தோர்களேயாகிலும், வேண்டுவார்வேண்டியதை யீயவல்ல பரமசிவத்தின் விபூதியும் ருத்திராக்ஷமுந் தரித்தபெருமையாளரை இரவும் பகலும் இருதயத்திற்றியானித்துச் சிவமெனக்கொள்ளத்தக்க அறிவாளர்களே பிறவிக்கடலிற் குளியாதவராவர். எ - று. (கக)

காடிமூன்றுகாலமெண்ணெனம்பன்றிருப்போரிசைகவிலர்
ணுடிவிளங்கும்டாவையெனவ்றிவொன்றில்லாணனலு
கோடிவெண்ணீறினிதள்ளிநெற்றிவிளங்கத்தரிப்பானேற்
கோடிபிதிர்கள்கும்பியிடைகுளியாதரன்பாற்கூட்டுவனல்.

(இ - புனை.) உணர்ச்சியுடன் சிவபெருமானை நினைத்துத் திரிகாலங்களி லுந் தியானிக்காதவரையும் அவர் திருநாமத்தின் பெருமையை காவிஞற்றுதி யாதவரையும் கண்ணுடியிலெழுதப்பட்ட சித்திரப்பிரதமைபோல அறிவில்லாத வனேயாளலும், விபூதியைத்தேடி இனிதாக அள்ளிநெற்றியில் விளங்கும்படித் தரிப்பாளையின் அவளுடைய பிதிர்க்கள் அனந்தம்டோர்கள் கும்பிபாகமென்னு நரகில் முழுகாமல் சிவபெருமானிடத்திற் சேரும்படிச் சேர்ப்பிப்பான். எ-று. கேடல் - தேடல். (சஉ)

ஏழுகோடிமந்திரமுமெண்ணிறவமுமிருநிலத்தி
லாழமுடையகங்கைமுதலனந்தநதியுமமரேசன்
வீழுந்தாகமீறுமவ்வேள்வியனைத்தும்விளம்புங்காற்
றாழுஞ்சடையான்றிருநீறுதரும்பேறொன்றுந்தாராவே.

(இ - புனை.) சதகோடி மகாமந்திரங்களும் அளவில்லாத ஸ்தலங்களும் இந்தப்பெரிய உலகத்திலிருக்கும் ஆழமுள்ள கங்கைமுதலான அனந்த நதிக ளுந் தேவேந்திரன் விரும்புகின்ற அசுவமேதயாகம் ஈறுகிய யாகங்களும் ஆகிய இவைகள் தாழ்ந்த சடையையுடைய பரமசிவன் விபூதிதரும் பேறுகளின் ஒரு பேற்றினையுந் தாமாட்டா. எ - று. வீழல் - விரும்பல். (சக)

பத்தியால்வெண்ணீறணிந்தோர்பாரைப்பொதுநீங்கிடப்புரந்து
தத்தபோகத்திறுதியினிற்சோதிவிமானத்தினிலேறி
மைத்தகுழலாளொடுமருவிமகவான்பதத்தில்வாழ்ந்தபின்னர்ச்
சத்தாயசத்தையொருவுசிவசாயுச்சியமேசார்வாரால்.

(இ - புனை.) பத்தியுடன் விபூதிதரித்துக் கொள்ளுகின்றவர்கள் பொது வில்லாமல் இவ்வுலகத்தை ஆண்டுபோகங்களை யனுபவித்து, இறுதியிற் சோதி யுள்ள தேவவிமானத்திலேறிச்சென்று, காரிய அளகத்தையுடைய ரம்பாஸ்திரிக ளுடன் தேவேந்திரனுலகத்தில் வாழ்ந்திருந்து, பின்பு சீவந்தன்மை நீங்கிச் சிவத்தன்மைபெற்றுச் சிவசாயுச்சியம் அடைவார்கள். எ - று. சாயுச்சியம் - கலத்தல். (சச)

இந்தவிபூதிமான்மியத்தைவேதம்பலவுமியம்புமதைச்
சிந்தைக்கெளிதாய்மிகச்சுருக்கிச்செப்பினேனென்றருள்டுரியா

வந்தத்துடனேமுதலுமில்லாவாதிபரமனகன்றிடலுஞ்
சந்தக்குலநான்மறைவிரிஞ்சனுலகத்தடைந்தான்சனற்குமான்.

(இ - புனை.) இவ்விபூதியின் மகத்துவத்தை வேதங்களெல்லாம் விஸ்தாரமாகச்சொல்லுகின்றன ; உன்மனதுக்களிதாகத்தெரியும்படி மிகவுஞ்சுருக்கிநாம் சொன்னேமென்று அருள்செய்து, ஆதியந்தமில்லாத முதற்கடவுளாகிய கயிலாசபதியானவர் எழுந்தருளவும், சனற்குமாரமுனிவர் சந்தமுள்ள கூட்டமாகிய சத்தவழிவான சிரேட்டமுள்ள நான்குவேதமும் முணர்ந்த பிரமலோகம்போய்ச்சேர்ந்தார். எ - று. (சஅ)

இன்னதாயவெண்ணீற்றின்றகைமையும்மாற்புகலவற்றேரு
வன்னேனவியும்பசிதீர்த்தற்கொருப்பட்டமைநீயுறப்பற்றி
மன்னுதிருநீறுனதுடலமலியப்பரிசித்ததனனீ
யன்னகாலநிருதவழிவகற்றித்தேவாயினையென்னை.

(இ - புனை.) இத்தன்மையுள்ள விபூதியின் மகத்துவம் எம்மாற் புகழத்தக்கதோ? உன்னைவருத்திய பசிதீர எம்மை உன்னைவேண்டுமென்று பிடித்து, நிலைபெற்றவிபூதி யுன்சரீரத்திற் பொருந்தப்பரிசித்ததினால், முன்னுள்ள ராக்ஷதவுருவம் நீங்கித் தேவரூபம்பெற்றுயென்று கூறி, எ - று. (சக)

அன்பினுணர்த்திவெண்ணீற்றையள்ளியரக்கன்றனக்களியா
வின்பமருளுமந்தராமுமிபம்பிழைறநீறிடுவித்துத்
துன்பமொழிந்தாய்பொன்னுலகிற்போகத்துய்த்துத்தொலைந்தபின்னர்
வன்பாரறியாச்சிவபதத்தைதமருவிவாழ்தியெனவிடுப்ப.

(இ - புனை.) இங்ஙனம் அன்புடன்சொல்லி விபூதியையள்ளி அரக்கனுக்குக் கொடுத்து, பேரின்பமருளும் மந்திரோபதேசமுஞ்செய்து முறையாக விபூதியைத் தரித்துக்கொள்ளும்படித்தெரிவித்து, துன்பம்நீக்கினவனே! சுவர்க்கபோகவின்பம் அனுபவித்து நீங்கினபின்பு, அன்பில்லாதவர்களால் அறியப்டாத சிவபதத்தைப்பொருந்தி வாழ்ந்துகொண்டிருவென்று விடைகொடுத்தனுப்ப ; எ - று. (சஎ)

பழையமுனிவனடியினைமேற்பணிந்தாங்கெழுந்துவிடைபெற்றுக்
குழையமனத்தினுவகையொடும்பொன்னுட்டெல்லைகுறுகுதலும்
பிழையில்பொருளின்பதந்தெரியும்வாமதேவப்பெருந்தகையுந்
தழையுமிதழிச்சடாதரன்போற்சார்ந்தானென்றுசாற்றினன்.

(இ - புனை.) அரக்கன் பழமையாகிய வாமதேவமுனிவர் திருவடியிற் பணிந்தெழுந்து விடைபெற்றுக்கொண்டு குழையுமனத்தினனுய்ச் சந்தோஷத்

துடன் தேவலோகத்திற்செல்லுதலும் பிழையில்லாதபொருளின் தன்மையுணர்ந்த அம்முனிவர் தழைத்த வொன்றைமாலையணிந்த சடாமகுடமுள்ள பரமசிவன்போல் தாம்போகவேண்டிய ஸ்தானத்திற்குப்போனர் என்று சூதமுனிவர் எ - று. (அ)

பதினாறுவது திரிபுண்டரமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கூகூ

உ

சிவமயம்.

பதினேழாவது
வேடன்சிவபூசைகடைப்பிடித்த அத்தியாயம்.

இவ்வண்ணம்மியத்துசூதனிறுத்தலுமதனைக்கேளா
மைவ்வண்ணக்காளகண்டன்வால்வண்ணப்பூதிகல்கு
மெய்வ்வண்ணப்பலத்தின்பெற்றிவிளைந்தனமென்னவேத்திப்
பொய்வ்வண்ணம்புகுதாவுள்ளத்தருந்தவர்புகல்வதானர்.

(இ - புரை.) சூதமுனிவர் மகிழ்ந்து சொல்லுதலும் இதனைக்கேட்டு மைந்நிறமுள்ள காளகண்டமூர்த்தியின் வெண்மைநிறமுள்ள விபூதிதரிக்கின்ற மாசுநபலத்தின் தன்மையைக்கேட்டு ஆனந்தமடைந்தோமென்று துதிசெய்து, உண்மைநெறி பொருந்திய உள்ளத்தையுடைய நைமிசாரணியமுனிவர்கள் சொல்லுகின்றார்கள். எ - று. இறுத்தல்- கூறல். வால் - வெண்மை. (க)

மூறாறுநான்மறைகள்கூறுமுடிபொருட்டினைபையோர்ந்து
கற்றவர்சூரவராயிற்பேறுமக்கணத்தினைய்தஞ்
சிற்றியற்குரவர்தம்பான்மானிடர்சிவமெய்ஞ்ஞானம்
பெற்றிடிலவரெவ்வாறுபிஞ்ஞகன்பதத்தைச்சேர்வார்.

(இ - புரை.) நான்குவேதமுழுவதுஞ் சொல்லத்தக்க முடிவான பொருளின் நிச்சயம் அறிந்து கற்றவர்கள் ஆசாரியராலுல் சிவபதம் அப்பொழுதே கிடைக்கும். அவ்வாறு கற்றுணராத ஆசாரியரிடத்தில் மானிடர்சேர்ந்து மெய்ஞ்ஞானம் பெறுவார்களாலுல், சிவபதத்தை அவர்கள் எவ்வண்ணஞ்சேர்வார்கள். எ - று. (உ)

அருந்தவமுனியேயிந்தவினவுக்குவிடையாதன்பு
புரிந்தெமக்குரைத்தியென்றுபுராதனமுனிவர்கூற

யொதவீனமனத்துமீனத்துத்
திருந்தியதவத்துச்சூதமுனிவரன்செப்பினனே.

(இ - புனை.) அரியதவமுன்ன சூதமுனிவரே! இந்தவினவுக்கு விடை ஆராய்ந்து அன்புகூர்ந்து எமக்கு அருள்செய்யுமென்று புராதனர்களாகிய சைமி சாரணியமுனிவர்கள் சொல்ல; விரிவாகிய பலகலைகளிலும் வல்லவராகிய வியாசரை இருதயத்திற் சிந்தித்துத்துதித்து கல்லதவத்தையுடையசூதமுனிவர் சொல்லுகின்றார். எ - று. (க)

பரவைசூழுலகில்வாழுமானிடப்பசுக்கட்கெல்லா
மரனதருமத்தோங்குங்கிரியையிலவாவொன்றுண்டேற்
குரவனதறிவின்கீழ்மைமேன்மைதான்குறிப்பதென்னே
திரமிறுமண்டினனேசிவகதிசேரலாமே.

(இ - புனை.) சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகில் மானுடரான சீவர்களுக் கெல்லாம் சிவதருமமாக மேன்மைதங்கிய கிரியாபாதத்தில் விருப்பமென்ப தொன்றுண்டாயிருக்குமானால், ஆசாரியருடைய அறிவின்கீழ்மையையும் பெரு மையையும் நாங்குறிக்கவேண்டியதில்லை; உறுதியாகிய அன்பினாலேயே சிவ கதியடையலாம். எ - று. (ச)

உடைத்தெறிந்திட்டகல்லிடபசுமண்ணின்மரத்தினேட்டிற்
கிடைத்தவற்றொன்றுதவ்வினையாரெனக்கிரியைபேணிக்
கடைப்பிடித்துறுதிகூறுமவாவொடுகனிவனையின்
விடைக்கொடியுயர்த்தோன்றல்கருமத்தான்முத்திபோவும்.

(இ - புனை.) உடைத்து எறிந்துவிட்ட கல்லிலும் ஈரமுள்ள மண்ணி லும் ஏட்டிலும் இலைகளுமல்லாமல் வேறெதுகிடைத்தாலும் அவைகளிலொ ன்றைப் பரமசிவனாக பாவித்துக் கிரியைவிரும்பி மறவாமற்பற்றி உறுதிமிகுந்த அன்புடன் ஒருவன்மனங்கனிவானால், அவனுக்கு ருத்தபக்கொடியுள்ள பரம சிவனது கிரியையால் முத்திகிடைக்கும். எ - று. (ரு)

காட்டிடுங்குரவன்றானுங்கயவனுந்தகைபேனானு
மீட்டுமந்திரமும்வாளாவசனமாமியல்பிற்றானுங்
கேட்டமாணாக்கன்றானுமறிவிற்கீழ்மகனேமானு
நாட்டியவவாவொன்றுண்டேற்சிவபதநண்ணலுறுவானே.

(இ - புனை.) உபதேசிக்கும் ஆசாரியன் சாஸ்திரவிசாரணை யில்லாதவ னேயானாலும் உச்சரிக்கிற மந்திரமும் பயனில்லாத வசனமேயானாலும் உபதே சம்பெற்ற சீடன் விவேகமில்லாத கீழ்மகனேயானாலும் சொல்லிய அன்பென் பது உண்டாயிருக்குமானால், சிவபதத்தை யடைவான். எ - று. (கூ)

ஆணைநான்குமோதியறிந்தபோதிருநேணுங்
காணைவேள்வி நூறுங்கருத்தினின்முடித்தானேனும்
வாணைமூரித்தவள்ளன்மலரடிதன்னின்வைத்த
பூணைவேட்டையில்லான்பொருந்திடான்முத்தியன்றே.

(இ - புணர்.) நான்குவேதங்களும் ஓதியுணர்ந்த ஞானவானனைலும் சுவர்க்கபதப் பிரவேசத்திற்குக் காரணமாகிய நூறுயாகம் விரைவாகச்செய்து நிறைவேற்றினவனே யானலும், யாணையையுரித்த நம்மிறைவன் திருவடிமலரில்வைத்த பூரணமாகிய அன்பில்லாதவன் முத்தியடையான். எ - று. (எ)

ஆதலாற்கருமம்யாவுமையத்தோடியற்றின்ற
பேதைமையுளத்தார்பெற்றபேறில்லைபண்டோர்வேடன்
போதமிலரசன்சொன்னவிலேதநற்பொருளென்றெண்ணி
வேதநாயகனைப்பூசித்துய்ந்தமைவிளம்புவாமே.

(இ - புணர்.) ஆகையினால், கிரியைகளெல்லாம் சந்தேகத்துடன்செய்திருக்கும் அறிவில்லாதவர்கள் அடைந்தபேறு ஒன்றுமில்லை; பூர்வத்தில் ஒருவேடன் ஞானமில்லாத ஒரு அரசன்சொல்லிய விலேதவார்த்தையை நல்லபொருளென்று நம்பிப் பரமசிவனைப்பூசித்து உய்ந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேம். எ - று. (அ)

பண்டொருசாலதேசப்பார்த்திபக்குமரன்மிக்க
திண்டிறற்சிங்ககேதுவெனும்பெயர்ச்செங்கோல்வேந்தன்
கொண்டலொத்ததவுகையான்கோதிலான்குணத்தின்மிக்கான்
றண்டுதன்றிவேட்டமாடுவான்சமைந்துபோனான்.

(இ - புணர்.) பூர்வத்தில் பாஞ்சாலதேசத்தில் பராக்கிரமமுள்ள சிங்ககேதுவென்னும் பெயர்பெற்றுச் செங்கோல்செலுத்துபவனும் மேகம்போற் கொடுக்குங்கையனும் குற்றமில்லாதவனும் நற்குணத்திற்சிறந்தவனுமான அரசன் ஒருநாள் நீங்குதலில்லாமல் வேட்டையாட உத்தேசித்துப்போனன். எ-று.

தடிமிசைவலைவார்தாவித்தடந்தொறும்வருவார்கோடி
துடியொடுமிரலைபொங்கத்தொண்டகந்துணைவப்பார்கோடி
மடிசெவிருமலிபற்றிவருடவர்கோடிகோடி
கடிதருதானைகையார்சூழக்காட்டகம்வேட்டஞ்செய்தான்.

(இ - புணர்.) தடிகளின்மேல் வலைகளும் வார்களும்போட்டுச் சுமந்துகொண்டு மார்க்கந்தோறுஞ் செல்லுகின்ற கோடி வேடர்களும் துடியுடன் இக்கானகமுழங்கக் குறிஞ்சிப்பறைகள் முழக்குகிற வேடர்கள் கோடிபேர்

களும், வளைந்த காதுகளையுடைய நாய்களைப்பற்றிக்கொண்டு வருகின்றவர்கள் கோடிகோடிபேர்களும் இவ்வாறு கணக்கில்லாத வேட்சூட்டஞ் சூழ்ந்துவரச் சென்று, காட்டினிடத்தில் வேட்டையாடினான். எ - று. காவுதல் - சுமத்தல்.

அப்பெருவனத்திற்சண்டனெனும்பெயர்வேடனெஞ்சி
யெப்பெருகெறியுரேடிவிலங்கினெறியவெண்ணி
யொப்பருஞ்சிலையினேடுங்கணைபிடித்துருத்துச்செல்வான்
றிப்பியமொழிந்துகந்தியிடந்தவாலயத்தைச்சேர்ந்தான்.

(இ - புணை.) அந்தப்பெரிய ஆரணியத்திற் சண்டனென்கிற ஒருவேடன் தனித்து எல்லாவழிகளையுந்தேடி மிருகங்களைக்கொல்ல நினைத்து, ஒப்பில்லாத வில்லையும் பாணத்தையும் பிடித்துக் கோபத்துடன் செல்லுகின்றவன், பொலிவுமாறி இடிந்து பாழாயிருக்கும் ஒரு ஆலயத்திற் சேர்ந்தான். எ - று. திப்பியம் - திவ்வியம். நந்தி - பொலிவுகெட்டு. (கக)

சிதைந்துருவழிந்துவீழ்ந்துகிடந்தசிவலிங்கத்தைக்
குதைந்தவார்பகழிவேடன்கண்டனன்குறித்தநெஞ்சிற்
புதைந்தபோன்பிறைவேபோற்றினனெடுத்துப்போந்து
தனைந்தபூந்தெரியல்வேய்ந்ததராபதிதிருமுன்காட்டி.

(இ - புணை.) சிதைவுபட்டு உருவமழிந்து விழுந்திருந்த சிவலிங்கத்தைக் கண்டு, குதையுள்ள நீண்ட கணைகளையுடைய அந்தவேடன் அதை நிதானித்த மனதில் நிறைந்த போன்புடன் துதித்தெடுத்துக்கொண்டுவந்து, கொருங்கிய பூமாலையணிந்த அரசன்முன்னர்க்காட்டி, எ - று. (கஉ)

அரும்புவிமுழுதுமாளுமாசனேயாசனேறே
விரும்பியவடியேன்கையின்மேவியசிவலிங்கத்தைப்
பெரும்பயன்றெரிந்துபோற்றிப்பூசிக்கும்பெற்றியெல்லாந்
தரம்பெறவுரைத்தியென்னச்சாற்றினன்சாற்றலோடும்.

(இ - புணை.) அருமையான பூமிமுழுதுங் காக்குமரசனே! மன்னவர்சிங்கமே! விருப்பங்கொண்ட அடியேன் காதற்பொருந்திய இச்சிவலிங்கத்தை மிகுந்தபயனறிந்து துதித்துப்பூசிக்கிற முறைமையெல்லாம் கிரமமாகச்சொல்ல வேண்டுமென்றான். அப்படிக்கேட்டவளவில், எ - று. (கஙு)

மடமையினன்றேவிந்தவனசராயுளைத்தமாற்றம்
புடையமர்ந்தீர்கள்கேண்மினென்றுகைபுடைத்துநக்குப்
படையுலாந்தடக்கைவேடநினக்கதுபணிப்படனென்னுக்
கடலுலகாளும்வேந்தனசதியாற்கட்டுரைத்தான்.

(இ - புணை.) என்னருகிலிருப்பவர்களே! இந்த வேடன் சொன்னவார்த்தை அறியாமையினுலல்லவா? நேரநங்களென்று கைதட்டி நகைத்து, ஆயுத மேந்தும் பெரியகையுள்ள வேடனே! பூசைசெய்கிற முறைமையைச் சொல்லு கிறேன்கேளென்று, கடல்சூழ்ந்த உலகாளும் அரசன் ஏனனமாகச் சொல்லுகி ருன். எ - று. அசதி-ஏளனம். (கச)

ஏத்தியசிவலிங்கத்தையெய்பின்மஞ்சனநீராட்டிப்
பூந்துணர்கந்தஞ்சாற்றிப்புகையொடுதீபநல்கி
மாந்தரைச்சுட்டசாம்பர்கொணர்ந்துமுன்வைத்துப்போற்றி
யாய்ந்துநீதுய்க்குந்தீம்பாலடிசிலோடனைவையுநல்கி.

(இ - புணை.) ஏந்திய சிவலிங்கத்துக்கு விதிப்படி திருமஞ்சனநீரால் அபி ஷேகஞ்செய்து, சந்தனபுஷ்பந்தரித்துத் தூப தீபங்கள்கொடுத்து, இரத்தமணி தரைச்சுட்ட சுடலைச்சாம்பரைக்கொணர்ந்து எதிரில்வைத்துப்போற்றிசெய்து, பதமறிந்து நீ உண்ணுகின்ற மதுரமுள்ளபாலன்னமும் இன்னமுமுள்ளவைகளை யும் நிவேதித்து, எ - று. (கரு)

நேயமோடுறைஞ்சியேத்திநிருத்தங்கள்புரிந்துநின்று
வாயிலைமுதகானப்பாடியும்வணக்கஞ்செய்துந்
தூயகற்பூசைசெய்வாயென்றிறைசான்ருன்மூற்றாங்
காயும்வெஞ்சிலக்கைவேடன்மெய்ம்மையாற்கருதிற்கொண்டான்

(இ - புணை,) அன்புடன் பணிந்து துதித்து, நடனங்கள்செய்து வாயி லில் மதுரமுள்ள கீதங்கள் பாடியும் பவித்திரமான கல்லபூசைசெய்யென்று அரசன் சொன்ருன்; பகைவரைக்கொல்லத்தக்க வேடன் அவற்றையெல்லாம் உண்மையாக மனதிலெண்ணிக்கொண்டான். எ - று. (கசு)

நெஞ்சினில்வேட்கைகூர்க்கடைப்பிடிநிகழ்தலாலே
வஞ்சமுற்றரசன்சொன்னவிதிமுறைவழுவாதெண்ணி
யஞ்சவித்தமலன்பூசையனுதினமொருநாள்போல
விஞ்சவேபுரியுங்காலத்தொருபகல்விரதவேடன்.

(இ - புணை.) விரதங்கொண்டிருக்கும் அவ்வேடன் மனதில் அன்புமிகுதி யாகஅரசன்சொன்னவையெல்லாம் உறுதியாய்க்கொண்டதினுல், அவ்வரசன் கபடங்கொண்டுசொல்லியமுறைமையில் ஒன்றுந்தவருமல் நாபகத்தில் வைத் துக்கொண்டு வணங்கிச் சிவபூசை முதல்நாள்போலவே செய்யுங்காலத்தில், ஒருநாள், எ - று. கடைப்பிடி-உறுதிப்பாடு. (கஎ)

மற்றையவெல்லாங்கொண்டுவாதனிப்பூசைசெய்வா
நீறுகண்டிலனெல்லியேகிச்

சுற்றியவனங்களெங்குந்தருவினைதேடிக்காணன்
கற்றையங்குழலாளோடுகருத்தழிந்திம்தெசொன்னன்.

(இ - புணை.) சிவபூசைக்கு வேண்டிய திரவியங்களெல்லாஞ் சேகரித்துக்கொண்டு பூசைசெய்யவாரம்பித்துச் சேகரித்த திரவியங்கள் சரியாகஇருக்கின்றனவாவென்றுபார்க்கையில், சுடலேச்சாம்பலொன்றில்லாமையினால் விரைவுடன் சுடலைகளெல்லாந் தேடிப்பார்த்து அகப்படாமல் மனம்வருந்தித் தனமனைவியுடன் சொல்லுகிறான். எ - று. துருவல்-தேடல். (கஅ)

குன்றியந்தாமஞான்றகுவிமுலைக்கொடிச்சிகேட்டி
யன்றுகுரவனுனவரசர்கோன்பணித்தவாறே
யின்றனவீசன்பூசையியற்றினேன்குறைபாடின்றி
யொன்றவற்றிலதேனலண்ணல்பூசையின்றெழிபுங்கண்டாய்.

(இ - புணை.) குன்றிமணிமாலை அசையும்படியான குவித்தனமுள்ள குறமாதாகிய என்மனைவியே! கேட்பாயாக; நம்முடைய குருவாகிய அரசன் அன்றுசொன்ன முறைப்படியின்றுவரையில் சிவபூசை குறைபாடில்லாமற் செய்தேனை; அத்தப்பூசைத்திரவியங்களிலே இப்போது ஒருதிரவியமில்லாவிடில் சிவபூசைக்கிரமந்தடபிடபோம். எ - று. கொடிச்சி-வேடமகள். (கக)

பூசனைவழுவுமாயிற்புலாலுடலறன்னோய்போற்றிச்
சிசியாளிருக்கலாற்றேனிறப்பமேதுன்னமென்றான்
மாசிலாவுள்ளத்தாருங்குறையேதுவந்தெனன்றாள்
தூசுலாமல்குலாய்கேள்சுடலையினடலையென்றான்.

(இ - புணை.) சிவபூசை தவறுமாறுல் சீச்சீ இந்த நாற்றவுடலை வைத்துக்கொண்டிருக்கமாட்டேன், இறந்துபோவதே நிச்சயமென்றான், குற்றமற்ற மனமுடைய அந்தக்குறமாதும் இப்போதுநேரிட்ட குறைபாடெனனவென்று கேட்க; ஆடையணிந்த அல்குலையுடைய பெண்ணே! சுடலேச்சாம்பலே ஒன்று குறைபாடு என்றனன். எ - று. (உ0)

உரைத்தவற்றுள்ளேயொன்றின்றியினுமுவகைகூர்ந்து
டரித்திடார்தொண்டர்பூசையென்றுதீபகர்ந்தயாவுங்
கருத்தினிலுணர்ந்தேதனின்றுகண்ணுதற்பரமன்றன்னை
யருத்தியால்வழிபட்டேத்தவறைகுவனடியனென்றாள்.

(இ - புணை.) சொல்லிய திரவியங்களில் ஒன்றில்லாவிட்டாலும் அடியார்கள் சந்தோஷத்துடன் பூசையைத்தொடங்காதனைய நீசசான்னவையெல்லாம் மனதிலறிந்தேன்; இப்போது சிவபூசை யன்புடனசெய்து துதிக்க அடியேன் ஒன்றுசொல்லுகிறே னென்றனள். எ - று. (உக)

ஈமத்தினடலியொன்றுகுறைந்ததென்றிரங்கவேண்டா
சேமித்தகந்தமில்லிற்சொந்தழல்கொளநுவிமுத்தி
காமித்தநான்வீழ்ந்தக்கனல்புகுந்தவிவேனின்னே
பூமொய்த்தமார்பவெந்தசாம்பராற்பூசைசெய்வாய்.

(இ-புனை.) சுடலேச்சாம்பலொன்று குறைந்ததென்று விசனப்படவேண்டியதில்லை, காலலாகக்கட்டிய கம்முடைய குறிச்சியில் நிலைத்துக்கொளுத்தி விட்டு, நான் மோகூத்தைவிரும்பி அந்தத்தீயில்விழுந்து இறந்துபோகிறேன்; பூமாலையணிந்திருக்கும் மார்பையுடையநாயகனே! அந்தச்சாம்பலைக்கொண்டு இப்பொழுதே சிவபூசைசெய்வீராக என்று கூறினள். எ - று. ஈமம்-சுடலை.

என்றவள்சொல்லக்கேட்டவெயினனுமினைந்துசொல்வான்
மன்றலங்குழலாய்கேட்டியில்லறம்வளராநின்றான்
றன்றனிமனைவியாலேதருமமேமுதலநான்கு
மொன்றிடவேண்டுமென்னுழுலகமென்றுரைத்துப்பின்னும்.

(இ - புனை.) அங்ஙனம் சொல்லியதைக்கேட்ட அவ்வேடன் மனமிரங்கிச் சொல்லுகிறான்; வாசனையுள்ள அளகத்தையுடைய மாதே! நான் சொல்வதைக்கேள், இல்லறம்வளரும்படி விரும்பியிருக்குமொருவன் தன்மனைவியினால் தருமமுதலாகியநான்கும் பொருந்தவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்;என்றுசொல்லி மேலுஞ்சொல்லுகிறான். எ - று. எயினன்-வேடன்.( )

பொங்கிளமுலையாய்கேண்மோபுதல்வரைப்பெற்றுயல்லை
மங்கையின்பருவத்தின்பமாதுநீமன்னுங்காமந்
தங்கியகாதன்மேன்மேற்றழைத்திடுமிளமைதன்னி
லங்கியில்வீழ்ந்துசாதற்கமக்குமோவடாதுகண்டாய்.

(இ-புனை.) இளமைமிகுந்ததனத்தையுடையவளே! கேள்; நீஇதுவரையில் புத்திரசம்பத்து அடையவில்லை, நீயோ மங்கைப்பருவமுள்ளவள், காமம்பொருந்திய ஆசைமேன்மேற்றழைக்கு மிளமையில் தீயில்விழுந்துசாதல்அடுப்பதோ அடுப்பதல்லவே. எ - று. மங்கைப்பருவம் - பதின்மூன்றுவயதுள்ளகாலம்.

மின்குலமனையவாளிவேட்டுவர்க்கரசாய்த்தோன்று
நின்குலமைந்தனில்லாநிரயம்புக்காழ்ந்துபோன
வென்குலத்தவரையெல்லாநரகினின்றேற்றிமேலை
புன்குலந்தன்னையோம்பிப்புரப்பவர்யாவரென்றான்.

(இ - புனை.) மின்னற் கூட்டமொத்த பாணமேந்தியவேடர்குலத்துக்கு அரசனைப்பிறந்த உனது தந்தையின் வமிசம் புத்திரனில்லாமல் நரகத்தில்மூழ்கிப்போயிற்று. என்குலத்தவரையெல்லாம் நரகத்தினின்றும் கரையேற்றி இனி எண்புல்லியகுலத்தை ஆதரித்து ரக்ஷிப்பவர்கள் யாரென்று சொன்னான். எ-று.

கருங்கயல்விழியாள்கேட்டுக்கூறினுள்கருப்பமென்னு
மருங்கயற்கடலுளாழ்ந்தங்கழிவுறுமறிவிலாரிற்
பெருங்கயமுரித்தோன்றொண்டுபேணியேமாயப்பெற்றூற்
பொருங்கயமனையாய்பின்னும்விழைவதோர்பொருளுமுண்டோ

(இ - புணை.) களியசேலையொத்த கண்களையுடையவள் தன்கணவன் சொன்னதைக்கேட்டு யானையையொத்தபுலவலனே! அறிவில்லாதவர்கள் பிறவியாகிய சமுத்திரத்தில் மூழ்கி இறந்துபோகிறதுபோலப் பெரியயானையையுரித்த பரமசிவனுடைய அடிமைத்திறத்தை ஆதரித்து இறந்துபோகப்பெற்றால், அதற்குமேலும் விரும்பத்தக்க பொருளொன்றிருக்கின்றதோ? இல்லையே: எ - று. (உசு)

புரவலமறுதியீசன்பூசனைமுடிக்கவேண்டி
விரவனல்குளித்திப்போதுவீவன்யானென்னலோடு
மரவெனத்தகழுமல்குலாயிழைதுணிவையோர்ந்து
பரவருங்கற்பினுளோயெரிபுகப்பணித்தலோடும்.

(இ - புணை.) இறையவனே! தடுக்காதே, சிவபூசை நிறைவேற்றவேண்டி இப்பொழுதே இப்பெரியதீயில்விழுந்து தானிறந்து போகிறேன் என்று சொன்னவளவில், பாம்பின்படம்போல் விளங்குகின்ற அல்குலையுடைய தன்மனைவியின் துணிவையறிந்து யாவரும் துதிக்கத்தக்க கற்புள்ளவளைத் தீயில் விழும்படி உத்தரவுசெய்தமாத்திரத்தில், எ - று. (உஎ)

வானயாறிழிந்ததென்னவரையினின்றிழிந்துபாயுங்
கானயாறருவியாடிக்கலன்பலவணிந்துசுண்ண
நானஞ்செய்வாசம்பூசிநறுமலர்மாலைசூடிப்
பானுறைவெண்பாட்டார்த்துக்கணவனைப்பணிந்துவாழ்த்தி.

(இ - புணை.) ஆகாயகங்கை யிழிவதுபோல மலையினின்றிழிந்துபாயும் கான்யாற்றருவியில் ஸ்நானஞ்செய்து, பலவித ஆபரணங்களை யணிந்து, சுண்ணப்பொடியும் கஸ்தூரியும் கலந்த சந்தனக்குழம்பு பூசி, நறுமணப் பூமாலை தரித்து பாலி னுரையையொத்த வெண்பட்டணிந்து தன்கணவனைவணங்கித் துதிசெய்து. எ - று. (உஅ)

மனையின்மீதங்கிசேர்த்திவலங்கொண்டுவணங்கியேத்திப்
புனைமதிக்கண்ணியான்றன்பொலன்கழலிறைஞ்சுதோறேத்தித்
தினையெனைத்துணையுகேங்காதன்பொடுசிந்திடும்போர்கள்
வினைவிலங்கறுக்குமையாவிண்ணப்பங்கேளாயன்றே.

(இ - புணை.) தனது வீட்டில் நெருப்பையிட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிப்பின்பு சந்திரசூடரான பரமசிவனது பொன்னிறமுள்ளதிருவடிகளை வணங்கித் துதிசெய்து, தினையளவும் நீங்காமற்றியானிப்பவர்கள் வினையாகிய

விலங்கைத் தறித்துவிடும் ஐயனே! அடியேனுடைய விண்ணப்பத்தைக்கே ளென்று கூறி, எ - று. (உக)

இந்திரியங்களைந்துமலராகவெனதுகாயங்
கந்தமார்புகைபிற்காட்டுமெகிலாகக்கருத்தூடுஞ்
சுந்தரத்தீபமாகப்பிராணன்றுப்பனவேயாக
வந்தநாற்காரணமுற்றுமருக்கியமாகக்கொண்டே.

(இ - புணர்.) பஞ்சேந்திரியங்களே மலராகவும் என்னுடையசரீரமானது வாசனைதங்கிய அகிற்புகையாகவும் என்னிருதயமானது மிகுந்தசுந்தரமுள்ள தீபமாகவும் பிராணனைது நிவேதனமாகவும் அந்தக்காரணமுழுவதும் அருக்கியமாகவும் ஏற்றருளி, எ - று. (கo)

அடியனேன்சிவன்பூசாபலத்தினையடையல்வேண்டுங்
கொடியன்யானைமாவாழ்வுங்குறிக்கிலேன்பிறவித்தாறுந்
தடையறத்தீதான்றினைலுமாயையைத்தணந்துவெள்ளை
விடையகின்கழற்கீழன்புவேண்டுவலெனல்வேண்டி.

(இ - புணர்.) அடியேனது சிவன் பூசைப்பலனை யடையவேண்டு மென்று பிரார்த்தித்துப் பின்பும் நான் தேவாகள்வாழ்வையுங் குறிக்கின்றி லேன், தடையில்லாதல் என்பதுவானருகாகம் யோனிகளோறும் பிறந்தா லும் மாயையினைநீங்கி, வெள்ளிரிஷபவாகனத்தில் வீரோகணித்துக்கொண் டெழுந்தருளுகின்ற நின்திருவடியின்கீழ் அனபுபொருக்குவிரும்புகிறேனென்று வேண்டி, எ - று. (கக)

செங்கமலனையகன்ஞாலஞ்செழுந்தழற்பிழம்புதன்னுட்
பங்கயமலர்ற்செல்லுநாரணவெனப்பரந்தூடாப்
பொங்கியசாட்பாகக்கண்டனைபுளகமோங்கி
யங்கையினடலியகந்தியசனையருச்சிதாதினை.

(இ - புணர்.) செவ்விய சேற்கண்டைபோலும் கல்ஞாலஞ் செழுமையான தீப்பிழம்பில் தாமரைமலரிற்செல்லுந் திருமகள்போலவிழுந்து பரிசுத்தமான சாம்பராகக்கண்ட அவ்வேடன் புளகங்கொண்டு, அச்சாம்பரைத் தன்னுள் ளங்கையில் எடுத்துக்கொண்டு பரமசிவனை அருச்சித்தான். எ - று. (கஉ)

இறையவன்பூசைமுற்றியிறுதியிற்கழித்தவெல்லாம்
பிறைநுதலென்றுமேற்கும்பெற்றிபோலற்றைப்போது
மறைமுதல்பூசைச்சேடம்வாங்குவான்வந்துதோன்றி
நிறைபுடனின்றுள்கண்டுவெருக்கைகநினைவிற்றேர்வான்.

(இ - புணர்.) இவ்வாறு சிவபூசை நிறைவேற்றி அச்சப்பூசையின் முடி வில் கழித்துவிட்டனையெல்லாம் அவன்மனைவி காடோறுமேற்றுக்கொள்வது

(இ - புணை.) மாறுபடுதலில்லாத கற்புணையுள்ள முனிவனே! தேவரு டைய அடிச்சியான தமியேனுக்கம்பெண், பழுதற்றஇளமைப்பருவம்வீணிற் கழிந்துவிடப் பூர்வசென்மத்திற் றேடிக்கொண்ட வினைப்பயனை அனுபவிக்கி றேன், இனி உம்முடைய ஆசியின் பயனை இன்பங்களை விரும்பிப் பெறுவ தற்கு எவ்வாறுரியேன் என்று சொன்னாள்; அதைக்கேட்ட முனிவர் சாரதை யைப்பார்த்து நீ வருந்தாதே, நான்சொல்லுகிற வார்த்தையைக் கேளென்று இந்தவார்த்தைகளைச் சொல்லுகின்றார். எ - று. (கசு)

கருவிழிமறைந்தேதனளித்தகல்வார்த்தையற்கணுப்மெய்ம்மையா க்குவனென், னுமைமனக்கோடியுமாமகேச்சுரமென்றொருதவவிரத மொன்றதனீட், புரிவையேலுள்ளங்கருதிய வெல்லாப்பொருளும்வந் துறுமெனப்புகலச், சரிகுழலணங்குகேட்டதுபுரியுந்தொன்முறைபக ரெனச்சொன்னான்.

(இ - புணை.) கயற்கண்டையையொத்த கண்களையுடையவளே! நேத்தி ரத்தெரியாதயான்சொன்ன இந்தவார்த்தை உண்மையாகும்படிச்செய்கிறேன், என்வார்த்தையை உன்மனதில் உறுதியாகக்கொள்ளக்கடவை, எனென்முல் உமாமகேச்சுரமென்பதாக ஒருதவவிரதமுண்டு, நீ அந்தவிரதத்தை அனுஷ டித்தால் மனதினினைத்த பொருளெல்லாம்வந்து சித்திக்குமென்று சொல்ல; அதைக்கேட்ட அச்சாரதை அந்தவிரதம் அனுஷ்டிக்கும் பழமையான முறை மையைச்சொல்லுமென்று வினவ, அவர் சொல்லுவாராகின்றார். (கள)

வளமலிவேனிற்சித்திரைபனிகூர்மார்கழியிவற்றிலோர்மதியி னிளமதிக்கலையால்வளர்முதற்பக்கத்தினைத்தினிவ்விர தமுளமலியன்பாற்றொடங்கியெட்டுநோழுறுதிதிபூரணையுவாவென் [தெ றளவுசேர்த்திதியோர் நான்கிலுந்தன்னீராடியோர்மண்டப மமைத்

(இ - புணை.) வளப்பமிறைந்த வசந்தகாலமாகிய சித்திரைமாதம் பனி மிகுந்தமார்கழிமாதம் என்னுமிந்த இரண்டுமாதங்களுக்குள் ஓர்மாதத்தில்இளந் திங்கள் கலையினல் வளருகின்ற பூர்வபக்கத்திற் பொருந்தியசுதினத்தில் இவ்விர தத்தைஅன்புடன் ஆரம்பித்து, அஷ்டமி சதுர்த்தசி பௌர்ணமி அமாவாசை என்றுசொல்லப்படுகிற நான்குதிதியிலும் தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்தலுமண் டபம் அமைத்து, எ - று. (கஅ)

மஞ்சரிநறுந்தண்மோதகமுறற்றிவயங்குபட்டாடைகம்பலமாய் விஞ்சுமேற்கொளிய கமணிக்கோவைவிதானஞ்செய்கனகமண்டபத்திற் செஞ்சுடர்ப்பசும்பொன்னேட்டறுத்துகளற்றிருவுருவமைந்தகாதனியு மஞ்சிறைக்கனிவண்டிமிர்பொழிலிமயத்தணங்கையுந்தாபிதஞ்செய்தே.

பிரமோத்தரகாண்டம்.

(இ - புணை.) பூங்கொத்துக்களும் வாசனையுங் குளிர்ச்சியுமுள்ள மலர் மாலைகளும் தொங்கக்கட்டி, விளங்குகின்ற பட்டாடையை கம்பலமாய் மிகுந்த ஒளியுள்ள கவரத்தினமாலைகளுடன் மேல்விதானங்கட்டியபொன்மயமானமண் டபத்தில், ஒளியுள்ளதாய் ஓட்டறுத்த மாற்றயர்ந்த பசும்பொன்னிழுலைமத்த பரமசிவத்தின் திருவுருவத்தையும், அழகியசிறகுள்ளதாய்க் களிப்பினையுடைய வண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும்படியான சோலைசூழ்ந்த இமயமலையி ன் புத்திரியான பார்வதியாளையும் அங்ஙனமமைத்துத் தாபிதஞ்செய்து, எ-று.

சதமறைபுழுப்பஞ்சகவ்வியத்தாற்றகவொதிபுனிதமாக்கியபின்
புதுமலர்த்தேனுங்கன்னலுமிதம்பொழியுழுக்கனியொடுங்கலந்து
விதிமுறைசாத்தியஞ்செழுத்தாகிவிளங்கும்மந்திரத்திறைமுசன்
கதிகருமேகாதசவுருத்திரந்தாற்கடிகமழ்தும்புனலாட்டி.

(இ - புணை.) நான்குவேதங்களாலும் புகழத்தக்க பஞ்சகவ்வியத்தால் சுகுதியுடன்பிம்பசுத்திசெய்தபின்பு புதுமலர்த்தேனும்கருப்பஞ்சாறும் முப்பழச் சாறுங்கலந்து விதிப்படிச்சாத்திப், பஞ்சாக்ஷரஞ்சொல்லி, அம்மந்திரத்துடன் சிவசாயுச்சியத்தையருளும் ஏகாதச வுருத்திர மந்திரத்தினால் வாசனைகமழும் திருமஞ்சனநீர் அபிஷேகஞ்செய்து, எ - று. (உ0)

எரிகதிர்ப்படிகம்பொற்பீடமேல்வைத்துவெறுருகவிசினப் பொருந்தி
யருமறையாதிமந்திரமோதியங்குவிராசியிலைமயா
வொருவழியுள்ளநிறுவியஞ்சலிசெய்துறுபவத்தீவினைதொலைய
விருணையநற்பயனுஞ்செல்வமும்வீடுமெமக்கருள்புரிகவென்றுணர்வால்

(இ - புணை.) பரந்தஒளியுள்ள பொன்னிறற் செய்யப்பட்ட ஆசனத் தில் எழுந்தருளப்பண்ணித் தான் வேறொரு ஆசனத்திலிருந்துகொண்டு, கல் லறிவிலேறி அரியவேதத்துக்கு முதலாகிய பிரணவமந்திரஞ்சொல்லி விரசு நாசியினிடத்துவைத்து, மனதை ஒருவழி நிறுத்தி ஆத்மசுத்தினைசெய்து, மிகுந்த பிறவித்துயரந்தீரும்படி இம்மைமறுமையென்னும் இருவகைச்சுக்கியமும் மோக்ஷ மும் எமக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று துதித்து, எ - று. (உக)

குளிர்கலைகழுமியளவில்வெண்டிங்கள்குழுமிவீற்றிருந்தனவெண்ணீ
றொளிர்திருமேனியிளநிலவெறிப்பவுவர்படுகடங்கடற்றோன்றி
வளரிளம்பரிதிகோடியோர்வடிவாய்வாளொளிபரப்புவதேய்ப்ப
வளிமுரல்கடுக்கைபுனைசடாமகுடத்தஞ்சுடர்முதுவெயில்கொழிப்ப.

(இ - புணை.) குளிர்ந்தகலைகளோப்பெற்று ஆளவில்லாத சந்திரர்கள் கூட் டமாய்வீற்றிருப்பதுபோல வெண்ணிறமுள்ள விபூதியானது பிரகாசியாநின்ற திருமேனியினிடத்து இளநிலா வொளியையவீசவும், உவர்க்கடலில் உதயமாகி வளராநின்ற கோடி இளஞ்சூரியர்கள் ஒருவடிவமாகி மிகுந்தபிரகாசத்தைப்

· உமாமகேசுவரபூசைமகிமையுரைத்தது. கூகரு

பரப்புவதை யொப்பாக வண்டுகளிசைபாடிக்கொண்டிருக்கும்படியானகொன்றைமாலையணிந்த சடாமகுடத்தை அழகிய பிரபாசமானது முதிர்ந்தவெயிலைப் பரப்பவும், எ - று. (உஉ)

செங்கதிர்விரிக்குமுடிமிசையொருபாற்சிறுமதிக்கலைநிலாத்தவிழக், கங்கையம்பெயராறறிதிரையொருபாற்கடுக்கையஞ்சிறுதுணர்கொழிப்பக், குங்குமக்குவடுபொருவுதிண்புயத்துக்கூரெயிற்றரவணிமினிர, வங்கைகளபயவரதமோடளமானணிதிகழ்மழுப்படைதனழைய.

(இ - புணை.) செம்மைநிறத்தை விரிக்காநின்ற திருமுடியின் ஒருபுறத்தில் இளம்பிறையின் பிரகாசமானது விரியவும், ஒருபுறத்திற்கங்கையென்னும் பெயருள்ள நதி வீசுகின்ற அலைகள் செழுமையான கொன்றைப்பூங்கொத்தைக் களைக் கொழிக்கவும், குங்குமமலையையொத்த திண்ணியபுயங்களில் கூர்மையான பற்களையுடைய சர்ப்பாபரணங்கள் பிரகாசிக்கவும், அழகிய திருக்காங்கள் கான்கில் ஒன்று அபயமும் ஒன்று வரதமும் மற்றையவிரண்டில் மானும் அழகுடன்பிரகாசிக்கிற மழுப்படையும் விளங்கவும், எ - று. (உக)

அடிகோலுமதனனெரிபடச்சிவந்தவனல்விழிதிருநுதன்முகிழ்ப்பத்
தொடுகடற்றிணைவாய்ப்படுவிடமிடற்றிற்சுடரெறித்திருணிறங்கொழிப்பக்
கொடுவரியதளிலுடைபிணிசிதத்தகோளராமருங்கினிற்றழு
வுடல்சினவுருமிற்பிளிறுமாலியானையுரிவைபொன்மேனியைப்போர்ப்ப.

(இ - புணை.) காமுகனை வருத்துகின்ற மன்மதனை எரித்துபோப் படிச்சிவந்த அக்கினிநேத்திரமானது திருநெற்றியில் முகிழ்த்தவண்ணமாகவிருக்கவும், வளைந்த அலைகடலிலுண்டான விஷமானது திருக்கண்டத்தில் ஒளிவிட்டுக்கொண்டு கருநிறம்பொழியவும், புலித்தோலாடை பிணிப்புறக் கச்சாகக்கட்டிய வலியுள்ளசர்ப்பமானது திருவரையிற் பொருந்தவும், கோபமே யுருவங் கொண்டதுபோன்று இடிபோல ஆரவாரிக்கும் பெரிய யானைத்தோற் போர்வையானது பொன்னிறமுள்ள திருமேனியிற் போர்க்கப்பட்டிருக்கவும், எ-று.
கொடுவரி - புலி. (உச)

தினகரனெரியிலிழுசொளிபரப்புஞ்செஞ்சுடர்ப்பருமணியி
மைக்குங், கனகமாமடங்கற்றவிசின்வீற்றிருக்குங்கருணையங்கடலே
மெய்யடியார், நினைதொறுமின்பந்தருஞ்செழுந்தேனினைமலர்க்கற்
பகக்கனியை, யனகனையாதித்தனிப்பெருஞ்சுடரையமலனினைந்து
பினன்பால்.

(இ - புணை.) சூரியவொளியினும் அதிகமான ஒளியைப்பரப்புகின்ற செஞ்சுடரையுடைய பெரியரத்தினங்கள் பிரகாசிக்கும் பொன்மயமான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அழகியகிருபாசமுத்திரரும் உண்மையடியார்கள் சிந்திக்

குந்தோறும் இன்பம் அருளும் செழுங்கேனையொத்தவரும் மலர்நிறைந்தகற்பக விருக்ஷக்கனிபோல்பவரும், விமலரும் ஒப்பற்ற ஆதியாகிய சோதியானவரும் நிருமலருமானகடவுளை மனநிற்றியாளித்துப் பின்பு அன்பிலை, எ-று. (உரு)

வளைகடற்றிரைவாயிருளறத்துரந்துவருபதிஞாயிரம்பரிதிக்
கிளையொருவடிவுகொண்டெனச்சோதிகிளர்திருமேனிகின்றொளிர
விளையளாயபயவரதமோடன்பரேத்துபாசாங்குசமேந்தித்
தளையவிழ்முளரிச்செங்கைகான்கிலங்கத்தாழ்குழல்புயலீறழிப்ப.

(இ - புணை.) பூமியைச்சூழ்ந்த அலைகளையுடைய சமுத்திரத்தில் இருள் நீக்கும்படித்துரத்தி உதயமாகிறபதினாயிரஞ்சூரியக்கூட்டம் ஒருவடிவங்கொண்டதுபோலச் சோதிவிளக்குந் திருமேனி பிரகாசிக்கவும், பாலையாய் அபய வரதமுடன் அன்பர்கள் துதிசெய்கின்ற பாசாங்குசமேந்திய முறுக்குகள்விரியுந் தாமரைமலர்போன்ற நான்குதிருக்கரங்களும் பிரகாசிக்கவும், தாழ்ந்தஅளகபாரம் மேகத்தின் பெருமையை அழிக்கவும், எ - று. (உக)

துண்டவெண்பிறையுமதியமும்போலச்சோதிவாளுதலொடுவதன
மண்டலங்கவினமல்லிகைமாலைவார்குழற்சூழியக்கழைப்பத்
தண்டளிர்பிண்டிபுன்னைசண்பகப்பூந்தாரிருசெவிப்புறந்தாழக்
குண்டலமலம்பிப்பசுங்கழைத்தோளிற்குருமணிபிளவெயில்கொழிப்ப

(இ - புணை.) துண்டப்பிறைபோன்ற திருநெற்றியும் பூரணசந்திரன் போலத் திருமுகமண்டலமும் அழகைச்செய்யவும்,மல்லிகைப்பூமாலையணிந்த அளகத்திற் சூழியக்கொண்டை விளங்கவும், குளிர்ச்சிபொருந்திய தளிர்களையுடைய அசோகு புன்னை சண்பகம் இவற்றின்மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் இரண்டுகாதுகளின் புறத்தில் தொங்கவும், ரத்தினகுண்டலங்கள் அசையவும், பச்சைமூங்கிலையொத்த தோள்களில் நிறைந்தங்கிய மாணிக்கத்தின் இளவெயிலைப் பரப்பவும், எ . று. (உஎ)

அஞ்சுடரெறிக்குமணிசெய்பொன்னரமலர்மூலையாகத்துமினி
ரச், செஞ்சுடர்விரிக்கும்பொலந்தொடியசெழுங்கழைத்தோளினி
னிலவ, வஞ்சிநுண்மருங்குல்கவினியதோளைவவாமமேகலையொளிர
மழைப்ப, பஞ்சின்மெல்லடியிற்பருமணியிணைக்கும்பரிபுரஞ்சேயொ
ளிபரப்ப,

(இ - புணை.) அழகிய பிரகாசத்தை வீசுகின்ற மணிகள்பதித்த பொன் மாலைகள் அடிபரந்த தனமுள்ளமார்பில் விளங்கவும், ஒளியைவிரிக்கும் பொன்னாலாகிய செழுமையுள்ள ரத்தினங்கள்பதித்த தோளணிகள் பசியமூங்கிலையொத்த தோள்களில் விளங்கவும், பூங்கொடிபோன்ற நுண்ணிய இடையில் அழகியமணிவடமாகிய மேகலாபரணத்தின் ஒளி தழையவும், செம்பஞ்சினும்

மெல்லியவாகிய திருவடிகளில் பெரியரத்தினங்கள்பதித்த நூபுரங்கள்செவ்விய ஒளியைப்பரப்பவும், எ - று. (உஅ)

எரிமணிக்கலாபமிலங்குபட்டாடையெழில்பெறப்புனைந்துசெஞ் சாந்தும், விரைமலர்ச்செய்யதொடையலுமணிந்துமின்னைனப்பொ விந்தபூங்கொம்பை, யரிமதர்மழைக்கட்கருணைநோக்கழியார்க்கருள் செயுமணங்கையாமலையை, வரையரசளித்தபச்சைமாமணியைவன முலையமலையைநினைந்தே. (இ-புனை.) செந்நிறமாணிக்கங்கள் சேர்ந்த அரைப்பட்டிகையை மேலே சேர்த்த பட்டாடையை அழகு பொருந்தத்தரித்துச் செஞ்சந்தனவாசனைதங்கிய பூமாலையுமணிந்து மின்னலைப்போல விளங்கும் பூங்கொம்பை, செவ்வரிபரந்த களிப்புற்ற மேகம்போற் கருமையுள்ள திருநேத்திரங்களினால் கிருபாநோக்கத் தை அடியார்க்கருளும் தேவமாதை, யாமளையை, மலையரையன்பெற்றமரகத மணியை, அழகிய தனங்களையுடைய அமலையைநினைந்து, எ - று. (உக)

உளங்கமலத்தினிம்னணைந்தியானித்துவகைகூர்ந்தகமகிழ்சிறந்து
களித்தபின்பசும்பொன்விம்பமேலன்புகனியவாவாகனம்புரியா
வளித்திடுமுறையாலருக்கியமுதலவளித்தநன்மணங்கொள்சாந்தணிந்து
துளித்தினங்கேதறல்வழிதாடைசூட்டித்துணரிலைருச்சனைபுரிந்தே.

(இ-புனை.) இருதயதாமரையில் இவ்வாறு தியானித்துச்சந்தோஷமிகுந்து மனமகிழ்ச்சிகொண்டு களிப்புற்றபின் பசும்பொன்னுலாகிய விம்பத்தினிடத் தில் அன்புமுதிர ஆவாகனஞ்செய்து, முறைமைப்படி அருக்கிய முதலானவை களைக்கொடுத்து நல்லவாசனையுள்ள சந்தனமணிந்து தேன்துளித்துப் பெருகு கின்ற பூமாலைசாத்தி மலர்களாலருச்சனைசெய்து, எ - று. (உ0)

மூகையிளமுல்லையனையபாலடிசின்முதலவாமுணவினிதளியா
வகமகிழ்வெய்தக்கனிவாய்நூற்றெட்டாகுதிதூநெய்யாற்புரிந்து
புகைகமழ்தூபதீபத்தட்டேந்திப்பொருவினீராஞ்சனமுதவி
கைகமழ்திக்கண்ணியண்ணலோடிணையகன்பினுத்தியாபனஞ்செய்தே.

(இ- புனை.) முல்லையரும்பினையொத்த பாலடிசில் முதலியவைகளை இனிதாக நிவேதனஞ்செய்து, மனமகிழ்ச்சியடைய ஓமாக்கினியினிடத்தில் நல்லநெய்யினால் நூற்றெட்டாகுதிசெய்து, வாசனைப்புகைபரிமளிக்கும் தூபத் தட்டும் தீபத்தட்டுமேந்தி, ஒப்பில்லாத நீராஞ்சனஞ்செய்து, பிரகாசிக்குஞ் சந் திரனை மாலைபோல அணிந்திருக்கும் பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் அன்புடன் உத்தியாபனஞ்செய்து, எ - று. (உக)

மறையவரிறைருவம்மனைவியோடிங்குவருகவென்றழைத்தவர்தம்மை
பிறையணிவேணிபண்ணவலோடிணையப்பெண்ணமுதாகவுட்கருதி

கணைமலர்தூவியறுகுவைபடிசினல்கிவெங்கதிர்படுகாலை
குணைபடுபூசைமுடித்தனல்வேள்விக்கோதிலாச்சேடமாங்கயின்றே.

(இ - பா) ஒருபிராமணனை அவன்மனைவியுடன் வருவித்து அவர்களைச் சந்திரசூடரான பரமசிவனும் பார்வதியுமாகப் பாவனைசெய்து வாசனையுள்ள மலர்களாலருச்சித்தும், அறுசுவையுள்ள அன்னமளித்தும், சூரியாஸ்தமனமாகும்போது குறைவில்லாத பூசனையை நிறைவேற்றிக் குற்றமற்ற யாகசேஷத்தைப் புசித்து, எ - று. (கூ)

வருமதிதோறும்பக்கமோரிரண்டில்வான்றருநம்மிதுகாண்கி
லருமறையெத்துமாகமவிதியாலன்போடுபூசனையியற்றிப்
பருவமொன்றிறந்தபின்னர்காண்மதியும்பைத்துணர்க்கொன்றையமிலந்த
வொருதனிமுதலோடிமயமீன்றெடுத்தவுமையையுட்களிகொளவினைந்தே.

(இ - புனை.) மாதந்தோறும்வருகிற இரண்டுபக்கத்திலும் சிறந்ததாகிய கல்லதிதிகள் காண்கிலும் அரியவேதாகமவிதிப்படி அன்புடன் பூசைசெய்த ஒருவருஷஞ்சென்றபின்பு, இளம்பிறையுங் கொன்றைமாலையுமணிந்த ஒப்பற்றமுதலாகிய பரமசிவனையும் மலையனையன் தவந்திறம்பெற்ற பார்வதிதேவியாரையும் இருதயத்திற்றியானித்து, எ - று. பசுவும் நிதிகளும் (கூ) - வது செய்யுளிற் கூறியுள்ளவைகளை. (கூ)

தூனெறிகாடியுருத்திரசமகமுவன்றெடுத்தேதிவண்டிமிர்பூந்
தேனெறுதீம்பாறெங்கின்முப்புனைடக்காய்த்தெண்புனறியொடுவாச
நானீராட்டிநறியசாத்தணிந்துகாண்மலர்ச்சிறந்தாடைசாத்திப்
போனகம்பாவித்தேதத்தெடுத்திறைஞ்சிப்பூசனைவரன்முறைமுடிந்தே.

(இ - ள்.) வேதாகமவிதிப்படி உருத்திரசமகமந்திரஞ்சொல்லி வண்டுகளிணைசப்பாடிக்கொண்டிருக்கும் கல்லதேதன் மதுரமுள்ளபால் இளநீர் தயிர் வாசனையுள்ள கஸ்தூரிகலந்தநீர் இவைகளால் அபிஷேகஞ்செய்து, நல்லசந்தனமணிந்து தூமாலைசாத்தி அன்னம்நிவேதித்து அதன்பின் ஹோமஞ்செய்து, சாஷ்டாங்கமாகப் பணிந்து இவ்வாறுபூசனையை முடித்து, எ - று. போனகம் - அன்னம்.

தூசெடுமைம்பொன்விம்பமுமிலகுஞ்சுடர்மணிக்கும்படமுமகிழ்ந்து
தேசிகற்கருளிபந்தணர்க்கெல்லாந்தீர்சுவைப்போனகம்வழங்கிக்
காசொடுகனகம்வேண்டுவரல்கிக்காதலாற்றமருடனையின்று
மாசறுவிரதமுடிப்பதாகமத்தின்வரன்முறைமதிறுதலணைந்தே.

(இ - புனை.) பிணைபோன்ற நெற்றியையுடைய மாதே! சாற்றியஆடையாபரணங்களும் பிம்பமும் சோறியையுடையபாத்திரத்தினதுப்பமும் மகிழ்ச்சியுடன் ஆசாரியருக்குக்கொடுத்து, பிராமணஸ்திரீயினையழைத்து, ரத்தினங்கள் சுவர்ணங்கள் இன்னமும் வேண்டியபொருள்களுங்கொடுத்து, ஆசையுடன்

பத்துக்கலோலைவத்துக்கொண்டு போசனஞ்செய்து இவ்வாறு குற்றமற்ற விரதமு
டிப்பது ஆகமவிதியாகும். எ - று. காசுமணி. (௬௫)

இயாவரேயெனினுமிவ்விரதத்தையிற்கவாரியற்றினரவர்த
மூவெழுமுறைறமைத்தமரலாந்தெய்வமுருகுலாங்கற்பகநாட்டின்
மேவரச்சோர்த்திபெல்லியில்காலம்விழுந்தருபோதங்கணுகர்ந்து
பூவலயத்தினினிதுவாழ்ந்ததன்பின்பொருவறுசிவபதமடைவார்.

(இ - புணை.) எவர்களேயாயினும் இந்த உமாமகேசுவரவிரதத்தை மேற் சொல்லிய முறைமைப்படி செய்கின்றவர்கள் தங்களுடைய இருபத்தொருதலை முறையையும் வாசனைவீசுகின்ற கற்பகச்சோலையுள்ள தேவலோகத்திற்போகும் படிசேர்ந்து, அளவில்லாத இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்து. அதற்கு மேல் ஒப்பற்ற சிவபதம் பெறுவார்கள். எ - று. எழுதலைமுறைவனையில் ஞாதிகள், அதற்குமேற்பட்ட எழுதலைமுறைவனையில் சாபிண்டர்கள், அதற்குமேற் பட்டஎழுதலைமுறைவனையில் சமானோதகர்கள், என்று மூக்கூறுபட்டு (௬௪) தலைமுறையாகும். (௬௭)

ஆதலாலணங்கேகீயுநிவ்விரதமகத்தினித்தியற்றுதியென்றுங்
காதலால்விழுந்தபொருளெலாநினக்குக்கடிதினிலடையுமென்றமல
னேதுவாசகங்கேட்டன்னதற்கேதுளமகிழ்காலையிலவடன்
ரூதையுந்தாயுந்தமருப்வந்தின்றித்தவமுனிதாளிணைதாழுதார்.

(இ - புணை.) ஆகையினாலே பெண்ணே! நீயும் இந்தவிரதத்தைமனதிற் சந்தேகமில்லாமல் நாடோறும் அனுஷ்டித்தால், ஆசையுடன் விரும்பியபொரு ள்களெல்லாம் உனக்கு விரைவில் கைகூடுமென்று அம்முனிவர்சொல்லிய சொல்லைக்கேட்டு, அத்தன்மையுள்ள விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று தன்மனதில் நிச்சயித்துக்கொண்டாள். அப்போது அவள்தகப்பனும் தாயும்சுற் றத்தாரும்வந்து அவர்பாதத்தில் வணங்கினார்கள். எ - று. (௬௮)

தொழுதனர்நின்றுதனபினிபவிழ்ந்தருணர்கறும்போதகதிவி
வழிபடுமுறையாலருச்சனைபுரிந்துமாதவனடைந்தனன்றெதிர்கொண்
டெழில்பெறுமணங்குபுரிபணிவிடையுமிருக்கவணீந்தமெய்வரமு
முழுதுமாங்குரைப்பக்கேட்டகமகிழ்ந்துமுனிவனீநோக்கியீதுரைத்தார்.

(இ - புணை.) அவ்வாறு வணங்கிநின்று, அரும்புகளின் முறுக்குகள்விரி ந்த கொத்தாகியமலரால் ஆராதனைசெய்யுமுறைமைப்படி அருச்சித்து, சௌந் தரியமுள்ள தங்கள் பெண்ணைவள் அம்முனிவர்வந்தகாளில் எதிர்கொண்டு செய்தபணிவிடையும் அவர்கொடுத்தருளிய உண்மையானவரமும் வழுவாமற் சொல்லக்கேட்டு மனமகிழ்ந்து முனிவனைப்பார்த்து, இவ்வார்த்தைசொல்லுகி றார்கள். எ - று. நனை-அரும்பு. (௭௰)

எத்தவஞ்செய்தேமித்தலையடிகளெய்துதற்கெங்சணையகனே
யத்தனேநின்னலடியமின்றுய்ந்தேமணங்களுள்கைமைநோய்தீரப்
பத்திவேடிரண்டுதிங்களுமிக்கப்பதியிடையிருந்துபணித்த
மெய்த்தவவிரதமியற்றுவித்தேகல்வேண்டுமென்றடிதாழுதிரந்தார்.

(இ - புணை.) எங்கள் இறையவனே! ஐயனே! சுவாமிகள் இவ்விடத்துக்கு எழுந்தருளும்படி என்னதவஞ்செய்தோமோ? தேவரீரால் அடியேங்களெல்லாம் ஈடேறினேம்; எங்கள்பெண்ணுக்குச்சேரிட்ட கைமைத்தன்மையாகிய பிணிதீர்க்கும்படிப் பன்னிரண்டுமாதமும் இந்தப்பதியிலிருந்துதேவரீர்கட்டளையிட்ட உண்மையான தவவிரதத்தை அனுஷ்டிப்பித்து, அதன்பின்பு போகவேண்டுமென்று அவர்பாதத்தில்வணங்கி இரந்துகேட்டுக்கொண்டார்கள். எ - று.
தலை-இடம். (கக)

அன்னதேபுரிவன்றுயரொழிவீரென்றவரெழுசாலைசென்றடைந்து
பொன்னவிர்கடுக்கைசீவணிவானவள்றன்பூசனைபுரிந்தனணிருப்பத்
தன்னிகரில்லாச்சாரணைதானுந்தவமுனிபாகமவிதியாற்
சொன்னவாறிந்தவிறயர்விரதந்தொடங்கியாங்கியற்றினனன்றே.

(இ - புணை.) அங்ஙனமே செய்வம், நீங்கள் துயரம்நீங்கியிருங்களென்றுசொல்லி, அவரொரு பன்னசாலையிற்போய்ப் பொன்போலும் கொன்றைமாலையணிந்த சடையையுடைய பரமசிவனைப்பூசித்துக்கொண்டிருந்தார், தனக்கு ஒப்பில்லாத சாரணையானவள் தவமுனிவர் ஆகமவிதியாற்சொன்னபடிமகத்துவமுள்ள அந்தவிரதத்தைத்தொடங்கி அனுஷ்டித்தாள். எ - று. (கo)

என்றுமாமுனிவர்க்கின்னணஞ்சூதனியம்பிடுங்காதையைக்கேட்டு
நன்றுநன்றென்னவுவகைகூர்மனத்தார்சாரணைதமடவா
ளொன்றிமேனிழைத்துப்பெற்றவாறெல்லாமுரைத்தருளெனவவளுரைப்பத்
தன்றியதவத்தமடவரல்பெற்றநிற்றனக்கதுக்கனன்சொன்னன்

(இ-புணை.) இவ்வாறு சூதமுனிவர்சொல்லிய உமாமகேசுவரவிரதசரித்திரத்தைக்கேட்ட நைமிசாரணியமுனிவர் இதுமிகவும் நன்மையுள்ளதென்றுசந்தோஷங்கொண்ட மனமுள்ளவர்களாய்ச் சூதமுனிவனைப் பார்த்து, அந்தச்சாரணையானவள் மனமொருமித்து, இவ்விரதத்தை அனுஷ்டித்துப்பெற்றமுறைமையெல்லாம் எங்களுக்குச் சொல்லியருளவேண்டுமென்று அவர்கள்சொல்ல அந்தவிரதத்தை அனுஷ்டித்தவள் பெற்றுக்கொண்டவரம் இன்னதென்று தொகுத்துச்சொன்னர். எ - று. (கக)

பதினெட்டாவது உமாமகேசுவரபூசையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். கoகசு

உ

சிவமயம்.

பத்தொன்பதாவது

உமாமகேசுவராபூசாபலமுரைத்த அத்தியாயம்.

இக்குவாண்முகத்தாள்பன்னிருமதியுமியற்றியவிரதத்தைமுடியா வந்தணர்க்கயினியருத்தியஞ்சுடர்ப்பொன்னருளியன்றருந்திலளாகித் தந்தைதாய்பாதத்துணைமலரிறைஞ்சிச்சதுர்மறைமுனிவன்புகன்ற மந்திரமுணர்ந்தாங்கிருந்தனளந்திமாலிலவந்நிறுத்தபன்னே.

(இ - புணை.) சந்திரனைப்போலும் முகத்தையுடைய சாரதையானவள் பன்னிரண்டுமாதமும் அனுஷ்டித்து அவ்விரதத்தை நிறைவேற்றிப் பிராமணர் களுக்குச் சந்தர்ப்பணையும் அழகிய ஒளியுள்ள சுவர்ணதானமுஞ்செய்து, தான் அன்றுபோசனஞ்செய்யாமல் தாய்தந்தையருடைய இரண்டு திருவடிமலரையும் தொழுது நான்குவேதங்களுமுணர்ந்த முனிவர் உபதேசித்த திருமந்திரத்தைச் செபித்துக்கொண்டிருந்தாள். (அப்படியிருக்கும்போது) அந்நிப்பொழுதவர்

கள்ளவிழ்கடுக்கைவேணிவானவனைக்காதலாற்பூசனைபுரிந்து
கள்ளிருட்கங்குல்விழித்தனளிருந்துகாவிலைலவன்புகழ்ந்விற்றத்
தெள்ளிதிற்பரமசிவாகமமுழுதுந்தெளிந்தகான்மறைமுனிவரனும்
வெள்ளிலெடுவேற்கருங்கண்மாதுமைதன்விளங்கிழைபாடினனுணர்ந்தே.

(இ - புணை.) தேனவிழ மலர்ந்தகொன்றைமாலையணிந்த சடாமகுடமு டைய பரமசிவனை அன்புடன்பூசைசெய்து, இருள்மிகுந்த அன்றிராத்திரிமுழு வதும் நித்திரையின்றிப் பரமசிவனுடைய தோத்திரங்களைச் சொல்லிக்கொண் டிருந்தாள்; சிவாகமமுழுவதையும் தெளிவுடனராய்ந்துணர்ந்த அம்முனிவரும் ஒளியுள்ளதாகிய நீண்டவேல்போன்ற நேத்திரங்களையுடைய பார்வதியாரின்

வேறு.

இன்னகைத்துவர்வாய்க்கிள்ளையியற்றியவிரதத்தாலுந்
தன்னிகரில்லாத்தூயோன்றகைமைசாறவத்தினாலும்
பொன்னவிர்சுணங்குவாய்ந்தபுணர்முலைபொறுக்கலாற்றா
மின்னிடையிமயம்பூத்தவிளங்கிழைவெளிப்பட்டாளே.

(இ - புணை.) இனிய நகையும் பவளமென்னும்அதரமும் கிளிபோலும்வ சனமுமுள்ள சாரதையானவள் அனுவந்டித்தவிரதத்தினாலும், ஒப்பில்லாதமுனி வருடைய மேன்மைதங்கிய தவத்தினாலும், பொற்சுணங்குவாய்ந்த தனங்களும் மின்னல்போலு மிடையினையுமுடைய பார்வதிதேவியார் தரிசனமானார், எ-று.

வெளிவாமறைந்தசெங்கண்விளங்கியமுனியுமுள்ளக்
களியுடையணங்குமன்னீக்கமலத்தாளிறைஞ்சிவீழ
வொளிவிரிபசும்பொற்கொங்கையுமையிருவரையுமாங்க
ணளியினாலெடுத்துநோக்கியமுதனமுகமன்சொன்னான்.

(இ - புணை.) அப்படித் தரிசனமாகியவளவில் பார்வைதெரியப்பெற்ற முனிவரும் மனக்களிப்பினையுடைய சாரதையும் நம்முடைய தாயாகிய பார் வதிதேவியாருடைய திருவடித்தாமரைமலரில் விழுந்துபணிந்தார்கள். அவ் வாறு பணிந்தபோது ,ஒளிமிகுந்த பசும்பொன்னிறம்பொருந்திய தனங்களை யுடைய உமாதேவியார் கிருபையுடன் அவ்விருவரையும் அன்பினாலெடுத்து அமிர்தமூட்டுவதுபோல உபசாரவார்த்தைசொல்லி, எ - று. (சு)

கற்றுணர்முனியேகன்னிக்கற்புடையணங்கேகநம்பாற்
பெற்றனமகிழ்ச்சியாரும்பெறலரும்வாங்களென்ன
சொற்றதுர்தருவரீவிர்சொல்லுமினென்றுகூற
கற்றவக்கிழவன்கேளாகயந்திதுபுகல்வதானான்.

(இ - புணை.) வேதமுதலான சாஸ்திரங்கள் ஓதியுணர்ந்தமுனிவனே! அழிவில்லாத பதிவிரதா தருமமுடையமாதே! உங்களிடத்தில் நாம்மகிழ்ச்சி யடைந்தோம், எவ்விதவரங்கள் வேண்டுமென்றாலுந் தருகிறோம், நீங்கள்சொ ல்லுங்களென்று பார்வதிதேவியார் மொழிந்தருள; முனிவர், அந்தத்திருவாக் கினைக்கேட்டுவிருப்பத்துடன் இந்தவார்த்தைசொல்லுவார். எ - று. (ரு)

கண்மணியிழந்தேன்மங்கைகயினியாயிருத்தல்காணே
னுண்மனியுவகையாலேயுறுதுணையிழந்தாடன்னை
வெண்மதிநுதலாய்காமம்வெறுக்குநாள்காறுநின்கேள்
வண்மலராகந்தோய்ந்துவாய்திபென்றுசிசொற்றேன்.

(இ - புணை.) அடியேன் அந்தகனையிருந்தநிலை இந்தமாது கையம்பெண் ணையிருப்பது தெரியாமல் அடியேனுக்குச்செய்த உபசாரத்தினால் மகிழ்ந்து கணவனையிழந்திருக்கும் இவளைநோக்கி,வெண்மைநிறந்தங்கிய இளம்பிறைபோ லிருக்கும் நெற்றியையுடையவளே! நீ காமத்தைவெறுக்கும் நாளளவும்உன்கண வனுடைய அழகுபொருந்திய மாலையணிந்தமார்பில் தோய்ந்துவாழ்ந்துகொண் டிருக்கக்கடனைவையென்று ஆசீர்வாதஞ்சொன்னேன். எ - று. (சு)

பூசுரர்குலத்திற்றோன்றும்பொலன்கொடிக்கடியன்சொன்ன
வாசியின்பயன்குன்றுமலருள்கவென்றிறைஞ்சியேத்தி
வாசநாண்மலரோனன்னமறைமுனிபகரலோடும்
பாசிழைப்பதிணமென்கொங்கைப்பனிவனைமாதுசொன்னாள்.

(இ - புனை.) பிராமணகுலத்திற்றோன்றிய பொற்கொடிபோன்ற இம்மாதுக்கு அடியேன்சொல்லிய ஆசீர்வாதத்தின்பலன்கெடாதவண்ணம்அருள்செய்யவேண்டுமென்று பணிந்து துதித்து, வாசனைபொருந்திய தாமரைப்பூவிலிருக்கும் பிரமனையொத்தமுனிவர் விண்ணப்பம்பண்ணினவளவில்,பொன்னுலாகிய ஆபரணமணிந்த பருத்ததனங்களையுடைய இமையபுத்திரியாகிய பார்வதிதேவியார் சொல்லுகின்றார். எ - று. (எ)

சிங்கைதசால்புடையதோன்மைச்செய்தவக்கிழமையோனே
மூன்றைதகற்பிறப்பிலிந்தமொய்குழறமிழ்நன்னாட்டோ
ரந்தணன்முன்னர்வேட்டவணங்கின்பின்மணஞ்செய்காதற்
பைங்கிதாடிபண்டைநாமம்பத்மினியென்பதாமே.

(இ - புனை.) மனதில் தாய்மையுள்ளவிரதத்தையுடைய முனிவனே! முற்பிறப்பில் இத்தச்சாரதையென்பவளை தமிழ்நாட்டில் ஒருபிராமணன் விவாகஞ்செய்துகொண்ட மூத்தமனைவியிருக்கவும் இரண்டாவதாக விவாகஞ் செய்துகொண்டான்; அப்பிறப்பி லிவளுக்குப் பத்மினியென்றுபெயர். எ-று.

வேறு.

மாந்தளிர்மேனிவனப்பிறற்பிணியுமருந்துமாமதர்விழிநோக்காற்
சாந்திளமுலையுமகலமுமொன்றுய்த்தழுவுறக்கனியுநன்னலத்தாற்
காந்தளஞ்செங்கைபற்றியகாலமுதலவாய்க்காதலன்றன்னைத்
தேந்துவளிபிலிற்றுமலர்க்குழலிவடன்செயல்வழிநடப்பமேதபணித்தாள்

(இ - புனை.) மாந்தளிர்போன்ற மேனியின் அழகினாலும்,நோயும் அதற்கு அவுஷதமும்போலிருக்கும் களிப்புள்ள கண்பார்வையினாலும், சந்தனமணிந்த இளமுலையு மார்பமுமொன்றுய்த் தழுவிக்கொள்ள முதிர்ந்த இன்பத்தினாலும், காந்தள்மலர்போன்றதன்செங்கைபற்றியகாள்முதலாகக்கணவனைமயக்கித்தன் சொற்படி நடந்துவரச்செய்தனள். எ - று. மதர்விழி மருந்தும் பிணியுமாதல்-ஊடலிற்பிணங்கியபோது அக்கட்பார்வை நாயகனுக்கு நோய்தருதலாலும், கூடியபோது அப்பார்வை இன்பம்விளைத்தலாலும் என்க. இக்கருத்தன்றே மணிவாசகவள்ளலாரும் திருக்கோவையில்"பிணியுமதற்குமருந்தும்பிறழப் பிறழுமின்னும்-பணியும் புனைமருங்கிற் பெருந்தோளி படைக்கண்களே." என்றார். (ஈ)

பிரமோத்தரகாண்டம்.

தவளமுத்தாலுந்தாமமுந்தாழ்ந்தடம்புயக்கொழுந்துங்காத, லிவ
ளிளமுலையின்போகமேதுகர்ந்தாங்கின்பமான்கடலிடையாழுத், துவரு
துண்மருங்குற்குழுதகவாயழுதத் துணைவிதன்கொண்கனைப்பெறுது,
குவளைவாய்கருங்கண்மைத்துளிபிறிற்றக் கொடுத்துயர்க்கடலிடையா
ழ்ந்தாள்.

(இ - புணை.) வெண்ணிறமுள்ள முத்தாலும் பூமாலையும் பொருந்திய பொரிய புசத்தையுடைய கணவனும் ஆசையிலுலிவளிடத்திலேயே போகம் அனுபவித்துக்கொண்டு இன்பக்கடலிற் படிந்திருப்பதினால், துவளுகின்ற மெல்லிய இடையும் செவ்வல்லி மலர்போன்றவாயுமுள்ள மூத்தமனைவியானவள் தன்கணவனுடன் சேருதற்கில்லாமல் நீலோற்பலமலர்போன்ற தன்கண்கள் நீர்சிந்தும்படித்துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தாள். எ - று. (கo)

தனித்துணையலதுதன்றுணைபுணராத்தண்ணறுந்தாய்மலர்ச்சு
ழலா, ணனிதுயருழந்துபுதல்வனைப்பெறுளாய்நன்னலந்தொலிதா
றுமிரங்கி, யினியுயிர்படலாறைகொண்டாற்றலென்விணையெனிம்மையு
மறுமையுமிழந்தேன், புனிதனேயென்றுபுலம்புகொண்டிறந்துபொ
ன்னுலகடைந்தனளன்றே.

(இ புணை.) தனிமையென்னும் துணையேயல்லது தன்துணையாகிய கண
வனையறியாத குளிர்ச்சியும் வாசனையுமுள்ள கல்லமலாணிந்த முளகத்தை
யுடைய மூத்தாள் மிகவும் துக்கங்கொண்டு புத்திரர்களையும் பெறுமல் இள
மைப்பருவம் காலுக்குநாள் நீங்குந்தோறும் இரங்கி, இனி யிவ்வுடலை வைத்
துக்கொண்டிதோன் வினையேனுகிய நான் இவ்வுலகத்தின்பத்தையும் புத்திரனில்
லாமையால் சுவர்க்கலோக இன்பத்தையும் இழந்தேன், பரமசிவனே என்று
புலம்பிக்கொண்டிருந்து இறந்து பொன்னுலகமடைந்தாள். எ - று. (கக)

வேறு.

இவ்வண்ணநிகழ்காலத்தயலிடத்தோரில்லுறையுமந்தணனின்
செவ்வண்ணத்துவர்வாயுமவனபுலையுடவருந்தநிறைதேய்ந்துதேய்ந்து
மைவ்வண்ணக்கொடுங்காமவனைகமிகலுமிவண்மலர்க்கைவலிதிற்பற்றக்
கைவ்வண்ணக்காவிகந்தான்கற்பிகவாதன்றிண்கைகடந்துபோனள்.

(இ - புணை.) இவ்வாறு நிகழுங்காலத்தில் அயல்வீட்டிலிருக்கும்ஒருபிரா
மணன் இவளுடையசெம்மைநிறந்தங்கிய பவளம்போன்றவாயும்அழகியமுகமும்
தன்னைவருத்தநிறையழிந்து மெலிந்துமெலிந்து, இருண்மயமாகியகாமமதிகரி
த்து இவள்கையை வலிதிற்பற்றினன். அவ்வாறுபற்றவே, தன்னைக்காப்பவர்
களையிழந்திருப்பவள் தன்கற்பினிலையையிழவாமல் அந்தப்பிராமணன்கையை
நீக்கிக்கொண்டு போய்விட்டாள். எ - று. (அஉ)

அங்ஙிலேயேகளவொழுக்கமனக்கொள்ளாள்வெறுத்தகன்றவயலா
ன்கற்பிற், பண்ணியிளமுலேகிடந்தவெம்காரவாலறிவழித்தணையுளுற்
றேறன், கன்னலுகிலேகுழைத்துவேனிலானமராடுங்கணைகளாகஞ்,
சின்னபின்னஞ் செயக்காமனிடந்தலேக்கொண்டகல்வானஞ் சேர்ந்தா
னன்றே.

(இ - புணர்.) அவ்வாறு சோரப்புணர்ச்சிக்குச் சம்மதியாமல் வெறுத்துப்
போய்விட்ட அன்னியனுடைய மனைவியினிடத்திருந்த அவாவினல் அறிவிழந்து
தன்பமடைந்து, மன்மதன் கரும்புவில்லேவளைத்துப் போர்செய்யுங்கணைகள்
தன்னுடைய சரீரத்தைச் சின்னபின்னஞ்செய்வதினல் காமமாகிய விஷந்
றைந்துபோனன். எ - று. வெஃகாவு-விருப்பம். (கஈ)

கற்பினிலேகடவாதநிறையிருந்தும்பொறையிருந்துங்கமழ்தார்மூ
ட்டி. முற்படத்தன்கேண்மணந்தமுற்றிழையைபொருளான்றுமுய
ங்கவொட்டாள், பொற்புடைத்தன்புணர்முலேயின்புதுகலீமறுகரும்
வண்ணம்புரிதலாலே, யிற்பழியில்லாவிவளுமினமையிலேனமையும்

-புணர்.) கற்புத்தன்மைகடவாதநிலேமையிவளிடத்திருந்தும் பொறுமை
யிருந்தும் தனக்குமுன் தன்கணவனுக்கு மாலேசூட்டியவள் ஒருநாளாவதுகண
வனுடன் இன்பமனுபவிக்க வொட்டாதவளாய் அழகுள்ளதன்கொங்கையின்
பத்தையே அனுபவிக்கும்படிச்செய்தலினலே, பதிவிரதாதர்மத்துக்குப் பழிசே
ரிடாமற் காத்துக்கொண்ட இவளும் கைம்பெண்ணுகியிருந்தாள். எ-று. (கச)

வளமலிசீர்மகளிரொடுமகிணிளகலநுகராவண்ணமாற்றி
யுளமலியுமனக்களியாற்றமதுவழியேயெழுகவுடல்கூருந்
தளவுகைக்கயல்விழியார்தமைக்காமவிடாய்கனற்றத்தளர்ந்துமாழ்கி
யிளமையிலேனான்குபவங்கயினியாயளவிறுன்பமெய்துவாரோ.

(இ - புணர்.) வளமையுஞ் சிருமுள்ள மனைவியருடன் கணவன் இன்பம்
அனுபவியாதவண்ணமாற்றி உள்ளத்திற்பொருந்திய களிப்புடன் தங்கள்சொற்
படிநடக்கும்படி ஊடலேகொள்ளுகின்ற முல்லேயரும்பினேயொத்தநகையினேயும்
தேல்மீனேயொத்த கண்ணுனேயுமுடையமாதர்கள், மறுபிறப்பில் தங்களேக்காம
விடாயானது வருத்தச்சோர்ந்து துயரமுற்று இளமையிலேனுனே கான்கு
பிறப்புவரைக்கும் கைம்பெண்ணுகி அளவில்லாத துன்பத்தைப் பொருந்துவார்
கள். எ - று. (கடு)

அறந்தழைபுந்தூயமனத்தருந்தவனேயருந்தகிகற்பினேயகற்பரந்
திறந்தமலர்க்குழலிவடன்சிந்தைகளிகூர்ந்தருமந்தங்கொள்போதா,

றந்தபவத்தினையருச்சித்தேத்துதலா லெழுபிறப்புமீட்டும்பாவம்
றந்தவிந்தப்படலத்திலொளிர் சுடர்த்துதக்குமிருள்போலப் பெயர்த்த
றே.

(இ - புணை.) தருமமே குடிகொண்டிருக்கும் நல்ல மனைதயுடைய
னிவனே! அருந்ததியின் கற்பினையொத்த கற்பினால் மேன்மைபெற்ற இவள்
ன்னைனிப்படைத்து, நல்ல மலர்களால் முற்பிறப்பில் என்னை அருச்சித்தத்
தித்தமையினால் எழுபிறப்பிலுள் செய்தபாவமெல்லாம் பிறந்துள்ள இந்தப்
றப்பிலேதானே சூரியனால் நீக்கப்பட்ட இருள்போல நீங்கிவிட்டது. எ-று.

ரமலர்ப்பூங்குழலேயென்றிரந்துகரம்பற்றியிரங்குகென்ன
வார்வமுற்றுநலனுகாத்தியான்முற்பவத்திறந்தவந்தனைளன்

வார்முலைதனைகமுறப்புணராமலாவொறுக்கமாய்ந்தானந்தோ.

(இ - புணை.) குளிர்ச்சிபொருந்திய பூமாலையணிந்த அனகத்தையுடைய
வளே! இந்த வேளை உன்மனமிரங்கவேண்டுமென்று இவள் கையைப்பற்
றிக்கொண்டு இரந்து யாசித்தும் இன்பம் அனுபவியாத தயாத்தினால்
முற்பிறப்பிலிறந்துபோன பிராமணன் நீங்காத ஒருதலைக்காமமானது கூட்டு
விக்க இந்தப்பிறப்பில் விவாகஞ்செய்துகொண்டு இவள்கையைப்பற்றியும் கச்
சணிந்த இவள் தனங்கள் தன்மார்பிற் பொருந்தும்படிப் புணர்வதற்கில்லாமற்
பாம்புகடிக்க இறந்துபோனான். எ - று. ஒருதலைக்காமம் - தலைவன் தலைவி
என்பாரில் ஒரிடத்துமாத்திரம் உண்டான காமவிச்சை. (கஎ)

கேள்வன், சிறந்தசங்கத்தமிழ்கொழிக்குந்தென்கூடற்றென்னர்பிரான்
கன்னிநாட்டிற், பிறந்துதொழுகுலத்தவர்க்கோர்நிலகமாயளவில்செல்
வம்பெற்றுமற்றோர், சிறந்தழைசீரணங்கைமணம்புணர்ந்துபுதுநலமாந்
தியமர்கின்றானே.

(இ - புணை.) இப்போது இறந்தவன் இவள் கணவனல்லன், முற்பிறப்
பில் இவனைக் கூடியகணவன் சிறப்புதங்கிய சங்கத்தமிழ் விளங்கும் மதுரைத்
தலத்தில் அரசுசெய்துகொண்டிருக்கும் பாண்டியனுடைய காட்டிற்பிறந்து,
பிராமணகுலத்துக்கு ஒருநிலகம்போல அளவில்லாத செல்வம்பெற்று இல்ல
றம் வழுவாமல் நடத்தும் ஒருகன்னிகையை விவாகஞ்செய்து, இன்பம் அனு
பவித்துக்கொண்டிருக்கிறான். எ - று. (கஏ)

அனையவன்பொற்றடமார்புமலர்முலைதாகமும்பொருந்தியமுத்தக்கூடிப்
புனைமணிமின்பகுந்தாதுபொதுளுநறும்பூவணையின்புறத்துமேவிக்

கனவுதொறுமிவள்காமக்கனிநுகர்வாளாகவந்தக்கனவிற்கூட்ட
னவிலுறுபுணர்ச்சியிலுமளவிறந்தன்னலமேலங்குமன்றே.

(இ - புணை.) அவனுடைய பெரியமார்பும் இவளுடைய பரந்தனங்க ளும் பொருந்தி யழுந்தத்தக்கதாகக்கூடிப் பூந்தாதுகள் நிறைந்தவாசனையுள்ள மலரணையினிடத்திற் பொருந்திச் சொப்பனவுலகத்தைதோறும் இவள் காமஇன்ப மாகிய பழத்தை உண்ணக்கடவள். அந்தக்கனவிற் கூடுதல் சாக்கிராவஸ்தையில் புணரும் புணர்ச்சியினும் அதிகமான நல்ல இன்பத்தைக் கொடுக்கும். எ - று.

அளவுறுகாவதமூர்நூற்றறுபதிற்கப்பாலதாமகழ்சூழிஞ்சி
வளகுகரினினிதிருக்குமகிணலுந்தன்முன்னவினைவயத்தினுலே
தளவநகைப்புளகமுலைத்தாழ்குழலிப்பொலங்கொடியைக்கங்குறூறு
முளமலியுங்காதலொடுகனவிற்றேய்ந்தும்பர்செல்வமுறுவன்மன்னே.

(இ - புணை.) அளவுபட்ட மூர்நூற்றறுபது காதத்துக்கு அப்பாலிருக்கும் அகழிசூழ்ந்த மதிலையுடைய வளகுகரில் இன்பமுடன் வாழ்ந்துகொண்டிருக் கும் இவள்கணவனும் முன்னை ஊழ்வினைவசத்தினுலே மூல்லையரும்பை யொத்த நகையினையும் புளகம்பொருந்திய தனங்களையும் தாழ்ந்தஅளகத்தையு முடைய பொற்கொம்பு போல்வாளாகிய இவளை இரவுதோறும் சொப்பனவுல கத்தையில் ஆசையுடன்புணர்ந்து சுவர்க்கபோகத்தைப்போன்ற இன்பத்தை அடைவான். எ - று. (20)

இன்னணமுட்களிபெருகவிளநலந்துய்த்தினிதிருக்குநாளிலிந்தப், பொன்னுலையிற்பொலிசுணங்கின்வளமுலையா ளொருபுதல்வற்பெறு வாளாகக், கன்னவிலோட்கணவனுந்தன்சிறுவினைநன்கனவுதோறுங் காண்கவென்னுத், தன்னிகரில்லாமுனிவற்குரைத்தமையான்மாதி னெடுசாற்றுகின்றுள்.

(இ - புணை.) இவ்வாறு உள்ளத்திற் களிப்புண்டாகி அதிகரிக்கத்தக்க தாக இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்குநாளில் பொன்னுலைபோல விளங்குந் தேமல்பரந்த அழகிய தனங்களுள்ள இவள் ஒருபுத்திரனைப் பெறு வான், மலைக்கொப்பாகச் சொல்லத்தக்க புசங்களையுடைய இவள் கணவனும் தன் புத்திரனைச் சொப்பனந்தோறுங் காண்பானென்று தனக்கு ஒப்பில்லாத முனிவனுக்குச் சொல்லிச் சாரதையைப்பார்த்துப் பார்வதிதேவியார் சொல்லு கின்றார். எ - று. (21)

குனிமதிவாணுதற்பசியகுவளைவிழிச்சாரதையேகாதைகூட்டிப் புனைகலனின்பொறையணிந்து முற்பவத்தன்புணர் முலைமேற்புணர்ந்

தோன்றன்னினைப், பனிமதியின்கிளையெனத்தண்பணிலங்கடவுழுமொரு பழனஞாட்டிற், கனவினிற்கன்டறிகுறியானனவிலுங்கண்கண்டுமனங்களிப்பையுமாதோ.

(இ - புனை) வினைந்த பிறையையொத்த ஒளிதங்கிய நெற்றியினையும் பசுமைதங்கிய நீலோற்பலம்போன்ற கண்களையுமுடைய சாரதையே! முற்பிறப்பில் மணமாலை சூட்டித் திருமங்கலியந்தரித்து உன்னைச் சேர்ந்திருந்தவனைக் குளிர்ச்சியுள்ள சந்திரக்கூட்டம் போலச் சங்குகள் தவழும் வயல்கள் சூழ்ந்த ஒப்பற்ற வளநாட்டிற் சொப்பனத்திற் கண்டறிந்த குறிப்பின்படிச் சாக்கிரத்திலும் கண்ணிற்கண்டு மனஞ்சந்தோஷிப்பை. எ - று. (உஉ)

கணவனுநின்னெனதுசனனிற்புணர்குறியானனவிலெதிர்காணுமுன்னர், துணையெனத்தெளிவனவ்வாறறிந்தொருவர்க்கொருவர்பண்டைத்தொடர்புபெற்றுற், புனைதனதுமதியாகக்கலைக்கடலைக்கரைகண்டபுதல்வனேடை, யிணையில்விரதபபயனிறசமபாகங்கணவனிடத்திகமன்னை.

(இ - புனை.) கணவனும் உன்னுடன்சொப்பனத்திற் புணர்ந்திருக்கும், குறிப்பினல் எதிர்காண்பதற்குமுன் மனைவியென்று உன்னையறிந்து கொள்வன், அவ்வாறு அறிந்து ஒருவர்க்கொருவர் முற்பிறப்பின் சம்பந்தத்தைப்பெற்றுல், தன்புத்தியே தெப்பமாகச் சாஸ்திரமென்னுஞ் சமுத்திரத்தைக்கடக்கும் புத்திரனுடன் ஒப்பில்லாத உன்விரதபலத்தில் கணவனுக்குச் சமபாகங்கொடுப்பாயாக, எ - று. (உக)

நின்விரதப்பயனேற்றகொழுநன்வசமாகியிருநிலத்தினீடும்
பொன்மனைவாய்கனவுதோறும்புணராதகனவினின்பம்புணர்ந்துகாமத்
தின்மதுவுண்டுளந்திகவிட்டுநாளிதுயிர்க்கேளிறப்பனிறந்தானென்ற
பின்முறையாலெரிமூழ்கியிருவீருமெமதுபதம்பெறுவீரன்றே.

(இ - புனை.) உன் விரதப்பயனைப் பெற்றுக்கொண்ட கணவன் வசமாகி இவ்வுலகத்தில் மிகுந்தபொன்மயமான வீட்டிற் சாக்கிராவவஸ்தைகள் தோறும் புணராமன் கனவுதோறும் புணர்ந்து இன்பம் அனுபவித்து, மனவெறுப்புண்டாகுங் காலத்தில் உன்னுயிர்போன்ற அந்தக்கணவனிறந்துவிடுவன்; அவ்வாறு அவனிறந்தபின்பு கிரமப்படி அக்கினிப்பிரவேசமாய் கணவனுடன் சமமுடைய பதவியைச்சேரக்கடவை. எ - று. (உச)

வேறு.

எனவுரைத்தெழுதாமறைபுராதனனூலியாவையுமுணர்ந்துளந்தெளிந்த
தனையகையின்னெனபெறுதிகீள்செல்வந்தழுந்தினிவாழ்திமற்றென்னு
வனமுலைமடந்தைதமனைங்கணிறப்பவரங்கொடுத்தாயிழையவளு
மூனிவனுங்காணவியமயமீன்றெடுத்தமுகிணைகையிலையையடைந்தான்.

(இ - புனை.) இவ்வாறு அம்பிகையார் அனுக்கிரகஞ்செய்து எழுதப்படாத வேதமுதலிய பழமையான சாஸ்திரங்களையெல்லாம் உணர்ந்திருக்கும் புத்திரனை இப்பொழுதே பெறுவை,மத்தியிலழியாத செல்வந்தழைய நீ வாழக் கடவை, என்று அழகிய தனங்களையுடைய சாரதையின் மனமானது சந்தோஷத்திலை சிறப்படையத்தக்கதாக வரங்களைப்பாலித்து, அப்பொழுதே அப் பெண்ணும் முனிவனுங்காணக் கயிலைக்கு எழுந்தருளினர். எ - று. (உரு)

வளர்மதிக்கண்ணியண்ணல்பாகத்துமாதுமைவரங்காப்பெற்ற
தளிரியன்மகிழ்ச்சிகூர்ந்தருந்தவன்பொற்றுளருச்சனைபுரிகாலை
முளரிகாண்மலரினனைதலையவிழ்ந்துமுருகுகொப்பளித்திடச்செங்கே
ழொளிர்கதிர்விரிக்குப்பரிதியஞ்செல்வனுதயமால்வரைமிசையுதித்தான்

(இ - புனை.) வளைந்தபிறைக்கண்ணியணிந்த பரமேசுவர னிடப்பாகத்தில் வீற்றிருக்கும் பரமேசுவரி வாங்கொடுத்தருளப்பெற்றுக்கொண்ட சாரதை மகிழ்ச்சியடைந்து, அம்முனிவனுடைய பாதங்களில் அருச்சனைசெய்யும் போது, தாமரைகளினரும்பு இதழ்விரிந்து தேன்சொரியும்படிச் செம்மைநிறந் தங்கிய ஒளிபொருந்திய கிரணங்களைப்பரப்பும் சூரியதேவன் உதயகிரியில் தோன்றினான். எ - று. (உசு)

காறபூங்கோதைதமாதுமையோருளர்மதிவேணியன்மகிழ
வீறுயர்விரதமியற்றியதிறத்தால்விளைபயனேதிலரறியா
தாறறிமுனிவனன்னவட்பயந்தவத்தனுமன்னையுமறியக்
கூறினன்கூறியாயிடையகன்றோர்குளிர்புனலுட்டகமடைந்தான்.

(இ - புனை.) வாசனை கமழும் பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய உமையம்மையும் குளிர்ச்சியுள்ள பிறைசூடிய சடையையுடைய சாம்பவமூர்த்தியும் மகிழ்ந்தருளும்படிப் பெருமைதங்கிய உமாமகேசுவரவிரதம் அனுஷ்டித்த தன்மையினால், மேலுண்டாகும்பலனை அன்னியரறியாதவண்ணம் சாரதையின் தாயுந் தந்தையும் அறியும்படி முனிவர்சொல்லினர். அவ்வாறு சொல்லி அவ்விடம் விட்டுக் குளிர்ச்சியுள்ள நீர்வளந்தங்கிய வேறொருநாட்டிற்போய்விட்டார். எ - று. (உஎ)

முனிவரனகலவிதிமுறைறகோற்றமொய்குழல்கங்குல்வாய்தோறு
நனையவிழ்தெழுந்தார்க்கேள்வனுந்தானுநலனுகர்ந்தின்புறுநாளிற்
பனிவரையீன்றகொவ்வையஞ்செவ்வாய்ப்பசுங்கிளியனித்தல்வரத்தாற்
கனவுறுகலவிநலத்தினுமவளுட்களித்திடக்கருப்பமோர்ந்ததுவே.

(இ-புனை.) அந்தமுனிவர் எழுந்தருளிய பின்பு விதிப்படி விரதம்அனுஷ்டித்தசாரதையானவள் இராத்திரிதோறும் சொப்பனவஸ்தையில் தனதுடன்மல

ர்ந்திருக்கும் செழுமையுள்ள பூமாலேயணிந்த கணவனுந்தானும் இன்பம் அனுப விக்கக் கொண்டிருக்கும் காளிஸ், மலேயரையன்பெற்ற கோவைக்கனிபோன்ற சிவந்த திருவாயையுடைய பசுங்கிளிமொழியொத்த மொழியையுடையவரா னிய பார்வதிதேவியார் அருளிச்செய்த வரப்பிரசாதத்திஞல் சொப்பனத்திற் கூடுங் கலவியின்பத்திலும் அவன் மனங்களிப்படையும்படிக் கருப்பமுண்டாகி யது. எ - று. (உஅ)

கருவளர்ந்திடலான்மாந்தளிர்மேனிகலமதியுருவெணவிளர்ப்பச்
சுரிகுழலணங்குசூனிறம்பெறலுந்துணிவிலாராக்கதைகண்டார்
திருகலனிகழ்ந்தாள்கற்புமிற்பிறப்புந்திறம்பினளெனப்பழிகூறி
யாவுழுன்கதுவவிறந்தகேடமர்கேட்டதிசயித்தகம்புழுங்கினரே.

(இ - புணர்.) அந்தக்கருவளர்தலிஞல் மாந்தளிர்போன்ற மேனியானது சோடசகலைகளுள்ள சந்திரவடிவம்போல வெண்மை நிறம் அடையும்படிச் சார தை கருப்பக் குறிபொருந்தவும், இதனுண்மை தெரியாதவர்கள் அதைக்கண்டு கைம்பெண்ணுகிய சாரதையானவள் பதிவிரதத்தன்மையையும் குடிப்பிறப்பை யும் இழந்து விட்டாளென்று பழிசொல்ல; அதனைப் பாம்புகடித்திறந்துபோன இவள் புருடனுடைய பந்துகள் கேள்விப்பட்டு அதிசயித்து மனம்புழுங்கினர் கள். எ - று. (உக)

வேறு.

அலர்மொழிபொறுதுகாணியடிசினந்துரப்பக்கற்பின்
குலமகடாதையில்லிற்குழுமினர்குறுகியாங்கே
புலமைசால்குணத்தின்மிக்கபூசுரரைவழுன்மாய்ந்தோன்
றலைவியைவருகவென்றுரன்னவடாதுஞ்சார்ந்தாள்.

(இ - புணர்.) தங்களுக்கு நேரிட்டிருக்கிற பழிமொழியைச் சகிக்கமாட் டாமல் வெட்கமடைந்து கொடியதாகிய கோபம் அதிகரித்ததனுல் சாரதை யின்தந்தைவீட்டிற்குவந்து அவ்விடத்திலிருக்கும் வேதசாஸ்திரமுணர்ந்த பிரா மணச்சபையில்சாரதையை அழைப்பித்தார்கள், அவளும்அங்குவந்தாள். எ-று.

அலர்மொழி - பழிமொழி. அம்பல் என்பதும் இது. (ஈ0)

நிலங்கிளைத்தயர்ந்துகாணிநீள்குழற்றலைகீழிட்டோ
நிலங்கொளிமின்னினின்றுளைழினலன்யாவுநோக்கிக்
குலங்கெடவழுவுண்டாக்குங்கொடியவளிலளாமென்றே
யலங்கலந்தண்டாரர்மார்பத்தந்தணாம்பல்சொன்னூர்.

(இ - புணர்.) பூமியைக் காற்பெருவிரலாற் கிளைத்து மனச்சோர்வுடன் காணுமுங்கொண்டு நீண்டகுழலையுடைய சிறுமனவஞ்சத்துப் பூமியைப்பார்த்த

படி ஒப்பற்ற ஒளியுள்ள மின்னலைப்போல நிற்பவளுடைய சரீரத்தின் அழகினை யெல்லாம்பார்த்து, இவள் குலங்கெடும்படிக் குற்றத்தை யுண்டாக்குங்கொடிய வென்று பூமாலையணிந்திருக்கு மார்பினையுடைய பிராமணர்கள் பழிமொழி சொன்னார்கள். எ - று. (கூக)

வாழ்க்கலைதவறுசெய்தமதியிலியென்றுசொல்வார்
தாழிருங்குழலேயீதுதகாதுங்கண்மரபுக்கென்பார்
கீழிலையாயுமீதுகீழ்மையேபுரிந்தாயென்பா
ரேழைநீநிறையினீங்கியென்செய்தாயிதனையென்பார்.

(இ - புணை.) குலத்துக்குப் பழுதுண்டாக்கிய புத்திகெட்டவளே! இனி நீ உயிருடன் வாழ்வதில்லையென்று சிலர்சொல்வார்கள், தாழ்ந்தகூந்தலையுடை யாளே! இந்தக்காரியம் உங்கள்குலத்துக்குத்தகாதென்று சிலர்சொல்லுவார்கள், நீ உயர்ந்தசாதியிற் பிறந்தவளாயிருந்தும் இழிவானகாரியத்தைச் செய்தனை யென்று சிலர்சொல்லுவார்கள், மதிகெட்டவளே! பதிவிரதாதன்மம் விட்டு என்னடி இப்படிச்செய்தாயென்று சிலர் சொல்லுவார்கள். எ - று. (கூஉ)

என்றவரொறுக்குங்காலையிருணமேதர்சான்ரோரெண்ணித்
தொன்றுசால்புடையகற்பின்ரோழுகுலங்கெடச்செய்தாளை
மன்றலங்குழலுமூக்கும்வள்ளைவார்காதுமின்னே
யொன்றறக்கொய்துபோக்கியூர்க்கயல்கடிகவென்றார்.

(இ - புணை.) இவ்வாறு அந்தச்சபையிலிருந்தவர்கள் தூஷித்துப்பேசும் போது, இம்மை மறுமைகளையுணர்ந்த பெரியோர்களா யிருப்பவர்கள் ஆலோ சித்துப் பழமையாகவருகின்ற கற்புநிலையையுடைய பிராமணக்குலத்துக்குக் கெடுதியுண்டாச்செய்தவளைத் தலைமயிரையும் மூக்கையும் காதுகளையும் விடா மல் இப்போதே அறுத்தெறிந்து ஊருக்கயலில் தூரத்திவிடுங்களென்று சொன்னார்கள். எ - று. (கூங)

கேட்டவைபுரிதுமென்னைக்கிளர்ந்தெழுசினத்தாகி
யூட்டரக்கனையகண்ணார்கதுமெனவுருத்துச்சீறிச்
சேட்டிளம்பிடியையுற்றுஞ்சிங்கமேவெறன்னச்சூழ்ந்து
மோட்டிளமுலையினாளமுருக்குவான்குறுகுங்காலை.

(இ - புணை.) அவர்கள் சொன்னதைக்கேட்டு அப்படியே செய்கிறோ மென்று மூளுகின்ற கோபத்தையுடையவர்களாய், அரக்கனைப்போலக் கண் கள் சிவந்து உக்கிரத்துடன் சீறி, ஒரு ப்பட்டையானையைக் கொல்லத்தொட ரும் ஆண்சிங்கம்போலச் சூழ்ந்து, சாரதையென்பவளை வருத்தும்படிச் சென்ற போது, எ - று. (கூச)

மன்னியநிறைவழாதுவயங்கியகற்பினுளப
பொன்னனவின்பாலும்பொதுநலக்கனிகையென்றே
சொன்னவர்நாவற்றுழ்ந்துதுயர்க்கடல்குளிப்பவென்னு
மின்னெனவிசும்பினின்றோர்தெய்வதம்விளம்பிற்றன்றே.

(இ - புணை.) நிலைபெற்ற முறைமைதவறுமல் விளங்குகின்ற கற்புள்ள இச்சாரதையை வந்தபுருஷன்கொடுத்த பொன்னளவுக்குத்தக்க இன்பங் கொடுக்கும் பொதுமகளாகிய வேசையென்று சொல்லுகின்றவர்களுடைய காக்கு அறுந்து ஆழ்ந்த துக்கசாகரத்தில் முழுகுவார்களென்று மின்னல்மின்னியதுபோல ஆகாயத்தினின்று ஒருதெய்வவாக்கு எழுந்தது. எ - று. (நடு)

விளம்புசொற்கேட்டலோடும்வியனகர்மாந்தரெல்லா
முளங்களித்துவகைபூத்தாங்குவர்க்கடலென்னவார்த்தா
ரிளங்கொடிகிளைஞரோடுதந்தையுமீன்றதாயுந்
துளங்கியதுன்பநீங்கித்தொலைவிலாவின்பமுற்றார்.

(இ - புணை.) அவ்வாறு சொல்லிய தெய்வீகவாக்கைக் கேட்டமாத்திரத்தில் விசாலமுள்ள அந்த நகரத்திலிருக்கு மனிதர்களெல்லாரும் மனங்களித்துச் சந்தோஷங்கொண்டு பர்வகாலத்தில் ஒலிக்குஞ் சமுத்திரம்போல ஆரவாரித்தார்கள். சாரதையின் தாய்தந்தையரும் சுற்றத்தாரும் நடுங்கிய துன்பம்நீங்கி ஒழியாத இன்பமடைந்தார்கள். எ - று. (நசு)

அவ்வழியறிஞர்தாமுமலர்மொழிகூறினோரு
நவ்வியங்கண்ணிகற்பினலனேரற்புதமென்றஞ்சிச்
செவ்விதின்முகங்கீழிட்டுத்திருந்துரையாடாராகி
யிவ்வணமிரண்டுகன்னலிருந்துளங்கலங்கினரே.

(இ-புணை.) அப்போது அறிஞர்களும் பழிகூறியவர்களும் மான்பார்வை போன்ற பார்வையுள்ள சாரதையின் கற்பின் நன்மையானது அற்புதமுள்ளதென்றுபயந்து, செவ்விதாக முகத்தைக் கீழிட்டுக்கொண்டு யாதொருபேச்சுமில்லாதவர்களாய் இவ்வாறு இரண்டுநாழிகைமட்டிலிருந்து மனங்கலங்கினர்கள். எ - று. (நஎ)

வேறு.

அற்புதமிஃதுசாரதமென்றுணராதகல்விசும்பிடையொலித்தெழுந்த
சொற்படிறென்றுதொழுகுலத்தோரிற்சொற்றனர்சிலரவரெல்லாம்
பொற்புறுநாவற்றுதிர்ந்திடவாயாற்புழுச்சொரிந்தனரவைகாணக்
கற்பினடைகலைமைபுகழ்ந்தனர்கிளைஞர்கன்னியைத்தழுவினர்மகிழ்ந்தே

(இ - புணை.) இது அற்புதம் சத்தியம் என்று உணராமல் விசாலமுள்ள ஆகாசத்தில் ஒளித்தெழுந்த அசரீரியின் வாக்குப்பொய்யென்று பிராமணர் களிற் சிலர்சொல்ல; அவர்களெல்லாரும் அழகுபொருந்திய காக்கறுத்துவிழும் படி வாயின்வழியாகப்புழுக்கள் சொரியப்பெற்றார்கள்; அவைகளைக்கண்டு கற் புள்ளசாரணதையைப் பந்துகள்வந்து தழுவிக்கொண்டு அவள்கற்பின் பெருமை யைப் புகழ்ந்துபேசி மகிழ்ந்தார்கள். எ - று. (கஅ)

செய்வதக்கிழமைவேள்விகான்மறையோர்சிலரவணிருந்துதெய்வதமுங் கைதவமுரையாதணங்களுள்வயிற்றிற்கருப்பமும்வளர்வதாவிந்த மைதவழ்குழலிக்கெந்தவாறந்தோவசையறுமெனநவையுறலு மெய்தெரிந்தகிலகலையுணர்ந்தறிந்தவேதியனொருவனீதுரைத்தான்.

(இ - புணை.) தவஞ்செய்தற்குத்தக்க வரிமையுமுள்ள பிராமணர்களில் சிலர், அங்கிருந்தபடி யோசித்து யார் பொய்சொன்னாலும் தெய்வமும் பொய் கூறுது; இவள் வயிற்றிற் கருப்பமும் காளுக்குநாள் வளர்வதினால் இவளுக்கு வசைமொழி எவ்வாறு நீங்கும், என்று சகஸ்தகத்துடன் வருத்தமுங்கொண்டு வருந்துங்காலத்தில் உண்மைதெரிந்து சாஸ்திரங்களையெல்லாங்கற்ற ஒருபிராம ணன் இத்தவார்த்தை சொல்லுகிறான். எ - று. (கக)

கண்டுகேட்டறியப்படுவனவானகாட்சியாலாகமவளவா லுண்டெனவுணருந்திறத்தவாறெல்லாமூலகமுமாயையின்வடிவே தண்டலின்மாயையமயக்கிலல்வாராத்தகையனையாலையாதலினாற் பண்டைநாளிலதாய்நினைவதற்காரிதாமபான்மையதான்றெனத்தருமே

(இ - புணை.) கண்டும் கேட்டும் அறியப்படுவனவாகிய பிரத்தியகூபிரமா ணத்தாலும் ஆகமப்பிரமாணத்தினாலும் உண்டென்று அறியத்தக்கமுறைமை யின்படி எவ்லாவுலகமும் மாயாரூபமே, ஒழியாத அந்தமாயையமயக்கினால்வராத வையெவையுமில்லை; ஆகையால், அந்தமாயையானது முன்னாளிலில்லாததாய் நினைப்பதற்காரிதாகிய பகுதியுள்ள ஒரு காரியத்தை நூதனமாக உண்டாக்கும். எ - று. (கo)

இந்தமாமாயைதிங்களங்கண்ணியிறவிளையாட்டெனத்துணிந்து சந்தரான்மறையுமாகமமனத்துந்தனித்தனியிரைத்திடுமென்று லுந்திரான்மலரிலுலகெலாங்காட்டுமொருவனுமையனுமென்றறியா வந்தவானவன்றன்றிருவிளையாட்டையார்கொலாவின்னதென்றறிவார்

(இ - புணை.) இந்தமகா மாயையானது திங்கட்கண்ணியான பரமசிவ னுடைய திருவிளையாடலே யென்று நிச்சயித்துச் சந்தமுள்ள நான்குவேதங்

களும் இருபத்தெட்டு ஆகமங்களும் தனித்தனி முறையிடுமென்றால், நாபீகம லத்தில் உலகத்தைத் தோற்றுவிக்கும் மாயவனும் பிரமனும் சிதிகம் அறிந்து கொள்ளமாட்டாத அத்தக்கடவுளுடைய திருவிளையாடலை இத்தன்மைய வென்று எவர்கள் அறியத்தக்கவர்கள். எ - று. (சக)

ஓதுநான்மறையீர்கேட்டிர்மீன்வயிற்றின்மீயாசனைகந்திவந்துதித்தாள் மேதினிகட்டின்மகிடனென்றுரைக்கும்வெந்திறற்றூனைவன்பிறந்தான் ரூதுதாழ்பொழில்சூழ்சத்தியபுரத்திற்றுழ்குழலியானைவருமோ சேதுவாற்காலமொன்றிலவ்வபிரூர்ந்தெழில்பெறக்கருப்பமுற்றனரே.

(இ - புரை.) வேதங்கள் ஓதும் பிராமணர்களே! கேளுங்கள்; மீன்வயிற்றினிடமாக யோசனைகந்திவந்துபிறந்தாள்; எருமைவயிற்றினிடமாகக் கொடிய செய்கையையுடைய மகிடாசுரன் வந்துபிறந்தான்; மகரந்தங்களுடன் பூக்கள் மலர்ந்திருக்குஞ் சோலைசூழ்ந்தசத்தியபுரத்திலிருந்த தாழ்ந்தஅளகத்தையுடைய மாதர்களெல்லாரும் ஒருகாரணத்தால் ஒரோகாலத்தில் வயிறுதோன்றக் கருப்பமடைந்திருந்தார்கள். எ - று. (சஉ)

எரிதவழ்வடிவேலடல்வசுதேவனிகலினிடுதலைப்படுமாட் கரியமெல்லோதியுரோணிகளின்றிக்கருப்பமுற்றனளிவையன்றி யிருணையுமுதவுந்தெய்வதவரத்தாலிருடிகண்முனிந்தசாபத்தால் வரன்முறையாகித்தோன்றுதிகாட்டுலகில்வருவனவல்லவும்வருமே.

(இ - புரை.) தீயுமிழும் வடித்தவேலையுடைய வசுதேவன் பகைவனுற்ற லைப்பட்டிருந்தாளில் கறுத்த அளகத்தையுடைய உரோகணி யென்னும்அவன் மனைவி தன்கணவனில்லாமலிருந்தும் கருப்பமடைந்தாள்; இவைகளும் அல்லா தல், இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் கிருடைசெய்யும் தெவவரத்தினு லும் முனிவர்கள் சபித்த சாபத்தாலும் வரன்முறையாகப் பூர்வகாலந் தொடங் கிவருகின்றவைகளும் மாறி வேறொருதனமாகவருவதருமுண்டாகும். எ - று.

ஐந்தவித்துயர்ந்தவாற்றன்மாதவத்தோரகங்கறுத்துரைத்தசாபத்தால் மூந்தைதாட்சாம்பனகட்டிடைவலியமுசலமொன்றுதித்தது செழுந்தார்ப் பைந்துணரிதழிச்சென்சடாமகுடப்பரமனேப்பாவுமோர்முனிவன் மந்திரப்பலத்தாலன்றுவராச்சுவயிற்றினுங்கருப்பமுற்றதுவே.

(இ - புரை.) பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்துமேன்மைபெற்ற தவவல்லமையுடைய மகருஷிகள்மனதிற்கோபங்கொண்டுசொல்லியசாபத்தில் மூன்றுளில் சாம்பனென்பவன் வயிற்றினிடத்தில் வன்மையுள்ள முசலமென் னும் இருப்புலக்கையுண்டாயிற்று. பசுமையுள்ள கொன்றைப் பூங்கொத்தாலா யெ மாலையணிந்த செஞ்சடா மகுடத்தையுடைய பரமசிவனைத் தரிசெய்யும்

ஒருமுனிவனுடைய மந்திரபலத்தினல் வன்லுச்சுவன் என்பவன் வயிற்றிலும் பூர்வகாலத்திற் கருப்பமுண்டாயது. எ - று. (சச)

தாதுதாழ்பொகுட்டுத்தாமரைக்கோயிற்ரூழ்குழலினையசாரதையும் வேதமாமுனிவனெருவனைப்பணிந்து விரதமொன்றியற்றுதல்புரிந்தா ளாதலால்வயிற்றிற்கருப்பமுற்றிருந்துமருளைவயகற்றினளிதனைத் தீதிலாவேறுமாதாலல்வினவித்தேர்ந்துளந்தெளிமினென்றுரைத்தான்

(இ - புனை.) மகரந்தம் நிறைந்துள்ள பொகுட்டினையுடைய தாமரைப் பூங்கோயிலிலிருக்கும் திருமகளையொத்த இந்தச்சாரதையும் ஒரு முனிவனைப் பணிந்து உமாமகேசுவரவிரதம் அனுஷ்டித்தாள், அந்த விரதபலத்தினல் கருப் பமடைந்து குற்றமற்றவளாயிருக்கிறாள்; இந்தக்காரியத்தை உத்தமகுணமுள்ள சிலமாதனைக்கொண்டறிந்து உங்கள் மனதிலிருக்குஞ் சந்தேகத்தைநிவிர்த்தி பண்ணிக்கொள்ளுங்கள் எ - று. (சரு)

அன்னதுதேர்வான்றெழுகுலத்தமைந்தவணங்கணைர்செல்கெனச் சென்ற, மின்னிகரிடையார்வினவலுமவண்முன்விளைந்தனபடிப்படிவி ளம்ப; வின்னணங்கேட்டோர்மீண்டுவந்துரைத்தார் யாவருமுணர்ந் தொருமறையோன், சொன்னவைமுழுதுஞ்சரதமென்றேறத்திச்சுரிகு ழலணங்கையுந்துதித்தார்.

(இ - புனை.) அந்தப்பிராமணன் சொன்னவற்றையெல்லாம் நிசமென அறிந்த அந்தணர்கள் சாரதை கருப்பங்கொண்டிருக்கு முறைமையைத்தெரியு ம்படிப் பிராமணஸ்திரிகளை அறிந்துவாருங்களென்று அனுப்ப; அவர்கள்போய்ச் சாரதையைக்கேட்டார்கள். அவள்முனிவர்வந்ததுமுதல் நடந்தவையெல்லாங் கிரமமாகச்சொல்ல; அவற்றையெல்லாம் அவ்விப்பிரமகளிர்சபையாருக்குச் சொன்னர்கள். அதைக்கேட்டவர்களெல்லாரும் இந்தப்பிராமணன் சொல்லிய வெல்லாம் உண்மையாயிற்றென்று அவனைப்புகழ்ந்து சுரிக்திருக்கும் அளகத் தையுடைய சாரதையைத் துதிசெய்தார்கள். எ - று. (சக)

செழுமறையவருங்கவிஞருங்கற்பின்றிறம்புகழ்ந்தகன்றனராங்கே பழியறுசிறப்பினருந்ததியனையபணிமொழிச்சாரதையென்பாள் குழுவியம்பரிதிச்செல்வனைப்போலக்குரைகடலுலகெலாம்விளங்கு மழுவையீன்றெடுத்துக்களிசிறந்துவகைமாகடன்மூழ்கினண்மகிழ்ந்தே

(இ-புனை.) பிராமணர்களும் பண்டிதர்களும் சபை கலைந்துபோனபின்பு அதற்குமேல் பழிநீங்கிச் சிறப்படைந்த அருந்ததியையொத்த கற்புள்ள சாரதை யானவள் ஒலிக்காநின்ற கடல்வளைந்த இவ்வுலகமெங்கும் விளக்கும் உதயகால

இளங்கதிர்போல ஒருகுழந்தையைப்பெற்றுக் களிப்படைந்துசந்தோஷக்கடலி
லாழ்ந்தாள். எ - று. (சஎ)

ஈன்றவளுவப்பநண்குசான்மதியோடிலக்கணக்கிடக்கையனைகத்
தோன்றியெக்கலையுமுணர்ந்துமுற்நூலுந்தான்மறைவிதிவழிகூடி
யான்றசிர்ச்சாரதேயனென்றொருபோரமைவரப்புனைந்தபின்யாண்டோர்
மூன்றகவயிற்றன்னுணர்விஞலிருக்குமுதலவாமறைமுழுதுணர்ந்தான்

(இ - புணை.) பெற்றவள் சந்தோஷிக்க நன்மைமிகுந்த விவேகத்துடன் மும்பத்திரண்டு லக்ஷணமும் மிவனிடத்திலிருக்கின்றதென்று சொல்லும்படித் தோன்றி, எல்லாச்சாஸ்திரங்களையு முணர்ந்து பழமையானவிதிப்படி உபநயன முஞ்செய்துகொண்டு சிறப்புப்பொருந்திய சாரதேயனென்னும்பெயரும்பெற்று மூன்றுவருடத்துக்குள் இருக்கு முதலியவேதங்களையெல்லாம் உணர்ந்தான். எ - று. (சஅ)

மறைபயில்பாலன்கலைபிணல்வளருமதியெனக்கலைகளான்வளர்ந
ணறைகமழிதழித்தாடையல்சூழ்சடிலநாயகன்சிவநிசிவரலு
முறுதிநூலிறனிந்தபாதகண்டத்திறைபவரினவருமாங்கே
குறுகுதற்கரியசிவபதிகர்க்தங்குறைவில்சீர்க்கோகன்னமடைந்தார்.

(இ - புணை.) இவ்வாறு வேதங்கள் உணர்ந்த அந்தப்புத்திரன் கலைகளு டன் வளருஞ் சந்திரனைப்போல கலைகளாகிய சாஸ்திர உணர்ச்சியுடன் வள ருங்காளில் வாசனைகமழுங் கொன்றைமாலைசூழ்ந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன் பூசைக்குரிய சிவராத்திரிவந்தது ; அந்தகாளில் வேதமுணர்ந்து பரதகண்டத்தில் வாசஞ்செய்கிறவர்களெல்லாரும் யாவருஞ்செல்லுதற்கரிய சிவலோகத்தை யொப்பாகுங் குறைவற்ற சீரினையுடைய கோகர்ணத்துக்குச்செ ன்றார்கள். எ - று. (சக)

பொன்புரைகதிக்கதேவணிவானவனைப்பூசனைபுரிசிவநிசியின்
மன்பதையெல்லாம்பொருவில்கோகன்னமன்னியவாசகங்களாத்
தென்புலவாணர்க்கருங்கடனிறுக்குஞ்சிறுவனுந்தானுமாயெழுந்து
தன்புறங்காக்குங்கினைஞர்சூழ்போதத்தனியற்சாரதைபோனள்.

(இ - புணை.) பொன்னிறத்த கொன்றைமாலிகையணிந்த சடையையு டைய பரமசிவனைப் பூசைசெய்யும்படியான சிவராத்திரிதினத்தில் ஜனங்க ளெல்லாருங் கோகர்ணத்துக்குப் போகின்றார்களென்னுஞ் சொல்லைச் சாரதை கேள்விபட்டுப் பிதிர்த்தேவர்களுக்குச் செய்யுங்கடன் செய்யத்தக்க சாரதேய னென்னும் பெயருள்ள புத்திரனுடன் புறப்பட்டுத் தன்னைப் பாதுகாக்கும் பக்தகளுஞ் சூழ்ந்துவரும்படிப் போனள். எ - று. (கo)

பூந்தணைர்வீழ்ந்ததவழ்நறும்பசுங்கால்புகுந்தலாஞ்சண்பகவேலிக்
காந்தளஞ்சிலம்பில்விளைந்தசஞ்சாந்துங்கதிர்நிலாமுத்தமுங்கொழித்தத்
தீந்தமிழ்மணக்குமவைகைமாநதிசூழ்தென்புலநாடகன்றுங்க
ணைந்திளமுலையாள்சாரதைதவத்தாலெய்தியகொழுநனுமடைந்தான்.

(இ-புனை.) அப்படி அச்சாரதை போம்பொழுது பூங்கொத்துக்களில் பொ
ருந்திவருகின்றவாசனையுள்ள தென்றற்காற்றுச்சென்று உலாவுகின்ற சண்பகச்
சோலை மலர்ந்திருக்கும் பொதியமலையிலுண்டான செஞ்சந்தனத்தையும்
ஒளியுள்ள நிலவையொத்த முத்துக்களையுங்கொழித்து, மதுரமுள்ள தமிழ்மண
ந்துகொண்டிருக்கும்படியான வைகைசூழ்ந்த பாண்டியநாட்டையகன்று
இளமைதங்கிய தனமுள்ள சாரதையின் தவத்திறற்பொருந்திய கணவனும்
வந்தான். எ - று. (நிக)

கள்ளவிழ்குழலாளாயிடைக்கனவிற்கலவிசெய்கொழுநனைக்காணா
வுள்ளுறத்தெளிந்துவனமுலைபுளகமுறவவன்வழிவிலாநோக்கித்
தெள்ளுநெண்டிரைசூழ்பொலங்கிரிமுகட்டிற்சேட்டிளம்பரிதிகண்டாங்கே
முள்ளரைமுளரிமுறுக்கவிழ்ந்தென்னமுகமலர்ந்தமலர்ந்தனளே.

(இ - புனை.) தேனுடன்மலர்ந்த மலரணிந்த அளகத்தையுடைய சார
தையானவள் சொப்பனத்திற் றன்னைப்புணருங் கணவனை அவ்விடத்திற்கண்ட
வுடன் மனதிற்றன்னுடைய கணவனேயென்று தெளிந்து, அழகிய தனங்களி
னிடத்திற் புளகமுண்டாக அவன் வடிவையெல்லாம் பார்த்துத் தெளிவுள்ள
சமுத்திரஞ்சூழ்ந்த உதயகிரியினிடத்தில் உதயமாகுஞ் சூரியனைக்கண்டு அப்
பொழுதே முள்ளரைக்கொடியான தாமரையரும்பு முறுக்குவிட்டு மலர்வது
போல முகமலர்ந்து மனமகிழ்ச்சியடைந்தாள். எ - று. (நஉ)

பண்டைநாண்முதலாக்கனவெலாமின்பம்பருகியகேளுமன்றன்று
கண்டறிகுறியாற்றெளிந்துதன்படிவங்காட்டியமதலையுங்காணா
வண்டிமிர்குழலாய்நின்னெடுபகருமாற்றமொன்றுளதெனவேறு
கொண்டுளமுவகைக்கடலிடைமூழ்கிக்குறித்தனவினவுவான்புகுந்தான்

(இ - புனை.) அதிக நாளாகச் சொப்பனங்கடோறும் சாரதையுடன்
இன்பமனுபவித்த கணவன் அந்தந்தநாளில் பார்த்தறிந்த குறிப்பினாற்றெ
ளிந்து தன்னுருவச் சாயலைக்காட்டிய புத்திரனையுங்கண்டு வண்டுகளிசைபா
டிக்கொண்டிருக்கும் அளகத்தையுடையவளே! உன்னுடன் ஒருவார்த்தை பேச
வேண்டியிருக்கின்றதென்று தனித்திருந்துகொண்டு மனமானது சந்தோஷக்
கடலில்முழுகத்தக்கதாகத் தான்குறித்தவைகளை வினவத்தொடங்கினன்.எ-று.

மணமலிகுழலேயானைநீநின்னைமணம்புணர்கேள்வன்யார்மற்று
ன், னுணர்வுடைத்தந்தையாவனேனெதுநின்னூரெதுபேரெதென்று
வந்து, தனைவன்முன்வினவக்கனிந்துதன்மாபுதொடுத்தனைமையின்

மணஞ்செய்த, கணவனேயிழந்தல்காறுநின்றுரைத்தாள்காதல்'ன்மறுத்திஃதுரைத்தான்.

(இ - புணர்.) வாசனைநிறைந்தமலர்மாலையணியத்தக்கஅளகத்தையுடையவளே! நீ யார்? உன்னை விவாகஞ்செய்துகொண்ட கணவன்யார்? உனர்வையுடைய உன்பிதா யார்? ஊர் எது? பெயரென்ன? என்று கணவன் விஞவச் சாரதையானவள் கண்களில் நீர்பெருகும்படித் துயரமடைந்தவளாய்த் தன்மரபுமுதல் இளமைப்பருவத்தில் விவாகஞ்செய்துகொண்ட கணவனேயிழந்ததீறுகச்சொன்னாள். அவன்மறுபடியும்இந்தவார்த்தைசொல்லுகிறான்.எ-று.

மன்றலங்கோதாய்கின்னையனின்றமறையிளஞ்சிறுவனின்மகன்கொலன்றிமற்றையலார்மகன்கொல்யார்மகனென்றறிகலான்போலவன்விஞவநின்றசிர்ச்சாரதேயனென்றொருபேர்நிலமெலாநிறுவியபுகழோனென்றனிப்புதல்வன்பலகலிவதம்யானையுமுணர்ந்தவனென்றான்.

(இ - புணர்.) வாசனைதங்கும் அளகத்தையுடையவளே! நின்னருகிலிருக்கும் இந்தப்பிராமணச்சிறுவன் உன்புத்திரனே? அல்லது மற்றொருவர் புத்திரனே? என்று அறியாதவன்போலவிஞவ, இந்தப்புத்திரன் பெருமைதங்கிய சாரதேய னென்னும் ஒப்பற்ற பெயரை உலகமெங்கும் விளங்கும்படிப் புகழ்பெற்ற என்புத்திரன், பலசாஸ்திரங்கள் வேதங்கள்யாவும் உணர்ந்தவனென்று சொன்னாள். எ - று. (நஅ)

சொற்றனள்கேட்டுவெடிபடாகைத்துத்தொழுகுலத்துதித்தநின்செய்கை, முற்றவுநன்றுகன்றுகாணென்னுமொழிந்துபைங்காந்தளஞ்செங்கை, பற்றியனான்றேயிறந்தனன்கேள்வன்பாலனீயின்னர்ப்பயந்த, தெற்றெனப்பகர்வென்முகிழ்முலையணங்கேயதுகாரணமிதற்கென்றான்.

(இ-புணர்.) அவள் சொன்னதைக்கேட்டு வெடிபடும்படிநகைத்துத்தொழுகுலமானபிராமணகுலத்திற்பிறந்த உன்செய்கை மிகவும் நன்றுயிருக்கின்றதென்று சொல்லிச் செங்காந்தண் மலரையொத்த உன்கரத்தைப்பற்றி விவாகஞ் செய்துகொண்டகணவன் அன்றையதினமே யிறந்துபோனனெனில், பின்பு நீ புத்திரனைப்பெற்றது என்ன அதிசயமென்று சொல்வேன், தாமரையரும்பையொத்ததனமுள்ளவளே ! கணவனிறந்தபின்பு நீ புத்திரனைப்பெறுவதற்குக் காரணம் என்னென்றான். எ - று. (நக)

அங்கிலமடந்தைதானமீதாரவலர்கதிர்மதிமுகமிறைஞ்சியின்னைகடுரிந்துதமியனேயிகழ்தலேற்பதோமுழுதுணரிறைவநின்னையானென்றுமறிந்துளனென்னோயுமிவ்வாறறிந்தனையாயுன்னருந்தனையெங்கிலக்கிருவேமுள்ளமேசான்றெனப்பின்னும்.

(இ - பு.) அந்தப்பிராமணன் சொன்ன வார்த்தையைக்கேட்டவுடன் சாரதையானவள் பரந்தகிரணங்களையுடைய சந்திரனையொத்த முகத்தை வணங்கிக்கொண்டு இனியநகைசெய்து தமியளாகிய என்னை இவ்வாறு இகழ்வது உமக்குத்தகுதியோ! முழுவதும் அறிந்த கணவனே! உன்னை நான் என்றும் அறிந்தேயிருக்கின்றேன், என்னை நீயும் அவ்வாறே யறிந்திருக்கின்றனை, நினைத்தற்கரிய இந்த நிலைமைக்கு நம்மிருவர் மனமே சாக்ஷியென்று சொல்லிப் [illegible]ர். எ - று. (இஎ)

முனிவரன்மேணண்மொழிந்ததுமன்னேனன்மொழிப்படிநோன்பி யற்றியதும், பனிவரையுமையாளெதிர்ந்ததுமெதிர்ந்துபவங்களோரிர ண்டிலுமுன்னை, வினைவழிநிகழ்ந்தெதாடர்பெலாமுணர்த்திமெய்வர மளித்ததுமுரையாத், தயனைவிரதப்பயனிலோர்பாதிதன்னெடும்வ ழங்கினனணங்கே.

(இ - பு.) முன்னையில் முனிவர் சொன்னதும் அவர்சொற்படித்தான் விரதம் அனுஷ்டித்ததும் உமையவள் பிரத்தியக்ஷமானதும் அவ்வாறு பிரத்தி யக்ஷமாய்ச் சென்ற இரண்டு சென்மத்தில் உன்னை விதிவசத்தாற் றொடர்ந்து வந்த முறைமை தெரிவித்ததுமன்றி உண்மையாகிய வரங்கொடுத்ததுஞ் சொல் லிப் புத்திரனையும்அனுஷ்டித்தவிரதபலத்திற்பாதியினையுங்கொடுத்தாள். எ-று.

அறைகடலுலகிற்பெறற்கரிதாயவரும்பொருள்பெற்றனைப்பெ ற்றான், பொறையுடையணங்கின்றந்தைதாய்கிளைஞர்பொருந்திடவ ன்னவனுடனே, மறையிளஞ்சிறுவர்கொண்டுபேருவகைமகிழ்ச்சிய ளெயாங்ககன்று, சிறையளிபாண்செய்பொதும்பர்சூழ்வைகைச்செந் தமிழ்ப்பாண்டிநாடடைந்தான்.

(இ - பு.) ஒலிக்காநின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகிற் பெறுதற் கரியதாகிய பெரும்பொருளை பெற்றதுபோல புத்திர விரதபலனையும் பெற்ற பிராமணன், கற்புநிலையுள்ள சாரதையின் தாய் தந்தையரும் பந்துகளும் சம் மதிக்கத்தக்கதாகத் தன்புத்திரனையும் அவளையுங் கூட்டிக்கொண்டு பெரியம கிழ்ச்சியுடன் அவ்விடம்விட்டுநீங்கிச் சிறகினையுடைய வண்டுகள் இசைபாடும் பொழில் சூழ்ந்த வைகைநதிசேர்ந்த பாண்டிநாட்டிற்சேர்ந்தான். எ - று. ()

வாள்விரிபசும்பொற்புதவுயர்மாடமறுகுசூழ்வளநகர்சார்ந்து
நீள்கருங்குழலாள்புணர்முலைப்போகநீங்கருங்கனைவெலாநகர்க்கு
நாள்பலகழியவிறந்தனன்கேள்வனலனுகர்ந்திவனையெழுபிறப்புந்
தோள்பிரியேனென்றணங்கனடானுஞ்சுடர்விரிகதிரொளிகுளிர்த்தாள்.

(இ - புரை.) ஒளிபாய்ந்த பொன்னாற் செய்யப்பட்ட கதவுகளையுடைய உயர்ந்தவீடுகள்நிறைந்த வீதிகளுள்ள வளப்பமுடையமதுரைப்பதியிற்சேர்ந்து, நீண்ட காரியகுழலையுடைய சாரதையின்போகத்தை அனேககாள் கனவிலனுபவித்து சின்னாளில் இறந்துபோனான். சாரதையும்இக்கணவனை எழுழுபிறப்புவரையில் பிரியாமல் இன்பமனுபவிப்பேனென்று சுடர்விடுகின்றதியிற் சகமனஞ்செய்தாள். எ - று. புதவு-கதவு. (சுo)

தொடுகடலுலகினலனுகர்ந்துடலந்துறந்தவரிருவரும்பின்னும்
வடிமலர்க்கண்ணிக்கற்பகமிலந்துமகிணனுந்தூணெவியுமாகிக்
கடிநகலந்துய்ப்பான்கோடியாதவர்செங்கதிரெலாமொருவழிகுழுமி
நெடுவிசும்படைந்ததனலொளிகெழுமிலவுசீர்விமானமேவினரே.

(இ - புரை.) சகரர்களாற் றோண்டப்பட்ட கடல்சூழ்ந்த பூலோகத்தினிடத்தில் இன்பமனுபவித்து உடலையொழித்தஅவ்விருவரும், ஆய்ந்த கற்பகப் பூமாலையணிந்து கணவனு மனைவியுமாகச் சுவர்க்கபோகம் அனுபவிக்கக் கோடி சூரிய பிரகாசமெல்லாம் ஒரேயிடத்திற்சேர்ந்து நெடியதாகிய ஆகாயத்தினிடத்தில் வந்ததுபோல ஒளிபொருந்தி விளங்காநின்ற சிறப்பினையுடைய விமானத்திற்பொருந்தினர்கள். எ - று. (சுக)

ஆங்கினிதமர்ந்துகுங்குமக்குவட்டினணியெனத்திரண்டதிண்புயமுங்
கோங்கிளமுகிழ்முலைமழுகுவீற்றிருந்தகுவிமுலைத்தடங்களுமொருமுங்கத்
தீங்கனியனையமெய்யுறுபுணர்ச்சித்திருநலனுகர்ந்தமிதவிட்டிடப்
பூங்குழலுமையோடிளமதிக்கண்ணிப்புனிதன்வாழ்சிவபதமடைந்தார்.

(இ - புரை.) இவ்வாறு விமானத்திலேறிச் சென்றவர்கள் சுவர்க்கலோகத்தில் இன்பமுடன் அமர்ந்து, குங்குமமலையின் அழகுடோலத் திரண்ட திண்ணியபுயங்களும் இளமையாகிய கோங்கினரும்புபோலக் குவிவாகியதனங்களும் ஒருங்கத்தக்கதாக மதுரமுள்ள பழவர்க்கத்தையொத்த இரண்டிடலும் ஒன்றுபடப் புணர்வதாகிய சிறந்த இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்து, பின்பு அதனைவெறுத்துப் பூமாலையணிந்த அளகபாரமுள்ள பார்வதியுடன் பரமசிவன் வீற்றிருக்கும் சிவபதம் அடைந்தார்கள். எ - று. (சுஉ)

இன்னதன்மையதிக்கதையெனவிதனையாவரேயாயினுங்கற்றோர்
பன்னிருமேர்கேட்டோரிருநிலத்திம்மைமப்படுபயன்விழைந்தனர்நுகர்ந்து
பின்னருமறுமைப்பலன்சிவபதமேபெறுகுவர்திண்ணமீதென்னச் [ணன்.

சொன்னநான்மறையின்பொருணுழுதுணர்ந்தசூதன்மாதவர்க்கெலாஞ்சொன்

(இ-புரை.) நைமிசாரணிய முனிவர்களே! இந்த உமாமகேசுவரபூசாபல சரித்திரம் இத்தன்மையவான சிறப்பினதென்று கருதி இந்தச்சரித்திரத்தைக்

கற்றுணர்ந்தவர்களும் பிறருக்குச்சொன்னவர்களும் கேட்டவர்களும் யாவர்களேயாயினும் பெரியதாகிய இவ்வுலகத்தில் தாங்கள்விரும்பியபடி இம்மைப் பயனை அனுபவித்துப் பின்பு சுவர்க்காணுபவமுஞ்செய்து சிவபதம் அடைவார்களென்பது நிச்சயமென்று கான்குவேதங்களின் பொருள்முழுவதையும் உணர்ந்த சூதமுனிவர் சொல்லியருளினார். எ - று. (சுஉ)

பத்தொன்பதாவது உமாமகேசுவரபூசாபலமுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கஅஎக.

உ

சிவமயம்.

இருபதாவது
உருத்திராக்ஷமகிமையுரைத்த அத்தியாயம்.

கேட்டமறைவித்தகர்கிளர்ந்துவகைபொங்கி
நாட்டமொருமூன்றுடையநம்பனருளடியார்
வேட்டணியுமக்கமணிமேன்மையைவிரித்தே
கோட்டமில்குணத்துமுனிகூறுகெனலோடும்.

(இ-புனை.) உமாமகேசுவரபூசாபலத்தைக்கேட்ட நைமிசாரணியமுனிவர்கள் சந்தோஷம் நிறைந்து திரிநேத்திரமுள்ள பரமசிவன் அருள்பெற்ற அடியார்கள் விரும்பி அணிந்துகொள்ளும் ருத்திராக்ஷமகிமையை விவரித்து மாறுபடுதலில்லாத குணத்தையுடைய சூதமுனிவரே சொல்லுமென்று வேண்டிக்கொள்ள, எ - று. (க)

மக்களருணர்வைக்கொடுமதித்துணரவற்றே
முக்கணிறைவற்கடிமைமுற்றினர்தரிக்கு
மக்கமணியின்டெருமையற்புதமிதென்னத்
தொக்கமுனிவர்க்குமுனிசூதனுரைசெய்தான்.

(இ - புனை.) மனிதர்கள் உணர்ச்சியிலுல் மதித்து அறியத்தக்கதோ? திரிநேத்திரங்களையுடைய பரமசிவனுக்கு அடிமைத்தன்மை நிறைந்தவர்கள்தரிக்கும் ருத்திராக்ஷத்தின்பெருமை அற்புதமானதென்று சூதமுனிவர் கூட்டமாக இருக்கும் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லுவாராயினர். எ-று.

எத்தகையரேனுமிழிவெய்துதொழில்செய்யு
மத்தகையரேனுமுமையன்பரீனவழுத்துஞ்

சித்தமிலரேனுமிறைசீர்மணிதரித்தான்
மூத்தரவரென்றுமறைமுற்றுமுரைசெய்யும்.

(இ - புணர்.) எத்தன்மை யுடையவர்களாஞலும் இழிவான தொழில் செய்யுத்தன்மையுடையவர்களேயாஞலும் பார்வதி நேசனைத்துதிசெய்யும் சித்த மில்லாதவர்களேயாஞலும் பரமசிவனுடைய சிறப்புள்ள ருத்திராக்ஷம் தரிப் பார்களாஞல், அவர்கள் சீவன்முத்தர்களென்று வேதங்களெல்லாஞ் சொல்லு கின்றன. எ - று. (க)

நம்பாமனின்பாயனந்தனிலுதித்தே
யும்பர்புகழக்கமணிபூணுமறிவுள்ளோ
ரம்புவியிடத்தில்வருபாவமுமறுத்தே
செம்பொனுலகத்தரனையொத்தினிதுசேர்வார்.

(இ - புணர்.) நமது கடவுளுடைய திருநேத்திரங்களினின்றும் உண்டா கித் தேவர்களாற் புகழப்பட்ட ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொள்ளும் விவேக முள்ளவர்கள் இவ்வுலகில் சேரிடும் பாவங்களையெல்லாம் நீங்கித் தேவருலகத் திற் சிவனையொத்துச் சேர்வார்கள். எ - று. (ச)

என்கொனதிபற்பலவெதிர்ந்தடைவின்மூழ்க
லென்கொல்பரிவேள்விமுதலியாவையுமியற்ற
லென்கொலெழுகோடிவிதமந்திரமுமெண்ண
லென்கொறவமென்றுகணலந்திடையிருத்தல்.

(இ - புணர்.) பலபல நதிகளிற் சென்று மூழ்குவதிஞ லென்னபலன், அசுவமேத முதலாகிய யாகங்கள் செய்வதிஞலென்னபலன், சதகோடி மகா மந்திரங்களைச் செபித்தலிஞ லென்னபலன், தவமென்று பஞ்சாக்கினி மத்தியி லிருப்பதிஞ லென்னபலன். எ - று. (ஞ)

இத்துணையுங்குபலம்யாததனிலெண்கூ
றெத்தபலங்குவதுருத்திரவிழிப்பேர்
சுத்தமணியென்றுரியதிதல்லமுனிவோராம்
வித்தகர்தரிப்பரிதில்வேறுபொருளுண்டோ.

(இ - புணர்.) உருத்திராக்கமென்னும் அரியமணியானது நதிகளில் மூழ் குதல் முதலாகச்சொல்லப்பட்ட இவைகளெல்லாம் கொடுக்கும் பலன்யாதோ? அதனிலும் எண்மடங்கு அதிகமாகக்கொடுக்கத்தக்கது; என்று புராதனமுனி வர்களாகிய ஞானவான்கள் தரித்துக்கொள்வார்கள். ஆதலால் அந்த மணி யினுஞ் சிறந்த பொருள் வேறென்றுண்டோ? இல்லை. எ - று. (ட)

வேறு.

ஆயமாமணியாயிரம்புனைந்திடிலவரை
மாயனுண்முகன்புரந்தான்வானவர்முதலோர்
பாயுமால்விடைப்பரனெனப்பணிதவரென்றுற்
றாயமாமணிமிலைந்தவர்மனிதரோசொல்வீர்.

(இ - புனை.) அத்தன்மையுள்ள உருத்திராக்ஷமணிகளை ஆயிரம்அணிந்து கொள்வார்களாஞல், அவர்களை விஷ்ணு பிரமன் தேவேந்திரன் தேவர்கள்முதலானவர்கள் தாவிச்செல்லும் ருஷபவாகனரூடராகிய பரமசிவனென்று கருதி வணங்குவார்களென்றால், அந்த மணியைத்தரித்துக்கொள்ளுகின்றவர்கள் மனிதர்களோ சொல்லுங்கள். எ - று. (எ)

கடவுணன்மணிசிரத்தினுங்காதத்தினுங்களத்தும்
படருமார்பினுந்தோளினுங்காதினுற்பகுத்து
மிடையுருல்விரலங்குட்டமதனிலும்விளங்க
வடைவினுலறிந்தணிபவர்சிவபதமடைவார்.

(இ-புனை.) அந்த உருத்திராக்ஷமணியைச் சிரசிலும் காதுகளிலும்கழுத்திலும் பரந்தமார்பிலும் தோள்களிலும் கைகளிலும் தரிக்கவேண்டிய தொகைப்படி வகுத்து, கன்மைதங்கிய அங்குஷ்டவிரலிலுமணியவேண்டிய கிரமத்தையறிந்து தரித்துக்கொள்ளுகின்றவர்கள் சிவபதம் அடைவார்கள். எ - று.

பொங்குமாணிக்கமாதியமணியொடுபுனர்த்திக்
தங்கமாயறுதகட்டினிற்குயின்றனகலத்தி
னங்கண்மாநிலத்தரனக்கமணியினையணிவார்
பங்கயப்பதந்தொழுபவர்பவக்கடல்படியார்.

(இ - புனை.) விளங்குகின்ற மாணிக்கமுதலாகிய ரத்தினங்களுடன் சேர்த்துத் தங்கத்தகட்டினுற் செய்யப்பட்ட ஆபரணம்போல உருத்திராக்ஷமணியை இவ்வுலகத்திற் றரித்துக்கொள்ளுகின்றவர்களுடைய திருவடித்தாமரைகளைத் தொழுகின்றவர்கள் சனனசாகரத்தில் அழுந்தார்கள். எ - று. (ஈ)

அரனிடத்திலன்பற்றவரவனக்கமணியுந்
திருவெண்ணீறுமெய்தரிக்கிலாப்பாதகச்சிதட
ருரியவஞ்செழுத்துணர்கிலாரீசர்பேருலகிற்
கரமெனக்குறைருமவிதானெனப்பவங்கழிப்பார்.

(இ - புனை.) பரமசிவனிடத்தில் அன்பில்லாதவர்களும் உருத்திராக்ஷமும் விபூதியும் தங்கள்சரீரத்திற் தரித்துக்கொள்ளாதவர்களாகிய மூடப்பாவி

னும் மோக்ஷமடைவதற்குரிய பஞ்சாக்ஷரத்தை அறியாத தன்மையுள்ளவர்களும் இத்தப்பெரிய உலகத்திற் கழுதையாகவும் குரைக்கும் நாயாகவும் பிறந்து திறந்து சென்னசேஷத்தைக் கழிப்பார்கள். ஈ - ஹ. (கo)

இந்துசேகரன்மணியக்கவலயத்திலேற்று
மந்திரந்தருபலத்தையித்துணையெனமதித்துப்
புந்தியாற்றெரிந்துணர்வதார்புனலிடைப்படிவோர்க்
கந்தரன்மணிப்படுபுனல்சிவகங்கையாமால்.

(இ - புணை.) சந்திரனைத் திருமுடியிலணிந்தருளிய பரமசிவனுடைய மணியாகிய உருத்திராக்ஷவடத்திலுற் செபிக்கத்தக்க மந்திரந்தருகின்ற பலனை இவ்வளவென மதித்துப் புத்தியிலுற்றெளிந்து அறிகின்றவர்கள் யாவர்? கீழில் முழுகுமவர்களுக்கு உருத்திராக்ஷபரிசத்தோடு தம்மேல்விழுகின்ற நீர் சிவகங்கைத் தீர்த்தமாம். எ - று. (கக)

எண்ணுமோர்முகமாதியாயீரெழுமுகமு
நண்ணுநன்மணியவற்றிலோர்மணியினைகாடிப்
புண்ணியோர்கடாம்பூசனைமுறையினிற்புரியிற்
றெண்ணிலாமதிவேணியான்பூசையிற்சிறக்கும்.

(இ - புணை.) எண்ணுகின்ற ஒருமுகமுதலாகப் பதினொரு முகமீறாகவுள்ள அம்மணிகளில் ஒருமணியினைக் கருதிப் புண்ணியர்கள் முறைமையுடன் பூசைசெய்தால், தெளிவாகிய நிலவினையுடைய பிறைமதியணிந்த பரமசிவன் பூசையாகவே சிறக்கும். எ - று. (கஉ)

இன்னதன்மையமணியினதியல்பெலாமெடுத்துப்
பன்னியோதிடிற்பங்கயன்முதலினோர்க்கமையா
தென்னில்யாவரேயதனிலெளிளம்புவாரெனினு
முன்னமந்தமாமணியினெனிகழ்ந்தமைமொழிவாம்.

(இ - புணை.) இத்தன்மையுள்ள உருத்திராக்ஷத்தின் பெருமைகளையெல்லாம் எடுத்து விவரமாகச்சொல்லின் பிரமன் முதலானவர்களுக்கும் அமையாதென்றால் மற்றை யாவர் அதன்பெருமையைச் சொல்லத்தக்கவர்கள், ஆயினும் இந்த ருத்திராக்ஷத்தினுல் ஆதியில்நடந்தசரித்திரத்தைச்சொல்லுகிறோம். எ-று.

ஓலகுமாகுயிலொளிதடமயிலினமுவடப
வல்குறீர்ந்திடமழைமுகிலனுதினம்பொழிந்து
மல்குசிர்கெழுகாச்சியீரத்துக்குமன்னன்
பல்குசேனையான்பத்திரசேனனென்பவனே.

(இ - புணை.) மாமரத்திலிருக்குங் குயில்கள் சோர்வடைந்து ஒளிக்கவும் மயிலின்கூட்டங்கள் சந்தோஷிக்கவும் உஷ்ணக்குறைகள் நீங்கவும் மேகங்கள் அணுகினமும்பொழிந்து நீர்நிறைந்த சீர்தங்கிய காஸ்மீரதேசத்துக்கு அரசனும் மிகுந்த சேனையையுடையவனுமாகிய பத்திரசேனனென்பவன். எ-று. (கசு)

மான

செற்றநீங்குரற்றருமனென்றுரைத்திடுஞ்சேயுங்
கற்றபேரமைச்சன்றருகாளைதாருகனு
மூற்றவேதநூன்முதலியகலையெலாமுணர்ந்தார்.

(இ - புணை.) வெற்றியுள்ள இவ்வரசன் பெற்றருளிய இளவரசாகிய குற்றம்நீங்கிய தருமனென்று சொல்லப்பட்ட புத்திரனும் கற்றுணர்ந்த பெருமை வாய்ந்த மந்திரிபெற்ற புத்திரனுகியதாருகனென்னும் பெயரையுடைய வீரனும் வேதசாஸ்திரமுதலாகிய கல்விகள் முழுவதும் ஓதியுணர்ந்தார்கள். எ-று. (கஹ)

அரசநீதியும்படைக்கலவிஞ்சையினமைவும்
பொருவிலாவுருச்செவ்வியுமிளமையும்பொற்புந்
தருமஞானமுங்கருணையுந்தயாவொடுமாண்பு
மிருவராகிவேறிருநிலத்திலெனவளர்ந்தார்.

(இ - புணை.) இந்தப்புத்திரர்கள் உருவத்தி லிரண்டு பேராகக் காணப்பட்டாலும் ராசநீதியும்-தனுர்வேதவிநோதப்பயிற்சியும் ஒப்பில்லாத உருவமும் ஆயுளும் இளமையும் அழகும் தருமமும் ஞானமும் கிருபையுந்தயவும் மாட்சியும் ஆகிய இவைகளில் வேற்றுமை யில்லையென்னும்படி வளர்ந்தார்கள். எ - று.

அண்ணலமைச்சர்களிருவருமவிலவரம்பறியா
மின்னுகன்மணிக்கலன்களுமவைதுறுஞ்சாந்தும்
பொன்னின்மேனியிற்புனையலராகிவெண்பொடியு
மன்னுமக்கமாமணிகளுமேமுற்றுமவனைந்தார்.

(இ - புணை.) அத்தன்மையுள்ள புத்திரர்களிருவரும் விலையளவு அறியப்படாததும் பிரகாசிப்பதுமாகிய நல்ல ரத்னபரணங்களும் வாசனைதங்கிய சந்தனமும் கௌளந்தரியமுள்ள தங்கள் சரீரத்திற்றரித்துக்கொள்ளாதவர்களாய் விபூதியும் ருத்திராக்ஷமுமே சரீரமுழுவதும் அணிந்துகொண்டார்கள். எ - று. (கஎ)

அந்தமன்னனுமமைச்சனுமரிதினிலின்ற
தந்தமைந்தனைத்தனித்தனியழைத்தினிதனைத்துக்
கந்தருவிஞாத்தீதயிவைகளன்பலவளிக்கப்
புந்திவைத்திலர்மறுத்தனர்பொருவருங்கிலையார்.

(இ - புணை.) அவ்வரசனும் மந்திரியும் அருமையாகப்பெற்ற தங்கள் தங்கள் புத்திரர்களைத் தனித்தனியாக அழைத்து இனிதானவசனங்கள் சொல்லி வாசனையுள்ள நல்ல கூட்டுவர்க்கஞ் சேர்ந்த சந்தனமும் ஆபரணங்களுங்கொடுக்கவும், ஒப்புசொல்லுதற்கரியவர்களாகிய அந்தப்புத்திரர்கள் அவைகளில் விருப்பம்வையாமல் மறுத்து விட்டார்கள். (கஅ)

பாலரின்னணமொழுகும்பருவத்திலாங்கண்
ஞாலமெங்கணும்பராசரனெனப்பெயர்கவிலுஞ்
சீலமாதவனெய்தலுஞ்சென்றெதிரிறைஞ்சி
யேலவேதகும்பூசைகளியற்றினனிறைவன்.

(இ - புணை.) அந்தப் புத்திரர்கள் இவ்வாறு கடந்தவருநாளில் ஒருநாள் உலகமெங்கும் பராசரரென்று சொல்லும்பெயருள்ள தவசிலராகிய முனிவர்வரவும் அந்தவரசன் எதிர்கொண்டு சென்று பணிந்து, அவர்மனதுக்குச் சந்தோஷமுண்டாகும்படித் தகுதியுள்ளபூசைசெய்து, எ - று. (கக)

அனையமாமுனிமனமகிழ்ந்தாசிகளியம்பக்
கனகவாசனத்திருத்துபகாவலனிறைஞ்சி
யெனதுணைமந்தனும்மைச்சர்சான்மதலையுமிணங்கிப்
டானகமாமணிகுயிற்றியபணியெலாமிகழ்ந்தே.

(இ - புணை.) அந்தப்பராசரமுனிவர் மனமகிழ்ந்து ஆசீர்வசனஞ்சொல்ல, அரசன் அந்தமுனிவரைப் பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து பணிந்து, என் புத்திரனும் மந்திரிகுமாரனும் ஒருவரைவிட்டொருவர் பிரியாத சினேகமுள்ளவர்களாய் நாகரத்தினம்பதித்த ஆபரணமுதலான பல ஆபரணங்களையிகழ்ந்து, எ - று. எ - அசை. (உ0)

கைகொடுத்தொடார்கண்கொடுபார்த்திடார்கடிந்து
தையபூதியுஞ்சிவனக்கமணியுமேதுலங்கு
மெய்யெலாமணிந்திருந்தனர்வினையமேதறியேன்
ஐயனேயெனக்குரையெனவருந்தவன்கேளா.

(இ - புணை) அந்த ஆபரணங்களைக் கையினாற் றொடாதவர்களாயும், கண்களாற் பாராதவர்களாயும், நீக்கிவிட்டுப்புனிதமாகிய விபூதியும் உருத்திராக்ஷங்களுமே சரீரத்தில் பிரகாசிக்கும்படித் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்காரணமின்னதென்று அடியேன் அறிந்திலேன்; ஐயனே! எனக்குச் சொல்லுமென, அந்தவார்த்தையைப் பராசரமுனிவர்கேட்டு, எ - று. (உக)

மண்டுதெவ்வமர்கடந்தவேன்மன்னவரோடே
பண்டிவர்க்குறுபிறவியிற்பழகியதொடர்பே

கொண்டடைந்தவிப்பிறப்பினுமந்நிலைகொண்டா
ருண்டுமற்றதன்வரன்முறைதேகளெனவுரைத்தான்.

(இ - புணை.) எதிரேற்றுவரும் பகைவருடைய போரைக்கடந்த வேலா யுதத்தையுடைய ராசசிங்கமே! பூவ மிவர்களுக்குப்பொருந்திய பிறப்பில் பழ கிய தொடர்ச்சியைக்கொண்டு இப்போதுவந்த பிறப்பிலும் அந்தப்பழக்கத்தை விடாமலிருக்கின்றார்கள்; அதற்கொரு காரணமுண்டு; அந்தக்கிரமத்தைக்கே ளென்று சொல்லுவாராயினர். எ - று. (உஉ)

மாடமாளிகைக்குடுமியின்முகிறவழ்மதியி
லாடரங்கினிலார்ந்தபொற்கொடிக்குழாமாட
லோடுமாமதிக்கறைதுடைத்திடுவபோலொளிருங்
கேடில்சீர்த்திகொள்பெரும்படிவளகந்திக்கிராமம்.

(இ - புணை.) மாளிகையினுச்சியிலும், மேகந்தவழ்கின்ற வீடுகளிலும், காட கசாலைகளிலும் கட்டியிராநின்ற பொற்கொடிக்கூட்டம் மேலே அசைகின்ற தோற்றமானது ஆகாயத்திற் செல்லுகின்ற சந்திரனுடைய களங்கத்தைத் துடைப்பதுபோல் பிரகாசிக்கவும் வளமைபெற்ற கெடுதலில்லாத சிறப்பினை யுடைய பெரும்பதியான வளப்பம் பொருந்திய திந்திக்கிராமமென்றொரு நக ருண்டு. எ - று. (உக)

அப்பெரும்பதிதன்னின்மானக்கையென்றனையுந்
துப்பெனச்சிவந்தொளிர்கனிவாயிளந்தோகை
யொப்பருந்தவப்பொதுமகளோவிபர்தீட்டுந்
திப்பியத்துருவாருயிர்பெற்றெனச்சிறந்தாள்.

(இ - புணை) அந்தப்பெரிய நகரத்தில் மானக்கையென்னும் பெயரினை யும்பவளம்போலும் அதரத்தினையுமுடைய ஒருகணிகையானவள் சித்திரக்காரர் தீட்டியதிவ்வியமான பதுமை உயிர்பெற்றிருப்பதுபோலும் அழகிற்சிறந்திருந்த னள். எ - று. (உசு)

மேவுபொன்மனைமுன்றில்வாய்வெள்ளிடையின்றுய்
வாவுமாப்படைவேந்தர்தமைமந்தருமதிநூற்
காவன்மந்திரக்கிழவர்நங்கான்முளையவருந்
தூவுநீணிதியெட்டியர்குமாருந்தொகுவார்.

(இ - புணை.) யாவரும் விரும்பத்தக்க பொன்மயமான அவள் வீட்டின் முன்றிலினிடத்து வெள்ளிடையில்லாமல் தாவிச்செல்லுங் குதிரைப்படைமுத லாகியபடைகளையுடையராசகுமாரர்களும் மந்திராலோசனைக்குரிய சாஸ்திரங் கள் கற்றுணர்ந்த மந்திரிகளுடைய புத்திரர்களும் மிகுந்த நிதியங்கள்

கொடுக்கத்தக்க வைசியபுத்திரர்களுங் கூட்டமாகச் சேர்ந்திருப்பார்கள். எ-று. எட்டியர் - வைசியர். (உ)

நீணிதிப்பெருவண்மையிற்பெண்மையினிலமேற்
மாணிழைக்கொருகங்குலின்மருவுவாளித்தா
லாணிதீர்ந்தபொன்னுயிரக்கழஞ்சனவறைவார்.

(இ - ப்.) மிகுதியாகிய திரவியமுள்ள வளப்பத்திலும் பெண்தன்மையிலும் பூலோகத்திலெல்லாரும் பார்க்கும்படி வந்திருக்குந்திருமகளேயிவளென்று சொல்லத்தக்க செளந்தரியமுள்ள அந்தக்கணிகைமாதுக்கு ஒருராத்திரி வருகின்றவர்கள் கொடுக்கும் உரையாணிவைத்துமாற்றுப்பார்க்கவேண்டுவதல்லாத உயர்ந்தபொன்சாகை ஆயிரங் கழஞ்சென்றுசொல்லுவார்கள். எ - று. ஒருகழஞ்சு - பத்துப்பணவிடை. (உசு)

நாளுமன்னவணறுமலர்விதிமுறைதூவி
வேளெவென்றகண்விமலனவழிபடும்வேட
மாளுமன்பனையரெனவருளொடுபெணியுங்
கோளெறிந்ததிர்வறியவரிரவலர்கொடுக்கும்.

(இ - பு.) அத்தன்மையுடையவள் நாள்தோறும் வாசனைதங்கிய மலர்களால் ஆகமவிதிப்படி அருச்சித்து மன்மதனைவென்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை ஆராதனைசெய்யும் திருவேடமுடைய அன்பர்களைக்கண்டு சிவமெனஉள்ளமுருகி வந்தனைசெய்வாள். இதுவுமன்றிக் குற்றம் நீங்கிய தரித்திரர்கள் யாசகர்வந்தால் அவர்களுக்குத் திரவியங்கொடுப்பாள். எ - று. (உஎ)

அறிவுகொண்டுயர்பொதுமகணாடகவ்விலரங்கிற்
பொறிகொள்சேவலும்வானரக்குழவியும்பொருந்தத்
தறியினிற்பிணித்தானக்கமணிபுனைதாமஞ்
செறிவுறுத்தவையிரண்டுக்குமெழில்பெறச்சேர்த்தி.

(இ - பு.) மெய்யறிவு உடையவளாயுயர்ந்த அந்தக் கணிகையானவள் நாடனஞ்செய்யும் நாடகசாலையில் புள்ளிகள் பொருந்திய சேவலும் வானரக்குட்டியும் பொருந்தத் தூணிற்கட்டி உருத்திராக்ஷமணிகள்கோத்தமாலையை அவ்விரண்டுக்கும் அழகுபெறத்தரித்து, எ - று. (உஅ)

வே று.

வானரமுடன்பழகிவாரணநடித்தல்
கானமர்கருங்குழலிதோழியொடுங்கண்

டானணம்வியர்ப்பநகைசெய்துவிளையாடித்
தானினிதமர்ந்துபலநாளுமனிசார்வாள்.

(இ - புணை.) வானரக்குட்டியுடன் பழகிக் கோழி நடிப்பதை வாசனை தங்கிய கரிய அளகத்தையுடையவள் தோழிகளுடன்பார்த்து முகம்வேர்க்கும் படி நகைசெய்து விளையாடி, இனிதாக அமர்ந்து நாள்தோறும அவைகளிடத் தில் தையையுடனிருப்பாள். எ - று. உக)

இன்னணநிகழ்ந்திடவிருந்தவண்மனைக்கண்
மின்னுசடிலப்பகவர்வேடநனிமெவிப்
பொன்னினுயர்பூதியொடுமக்கமணிபூணை
மன்னினன்மணிக்கடகமுன்கைவணிகேசன்.

(இ - புணை.) இவ்வாறு அன்புடனிருந்த அவள் வீட்டினில் பிரகாசியா நின்ற சடாமகுடத்தையுடைய முனிவர்வேடத்தைகுறைவறப் பொருந்திப் பொன்னிலுஞ்சிறந்த விபூதியும் ருத்திராக்ஷமும் தரித்துக்கொண்டு ரத்தினகட கம்பொருந்திய கரத்தையுடைய வைசியத்தலைவனாகியஒருவன்வந்தான். எ-று.

கண்டனளெழுந்தன்ஸ்கலாமதிமுடித்தோன்
றொண்டனிவனென்றுமுறைமையோடெதாழுதெந்தாய்
மண்டலமதிக்கவடரிட்டுமணிதுற்றிக்
கொண்டகடகத்தின்விலைகூறுணாவென்றாள்.

(இ - புணை.) மானந்தையென்பவள் அவ்வணிகனைக்கண்டெழுந்துஇளந் திங்கள் அணிந்த சாம்பசிவமூர்த்தியினுடைய அடியாரிவரென்று முறைமையு டன் பணிந்து, என்னிறைவனே! இவ்வுலகத்தையெல்லாம் விலையாகமதிக்கும் படி பொன்தகடிட்டு மணிபதித்து அணிந்து கொண்டிருக்கும் ரத்தினகடகத் தின் விலை யாதோ எனக்குத் தெரியச்சொல்லென்றாள். எ - று. (ஈக)

சந்திரனெனத்திகழ்தனிக்குடைநிழற்கீழ்
வந்தமனர்முன்கையின்மணிக்கடகமியாவு
மிந்தவயிரக்கடகமொப்பதலவென்றுக்
குந்தகைவல்விகவர்வேட்கையோடுகூற.

(இ - புணை.) சந்திரனைப்போல விளங்குகின்ற ஒப்பற்ற குடையின்கீழ் வருகின்றமன்னவர் முன்கையில் அணிந்திருக்கும் ரத்தினகடகங்களெல்லாம் இந்தவயிரமணிக்கடகத்தை ஒப்பாகாதென்று இறகின் குருத்துப்போன்றநகை யையுடையாள் வாங்கிக்கொள்ளும் விருப்பமுண்டாகும்படிச்சொல்ல; எ - று.

வல்லியுனைசெய்ததுமனத்தணர்குறிப்பு
கல்லவணுணர்ந்துநகையாடிமடகல்லா

யெல்லொளிமணிக்கடகமின்னவிலையென்னச்
சொல்லுவனதற்குரிதியீதறுணிவாயோ.

(இ-புணை.) அப்பெண்பதில்கூறியதும், அவள்மனதில் எண்ணியகுறிப்பும் வந்தவைசியன் அறிந்துகொண்டு நகைசெய்து, பெண்ணே! சூரியனைப்போலப் பிரகாசிக்கும் இந்தரத்தினகடகம் இன்னவிலையென்று சொல்லுகிறேன், நீ அதற்குப் பொருள்கொடுக்கத் துணியமாட்டுவையோ? எ - று. (கூட)

என்றவனுரைத்தலுமிலங்கிழையியம்புங்
குன்றனையமீதாள்வணிககொங்கைகவிலைகூறும்
புன்றொழிலினர்கள்பொருள்கொண்டுபொருணல்கி
னன்றவர்கள்பெண்மையவர்நன்னலமுகன்றே.

(இ - புணை.) இவ்வாறு வைசியன் சொல்ல மானந்தை சொல்லுகிறாள் மலைபோன்ற புசங்களையுடைய வணிகசனே! தனங்களை விலைக்குவிற்கும் புன்றொழிலையுடையவர்கள் ஒருபொருளை வாங்கிக்கொண்டு அதற்கு விலையாகத்திரவியங் கொடுத்தால், அந்தப்பெண்களுடைய பெண்தன்மையும் இன்பமும் நன்றேயாகும்! எ - று. (கூ)

வாழ்பொதுநலக்கணிமைமாதர்நெடுமாயன்
வீழ்தருகவுத்துவமும்விற்குநெதிர்ந்தாற்
சூழ்கலவியிறமுழுவியேகுவர்வதல்லாற்
சூழ்நிதிவிலைக்குதவுறுல்லுலகிலுண்டோ.

(இ - புணை.) வாழ்கின்ற யாவர்க்கும் பொதுவாகிய இன்பத்தை யுடைய கணிகைமாதர்கள் மாயன்விரும்புகின்ற கவுத்துவமணியை யாரேனும் விற்பவர்கள் கொண்டுவந்தால, தங்கிய புணர்ச்சியினால் தழுவி வாங்கிக்கொள்ளுவதல்லது மிகுந்தரவியம் விலையாகக்கொடுப்பது பழமையாகிய இவ்வுலகத்திலுண்டோ? இல்லையல்லவா? எ - று. (கூ)

அன்பிலெடுகங்கணமெனங்கைதனிலிட்டான்
முன்புதினமூன்றுனதுமுல்லைமடவாளி
னின்பமுறமெல்லவணையில்யானவணவனென்னு,
மின்பொருவுநுண்ணிடைவிளங்கிழையியம்ப.

(இ - புணை.) இறைவனே! அன்புடன் இக்கக்கடகத்தையென்கையிலிட்டால், மூன்றுகால்வரைக்கும் உனக்குரிய முல்லைமாலையணிந்தமனைவிபோல இன்பம் உண்டாகச் சயனத்தில் உன்னைநான் அணைவேனென்று மின்போலும் நுண்ணிய இடையையுடைய கணிகைசொல்ல; எ - று. (கூ)

நன்குணைசெய்தாய்மணிசெய்நற்கடகமீவே
னென்குலமடங்ணதயினிசைந்தினமூன்றும்
புண்கணிலயிற்பிறர்கள்போகநுகோனென்
றின்கனிமொழிக்கணிகைசூளிடுதியென்றான்.

(இ - புணா.) கணிகைமாதே! நன்றுகச்சொல்லினை; இந்தக் கடகத்தை உன்கையிற் கொடுக்கிறேன், கொடுத்தால் எனக்குரியமனைவிபோலிருப்பதாக நீசொன்ன மூன்றுநாளும் சொன்னமொழிதவறி மற்றொருவர் போகத்தை அனுபவிக்கிறதில்லை யென்று ஒரு உறுதிவாத்தையைச் சொல்லென்றான். எ - று. சூள் - சத்தியம். (கூஎ)

வேறு.

புனிதவாணிகன் கூறியமொழிக்கவள்பொருந்தி
மனிதரேயனறிவாசவன்றானிவண்வரி னும்
மூனிவதன்றியேயயானகலேன்மூன்றுநாள்காறும்
பனிகொள்வேணியெம்பரன்றிருவாணையென்றிசைத்தாள்.

(இ - புணா.) கின்மலனுகிய அந்தவாணிகன் சொல்லிய வார்த்தைக்கு அவள் சம்மதித்து, மனிதர்களேயல்லாமல் தேவேந்திரன் இவிடத்தில் வந்தாலும் இந்த மூன்றுநாள் வரையில் நீக்கிவிடுவேமென யல்லாடல் நான்புணரேன்; தளிர்ச்சிதங்கிய சடைமுடியையுடைய சிவனது ஆணையின்படி யென்று சொன்னாள். எ - று. (கூஅ)

என்னுமானங்தை தனக்கவனிருள்கெடவிமைத்து
மின்னுமாமணிக்கடகத்தைவிருப்பொடுநல்கிப்
பின்னுமீதாருமாணிக்கவிலிங்கமீபேணி
யன்னமேபுரகதனக்குமீட்டளித்தியோவென்றான்.

(இ - புணா) என்று சொல்லிய மானகதையெனு மருக்கு வணிகன் இருள்கெட இமைக்கும் ரத்தினக்கடகத்தை விருப்பமுடனகொடுத்து மறுபடி ஒருமாணிக்கலிலிங்கத்தைக்காட்டி அன்னப்போல்பவனே! இதைப்பத்திரமாக வைத்திருந்து மறுபடி யெனக்குக்கொடுப்பையோவென்றான். எ - று. (கூசு)

அணங்குசீர்மையளன்னதுசெய்வனென்றதனை
வணங்கிவாங்கித்தன்னுடகவாங்கினில்வைத்து
யிணங்குமாலைவந்திறுத்தலுங்கணவன்மார்பிறுகச்
சுணங்குவாய்ந்தகழுவனமுலைச்சுவடுறத்தோய்ந்தாள்.

(இ - புணா.) நெய்வப்பெண்ணையொத்த தன்மையையுடைய மானந்தை யென்பவள் அப்படியே செய்கிறேனென்று சொல்லி, வணக்கஞ்செய்து அந்த

விக்கத்தை வாங்கிக்கொண்டு தன்னுடைய நாடகசாலையினிடத்தில் வைத்து மாலைப்பொழுதுவந்தவளவில் தன்கணவனுடைய வணிகன்மார்பில் தேமலைப்பொருந்தி வளர்ந்திருக்கும் அழகிய தன் தனங்களின் தழும்புபொருந்தி யழுந்தப்புணர்ந்திருந்தாள். எ - று. (சஅ)

காமவேளுங்கல்லிரதியுமென்னவேகலந்து
தூமமல்கியசேக்கையிற்றுயில்கொளநோக்கி
எரியாமமெய்தியவேலபிலெரியழல்கதுவித்
தாமநான்றபொன்னரங்கினைமுருக்குவான்சமைந்தே.

(இ - புணை.) மன்மதனும் ரதியும்போலக் கலந்து வாசனைப்புகையமைந்த சயனத்தில் நித்திரைசெய்யும் அர்த்தராத்திரியான வேளையில், ரத்தினமாலைகள் கட்டிய பொன்னாலாகிய நாடகசாலை வேகுட்பட்டதியானது பற்றிக்கொண்டு,

மஞ்சுபோற்றவழ்புனையொடுபுலிங்கங்கண்மலியச்
செஞ்சிகைக்கணக்கதழெரிபற்றுபுசெல்லத்
துஞ்சுமேல்லையிலிருவருந்துண்ணெனவீழியா
வஞ்சியோடினரன்னமுஞ்சேவலுமென்ன.

(இ - புணை) அவர்கள்நித்திரைசெய்யும்போது மேகம்போலத்தவழ்கின்ற புகையுடன் தீப்பொறிகள் நெருங்கத் தக்கதாகச் சிவந்த சிகைகளைவிட்டெழுகின்ற அக்கினியானது அதிவேகமாகப்பற்றிக்கொண்டு வீடுமுழுவதும் எரிக்க, அவ்விருவரும் திடுக்கிட்டு நித்திரை நீங்கிப்பெட்டையன்னமும் ஆணன்னமும் ஓடுவதுபோலப்பயந்து ஓடினர்கள். எ - று. புலிங்கம் - தீப்பொறி. (சஉ)

ஓடும்வேலையிணைடொடிபொருக்கெனத்திரும்பி
யாடுநாடகவரங்கினிலரம்மணியணிந்த
கோடுவாழ்சிறுகுரங்கொடுசெஞ்சிறைக்கோழி
நேடுவாளனைவகண்டுறுபிணியினெகிழ்த்தாள்.

(இ - புணை.) அவ்வாறு ஓடும்போது மானந்தையென்பவள் விரைவில் திரும்பி நிர்த்தனஞ்செய்யும் நாடகசாலையில் கிளைகளில்வாசஞ்செய்யும் (ருத்திராக்ஷந்தரிக்கப்பட்ட)குரங்குக்குட்டியினையும் சிவந்த உச்சிக்கொண்டையையுடைய கோழியினையுந் தேடிக்கண்டு கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டாள். எ - று. (சஊ)

பிணிநெகிழ்த்தலுங்குரங்குமச்சேவலும்பெயர்ந்து
கணவெரிக்குழாங்கதுவுறுமல்லையைக்கடந்த
வணிகனல்கியவல்லிரொளிமாணிக்கவிங்க
முணருமுன்னமேமீற்றழலெங்கொழுந்தவே.

(இ - புணை.) கட்டவிழ்த்த விட்டமாத்திரத்தில் குரங்குக் கோழியும் பற்றிக்கொண்டெறியுங் கூட்டமாகிய தீயிருக்கு மிடத்தைவிட்டு அப்புறம் போய்விட்டன. அந்தவர்த்தகன் கொடுத்தமாணிக்க லிங்கமானது மானைத்தைக்கு ரூபகம் வருவதற்குமுன் வெந்துநீறுபோய்விட்டது. எ - று. (சஅ)

தூரவேகின்றன்னது கண்டதொல்வணி
ரூரிகாண்டியோகன்றருசிவலிங்கதாதன்
மூரிவெங்கனன்முருக்கிடச்சாம்பராய்முடியத்
தீருமின்றெடன்வாழ்வெனத்துயரொடுசெப்ப.

(இ - புணை.) தூரமாகப்போய்நின்ற வர்த்தகன் மாணிக்கலிங்கம் வெந்தபோனதைப்பார்த்துப் பெண்ணே! நான் உன்கையிற்கொடுத்த சிவலிங்கப் பெருமான் பலமுற்றத்தீப்பற்றுதலால் வெந்து சாம்பலாய் விட்டதைக்கண்டனையோ? ஆதலால், என்வாழ்நாளின்றே முடிந்து விடுமென்று துயரத்துடன் சொன்னன். எ - று. (சக)

இறைவலீக்கையாலிணைமுலைக்குவட்டிடைபெற்றி
மறுகிசம்பனேசங்காவென்றுவாய்விட்டுக்
கறைதரித்தவேற்கண்ணினீர்கலுழியாபொழுக
வறிவழிந்தவளற்றலும்வணிகனுமறைவான்.

(இ - புணை.) அதைக்கேட்ட மானந்தையானவள் வாயலணிந்தகைகளால் இரண்டு தனத்தின்மேலும் மோதிக்கொண்டு, துயரமுற்றுநம்பனே! சங்காரனே! என்று வாய்திறந்து உதிரம்படியத்தக்கவேல்போன்ற கண்களில் ஆறுபோல நீர்பெருகும்படி அழுது அறிவழிந்து சோர்ந்துவிட்டாள்; அதைக்கண்டவணிகன் சொல்லுகிறன். எ - று. (சக)

நரந்தவார்குழற்புணர்முலைநறுமலர்க்கொம்பே
யிரங்கலெம்மமேனித்துயர்வரினுயிர்க்கிரங்கா
ரரங்கிலேன்சிவலிங்கம்வெந்தடலையாய்விடுமேற்
புரந்தராதியர்விலக்கினுமழனிடைப்புகுவேன்.

(இ - புணை.) மயிர்ச்சாந்தணிந்த நீண்ட அளகத்தையும் கொருங்கியதனங்களையுமுடைய நறிய பூங்கொம்புபோல்பவளே! நீ துயரப்படவேண்டாம்; எம்போலியருக்கு இவ்விதத்தன்பம் நேரிட்டால் உயிரைப்போக்கிக் கொள்வார்களேயன்றி, அதையெப்படிவிடுகிறதென்று இரங்கார்கள்; நாடகசாலையில்வைத்தனன்சிவலிங்கம்வெந்து சாம்பராய் விடுமானால், தேவேந்திரன் முதலானவர்கள் வந்து விலக்கினாலும் தீயில்விழுந்துவிடுவேன். எ - று. (கஎ)

மற்றுநீயொன்றுங்கினைகலையனவிடைமடியப்
பற்றுமிந்தனமுடுக்கியேபடுகனல்வளர்க்கக்

கற்றையங்குழன்மடந்தைதீபணியெனக்கழறச்
சிற்றிடைகொடியுருமுவீழரவெனத்திகையா.

(இ - புரை) நீ வேலொன்றும் நினைக்காதே, நீயில்விழுந்து காணிறப்பு தற்கு உலர்ந்தவிறகுகளை யடுக்கி எரியுந்தீயை மூட்டும்படி நெருங்கிய அளகத்தையுடையவளே! நீ உத்தரவுசெய்யென்று வணிகன்சொல்லச் சிறிய இடையையுடையவளாய்க் கொடிபோன்ற மானந்தையானவள், யிடியுண்டமாகம் போற்றிகைத்து, எ - று. (சஅ)

வேண்டுநீணிதியளிக்குவேதியர்க்காற்றிப்
பூண்டமாவிரதத்தையும்வழுவறப்போற்றி
யாண்டகைப்பெருவணிகரீயழல்புகும்வண்ண
மீண்டுதீதறக்குரவராலியற்றுதியென்றாள்.

(இ - புரை.) யாதொன்றுக்கும் அஞ்சாத நிலைமையையுடைய வணிகேசனே! வேண்டிய திரவியங்கள் கொடுக்கிறேன், பிராமணர்களுக்குக் கொடுத்துச் செய்யத்தக்கவிரதங்களையும் பழுதறச்செய்து, இப்போது நீ தீயில்விழும்படி நேரிட்டகுற்றம் நீங்கத்தக்கதாகப் பெரியோர்களைக்கொண்டு பிராய்ச்சித்தஞ் செய்துக்கொள் என்றாள். எ - று. (சக)

நிலம்பொறுக்கலாச்செம்பொனினைறகுடிப்பிறந்தேன்
கலம்பொறுக்கலாநுசுப்பினையவறியர்போற்கருதிக்
குலம்பொறுக்கலாவிழிந்தசொற்கூறுதறவிர்ந்து
கலம்பொறுக்கலாக்கதழிரிவளர்த்திடச்சமைவாய்.

(இ - புரை.) பூமியுந் தாங்கமாட்டாத மிகுந்த பொன்னையுடைய குடியிற் பிறந்தேன், ஆபரணங்களைத் தாங்கமாட்டாத நுண்ணிய இடையையுடையவளே! நீ என்னை வறுமையாளர்போல நினைத்து எங்கள் குலம்பொறுக்காத இழிவான வார்த்தைசொல்லுவதை விட்டு இவ்வுலகத்தார் பார்த்துச்சகிக்கக் கூடாததானவேகமாய் மூளும் தீ மூட்டுவாயாக என்று வணிகன்சொன்னன். எ - று. (ஙo)

என்றுசிறியசுடுசொலால்வணிகர்கோனிசைப்பக்
குன்றுபோலுயர்கொங்கையாண்மறுப்பதுகொளாது
பொன்றுவானென்றுபொருக்கெனச்சிலதரைக்கூவித்
தன்றுமாமுலுவர்படுத்தியற்றுமினென்றாள்.

(இ - புரை.) இவ்வாறுகோபித்துச் சுடுசொல்லினால் வணிகேசன் சொல்லவே பொன்மலைபோல்வளர்ந்த தனத்தையுடைய மானந்தையானவள் தான்

தடுப்பதை யொத்துக்கொள்ளாமல் இறந்துபோவானென்று நிச்சயித்துக் கொண்டு ஏவலாளிகளை அழைத்து விறகுகளிட்டு விரைவாகத் தீமூட்டுங்க ளென்றாள். எ - று. (௫௪)

நிலதர்மானந்தபணியினத்தலைக்கொடுசென்றுங்
கலகிலாத்துவாடுக்கினாராழல்கொளுவி
யிலகுபோழற்சிகையெழவிழுதுபெய்குழிசி
பலவும்வீசினெழுந்ததுகொழுங்கனற்படலம்.

(இ - புணை.) அந்த ஏவலாளிகள் மானங்தை கட்டளை யிட்டவார்த்தை யைச் சிரசிலேற்றுக்கொண்டுபோய், அளவில்லாத விறகுகள் அடுக்கித் தீமூட்டி தீச்சிகைமேலோங்கும்படிக் குடங்குடமாக நெய்யை ஊற்றினார்கள். அப்படி ஊற்றின அளவில் கொடியதீயானது (கற்றைகற்றையாகச் சிகைவிட்டுக் கொண்டு) மேலோங்கிவளர்ந்தது. எ - று. (௫௨)

கண்டதாபதவணிகர்கோன்கடிபுனன்மூழ்கி
மண்டுதீயினைமும்முறைவலஞ்செய்துவணங்கித்
துண்டவான்பிறைமௌலியான்றிருவடிதொழுதே
யண்டகூடமட்டாவொலியெழவணற்குளித்தான்.

(இ - புணை.) அதைக்கண்ட வணிகமுனிவன் வாசனைதங்கிய நீரில் ஸ்நா நஞ்செய்து கொழுந்துவிட் டெரியுந்தீயை மூன்று பிரதக்ஷிணஞ் செய்து வணங்கி, இளம்பிறை யணிந்தருளிய சடாமகுடத்தையுடைய சிவபெருமான் திருவடிகளைத்தொழுது அண்டகூடவரையில் ஓசையெழும்படி அத்தத்தீயில் மூழ்கினான். எ - று. (௫௩)

வேறு.

இந்தவாறுகண்டுதுண்டமெய்திநின்றவேலையும்
பந்தமாயகேளிர்தம்முகம்பரிந்துபார்த்திவண்
முந்துமங்கியிற்படமுடிந்தாய்கன்முன்னமே
தந்தகங்கணமிதற்கினையந்தவாறுசாற்றுகேன்.

(இ - புணை.) அந்தவணிகேசன் தீயில் மூழ்கினதைக்கண்டு துயரங்கொ ண்டுநின்ற மானங்தையானவள், தனக்குப்பந்தமாயிருக்கிற சுற்றத்தார்முகங் களைப்பார்த்து, கேளுங்கள் பந்துக்களே! இப்போது இத்தீயில் விழுந்து இறந்து போனவணிகேசன்கொடுத்தது இந்தக்கங்கணம், இதைக்குறித்து நடந்தசெய்தி சொல்லுகிறேன். (௫௪)

இக்கடாகல்விலக்குழுமன்றுகாளிணைந்தின்
புக்கின்மேவுகற்பின்மாதுபோலவாழ்வனென்றியான்

ரொக்கனிலாருயிர்துறந்துநாய்கண்மாய்ந்தகா
லொக்கயாணுமாரழற்குளிப்பதன்றியுய்கலென்.

(இ - புணா.) இக்கடகம் பெறுமான விலைக்காக மூன்றுநாள்உனதுவாழ்க்கைக்குரிய மனைவிபோல உன்னுடன் நான் வாழ்கிறேனென்று சம்மதித்துக் கொண்டேன்; அந்தமூன்றுநாளுக்குள் வணிகேசன் உயிர்துறந்து இறந்தபிறகு, நானும் அவனுடன் இத்தத்தீயில்விழுந்து இறப்பதல்லது இனியுயிருடன்வாழேன். எ - று. (நடு)

அன்னலிங்கமென்கையிலளித்தபோதுமற்றவன்
சொன்னதுண்டெனுவியாய்த்துணிந்துபோற்றவையென
வென்னைபாவியேனபிழைத்தவாறிலிங்கம்வெந்ததாற்
றன்னைநேரிலாதசைவநாய்கனசாதன்மேயினன்.

(இ - புணா) அத்தச்சிவலிங்கத்தை வணிகேசன் என் கையிற் கொடுத்தபோது இது என் உயிரேபோலிருப்பது ஆகையால், பத்திரமாகக்காத்துத்தருவா என்று சொன்னதுண்டு, அப்படியிருக்கப் பாவியாகிய நான மதிமோசம் போனேனே, இது என்னகாரணம், சிவலிங்கமவெந்துபோய்விட்டபடியால், தனக்கொப்பிலலாத சைவசமயப்பத்திமையுள்ள அவ்வணிகேசன் இறந்துபோனன்.

என்னிமித்தமாகவந்ததித்துணையுமாதலால்
வன்னியிறகுளிப்பதன்றிவாய்மைபொய்த்துவாழ்வனே
முன்னுரைதகவாகமம்புராணம்வேதமுதலவாய்ச்
சொன்னசொன்னயாவையுந்தொகுத்தவுண்மையல்லவோ.

(இ-புணா.) இத்தனைகாரியமும் என்னிமித்தம் நேரிட்டதாகையால், தீயில்விழுவதல்லது சொன்னசொல்தவறி உயிர்வாழ்கிலேன்; சொன்னசொல் தவறலாகாதென்று நம்முடைய ஆண்டவனால் சொல்லப்பட்ட ஆகமங்கள்புராணங்கள் வேதங்கள்முதலாகிய எல்லாவற்றிலும் விதித்திருக்கிறஉண்மையல்லவோ?」

வேலைவேலையுள்ளடங்கிமீதுயர்ந்துநிற்பதுங்
காலைமாலைபானுவெண்கலாமதியுதிப்பது
ஞாலமாதிபூதமைந்துநண்ணினியன்றுநிற்பது
மாலகாலமுண்டவீசனுண்மையன்றியாகுமோ.

(இ - புணா.) சமுத்திரமானது கரைக்குள் அடங்கி மேலுயர்ந்து நிற்பதும், காலைமாலைகளில் முறையாகச் சூரியசந்திரர்கள் உதிப்பதும் பிருதிவிமுதலாகிய பஞ்சபூதங்கள் பொருந்தி எப்போதும் நிருப்பதும் ஆலகாலம் உண்டபரமசிவனுடைய ஆக்கினையன்றி உண்டாகாதாதலால், எ - று. வேலை-கரை.

வாய்மைதப்பினர்களிக்குமாநிலத்திலீனராய்த்
தீய்மையுற்றுமேலுலோர்பழிக்கவேதிரிக்குபின்
றாய்மையற்றகும்பியுட்டுளாந்தழுங்குவாரென
வாய்மனுப்பகர்ந்தவேதசாகைமுற்றுமறையுமே.

(இ - புணை.) உண்மை தவறியவர்கள் இவ்வுலகத்தில் ஈனர்களாய்ப்பாவ
த்தை அடைந்து பெரியோர்கள் பழிக்கும்படித்திரிந்த, பின்பு தாய்மையற்ற
கும்பிபாகமென்னும் நரகத்தில்விழுந்து, வருந்துவார்களென்று வாய்மையுற்ற
மந்திரங்களை பகர்கின்ற வேதமுழுதுஞ் சொல்லுகின்றன. எ - று. (நுக)

ஆதலாலெனைக்குறித்தழுங்குமாறடாதென
மாதராடெருட்டியீட்டுமாநிதிக்குவையெலாம்
வேதவேதியர்க்குமாவிரதியாக்கும்வறியராய்ப்
போதுகர்க்குமகமகிழ்ந்துபோதுமென்னநல்கியே.

(இ - புணை.) ஆசையால், என்னைக்குறித்து நீங்கள் வருத்தப்படுவதுதகா
தென்று மானங்தை தன்சுற்றத்தார் தெளியும்படி சொல்லித் தான்சம்பாதித்த
திரவியங்களையெல்லாம் வேதமோதியபிராமணர்களுக்கும், பெரிதாகியவிரதங்
களை அனுஷ்டிக்கும் தபசிகளுக்கும், ஏழைகளாய் வருபவர்கட்கும் போதுமென்
னுமட்டும் வெறுக்கக்கொடுத்து, எ - று. (சுo)

மோனமாகிரீன்முழ்கிமுப்புரத்தைதவென்றசீர்
ஞானநாதனடிவணங்கிநல்லழற்பிழம்புறுந்
தானமேவலங்கொடெய்திவீழுமெல்லைதன்னிலே
வானிலாமுடித்தலேவணரிவள்ளலவந்துதோன்றினன்.

(இ - புணை) மௌனவிரதங்கொண்டு ஒருவருடனும் பேசாமல் நீரில்
ஸ்நானஞ்செய்து திரிபுரதகனஞ்செய்த மெய்ஞ்ஞான சொரூபியாகிய பரமசிவ
னுடைய திருவடிகளை வணங்கி நல்ல தீப்பிழம்பைப்பிரதக்ஷிணஞ்செய்து அக்கி
னிக்குண்டத்தில் விழப்போகும் சமயத்திலே இளந்திங்கள் அணிந்த சடைமுடி
யையுடையகயிலாசபதியானவர் தரிசனமானார். எ - று. (சுக)

கொன்றைதுன்றுவேணியுங்குளிர்ந்தவைகுதனமுங்
கன்றனீலகண்டமுங்கராசமோருகங்களு
மின்றிரிந்தமேருவாய்விளக்குதோளுமுந்தியுங்
துன்றுதாளுமுண்டுகண்டுதாகைவீழ்ந்திறைஞ்சினன்.

(இ - புணை.) கொன்றைமாலை யணிந்த சடாமகுடமும், குளிர்ச்சியுள்ள
ஐந்துதிருமுகங்களும்; கறுத்தகாளகண்டமும், செந்தாமரைமலர்போன்ற திரு

அத்தங்களனும், ஒளிகொண்ட பொன்மலைபோல விளங்குந் திருப்புசங்களும், திருவுந்தியும் பொருந்திய திருவடிகளுந் தரிசனமாகக்கண்டு மானந்தையென் பவள் பூமியில்விழுந்து பணிகதாள். எ - று. (கூ உ)

மங்கைகணீகனற்குள்ளீழ்தலொழிதின்மனத்தினிற்
றங்குமுண்மையுணருவான்சமைந்துபொன்செய்கடகமோ
டிங்குவந்தமளவளாயெரிக்கண்விழ்ந்தவணிகன்யான்
கங்குல்வாய்த்துணிந்துநின்றகருமமன்றுமன்றரோ.

(இ - புனை) அவ்வாறு சேவித்து நிற்பவனைப்பார்த்து, அடியாளே! நீ நீக்குள்விழுவதை நீங்கு, உன்மனதிற் பொருந்திய மெய்யன்பினை யிவ்வுலகத் தாருக்குத்தெரிவிக்கும்பொருட்டுப் பொன்றைச்செய்யப்பட்ட கடகத்தினுடன் இவ்விடத்தக்குவந்து உன்னுடன் அளவளாவித் தீயில்விழுந்தவணிகன்நாமே. இந்த ராத்திரியில் நீ தீயில்விழும்படி நிச்சயித்தகாரியம் மிகவும் நன்று நன்று.

பொதுமடந்தைமார்கேடுபொருளினைசீங்கியே
மதியிலங்குநுதலின்னில்வாய்மைபேணவல்லரோ
வதிசயம்புவிக்கணீதுபுதிதுகண்டறிந்தனங்
கதிதெரிந்துபெறுபதத்திலவிழுதலேதகழறுவாய்.

(இ - புனை.) பிறைபோல் வளைவாகிய நெற்றியையுடையவளே! பொது மகளாயிருப்பவர்கள் பொருளாசையைவிட்டு உன்னைப்போலச் சத்தியத்தைக் காப்பாற்றுவார்களோ! இவ்வுலகத்தில் இது அதிசயமானகாரியம்; நவமாகக் கண்டறிந்தோம்; நீ அடையவேண்டியபதவியெதுவோ அதைவிரும்பியவண் ணஞ்சொல்லுவாயாக. எ - று. (கூ ச)

வேறு.

என்றுபரமனியம்புமதுகேட்டுக்
குன்றுமரனுங்குழைத்துருகக்கோற்றொடியா
ணின்றுதொழுதுநீமலர்தினடியே
னென்றுமறியேனுரைப்பதுளங்கொள்ளேன்.

(இ - புனை) இவ்வண்ணம் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைக் கேட்டு மலைகளும் மரங்களும் நின்றுருகுப்படி மானந்தையென்பவள்எழுந்து தொழுது, நிருமலனே! உன்னடியவளாகிய நான் ஒன்றுமறியாதவள்; இன்ன வாறு உனைனத்துதிப்பதென்பதும் அறியேன். எ - று. (கூ டு)

தேவரேயாதிதிரிபுவனத்துள்ளோர்க
ளேவரேவாழும்பதமுமினிவேண்டேன்
மூவரேயாகிகருணைமூன்றுரூபமுத்தொழிற்குங்
காவலேயாகிக்கடந்துநின்றகாரணனே.

(இ - புணை.) தேவர்கள்முதல் திரிலோகத்தி லிருப்பவர்களில் எவர்கள் வாழும்பதவியும் யான் இனிவேண்டேன்; திரிமூர்த்திகளாகியும் மூக்குணங்களாகியும் மூத்தொழிற்குங் காவலாகியும் இவைகளெயெல்லாங்கடந்த, காரணனுமிருக்கும் ஆண்டவனே! எ - று. (சுசு)

அன்புற்றெனதுகிளைஞராவோருந்
துன்பக்கடலுட்டுளையாதனைப்போல
வின்பச்சிவபதத்தையெய்தியினிதாக
வன்புற்றனதடிக்கீழ்வாழவருளென்றாள்.

(இ - புணை.) சுவாமீ! அடியாள் தேவர்களுனைக்குப் பாத்திரமாகிறதோடு, அன்புள்ள என் சுற்றத்தார் எல்லாரும் திக்கசாகரத்தில் முழுகாமல் அடியேனைப்போலப் பேரின்பமுள்ள சிவலோகத்திற்சேர்ந்து இன்பமுடன் எக்காலமும் ஒரேதன்மையாக வாழும்படிக் கிருபைசெய்யவேண்டுமென்றாள். எ - று.

கோட்டிவிடையமர்ந்தகோமான்குயின்மொழியாள்
கேட்டவரமனைத்துமீந்தோமெனக்களித்தி
யீட்டுபெருங்கிளைஞரெல்லாரொடுமிவள்போய்
வீட்டுநெறிப்பேரின்பமேய்ப்பணித்தகன்றாள்.

(இ - புணை.) கொம்பினையுடைய ருஷபவாகன ஆரோஹணரான பரமசிவன் மானந்தைகேட்ட வரமெல்லாங் கொடுத்தோமென்று திருவாய்மலர்ந்தருளி, சுற்றத்தாருடன்பேரின்பவீட்டிற்போய்ச்சேரும்படி அருளிச்செய்து, கயிலையங்கிரிக்கு எழுந்தருளினர். எ - று. (சுஅ)

ஆடரங்கைத்தீமுருக்கும்வேலையணங்கனையாள்
கூடுபிணிநெகிழ்த்தவானாமுங்கோழியும்போய்
நீடுபலகாலநிலவுலயத்தேயிருந்து
வீடுரைங்குகண்டாய்வேந்தேநின்கான்முளையே.

(இ - புணை.) நாடகசாலையைத் திபற்றி யெரிக்குங்காலத்தில், தெய்வப்பெண்ணையொத்த மானந்தையானவள் கட்டவிழ்த்துவிடவே குரங்குங்கோழியும் போய் நெடுங்காலம் இவ்வுலகத்தி லிருந்து இறந்துபோன குரங்குதான் உன்புத்திரன். எ - று. (சுக)

சோரிபொடித்தனையசூட்டெழில்கொள்வாரணங்காண்
சீரியசொற்றேருமமைச்சன்சிறுவனிவர்
பாரிலவதரித்தும்பண்டிடையுவாதனைகாண்
பேரியலிணக்கமணிபூதிபெற்றணைந்தார்.

(இ - புணை.) உதிரம்பொடித்ததையொத்தவுச்சிக்கொண்டையையுடைய கோழிதான்சிறப்புள்ள சாத்திரங்கள் உணர்ந்த மந்திரிகுமாரன், இவர்களிருவரும் பூலோகத்திற்பிறந்தும், பூர்வஜாசனையிலுல் விசாரணமுறைமையுடன் ருத்திராக்ஷமும் விபூதியும் விரும்பி யணிக்தார்கள். எ - று. (எ0)

முன்னையிறந்தபிறப்பின்முதல்வன்மணி
தன்னையணிந்ததபோபலத்தின்றன்மையான்
மன்னர்தொழுமன்னுவனக்குமதலையுமாய்க்
கன்னிமதியமைச்சன்கான்முளையுமாயினரே.

(இ - புணை.) மன்னர்தொழும் மன்னனே! முன்னீங்கிய பிறவியில் பரமசிவனுடைய மணியாகிய ருத்திராக்ஷத்தைத்தரித்த தபோபலத்திலுல், உனக்கும் கன்மதியையுடைய அமைச்சனுக்கும் குமாரர்களானார்கள். எ - று. (எக)

காளையிளைஞரிருவாருங்கண்ணுதலோன்
றாளைதெடுநாட்டணைவாதருச்சித்து
வாளையுகளும்வளநாடினிதாண்டு
வேளையெரித்தோனருளால்வீட்டின்பமெய்துவாரால்.

(இ - புணை.) இந்த இரண்டுபுத்திரர்களும் பரமசிவனுடைய திருவடிகளை இடைவிடாமல் நெடுநாள் பூசித்து வாளைகள் குதிக்கும் நீர்வளமுள்ள இந்தத்தேசத்தை யின்பமுடன் ஆண்டு,காமதகனராகிய பரமசிவனுடைய திருவருளிலுல் மோக்ஷம் அடைவார்கள். எ - று. (எஉ)

ஈங்கிவர்கள்முன்னையியல்புமியன்றதவு
மாங்கதனினையபயனுலடைந்ததவுந்
தீங்கறநாங்கூறினேந்தேர்வேந்தேநின்மனத்து
லோங்குவினைழுவால்வினவலுண்டேலுரையென்றான்.

(இ - புணை.) இவ்விருவருடைய முற்பிறப்பின் றன்மையையும் அப்போது நடந்ததையும் அதனுல் அடையவேண்டிய பயனை யிப்போது அடைந்ததையும் குற்றமற நாம் உனக்குச்சொன்னோம். தேரையுடைய அரசனே! உன்மனதில் மிகுந்தவிருப்பத்தினுல் இன்னம் எதாவது கேட்கவேண்டியதிருந்தால் பராசரமுனிவர்சொன்னர். எ - று. (எக)

இருபதாவது

ஸ்ரீருத்திராக்ஷமகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ திருவிருத்தம் தூரறுக.

இருபத்தொன்றுவது
சிருருத்திராமகிமை உரைத்த அத்தியாயம்.

என்னமுனிசூதனினிதியம்பிமாதவத்தீர்
மன்னர்மன்னன்மீட்டுமந்தமாதவனைத்தாள்போற்றிப்
பன்னிவினவுவதுகேட்டுப்பராசரனர்
பின்னுமுரைத்ததைகேண்மினெனப்பேசினன்.

(இ - புனை.) இவ்வாறு சூதமுனிவர்சொல்லி நைமிசாரணிய முனிவாகளே! அவ்வரசனவன் பராசருடைய பாதங்களிற்பணிந்துதுதித்து விரைவுதலைக்கேட்டு மேலும் அவர்சொல்லிய சிவசரித்திரத்தைக் கேளுங்களென்று சொன்னர். எ - று. (க)

வேறு.

ஓங்கியபேருவகையினுடனெழுந்தமன்னவர்கோன்
றேங்கமழுநறுந்தெரியன்முடிதாழச்சென்றிறைஞ்சிப்
பூங்கமலத்தயனனையபுகழ்முனியேயின்னருளாற்
ருங்கரியமனமாயைதணந்தமிவின்றலைநின்றேறன்.

(இ - புனை.) மிகுந்த சந்தோஷத்தையுடைய அவ்வரசன் பராசர முனிவருடைய பாதங்களில் தன்வாசனைகமழும் பூமாலையணிந்த மகுடம் படும்படி பணிந்து, பிரம்மதேவனையொத்தபுகழுள்ள முனிவரே! தேவரீருடைய கிருபையினால் தாங்குதற்கரியமனமாயைநீங்கி அறிவினிடத்தில் நின்றேன். எ-று. (உ)

மைமந்தன்வரலாறனைத்துங்
கந்தனையவிளங்காளையினிக்காசினியை
யெந்தவகைபுரப்பான்வாழ்நாண்மற்றெத்துணையுண்
டந்தமுறைதானுமடியேற்கருள்கென்றான்.

(இ - புனை.) சுவாமிகளே! என்புத்திரனுடைய வரலாறெல்லாங்கேட்டு மனமகிழ்ந்தேன்; சிவசுப்பிரமணியக்கடவுளையொத்த இவ்வாலிபன் இனி எவ்விதமாக உலகத்தை யாளுவான்? ஆயிசு எவ்வளவிருக்கின்றது? அதையிபரமாக அருளவேண்டுமென்றான். எ - று. (ங)

செம்பொனமுடிக்கூரில்கேட்டியதுசெப்பினைற்
கம்பமுறநெஞ்சங்கலங்கித்துயருழப்ப

ரும்பர் முதலோருமென்ரு லுணர்கெய்தும்
வெம்புகொடுந்துயரம்யாரேவிலக்கிற்பார்.

(இ - புணை.) டொன்ரூற்செய்யப்பட்டமகுடந்தரித்த அரசனே! சொல்லுகிறேன்கேள், என்னவெனில், அதைச்சொன்ரூல் தேவர்முதலானவர்களும் கடக்கமுண்டாக மனங்கலங்கித்துயரம் அடைவார்களென்ரூல், உனக்கு மேரி மம் கொடியதுயரத்தை யார்விலக்குவார்கள்? எ - று. (மு)

எவ்விடருஞ்சாராவிறைவனருள்பெற்றமையார்
செவ்வழிதேர்வேல்வேம்தியான்செப்புகேணின்புதல்வ
னவ்வியபொல்றில்லாதாணைநிரண்டாண்டின்றடைந்தான்
கவ்வையுரலின்றுமுதலோரேழ்நினங்கடந்தால்.

(இ - புணை.) பரமசிவனுடைய திருவருள் கிடைத்திருப்பதினால்யாதொரு துன்பமும்சேரிடாது; வேலேந்திய அரசனே! யான்சொல்லுகிறேன், உன்புத்தி ரன்பாபமென்பது சிறிதுமில்லாதவன், இப்போது பன்னிரண்டுவயதுள்ளவனா யினான்; துன்பம் அடையாதே இன்ரு முதல் எழுநாள்கடந்தால், எ - று. (ரு)

பாவதுதேவதிண்ணைமெனமுனிவனசாற்றுதலு
மேவுபடாச்சாயலிகலிமானேறுபோற்
காவலன்பேதினிமேல்வீழ்ந்துகடைக்கண்முத்தம்
நாவநிலையில்லாத்துயர்க்கடலுண்மூழ்கினான்.

(இ - புணை.) இறப்பது நிச்சயமென்று முனிவன் சொல்லவும், அம்புபட்டமாத்திரத்தில் விழுந்து விடுஞ் சிங்கம்போல அரசன் பூமியில்விழுந்துகடைக்கண் நீர்த்துளியைச் சிந்தும்படி நிலைபடாத் துயரக்கடலில் ஆழ்ந்தான். எ-று.

தாங்கிமுனிவனெடுத்துத்தாபதியை
வீங்குதுயர்மாற்றிவிழிநீரறநீவி
யோங்குபொலன்கரத்துற்றகறுத்தெண்ணீரை
வாங்கிமுகங்கழீஇவந்ததுயர்தீர்க்கினான்.

(இ - புணை.) துக்கசாகரத்தில் முழுகிய அரசனைப் பராசரமுனிவர் தாங்கியெடுத்துத் துயரம்நீக்கிக் கண்ணீரைத்துடைத்து மாற்றுயர்ந்த பொன் கரகத்திலிருந்த தெளிவுள்ளநீரைக் கையில் வார்த்துக்கொண்டு, அவ்வரசன் முகத்தைக் கழுவி, சோரிட்ட துயரச்சோபத்தை நீக்கினார். எ-று.

வெழ்விணையுருத்தகாலத்நிறுதவத்தீன்றதற்றாய்
மீழ்முலைசுரந்தபாலுமுண்டிலிவ்வெய்பசஞ்சா

ஈழ்டடற்பிறந்தருஞ்சுமுண்டபினமிர்தமென்றுல்
வாழியபாந்தரெல்லாமிருவினைவயத்தர்மன்னு.

(இ - புனை.) அரசனே! ஊழ்வினை சம்பவித்தகாலத்தில் மிகுந்த தவத்தினால் பெற்ற தாயின் முலையினின்று சுரந்தபாலும் உண்டபின் கொடிய நஞ்சு போலாகும்; நல்வினையுற்றகாலத்தில் ஆழ்ந்தகடலில் உண்டாகிய விடமும் உண்டபின் தேவாமிர்தம்போலாகும் என்றுல், மனிதர்களெல்லாம் இருவினை வசப்பட்டவர்களே. எ - று. வீழ்பால் - விரும்பப்பட்டபால். (அ)

இன்பம்வந்துற்றகாலையிருங்களியெய்தருவுந்
துன்பம்வந்துற்றகாலத்தியருழந்தழுதருவும்
மன்பனைதபுரக்கும்வேந்தேயறிவிலார்மாட்சிலல்லோர்
தண்டமுமின்பந்தானுந்தொல்வினைத்தொடர்ச்சியென்பார்.

(இ - புனை) மனிதரைக்காக்கும் அரசனே! இன்பம்வந்து பொருந்தினகாலத்தில் மிகுந்த சந்தோஷத்தை அடைவதும், துன்பம்வந்து பொருந்தினபோது துயரப்பட்டு அழுவதும், அறிவில்லாசெய்கை; அறிவுள்ளவர்கள் சுகதுக்கங்கள் பழவினைத் தொடர்ச்சியென்பார்கள். எ - று (சு)

ஆதலால்வருந்தல்கேட்டியருபியாயமலனுகிச்
சோதியாய்நின்றவீசன்சுவேச்சையாங்குணங்கண்மூன்று
ளோதுராசதத்திலாதிவிரிஞ்சனையுதிப்பித்தன்றே
வேதநூலனைத்துமந்தவிரிஞ்சனுக்கமைத்துப்பின்னும.

(இ - புனை.) ஆகையினுல் அரசனே! நீ வருந்தாதே. நான் சொல்வதைக்கேள். அருபியும், நிர்மலனும், சோதியுமாய் நின்ற பரமசிவன் தனதுடைய சுவேச்சையாலும முக்குணங்களுக்குளொன்றுகிய ராதசகுணத்தில் பிரமதேவனைச் சிருஷ்டித்து வேதசாத்திரங்களையெல்லாம அந்தப் பிரமதேவனுக்கு அப்பொழுதே அருளிச்செய்து பின்னும், எ - று. (கo)

வேறு.

மாசிலாஞானமாயனுக்கள்வாழ்வதாய்ச்
காசிலாவுபநிடதத்தின்கண்ணைதாய்ப்
பாசமாய்த்திடபசுபதியைப்பற்றிடு
மாசில்சிருருத்திரவத்தியாயமும்.

(இ-புனை.) அழுக்கில்லாத ஞானமாகியும், உயிர்கள் வாழ்வுபெறத்தக்கதாகியும், குற்றமில்லாத உபநிடதத்தினிடத்துதாகியும், ஆணவமலத்தைக் கெடுத்தருளாகின்ற பசுபதியைப்பற்றிய பழுதில்லாத சிருருத்திராத்தியாயமும் எ-று உபநிடதங்கள் - கூ, (சு)

அருளினனகத்திடையதிக்தான்முகன்
றெருளுறவுலகமீரேழுஞ்செய்தபி
னிருளறுத்துலகங்களுய்யவெண்ணியே
பொருடருவேதங்கள்புகலுங்காலையில்.

(இ - புரை.) அருளிச்செய்தார். அவைகளை மனதுக்குளறிந்த பிர்ம்ம தேவன்தெளிவுபொருந்தப் பதிறலுலோகமும் சிருஷ்டித்தபின்பு, இவ்வுலகத்திலிருப்பவர்கள் அஞ்ஞானத்தைநீங்கிக் கடைத்தேறவெண்ணிப் பொருள்தங்கிய வேதங்களைச் சொல்லும்போது, எ - று. (கஉ)

நாற்றிசைமுகத்திறுநான்குவேதமும்
தோற்றுநாட்டென்றிசைமுகத்திற்றோற்றிய
வாற்றசாறயித்தியமதனிறுப்பனை
யேற்றசீருருத்திரமெழுந்துதோன்றிற்றால்.

(இ - புரை.) நான்குதிசை முகங்களிலும் நான்கு வேதங்களும் உண்டான காளில் தென்றிசைநோக்கிய முகத்தில் தோன்றியமகிமை மிகுந்ததைத்திரிய வேதத்தின்மத்தியில் மேன்மையுள்ள சீருருத்திரமந்திரம் உண்டாயிற்று. எ - று. தத்திரியென்னும்பகுதியுண்டுமகிழ்ந்தமையால் தைத்திரியமென்றுயது. எ - று. (கங)

அத்தகைமந்திரமரீசியாதியாம்
வித்தகமுனிவரார்விரும்பிக்கற்றிட
னுத்தமஉலகினிடமுனிவர்க்கோதிடத்
தத்துவமறையவர்தாமுங்கற்றனர்.

(இ - புரை.) பெருமைபொருந்திய அந்தமந்திரத்தை மரீசிமுனிவர்முதலாகிய ஞானமுள்ளமுனிவர்கள்விரும்பி, உணர்ந்து,உடனே இவ்வுலகத்திலிருக்கும் உத்தமமுனிவர்களுக்கு உபதேசஞ்செய்யத் தத்துவமுணர்ந்த அம்முனிவர்களும் தெரிந்துகொண்டார்கள். எ - று. (கச)

ஆர்வுறுபாவமாமழனற்கோடையாற்
பார்மிசைமானிடப்பசும்புல்வாடுத
றீர்தருபிரணவமின்னுச்சேர்ந்துபெய்
கார்மழையொத்ததிக்கடவுண்மந்திரம்.

(இ - புரை.) நிறைந்த பாவமாகிய வெதுப்புகின்ற கோடையால் இவ்வுலகத்திலிருக்கும் மனிதர்களாகிய பசியபுற்சுள்வாடுதல் நீங்கும்படி,பிரணவமாகிய மின்னலைச்சேர்ந்து பொழிகின்றமேகத்தையொத்தது தெய்வீகம்பொருந்திய இம்மந்திரம். எ - று. (கரு)

மற்றொருதவங்களேண்மந்திரங்களேன்
சிற்றியல்விரதமேன்வேள்விச்செய்கையேன்
சுற்றியமலங்களைத்துடைத்தழுத்திணைப்
பெற்றிடவளிப்படதோர்பிரமமீதரோ.

(இ - புரை.) இம்மந்திரமிருக்க வேறொருதவங்களேன்? மந்திரங்களேன்? சொற்பட்பயனைத்தருகின்ற விரதங்களேன்? யாகத்தொழிலேன்? பிறவிதோறும் தொடர்ந்துவருகிற மும்மலங்களைநீக்கி மோக்ஷத்தைப் பெறும்படி கொடுக்கும் பரமசிவம் இதுவேயாம். எ - று. (கக)

பின்னருநான்முகப்பிதாமகன்பொறை
மன்னியதேவர்கண்மக்கள்வல்விலங்
கன்னியவடிவளவனந்தயோனியும்
பன்னருஞ்சிறப்பிணைப்படைத்தழுற்றியே.

(இ - புரை.) பிரம்மதேவன் முன் சிருஷ்டித்ததுமல்லாமல் பின்பும் சாந்தகுணமுள்ளதேவர்கள், மனிதர்கள், வலியமிருகங்கள் இவைகளேயன்றி யின்னமும் பலபலவிதமாகிய அனந்தம்யோனிபேதங்களும் சொல்லுதற்கரிய சிறப்புடன் சிருஷ்டித்துமுடித்து. எ - று. (கஎ)

புண்ணியபாவமும்பொருவினன்மையு
மண்ணியதீமையுமிழிவுந்துன்பமு
மென்னியநினைப்பொடுமறப்புமியானையு
நண்ணியவுணர்வொடுவகுத்தருள்கியே.

(இ - புரை.) புண்ணியபாவங்களும் ஒப்பிலாத நன்மையும், இவ்வுலகத்தில் நேரிடுந்தீமையும், சுகதுக்கங்களும், என்னுகின்ற நினைப்புமறைப்புகளும், பொருந்திய உணர்ச்சியுடன் வகுத்துச் சிருஷ்டித்து. எ - று. (கஅ)

தூறக்கமுராகமுந்துவன்றிக்காக்கெனப்
பிறைக்குலான்கெனப்பிறழ்விவன்கோட்டிடைக்
கறைக்குடறிணிந்தமாற்களிற்றுவேந்தையு
மறத்தொழிற்கூற்றையும்பணித்தமன்னனே.

(இ - புரை.) அரசனே! நான்கு பிறைகள்போலப் பிரகாசிக்கும் வெண்மைநிறமுள்ள தந்தங்களினிடத்தில் பகைவருட லிரத்தமும் சூடலும் கிறையத்தக்கபெரிய ஐராவதமென்னும் யானையையுடைய இந்திரனைநோக்கி நீ சுவர்க்கலோகத்தைக் காத்துக்கொண்டிருவென்றும், கோபமுண்டாகும் தொழிலையுடைய யமனைநோக்கி நீ நரகத்தைக் காத்துக்கொண்டிருவென்றுங் கட்டளையிட்டுப் பின்பு, எ - று. (கஉ)

துடிபூதல்காலங்கடோற்றுந்ரன்னையும்
கடிதினில்வருஞ்சுடர்க்கதிருந்திங்களு
நிடையுளகோண்முதற்கிரகம்யாவையு
மடையுறுபூதங்களைந்துமாக்கினன்.

(இ - புனை.) கூஷணமுதல் காலங்கள் உண்டாகும் தன்மையையும் மகமேருவைவிரைவாகச்சுற்றிவரும் சூரியனையும், சந்திரனையும், அவ்விடத்திலிருக்குங் கோள்முதலாகிய கிரகங்கள் எல்லாவற்றையும், ஆகாயமுதலாகப் பொருந்திய பஞ்சபூதங்களையும் சிருஷ்டித்தான். எ - று. (உ)

ஆங்கியராசாபனைத்துமவ்வினி
நீக்கியபகுதியினெருங்கியங்கணு
போக்கறநிமிர்ந்துசெல்பொழுதுநிற்கூற்றுவன்
காக்குமந்தரகங்கடனைழையகற்றினான்.

(இ - புனை.) இவ்வாறு அந்தப்பிரமன் உண்டாக்கிய சராசரங்களெல்லாம் பேதமில்லாமல் ஒருங்கியெவ்விடத்தும் இறத்தலின்றி அதிகரித்துவரும்போது யமன்காக்காநின்ற அந்தரகங்கள் தளைழையும்படி சுற்பிக்கின்றான்.

கூரியபாவத்தின்கூற்றவாகிய
சீரியகாமமேழுந்தீமையை
வீறுயர்கதையினன்விளித்துகீழ்போய்
மாறுசெய்துலகினைமருவியெங்குமே.

(இ - புனை.) சொல்லுகின்ற பாவத்தின் பிரிவாகிய சீறுகின்ற காமமுதலான பாவங்களைப் பெருமைமிருந்தகதையையுடைய யமன் தளைழுத்து நீங்கள் போய்மாறுபாடுசெய்து உலகமெங்கும் பொருந்தி, எ - று. (உ)

சருமமுநீதியுந்தயாவும்வாய்மையு
மருவியதவங்களும்பிறவிமாற்றிநும்
கருமமாந்தித்தொழில்கணைக்கிலாதன
புரிதிர்தாகினைப்புரத்திர்போயென்றான்.

(இ - புனை.) தருமத்தையும், நீதியையும், தயையையும், சத்தியத்தையும் பொருந்திய தவங்களையு மற்றதகளையுமாற்றி, உங்கள் தொழில்களாகிய பாவத்தொழில்களை அனந்தமாகச்செய்து, கொடியநரகத்தைக் காக்கக்கடவீர்களென்றான். எ - று. (உ)

அங்கதுகேட்டலுமகிற்றென்றுபோய்த்
தங்கியவுலகினைடவந்துசார்தலும்

பொங்குசிருருத்திரமெவருமேடகன்
றெங்கணுறினைதலாற்றுண்ணென்றேங்கியே.

(இ - புணை.) அந்தவார்த்தையைக்கேட்ட மாத்திரத்தில் எங்களுக்கு இது நன்மையானதன்று, காமமுதலிய பாவங்கள் சென்று பொருந்திய உலகத்தில்வந்து சேர்ந்தவளவில், மகத்துவமுள்ள சிருருத்திர மந்திரத்தை யெல்லாருஞ் சொல்லி எவ்விடத்தும் நிறைந்திருப்பதிறல் நடுக்கங்கொண்டி வங்கி,

மீண்டனமேவாடினிவருவிக்காலன்முன்
னீணடினவாய்புலாந்திலோத்துநின்றன
வாண்டகைகேட்டிடின்னுணையாறறிரு
வேண்டிய நிதிலவளாகமேவினேம்.

(இ-புணை.) (பயந்து) திரும்பி யமனிடத்திற்குஓடிச்சேர்ந்து,வாயுலர்ந்து நினறு ஐயனே! கேட்பாயாக உன்னுக்கினையாலசெல்வம் வேண்டிய பெரிய உலகத்தினிடத்திற் பொருந்தினேம். எ - று. (உ)

கவ்வைமாகதிக்கரைகடவுளாலயஞ்
செவ்வியபெழிமறையாளர்சேர்விட
மெவ்விடமெவ்விடமென்றுகூறுவேம்
பவ்வநின்றிரைப்பதுபோலப்பாரலாம்.

(இ - புணை.) ஓசையுடைய பெருமைபொருந்தியகதிக்கரை,தேவாலயம், நல்லசோலைபிர்ம்மாலயம்,எந்தெந்த இடமென்றுபிரித்துச்சொல்வோம்பூலோகமெங்குஞ் சமுத்திரங் கோஷிப்பதுபோல. எ - று. (உசு)

வல்லசிருருத்திரமந்திரந்தனை
யெல்லையில்யாவருமினிதினேதிட
நல்லழற்பிழம்பெனநமைக்காய்தலா
லெலலையில்வெருவினின்றுழையொதுங்கினேம்.

(இ - புணை.) முத்திதரவல்ல சிருருத்திர மந்திரத்தை அளவில்லாம லெல்லாரும் ஓதுகின்றார்கள்,அதுமிகுந்த தீக்கூட்டம்போல நம்மவர்களைக்காய்கின்றதிறல்,பயந்து விரைவாக உன்னிடத்தில் வந்துசேர்ந்தோம். எ - று. ()

வேறு.

ஏழுகோடிமகாமிரமெடுதகவரியம்பினுந்
தாழுவிலாதமந்திரங்கடம்மையொல்லைநீக்குவேஞ்
சூழ்சடைப்பரமனைந்துதொல்லெழுத்தையொன்றியே
வாழுமந்திரத்திலோரெழுத்தினுக்குமாழ்குவேம.

(இ - புரை.) சத்தகோடி மகாமந்திரங்களை யெவர்களெடுத்துச் சொன்னலும் தாழ்ச்சியில்லாத அந்த மந்திரங்களை விரைவினில் நீக்கியிடுவோம்; சூழ்ந்தசடையை யுடைய பரமசிவனது பஞ்சாக்ஷரத்தைப் பொருந்திவாழுஞ் சிருருத்திர மந்திரத்திலிருக்கும் ஒரு அக்ஷரத்துக்கும் யாங்கள் வருந்துவோம்.

பெருமைநீபணித்தவாறுநரகராசிபேணலே
மருமையெந்திறத்தடாதுகும்பிபாழறிந்திடென்
றிருருளையிற்கிளத்தலோடுமுத்தியென்னவொலியெழுத்
தருமராசன்விதிபிருந்தசபைபுருந்தபணியதே.

(இ - புரை.) இறைவனே! நீ கட்டளையிட்டபடி யினிநரகத்தினைக்காக்கமாட்டோம்;காப்பதருமை;யெங்களாலாகாது:நரகம் பாழாயிருக்கின்றது; அதனைநீ யறிதியென்று சொல்லிய வளவில் அதைக்கேட்ட தருமராசன் சமுத்திரம்போல ஓசையுண்டாகத்தக்கதாக ஆர்ப்பரித்துக்கொண்டு பிரம்மதேவனிருந்த சபையிற்போய்ப் பணிந்து, எ - று. (உசு)

செம்பொன்வெற்பிதான்றரா லுசிகரமோடிருந்தென
வம்புயாசனத்திருந்தவண்ணல்வாய்மலர்திறந்
தெம்பதத்தடைந்தலாறென்மறலியென்றியம்பதே
வெம்புநெஞ்சனெடிதுயிர்த்துவெகுளியோடிமுரைசெய்தான்.

(இ - புரை.) ஒருபொன்மலையானது காலுசிகரத்துடனிருந்ததுபோலக் கமலாசனத்திலிருந்த பிரம்மதேவன் திருவாய்மலர்ந்து தருமராசனே! நீ கம்மிடத்திற்குவந்தகாரணமென்னவென்றுசொல்லலும், யமன் வெதும்பு மனத்தனைப் பெருமூச்சுவிட்டுக் கோபத்துடன் சொல்லுகிறான். எ - று. (உ0)

அய்யநீபணித்தவண்ணமரியதேவுநான்கெனும்
வெய்யகோடிகும்பியும்விளங்கியேதனழக்கயான்
செய்பலாவத்தினிச்சிறத்தசீருருத்திரம்
வையம்யாவுமோதலாலம்மாநிலத்துளாரெலாம்.

(இ - புரை.) சிறப்புப்பொருந்திய சிருருத்திரத்தைப் பூலோகத்திலிருப்பவர்களெல்லாரும் செபித்தலால், ஐயனே! தேவர் கட்டளையிட்ட பிரகாரம் இருபத்தெட்டுநரகங்களும் விளங்கித் தழைக்கத்தக்கதாக அடியேன்செய்யலாவதென்னிருக்கின்றது? எ - று. (உக)

நாகநாடுநண்ணிலார்கணரணன்றனித்துவாழ்
போகநாடுநண்ணிலார்கள்புண்டரீகநின்றிரு
யோகநாடுநண்ணிலாருலோகபாலர்நாடுரு
ரேகமாயசிவபதத்தினெல்லையாருநண்ணினர்.

(இ - புரை.) சுவர்க்கலோகத்தில் பொருந்துகின்றார்களல்லர்; விஷ்ணுதனித்துவாழ்கின்றபோதுபொருந்துகின்றார்களல்லர். தாமரைப்பொகுட்டிலுறையுந் தேவருடைய திருநாட்டிலும் பொருந்துகின்றார்களல்லர். தேவருடையநாட்டிலும்பொருந்துகின்றார்களல்லர். ஏகனாகிய பரமசிவனுட்டில்லல்லாரும் பொருந்துகின்றார்கள். எ - று. (ருஉ)

புண்டரீகவண்ணலேபுராரிவாழ்பதத்தினி
லெண்டிசாமுகத்துளோருமெய்தலான்மற்றேவரே
கொண்டதீமைநரகம்வந்துகுறுகுவார்கள்குறுகுமா
றண்டகாதபுரியல்லதாள்கலெனன்னைசோ.

(இ - புரை.) தாமரையில் வீற்றிருக்கும் கடவுளே! பரமசிவனுடைய பதவியில் அஷ்டதிக்குகளுக்குள்ளிருப்பவர்களும் பொருந்துதலால், மற்றையார் வந்து நரகத்திற் பொருந்துவார்கள்? தேவகாதனே; அப்படியன்றி நரகத்தில் வந்து பொருந்தும்படிசெய்; இல்லாவிட்டால் என் அதிகாரத்தை விட்டுவிடுகிறேன். எ - று. (ருஊ)

வேறு.

என்றுகூறிமறலியிறைஞ்சலுந்
தன்றுபங்கயநான்முகன்சூழ்ச்சியா
னன்றுசெய்பவர்தங்கட்குநன்னெறி
யன்றியேதவறூற்றுவதேதெனை.

(இ - புரை.) இயமனிவ்வாறு சொல்லிவணங்குதலும், தாமரையிற்பொருந்திய பிரமதேவன் உணர்ச்சியிலும் நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மார்க்கம் வருவதன்றிப் பொல்லாங்குவருவதேது? எ - று. (ருஎ)

ஞாலநாயகன்றின்னருகாடியே
காலனெஞ்சங்கலங்கியுரைத்தது
மூலமோடுநாகமுடிந்தது
மேலதீக்குதற்கின்னவையாமென்றே.

(இ - புரை.) எமன் மனங்கலங்கிச் சொன்னதையும், அடிமரமோடே நரகமுடிந்ததையும் பிரம்மதேவன் யோசித்து இவைகளை நீக்குதற்கு இவைகளாகுமென்று தீர்மானித்து, எ - று. (ருஏ)

கோதுசெய்யுமஞ்ஞானத்தின்கூறதாய்
வாதஞ்செய்யவளர்விருப்பின்மையுஞ்
சூதுசெய்திடுந்தன்மதியும்புலிக்
கேதஞ்செய்திடவேகுமினைகியே.

(இ - புணை.) குற்றத்தைச் செய்கின்ற அஞ்ஞானத்தின் பிரிவாய் வாது செய்யவளர்கின்ற விருப்பமில்லாமையையும் சூதுசெய்கின்ற தர்ப்புத்தியையும் பார்த்து நீங்கள் பூலோகத்தில் தண்பஞ்செய்யும்படி செல்லுங்கள்; அவ்வாறு சென்று, எ - று. (கூசு)

மாசகற்றுசீருத்திரமானிட
ராசைபற்றியஹவருமோதுதல்
காசினிக்குண்முழுதுங்கடிந்துநுங்
தேசறுத்தசெயலொடத்துவான்.

(இ - புணை.) பாவங்களை நீக்கத்தக்க சீருருத்திரத்தில் விருப்பங்கொண்டு பூலோகத்திலிருக்கும்மனிதர்கள் எல்லாரும்ஓதுதலைநீக்கிஉங்களுடையகொடிய செய்கையை நடத்த, எ - று. (கூஎ)

எய்துமென்றுபிதாமகனேவலு
நொய்தினெய்திநுணங்கியகேள்வியாற்
செய்தவம்புரிசிந்தையினண்ணியே
கைதவங்கொடுநெஞ்சைக்கலக்கின.

(இ - புணை.) செல்லுங்களென்று பிர்ம்மதேவன் ஏவினவளவில், அவைகள் பூலோகத்தில் விரைவுடன்வந்து, மிகுதியான சாஸ்திர விசாரணையினால் நல்லதவஞ்செய்கின்றமனதிற்பொருந்தி, வஞ்சகத்தைக்கொண்டுஅந்தமனதைக் கலக்கின, எ - று. (கூஅ)

மடியினல்விருப்பின்மைமவியவே
படியுளோர்கள்சீருருத்திரப்பற்றுவிட்
டடைவுநீத்தொழுக்கல்லவைசெய்தலிற்
கொடியதீரகங்குடியேறிற்றே.

(இ-புணை.) சோம்பலினல்விருப்பமில்லாமை அதிகரிக்கவே, இவ்வுலகத்திலிருப்பவர்கள் சீருருத்திரம் ஓதுதலைவிட்டுக் கிரமந்தப்பிப் பாவங்களைச் செய்தலினல் கொடிய நீரகத்தில் குடியேறியது. எ - று. (கூக)

பிறையெயிற்றுமிறலிபெயர்ந்துதா
னுறைபதித்தலையெய்தியுவப்புடன்
குறைவறக்களிகூர்ந்திருந்தானினி
யிறைவனின்மகற்கெய்துவசொல்லுகேன்.

(இ-புணை.) பிறைபோல்வளைவும் வெண்மைநிறமுமுள்ள பற்களையுடைய எமதர்மராசனானவன் தானிருக்கும் வைவஸ்சுத பட்டணத்திற்போய்ச் சந்தோ

வதத்துடன் குறைவற்ற களிப்புடனிருந்தான். அரசனே! இனியுன் புத்திர னுக்கு கடப்பதைச் சொல்லுகிறேன். எ - று. (கூ0)

இடரொழிக்கவுமின்னுயிர்காக்கவு
மிடையுங்காலஜனீக்கவுமிவண்மேற்
படைமழுக்கைகப்பாரமனைசீருத்திரத்
தொடையன்மார்பியறறுநல்சூழ்ச்சியால்.

(இ - புணர்.) துன்பத்தை நீக்கவும், இனிதாகிய வுயிரைக்கொடுக்கவும், வருகின்ற யமனை நீக்கவும் வேண்டுமாதலால், மழுவாடதை மேந்திய திருக்கரத்தை யுடைபபரமசிவனது சிருருத்திரத்தை டாலையனிந்தமார்பனே! சொல்லவேண் டும். எ - று. (கூக)

யாவரோனுமிமியசிருத்திர
நாவினேதுளிம்பிதிசகாத
தேவையாடரிதன்னீராதத்தரென்னியிற்
றாயினையாருறுவாதுடைபாரோ.

(இ - புணர்.) எவரேனபாரையும் இனிதாகிய சிருருத்திரமந்திரம் நாவி னலோதிபபரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்கின்ற தெளிவுள்ளத்தத்தைதத்தங் கள் சிரசில் தெளித்துக்கொண்டாலு, விதிக்கும் யமதண்டனையை நீக்குவா கள். எ - று. (கூட)

தாங்குசிருத்திரசமகஞ்சொலித
தேங்குமஞ்சனமாட்டியசிரியோ
ராங்கனைபரிணயிரமாண்டுபோர்
வாங்குவிற்கையாய்வாழ்வொடுலைவகுவார்.

(இ - புணர்.) போரில் வளைக்கும் வில்லேந்திய கையையுடையவனே! எல் லாரையும் ஆதரிக்கும்படியான சிருருத்திர சமகஞ்சொல்லிப் பரமசிவனுக்குத் திருவஞ்சனஞ்செய்யுஞ் சிரினையுடையவர்கள், அட்பொழுதே பதினாயிரம்வரு ஷம் சம்பத்துடன்வாழ்வார்கள். எ - று. (கூஎ)

பத்தியோடிருத்திரம்பாருளோர்
சித்தம்வைத்துத்தினதோறுமோதினை
லத்தனின்புற்றவர்க்கருள்செய்திடு
முத்தியீதுமொழியவும்வேண்டுமோ.

(இ - புணர்.) இவ்வுலகத்தி லிருப்பவாகள் பத்தியுடனே சிருருத்திரம் நாள்தோறுமனமொருமித்து ஓதுவார்களேயானால், பரமசிவன் திருவைகூர்ந்து மோகூஷங்கொடுத்தருள்வார்; இதனைச்சொல்லவும் வேண்டுமோ? எ - று. (கூஎ)

ஆதலானின்மதலைக்குமன்னதிப்
போதியற்றப்பொருவரும்புண்ணிய
மாதவத்தின்மறையவர்க்கூவென்றான்
றாதுமன்னன்விட்டானவர்துன்னினார்.

(இ - புணை.) ஆகையாலிப்போது உன்புத்திரனுக்குச்சீருருத்திரமந்திரம் சொல்லிய தீர்த்தஸ்நானஞ் செய்விக்கிறதற்கு, ஒப்பில்லாதபுண்ணியமுள்ளதபசிகளை அழைப்பி யென்று பராசரமுனிவர்சொன்னார்; அதைக்கேட்ட அரசன் அதர்களை யனுப்ப அவர்கள் போய்ச்சொன்ன அளவில், முனிவர்களெல்லாரும் வந்தார்கள். எ - று. (சஎ)

அடைந்தவாயிரமந்தணருந்தொழுஞ்
சடங்குதீர்ப்பராசன்சாரும்மிடம்
குடங்களாயிரங்கொண்டமிதண்ணீர்கொடா
விடங்கொளொக்கைதழீரத்தரபெணணினார்.

(இ - புணை.) பராசரமுனிவர்சடங்குவிதிசொல்ல வந்த ஆயிரமுனிவர்களும் ஆயிரங் குடங்களினும் பூரித்திருக்கும்நீரைத்தொட்டு விஸ்ருஷ்டாபரம சிவனது சீருருத்திரம் சொன்னார்கள். எ - று. (சஅ)

இந்தவண்ணமெழாந்தனைசெய்தலு
மந்தணாளரோராயிரங்குமபமு
கந்தனன்னவேற்காளையாட்டினு
மைந்தன்மன்னனிடைவீழ்ந்துடையங்கினான்.

(இ - புணை.) இவ்வாறு எழாகாள் வந்தபோது, ஆயிரமுனிவர்களுந்தங்கள்கையிலிருக்குங் கும்பத்தீர்த்தத்தினால் சுப்பிரமணியக்கடவுளையொத்த அந்தராசபுத்திரனுக்கு ஸ்நானஞ்செய்வித்தார்கள்; உடனே, அந்தப்புசத்திரன்மயங்கிப் பூமியில் விழுந்தான். எ - று. (சன)

கண்டுமன்னவன்னையறவெய்தலுந்
தண்டுகுண்டிகைதாங்கியதாடதர்
விண்டலார்ப்பறைவேணியன்மந்திரங்
கொண்டுபூதிவெண்காப்புக்குறித்திட்டார்.

(இ - புணை.) தன்புத்திரன் மயங்கிவிழுந்ததை அவ்வரசன் பார்த்துத் துயரங்கொண்டான். அப்பொழுது தண்டுகமண்டலு மேந்தியமுனிவர்கள்பிறையணிந்த சடையையுடைய பரமசிவனது மந்திரமாகிய சீருருத்திரஞ்சொல்லி விபூதியுந்தரித்தார்கள். எ - று. (சஅ)

அறங்கொள்வேதியராசிபகர்ந்திட
மறங்கொள்வேந்தன்மனமகிழ்வோங்கிட
வுறங்கிலனென்றுயிரீர்த்துணருற்றெனத்
திறங்கொண்மைந்தனெழுந்திதுசெப்புவான்.

(இ - புணை.) தருமதெறியைக்கொண்டிருக்கிற முனிவர்கள் ஓசீர்வசனஞ் சொல்லலும், வீரம்பொருந்தியராசன் மனதில் மகிழ்ச்சி யதிகரிக்கத்தக்கதாகித்தினைசெய்தவன் அது நீங்கியெழுந்ததுபோலப் புத்திரனெழுந்துநின்றவார்த்தைசொல்லுகிறான். எ - று (கக)

வேறு.

இத்தலையினிகழ்ந்தபொருளைந்தைதகேளிளம்பிறைபோல்வெள்ளெயிற்றினைபுங்கன்னன், மைத்தகருமாமலைபனையவுருவன்மிக்கமனைழுமுகினிடுபுழுக்கடாவுயிர்சால்லன், கைத்தலத்திலொருகையுங்கயிறுமேந்திக்கலைமானெனவேபிடித்தடர்த்துங்காலைதான்றி, யத்தலையிலேவிருந்தவணேட்பற்றியிடர்த்தான் குரவிரவிலோவறிகிலேனே.

(இ-டுணை.) எ ணையனே? யிவ்விடத்திலே நடந்தசெதினையக்கேள். இளம்பிறையொத்த வெண்மையாகிய பற்களையுடையவனும், கருமை நிறந்தங்கிய மலையையொத்த வடிவமுடையவனும், மேகமுழக்கம்போன்ற சொல்லையுடையவனுமாகிய ஒருவன், கையிலிடத்திலொரு தண்டாயுதமும், பாசக்கயிறுமேந்திக்கொண்டு, அதிககோபமுள்ளவனாய், என்னைப்பிடித்து, அடிக்குங்காலத்தில், அவிடத்தில் நிலாவந்து அவனைப்பிடித்துக் கட்டிக்கொண்டுபோனார்கள்; அவர்களெவர்களோ? நான் அறியேன். எ - று. (ஙo)

என்றுதனிக்குமானிஷாதியம்பக்கேட்டவிகல்வேந்தனுவகையிலெழுந்துபுல்லி, நினதுமைந்தரிவரெதியர்க்குமுகமன்கூறிநிதமாரியனைவருக்குமெய்வெறுப்பகல்கியிப், பொன்றுமகவுயிரளித்தருங்கட்கின்னேபுரிவதாருகைம்மாறுகாணெனென்ன, வன்றவமோடிருந்துசுவையழிசின்மாந்தியரியனைமேலதிசயத்தோடமர்ந்தகாலை.

(இ - புணை.) இவ்வாறு ஒப்பற்ற தன்புத்திரன்சொல்லக்கேட்டுப் பலமுள்ள அரசன்சந்தோஷத்தையுடையவனாய்ப் புத்திரனையணைத்துக்கொண்டு, அவிடத்திலிருந்த முனிவர்களுக்கு உபசாரவார்த்தைசொல்லி, திரவியமாகிய மழையை வெறுக்கும்படி யாவருக்கும் கொடுத்து, இறந்த என்மகனுக்கு உயிர்கொடுத்த உங்களுக்கு இப்போது செய்யும் பிரதியுபகாரம் என்றும்நான்காணேனென்றுசொல்லி, அவர்களுடனிருந்து போசனஞ்செய்து சிங்காசனத்தில்அதிசயத்துடனிருந்தபோது, எ - று. (ஙக)

தேன்மாரி துளிப்பனபோன்மகதிவீசுணத்துவவுறுகத்திரியின்வழி
த்தாகத்தோன்றும், வான்வாயிற்றெனவிளியைச்செவியிலேற்றுமறை
மூனிகாதனைவயின்வத்துதோன்றக், கான்மாலடியினிற்றுநறையொ
ழுகுமார்பன்கதுமெனச்சென்றிறைஞ்சியிருகழலும்போற்றித், கான்
வாழுமரியணையின்மருங்குவேறோர்தமனியப்பீடிகைமுனிவன்றனக்கு
மீந்தான்.

(இ - புரை.) மகதியாழிசைக்கையிலில் மீட்டத்தக்கதான தந்திரியின்
வழியாக ஆகாயவழி யிதுவென்னும்படி தோற்றுகின்ற நாதத்தை யாவர்காது
களிலும் தேன்மயழை துளிப்பதுபோலச் சொரியும் நாரதமுனிவர் அந்தசபையில்
வந்தவுடன் அவ்வரசன், வினாவிலெழுந்துபோய் யிருபாதங்களையும் வணங்கித்
துதித்துத் தானிருக்கும் சிங்காசனத்தில் அருகில் அம்முனிவருக்கும் வேறொரு
ஆசனங்கொடுத்தான். எ - று. (கூஉ)

மணிக்தவிசின்னவகியவலஞசிகூறமன்னனய்கிழ்ந்தருந்தலத்தோ
ய்மலரின்மேலான், கணித்தவுலகீரேழுகொடியினெய்தித்காணவல்லாயி
றும்பூதகண்டதுண்டேடற், பணித்திடியனவினவுதலுமகிழ்ந்துகண்ட
பரிசனைத்துமப்படியேயடிகள்வாணெஞ்சிற், குணித்துமிகவதிசயித்துமேவுந்
தேயுன்றன்குமாணியல்கேட்டியெனக்கூறலுற்றான்.

(இ - புரை.) அந்தரத்திலிருந்து நாரதமுனிவர் ஆசீர்வசனஞ்
சொல்ல மன்னவன்மகிழ்ந்து அரியதவத்தைபுடையவரோ! பிரம்மதேவன்சிருஷ்
டித்த பதினாலுலோகமும் கொடிப்பொழுதிற்சென்று காணத்தக்கவராதலால்
ஏதாவது அதிசயம் உண்டாயிருந்தால், சொல்லுமென்று விநயவினவளவில்,
அகடகிழ்ந்து தாம்கண்டதொன்றும் வழுவாமல் சொல்லகினைத்து மிகவும்
அதிசயத்தை புடையவராய், அரசனே! உன்புத்திரனுடைய சங்கதியைக்கே
ளென்று சொல்லுகின்றார். எ - று. (கூஎ)

விசும்புதிகறியாண்டருந்தேவலகண்டேடன்னவிடுகயிறுமடுதண்டுங்
காத்திலேந்திப், பசும்புலம்போதகரிபநிறமறையுன்றன்பாலனிவன்ற
னைப்பற்றிக்கொடுபோங்காலை, யசும்பறுதுளிபொழிமதிச்சென்சடை
யோனைவயிடல்வீரன்கணைத்திறுமைடந்துகூற்றைந், தசும்பொ
ழுகப்பாசத்தாற்பிணித்துவீக்கித்தருக்கிறுலைமைத்தனையும்விலக்கிமீ
ட்டான்.

(இ - புரை.) ஆகாயமார்க்கத்தில் கான்போம்போது வீசுகின்ற பாசக்க
யிறும் அடிக்குந் தண்டாயுதமுங் கையிலேந்திக்கொண்டு கீருண்ட மேகம்போ
லக் கருமைநிறமுள்ள காலனனவன் இந்த உன்புத்திரனைப்பிடித்துக்கொண்டு
போகுங்காலத்தில், ஏழுசத்துளி பொழிகின்ற பிறைமதியணிந்தசடாமகுடத்

தையுடையபரமசிவன் அனுப்ப வெற்றிபொருந்தியவீரபத்திரன்கணங்களுடன் வந்து, கூற்றுவனை உதிரம் ஒழுகும்படி பாசத்திற்கட்டியிழுக்கி இவனைமீட்டு விட்டான். எ - று. (௫௪)

பிணியினைதுகூற்றுவனைக்கொண்டுவீரன்பெயருரைதியிடைத்த ருமராசனெய்தி, யணியுமணிமுடிகழலிற்றீண்டவீழ்ந்தம்மையனே தக்கன்மகூழுழித்தகோவே, பணிசெயுகின்னடியருக்குமடியனுகட்பற் றுதகிறியனேபற்றற்குள்ளம், தணியுமதற்கிவனைழத்தவாறேதென் னத்தோலாகடையடிவீரன்சொல்வதானன்.

(இ - புணை.) அதன்பின்பு வீரபத்திரர் கட்டினகட்டுடன் காலனைக் கொண்டுபோமிடத்தில் யமதருமராசன் வந்து, தன்னுடைய தூதினைக்கிரீடம் அவர்பாதத்திலபடும்படிபணிந்து, எங்களையனே! தக்கன் யாகத்தை அழித்த இறைவனே! தொண்டுசெய்கின்ற நின்னடியருக்கும் அடியனைகுட்படுத் தருதியில்லாத இவனைபிடித்துக்கொண்டுபோகத் தீருவுளங்கொள்வதற்கு இவன்செய் தகுற்றம் யாதேதாவென்றுகேட்க, தோல்வி அடையாதவீரபத்திரர் சொல்லு கின்றார்.

வணங்குவரிசிலைத்தடக்கைகப்பத்திரசேனன்மாமதலைசிருத்திரவ ன்னையாலே, யினங்குபதினையிரம்யாண்டிருப்பான்றன்னேயீராறுன்ன _கனைவயிலேயிறுதிசூழ்ந்து, நினங்கொணைந்தடிப்பிலவாய்க்கால தூதர்கொருங்குகணையறமுருக்கிச்சிறுவனுனை, குணங்குறையிலடிய வனைப் புரத்தியென்றகூற்றுலைதத்தோன் பணிதலைமேற்கொண்டுவந் தீதம.

(இ - புணை.) வனைக்கும் கீண்டவில்லையுடைய பத்திரசேனராசன் புத்தி ரன் சிருருத்திரமந்திரமகிமையால், பதினுயிரம்வருடமும்உயிருட னிருப்பவனுயி நக்கப் பன்னிரண்டுவயதில் அவனுக்கு முடிவுகருதி நினைம்பொருந்திய பெரிய தண்டமும் பிலம்போன்ற வாயுமுள்ள காலதூதர் கிட்டிப்பிடித்தார்களாதலால், நீ போயவர்களைத் தண்டித்து நற்குணங்களில் குறைவில்லாத ராசகுமாரனைக் காத்தியென்றருளிய காலசங்காரமூர்த்தி யேவலிப்பெற்றுக்கொண்டுவந்தோம்.

இம்மதலைசிவன்றொண்டனதும்வாழ்காளீரையாயிரமுடையோ னிவனுக்கிரக்த, வெம்மையிடர்விளைவித்தகூற்றைக்கட்டிவிமல்முழு னங்கொடுபோவோமென்னலோடு, மம்மவெனமதிமயங்கித்தருமராச னறிரண்டான்றேடியிவனுக்காயுவென்னச், செம்மைபுடனுனைத்திடலு ம்வீரன்கேட்டுச் சித்திரகுத்திரன்கணக்கிற்றெளியாயென்றுன்.

(இ - புணை.) இப்புத்திரன் சிவனடிமையாவன். இவன் பதினுயிரம் வருடம் ஆயுசுடனிருப்பவன். இத்தகைமையுடையவனுக்குக் கொடுத்தயரம்

வினைத்தகாலனைக் கட்டிக்கொண்டு பரமசிவன்சந்நிதானத்துக்குக்கொண்டுபோ வோமென்றுசொன்னவளவில்தருமராசன்மதிமயங்கி இவனுக்குப்பன்னிரண்டு வயதுதானென்று நிச்சயமாகச் சொல்லியவளவில், வீரபத்திரர்கேட்டுச்சித்திரக் குத்தன் கணக்கைப்பார்த்து நீ தெளிந்துகொள்ளென்றார். எ - று. (நெ)

வரவழைத்துத்தருமனுண்மைக்கணக்கன்றன்னைவதனம்பார்த்தி ந்தவிளமதலைக்காயுத், நிரவளனையுனையெனவுமவனுக்தேர்ந்துசெப் புவானீராறுண்டளவேதிண்ணம், பரவருசிருருதிரத்தின்பலத்தினு லேபகர்பதினையிரம்பருவம்பாரில்வாழப், புரவலனைபின்னெழுதிக்கிட த்தல்கண்டேனெனைப்புகலவவனுமஞ்சிப்புகலுற்றான்.

(இ - புணர்.) அந்தவார்த்தையைக்கேட்ட தருமராசன் சித்திரகுத்தனை வரவழைத்து அவன் முகம்பார்த்து இந்த வாலிபனுக்குள்ள ஆயுசு மூடினவைப் பார்த்துச்சொல்லென்றான். சித்திரகுத்தன் கணக்கைப்பார்த்துப் பன்னிரண்டு வயதென்பதுநிச்சயமே, ஆனால்சிருருத்திரமந்திரபலத்தினால் பதினையிரம்வருஷம் பூமியில்வாழும்படி பின்னாலே யெழுதியிருப்பதையிப்போது பார்த்தேனென்று சொல்ல, யமன் பயந்து சொல்லுகின்றான். எ - று. (நிஅ)

புன்மையிறன்மடமைபிணிவலிடியார்செய்தபுன்றொழிலேயெல்லா றுத்தல்புலவோர்செய்யும், தன்மையெனப்புகழ்ந்தமனிரந்துகூடத்த னிவீரன்பிணித்தகொடுங்கூற்றைறவிட்டுத், தொன்மையதாஞ்சிவலோ கமடைந்தான்வாசத்தொடைத்தருமன்றன்பதியிற்புகுந்தானிந்த, ந்மையதிசயத்தகைமை புகலவேண்டிநாமுனதுகரடைந்தோ நாமேவ லோய்.

(இ - புணர்.) புல்லறிவினாலும், தெரியாமையினாலும், அடியார்கள்செய்த குற்றங்களைப்பொறுத்துக்காப்பது பெரியோர்கள் செய்கையென்று நமன் வீர பத்திரனைப்புகழ்ந்து, நிரந்துசொல்ல, அவர்காலனைக்கட்டிய கட்டினையவிழ்த்து விட்டுப் பழமையாகிய சிவலோகமடைந்தார். வாசனையுள்ள மாலையணிந்த தரும ராசன்தன்னுலகம்போய்ச்சேர்ந்தான். இந்தநல்லஅதிசயத்தைச்சொல்லவேண் டிஅரசனே! நாம் உன் நரகத்திற்குவந்தோம். எ - று. (நிக)

மே வ று.

என்றுநாரதமுனிவரனியம்பலுமெறுழ்வலிக்குவவுத்தோள் குன்றுமேர்வளர்ந்தோங்கிடவுவகையங்குரைகடலிடைமூழ்கி நன்றுநன்றெனவருந்தவர்முதலியான்மனையவர்ப்போக்கித் தன்றுதாரவன்மைந்தனோடானடிதொழுதனவீற்றிருந்தானே.

(இ - புணர்.) இப்படி நாரதமுனிவர் சொன்னமாத்திரத்தில் பலமுள்ள தாய்க் குவிந்திருக்கும் புயங்கள் மலைபோல வளர்ந்தோங்கிப் பூரிக்கத்தக்கதாகச் சந்தோஷமாகிய சமுத்திரத்தில் மூழ்கி, இதமிகவும் நல்லகாரியம் நல்லகாரிய!

மென்று சொல்லி, முனிவர்கள் முதலாகிய பிராமணர்களை அனுப்பிவிட்டுப்பூமா லையணிந்தராசன் தன் புத்திரனுக் தானுமாகப் பரமசிவன் திருவடிகளைத்தொ ழுதுவாழ்ந்திருந்தான். எ - று. (கூ0)

இந்தமந்திரத்தருதியுமோதிமிரைக்கிறையவனருள்கூரு
மந்தவண்ணமுக்காலனைக்கடிந்தமருப்பெறற்றிருமைந்த
னந்தறீர்ந்தமாயுளைப்பெற்றதுகவின்றமாக்கதைதன்னைச்
சிந்தைசெய்குகர்படிக்குகர்சிவபதமடைவாரே.

(இ-புனை.) இந்தமந்திரப்பெருமையும், இதைச்சொல்கின்றவர்களுக்குப் பரமசிவன்கிருபைசெய்யுமுறையும், காலனைக்கடந்தமும்பெறுதற்கரியரா சகுமா ரனிறத்தல் நீங்கினதும், பதினாயிரம்வருடம் இருக்கும் ஆயுள்பெற்றதும், சொல் லுகின்ற இந்தமகத்துவமுள்ள சரித்திரத்தைச் சிந்திப்பவர்களும், படிப்பவர்க ளும், கேட்பவர்களும் சிவபதம் அடைவார்கள். எ - று. (கூக)

இன்னதன்மையதிக்கதெனமூவிளமதிச்சிமுடிங்கண்ணி
மின்னுசெஞ்சடையமலனிர்மலனிமலனெயடிபேணி
நன்னலந்தருமிருந்தவக்கிழமைசானைவியிலார்களிகூரச்
சொன்னகான்மறைவியாதனதருள்பெறுசூதமாமுனிசொன்னான்.

(இ - புனை.) இந்தச்சரித்திரமித்தன்மையுடையதென்று இளம்பிறைம தியைமாலேபோலணிந்திருக்குஞ்செஞ்சடையையுடையஅமலர் நிர்மலர் விமலர் என்னும்பலதிருநாமமுள்ள பரமசிவனுடைய திருவடிகளைத்தொழுது நல்லமோ கூடந்தருவதற்கேதுவாகிய தவமெறியுள்ள நைமிசாரணியமுனிவர்கள் ஆனந்தம் அடையும்படி வேதங்களைவகுத்துக்கூறிய வியாதமுனிவருடைய அநுக்கிரகம் பெற்ற சூதமுனிவர்சொன்னார். எ - று. (கூக)

இருபத்தொன்றுவது சிருருத்திரமகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூஉக.

சிவமயம்.

இருபத்திரண்டாவது
வஞ்சுவன முத்திபெற்ற அத்தியாயம்.

மீட்டுமற்றோர்க்கைதசூதன்விளம்புந்
தீட்டலாதமறையோர்திறல்வேந்த
ரீட்டுசீர்வணிகரென்றிவர்மூவர்
காட்டுவேதநெறிநன்னிலகின்றோர்

(இ - புணை.) சூதமுனிவர் வேறுமொரு சரித்திரஞ் சொல்லுகின்றார். பரி சுத்தர்களாகிய பிராமணர்கள், வெற்றியுள்ள க்ஷத்திரியர்கள், நிதிதேடும்வைசியர் களாகிய இம்மூவரும் விதிவிலக்குகள் சொல்லும் வேதத்தி னன்மார்க்கததில் லிருப்பவர்கள். எ - று. (க)

அந்தநூலினதிகாரமிலாராய்
வந்தபின்னவருமாகிலமீதிற்
சந்தமில்லிழிகுலத்தினர்தாமுஞ்
சொருவுதேதமொழியாரும்.

(இ - புணை.) அவ்வேததங்களோதும் அதிகாரமில்லாதவர்களாய்வந்த சூத் திரரும், பெரிய இத்தவுலகத்திலிருக்கும் மாட்சியில்லாத இழிகுலத்தாரும், மன தில் கற்பினிலேமையில்லாத மாதர்களும், எ - று. (உ)

மூற்றுநன்னதிகண்முழுக்கிலரோனு
நற்றவம்புரிதனுடிலரோனு
மூற்றபேறராமுவந்திலரோனுமை
பற்றிலானடிபணிந்திலரோனுமை

(இ - புணை.) நல்லநதிகளிலெல்லா மூழ்காதவர்களாயிருந்தாலும், நல்ல தவஞ்செய்யவேண்டுமென்று நினையாதவர்களாயிருந்தாலும், பொருந்தியதருமங் கள் செய்யாதவர்களாயிருந்தாலும், விருப்பு வெறுப்பு இயல்பாகவேயில்லாத பரமசிவனுடைய திருவடிகளைப் பணியாதவர்களாயிருந்தாலும், எ - று. (ஊ)

ஓதுதற்குமரிதாயுணர்கல்லாப்
பாதகத்தொழில்கள்பண்
சோதிநற்பிறைமுடித்திடுதொல்லோன்
சாதையிற்படுகருத்தினாலுல்.

(இ - புணை.) சொல்வதற்கு மரியதாய், மனதில் நினைக்கவுங்கூடாதபாவ ங்களைச் செய்கின்றவர்களேயானாலும், சொலிக்கின்ற நல்லபிறையணிந்த ஆதி காரணனுகிய பரமசிவனுடையசரித்திரத்தில் சிந்தைவைப்பவர்களானால், எ-று.

பாவமென்றமொழிபற்றறமாய்த்துத்
தேவரும்பரவிவந்தனைசெய்யக்
கோவையங்குழுதவாயுமைகொண்கன்
மேவரும்பதவிமேவியிருப்பார்-

(இ - புணை.) பாவமென்கிறசொல்லின் பற்றைக்கெடுத்துத்தேவர்களும் துதித்துத்தொழும்படி கோவைப்பழமொத்தசிவந்தவாயினையுடைய உமையவள் கணவனுகிய பரமசிவன்வீற்றிருக்கும் சிவபதவியில் பொருந்தியிருப்பார்கள்.

காந்தைவார்சடையர்காதையைகாறு
மிருந்துகேட்கவியலாதவர்தாமு
மாந்தைதீங்கியனாகாழிகையேனுந்
தெரிந்துகேட்கிறுதிவினைமாய்ப்பார்.

(இ-புனை.) சிவகணாந்தைப் பத்திரமணிந்த நீண்டசடையையுடைய பரமசிவன் கதையை ஒருநாள்முழுவது மிருந்து கேட்கக்கூடாமையா யிருப்பவர்கள் தங்களுக்கிருக்கும் வருத்தத்தை விட்டு அனாகாழிகையாவது நாபகத்துடன்கேட்பார்களானால், சனனங்கள்தோறும் பொருந்தியதீவினையைக்கெடுப்பார்கள். எ - று. (சு)

வேறு.

கலியுகத்துநற்கன்மமியற்றுதன்
மலிபுராணநூல்கேட்பதுமாட்சியா
லலையுநெஞ்சமலிவற்றுமெய்ந்நெறி
நிலைபெறுஞ்சிவயோகத்துநிற்குமே.

(இ - புனை.) கலியுகத்தில் நற்கருமங்கள் செய்குதலும், நிறைந்துள்ள புராணங்களைக்கேட்பதுமாகிய பெருமையால் சஞ்சலப்படுகிறமனம் அலைவற்று நல்லநெறியில் நிலைத்திருக்கத்தக்க சிவயோகத்தில் நிற்கும். எ - று. (எ)

வஞ்சகக்கருநெஞ்சமுமாசிலா
வஞ்சிசூழ்த்தையடையவர்ந்தைபோம்
விஞ்சுதீவினைவேரறும்வேரறத்
துஞ்சிலாத்துரியத்திற்சுகிக்குமே.

(இ - புனை.) வஞ்சகமுள்ளதா யிருண்டிருக்கிற மனமும் குற்றமில்லாத பஞ்சாக்ஷரத்தைப் பொருந்துமாகில், துன்பம் நீங்கும்; அதிகரிக்குந்தீவினைக்குக் காரணமாகிய ஆணவமலம் நீங்கும்; அது நீங்கினால், மாயாதுரியாவத்தையில் சுகித்துக்கொண்டிருக்கும். - று. (அ)

உம்பாராமுதுண்டவர்தங்கட்கு
நம்புகாயநாளைதிரைமாற்றுமா
லெம்பிரான்கதையின்னமுதுண்டவர்
வெம்புகாயவினைமுறறுமாற்றுமே.

(இ - புனை.) தேவர்களுக்குங் கிடைப்பதற்கரிய அமுர்தம் உண்டவர்களுக்குத் தங்களுடையதென்று நம்பிக்கொண்டிருக்கிற சரீரத்தின் நரையையுந்திரையையு மாற்றிவிடும்; ஆனால், நம்மிறைவன் சரித்திரமாகிய அமுர்தமுண்டவர்களுக்கு வருத்தத்துக்கேதுவாகிய சரீத்தின் வினையையெல்லாம் நீக்கும். எ - று. (கூ)

ஆன்றகாதையின்மேல்விருப்பற்றவர்
தோன்றுமூற்கதைபொய்யென்றுசொல்பவர்
மூன்றுகோடிகரகத்தின்மூழ்கியே
கான்றநாவுடைகாய்ப்பிறப்பெய்துவார்.

(இ -புரை.) மகிமைதங்கியசிவகதையில் விருப்பமில்லாதவர்களும், மூன்ணடங்திருக்கும் சிவகதைபொய்யென்று சொல்பவர்களும், மூன்றுகோடிகரகத்தில் அழுந்திப்பின்பு தொங்கிய காவுடைய காயாகப் பிறப்டார்கள். எ - று.(கo)

எக்குலத்தவனுயினுமீர்ஞ்சடை
முக்கணன்கதையோதுமுதல்வனை
மக்களுள்ளிவனும்மகனென்பவர்
கக்குவாய்புழுக்கான்றிடுநோய்கொள்வார்.

(இ - புரை.) எந்தக்குலத்திற் பிறக்தவனே யாணலும், குளிர்ச்சிதங்கிய சடையையுடைய பரமசிவனது சரித்திரத்தைச் சொல்லுகின்ற முதல்வனை மனிதர்களுக்குள் இவனுமொரு மனிதனென்று எண்ணிச் சொல்லுகின்றவர்கள், கக்கும்வாய் புழுக்களைக்கக்கும்படியான வியாதியையடைவார்கள். எ - று.

ஓங்குசீர்த்திருக்காதையுரைக்குநர்
தாங்குபீடிகையின்றித்தரையிரா
ராங்கண்யாரையுமஞ்சலிசெய்திடார்
தீங்கிலேரூறைசிற்றவைசேர்ந்திடார்.

(இ - புரை) மேலான மகிமையுஞ் சிறப்புமுள்ள சிவசரித்திரஞ் சொல்லுகின்றவர்கள் தாங்குகிற ஆசனமில்லாமல் தரையிலிராக்கள். அவ்விடத்திலிருக்கும் யாரையும்வந்தியார்கள். தீயவர்களிருக்கிற புல்லியசபையிற்சேரார்கள். எ - று. (கஉ)

சிறியர்தீக்களிசெய்யுமிடத்திலு
மறிவிலாளர்சூதாடுமரங்கிலு
முறவில்வஞ்சியருண்டாட்டிடத்திலும்
பொறியிலாளர்பொருந்துமிடத்திலும்.

(இ - புரை.) அற்பமாகப் பாவத்துக் கேதுவாகிய சிறப்புகள் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் சூதாடும் அரங்கத்திலும், தத்தங்கணவர்களுடன் மாதர்கள் விளையாடிக்கொண் டிருக்குமிடத்திலும், அங்கப்பழுதானவர்களிருக்குமிடத்திலும், ரு - று, (கரு)

கம்பமால்கரிகல்கிலுங்கண்ணக
னிம்பர்கா

செம்பொன்மாரிபொழியினுஞ்செஞ்சடை
நம்பன்காதைநயந்துரைவிற்றிடார்.

(இ-புரை,) அசைதலை யியல்பாகவுடைய பெரிய யானையைக்கொடுத்தாலும், இடமகன்ற இல்வுலகத்தில் நாடுகொடுத்தாலும், பொன்மாரிவருஷித்தாலும், செஞ்சடையையுடைய பரமசிவனது சரித்திரத்தை விரும்பிச் சொல்லார்கள். எ - று. (கச)

மூவாதிமுழுதுலகத்துள
தேவர்வாழுஞ்சினகரமுன்னருந்
தூவுந்தண்ணறவுண்டுசுருட்பிமிர்
பூவார்சோலைப்புனிதவிடத்தினும்.

(இ-புரை.) நிரிமூர்த்திகள் முதலிய எல்லாவுலகங்களிலுமிருக்கிற தேவர்களும் வீற்றிருக்கும்படியான ஆலயங்களின் முன்னும், பெருகாநின்ற குளிர்ச்சி தங்கிய தேனையுண்டு வண்டுக ளிசைபாடிக்கொண் டிருக்கத்தக்க மலர்களையுடைய சோலையாகிய புனிதமுள்ளவிடத்திலும், எ - று. (கரு)

நீதிலாதசெழுநகதிரத்துங்
கோதிலார்கள்குழீயவிடத்தினும்
வேதவேதியர்வேள்வித்தலைபிணு
மாதிமாதவரம்மனைமுற்றத்தும்.

(இ - புரை.) நீமையில்லாத செழுமையுள்ள நகரத்திலும், குற்றமில்லாதவர்களாகிய நல்லவர்கள்கூடிய இடத்திலும், பிராமணர்கள்செய்யும் யாகசாலையினிடத்திலும், ஆதியாகிய முனிவர்களுடைய ஆசிரமத்தினிடத்திலும்,

மற்றும்வேறுளபுண்ணியமல்குசீ
ருற்றதெவ்விடமவ்விடத்தோதுவர்
பற்றிநாறுபரமன்றிருக்கதை
முற்றுமோதிமுழுதுணர்கேள்வியார்.

(இ - புரை.) இவ்விடங்களிலு மல்லாமல் இன்னுமிருக்கிற புண்ணியம் பொருந்திய சீரினையுடையது எவ்விடமோ அவ்விடத்திலும், வேதாகம சாஸ்திரபுராணங்கள் முழுவதையு மோதியுணர்ந்த பெரியோர்கள் அன்புடன் சிவகதையை நாள்தோறுஞ் சொல்வார்கள். எ - று. (கஎ)

காயகன்கதைநாடொறுங்கேட்குநர்
தூயநீரினிற்சோர்ந்தவெண்ணீறணிந்
தேயநித்தக்கருமமியற்றிப்பின்
காயலைம்புலனுங்கருக்தொன்றியே.

(இ - புரை.) பரமசிவனுடைய சரித்திரத்தையே தினந்தோறுங் கேட்பவர்கள், பரிசுத்தமுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதியணிந்துகொண்டு தங்கள் வருணாச்சிரமத்துக்குரிய நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சரீரத்தைப்பொருந்திய ஐம்புலன்களும், கருத்தும், ஒருவழிப்பட்டு,எ-று.

வல்லதேசிகனுக்குமனித்தவி
சொல்லேநல்கியுறுபொருளீந்தனன்
கல்லவாணிகிளத்தலடங்கிவன்
புலலானவைரடபுறம்போக்கியே.

(இ - புரை.) சிவகதை சொல்லவல்ல ஆசாரியனுக்கு விரைவாக ரத்தினாசனங்கொடுத்து, மிகுந்தபொருளுங்கொடுத்து, நல்லதல்லாததாகியவார்த்தைகளைப்பேசுதலைவிட்டு,மிகவும் புண்மையானவர்களைப் புறத்தில்போக்கிவிட்டும்,

பத்தியோடொல்குபாவகத்தோடுறு
வொத்தகற்றவிசேறலொழித்துதல்
விந்தசற்குக்கீழ்மென்றவிசொன்றியே
சிந்தம்வேறறக்கேட்பதுசெவ்விதால்.

(இ - புரை.) பத்தியுடனும் ஒடுக்கமுள்ளபாவகத்துடனும் பொருந்திச் சிவகதை சொல்லுகின்றவ ராசனத்துக்குச் சரியான நல்ல ஆசனத்திலிருப்பதை யொழித்து அவராசனத்துக்குந்தாழ்ந்தஆசனத்திலிருந்துகொண்டு, மனம் வேறிடத்திற் செல்லாதவண்ணமாகக் கேட்குதல் நன்மையாம்.எ-று.(உ0)

அன்றிக்கேட்குமிடத்தழுக்காற்றினற்
கன்றிவேறொருளினைக்கற்பிப்பா
ரென்றலாதுதனைத்தெதிர்வாதிப்பார்
பன்றியாயிந்தப்பாரிலுதிப்பரே.

(இ - புரை.) இவ்வாறன்றிக் கேட்குமிடத்தில் பொறுமையினால் மனம் வெதும்பித் தங்கள்கற்பனைபால் வேறொரு பொருளைச் சொல்லுகின்றவர்களும், பலபலவாறுகச்சொல்லி யெதிரில் வாதுசெய்கின்றவர்களும், இவ்வுலகத்தில் பன்றியாய்ப் பிறப்பார்கள். எ - று. (உக)

அன்பினிற்கதைதானேகேட்பதலாற்பிறர்
வன்பினையெண்ணமனம்வைத்துக்கேட்பவர்
துன்பமெய்துசுடலையிலோங்கிய
வின்பமில்கனியெட்டியதாகுவார்.

(இ - புரை) அன்புடன் சிவகதையைக் கேட்பதைவிட்டுப் பிறருடைய வன்மையினில் மனம்வைத்து அவர்கள் சொல்லும் வேறொன்றைக் கேட்பவர்கள், துன்பம்பொருந்திய சுடலையில் ஓங்கிய மரமில்லாதபழத்தையுடைய எட்டிமரமாவர். எ - று. (உஉ)

கூறுமாக்கதைகூட்டுமுனைப்பாணை
வேறுதங்கருமத்துவிரைத்துபோன்
சிறுசிந்தையர்செல்வத்தைதத்தியக்கூங்கா
லீறுசெல்லாதிடையிலிழப்பரே.

(இ - புரை.) சிவதனதையை ஆரப்பித்து முடிப்பதற்குமுன் மத்தியில் வேறுகிய தங்கள்காரியத்தைக் குறித்து விரைத்துபோய்விடுகின்ற மூர்க்கமன முள்ளவர்கள், நல்வினையினால் செல்வத்தை அனுபவிக்கூங்காலத்தில், தங்கள் ஆயுள்வரையில் அனுபவியாமல் மத்தியிலிழந்துவிடுவார்கள். எ - று. (உக)

மஞ்சமேறியும்வெள்ளிலோடாந்தியு
நஞ்சமுண்டவர்நற்கணைதகேட்குந
ரஞ்சியோவெல்லாரத்திக்நழுநுனைத்
தஞ்சமாகக்கிடந்துதவிப்பரே.

(இ - புரை.) மஞ்சத்தின்மேலேறி யிருந்துகொண்டும், தாம்பூலம் போ ட்டுக்கொண்டும், விஷபானஞ் செய்தருளியபரமேசுவரனுடைய சரித்திரத்தை க்கேட்பவர்கள் பயந்து ஓவென்று அழுதுகொண்டு கழுராத்தி னுனியே தஞ் சமாக அதிலிருந்து தவிப்பார்கள் எ - று. (உச)

கயிலையண்ணல்கணைதலையிகழ்த்துழிக்
துயில்புரிந்திடுந்தொல்வினபபாதகர்
வெயில்கரந்தடுவெங்கொடிக்கந்தியே
யயின்முட்காட்டுறைகூளையதாகுவார்.

(இ - புரை) கயிலாசபதியின் சரித்திரத்தைச் சொல்லுமிடத்தில், நித்தி ரை செய்கின்ற பழைய வினையையுடைய பாவிகள் தன்னைக்கொல்லுகின்ற கொடிய காக்கைகளுக்குப் பயந்து பகலிலொளிந்துக்கொண்டு இருண்டிருக்கு க்காட்டில் வாசஞ்செய்கிற கோட்டானைவார்கள். எ - று. (உஎ)

படர்ந்தவெணிப்பரமன்றிருக்கதை
கிடந்தசெக்கையிற்கேட்குமறிவிலார்
மிடைந்தமால்வரையுச்சிவிடர்புகும்
தடைந்தமாசுணமாகிப்பிறப்பரே.

(இ - புரை.) விரித்தசடையையுடைய பரமேசுவரனது சிறப்புள்ள சரி த்திரத்தைப் படித்திருந்த பாயலி லிருந்தபடியேகேட்கும் அறிவீனர்கள் நெருங்கிய பெரியமலையின் உச்சியிலிருக்குங் கல்வெடிப்புச்சந்துகளில் புகுந்து கொண்டிருக்கும் பாம்பாய்ப்பிறப்பார்கள். எ - று. (உக)

ஈசன்காதைதசொல்வானன்றியின்னுமோர்
தேசிகன்பிறவுண்டென்றுசெப்புமோ.

காசுதீர்க்குங்கதைதவிளக்கங்கொடு
மாசின்மாக்கண்மனவிருணீக்கலால்.

(இ - புரை) சிவகதைசொல்லுகின்றவனேயன்றி வேறேயொரு ஆசிரியனுமுண்டென்று வேதாகமங்கள் சொல்லுமோ?(எனெனில்) குற்றக்கனத்தீர்க்கத்தக்க சிவசரித்திரமாகிய தீபத்தைக்கொண்டு பழுதில்லாத மனிதர்கள் தங்களுடைய மனவிருளை நீக்குதலினால், எ - று. (உஎ)

ஆதலாற்கதைகேட்குமனையினைப்
போதமொன்றியபுண்ணியமாந்தர்கள்
பாதகந்தவிர்க்தும்பயபத்தியாய்
நாதனல்லனவையென்றெண்ணிநண்ணுவார்.

(இ - புரை.) ஆகையால் சிவகதைகேட்குந் சனபையை ஞானம்பொருந்திய புண்ணியவான்கள் பாவத்தை நீக்கும்படியான பயபத்தியுடன் பரமேஸ்வரனுடைய சந்நிதியென்றுகருதி மேற்சொல்லியகுற்றம் யாதொன்றுமில்லாமலிருந்து கேட்பார்கள். எ - று. (உஅ)

வேறு.

இக்கையகதையான்முன்னியன்றகதையொன்றுரைப்பரிக்
கத்துதிரைமணிகொழிக்குந்தடங்கடற்செந்தமிழ்நாட்டின்
மைத்தொகுபூம்பொழிலுடுத்தவாட்களமாமுதூகரில்
வித்தகராயினிதுறையும்வேதியர்களனேகமாரும்.

(இ - புரை.) சிவகதையானது இத்தன்மையுள்ளகதையாகும். இனிமுன்னடந்ததொரு சிவகதைசொல்லுகிறேம். காவிமேலெழுந்தின்ற அலைகள் முத்துகளைக்கொழிக்கும் பெரியசமுத்திரத்தையுடைய தமிழ்நாடாகிய பாண்டிநாட்டில், மேகங்கள்சேரும்படி பூஞ்சோலைசூழ்ந்த வாட்களமென்னும் பழையநகரத்தில் ஞானவான்களாயினிதுடன்வாழும் பிராமணர்களெல்லாரும், எ-று. (உக)

தீப்பேணுந்தொழிறிறம்பிப்படைதரித்தசெங்கையாய்
காப்பேணுமந்திரமுகந்றொழிலுனிமறந்து
பூப்பேணியரன்கழலிலருச்சிக்கும்புந்தியின்றி
மீப்பேணுங்கடவுளர்தமுப்போதைக்கடனும்விட்டார்

(இ - புரை-) நித்தியாக்நிசெய்யுந் தொழில்மாறி, ஆயுதமேந்திய கையையுடையவர்களாய், நாவினலுச்சரிக்கும் மந்திரத்தையும் நற்கருமங்களையு மிகவுமறந்து, மலர்களெடுத்து அன்புடன் பரமேசுவரனுடைய திருவடிகளிலருச்சிக்கவேண்டுமென்கிறவிவேகமுமில்லாமல் வானுலகில்வாழுங்கடவுளர்களேவந்திக்கத்தக்கதான திரிகாலச் செய்தொழிலையுமறந்துவிட்டார்கள். எ - று. (உ0)

ஆணைமுந்தனியோதாரந்தணருக்கடாக்கரும
காரணமாகீசர்தொழில்கலைடப்பிடித்தமறையோருள்
வாரணிநற்கும்பமுலைவஞ்சுளைதன்மணக்கொழுகன்
ரூணிக்குள்விதுரனெனப்பெயருடையோன்ரூணைருவன்.

(இ - புரை) நான்குவேதங்களோயுந் தங்களுடையதாகவோதாதவர்களாய்ப் பிராமணர்களுக்குரியதல்லாத செய்கைக்குக் காரணமாகிய அற்பதொழிலை அனுசரித்திருக்கும் பிராமணர்களில் கச்சணிந்த கும்பம்போன்ற தனங்களையுடைய வஞ்சுளையென்பவள் கணவனாகிய இவ்வுலகத்தில் விதுரனென்று சொல்லப்பெயரையுடையவனொருவன். எ - று. (ஈ க)

பண்பில்லாதெறிபூண்டோன்படிற்ரொழுக்கின்றலைநின்ரோ
ணண்பினற்பொதுமகளிளமுலைபினலத்துய்த்து
வெண்பலாலரவுமிழ்ந்தவிடந்தலைக்கொண்டெனக்காமுற்
ரிண்பொனர்தடமார்பன்றன்மனையையொழிந்திட்டான்.

(இ - புரை.) நன்மையில்லாத ஒழுக்கத்தையுடையவனும் மேலுக்குமிகவும்ஆரமுடையவனாகவும் உள்ளே அவ்வளவுக்கும் அருசையோடிருப்பவனும் ஒளியோபாருந்திய பொன்மாலையணிந்த மார்பையுடையவனுமாகிய அந்த விதுரனென்பவன் சேசத்துடன் பொதுமகளிருடைய இளமைதங்கிய நனங்களின் போக இன்பத்தை மேற்கொண்டு பாம்பானது வெண்மைநிறந்தங்கிய பற்களினற் கக்கிய விஷம்தலைக்கேரியதுபோலக் காமந்தலைக்கேறவும் தன்மனைவியினிடத்திலனுபவிக்குங்கலவிபின்பத்தை யொழிந்து விட்டான். எ - று. ()

துணைபிரிந்தமடவன்றிற்பேடைபோற்றுபருழந்து
கணமலிந்தகங்குரைறுங்காமசாத்தாலலைந்து
பிணைநெடுங்கண்டுயின்மறப்பவிரசத்தாற்பெரிதுணங்கி
மணமலிந்தசுருளோதிவஞ்சுளையுமிதுசெய்தாள்.

(இ - புரை) வாசனைபொருந்தியதாய்ச் சுருண்ட அளகத்தையுடைய வஞ்சுளையானவள் தன்துணையாகிய ஆணன்றிலைப் பிரிந்த பெட்டை யன்றிலைப் போலத்தயரங்கொண்டு பேய்கள்கூடி சஞ்சரிக்கும் இராக்காலந்தோறும்காமபாணத்தினல் அலைந்து மான்பார்வைபோன்ற கண்களிரண்டும் நித்திரைதீங்கவும் விரகத்தினல் மிக்கும் வருந்தி இவ்வாறு செய்யத் தொடங்கினள். எ - று. (எவ்வாறெனில்) (ஈ ஈ)

காதலானறனெருவிக்கற்புனிறைவரம்புமிகந்
தேதிலானிழிகுலத்தோனெருவனெழிற்ரூணைசயாற்
ரூதலாமலரணையிற்றனிக்காமவிடாய்தவிர்வான்
மாதராடணலாதுமருவுநாடனிலைருநாள்.

(இ - புரை.) விரகதாபத்தினல் தர்மவழியை முற்றும் நீக்கிக் கற்புநிலை யாகிய வரம்பினையுங்கடந்து வஞ்சுளையானவள் அன்னியனுகிய ஒரு இழிகு லத்தவனுடைய அழகுள்ளதோளைப் புணரும் விருப்பத்தினல்மகரந்தம்நிறைந்த மலரணையில் தனக்குள்ள காமவிடாய் தவிரும்பொருட்டு ஒருநாளாவது தவிரா மல் போகித்துக்கொண்டிருக்கும்நாளி லொருநாள். எ - று. (கூச)

பழியுரைதன்செவிவெதுப்பப்பைம்தொடிதன்கற்போர்வான்
பொழிமழையினையாமந்தமியனுய்ப்புகுந்திடலுங்
கழையிளந்தோள்வஞ்சுளையுங்காளையொருவனுமனைவாய்
விழைவுடன்மென்பூவணைமேன்மெய்குழையகலனுகர்ந்தார்.

(இ - புரை) (இவள்தடக்குங் காரியம் ஊரறிந்து பேசிக்கொள்ளும் பழி மொழிதன்காதுகளைச்சுடுதலினல் விதுரனென்பவன் வஞ்சுளையின் கற்பு நிலை யையறிய மழைபொழிந்துகொண்டிருக்கும் அர்த்தராத்திரியில் தனியாக தன் மனைக்குச்சென்றபோது, இளமையான பசியமூங்கிலையொத்த தோள்களையு டைய அவளும் ஒருவாலிபனுடாக வீட்டுக்குள் விருப்பமுடன் மெல்லிய பூவ ணைமேல் மெய்குழையப் புணர்ந்துகொண்டிருந்தார்கள். எ - று. (கூஞ)

கண்டனன்றுண்ணெனுநெஞ்சன்கதழ்ரிபோனெடுஞ்சிற்றங்
கொண்டடையப்படிற்றழுக்கன்வெருவிமனங்குலைந்தகன்றான்
வண்டுமுரல்குழல்பற்றிவஞ்சுளையமனங்கலங்கத்
தண்டமிழைக்குவனென்னுத்தாட்டுணையாற்றுணைகத்திட்டான்.

(இ - புரை.) அவர்கள் இவ்வாறிருப்பதைக்கண்டு திடுக்கிட்ட மனமுள்ள வனுய்ப் பற்றியெரியுந் தீப்போலமிகுந்த கோபங்கொண்டு வருவதை அந்தச் சோரன் பார்த்துப்பயந்து மனமழிந்து ஓடிப்போனுன். வண்டுகளிசைபாடிக் கொண்டிருக்கும்படியான அளகத்தைப் பிடித்துக்கொண்டு வஞ்சுளா மனங்க லங்கும்படி தண்டிக்கிறேன்பார் என்று தன்கால்களால் மிதித்தான். எ - று. ()

கனங்குழையுமிகமறுகிக்கணவனீயென்னுரையுஞ்
சினங்குறைந்துகேட்டதற்பின்செருத்திடுதியெனவிரப்ப
மனக்குழைந்துபுடையாளுய்மலர்க்குழல்விட்டுரையெனலுந்
தனங்களிற்கண்ணீரொழுகத்தளிரியலுமிழற்றுவாள்.

(இ - புரை.) (இரத்தினக்கள் பதித்திருப்பதினல்) பளுவான குழைய ணிந்த காதுகளையுடையவளாகிய வஞ்சுளையானவள் மிகுதியாக மனம்வருந்திக் கணவனே! கோபந்தணிந்து என்வார்த்தையையுங்கேட்டுப் பிற்பாடு கொன்று போடென்று பிரார்த்திக்கவே மனமிரங்கி அடிக்காமல் அளகத்தைவிட்டு நீ சொல்வதைச்சொல்லென்ற வளவில் தன்னுடைய தனங்களின்மேல் கண்ணீ

ரானது ஆரூய்ப்பெருகும்படி அழுதுகொண்டு தளிர்போன்றதன்மையுள்ளவள் சொல்லுகிறாள் எ - று. (ஈஎ)

வன்கணைலறனெருஷிப்பொதுமாதர்வசமாகி
யென்கணர்வழமின்றியின்றளவுமிகந்தனாகா
னுன்கணைலருணேக்கம்பெறுதருகியுடன்மெலிந்து
புன்கணல்வேனிலான்கணைக்கிலக்காய்ப்புழுங்கினனே.

(இ - புரை.) கடினமனத்தினனுய் நன்னெறியைவிட்டுப் பொதுமாதர் வசமாகி என்னிடத்தி லாசையுமில்லாம லின்றளவும் நீங்கிவிட்டாய் நான் உன் கிருபாலோக்கம் பெறுடல் நெடுநாளாக மனமுருகியுடல் மெலிந்து துயரங் கொண்டு மன்மதபாணங்களுக்கு இலக்காக வருந்தினேனே! எ - று. (ஈஅ)

கல்லினமைசெவ்விநலனாளும்வறிதேதகழியக்
கொல்லுலையினங்கியெனக்காமக்கனல்கொளுந்த
வல்லியம்போற்றென்றல்வரவாணிலவுந்தெண்கடலு
மல்லல்செயக்கங்குலெறுமாற்ருதேனையினனே.

(இ - புரை.) நல்ல இனமைப்பருவமும் அழகும் பெண்மையலனும் நாள் தோறும் வீணுகிவிடும்படி கருமானுலைக்களத்திலுண்டாகுந் தீபோலக் காமாக் கினி சுடவும் புலிபோலத்தென்றல்வந்து வீசவும் ஒளிபொருந்திய சந்தி ரனுந் தெளிவுள்ள சமுத்திரமும் துன்பஞ்செய்யவும் இராத்திரி காலந்தோ றுஞ் சகிக்கமாட்டாதவளானேனே! எ - று. (ஈக)

காவலர்தீமேவுவையென்றிங்கெடுநாட்காத்திருந்தே
னுவல்பெருகத்தமியேனற்றேனுய்த்தவறிழைத்தேன்
பூவார்குழன்மாதருக்குங்காளையர்க்கும்பொதுவன்றே
மேவரியபெருங்காமமெனவிம்மிவிளம்பினுள்.

(இ - புரை.) கற்பின் கடைநிற்குங் கணவனே! இத்தனை நாள்வரைக் கும் நீவருவையென்று கற்புநிலையைக் காத்துக்கொண்டிருந்தேன்; நீவராமை யினுல் காமம் அதிகரிக்கவே தனியாயிருக்கும் நான்சகிக்கமாட்டாமல் குற்றஞ் செய்தேன்; காமமானது மாதருக்கும் ஆடவர்களுக்கும் பொதுவல்லவாவென் று அழுதுகொண்டு சொன்னுள். எ - று. (ஈ0)

இரங்கினன்றன்பாற்றவறென்றெண்ணினன்கேட்டிளங்கொடிநீ
மருங்களொடுகற்குணழியமாழ்கியரற்றுதல்வேண்டா
கருங்கெடுங்கடலனையகாமநோய்தடுப்பவரார்
சுருங்கவினியொருசூழ்ச்சிசொல்லுகிறென்றுணர்கென்னு.

(இ - புணை.) (அவளிவ்வாறு சொல்லியதைக் கேட்டுத் தன்னிடத்திற் குற்ற மிருக்கின்றதென்றெண்ணி) யிரங்கி இளங்கொடிபோன்றவளே! மரங் களு மலைகளுங் குழையும்படி நீ அழுது சோரவேண்டுவதில்லை: அலகிலாயு டைய சமுத்திரம்போலப் பெரிதாகிய காமநோயை நீக்கத்தக்கவர்களொரு வருமில்லை; இப்போதுனக்கொரு உபாயஞ்சுருக்கமாகச் சொல்லுகிறேன் அந்தப் படிசெய்யென்று, எ - று. (கக)

அந்தணரேயாகவிழிகுலத்தோர்தாமாக
வந்தவரையெல்லாம்வரையாதுமேவியவர்
தந்தபொருண்முற்றுமெனைக்களித்துன்றூகமறச்
சிந்தைமயறீர்வளவுஞ்சேர்குவாயெனப்பணித்தான்.

(இ - புணை.) பிராமணர்களேயாலுலும்சரி அவர்களுக்குத் தாழ்ந்தவரு ணத்தார்களேயாலுலுஞ்சரி வந்தவர்களையெல்லாம் நீக்கிவிடாமல் புணர்ந்து அவர்கள் கொடுத்தபொருள்களையெல்லாம் எனக்குக்கொடுத்து உன்காமவிடாய் தீரும்படி மனதிலுண்டாயிருக்கு மையல் தீருகிறவரைக்கும் சேர்ந்துகொண்டி ருவென்று கட்டளையிட்டான். எ - று. (கஉ)

காறுமலர்க்கோதாய்கேள்தும்பொருள்கொடுத்து
வீறுபெருங்கொங்கைவிலமகளீர்த்தாள்விரும்பி
யூறியவெங்காமமொழியாகலத்துய்ப்பனெனைக்
கூறியதுகேட்டதற்குக்கொற்றிறுடியுற்தானிசைந்தே.

(இ - புணை.) வாசமிகுந்த பூமாலையணிந்த அளகத்தையுடையவளே! நீ கொடுக்கும்பொருளையெல்லாம் பூரித்திருக்கும் பெரியதனங்களையுடைய விலை மாதர்களுக்குக்கொடுத்து அவர்களைப்புணர்ந்து னக்குண்டாகியகாமம் ஒழியும் படி யின்பம் அனுபவிக்கிறேனென்று சொல்லியதைக்கேட்டு அதற்கு அவளுஞ் சம்மதித்தாள். எ - று. (கங)

அன்னதுவேசெய்வனடியனேனென்றிறைஞ்சி
மின்னிடையாள்சாலமகிழ்ந்துவெளிப்படையாத்
துன்னிருந்தம்மையெல்லாந்தோடோய்ந்தவரளித்த
பொன்னையெல்லாங்கேள்வனுக்கேயீந்தாள்பொலங்கொடியே

(இ - புணை.) அடியேன் அப்படியே செய்கிறேனென்றுகணவனைவணங்கி மின்போன்ற இடையையுடைய வஞ்சனை மிகவும் வெளிப்படையாக வந்தவர் களையெல்லாம் புணர்ந்து அவர்கள் கொடுத்த பொருளையெல்லாந் தன்கண வனுக்குக் கொடுத்தாள், எ - று. (கச)

ஆங்கவனுஞ்செம்பொனளப்பிலகொண்டன்றன்றே
றூங்கணினைகமாதர்புகழனிவழங்கித்

தீங்கனிவாயின்னமுதமுண்டுசிலநாள்கழிய
வீங்கியமூப்பெய்திவீனதுரபபத்துஞ்சினான்.

(இ - புணை.) அந்தவிராதனென்பவன் தன்மனைவிகொடுக்கிற பொருளையெல்லாம் அப்போதைக்கப்போதே அழகுள்ள வேசையர்கள் புகழும்படி அதிகமாகக்கொடுத்து மதுரமுள்ளபழம்போல இனிப்புள்ள அவர்களுடைய அதரபானமுண்டு சிலநாள் நீங்கினபின் மிகுந்த மூப்படைந்து இறந்தான். எ - று.

தன்கணவன்பொன்றக்களிரியலுங்கைம்மையுற்று
மின்குலவுபொற்கலனுநீத்துமிகழுடபெய்திப்
புனகணுறுகாலைபடுராரிசிவராத்
நன்குணர்வோரெலிலாருங்கோகன்னைநண்ணினார்

(இ - புணை.) தன்கணவனிறந்துபோகவே வஞ்சுளையானவள் கைம்பெண்ணெனப் பிரகாசிக்கும் மங்கிலியத்துடன் பொன்னபரணங்களும் நீக்கிவிட்டு மிகுந்தமூப்படைந்து துணைபடபட்டுக்கொண்டிருக்குங்காலத்தில் பரமசிவனுக்குரிய தினமாகிய சிவராத்திரி தரிசனத்துக்குப் பந்நிமான்களெல்லாம் கோகன்னைத்துக்குப்போனார்கள். எ-று. (அசு)

அற்றைப்பொழுதிலணியிழந்தவஞ்சுளையுந்
சுற்றத்தொடுமம்போயதனைவரின்பாலடைந்து
கொற்றக்கொலைமழுவானகோழிதீர்த்தம்படிந்து
கற்றைச்சடையானறிருவடியைக்கைதொழுதாள்.

(இ - புணை.) கைம்பெண்ணுயிருக்கும் வஞ்சுளையும் சிவராத்திரிதினத்தில் அவிடத்துக்குப்போகினற சுற்றத்தாருடன் தானும்போய்ப்பழமையாகிய கோகன்னைச்சேர்ந்து வெற்றிபொருந்திய கொலைமழுவேந்தியபரமசிவனுடைய கோடிதீர்த்தத்திலு முழுகிக் கற்றையாகிய சடையையுடைய பரமசிவன் திருவடியைத்தொழுதாள். எ - று. (அள)

மீட்டுமதிருக்கோயில்சூழ்வருங்கால்வேறுருசார்
தீட்டுஞ்சிவதருமம்பாவிமொருதேசிகன்று
னேட்டிற்புறத்தினிபலுணர்ந்துவாசிட்பக
கேட்டருஞ்சியின்னவெகிளாருங்கிநின்றுள்.

(இ - புணை) மறுபடி ஆலயத்தைப் பிரதக்ஷினஞ் செய்யும்போது அங்கொருபக்கத்தில் எழுதி வாசிக்கும்படியான சிவதருமமெல்லாம் ஒருதேசிகன் புத்தகம்வைத்துக்கொண்டு வாசித்துப் பொருள்சொல்லக்கேட்டுப்பயந்துநின்று துன்பமுண்டாக நடுங்கினின்றுள். எ - று. (அஅ)

அக்கானதுகூட்டுமிறுதிக்கணந்தனன்முன்
டிக்காடொறுதான்புராணபுராதனனே

யிக்காதைசொல்பொருளினெண்ணரியபாவமிலை
தொக்கார்ப்பிவதெல்லாஞ்சொன்னையவற்றுள்ளே.

(இ - புணை.) அந்தச் சரித்திரத்தைக் கூட்டுமுடிவில் தேசிகரிடத்தில் போய் அவர்பாதந்தொழுது அய்யா புராணிகரே! இந்தச் சரித்திரத்தில் சொல்லுகின்ற பொருளினுல் அளவிறந்த பாவஞ்செய்கின்றவர்கள்படும்பாடெல்லாஞ் சொன்னீர் அவைகளுநக்குள். எ - று. (நக)

காமவசத்தாற்கணவற்பிழைத்தசெழுந்
தாமமுலையார்தமையொருக்குந்தண்டத்தான்
வாமிதம்பமுருகவழன்மடுத்துச்
சேமமுசலஞ்செலுத்துவானென்றுரைத்தாய்.

(இ - புணை.) காமவசத்தினுல் கொண்டவனைவிட்டுச் சோரம்போன மாதரையெல்லாம் தண்டிக்கும் கூற்றுவன் செழுமையுள்ள மாலையணிந்தமுலையையுடைய அவர்களழகிய நிதம்பத்தில் தீயில் காய்ந்தமுசலமென்னும் இருப்புலக்கையைச் செலுத்துவா னென்றுசொன்னீர். எ - று. (நo)

கற்புநிலைகடந்தகாமக்கயத்தியரை
நற்பகத்திற்றாண்டிலிட்டுநொன்றலையமேற்றூக்கிப்
பற்பலகூருகமழுவாய்ப்படைத்துணித்து
வற்புறுத்திக்காய்ந்தமணல்சொரிந்துதீய்ப்பரென்றாய்.

(இ - புணை.) கற்புநிலைதவறிய காமிகளாகிய கீழ்மைத்தனமுள்ள மாதர்களின் குறியினிடத்தில் தூண்டில்மாட்டித் தொங்கியலையும்படி மேலேதூக்கிப் பலபலதுண்டாகும்படி கோடாலியினுல் வெட்டித் துணித்து உறுதிப்படுத்திக் காய்ந்தமணலைச்சொரிந்து தீய்ப்பார்களென்றுசொன்னீர். எ - று. (நக)

காப்புக்கடைகழிந்தகாமக்கிழத்தியரைச்
சேப்பவுலைகாய்ந்தநிரம்பிருப்புநீள்கழுவிற்
பூப்பொருவுமல்குலழலப்பொதுத்தேற்றிக்
கோட்பார்நெடுங்காலமெனவெடித்துக்கூறினாய்.

(இ - புணை.) காவலிடத்தைக்கடந்த காமிகளாகிய கீழ்மைத்தனமுள்ள மாதரைச் சிவக்கும்படி தீயில்காய்ந்த நிரண்டதாகிய நீண்டகழுவில் பூவைப்போல மிருதுவாகிய அல்குல் வெதும்பத்தக்கதாகக் குத்தியேற்றி நெடுங்காலம் வைப்பார்களென்று சொனனீர். எ - று. (நஉ)

நம்புகொழுநர்நிலையொருவுகங்கையர்தஞ்
செம்பொனகலல்குலின்வாய்ச்செம்புருக்கிவிட்டதனுற்

பம்புபுழுக்கனிப்பாய்தசையைப்பற்றியுண
வெம்புபறவைவிருந்தயரவோய்வரென்றாய்.

(இ-புனை.) நம்பிய கனவரிடத்திலிருக்கும் நிலைமாறிய மாதர்களுடைய செம்பொன்னிறமுள்ள அல்குலில் செட்டிஜன யுருக்கிவிடுவதினால் நிறைவாகப் புழுக்களுண்டாகவும் காயான தது தசையைப் பிடுங்கியுண்ணவும் கொடியபருந்து முதலியபகுதிகள் விருந்துண்ணவும் அம்மாதர்கள் சோர்வார்களென்றீர். எ-று.

கொண்டோற்பிழைத்தகொழுங்கயற்கண்மங்கையரைக்
கண்டோர்மனமெங்கக்காரிருப்புத்தியகலில்
விண்டேயுடலம்வெடிக்கவறுப்பரெனத்
தண்டேய்காத்துத்தவமுனிபேயசாற்றினாய்.

(இ - புனை.) ஒருகையில் தண்டம் ஏந்தியதவமுனிவரே! கொண்டவனை விட்டு மற்றொருவனைப்புணர்ந்து செழுமையான சேற்றுக்கண்டையொத்த கண்களையுடைய மாதர்களைப் பார்த்தவர்கள் மனமும் கெடுங்குப்படி தீயிற்காய்ந்த கருமையுள்ள இருப்புத்தகழியிலிட்டு உடல் வெடிக்கும்படி வறுப்பார்களென்று சொன்னீர். எ - று. (நிச)

காயடியேனின்னலெல்லாங்கேட்டுகடுகடுங்கித்
தூயமுனிவரனேதுன்பக்கடல்வீழ்ந்தேன்
காயும்விடபூனயகாமக்தலைக்கொள்ளச்
சேயபருவத்தேகற்பின்றிறம்பிழைத்தேன்.

(இ-புனை.) பரிசுத்தராகிய முனிவரே! கொல்லும்விடத்தையொத்த காமத்தலைக்கொள்ள இளமைப்பருவத்தில் கற்புநிலை கெட்டிருந்தேன் ஆதலால் காயனையேனிவைகளையெல்லாங் கேட்டு கடுகடுங்கித் துக்கசாகரத்தில் மூழ்கினேன்.

குலமகளிர்க்கேலாதகொள்கையைமேற்கொண்டே
நிலைமையில்லாத்தீப்பெண்டிர்நிற்குநிலைநின்றேன்
கலநிழந்தழுப்பெய்துகாறாமியான்செய்த
பலவினையின்பாதகத்தைப்பாரிலெவர்செய்தார்.

(இ - புனை.) குலமாதர்களுக்குத்தகாத செய்கையை மேற்கொண்டு கற்புநிலையில்லாத கொடியமாதர்களிருக்கும் நிலைமையிலிருக்கிறேன் மங்கலகாணிக்கத மூப்புவருமட்டும் நான்செய்தபாவம் உலகத்தில் ஒருவருஞ்செய்திராதார்கள்.

ஆதலாலீண்டெனக்குச்சாக்காடுமண்ணியது
தீதிலாவேதியரீசர்பியகாதைதப்படியே
கோதிலாயபுழுக்கும்பியிடைவீழ்வதுமெய்
யீதினையுள்ளழுலைடன்தெண்ணைதகெண்ணுகின்றேன்.

(இ - புணா.) ஆகையினு லிப்போது எனக்குச் சாக்காடுஞ் சமீபித்திருக் கின்றது தீமையில்லாத முனிவரே! நீர்சொல்லிய சிவகதையின்படி மான்செய் தபாவத்தினுல் புழுக்கள் நிறைந்தநரகத்தில்விழுவதுமெய்யே இதனுல் மனம் உடைந்து எண்ணுகின்றேன். எ - று. (நிஎ)

காய்ந்தநமன்றூதர்களன்றுருத்துத்தண்டிக்கி
லாய்ந்ததவமில்லேனையஞ்சலீரியென்றுற்றி
வாய்ந்தநிரயத்தழலில்வாடாமுனையடியே
னேய்ந்தழுதுமாழ்காமலார்வந்துதவுவார்.

(இ - புணா.) காலதூதர்கள் கோபித்துத் தண்டித்தால் அப்போது நல்ல புண்ணியஞ்செய்யாத என்னை நீ பயப்படாதே யென்று ஆற்றிப்பொருந்தியநர காக்கினியில் வருந்தாமலும் காயடியேன் அழுது தளர்ந்து சோராமலும் யார் வந்து உதவிசெய்வார்கள். எ - று. (நிஅ)

என்றுபலபலவும்பன்னியிடாழுந்து
நின்றுமறைமுதல்வரீயேபுரத்தியெனச்
சென்றுநடுநடுங்கிச்சேவடியில்வீழ்ந்திறைஞ்சிக்
கன்றுடனத்தாள்கலுழ்ந்துறைப்பதேவதியனும்.

(இ - புணா.) இவ்வாறு பலபலமொழிகள் சொல்லித் துயர்கொண்டவ ரெதிரில் நின்று முனிவரோ அழியேனைத்தேவரீரோ காப்பாற்றுமென்று நடுநடுங் கிச் சமீபத்திற்போய் அவர்பாதத்தில் விழுந்து பணிந்துவெம்புகின்ற மனதை யுடையவளாய் அழுதுசொல்ல அம்முனிவர். எ - று. (நிக)

வீழ்ந்தவடன்னைப்பற்றிமெல்லவெடுத்தாயிழையே
யாழ்ந்தபெரும்பாதகத்தீனச்சமகற்றிடுவாய்
சூழ்ந்துபுரிந்தினக்கேபின்னிரக்கந்தான்றுதலா
லாழ்ந்தமலரெனவேதீவிஞவிட்டோடுங்காண்.

(இ - புணா.) பணிந்தவள் கையைப்பற்றி மெல்ல எடுத்து மாதே நீ மிகு திபாகச் செய்த பாபத்துக்குப் பயப்படும் பயத்தை நீங்கிவிடு ஆகியில் பாவங்க ளாச்செய்த உனக்கே யிப்போது பயம் உண்டாயிருப்பதினுல் பதந்தப்பிய பூப் போல உன்பாவமெல்லாம் உன்னைவிட்டோடிப்போம். எ - று. (கூ0)

காரிகைநின்மூப்பாற்றவம்புரியக்காலமிலை
மாரியெனத்தானம்வழங்கப்பொருளின்றுற்
சீரியதாய்ப்பாவமகற்றச்சிவகதையாம்
போரியலொன்றுண்டதன்சீர்பேசக்கடைப்பிடியாய்.

(இ - புணா.) மாதே! நின்னுடைய மூப்பினுல் தவஞ்செய்வதற்குக் கால மில்லை மேலும் மழைபொழிவதுபோலத் தானங்கொடுப்பதற்குப் பொருளு மில்லை யாதலால் மகத்துவமுள்ளதாயுன் பாவத்தை நீக்கச் சிவகதையாகியபுரா

ணமூண்டு அதன்பெருமையைச் சொல்லக்கேட்டு (உன்மனதில்) உறுதியாக வைத்துக்கொள். எ - று. (சுக)

யானெனதென்றெண்ணியிருவினையுமீட்டுவது
மானதமேயன்றிமடவரலேமற்றில்லை
யானமலமாயையிருளுக்குமஞ்ஞான
வீனமுறுபாவமிருளுக்கும்வெய்யவனும்.

(இ - புணை.) என்னுடைய பொருளென்றும் யான் செய்தேனென்று மெண்ணி நல்வினை தீவினைகளைத் தேடிக்கொள்வது மனதின்செயலேயன்றி வேறொன்றுமில்லை. அதற்கேதுவாகிய ஆணவமல மாயையென்கின்ற இருளுக்கும், அஞ்ஞானமாகிய கீழ்மையுற்ற பாவமென்னு மிருளுக்கும் அந்தச்சிவகதை சூரியன்போலாகும். எ - று. (சுஉ)

கொய்யுளைமாவேள்வியொருகோடிசெய்திடினு
மையனதுகாதையருள்பெறும்பேறீந்திடுமோ
பையுளெலாந்தீர்க்கும்பரன்காதைதந்தெள்ளமுதை
யுய்யவினிதாயருந்தியும்பர்வீடெய்துதியால்.

(இ - புணை.) கத்திரிக்குங் கழுத்துமயிரினையுடைய குதிரையாம்புரியும் அசுவமேதயாகம் ஒருகோடிசெய்தாலும், அவைகள் சிவசரித்திரம் அருளிச்செய்யப்பெறும் பேறுகளைக்கொடுக்குமோ? துன்பங்களையெல்லாம் நீக்கத்தக்க சிவகதையாகிய தெளிவுள்ள அமிர்தத்தை நீ உய்யும்படி இனிதாக உண்டு மேலான மோக்ஷத்தை அடைவாயாக. எ - று. (சுங)

முற்றோகையோடுவிரதந்தவமுயலப்
பெற்றோர்மனவிருளைநீக்கப்பெறின்றுற்
சற்றோதக்கேட்டவருஞ்சாரூபமாவரெனக்
கற்றோர்புகழ்கதையாற்காலங்கழிப்பாயே.

(இ - புணை.) நிறைந்த சந்தோஷத்துடன் விரதங்கள் தவங்கள் செய்யப் பெற்றவர்கள் மனவிருளை நீக்குந்தன்மை பெறுதலில்லை, கொஞ்சங்கேட்டவர்களும் சாரூபம் பெறுவார்களென்று கற்றவர்கள் சொல்லத்தக்க சிவகதையால் உன்காலத்தைக் கழிப்பாயாக. எ - று. (சுச)

உண்டதலைகாளிற்சாமளனென்றோதுபெயர்
கொண்டபெரும்பாவியவன்வாணாள்குறுகியதா
ணண்டர்பிராணமம்புகன்றழியாவீடடைந்தான்
பண்டுபழங்காதைதனிற்கேட்டிலையோபைக்தொடியே.

(இ-புரை.) முற்காலத்தில் சாமளனென்று சொல்லும் பெயர்பெற்ற பெரும்பாவி ஒருவனுண்டு, அவன் மரணகாலத்தில் தேவர்பிரானுடைய பரமேச்சரனுடைய திருநாமங்களைச்சொல்லி அழியாதமோகூத்தை அடைந்தான். மாதே! நீ அதைப்புராதனமான புராணசரித்திரத்தில் முன்கேட்டதில்லையோ. எ-று.

ஆங்கவனைப்போலுனக்குஞ்சாக்காடணித்தான
தோங்குசிவநாமநாவினலுச்சரித்துப்
பாங்குபெறுகாதைதனைக்கேட்கிற்பழவினையாந்
தீங்கதலுநீயுஞ்சிவபதத்திற்சேர்வாயே.

(இ - புரை.) அவனுக்கு வந்ததுபோல உனக்கும் மரணகாலம் சமீபித்திருக்கின்றது, மேன்மைதங்கிய சிவநாமங்களை நாவினலுச்சரித்து நன்மைபெற்ற சிவகதையைக் கேட்பாயாகில் உன்பாவங்கள் நீங்கும். நீயும் சிவபதஞ் சேர்வாய். எ - று. ஏ - தேற்றப்பொருள். (சுசு)

பொய்யென்றுகொள்ளாதரன்கதையிற்புந்திவைப்பார்
மெய்யென்றவனுமங்கேட்டுவியந்துரைப்பார்
வையம்புகழ்ச்சிவபதத்தில்வாழ்ந்திருப்ப
ரையன்றிருவாணைசத்தியமீதாமென்றான்

(இ - புரை.) அவநம்பிக்கை கொள்ளாமல் சிவசரிதத்தில் மனத்தைப் பதிக்கின்றவர்களும், இது உண்மையென்று சிவநாமங்களைக் காதிணற்கேட்டு மகிழ்ச்சியுடன் துதிக்கின்றவர்களும், இவ்வுலகத்தார் புகழும்படி சிவபதத்தில் வாழ்வார்கள், அட்பெருமானுணை, இது மெய்யென்றுகூறினர். எ - று. (சுஎ)

என்னமறையோனியம்புமதுகேட்டுருகிக்
கன்னன்மொழிவஞ்சுளையுங்காவிவிழிநீர்த்தும்ப
வன்னவழியேயிந்நடியனேனின்னருளான்
மன்னுபிறவியெனுமாக்கடலைநீந்தியே.

(இ-புரை.) இவ்வாறு முனிவர்சொல்லியதைக்கேட்டுக் கரும்பைப்போல மதுரிக்குஞ் சொல்லினையுடைய வஞ்சுளையானவள் மனமுருகி, நீலோற்பலம் போன்ற தன்கண்களில் நீர்த்தும்பநின்று, சுவாமிகளே! தேவரீர்திருவடியிலல் அவ்வாறே அடியேன் சிவகதைகேட்டும் சிவநாமங்களைச்சொல்லியும் என்னுடைய அளவற்ற செனனசாகரத்தை நீந்தி. எ - று. (சுஅ)

சென்றேசிவபதத்திற்சேர்ந்திருக்குமாறுகுணக்
குன்றேதிருவுளத்திலெண்ணிக்குறைமுடிய
வின்றேவிளங்குமிரவுத்திரியமுற்றுவித்து
நன்றேதருகாலதாளுகவிலென்றான்.

(இ - புணை.) சிவபதத்திற்சென்று சேர்ந்திருக்கும்வண்ணம் மலைபோல அசையா நிலைமைபெற்ற குணமுள்ளசுவாமிகளே! தேவரீர் திருவுளத்திற்கருதி அடியேன்குறைதீர இப்போதே தீக்ஷைசெய்து கன்மைதருஞ் சிவகதையை கான்தோறுஞ்சொல்லி யருளுமென்றாள். எ - று. (சுசு)

மாதவனுமன்பின்மனம்பொருந்திவண்காரத்தாற்
பூதிதனைவாங்கிப்புனிதமுறமெய்பூசிக்
காதினதுமூலத்திற்கண்ணுதன்மூலங்கொடுத்துத்
தீதில்கதையோதியவள்சிந்தைதெளிவித்தானே.

(இ - புணை.) அவர் மனதிலன்புடையவராய்த்தம்மூடைய திருக்காரத்திலுல் விபூதியெடுத்துப் பரிசுத்தமாகும்படி அவள் சரீரமுழுவதிலும்பூசி, காதுக்குள் பஞ்சாக்ஷர மூலத்தை யுபதேசித்துக் குற்றமில்லாத சிவகதைசொல்லி அவள்மனந் தெளியச்செய்தார். எ - று. (எ0)

சைவநெறிபூண்டதவக்கொடியுமக்கதையின்
மெய்யுணர்வின்சிந்தையவாகாடோறுமீதூர
மையமருங்கண்டன்றிருத்தாள்வழிபடலா
லெவனையுமைவிடயத்தேகாதடக்கினாள்.

(இ-புணை.) சைவநெறிபொருந்தியதவமுள்ள வஞ்சுலையானவள், அந்தச் சிவகதையில் உண்மையறிவுடன் மனத்திலுண்டான ஆசை காளுக்குகாள் அதிகரிக்கக்கொண்டு, காளகண்டத்தையுடைய பரமசிவன் திருவடிகளை ஆராதிப்பதனுல் பஞ்சேந்திரியங்களை அவைகளுக்குரிய விஷயங்களிற் செல்லாதவண்ணம் அடக்கினாள். எ - று. (எக)

பத்திநெறிநின்றுபல்வினைழுவுதான்றவிர்ந்து
மூத்திமுனிவரார்போன்முப்போதுநீர்மூழ்கிச்
சுத்தமரவுரியேதூசாமருங்குடித்து
வித்தகனக்கமணிவெண்ணீறினிதணிந்தாள்.

(இ - புணை.) பத்திநெறியில்நின்று பலவாகிய இச்சைகளை நீக்கி, முத்தியடையும்முனிவர்கள்போல மூன்றுகாலத்திலும் ஸ்நானஞ்செய்து,பரிசுத்தமுள்ள மரவுரியே வஸ்திரமாக அரையிலுடித்து, உருத்திராக்ஷமும்விபூதியும் இனிமையாகத் தரித்துக்கொண்டாள். எ - று. (எஉ)

வே று.

கையார்முழுவெம்பறையாய்சரணங்கருணைக்கடலேசரணஞ்சரணம்
பையாடரவத்தணியாய்சரணம்படர்செஞ்சடையாய்சரணஞ்சரண
மையார்கலிவெற்றிமொய்த்திடவான்மழைமஞ்செனவேவருநஞ்சயிலு
மையாசரணஞ்சரணம்பெரியாளமலாவிமலாசரணஞ்சரணம்.

(இ - புனை.) திருக்கரத்திலமைந்த மழுவாளனே சரணம், திருபாசமுத்தி ரமே சரணஞ்சரணம், படக்களையுடைய சர்ப்பாபரணக்க ளணிந்தவனே சரணம், பரந்த செஞ்சடைக்கடவுளே சரணஞ்சரணம், கருங்கடல் வெந்துவற்றவும், தேவர்வருந்தவும் மேகம்போலவந்த விஷமுண்ட ஐயனே சரணஞ்சரணம், அழியேனையாட்கொண்ட நிமலனே விமலனே சரணம் சரணம். எ - று.(எட)

தொத்தாரிதழித்தொடையாய்சரணஞ்சுருதிப்பொருளேசரணஞ்சர
சத்தாகியசிற்குணனேசரணஞ்சமனுக்கொருவெஞ்சமனேசரண[ணஞ்
மூத்தாரிளவெண்ணகையம்பிகைதன்மூடுகுந்தவசிந்தனைகண்டருளு
மத்தாசரணஞ்சரணம்மெனையாளமலாவிமலாசரணஞ்சரணம்.

(இ - புனை.) கொத்தாகப்பொருந்திய கொன்றைமாலையணிந்த சடாமகுடக்கடவுளே சரணம், வேதப்பொருளே சரணம் சரணம், சத்தாயிருக்கும் ஞானகுணமூர்த்தியேசரணம், காலனுக்குக்காலனுகிய ஐயனேசரணம், மூத்தக்கள்போன்ற வெண்ணகையுள்ள பார்வதிதேவியாருடைய உறுதியான தவசிக்தையைக்கண்டருளிய அத்தனே சரணம் சரணம், அழியேனையாட்கொண்ட அமலனே விமலனே சரணம் சரணம். எ - று. (எச)

கமலாலயனுக்கருள்வோய்சரணங்கயிலைக்கிரியாய்சரணஞ்சரண
நிமலாகமதற்பரனேசரணெமெமாலறியாய்சரணஞ்சரணஞ் [கொண்
சமராடினர்முப்புரமுங்கடிதிற்றழன்மண்டிடவெண்ணகைவெங்கனல்
டமராடியவாசரணம்மெனையாளமலாவிமலாசரணஞ்சரணம்.

(இ - புனை.) பிரமதேவனுக்குப் படைப்புத்தொழில் அருள்செய்தவனே சரணம், கயிலாசநாதனே சரணஞ்சரணம், நிர்மலஆகமங்கள் அருளியநாதனே சரணம், மாயவனுங்காணவொண்ணாதவனே சரணஞ் சரணம், தேவர்களுடன் போர்செய்துகொண்டிருந்த முப்புரங்களும் வினாவில் தீபொருந்துமாறு வெண்ணகைத் தீயினால் போர்செய்த புராந்தகனே சரணம், அழியேனையாட்கொண்ட அமலனே விமலனே சரணம் சரணம். எ - று. (எஞ)

வே று.

என்றுபலபலவுமேத்தியிலங்கிழையா
டொண்டுபடுசைவத்துறையின்முறைபேணி
நின்றுசிவகதையாநிகரில்லாத்திதள்ளமுத
மொன்றுபடச்செவியாலுண்டுசிலநாட்கழித்தாள்.

(இ-புனை.) வஞ்சுளையானவள் எவ்வண்ணம் பலவகையாகத் துதிசெய்து பழமையாகிய சைவநெறியில் நின்று, சிவகதையாகிய ஒப்பற்றதெளிவுள்ளதமிர்தத்தை மனம் ஒருவழிப்படச் செவியாலுண்டு சிலநாள் கழித்தாள். எ - று.()

ஊழின்முறையா லுறுதவத்தாள்பொன்றுதலுந்
தாழுஞ்சடையான்றருகணங்கள்வந்திறைஞ்சி
வீழுங்கனகவிமானமிசையேற்றி
வாழுஞ்சிவபதத்தில்வஞ்சுளையைக்கொண்டடைந்தார்.

(இ-புரை.) விதியின்வயத்தளாய்த் தவறியுள்ள வஞ்சுளையானவள் மரணமடைந்தபோது, தாழ்ந்தசடையுள்ள பரமசிவன் கட்டளையிட்டருளச் சிவகணங்கள்வந்து விரும்பத்தக்க சுவர்ணமய விமானத்திலேற்றி, அழியாமல் வாழ்ந்துகொண்டிருக்கத்தக்க சிவலோகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். எ - று. (எஎ)

மூன்றுசுடருமழுங்கமுதிரொளிபா
லான்றசிவலோகத்தவிர்கணகமண்டபத்தி
லேன்றயன்மால்விண்ணேறிருடாலுநின்றேறத்த
வூன்றுமணிக்கோல்பிடித்துரந்திபொருபாலுலவ.

(இ - புரை.) சூரியன், சந்திரன், அக்கினி யென்னு மூச்சுடர்களும்மழுங்கும்படி மிகுந்த ஒளியினால் விளங்கும் சிவலோகத்திலுள்ள பிரகாசிக்கின்ற பொன்மண்டபத்தில், பிரமனும், மாயவனும், விண்ணவர்களும், இருபக்கத்திலும் நின்று துதிக்கவும், வூன்றும் வெள்ளிப்பிரம்பு பிடித்தவண்ணமாக நந்திதேவர் ஒருபுறத்திலுலாவவும், எ - று. (எஅ)

தக்கன்றலையரிந்தவீரனொருசாரணுகத்
தொக்ககணநாதரெல்லாமெம்மருங்குசூழ்போத
முக்கணணுமைத்துமுகமுன்னினிதமர்ந்த
மிக்கதிருச்சபையின்மெல்லியலைத்தான்விடுத்தார்.

(இ - புரை.) தக்கனுடைய தலையையரிந்தவீரபத்திரர் ஒருபுறத்தில் வந்திருக்கவும், கூட்டமாகிய கணநாதர்களனைவரும் எந்தப்பக்கத்திலுஞ் சூழ்ந்திருக்கவும், திரிசூலத்திரங்கள் பொருந்திய ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவன் இனிதாக வீற்றிருக்கும் பெண்மையமைந்த திருச்சபையில் மிருதுவான தேகத்தையுடைய வஞ்சுளையைக் கொண்டுபோய் விட்டார்கள். எ - று. (எக)

அப்பனவளுமீசனடிக்காமரைபரவி
யெம்மாதலைப்பயனிக்கெய்தியதென்றேம்பலுற்றுக்
கன்னன்மொழியாதுமையைக்கண்ணுதலையுங்கண்டு
துன்னியவானந்தவாரிச்சுழிப்பட்டாள்.

(இ - புரை.) அப்படிக்கொண்டுபோய் விடப்பட்டவளும் பரமேச்சுரனுடைய திருவடித்தாமரைமலர்களைத் துதித்து, எத்தன்மையான தவப்பயன்

என்னை இவ்விடத்திற் கொல்லாதொழி[illegible]டைந்து, கரும்பின் மதுரம்போன்ற மொழியையுடைய ப...வதமத்வியாயியும் பரமேச்சுரனையும் தரிசித்து அப்போதுதோன்றியவானந்தவெள்ளச்சுழியிலகப்பட்டுக்கொண்டான்.

காவலவுணர்புரங்கட்டழித்தகண்ணுதலோன்
பாவைமதிமுகத்தையன்பினெடுபார்த்தருளிப்
பூவையிமயப்பொலங்கொடிக்குநாடோறு
மேவல்புரிதியெனப்பணித்தானின்னுயாயால்.

(இ-புனை.) காவலையுடைய அவுணர்கள் மும்புரத்தின் வலியைக்கெடுத்த பரமசிவன், வஞ்சுளையின் சந்திரன்போன்றமுகத்தைக் கிருபையுடன்பார்த்தருளி, மலையரையன்புத்திரியாகிய உமாதேவிக்கு நீதினந்தோறும் பணிவிடை செய்துகொண்டிருவென்று, இனியதிருவார்த்தையாற் கட்டளையிட்டருளினர்.

ஆரணங்குபோல்வானான்பணிப்பவெற்புதவுங்
காரணிக்கங்கேவல்புரிந்தாழுகுங்காலத்தில்
காரணனுநான்முகனுமேத்தாரணையில்லாப்
பூரணியேகேட்டியெனப்போற்றிப்பணிந்தாள்.

(இ-புனை.) தெய்வமகளினையொத்த வஞ்சுளையானவள் பரமசிவன்கட்டளையிட்டருளியபடி, பர்வதராசன்பெற்ற எல்லாவுலகங்களுக்குங் காரணியாகிய பரமேஸ்வரிக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்குங்காலத்தில், (வஞ்சுளையானவள் உமையவளைப்பார்த்து,) பிரம்ம விஷ்ணுக்கள் போற்றிசெய்கின்ற பரிபூரணியே என்று துதிசெய்து, அடியேன் சொல்லும் விண்ணப்பத்தைக்கேட்டருளவேண்டுமென்று பணிந்து கூறினள். எ-று. (அஉ)

பாதவஞ்சூழ்சாரற்பனிவனையின்பாங்கர்தொறு
மேதமின்றிப்பன்னளிருந்துதவம்புரிந்த
மாதவத்தினோர்க்கும்வழங்காப்பெரும்பதவி
போதமிலேற்கின்றருளாலீந்தபுராதனியே.

(இ-புனை.) விருக்ஷங்கள் சூழ்ந்திருக்கும் சாரலையுடைய குளிர்ந்தமலைகளின்பக்கங்களிலெல்லாம் குற்றமில்லாமல் பலநாளிருந்து மகத்தாகியதவங்கள் செய்த முனிவர்களுக்குங்கொடாத பெரியபதவியை, ஞானமில்லாத எனக்குக் கிருபையினாலருளிச்செய்த புராதனியே! எ-று. (அக)

யானிப்பதத்தினினிதிருக்கவென்கணவன்
றானெப்பரிசினனுமெவ்விடத்திற்சார்ந்தாலே
பானற்கருணைவிழிப்பைம்தொடியேகூறுகென
கானக்குழலுமையாள்சற்றேநகைத்துரைத்தாள்.

(இ-புனை.) அ[illegible]ன் இந்தப்பதவியிலிருப்ப, என்கணவன் எத்தன்மை யுடையவனுய் எவ்விட[illegible]விருக்கின்றுனே ? நீலோற்பல மலர்போன்ற-இருபா நோக்கத்தையுடைய [illegible]யே! சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய் தவளவில், மயிர்ச்சா[illegible]கமழும் அளகத்தையுடைய உமாதேவியார் புன்னகை புரிந்து திருவாய்மல[illegible]கின்றூர். எ - று. (அக)

சந்தார்கள[illegible]முலைத்தார்க்குழலின்கணவன்
சிந்தாகுலமயலாற்றிவினையச்செய்திறந்து
நந்தாகதியாயரகனைத்தும்நஞ்சேர்ந்தேதறி
விந்தாடவியிலலனையாய்மேவினின்றுன்.

(இ-புனை.) சந்தனக்குழம்பணிந்த தனங்களையும் பூமாலையணிந்த அளகத் தையுமுடையவளே! உன்கணவன் மனைவியாகுல முண்டாகத்தக்க விரகத்தி னற் பாவங்களையே செய்துகொண்டிருந்து, பின்பு இறந்து ஒருக்காலுங்கெ டாதஅக்கினிமயமாகிய நரகங்களிலெல்லாஞ்சேர்ந்து, அவைகளைவிட்டேறி விந் தாடவியென்னும் வனத்தில் பேயாய்த்தங்கியிருக்கின்றுன். எ - று. (அஇ)

வேறு.

என்னமுன்னமடவாளிமவான்மகளைத்தொழுதே
யுன்மேனிவன்மேனிநின்னலடிபேனிவ்வாறெழுக
முன்னேனெனையாள்கணவன்பேயாய்முட்கானகத்திற்
பொன்னேயனையாய்நிரிதறகதிவாவென்னப்புகன்றுள்.

(இ-புனை.) இவ்வாறு சொல்வதற்குமுன்னமே வந்சுளையானவள் பார்வதி யைத் தொழுது பொன்போல யாவருக்குங் கிடைப்பதற்கரியதாயே! உன்னரு ளால் அடியேனிவ்வாறிருப்ப, முன்னம் எனையாண்டகணவன் பேயாகிமுட்களை டைய வனத்தில் நிரிவது தகுதியோவென்றுசொன்னுள். எ - று. அன்னே - வுரக்கச்சொல். (அசு)

கல்லார்மணிப்பூணுமையாள்கருணைகெழுபார்வை
யெல்லாத்துயரமுழுதுமொழிவாயொழிவாயென்றே
நல்லாயுனதுகணவனண்ணுமலைகையுருவும்
பொல்லாவினையுஞ்சுழித்தப்புகுதப்புரப்பன்காண்டி.

(இ-புனை.) இரத்தினங்கள் நிறைந்த ஆபரணங்களணிந்துகொண்டிருக் கும் பார்வதிதேவியார் வந்சுளையைக் கிருபைபொருந்தப்பார்த்து, உன்கணவன் றுப்போதடைந்திருக்கின்ற பேயுருவத்தையும் பொல்லாத பாவங்களையும்போக்கி றுவிடத்திற்கு வரும்படி இரட்சிக்கின்றேன், அதை நீ பார்க்கப்போகின்றுய், தலால் உனதுதுக்கங்கள் யாவையும் முழுவதும் நீங்குவாய் நீங்குவாயென் று திருவாய்மலர்ந்தனர். எ - று.

வாசங்கமழுங்குழலாய்மகிணன்பானீபோகென்
நீசன்றெனிபின்னுமியறோர்வீணைக்கிழவ

ணசொன்றில்லாவிஞ்ஞையரிதும்புருவையழையா
நீசென்றிவளோடந்தகெடுங்கானகத்தைச்சேர்ந்தே.

(இ - புணை.) வாசனை கமழ்ந்துகொண்டிருக்கும் அளகத்தையுடையவளே? உன்கணவனிடத்துக்கு நீபோவாயாகவென்றருளிச்செய்து, பின்னும் பார்வதிதேயார் இசையின்கிரமத்தையறிந்து தேர்ந்த வீணைக்குரியவராகிய குற்றமற்ற கலையுணர்ந்ததும்புருவென்னும்முனிவனையழைத்து நீ இவளுடன்சென்று அந்தப்பெரியகாட்டிற் சேர்ந்து. எ - று. (அஅ)

சந்தமறையின்றலைவனிசையையிசையாற்சாற்றி
யிந்தமடவாள்கணவனிருங்கானகத்திம்பெயாய்ப்
பந்தவினையாலுழலும்பாவவுருவகீக்கி
நந்தமுலகிற்கொடுவாவென்றநங்கைகருவின்றூள்.

(இ - புணை.) அழகிய வேதத்தின்முதல்வனாகிய பரமசிவனுடைய புகழை இசையினற்பாடி, இவள் கணவன் அந்தப்பெரியகாட்டிற் பெயராய்ப் பந்தப்பட்ட முன்வினையினாலுழலும் பாவவுருவத்தை நீக்கி, நம்முடைய உலகத்திற் கொண்டுவாவென்று பார்வதிதேவியார் கட்டளையிட்டனர். எ - று. (அக)

நன்னித்திலவாண்முறுவனங்கைகருவின்றபாவினை
முன்னித்தலைமேற்கொண்டேமுகமன்கூறியிறைஞ்சி
மின்னிற்றிகழ்மணிதோய்விமானமீதினேறிப்
பொன்னிற்பொலியுமேனிப்பூவையோடும்போனான்.

(இ - புணை.) நல்ல முத்துக்களையொத்த வெள்ளிய தந்தங்களையுடைய பார்வதிதேவியாரிட்ட கட்டளையை (நமக்கிந்தப்பாக்கியங் கிடைத்தென்கிறதாகத்) தம்மனதில், கருதிச் சிரசாகவகித்துக்கொண்டு, உபசாரவார்த்தைகள் சொல்லிப்பணிந்து, மின்னலைப்போற் பிரகாசியாகின்ற இரத்தினங்கள் பொருந்திய விமானத்தில், பொன்போன்ற தேகத்தையுடைய வஞ்சுளை யென்பவளையேற்றித் தானுமேறிக்கொண்டு தும்புருமுனிவர்போனார். எ - று. (கூ0)

சிந்தைக்கினியாய்ப்படருஞ்விமானஞ்செலுத்திச்சென்றான்
விந்தத்தடவிடுவணைடந்தானைடந்தவேலைப்
பந்தப்பந்தவினையிற்பெயாய்ப்படர்ந்துசுருவா
னிந்துப்பிளவின்றுணைபோலினைகொண்டிலகுமெயிற்றோன்.

(இ - புணை.) மனோவேகத்தையொத்துச் செல்லும் விமானத்தைச்செலுத்திக்கொண்டுபோய் விந்தாடவியினிடையில் அடைந்தார். அடைந்தவளவில் பந்தமாகிய பாவந்தினால் பெயாய்த்திரிந்துகொண்டிருக்கிற விஷம்போன்ற கொடிதாகிய உருவத்தையும் இருபிறைபோலப் பிரகாசியாகின்ற இரண்டு கோரதந்தங்களையுமுடையவனை. எ - று. (கூக)

தீயைப்பொருவுங்கண்ணன் சினங்கொண்டுரறியழுவன்
வாயைப்பிளப்பனைகப்பன்மலையைக்கடந்துபறிவன்
வேயைக்கரும்பிற்கறிப்பன்விழுவனெழுவன்றனது
காயத்திடையேபுடைப்பன்கதறிக்கறங்கிற்சுழல்வன்.

(இ - புணை.) தீயொத்த சிவந்த கண்களை யுடையவனும், தனக்குத்தானே கோபங்கொண்டு சீறி அழுகின்றவனும், வாயை ஆவென்று திறப்பவனும், நகைப்பவனும், மலையைத்தாண்டி விழுகின்றவனும், மூங்கில்களைக் கரும்புபோற் கடிப்பவனும், விழுந்து விழுந்து எழுகின்றவனும், தன்சரீரத்திலடித்துக் கொள்கின்றவனும், கதறிக்கொண்டு காற்றுழிபோற் சுழல்கின்றவனுமாயிருக்கிறான். எ - று. (கூஉ)

அன்னேனென்றன்னைநோக்கியன்னேதானிவன்முன்
முன்னெண்முயன்றபினையான்முடிந்தவினைகளெல்லாம்
பொன்னேகாண்டியென்னப்புகன்றுபாசம்வீசிப்
பின்னைவவினைப்பிணித்துப்பேய்வல்லுருவந்தீர்ப்பான்.

(இ - புணை.) இவ்வாறிருப்பவனைப் பார்த்து ஐயையோ! இவன் முன்னஞ்செய்த பாவத்தினைப் போரிட்ட செய்கையையெல்லாம் வஞ்சுளையே! பார்த்து சொல்லி, நல்லதாகிய, கயிற்றைவீசி பின்னைக்கட்டி வலிய பேயுருத் தீர்ப்பதொருட்டு எ - று. (கூக)

வலத்திற்போர்யாழ்வாங்கிவலித்தநரம்பைவீக்கிப்
புலத்தோடலைத்தகுதலைத்தோய்புகழ்த்தும்புருவாமுனிவன்
குலத்தோடிறப்புரிறப்புமில்லாக்குபுகன்புகழத்
தலத்தோர்வாழ்னர்வியப்பச்சதியிற்பாடாற்சென்றான்.

(இ - புணை.) வலப்புறத்தில் போரியாழை பிடித்து நரம்பினை வலித்துக்கட்டி ஞானத்துடன் பொருந்திய சுவசிலராற் புகழப்பெற்ற தும்புரு முனிவர், எழும் பிறப்பு மிறப்பு மில்லாத புராணமுதலையுடைய புகழைப் பூலோகத்தோர் தேவலோகத்தாரும் அதிசயிக்கும் காளக்கிராமத்துடன் பாடுகின்றார். எ - று.

வேறு.

நஞ்சமிருக்குமணிமிடற்றோற்பெருமாற்சாத்துகயனமலர்க்
கஞ்சமிருக்குமடியுகத்தோடியரிகயக்கடிக்கமலத்
தஞ்சமிருக்குமொருபுறத்தோயழுதபதியினலர்கிரணப்
பஞ்சமிருக்குந்திருச்சடையோய்கயிலைவாழும்பெருமானே.

(இ - புணை.) விஷம்பொருந்தியிருக்குங் காளகண்ட மூர்த்தியே! மாயன் சாத்திய கண்ணுகிய தாமரை மலரிருக்கும் பதயுகள மூர்த்தியே! அடியார்களிதயதாமரையில் வீற்றிருக்கின்ற அன்னம்போன்ற பார்வதி தேவியார் அமர்ந்திருக்கும் இடப்பாகத்தையுடைய கடவுளே! அழுர்தம் நிறைந்துள்ள பிறைனது விளங்கும் கிரணக்கூட்டமிருக்குஞ் செஞ்சடையை யுடைய நாதரே யிலாசகிரியில் வீற்றிருக்கும் பெருமானோ! எ - று. (கூந)

மூரியிருக்குந்துவசத்தோய்முனியாதன்பர்க்கருளவருண்
பாரியிருக்கும்விழிக்கடையோய்மதுவாரெழுகுடலரிதழி
வேரியிருக்குஞ்சடைமுடியோய்வெகுண்டபறலியுரங்குதித்த
சோரியிருக்குங்குரைகழலோய்கயிலைவாழுந்தொல்லோனே.

(இ - புணை.) இடபம் பொருந்திய கொடியுள்ளவனே! முனியாமல் அடியார்க் கருள்செய்யுடையபாருட்டு அருள்மழை சுரைந்திருக்கும் மைடந்கண்ணளோ! தேன் ஆறுபோலப் பெருகும் மகான்றை மாலையின வாசனைதங்கிய சடைமுடியோரே! கோபகுலைவுக்கு கடன்னயுரைத்த காலத்தில் அவன் மார்பிலிருந்துண்டாகிய உதிரமிருக்கும் மரக்கன்னை யணிந்திருவடியை யுடையவனே! கயிலாசகிரியில் வற்றிருக்கும் புராதனனே! எ - று. குரை - ஒலி. (கசு)

வேதமிருக்குங்கபாலத்தோய்வியாழுயுமிடையோய்பகளிர்கவ
நீதமிருக்குருசாயகத்தோயிவான்மயக்கோரிழுதன்
பாதமிருக்கும்புரிசடையோய்பதங்கூர்சுருதியாகரணை
நாதமிருக்குப்பரிபுரத்தோய்கயிலைவாழுநம்பரனே.

(இ - புணை.) வெற்கம் பொருந்திய கபாலத்தை யுடையவனே! ஆய்ச்சியரெருமகும் வெண்ணெயுண்ட திருமாலாகிய அம்புடையவனே! மலையரையன் புதல்வியாகிய பார்வதியால் திருவடி தங்கிய திருமுடியையனே! புறங்கிரையங்களை யுடைய வேடுவியாகரண காதடை சுரைத்துள்ள சிலம்பணிந்தவனே! கயிலாயகிரியில் வாழும் நம்பனே. எ - று. (கஎ)

தேயாதிருபொருகடலேதெவ்ரேத்துமுழுமுதலே
தாயாவுலகமுழுதீன்றபுரந்தநடைத்தந்தைவானே
வாயான்மறையோனுரைத்தருளின்சரியைகேட்டபடைவரற்காப்
பேயாய்விந்தத்தடந்தோணப்புரமாதிருந்தாற்பிழையுண்டோ.

(இ - புணை.) குறையாடலெய்தாருரு பொடேர் தன்மையாயிருக்கும் ஒப்பற்ற சோதிசொருபமே! தேவர்கள் துதிக்கும் பரிபூரண காரணரே! தாயாகியுலக முழுவதையுந் தந்திரசுத்தித்துச் சங்காரிக்குந் தொழிலையுடையவரே! ஒருபிராமணன் தன்வாக்கிலுற் சொல்லிய உண் சரிதத்தைக் கேட்ட இம்மாதின் பொருட்டு விந்தாடவியிற் பேயாய்த் திரியுமிவனை இரகசியமாமலிருந்தால் உனக்குக் குற்றஞ்சம்பவிக்குமோ? எ - று. (கஅ)

என்றுங்கினையாமேனத்துகலுமீசன்புகழான்மையனெனுமிற்ற
தின்றுணர்வுள்ளங்கோதுறாமரக்கரீத்தங்கிளிவிகலத்திளித்
துன்றுமுன்பிரிந்தகினைகண்முழுதுநினைந்துமிகவெருவித்
தன்றுழ்வலையாயாழ்ந்தாய்புருவங்கேட்கனிதனைச்சாற்றினனன்.

(இ - புணை.) இவ்வாறு யாழிசையிலுல் துதிசெய்தவளையில், பரமசிவன் புகழிலுல் மனம் மகிழ்ந்து சின்றவனுள்ளமானது தேற்றுங் கொட்டையையுரைத்தமாத்திரத்தில் கிளிகளிவது போலத்தெளிந்து, முன்தான்செய்தபாவங்களையெல்லாம் கினைந்து பிரகுதியாகப்பயந்து, யாழ்வாசிக்குந் தும்புருவுந் தன்வருத்தமுள்ள சொல்லைக்கேட்கச் சொல்லுகின்றான், எ - று. (கக)

உமையாளெதிர்ந்ததிறத்தானுமுரமோனிசைகேட்டதனை
யுமையாதிமுழுத்தபாவமெல்லாமகற்றித்தயாரக்கடல்கடந்தே
னிமையாமுக்கட்டிகாழுங்கனியையிமயமலையிலோடேத்துகின்றே
கமையாலுயர்ந்தகாயெனவுரைத்துக்காயிலாதற்பாடினன். [ன்

(இ - புணை.) உம்மை நான்தரிசித்த தன்மையினாலும், பரமசிவனுடைய புகழைக் கேட்டதினாலும், மிகுதியாக நான்செய்த பாவமெல்லாம் நீங்கித் துன்பக்கடலைவிட்டு நீங்கினேன். இமையாத முக்கண்ணுடைய செழுமையுள்ள கனியாகிய பரமசிவனையும் உமாதேவியையும் துதிசெய்கின்றேனன், கோன்பிரானுயர்ந்த முனிவரே! என்று சொல்லிக் கயிலாசகாதரைப் பாடினனென், எ - று. (ஈ)

சொக்கச்சிவந்தமெழும்பாதேகதிகேளபாதிவெள்ளமுதே
முக்கட்கரும்பேயமுதமுக்கனிதேன்பலாதமுழுதே
மிக்கதருப்பகர்காதுகேட்டுனைதுவிங்கிமழக்காத் [டோ.
தக்கத்துழல்வேன்றனைப்பாரதிருத்தாலுனக்குத்தகுமோ

(உ - புணை.) சொக்கச் சிவந்து நாய்ச் செழுமையுள்ள வெல்லப்பாதே! தேனே! பாலே! சிவபெருமானே! முக்கண்களுள்ளகருப்பே! ஐந்து திருமுகங்களையுடைய கனியே! வெல்லத்தின் முழுமுதலே! மிகுந்த சிவகருமகரித்திரத்தைக் கேட்டுனை யன்பினாலுருகிப்பாடுந் தொண்டிலழுகின்ற வென்னை க்காவாதிருந்தால், உமக்குக் குற்றமுண்டோ, எ - று. (ஈ)

பத்மாசனிபடர்ந்தகமலத்தின்மேறடமுகமறையி
லுற்பவிக்கவேண்டியபடைத்தாயகடியாருகாருமே
யிப்பாசமாயுறுமோயானிங்குனக்கடிமைப்பாக்கிகட்டளைபெற்பிற்காக்
கற்பாசமாகயாதோவனிதையாலாதுதாழ்ந்தால்வசையுண்டோடா.

(ஊ - புணை.) தடாதிபெயர்பெற்றவன்றை நாட்டைக்கொண்டபடைத்தலைப் பலவன் மகளாகிய சிவபெருமானே! பழமையாகிய சிவகுருக்கியில் பிறந்தவனே! எனக்கடிமைத்தொழிலைத் தந்தருளாயென்று வேண்டிக்கொண்டபோது, சுவாமிகளாகிய யானுனக்குத் தொண்டுசெய்யாதிருந்தால் வன்மைபாராட்டினாலுமக்குக் குற்றமுண்டோ? எ - று. (ஊ)

அன்னமேனமாலையனைமுடியுமுடியுமடியுணையு
மன்னியயற்கரிதாயபொருளைமுவாமுழுமுதலே
பன்னுமறையோனின்சரிதம்பகரக்கேட்டபார்ப்பனிக்கா
யன்னமலைகடானேனையாளாதாழ்ந்தால்வசையுண்டோடா.

(இ - புணை.) பிரமன் அன்னமாகித் திருமுடியைத் தேடியும், விஷ்ணுபன்றியாகி எவற்றிற்குமுடிவாகிய திருவடிகளைத் தேடியுங் காணுதற்கரியதாயிருந்தாருளே! மூப்பில்லாத முழுமுதலே, வேதங்களைநாவிலுணர்ந்தபிராமணன் சொல்லிய உன்சரித்திரத்தைச் சொல்லக்கேட்ட பிராமணத்திக்காகப் பொருந்திய பேயாகியுனக்கு யாளாதிருந்தால் உமக்கு வசையுண்டோடா? எ - று. (ஈ)

என்றுன்மகிழ்ந்தான திசயித்தானின்புற்றங்கமயிர் சிலிர்ப்ப
நின்றுன்மலர்க்கணைனந்தீராலகலநிறைத்தயர்ந்தான்
கன்றுவென்னவுளஞ்சிறந்தான்களித்தான்பாடியாடினுன்
பொன்றுவாழ்வுதந்தளித்தானெங்கோனென்னப்புலம்பினுன்.

(இ - புணை.) என்று துதிசெய்து மகிழ்ச்சியும், ஆச்சரியமுங்கொண்டு, இன்பமுற்று மயிர்பொடிப்ப நின்று தாமரைமலர்போன்ற கண்களில் ஆநந்த வெள்ளம் பெருகப் பரவசத்தனுகிக் கன்றினையுடைய பசுவைப்போல உள்ளங் குளிர்ந்து களித்தவனுகிப் பாடியாடினுன் கெடாத நித்தியவாழ்வை எம்மிறைவன் கிருபைசெய்தானென்று புலம்பினுன், எ - று. (ாசு)

இந்தப்படியோரேழுதினமிறவன்றிருத்தாள்புகழ்ந்தேத்தி
முந்தையலகையுருநீங்கிமுயலாதபரருருக்கொண்டு
புந்திபகிழ்ந்துசித்திரிலைபொருந்திவிமானம்புகுந்தேறிச்
சந்தமுலையாளடிபரவச்சிவனுர்பதத்தைச்சார்ந்தானே.

(இ - புணை.) இவ்வாறு எழுநாள் பரமேச்சுரனுடைய திருவடிகளைப் புகழ்ந்து துதிசெய்து முன்னிருந்த பேயுருவம் நீங்கி ஒருமுயற்சியுமில்லாமல் வருருவம்பெற்று மனமகிழ்ந்து சித்திரிலைபொருந்தி விமானத்திலேறித் தன்மனைவி யடிபரவச் சிவபதத்தைச்சார்ந்தான், எ - று. (ாரு)

சென்றுர்மீளாப்பெரும்பதத்தைச்சேர்ந்துசிவனுமிடப்பாகத்
தொன்றுகின்றபெண்ணணங்குமுலைப்பக்கணங்கள்பணிகேட்ப
மின்றுழ்வயிரங்குயின்றசெம்பொன்விமானம்விளங்கவீற்றிருந்து
தென்றுகின்றசிவலோகந்துய்த்துத்தணவாதிருந்தாரே.

(இ - புணை.) இவ்வாறு சென்றவர்கள் மீளாத பெரும்பதவியைச் சேர்ந்து பரமசிவனும் இடப்பாகத்திலிருக்கும் பார்வதிதேவியாருஞ் சந்தோஷிக்கவும், சிவகணங்கள் ஏவல்செய்யவும் ஒளிதங்கிய வயிரங்கள் பதிக்கப்பட்ட செம்பொன்விமானத்தில் விளங்கும்படி வீற்றிருந்து அழியாத சிவலோகத்தை யனுபவித்துக்கொண்டு, நீங்காமலிருந்தார்கள், எ - று. (ா

வேறு.

ஆதலாற்பரமன்சரிதமேகேட்கவழிவிலாப்பெரும்பதம்வேட்டீர்
ரீதலால்வேறுபெருந்தவமுண்டோவியம்புதற்கிம்பரிலென்னச்
சூதமாமுனிவன்வியந்தினிதுரைத்தான்சுருதிமாமுனிவரர்கேட்டு
காதலாலுருகியரகரவென்னுக்கரங்கடஞ்சென்னியிற்குவித்தார்.

(இ - புணை.) ஆகையால் அழிவில்லாத பெரும்பதவியை விரும்பினீர்கள், பரமசிவன் சரித்திரத்தையேகேட்கக்கடவர்கள், இவ்வுலகத்தில் இதையன்றிச் சொல்லுவதற்கு வேறுதவமுண்டோவென்று சூதமுனிவர் சந்தோஷத்துடன் சொன்னர், வேதமுணர்ந்த ஸநகாதிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள் கேட்டு

அன்பிலுல் மனமுருகி அரகராவென்று சொல்லித் தங்கள் கைகளைச் சிரசின் மேல்குவித்து வைத்துக்கொண்டு தொழுதார்கள், எ - று. (ஈஎ)

தேவர்தம்பெருமான் சிறந்தவஞ்செழுத்தின் சீர்புகழ்மாக்கதை முதலாப், பாவநின்றகற்றும் புராணநால்கேட்போர் பலன்பெறன் மொழிகதையீரு, மேவரப்புகன்ற சிவகதைமுழுதும் விழைவுடன்கேட்குநரவர்தாம், யாவர்மற்றேனு பாலயன்முதலோ ரெய்தருஞ்சிவபதமடைவார்.

(இ - புனை.) தேவர்பெருமானுகிய பரமசிவனுடைய சிறந்த பஞ்சாக்ஷரத்தின் மகிமையைப் புகழாநின்ற சரிதமுதலாகச் சிவபுராணங்களைக் கேட்பவர்கள் பலன்பெறுதலைச் சொல்லுகின்ற சரித்திரம் அந்தமாக விருப்பமுறச்சொல்லிய சிவசரித்திர முழுதுங்கேட்பவர்கள் எவர்களோ யாவரிலும் அரிபிரமாதிகளடைவதற்கரிய சிவபதம் அடைவார்கள், எ - று. (ஈஅ)

ஞாலமோங்குகநான்மறைநீடுக
சீலமன்னவர்செங்கோல்விளங்குக
காலமாமழைமன்னுகதலாற்
சாலவீசனடியார்தழைகவே.

(இ - னை.) இவ்வுலகம்வாழக்கடவது நான்கு வேதங்களும் வாழக்கடவன நீதிவழுவாத மன்னவர் செங்கோல்வாழக்கடவது காலந்தப்பாமல் மழைபெய்யக்கடவது அன்புடன்சிவனடியார்கள் மேன்மேலும் வாழக்கடவர்கள், எ - று. ()

இருபத்திரண்டாவது

வஞ்சுளைமுத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கஈ உஈ.

பிரமோத்தரகாண்டம்.

முற்றுப்பெற்றது.

அட்டவணை.

—*—

பக்கம்.		பாட
க	கடவுள்வாழ்த்து ...	௧
கூ	பஞ்சாக்ஷரமகிமை	௨
உஉ	சிவதானமகிமை	௩
ஈக	கன்மாடபாதன்முத்திபெற்றது	௪
ஙஅ	விமரிசன்முத்திபெற்றது	௫
அசு	சனிப்பிரதோஷபூசை	௬
கூஅ	சத்தியாதனன்பூசை	ஙக
ககசூ	பிரதோஷபூசைமகிமை	ஙஎ
கசய	சோமவாரபூசைமகிமை	ஙஉஉ
கஎசூ	சோமவாரத்திற்சிமந்தனிபாவனைபெற்றது	ஙஎ
ககூஅ	சிவயோகிமகிமை	ஙஎ
உகஈ	பத்திராயுவுங்கரசியலளித்தது ..	ஙய்
உஉஅ	சிவகவசமுரைத்தது	உங
உஙங	பத்திராயுவின்கதை	ஙஎ
உஙஙு	பத்திராயுமுத்திபெற்றது	ஙஎ
உசூஈ	விபூதிமான்மியம் ..	ஙஅ
உஅஉ	திரிபுண்டரமான்மியம் .	ஙஅ
உஈசூ	வேடன்சிவபூசைகடைப்பிடித்தது	ஙஉ
ஙஎய	உமாமகேசுவரபூசைமகிமை ...	ஙக
ஙஉக	உமாமகேசுவரபூசாபலம்	ஙசூ
ஙசக	உருத்திராக்ஷமகிமை .	எ
ஙசூக	சிருருத்திரமகிமை ..	ஙஏ
ஙஎய	வஞ்சுளமுத்திபெற்றது ■	ஙூ

அத்தியாயம் உஉ-க்குத் திருவிருத்தம்-ஙஈக0.

கடவுள்வாழ்த்து-ஙசூ.

ஆதிருவிருத்தம்-ஙஈஉங.